நவம்பர் மாதத்தின் }
டிசம்பர் மாதத்தின் } 1986

# தமிழரசு

3L
V2llmN86
N86.11


தமிழரசு
20




தூத்துக்குடியைத் தலைநகராகக் கொண்ட சிதம்பரனார் மாவட்டத்தை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் 19-10-1986 அன்று தொடங்கி வைத்தார்.

415
22410
14 நவ 1986



# இதம் தரும் இருபது

## மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் 14.1.1982ல் நாட்டுக்கு அறிவித்த நல்வாழ்வுத் திட்டம்

1 பாசன வசதியை அதிகரித்தல், மழையை நம்பியிருக்கும் விவசாயத்திற்கான பொருட்கள் கிடைத்தலை அதிகரித்தல். இந்நிலங்களுக்கான தொழில் நுட்பத்தை வளர்த்துப் பரப்பல்.

2 பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிக்க விசேட முயற்சி மேற்கொள்ளல்.

3 ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சி மற்றும் தேசிய கிராம வேலைவாய்ப்புத் திட்டங்களை வலுப்படுத்தல், விரிவாக்குதல்.



4 விளை நில உச்சவரம்பை அமலாக்கல், உபரி நில விநியோகத்தைப் பூர்த்தி செய்தல் மற்றும் நிர்வாக-சட்ட இடையூறுகளை அகற்றி நிலப்பட்டாக்களைத் தொகுக்கும் பணியைப் பூர்த்தி செய்தல்.

5 விவசாயத் தொழிலாளரின் குறைந்தபட்ச ஊதியத்தை மறுபரிசீலனை செய்து, பயன் தரும் வகையில் அமலாக்கல்.

6 பிணைத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளித்தல்.

7 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் வளர்ச்சிக்கான திட்டங்களைத் துரிதப் படுத்தல்.



8 பிரச்சனைக் கிராமங்கள் அனைத்துக்கும் குடிநீர் வழங்கல்.

9 வீடற்ற கிராமக் குடும்பங்களுக்கு வீட்டுக்கான மனை வழங்கி, வீடு கட்டுவதில் அவர்களுக்கு உதவுவதற்கான திட்டங்களை விரிவாக்குதல்.

10 சேரிகளின் சுற்றுப்புறச் சூழ்நிலையை மேம்படுத்தல், எளியோருக்கு வீடு கட்டும்

தமிழரசு

இருபது அம்சத்திட்டச் சிறப்பிதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2017
அட்சய - ஐப்பசி 16

மலர் : 17 1-11-1986 இதழ் : 9

# பயறு வகை எண்ணெய் வித்துப் பயிர்கள் பெருக்குதல்

தமிழகத்தில் ஆண்டொன்றுக்கு சுமார் 9 இலட்சம் டன்கள் பருப்பு உணவிற்காகத் தேவைப்படுகின்றது. ஆனால் நமது உற்பத்தியோ சுமார் 3.5 இலட்சம் டன்களே. மீதியுள்ள பயறுவகைகளை அண்டை மாநிலங்களிலிருந்தே பெற்று வருகிறோம். இதனைத் தவிர்க்க, பயறுவகை உற்பத்தியை அதிகரிக்க 20 அம்சத்திட்டத்தின் கீழ் தமிழக வேளாண்மைத்துறை சிறப்புத் திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது.

## புதிய யுக்திகள்

உயர்விளைச்சல் தரவல்ல பயறு வகைகளை உழவர்கள் பயிரிட 2729 டன் சான்றிதழ் விதை விநியோகிக்கப்பட்டது. மேலும் விதையுடன் கலக்கும் 5½ லட்சம் நுண்ணுயிர்ப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன.

பயறுவகைப் பயிர்களுக்குப் பரிந்துரைப்படி உரமிட வேண்டும். அப்படி அடியுரம் இடமுடியாத பயிர்களுக்கு இலை மூலம் டிஏபி தெளிக்கப்படுகிறது. இதனால் மகசூலில் 10 சதம் அதிக விளைச்சல் கிடைக்கிறது. இப்பணி, சென்ற ஆண்டு 9,766 எக்டேரில் ரூ. 97,660 செலவில் நிறைவேற்றப்பட்டது.

## 1985-86 ஆண்டின் சாதனை

இதுபோன்ற சிறப்பான திட்டங்களைத் தமிழக வேளாண்மைத் துறை செயல்படுத்தியதன் காரணமாக என்றும் இல்லாத அளவிற்கு 1985-86ஆம் ஆண்டு 9.66 லட்சம் எக்டேரில் பயறுவகை பயிரிடப்பட்டு, 3.67 லட்சம் டன்கள் உற்பத்தி கிடைத்துள்ளது.

## எண்ணெய் வித்துத்துறை

## அம்சம் 2 (பி)

இந்தியரின் உணவில் எண்ணெய்த் தேவை ஒரு முக்கிய இடம் பெறுகிறது. பெருகி வரும் மக்கள் தொகை மற்றும் நபர் தனிவருமானத்திற்கு ஏற்ப எண்ணெய்த் தேவையும் அதிகரித்து வருகிறது. உணவு தானியங்களின் உற்பத்தியைப்போன்று எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி அதிகரிக்காத நிலையில் உற்பத்திக்கும், தேவைக்கும் இடைவெளி அதிகம் உள்ளது.

1985-86ஆம் ஆண்டு முடிவில் அடைந்த எண்ணெய் வித்துக்களின் சாகுபடி பரப்பும், உற்பத்தியும் வருமாறு:

| பயிர் | பரப்பு ல.டன் | உற்பத்தி ல.டன். |
|---|---|---|
| மணிலா | 11.87 | 14.51 |
| எள் | 1.42 | 0.58 |
| சூரியகாந்தி | 0.68 | 0.30 |
| ஆமணக்கு | 0.25 | 0.12 |
| மொத்தம் | 14.22 | 15.51 |

தமிழ்நாட்டில் எண்ணெய் வித்துக்களின் சாகுபடிப் பரப்பு மற்றும் உற்பத்தி, உணவுப் பயிர்களுக்கு அடுத்தபடியாக உள்ளது. மணிலா, எள், சூரியகாந்தி மற்றும் ஆமணக்கு முக்கிய எண்ணெய் வித்துப் பயிர்களாகும். இவை, தமிழ்நாட்டில் சாகுபடியாகும் மொத்தப் பரப்பில் 15 சதவீதம் ஆகும். அதாவது 12 முதல் 14 லட்சம் எக்டேர் பரப்பில் பயிராகின்றன.



மணிலாப் பயிர் பெரும்பாலும் புஞ்சையில் பயிர் ஆனாலும் சிறிய பரப்பில் பாசனப் பயிராகவும் சாகுபடியாகிறது. எண்ணெய் வித்துப் பயிர்கள் தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் பயிராகின்றன. குறிப்பாக செங்கை வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களிலும், குறைந்த அளவில் கோவை, தஞ்சை, பெரியார், திருச்சி, சேலம், மதுரை ஆகிய மாவட்டங்களிலும் பயிராகின்றன.

## சிறப்புத் திட்டம் (ஆதிதிராவிடர்)

இத்திட்டத்தின் கீழ் 14 லட்சம் ரூபாய் 25 சதவீத மானியமாக 10878 ஆதிதிராவிட விவசாயிகளுக்கு மணிலா விதைகள் விநியோகிக்கப்பட்டன. மேலும் 1.54 லட்சம் ரூபாய் 25 சதவீத மானியமாக 3085 ஆதிதிராவிட விவசாயிகளுக்குத் தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்பட்டன.

## தென்னை வளர்ச்சி

தமிழகத்தில் தென்னை முக்கிய பலலாண்டுப் பயிர். இது 1.62 லட்சம் எக்டேர் பரப்பில் சாகுபடி ஆகிறது. தென்னை உற்பத்தியில் தமிழ்நாடு இந்தியாவிலேயே மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது. தென்னை உற்பத்தித் திறன், மரம் ஒன்றுக்கு 51 தேற்றுகள் ஆகும். இது இந்தியாவிலேயே முதலிடமாகும்.

## தென்னங்கன்றுகள் உற்பத்தி மற்றும் விநியோகம்

எண்ணெய்வித்துத் துறையினால் 37 தென்னை நாற்றங்கால்களும், 5 தாய்மரத் தென்னந்தோப்புகளும் பராமரிக்கப்பட்டு, நெட்டை மற்றும் குட்டை ஒட்டு ரகத் தென்னங்கன்றுகள் உற்பத்தி ஆகின்றன. கடந்த 1985-86ஆம் ஆண்டு 12.68 லட்சம் நெட்டை ரகக் கன்றுகளும், 4.44 லட்சம் நெட்டை, குட்டை வீரிய ஒட்டு ரகங்களும் 0.02 லட்சம் குட்டை நெட்டை வீரிய ஒட்டு ரகங்களும் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டன.







# ஊரக இளைஞர் சுய வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம்.

கிராமப்புறங்களிலுள்ள இளம் கைவினைஞர்களின் திறமையை நவீனப்படுத்துவதன் மூலம் அவர்கள் செய்கின்ற பணியைச் சிறப்பாகவும், துல்லியமாகவும் செய்ய முடியும் என்று ஊரக இளைஞர் சுய வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம் கருதுகிறது. இதன்மூலம் திறமை வாய்ந்த மனித சக்தியைக் கிராமத்திலேயே தக்க வைக்கவும், அது நகர்ப்புறங்களுக்கு நகர்வதைத் தடுக்கவும் உதவுகிறது.

இப்பயிற்சி, நிலமில்லாத விவசாயத் தொழிலாளர்கள், ஏழை விவசாயிகள், ஏழைக் கைவினைஞர்கள் மற்றும் வறுமைக்கோட்டிற்குக் கீழ்வாழும் மக்கள் ஆகியோருக்கு அளிக்கப்படுகிறது. பயிற்சி முடித்ததும் சுயவேலை வாய்ப்பிற்காக நம்பிக்கையுடன் சொந்தத் தொழில் துவங்க வகை செய்யும் பொருட்டு, முனைவோர்கள் வளர்ச்சித்திட்டம் சம்பந்தப்பட்ட பயிற்சியும் இப்பயிற்சித் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

பயிற்சிக்கு வேண்டிய நபர்களை வட்டார வளர்ச்சி அலுவலர்/திட்ட அலுவலர் கிராமப்புறங்களிலிருந்து தேர்ந்தெடுக்கிறார்கள். தாய்மொழியில் எழுதப்படிக்கத் தெரிந்த 35 வயதுக்குட்பட்ட இளைஞர் இப்பயிற்சி பெறத் தகுதியுடையவராவர்.

தமிழ்நாட்டில் 9 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் முழுநேரமாகவும், 20 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் பகுதி நேரமாகவும் பயிற்சி அளிக்கப்படுகிறது. பகுதிநேரப் பயிற்சி மாலை 6 மணி முதல் 9 மணி வரை நடத்தப்படுகிறது.

பயிற்சிக் காலத்தில் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் ரூ. 75 முதல் ரூ. 200 வரை உபகாரச்சம்பளம் அளிக்கப்படுகிறது. பயிற்சி முடித்து வெளியே செல்லும்போது ரூ. 500 மதிப்பிற்குரிய கருவிப்பெட்டகம் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் இலவசமாக அளிக்கப்படுகிறது. பயிற்சி முடித்தவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படுகிறது.





திட்டங்களை அமலாக்கல் மற்றும் விலைவேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுத்தல்.

11 மின்சார உற்பத்தியை உயர்ந்தபட்சமாக்குதல், மின்சார அமைப்புக்களின் இயக்கத்தை மேம்படுத்தல் மற்றும் கிராமங்கள் அனைத்துக்கும் மின்சார வசதி அளித்தல்.

12 காடு வளர்ப்பு, சமுதாய-பண்ணை மர வளர்ப்பு, சாணஎரிவாயு போன்ற மாற்று எரிபொருள் மூலங்களை வளர்த்தல்.

13 குடும்ப நலத் திட்டத்தை, தொண்டு அடிப்படையில் ஒரு மக்கள் இயக்கமாகப் பரப்பல்.

14 அடிப்படைச் சுகாதார வசதிகளைக கணிசமாக அதிகப்படுத்தல், தொழுநோய், காசம், பார்வை இழத்தல் போன்றவற்றைக் கட்டுப்படுத்தல்.

15 பெண்கள், குழந்தைகள், கருவுற்ற பெண்கள், தாய்ப் பாலூட்டும் பெண்கள், குழந்தைகள் முதலியோருக்கான சத்துணவு மற்றும் நல்வாழ்வுத் திட்டங்களை விரைவுபடுத்தல், முக்கியமாக பழங்குடியினத்தவர், மலை மற்றும் பிற்பட்ட பகுதிகளில் இத்திட்டங்களை விரைவுபடுத்தல்.

16 6லிருந்து 14 வயதுள்ள குழந்தைகளுக்கிடையே முக்கியமாக பெண் குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வியைப் பரப்பல்; அதே சமயத்தில் மாணவ மாணவியர்களையும் சேவா ஸ்தாபனங்களையும், வயது வந்தோரிடையே கல்வி அறிவின்மையை அகற்றும் திட்டங்களில் ஈடுபடுத்தல்.

17 அதிகப்படியான நியாயவிலைக் கடைகள் மூலமாக பொது விநியோக முறையை விரிவு படுத்தல், தொலைதூரப் பகுதிகளில் நடமாடும் கடைகளை ஏற்படுத்தல், தொழிற்சாலைத் தொழிலாளர்கள் மற்றும் விடுதியில் உள்ள மாணவர்களுக்கு வசதியாக அப்பகுதிகளில் கடைகள் நிறுவுதல்; மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்களும் குறிப்பேடுகளும் கிடைக்கச் செய்ய முன்னுரிமை அடிப்படையில் ஏற்பாடு செய்தல், வலுவானதொரு நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தை வளர்த்தல்.

18 திட்டங்கள் உரிய நேரத்தில் பூர்த்தி அடைவதை உறுதி செய்வதற்காக முதலீட்டு நடவடிக்கைகளைத் தாராளப் படுத்தல், தொழில் துறை கொள்கைகளை எளிதாக்கல், கைவினைப் பொருட்கள், கைத்தறி சிறிய மற்றும் கிராமத் தொழில்கள் வளர்ந்து, தமது தொழில் நுட்பத்தை நவீனப்படுத்திக் கொள்வதற்கு, அவற்றுக்கு எல்லா வசதிகளையும் அளித்தல்.

19 கள்ளக்கடத்தல்காரர்கள், பதுக்கல்காரர்கள், வரி கொடாது ஏய்ப்பவர்கள் ஆகியோருக்கு எதிராக, தொடர்ந்து கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளல், கறுப்புப்பணத்தை ஒழித்தல்.

20 திறன் உபயோகிப்பு, உள் வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளல் ஆகியவற்றின் மூலமாக, அரசு அமைப்புகளின் இயக்கத்தை மேம்படுத்தல்.

## பிரதமர் திரு ராஜீவ் காந்தி அறிவித்த புதிய இருபதம்சத் திட்டம்

**1986**






1. கிராமப்புற வறுமையை நீக்குதல்.
2. மானாவாரி விவசாயப் பாதுகாப்பு.
3. பாசன நீரை முறைப்படுத்தல்.
4. விளைச்சலைப் பெருக்குதல்.
5. நிலச் சீர்திருத்தங்களை அமல் செய்தல்.
6. கிராமத் தொழிலாளர்களுக்கு விசேஷத் திட்டங்கள்.
7. சுத்தமான குடிநீர் வழங்குதல்.
8. அனைவருக்கும் மருத்துவ வசதி.
9. குடும்பத்திற்கு இரண்டே குழந்தைகள்.
10. கல்வித் திட்டத்தை விரிவு படுத்துதல்.
11. தாழ்த்தப்பட்டோருக்கு நியாயம்.
12. பெண்களுக்குச் சம உரிமை.
13. இளைஞர்களுக்குப் புதிய வாய்ப்புகள்.
14. வீட்டு வசதி.
15. குடிசைப் பகுதிகளைச் சீர் செய்தல்.
16. வனப்பாதுகாப்புக்குப் புதிய திட்டம்.
17. சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாத்தல்
18. உபயோகிப்போர் நலனைக் காத்தல்.
19. கிராமங்களுக்கு மின் வசதி.
20. பயனுள்ள நிர்வாகம்.



தமிழ்நாட்டில் பெரிய மற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதனால் மேற்பரப்பு நீரின் பெரும் அளவு பயன்படுத்தப்பட்டுள்ளது. முதல் ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்தில் இம்மாநிலத்தில் 11,01,000 எக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதி செய்யப்பட்டு வந்துள்ளது. ஐந்தாண்டுத் திட்டங்கள் மற்றும் ஆண்டுத் திட்டங்கள் மூலமாக 1979-80 வரை கூடுதலாக 2,88,300 எக்டேர் நிலங்களுக்கு பாசன வசதி செய்யப்பட்டுள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறியீட்டு அளவான 66,000 எக்டேரை விட அதிகமாகச் சாதனை செய்து 72,700 எக்டேர் கூடுதல் நிலப்பரப்புக்குப் பாசன வசதி ஏற்பட்டுள்ளது.



# பாசன வளத்தைப் பெருக்குதல்

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1985-90) 40,000 எக்டேர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதி செய்து தரத் திட்டமிடப்பட்டுள்ளது. அதில் 1985-86ம் ஆண்டில் 20,000 எக்டேர் புதிய பாசன அபிவிருத்தி செய்து தர இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் 20,100 எக்டேர் என்ற அளவுக்குப் புதிய பாசன வசதி செய்து கொடுத்து, ஒரு சாதனை ஏற்படுத்தப் பட்டுள்ளது. இம்மாநிலத்தில் 20 அம்சத் திட்டம் செவ்வனே செயல்படுத்தப்பட்டு வருகிறது, என்பதற்கு இதுவே சான்றாகும்.

### சிறு பாசனம் (மேற்பரப்பு நீர்)

சிறுபாசனம் (சிறப்பு சிறுபாசனம் மற்றும் ஏரி தூர் வாரி புனரமைக்கும் திட்டம்) சார்பில் 1985-86ஆம் ஆண்டிற்கு நிதி மற்றும் செயல் இலக்குகள் முறையே ரூ. 228.27 இலட்சம் மற்றும் 3,213எக்டேர் என்று நிர்ணயிக்கப்பட்டது. இவ்வாண்டில் நிதி மற்றும் செயல் சாதனைகள் முறையே ரூ. 232.35 இலட்சம் மற்றும் 3,231 எக்டேராகும்.

### மானாவாரி சாகுபடி

தமிழகத்தில் பயிரிடப்படும் நிலப்பரப்பு சுமார் 69 இலட்சம் எக்டேர்களாகும். அவற்றில் 50 சதவீதத்திற்கும் மேலாக மானாவாரி சாகுபடிப் பயிர்களே பயிர் செய்யப்படுகின்றன. தமிழக மொத்த உணவு உற்பத்தியில் சுமார் 20 சதவீதம் இந்த மானாவாரி நிலங்களிலிருந்து கிடைத்து வருகிறது.



### தொழில் நுட்ப யுக்திகள்

1985-86ஆம் ஆண்டு 316 நீர் பிடிப்புப் பகுதிகளில் 1000 ஏக்கர் பெருவிளக்கப் பண்ணைகள் தமிழகமெங்கும் அமைக்கப்பட்டன. இதில் 1.62 இலட்சம் எக்டேரில் உயர்விளைச்சல் ரகங்களைப் பயிரிட்டும், முன்னேறிய சாகுபடி நுட்பங்களை உழவர்கள் கையாளவும் ஊக்குவிக்கப்பட்டனர். இது தவிர நீர்பிடிப்புப் பகுதிகளைச் சார்ந்துள்ள சுமார் 1 இலட்சம் எக்டேர் பரப்பில் திருந்திய மானாவாரிச் சாகுபடி முறைகள் உழவர்களிடையே அறிமுகப்படுத்தப்பட்டன.

### இடுபொருள் விநியோகம்

இத்திட்டத்தின் கீழ் 886 விதையுடன் உரமிடும் கருவிகள் மானிய விலையில் வழங்கப்பட்டன. மேலும் 21,985 உழுபடைக் கருவிகள் உழவர்களுக்கு வழங்கப்பட்டன.

வறட்சியைத் தாங்கவல்ல, அமோக விளைச்சல் தரக்கூடிய பொறுக்கு விதைகள் 30,520 எக்டேரில் விநியோகம் செய்யப்பட்டன. அதேபோன்று 27,000 எக்டேரில் சமச்சீர் உரமிடப்பட்டது. பூச்சி நோய்களிலிருந்து மானாவாரிப் பயிர்களைக் காக்க 34,300 எக்டேரில் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

குடும்ப நலம் வீட்டைக் காக்கும், தொழில்வளம் நாட்டைக் காக்கும்

TAMIN

# தமிழ்நாடு கனிம நிறுவனம்

சென்னை-600 005

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

உலகப் புகழ் பெற்ற குன்னம், பைத்தூர் கரும்பாறைகளோடு செந்தாரப்பள்ளி சாம்பல் நிறப் பாறைகளையும் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஏற்றுமதி செய்கிறது.

தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்குச் சொந்தமான நாறு விழுக்காடு ஏற்றுமதி நோக்குடைய "டாமின் கிரானைட்ஸ்" 2-3 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட கற்பலகைகள் மற்றும் சுவர்களில் பதிக்கவல்ல கற்பலகைகள் மற்றும் 10-15 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட நினைவுக் கற்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்கிறது.

இந்நிறுவனம் உற்பத்தி செய்து விற்பனை செய்துவரும் இதர உயர்வகைக் கனிமங்கள்.

| | | |
|---|---|---|
| 1. இந்திய தர மணல் | | |
| 2. சுண்ணாம்புக் கல் | : | ஐ.எஸ். 650/1966 |
| | : | கெமிகல் கிரேடு சராசரியாக |
| 3. வெங்கக் கல் (குவார்ட்ஸ்) | | $+91\%$ $CaCo_3$ |
| 4. பெல்ட்ஸ்பார் | : | $+99.8\%$ $SiO_2$ |
| 5. ரோஸ் குவார்ட்ஸ் | : | $+12\%$ $K_2O$ |
| 6. சிலிகா மணல் | : | ஆபரணங்கள் செய்யும் தரம் உடையது |
| 7. வெப்பந்தாங்கும் களிமண் | : | $+99.7\%$ $SiO_2$ |
| 8. வெர்மிகுலைட் | : | ரிப்ராக்டரி கிரேடு 32.1% $A1_2O_3$ |
| | : | சராசரியாக 14 மடங்கு கனபரிமாணம் |
| 9. விரிவுபடுத்தப்பட்ட வெர்மிகுலைட் | | விரிவடையும் தன்மையுடையது |
| 10. சுண்ணாம்புச் சிப்பி | : | பொன் நிறமானது |
| | : | சராசரியாக $CaCo_3$ + 94% |

தேவைக்கு அணுக வேண்டிய முகவரி:
தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,
தமிழ்நாடு கனிம நிறுவனம்,
TWAD HOUSE, 31, காமராஜர் சாலை,
தபால் பெட்டி எண். 2961,
சேப்பாக்கம், சென்னை-600 005.
தொலைபேசி எண்: 848932
டெலக்ஸ்-41 6081TNML IN

தொழிற்சாலை:
டாமின் கிரானைட்ஸ்,
மணலி — பொன்னேரி ரோடு,
மணலி,
சென்னை-600 068

தந்தி - MINESALITE

DIPR/2623/363/86-27/SAS





# மிகை நில ஒப்படை முன்னேற்றம்

நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் 31-5-1986-ஆம் நாள் வரையில் அடைந்த முன்னேற்றம் பின்வருமாறு:



பயனடைந்தோர் எண்ணிக்கை : ஆதிதிராவிடர் — 42,433 பேர். பரப்பு-47,011 ஏக்கர். பழங்குடியினர்-77 பேர். பரப்பு-114 ஏக்கர். ஏனையோர் 53,458 பேர். பரப்பு 75,246 ஏக்கர். மொத்தம்: 95,968 பேர். பரப்பு 1,22,371 ஏக்கர்.

வழங்க வேண்டியிருக்கும் பரப்பு: புதிய 20 அம்சத் திட்டங்களைப் பகிர்ந்தளித்தல் 4-வது அம்சமாகும். தற்போதுள்ள உபரி நிலங்கள் விநியோக விதிகளின் கீழ், உயரளவாக 3 ஏக்கர் புன்செய் நிலத்தையோ அல்லது 1.5 ஏக்கர் நன்செய் நிலத்தையோ தகுதி வாய்ந்தவர்களுக்கு ஒப்படை செய்யப்படுகிறது. 20 அம்சத் திட்டத்தின் கீழ் 31-3-86 தேதி வரை 31,594 ஏக்கர் உபரி நிலங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 1-4-1985 தேதி முதல் 31-3-1986 வரையிலுள்ள ஓராண்டுக் காலத்தில் 3,077 ஏக்கர் உபரி நிலங்கள் தமிழகத்தின் 18 மாவட்டங்களில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

1985-'86-ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் உபரி நிலம் ஒப்படை செய்தவர்களுக்கு நிதி உதவித்தொகையாக விநியோகம் செய்ய மத்திய அரசு திட்டத்தில் ரூ. 20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிதி உதவித் தொகை எக்டேர் ஒன்றுக்கு ரூ. 2,500 என வழங்கப்படுகிறது. இந்தத் தொகை நில ஒப்படைதாரர்களுக்கு மொத்த மானியமாக வழங்கப்படுகிறது. வழங்கப்படும் மானியத் தொகையில் 80 சதவீதம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உரமாகவும், எஞ்சிய 20 சதவீதத் தொகை ரொக்கமாகவும் ஒப்படைதாரர்களுக்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 1985-86ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 20 இலட்சமும் உபரி நிலங்களை மேம்படுத்த ஒப்படைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது.

## 20 அம்சத்தில் 'டான்சி'



'டான்சி' என்று சுருக்கமாகக் கூறப்படும் தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் 20 அம்சத் திட்டத்தின் பல்வேறு அம்சங்களை நிறைவு செய்யும் வகையில், பல்வேறு துறைகளுக்குப் பயன்படும் தரமான பொருள்களை உற்பத்தி செய்து வருகிறது.

பாசன வசதிக்கான இரும்புக் கதவுகள், சிறு அரிசி ஆலைக்கான இயந்திரங்கள், மின் எண்ணெய் செக்கு, கிராமப் பஞ்சாயத்துக்குத் தேவைப்படும் குடிநீர்த் தொட்டிகள், பள்ளிக் கூடச் சாதனங்கள், ஆதிதிராவிடர் குடியிருப்புக்கான சாதனங்கள் மற்றும் குடிநீர்த் தொட்டிகள், வறட்சிக் காலத்தில் பயன்படும் ஆழ் துளைக் கிணறு - கைப்பம்புகள், வீடு கட்டுவதற்கான பொருள்கள், கிராமங்களில் மின் வசதிக்கான பொருள்கள், சாண எரி வாயுக்கான உபகரணங்கள், சுகாதார நிறுவனங்களுக்கான இரும்பு, எஃகுச் சாதனங்கள், பள்ளிகளுக்கான கட்டுமானப் பொருள்கள் மற்றும் மர, இரும்புச் சாமான்கள், முதலமைச்சர் கல்வி சத்துணவுத் திட்டத்திற்கான பாத்திரங்கள், சிறு தொழில்களுக்கான உபகரணங்கள் முதலானவற்றை டான்சி தயாரித்து, பல்துறை முன்னேற்றத்துக்குத் துணையாக இருந்து வருகிறது.

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மக்களில் குடும்பத் தலைவரோ, தனி நபரோ முதலாளிகளிடம் முன் பணம் பெறறு பணம் திருப்பித் தர முடியாத நிலையில், குறைந்த கூலியில் அல்லது கூலியற்ற தொழிலாளிகளாக மாறி விடுகின்றனர். இம்முறையேதான் கொத்தடிமைத்தனத்திற்கு மூல காரணமாகிறது. கண்டுபிடிக்கப்பட்டதில் 90 சதவிகிதம் அதிகமான கொத்தடிமைகள் தங்கள் அடிப்படை உரிமைகளையும், சுதந்திர வாழ்வையும் இழந்தவர்களாகக் காணப்பட்டனர்.

காந்திய நெறியான ''அந்தியோதயா'' முறையானது, கொத்தடிமைகளை விடுதலையாக்கவும் அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் மறுவாழ்வுத் திட்டங்களை உருவாக்கவும் வழி வகுத்தது.

பெருந்தீங்கினை விளைவிக்கக் கூடிய கொத்தடிமை முறையானது இந்தியாவின் வட பாகங்களிலும், தமிழ்நாட்டின் அண்டைய மாநிலங்களாகிய ஆந்திரம், கர்நாடகம், ஒரிசா, மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களிலும் இருந்து வந்துள்ளது.

தமிழ்நாட்டின் சில பிற்போக்கான மாவட்டங்களிலுள்ள பின் தங்கிய நிலையிலான மக்களும் கல்லுடைக்கும் குவாரிகள் அதிகமாகவுள்ள அண்டை மாநிலங்களுக்கு வயிற்றுப்பாட்டிற்காகக் குடிபெயர்ந்துள்ளனர். 1980ஆம் ஆண்டிற்கு முன்னதாக இவ்வகையான மக்கள் நீலகிரி மாவட்டத்திலும் (பனியா தொழிலாளர்களும்), கல்ராயன் மலையிலும், (கவுண்டன் என்னும் பிரிவினரும்), இராமநாதபுரம் மாவட்டத்திலும் (பாலியார் குடியினரும்) பெருவாரியான அளவில் கண்டு பிடிக்கப்பட்டு அரசின் முயற்சியினால் நிலப்பிரபுக்களின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். தற்பொழுது தமிழ்நாட்டில் கொத்தடிமைகள் முறை இல்லை.



# கொத்தடிமை ஒழிப்பு

மத்திய அரசு, கொத்தடிமை முறையை நம்நாட்டிலிருந்து அறவே அகற்ற கடும் முயற்சிகளை மேற்கொள்கிறது. மேலும் விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள் மீண்டும் கொத்தடிமைத் தனத்திற்கு நழுவுவதைத் தடுப்பதற்கான உபயோகமான திட்டங்களை முறைப்படுத்துவதற்கான தேவைகளை வலியுறுத்தி வருகிறது. அம்மாதிரியான திட்டங்களில் மத்திய அரசு சம பங்காக மானியம் வழங்கி, மாநில அரசுக்கு உதவுகிறது. மாநில அரசும் தமிழ்நாட்டைச் சார்ந்த கொத்தடிமைகளை அண்டை மாநிலங்களிலிருந்து உடனடியாகக் கண்டு பிடித்து, விடுவித்து, நல்வாழ்வுத் திட்டங்கள் மூலம் மறுவாழ்வளிப்பதில் மத்திய அரசுக்கு இணையாகச் செயல்படுகின்றது.

ரூபாய் 6,000 வரையிலா[illegible] செலவில் குடியிருக்கும் விடுக[illegible] கட்டித் தருதல் (தாழ்த்தப்ப[illegible]டோர் பழங்குடியினருக்குச் செ[illegible]யப்படுவதைப்போன்று) பா[illegible] மாடுகளை வழங்குதல், விவச[illegible]யக் கருவிகள் வழங்குதல், கல்[illegible]டைக்கும் கருவிகள் வழங்குதல் விவசாயத்திற்கு மானியம் வழ[illegible]குதல், உழவுமாடுகள் வழங்குதல் கோழிகள் வழங்குதல் போன்[illegible]றவை தனி நபருக்கு ரூ.4,000[illegible]கும் மிகைப்படாமல் அந்ந[illegible]ரின் தொழில் ஆர்வத்திற்கு ஏற்[illegible] அனுமதித்தல் போன்ற மறுவாழ்வுத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

மறுவாழ்வுப் பணிகளை மேலும் துரிதப்படுத்த தலைமைச் செயலரைத் தலைவராகக் கொண்ட மாநில அளவிலான ஏற்புக் குழு ஒன்று 1984 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. கொத்தடிமை[illegible] மறுவாழ்விற்காக மாவட்ட [illegible] அனுப்பப்[illegible] கருத்துருக்களை இக்குழு அடிக்கடி கூடி, ஆய்வு செய்தபின் [illegible]ளிக்கிறது. சுமார் 1,554 [illegible] 1984-85 ஆம் [illegible] மறுவாழ்வளிக்கப்பட் [illegible] ரூ.8.95 இலட்சம் [illegible] பல்வேறு திட் [illegible]

ஆந்திரத்தில் பதுங்கனிப் பெட்டி என்ற இடத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாகக் கொத்தடிமைகளாக வைக்கப்பட்டிருந்து தமிழகத்தைச் சேர்ந்த 17 குடும்பங்களைச் சேர்ந்த ஆண்கள் மற்றும் பெண்கள் 65 பேரை தமிழக போலீசார் ஆந்திரப் போலீசார் உதவியுடன் 1986 ஆகஸ்ட் திங்களில் மீட்டு வந்துள்ளனர். இவர்கள் பெரம்பலூர் வட்டத்தைச் சேர்ந்த செங்கேரி என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் அனைவரும் சொந்தக் கிராமத்திற்கு வந்து சேர்ந்துவிட்டனர்.

1986-ஆம் ஆண்டு அக்டோபரில் மத்தியப்பிரதேசம், தாம்ராபாத் கிராமத்தில் கற்குவாரியில் கொத்தடிமைகளாக இருந்த தம்பதியினரும், அவர்களது மூன்று குழந்தைகளும் மீட்கப்பட்டுள்ளனர். 9 ஆண்டுகளுக்கு முன்பு இவர்கள் அங்கு சென்றனர்.





ஒன்பதாம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை கல்வி பயின்ற நகர்ப்புற ஆதிதிராவிட இளைஞர்களுக்கு தமிழ்நாட்டிலுள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் குறுகிய காலப் பயிற்சி அளிப்பது நகர்ப்புற ஆதி திராவிடர் இளைஞர்கள் பயிற்சித் திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் மூலம் 1985-86-ல் 1,500 நபர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும். அதில் முதலாண்டு 960 நபர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.

பழங்குடியினரின் மேம்பாட்டுத் திட்டத்திற்கென 1976-77 முதல் 1985-86 வரை அரசு ரூ. 52.58 இலட்சங்கள் தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்திற்கு அளித்து அதன் மூலம் தேனீ வளர்ப்பு, பிரம்பு மற்றும் மூங்கில் கூடை பின்னுதல், பாய் நெசவு செய்தல், கடுக்காய் உற்பத்தி செய்தல், புளிப் பதப்படுத்துதல், தச்சு கருமாரர் தொழில் கருவிகள் வழங்குதல், எமரிகல் திரிகை அளித்தல், பயிற்சி அளித்தல் போன்ற கிராமத் தொழில் திட்டங்களை நிறைவேற்ற வழி வகை செய்தது. இதனால் 2,829 பேர் பயன் அடைந்தனர்.

மேலும் வடஆர்க்காடு மாவட்டம், ஜவ்வாதுமலை, சேலம் மாவட்டம் கொல்லிமலை, மற்றும் கல்ராயன்மலை ஆகிய மலைகளில் இத்திட்டங்களைச் சீரிய முறையில் நிறைவேற்றவும், அவ்வப்போது பழங்குடி மக்களின் தொழிலுக்கு ஏற்ப திட்டங்களை வகுக்கவும், பயிற்சிகள் அளிக்கவும் அவர்கள் தொழில்களை நன்கு பராமரிக்கத்தக்க ஆலோசனைகள் வழங்கவும் இதற்கென தனியாக ஒரு உதவி இயக்குநர் அலுவலகம் கீழ்க்கண்ட பணியாளர்களைக் கொண்டு 1982-ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது.

பழங்குடியினர் மேம்பாட்டிற்காக திட்டங்களை வகுப்பதிலும், அவர்கள் முன்னேற்றத்திலும் அரசு தனி கவனம் செலுத்துவது போல் வாரியமும் அரசு அளித்துள்ள நிதிக்கு மேல் கதர் ஆணைக்குழுவின் மூலம் நிது உதவி பெற்று தேனீ தொழிலின் மூலம் நன்கு பயின்றவர்களைக் கொண்டு தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் அமைத்து அதற்கு மூலதனம் வழங்கியும், குறிப்பிட்ட கிராமத் தொழிலாகிய தேனீ வளர்ப்பு, தச்சு கருமாரர் தொழில், மூங்கில் மற்றும் பிரம்பு கூடை முடைதல், பாய்நெசவு, ரொட்டி செய்தல், மட்பாண்டம் செய்தல் போன்ற தொழிலில் ஈடுபட்டுள்ள தனி நபர்களை ஊக்குவிக்க அவர்களுக்கு நிதி உதவி அளித்தல் போன்ற திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தியுள்ளது. கதர் ஆணைக்குழுவின் நிதியுதவியுடன் இது வரை ரூ. 10.28 இலட்சம் செலவு செய்து அதன் மூலம் 3,473 பேர் பயனடைந்துள்ளனர்.



# ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலம்



ஆதிதிராவிடர் மற்றும் [illegible]

# விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம்



தமிழ்நாட்டில், உழவுத்தொழிலிலும், உழவுத் தொழிலைச் சார்ந்த துணைத் தொழில்களிலும் வேலையிலமர்த்தப்படுவோருக்கான குறைந்த அளவு ஊதிய விதங்கள், முதன் முதலில், 1948-ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தைச் சேர்ந்த விதித்துறைகளின் கீழ், 1959-ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டது. நிலச் சீர்திருத்த ஆணையாளர் தலைமையில் அமையும் ஆலோசனைக் குழு அளிக்கும் பரிந்துரைகளின் அடிப்படையில், மூன்றாண்டுகளுக்கொரு முறை இவ் ஊதிய விதங்கள்திருத்தியமைக்கப்படுகின்றன. தமிழ்நாடு அரசு, 5.4.1984ஆம் நாளிலிருந்து செயலுக்கு வரும் வகையில், குறைந்த அளவு ஊதிய விதங்களைத் திருத்தியமைத்துள்ளது.

தற்போது செயலிலுள்ள குறைந்த அளவு ஊதிய விதங்களை நிர்ணயிக்கும்பொழுது ஒரே வேலையை, அல்லது ஒரே மாதிரியான வேலையை ஆண், பெண் தொழிலாளர்கள் செய்யும்போது ஊதியம் வழங்குவதில் அவர்களிடையே வேறுபாடு காட்டப்படவில்லை. மேலும், அரசு பின் வரும் வகையைச் சேர்ந்த, உழவுத் தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்காக வேலைநேரங்களையும் நிர்ணயித்துள்ளது.

உழவு தவிர, ஏனைய உழவுக் தொழில்களில் அமர்த்தப்படும் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 7 மணி நேரம்.

உழவுக்கு அமர்த்தப்படும் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 5 மணி நேரம்.

சிறுவர்களை வேலைக்கமர்த்துவதை ஊக்குவிக்காதிருக்கும் பொருட்டு, உரிய வயதடையாதவர்களுக்குத் தனியாக ஊதியம் ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை.

ஆலோசனைக் குழுமுறையைப் பின்பற்றி, குறைந்த அளவு ஊதியங்களை மேலும் திருத்துவதற்கு அரசு முடிவு செய்துள்ளது. ''ஆலோசனைக்குழு'' அமைப்பதற்கான செயற்குறிப்பை அரசு பரிசீலித்து வருகிறது.

இச்சட்டத்தைச் செயற்படுத்துவதற்கான பணியாளரமைப்பைப் பொறுத்தமட்டில், குறைந்



தளவு ஊதிய விதங்களைச் செயற்படுத்துவதற்காக, 1948-ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் கீழ், பிர்கா வருவாய் ஆய்வாளர்கள், துணை வட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள், வருவாய்க் கோட்டாட்சியர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆகியோரை ஆய்வாளர்களாக அரசு அறிவித்துள்ளது. உழவுத் தொழிலாளர்களைப் பொறுதத மட்டில் குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் 20 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட எல்லா உரிமைக் கோரிக்கைகளையும் விசாரித்து முடிவு செய்வதற்கு, வருவாய்த் துறையைச் சேர்ந்த வட்டாட்சியர்கள், அவரவர் அதிகார வரம்பிற்குள், உரிய அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். உழவுத் தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவு ஊதிய விதங்கள் வழங்காத அல்லது குறைத்து ஊதியம் வழங்கிய நிலச் சொந்தக்காரர்கள் மீது வழக்குத் தொடருவதற்காக வருவாய்க் கோட்டாட்சியர்களுக்கு அதிகாரமளித்து அரசு அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

உழவுத் தொழிலில் வேலை செய்பவர்களுக்குக் குறைந்த அளவு ஊதிய விதங்களை அளிப்பதைக் கண்டிப்புடன் செயற்படுத்துவதற்காக, மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. கூடுதலாக ,பின் வருபவை தொடர்பாக, நிலச்சீர்திருத்த ஆணையாளர் மூலம் மாவட்ட ஆட்சியர்களுக்கும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

குறைந்த அளவு ஊதிய விதங்களைச் செயற்படுத்துவது பற்றியும் அதன் விவரங்கள் தொடர்பாகவும் உழவுத் தொழிலாளர்களிடையே விளம்பரப்படுத்தல்;

பெருமளவில் குறைந்த அளவு ஊதிய விதங்களைச் செயற்படுத்தாத பகுதிகளில் தாமாகவே நடவடிக்கை எடுத்தல்.

பின் வரும் முறைகளைப் பின்பற்றி, உழவுத் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறைந்த அளவு ஊதிய விதங்களுக்குப் பரந்த அளவில் விளம்பரம் அளிக்குமாறு நிலச் சீர்திருத்த ஆணையாளர் மாவட்ட ஆட்சியாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.







முழு விவரங்களுக்கு, அருகிலுள்ள நியூ இந்தியா ஆபீஸ் அல்லது ஏஜெண்டோடு தொடர்பு கொள்ளுங்கள்.

இன்ஷூரன்ஸ்—நஷ்ட காலத்தில் நம்பகமான ஆதரவு!

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்

(ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியாவின் துணை நிறுவனம்)

# கிராமப்புறங்களில் குடிநீர் வழங்கல்

'தமிழ்நாட்டில் இன்னும் பல கிராமங்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் தட்டுப்பாட்டோடு இருக்கின்றன; நான் சென்ற பல இடங்களில் எந்தத் திட்டம் எப்படியிருந்தாலும் சரி; எங்களுக்குக் குடிநீர் கொடுங்கள் என்று மக்கள் கேட்டார்கள். ஆகவே கிராமப்புற மக்களின் குடிநீர்ப் பிரச்னையைத் தீர்ப்பதே இந்த அரசின் தலையாய பணியாக இருக்கும்' என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் 1977ல் முதல்வராகப் பதவிப் பொறுப்பேற்ற நேரத்தில் தெரிவித்தார்.

'சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்'

—என்ற குறள், இந்த விஷயத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பொறுத்தமட்டில் தவறாகிவிட்டது. ஆம்; குடிநீர்ப்பிரச்னை உள்ள கிராமங்களே தமிழ்நாட்டில் இல்லை என்கிற நிலைமை உருவாகியிருக்கிறது இப்போது. பாதுகாக்கப்பட்ட குடிநீர் தமிழகத்தில் அங்கிங்கெனாதபடி எங்கும் வழங்கப்படுவதைக் காண்கிறோம்.

இருபது அம்சத்திட்டத்தில் 8-வது அம்சமான 'கிராமங்களுக்குக் குடிநீர் வழங்குதல்' என்பது செம்மையுறச் செயல்படுத்தப்பட்டிருக்கிறது தமிழ்நாட்டில்.

1984-85ல், திருச்சிமாவட்டத்தில் மட்டும் 220 கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தரப்பட்டிருக்கிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த 20 பிரச்னைக் கிராமங்களுக்குக் குடிநீர் அளிக்கப்பட்டுள்ளது.

1984-85ல், தருமபுரி மாவட்டத்தில் பிரச்சினைக் கிராமங்களாக இருந்த 31க்கும் குடிநீர் வழங்கப்பட்டிருக்கிறது.

தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த 15 கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் அளிக்கப்பட்டுள்ளது.

நீலகிரிமாவட்டத்தில் 10 குக்கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு ரூ. 35.90 இலட்சத்தில் அதற்கான திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 235 குடியிருப்புகளில் இருந்த தண்ணீர்ப் பிரச்னை தீர ரூ. 193 இலட்சத்தில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் மூலம் 64 ஆயிரம்பேர் பயனடைந்து வருகிறார்கள்.

அண்மைக்காலத்தில் உருவாக்கப்பட்ட காமராஜர் மாவட்டத்திலேகூட 75 கிராமங்களுக்குக் குடிநீர் வரத்து முறைப்படுத்தித் தரப்பட்டுள்ளது.

இப்படி தமிழ்நாடு அரசின் தக்க நடவடிக்கைகளால், இங்குள்ள அத்தனை மாவட்டங்களிலும் இருந்த குடிநீர்ப் பிரச்னை நீக்கப்பட்டு விட்டது என்பது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை!






# மின் உற்பத்திச் சாதனை



**தொ**ழில் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் மின்சக்தி இன்றியமையாத தூண்டுகோலாகும். 1984-85ஆம் ஆண்டில் திட்டச் செலவில் 25 விழுக்காட்டிற்கும் மேற்பட்ட தொகையை அரசு மின்சக்தி உற்பத்திக்காக ஒதுக்கியது; தமிழ்நாடு மின்வாரியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள அனல்மின் நிலையங்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டதன் பலனாக மின்சக்தி உற்பத்தி பெருமளவு உயர்ந்துள்ளது.

'ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு' திட்டத்தின் கீழ், குடிசை வாழ் மக்களுக்கு 15.9.84 முதல் மின்னொளி இலவசமாக வழங்குதல் விவசாயத்திற்கு நீரேற்றுப் பொறிகளை (பம்பு செட்டுகளை) மட்டுமே முழுமையாக நம்பியுள்ள சிறு உழவர்களுக்கு மின்சக்தியை இலவசமாக வழங்குதல் போன்ற பணிகள் நடைபெற்றுள்ளன. ஒரு குதிரைத் திறன் கொண்ட நீரேற்றுப் பொறிக்கு ஆண்டொன்றுக்கு ரூ.75 மட்டுமே செலுத்த வேண்டும் என்ற ஒரே படித்தான கட்டண வீதச் சலுகை ஏனைய உழவர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக சுமார் 6 இலட்சம் குடிசை வாழ் மக்களும் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட உழவர்களும் பயன் அடைந்துள்ளனர்.

1985-86 ஆம் ஆண்டில் மின் உற்பத்திக்கென ரூ.326 கோடி ஒதுக்கப்பட்டது. இது அதற்கு முந்தைய ஆண்டைக் காட்டிலும் ரூ.89 கோடி அதிகமாகும். 1983-84 வரை 95,279 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது. 1984-85 ஆம் ஆண்டில் 50,000 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இ[illegible] உள்ள மாநிலங்[illegible] வருகிறது.

ஏழாவது திட்டத்தில் மொத்தத் திட்ட நிதி ஒதுக்கமான ரூ. 5,750 கோடியில், மின்சக்தித் துறைக்கு ரூ.2,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 1985-86 ல் மின்சக்தித் துறைக்கு ரூ.326 கோடி ஒதுக்கப்பட்டது. இது, 1986-87ல் ரூ.395 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

எண்ணூர், தூத்துக்குடி அனல் மின் நிலையங்களைப் புதுப்பித்து நவீனப்படுத்த, வாரியம் தீவிர நடவடிக்கை எடுத்ததால், இவற்றின் செயல்திறன் இந்த ஆண்டு வெகுவாக மேம்பாடு அடைந்துள்ளது. தூத்துக்குடி அனல் மின் நிலையம், 1985-86ல் 65 விழுக்காடு PLF ஐ அடைந்தது. இந்நிலையம், 1983-84ல், 51.5 விழுக்காட்டையும் 1984-85ல் 62 விழுக்காட்டையும் ஒப்பிடுகையில், ஆண்டு முழுவதற்கும் 67 விழுக்காடு PLF ஐ அடையும். எண்ணூர் அனல்மின் நிலையத்தைப் பொறுத்தவரை ரூ.100.10 கோடி செலவில் விரிவான புதுப்பித்தல் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பயன்கள் ஏற்கனவே கிடைக்கத் தொடங்கியுள்ளன.





# வனவளம்



**த**மிழ்நாட்டில் காடுகளின் பரப்பு 22.31 இலட்சம் எக்டேராகும். இதில் காப்புவனம் 18.30 இலட்சம் எக்டேர். 3.40 இலட்சம் எக்டேர் காப்பு நிலம்; ஊரகப்படுத்தப்படாத காடுகள் 0.61 இலட்சம் எக்டேர். காடுகளின் பரப்பை மிகுதிப் படுத்தும் நோக்கோடு வனப்பகுதிகளுக்கு வெளியே உள்ள - அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களிலும், ஊராட்சி நிலங்களிலும், குளக்கரைகள், தேசிய நெடுஞ்சாலைகளிலும், சமூகக் காடுகள் திட்டத்தின் கீழ் பெருமளவில் மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன.

காடுகள் மேம்பாட்டுப் பணிகளுக்காக 1977-78ல் ரூ.8.03 கோடி செலவு செய்யப்பட்டது. 1985-86ல் ரூ.28.6 கோடி செலவு செய்யப்பட்டது.

காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 1983-84 ஆம் ஆண்டில் 1,192.46 இலட்சம் மரக்கன்றுகளும் 1984-85 ஆம் ஆண்டில் 1,106.86 இலட்சம் மரக்கன்றுகளும் 1985-86 ஆம் ஆண்டில் 1,214.491 இலட்சம் மரக்கன்றுகளும் நடப்பட்டன.

சமூகக் காடுகள் 1983-84 ஆம் ஆண்டில் 28,768 எக்டேரிலும், 1984-85 ஆம் ஆண்டில் 38,249 எக்டேரிலும், 1985-86 ஆம் ஆண்டில் 29,960 எக்டேரிலும் வளர்க்கப்பட்டன.

வனப் பண்ணைத் திட்டத்தின் கீழ் பொதுமக்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு 1983-84 ஆம் ஆண்டில் 459.809 இலட்சம் மரக்கன்றுகளும், 1984-85 ஆம் ஆண்டில் 443.510 இலட்சம் மரக்கன்றுகளும், 1985-86 ஆம் ஆண்டில் 531.175 மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

வனக்குற்றங்களைக் கண்டுபிடித்துக் குற்றவாளிகள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதையே முழு நேரப் பணியாகக் கொண்டு செயல்படும் பொருட்டு வனப் பாதுகாப்புப் படைகள் பல நிறுவப்பட்டுள்ளன. சோதனைச் சாவடிகள் 89 நிறுவப்பட்டுள்ளன.

சுவீடன் அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் நிதி உதவியுடன் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம் 1981-82 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டப்பணியில் முதல் கட்ட மதிப்பீடு ரூ.45 கோடி ஆகும். இத்திட்டத்தின் முதல் கட்டத்தை 1986-87 முடிய மேலும் ஓராண்டு காலம் நீடித்திட இந்திய அரசு அனுமதித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ், முதல் ஐந்தாண்டுகளில் (1981-82, 1985-86) 1,21,629 எக்டேர் பரப்பில் மரம் வளர்ப்புப் பணி நடைபெற்றுள்ளது. இது தவிர தொடர் தோட்டங்கள் 76,026 கி.மீட்டரில் வளர்க்கப்பட்டன. 10.38 கோடி மரக்கன்றுகள் பொதுமக்களுக்கும் நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டன.

சாண எரிவாயு அமைப்புகளை நிறுவுவதில் தமிழகம் மிக வெற்றிகரமாகச் செயலாற்றி உள்ளது. 31.3.1986ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டில் மொத்தம் 10,000 சாண எரிவாயு அமைப்புகளை நிறுவ வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இருந்தது. இந்த இலக்கை மிஞ்சி மொத்தம் 17,549 சாண எரிவாயு அமைப்புகள் நிறுவப்பட்டன.

சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 1986-87 ஆம் ஆண்டில் 21.268 எக்டேர் நிலத்தில் மரக்கன்றுகள் நடவும், 940 இலட்சம் மரக்கன்றுகள் உற்பத்தி செய்து வழங்கவும் வனப் பண்ணைத் திட்டத்தின் கீழ் 4.71 கோடி மரக்கன்றுகள் பொதுமக்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கவும் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

சமூக வனத் திட்டம் மற்றும் ஊரக எரிமர உற்பத்தித் திட்டங்கள் தவிர, அரசுக் காட்டில் ஆங்காங்கே தரம் குறைந்தும், மதிப்புக் குறைந்தும் பாழ்பட்டுப்போன பகுதிகளிலும், பல்வேறு திட்டங்களின் கீழ் மரங்கள் இலட்சக் கணக்கில் வழங்கப்பட்டுவருகின்றன. இவை காடுகளின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் இயற்கைச் சூழலை மேம்படுத்துவதற்கும் செயல்படுத்தப்படுகின்றன.

## அம்சம் : 13

# குடும்ப நலம் பேணிட....

குடும்ப நலத் திட்டத்தை 1956 முதல் தமிழகம் ஒரு மக்கள் இயக்கமாக நடத்தி மக்களின் விருப்பத்தின் அடிப்படையிலேயே அதனை வெற்றிகரமாக நிறை



வேற்றி வருகிறது. இந்தியாவின் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும் போது இலக்கினை அடைவதில் தமிழ்நாடு முதல் வரிசையில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ்நாட்டின் மக்கள் தொகை 1981ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி 4.84 கோடியாகும். 1971-81 ஆகிய பத்தாண்டுகளில் தமிழகத்தின் மக்கள் தொகை வளர்ச்சி 17.5 சதவிகிதமாகும். அதே கால கட்டத்தில் இந்தியா முழுவதும் தேசிய அளவலான மக்கள் தொகை வளர்ச்சி 25 சதவிகிதமாகும். தேசிய அளவில் மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதில் தமிழ்நாடு முன்னணியில் நிற்பதை இது காட்டுகிறது. கி.பி. இரண்டாயிரத்தில் சராசரி ஒரு தாய்க்கு ஒரு பெண்குழந்தை என்ற இலக்கினை அடைய தேசிய அளவில திட்டமிடப்படுகிறது.

அந்த இலக்கினை தமிழ்நாடு 1991-92ம் ஆண்டிலேயே அடையத் திட்டமிட்டுள்ளது.

தமிழ்நாட்டின் இன்றைய குடும்ப நலத் திட்ட நிறைவேற்றம் ஐந்து அம்சங்களைக் கொண்டதாகும்.

1. தகவல் தொடர்பு; 2. விரிவாக்கக் கல்வி; 3. குடும்ப நலம் ஏற்க வசதிகள்;4.பின் கவனிப்பு; 5. தாய் சேய் நலம்.



1984-85ல் குடும்பநலத் திட்டத்தை நிறைவேற்றுவதில் அரிய சாதனை புரிந்ததற்காக மத்திய அரசின் பரிசாக ரூ. 2·5 கோடியைத் தமிழகம் பெற்றது. அடுத்து 1985-86ஆம் ஆண்டிலும் இத்தகைய சாதனைக்கான பரிசாக ரூ. 2.5 கோடியைத் தமிழக அரசு பெறவிருக்கிறது.

தற்காலிகக் கருத்தடை முறைகளைக் கடைப்பிடிப்பதில் முந்திய ஆண்டுகளைவிடத் தற்போது அதிக அளவில் தமிழகம் சாதனை புரிந்துள்ளது. பெண்கள் கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்துவது, குடும்ப நலத் திட்டம் தொடங்கிய காலம் முதல் 1985-86ஆம் ஆண்டில் தான் மிகவும் அதிக அளவில் நடைபெற்றுள்ளது.

தற்காலிகக் கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்துவதில் 1985-86ல் தமிழகத்தின் சாதனை விவரம்.

| குடும்ப நல முறைகள் | இலக்கு | சாதனை | சதவிகிதம் |
|---|---|---|---|
| கருத்தடை வளையம் | 1,68,000 | 1,92,120 | 114.4 |
| வழக்கமான கருத்தடைச் சாதனங்கள் | 2,00,000 | 1,77,214 | 88.6 |
| உட்கொள்ளும் மாத்திரைகள் பயன்படுத்துவோர் | 76,000 | 47,885 | 63.0 |



## அம்சம்: 14

# நோயற்ற வாழ்வு



தொழுநோய் மைக்கோ-பாக்டிரியம் என்னும் கிருமியால் நீண்ட காலமாக உள்ள தொற்றும் வகையைச் சேர்ந்த நோயாகும்.

தமிழகத்தில், கன்னியாகுமரி, நீலகிரி மாவட்டத்தைத் தவிர ஏனைய மாவட்டங்களில் சராசரி 1000 பேருக்கு 13 பேர் என்ற விகிதத்தில் தொழுநோய் இருப்பதாக 1971இல் கணக்கிடப்பட்டது.

தேசிய தொழுநோய்த் தடுப்புத் திட்டம், தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டமாகப் பெயர் மாற்றம் பெற்று 20 அம்சத் திட்டத்தில் 14ஆம் அம்சமாகச் சேர்க்கப்பட்டது.

கூட்டு மருந்து சிகிச்சை: கூட்டு மருந்து சிகிச்சையின் நோக்கங்கள் கீழ்வருமாறு:

டாப்சோன் மாத்திரைக்கு எதிர்க்கும் சக்தி பெற்ற தொழுநோய்க் கிருமிகளை ஒழித்தல்.

மிகக்குறைந்த காலக்கட்டத்திற்குள் தொற்றும் வகையைச் சேர்ந்த நோயாளிகளைத் தொற்றா வகை நோயாளிகளாக மாற்றி அவ்வியாதியிலிருந்து மக்களைக் காப்பாற்றுதல்.

ஆரம்ப நிலையிலேயே கூட்டு மருந்து சிகிச்சை அளித்து அங்கஹீனம் ஏற்படுவதைத் தடுத்தல்.

இந்தியத் துணைக் கண்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பனிரண்டு மாவட்டங்களில் வடார்க்காடு மாவட்டமும் ஒன்றாகும்.

சுவீடன் பன்னாட்டு முன்னேற்ற நிறுவனமும் ( SIDA ) உலகச் சுகாதார நிறுவனமும் இணைந்து இம்மாவட்டத்தின் கூட்டுச் சிகிச்சைமருத்துவமனைக்குப் பண உதவியும் ஆலோசனையும் வழங்கி வருகின்றன.

**மக்களுக்குச் சுகாதார வசதிகளை நிறுவிதல், தொழுநோய், காசம், பார்வையிழப்பு ஆகியவற்றைக் கட்டுப்படுத்துதல்.**

[illegible]

கண் பார்வையின்மையைக் கட்டுப்படுத்துதலுக்கான தேசிய திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில், மதுரை, இராஜாஜி மருத்துவமனை, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மற்றும் தஞ்சாவூர் இராசா மிராசுதார் மருத்துவமனை ஆகிய மூன்று இடங்களிலும் மத்திய அரசின் 100 சதம் முழு உதவியுடன் 3 நடமாடும் கண் முகாம்கள் நிறுவப்பட்டுள்ளன.

சென்னை மருத்துவக் கல்லூரி இயக்குநர் அலுவலகத்தில் ஒரு மாநிலக் கண் ஆய்வுக்குழு நிறுவ ஆணை வழங்கபபட்டுள்ளது.

**தேசியத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டின் கண் புரை நோய் அறுவைச் சிகிச்சை சாதனை விவரம்:**

| | |
|---|---|
| மத்திய நடமாடும் கண் முகாம் | 963 |
| மருத்துவக் கல்லூரிகளைச் சார்ந்த மருத்துவ மனைகள் | 14023 |
| மாநில அரசு இலவசக் கண் முகாம் | 17457 |
| மாவட்ட மற்றும் தாலுகா மருத்துவமனைகள் | 6375 |
| தனியார் நிலையங்கள் | 63399 |
| | 102217 |

30-6-1986 முடிய கண் புரை நோய் அறுவைச் சிகிச்சைச் சாதனை 22,323 ஆகும்.



அடிப்படை வசதிகளில் ஒன்றான வீட்டு மனைப் பட்டா வழங்குதல் பாரதப் பிரதமரின் இருபது அம்சத் திட்டத்தின் ஒருமித்த நோக்கமாகும். இத் திட்டத்தைப் புரட்சித் தலைவர் அரசு தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறது. 1949 முதல் 1977 வரை 2 இலட்சத்து 62 ஆயிரம் வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டன. 1977 முதல் 1986 மார்ச் வரை இதன் எண்ணிக்கை 4 இலட்சத்து 25 ஆயிரத்து 870 ஆக உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாண்டில் இதற்கென ஒரு கோடி ரூபாய் செலவில் நில எடுப்பு செய்யப்படவுள்ளது. இதன் மூலம் 25 ஆயிரம் குடும்பத்தார் வீட்டுமனை பெறுவர்.




## கிராமங்களில் வீட்டு மனை இல்லாத குடும்பங்களுக்கு வீட்டு மனை ஒதுக்குவதும், அவர்களுக்கு வீடுகட்ட நிதி வழங்குவதும்.

தமிழ்நாட்டில் வீட்டு மனை இல்லாத குடும்பங்களைச் சார்ந்தவர்கட்கு 1,75,000 வீட்டு மனைப் பட்டா வழங்கத் திட்டமிடப்பட்டது. ஆனால் 186630 வீட்டுமனைப்பட்டாக்கள் வீட்டு மனை இல்லாத குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. ஆதி திராவிடர்கட்கும் மற்ற ஏழைக் குடும்பத்தினருக்கும் வீடுகள் கட்ட உதவித்தொகை 42,248 பேருக்கு வழங்கப்பட்டது. இது நிர்ணயித்த எண்ணிக்கையைக் காட்டிலும் 2,248 அதிகமாகும்.



மாண்புமிகு சுற்றுலா, மது விலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் அவர்களை, தொலைக் காட்சி டைரக்டர் ஜெனரல் திரு பாஸ்கர கோஷ் 24.10.86 அன்று சென்னையில் சந்தித்தார். செய்தி - சுற்றுலாத்துறைச் செயலர் திரு ஏ. பி. முத்துசாமி, இ.ஆ.ப., உடன் உள்ளார்..





நகராட்சிகளில் உள்ள குடிசை வாழ்மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த அரசு 1977-78 ஆம் ஆண்டில் ஒரு புதிய திட்டத்தைத் துவக்கியது. 102 நகராட்சிகளில் (5 நகரியங்கள் உள்பட) சுமார் 12 இலட்சம் மக்கட் தொகை கொண்ட 1,100 குடிசைப்பகுதிகள் உள்ளன. 3 நகரியங்கள் மற்றும் ஒரு நகராட்சியில் குடிசைப் பகுதிகள் இல்லை.

20 அம்சத் திட்டத்தில் உள்ள இனங்களில் இதுவும் ஓர் இனமாக உள்ளதால் இத்திட்டம் சமீப ஆண்டுகளில் புதிய வேகத்தைப் பெற்றுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் குடிசைப் பகுதுகளில் கீழ்க்கண்ட அடிப்படை வசதிகள் செய்து தரப்படுகின்றன.

1. இருபுறங்களிலும் மழைநீர் வழிந்தோட வடிகால்கள் கொண்ட சாலைகள் அமைத்தல்.

2. குடிநீர் வழங்குதல், குறைந்தது 40 முதல் 50 குடும்பங்களுக்கு ஒரு பொதுக்குழாய் வீதமும், பொதுக்குழாய்கள் அமைக்க இயலாத இடங்களில் ஆழ்குழாய்க் கிணறுகளோ அல்லது குழாய்க் கிணறுகளோ அமைத்தல்.

3. பொதுக் கழிப்பிடங்கள்: 10 குடும்பங்களுக்கு ஒரு இருக்கை வீதம் போதிய தண்ணீர வசதியுடன் கூடிய பொதுக் கழிப்பிடங்கள் கட்டுதல்.

4. தெரு விளக்குகள்: பொருத்தமான சந்திப்புகளில் குடிசைப் பகுதி முழுவதும் ஒளிபெறும் வகையில் குழல் விளக்குகள் அமைத்தல்.

வேறு மற்றும் 7வது ஐந்தாண்டுத் திட்டங்களில் இத்திட்டத்தின் கீழ் அரசு வழங்கிய மானியங்களின் விவரம் பின்வருமாறு:

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அரசு இத்திட்டத்திற்கென ரூபாய் 250 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

1985-86ஆம் ஆண்டின் அரசு வழங்கிய ரூ. 40.00 இலட்சம் மானியத் தொகையில் 30 குடிசைப் பகுதிகளில் மேற்குறிப்பிட்டுள்ள நான்கு வகைகட்குட்பட்ட 105 வேலைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. 1986-87 நிதி ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் அரசு ரூ. 40.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டம் பிரதமரின் 20 அம்சத் திட்டத்தின் கீழ் வருவதால் அரசு 102 நகராட்சிக்கூடங்களுக்கும் இத் திட்டத்தை விரிவாக்கிப் பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்கள் வாழும் குடிசைப்பகுதிகளில் அத்தியாவசியமான அடிப்படை வசதிகளைச் செய்து தர ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ.250 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

| வரிசை எண் | ஆண்டு | தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சிகளின் எண்ணிக்கை | அபிவிருத்தி செய்த குடிசைப்பகுதிகளின் எண்ணிக்கை | அரசு வழங்கிய மானயம் |
|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) |
| | | | | (ரூபாய் இலட்சத்தில்) |
| 1. | 1990-81 | 13 | 51 | 50.00 |
| 2. | 1981-82 | 12 | 66 | 50.00 |
| 3. | 1982-83 | 36 | 54 | 50.00 |
| 4. | 1983-84 | 12 | 46 | 50.00 |
| 5. | 1984-85 | 35 | 107 | 100.00 |
| 6. | 1985-86 | 23 | 38 | 40.00 |
| | மொத்தம் | 131 | 362 | 340.00 |

## குடிசைப்பகுதி மேம்பாடு



# தாய்சேய் நலத்தில் ஊட்டச் சத்து



தமிழக அரசு செயல்படுத்தி வரும் அனைத்து ஊட்டச் சத்துத் திட்டங்களும் தாய் சேய் நலப் பணிகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகின்றன. இத்திட்டங்களில் உலக வங்கி உதவியுடன் மதுரை, காமராஜர், அண்ணா, பசும்பொன் முத்துராமலிங்கம், திருநெல்வேலி, செங்கல்பட்டு, வட ஆர்க்காடு ஆகிய 9 மாவட்டங்களில் (மொத்தம் 173 வட்டாரங்களில்) நடைபெற்று வரும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டமும் ஒன்றாகும். 6.79 இலட்சம் 6-36 மாதக் குழந்தைகளும், 1.59 இலட்சம் கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களும் பயனடையும் இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.56 கோடியாகும். ஊட்டச் சத்துக் குறைபாட்டின் அடிப்படைக் காரணங்களை அறிந்து நீக்குவதில் இத்திட்டம் முனைந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

மற்ற ஊட்டச் சத்துத் திட்டங்களோடு இதை ஒப்பிட்டுப் பார்க்கையில் மிக உன்னதமான சில அம்சங்கள் இதில் உள்ளன என்பது நமக்குப் புலப்படும்.

கிராமப் பகுதிகளிலுள்ள 6 முதல் 36 மாதக் குழந்தைகள் அனைவரும் கண்டறியப்பட்டு, ஒவ்வொரு மாதமும் முறையாக எடை எடுக்கப்பட்டு அவர்களது ஊட்டச்சத்து நிலை கண் காணிக்கப்படுகிறது.

குழந்தை ஆரோக்கிய நிலை அடையும்வரை இணை உணவு வழங்கப்படுகிறது.

ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வியும் தீவிரமாக அளிக்கப்படுகின்றது.

1. ஊட்டச் சத்துப் பணிகள், 2. கிராம சுகாதாரப் பணிகள், 3. தொடர்புப் பணிகள், 4. முறைப்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

—ஆகிய பணிகளின் கீழ் இத்திட்டம் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகின்றது.

முதன் முதலில் 1981ஆம் ஆண்டு மதுரை மாவட்டத்திலுள்ள கொட்டாம்பட்டியில் மாதிரித் திட்டமாக இத்திட்டம் செயல்பட ஆரம்பித்தது.

இப்பணிகளைச் செயல்படுத்த ஒவ்வொரு 1500மக்கள் தொகைக்கும் ஒரு சமுதாய ஊட்டச்சத்து



மையம் அமைக்கப்பட்டு அதற்குப பொறுப்பாக ஒரு ஊட்டச் சத்துப் பணியாளர் அந்தக் கிராமத்திலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் திட்டப் பணிகளுக்கும் சமுதாயத்துக்கும் இடையே இணைப்புப் பாலமாக உள்ளார்.

இப்பணிகளை அளிக்க ஒவ்வொரு 5000 மக்கள் தொகைக்கும் ஒரு சுகாதாரத் துணை நிலையம் அமைக்கப்பட்டு அதற்குப் பொறுப்பாக ஒரு சுகாதாரப் பணியாளர் அமர்த்தப்பட்டுள்ளார்.

இத்திட்டம் கிராமப்புறங்களில் கடந்த 5 ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. இந்தக் குறுகிய காலத்திறகுள் இந்தத் திட்டம் செயல்பட்டுவரும் கிராமங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் வியக்கத்தக்கதாக இருக்கின்றன. உதாரணமாக மாதிரி வட்டாரமான 'கொட்டாம்பட்டியில்' மார்ச் 84 முடிவில் மதிப்பீடு செய்ததில் ''வைட்டமின் ஏ'' குறைவினால் பாதிக்கப்பட்டோரின் சதவிகிதம் 21.4% இருந்து 11.4% ஆகக் குறைந்துள்ளது. குழந்தைகளின் இறப்பு விகிதமும் 76.3 / 1000 இருந்து 73.1 / 1000க்குக் குறைந்துள்ளது. இதேபோல் திட்ட நடவடிக்கைகளில் மக்களின் பங்கு மிகவும் அதிகரித்துள்ளது.

எந்த ஒரு திட்டமும் வெற்றிகரமாகச் செயல்பட யாருக்காக அத்திட்டம் செயல்படுத்தப்படுகிறதோ அம்மக்களின் பூரண ஒத்துழைப்பைப் பெற வேண்டும். தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டத்தில் ஊட்டச்சத்துப் பணியாளருக்கும் சுகாதாரப் பணியாளருக்கும் 10 நாட்களுக்கு இணைப்புத் தகவல் கூட்டம் நடத்தப்படுகிறது. அச்சமயம் 7-10 ஊட்டச் சத்துப் பணியாளர்கள் மற்றும் 2-3 சுகாதாரப் பணியாளர்கள் தங்கள் மேற்பார்வையாளரின் உதவியுடன் ஒரு மாதிரி கிராமத்தைத் தேர்ந்தெடுத்து, கிராம மக்களுடன் நெருங்கிப் பழகி, அக்கிராமத்தில் செல்வாக்கும் ஆர்வமும் நிறைந்த சிலபெண்களைத்தேர்ந்தெடுத்து, பெண்கள் தொடர்புக் குழுவை ஏற்படுத்துகின்றனர். இப்படித் திட்டம் செயல்படும் ஒவ்வொரு கிராமத்திலும் பெண்கள் தொடர்புக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.





அடிப்படைக் கல்வி-வயது வந்தோர் கல்வி ஆகியவைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவது 20 அம்சத் திட்டத்தின் 16வது அம்சமாகும்.

தமிழகத்தின் கல்வித்துறையானது பள்ளிக் கல்வி, பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி, கல்லூரிக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி, பொது நூலகங்கள் என ஐந்து பெரும் பிரிவுகளைக் கொண்டு இயங்கி வருகின்றது. இந்த ஐந்து துறைகளிலும், கடந்த பத்தாண்டுகளில் தமிழக அரசு செய்து வருகின்ற சாதனைகள் தமிழகத்தின் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்துள்ளன.

அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் விடுப்புச் சலுகைகள் அனைத்தும் தனியார் நிதி உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் பொருந்தும் வகையில் ஆணை இடப்பட்டது.

பணியிலிருக்கும்போது இறந்து விடும் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் தமிழ்நாடு குடும்ப நல பாதுகாப்புத் திட்டம், தனியார் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

# கல்விப்பணி

1982-83ல் இளஞ்சிறார்கள் கல்விக்கெனப் பெரிய அளவிலான திட்டம் தொடங்கப்பட்டது. இளஞ்சிறார்களுக்குப் பள்ளி செல்லும் மனப்போக்கைப் புகட்டுதல் மூலம் இளஞ்சிறார் கல்வியானது தொடக்கக் கல்வி வளரவும் உதவும். இத்திட்டத்தின்முதற்கட்டமாக இம்மாநிலத்திலுள்ள 4,433 குழந்தைகள் நல மையங்கள் (பால்வாடிகள்) ஒவ்வொன்றிலும் ஒரு நர்சரி பிரிவு ஏற்படுத்த வகை செய்யப்பட்டது.

1976-77ஆம் ஆண்டில் பள்ளிக் கல்வித் துறைக்கென அரசால் 127 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1985-86 நிதி ஆண்டிற்குப் பள்ளிக் கல்வித் துறைக்கென மட்டும் ரூ. 445 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

முதலமைச்சரின் குழந்தைகளுக்கான சத்துணவுத் திட்டம் 1.7.82 முதல் துவக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. கூடுதலான மாணவர் சேர்க்கையில் முன்னேற்றம் காண்பதோடு ''பள்ளிக்கு வராமையும்'' இடையில் பள்ளியை விட்டு ''விலகுதலும்'' பெருமளவுக்குக் குறைய வழிவகுத்துள்ளது.

1984-85ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையினைத் தொடர்ந்து முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் உணவு உண்ணும் மாணவர்க்கு இலவசப் பாடப்புத்தகங்கள் இந்தக் கல்வி ஆண்டு முதல் வழங்கப்படுகின்றன. ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

இன்றைய தேசிய கொள்கையான 'எல்லோருக்கும் ஆரம்பக் கல்வி' என்ற இலக்கை அடைவதற்கான முயற்சியில் தமிழ்நாடு முன்னணியில் இருக்கிறது. இவ்வளர்ச்சி, கடந்த பத்து ஆண்டுகளில் சீரிய திட்டங்களைத் தீட்டி அவற்றைச் செவ்வனே நிறைவேற்றிய தன் விளைவேயாகும்.

1979-80 ஆம்ஆண்டில் மாநில வயது வந்தோர் கல்வித் திட்டமானது முழுவதும் மாநில அரசின் நிதியுடன், தமிழ்நாட்டில் 61 தன்னிறைவுத் திட்டத்துக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் 140 இலட்ச ரூபாய் செலவில் 6100 மையங்கள் செயல்படுத்த ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டமானது 1983-84 ஆம் ஆண்டில் மேலும் 54 ஊராட்சி ஒன்றியங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு தற்போது இந்த 5,400 மையங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது தவிர இத்திட்டம் 1985-86 ஆம் ஆண்டில் மேலும் 6 ஒன்றியங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு 600 மையங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.



தற்போது மொத்தம் 121 ஒன்றியங்களில் ஒவ்வொன்றிலும் 100 மையங்கள் வீதம் 12,100 மையங்கள் இயங்கி வருகின்றன.

தமிழ்நாட்டில் 1981 ஆம் ஆண்டில் 61 இலட்சம் பேர் எழுத்தறிவு அற்றவர்களாக இருந்தனர். வயது வந்தோர் கல்வித் திட்டம் விரிவாக்கப்பட்ட பின்னர் தற்போது எழுத்தறிவு அற்றவர்கள் எண்ணிக்கை 32 இலட்சமாகக் குறைந்துவிட்டது.

தமிழ்நாட்டில் 21 ஆயிரத்து 800 முதியோர் கல்வி மையங்கள் செயல்படுகின்றன. இதில் மாநில அரசு சார்பில் 13,100 மையங்களும், மத்திய அரசு சார்பில் 8,100 மையங்களும் செயல்படுகின்றன. மற்ற மையங்கள் தொண்டு நிறுவனம் சார்பிலும், பல்கலைக்கழகங்கள் மூலமும் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் வயது வந்தோர் கல்வித் திட்டம் சிறப்பாகச் செயல்படுவதைப் பாராட்டி யுனஸ்கோ நிறுவனமும் மத்திய அரசும் பரிசுகள் பல வழங்கி உள்ளன.



டுறவுச் சங்கங்களால் நடத்தப் பட்டு வந்தன.

15.8.1984 அன்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1000 குடும்ப அட்டை களுக்கு ஒரு நியாய விலைக்கடை திறக்கப்படும் என்று அறிவித்த படி ,கூட்டுறவுச் சங்கங்கள் 1000க்கு மேற்பட்ட குடும்ப அட்டை கொண்ட கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தி வந்த கடைகளை பிரித்து புதிதாக 1347 நியாயவிலைக் கடைகளைக் கிராமப்புறத்திலும் 1584 நியாய விலைக் கடைகளை நகர்ப்புறத்திலும் திறந்தன. தற்போது 15,672 நியாயவிலைக் கடைகள் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்பட்டு வருகின்டன.

# ஒரு வருவாய்க் கிராமத்திற்கு ஒரு கடை

தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டம் 'ஒரு கிராமத்திற்கு ஒரு கடை' என்ற திட்டத்தின் கீழ 1978ஆம் ஆண்டில் விரிவாக்கப்பட்டது. இவ்வாண்டில் ஒரு வருவாய்க் கிராமத்திற்கு ஒரு கடை திறந்து தமிழ்நாடு முழுவதிலும் பொது விநியோகத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு எடுத்த முடிவின்படி, ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திலும் ஒரு நியாயவிலைக் கடை திறக்கப் பட்டது.

இத்திட்டம் தொடங்குவதற்கு முன்பு கூட்டுறவு இயக்கத்தால் 4441 நியாய விலைகள் கடைகள் நடத்தப்பட்டு வந்தன. கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுக்காக ஒதுக்கப்பட்ட 12 மாவட்டத்தில் புதிதாக 6718 புதிய நியாய விலைக் கடைகளைத் திறந்தன. 500க்கு அதிகமான மக்கட் தொகையுள்ள கிராமங்களில் ஒரு முழு நேரக் கடையும், மக்கட் தொகை 100க்கும் 500க்கும் இடைப்பட்ட கிராமங்களில்பகுதி நேரம் செயல்படும் கடையும் திறக்கப்பட்டன். செப்டம்பர் 1984 வரை கிராமப்புறங்களில் 11,159 நியாயவிலைக் கடைகளும், நகர்ப்புறத்தில் 1,492 நியாய விலைக்கடைகளும் கூட்



15.4.86 அன்று [illegible]

தமிழ்நாட்டிலுள்ள 120 இலட்சம் குடும்ப அட்டைகளில் கூட்டுறவுச் சங்கங்கள் 91 இலட்சம் குடும்ப அட்டைகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்கின்றன.

மாநிலத்தில் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் 15,672 நியாய விலைக் கடைகளில் 311 நியாய விலைக் கடைகள் தொழிலாளர்கள் நலனுக்காக அவர்களது தேவைக்கு மட்டும் செயல்பட்டு வருகின்றன.

கல்லூரிகளிலும் பள்ளிக்கூடங்களிலும் 2,986 மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் மாணவ சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன.

கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாட்டில் சென்னை நகரைத் தவிர மற்ற மாவட்டங்களில் 3032 சில்லறைக் கடைகள் மூலம் 36,775 பள்ளிக்கூட மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் விநியோகம் செய்கின்றன.

சென்னை நகரில் மட்டும் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனமே பாடப்புத்தக விநியோகத்தைச் செய்து வருகிறது.





# கிராமத் தொழில் (பட்டு வளர்ச்சி)

இருபது அம்சத்திட்டத்தில் 18 மற்றும் 7-வது அம்சங்களைப் பட்டு வளர்ச்சித் துறை அமலாக்கிக் கொண்டிருக்கிறது. 18-வது அம்சத்தின் கீழ், கீழ்க்கண்ட செயல்களை இத்துறை கொண்டுள்ளது:

முசுக்கொட்டை பரப்பளவை அதிகப்படுத்துதல்; நோயற்ற முட்டைத் தொகுதி உற்பத்தியை அதிகப்படுத்துதல்; நூற்புப்பட்டுக் கூடு உற்பத்தியை அதிகப்படுத்துதல்; கச்சாப்பட்டு உற்பத்தியை அதிகப்படுத்துதல்.

இருபது அம்சத் திட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்காகவே உள்ள 7 (அ) மற்றும் மலைவாழ் மக்களின் நலனுக்காகவே உள்ள 7 (ஆ) அம்சத்தையும் இத்துறை அமலாக்கியுள்ளது. சாதனை விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

1-4-85 வரை 67,062 ஏக்கர் நிலப்பரப்பில் முசுக்கொட்டை பயிரிடப்பட்டிருந்தது. முசுக்கொட்டை விரிவாக்கப் பணியின் கீழ் 1985-86-ஆம் ஆண்டுக்கு 5,500 ஏக்கர் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 5,600 ஏக்கர் நிலப்பரப்பில் முசுக்கொட்டை பயிரிடப்பட்டுள்ளது. இது 112 விழுக்காடு ஆகும். மேலும் 1-4-86-ன் படி தொடர் நிலப்பரப்பு 72,662 ஏக்கர் ஆகும்.

1985-86-ஆம் ஆண்டில் 150 இலட்சம் நோயற்ற முட்டைத் தொகுதி உற்பத்தி இலக்கை அரசு நிர்ணயம் செய்ததில், 130 இலட்சம் உற்பத்தி செய்யப் பட்டுள்ளது.

1985-86-ஆம் ஆண்டில் 100 இலட்சம் கிலோ நூற்புப் பட்டுக் கூடு உற்பத்தி இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டதில், அந்த இலக்கு அடையப்பட்டது. அதில் 36.10 இலட்சம் கிலோ பட்டுக்கூடுகள் கச்சாப்பட்டு உற்பத்திக்காகப் பயன்படுத்தப்பட்டன.

1985-86-ஆம் ஆண்டுக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட கச்சாப் பட்டு உற்பத்தி இலக்கு 2.75 இலட்சம் கிலோ. ஆனால் சாதனை 3.00 இலட்சம் கிலோ கச்சாப்பட்டு. இது 109 விழுக்காடு ஆகும்.

1985-86-ஆம் ஆண்டில் 1,100 ஏக்கர் நிலப்பரப்பில் 1,100 தாழ்த்தப்பட்ட குடும்பங்களை முசுக்கொட்டைச்செடி பயிரிடுதலுக்குக் கொண்டுவர அரசு இலக்கை நிர்ணயம் செய்துள்ளது. இவ்வாண்டில் சாதனை 989 ஏக்கர் நிலப்பரப்பில் 1140 தாழ்த்தப்பட்ட குடும்பங்கள் ஈடுபட்டதாகும்.

1985-86-ல் 300 தாழ்த்தப்பட்ட விவசாயிகளுக்குப் பட்டு வளர்ச்சி பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டது. அவர்களுக்கு உதவித் தொகை மற்றும் விஞ்ஞானக் கருவிகளுக்காக ரூ. 1.50 இலட்சம் செலவிடப்பட்டது. மேலும் 169 தாழ்த்தப்பட்ட விவசாயிகள் ரூ. 0.845 இலட்சம் செலவில் புழு வளர்ப்பு தளவாடங்கள் வாங்க உதவி புரியப்பட்டது. 168 தாழ்த்தப்பட்ட விவசாயிகள் ரூ. 1.26 இலட்சம் செலவில் புழு வளர்ப்பு மனை கட்ட உதவி புரியப்பட்டது.



300 மலைவாழ் குடும்பங்களுக்குப் பட்டு வளர்ப்பு பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டதுடன், புழு வளர்ப்புத் தளவாடங்கள் வாங்க மானியமும், புழு வளர்ப்பு மனை கட்ட மானியமும் வழங்கப்பட்டன.

## அம்சம்-19

# கடத்தல்-பதுக்கல் ஒழிப்போம்!

'இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்லது அரசு'

—வள்ளுவரின் இந்த இனிய குறளுக்கேற்ப செயல்பட்டுச் செம்மையுற்றிருபபது தமிழக அரசு.

ஏழை எளிய மக்கள் இன்னலுறாமலும், அதே நேரத்தில் ஏற்றம் பெற்றிருப்போர் அதிக அளவில் இடர்ப்படாமலும் வரி விதித்து இனிதே இயங்கும் இன்றைய அரசு தான் அகில இந்திய அளவில் -குறிப்பாக வணிகவரித்துறையைப் பொறுத்து மகாராட்டிரத்திற்கு அடுத்த இடத்தைப் பெற்றுள்ளது.

1976-77ஆம் ஆண்டில் 55,683 வரி ஏய்ப்புக் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு ரூ. 43.71 கோடி விற்பனை மறைப்புத்தொகை வெளிக்கொணரப்பட்டது. இதன் மூலம் அரசுக்கு ஒரு கோடியே 74 இலட்சம் ரூபாய் அதிக வரி கிடைத்தது. 1984-85ல் அதேபோல 96,746 வரி ஏய்ப்புக் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு ரூ. 245 கோடி விற்பனைத்தொகை மறைப்பு வெளிக்கொணரப்பட்டதன் மூலம் அரசுக்கு 21 கோடியே 57 இலட்சம் அதிக வரி கிடைக்க வழி செய்யப்பட்டது.

வரி ஏய்ப்புத் தொடர்பான இரகசியத் துப்பு அளிக்கிறவர்களுக்கு வணிக வரித்துறை பரிசளிக்கிறது. அது போன்றே வரிதவிர்ப்பு அல்லது ஏய்ப்பு ஆராய்ந்து கண்டுபிடித்து அரசுக்கு வரி வசூலித்துத் தரும் இத்துறை அலுவலர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சரின் திறமைச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

வரி ஏய்ப்பு, பதுக்கல் நடவடிக்கைகளிலே ஈடுபடுவோரைக் கண்டு பிடித்துத் தண்டிக்கிற-கண்டிக்கிற தமிழ்நாடு அரசு, கள்ளக் கடத்தலை ஒழிப்பதிலும் கண்ணாயிருக்கிறது.

ஒரு நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கும், விலையேற்றத்திற்கும் வித்திடக்கூடியதல்லவா கள்ளக் கடத்தல்?

நெல்மூட்டைகள் கடத்தல், சாமிசிலைகள் கடத்தல், சந்தனக் கட்டைகள் கடத்தல், வெளிநாட்டுப் பொருட்கள் கடத்தல் என்று அடிக்கடி செய்தித் தாள்களிலே இடம்பெறும் செய்திகளைப் படிக்கிற நாம் - அடுத்த சில நாட்களிலேயே அப்படிக் கடத்தப்பட்ட பல்வேறு வகைப் பொருட்களும் அதிகாரிகள் மூலம் மீட்கப்பட்ட செய்திகளையும் பார்க்கிறோம்; படிக்கிறோம். அந்த அளவுக்கு இந்தஅரசு கள்ளக் கடத்தலைக் கண்காணித்து வருகிறது. கடத்தலில் ஈடுபடுவோரிடம் விழிப்பாயிருந்து கடுமையான பல நடவடிக்கைகளை உடனுக்குடன் எடுத்து வருகிறது.

கடந்த ஜனவரி, பிப்ரவரியில் கடத்தப்பட்ட 12,415,735 கிலோ சந்தனக் கட்டைகளும், மார்ச், ஏப்ரல் மாதங்களில் கடத்தப்பட்ட சுமார் 6,839,950 கிலோ சந்தனக் கட்டைகளும் வனப் பாதுகாப்புப் படையினரால் கண்டுபிடிக்கப்பட்டுப் பறிமுதல் செய்யப்பட்டன. கடத்தியோர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இந்த இரண்டு கடத்தல்களின் போதும் பிடிபட்ட சந்தனக்கட்டைகளின் மதிப்பு 10 இலட்சத்து 76 ஆயிரத்து 936 ரூபாயாகும்.

கடந்த 6 மாத காலத்தில் மட்டும் வரி ஏய்ப்பு கடத்தல் கண்டுபிடிப்பு மூலம் அரசுக்கு ரொக்கமாகவும் பொருட்களாகவும் கிடைத்தது ரூ. 1 கோடியே 33 இலட்சமாகும்.

எனவே-வரி ஏய்ப்பு, கள்ளக்கடத்தல், பதுக்கல் போன்ற கொடிய குற்றங்கள் விரைவிலேயே இந்த நாட்டைவிட்டு அடியோடு நீக்கப்பட்டுவிடும் என்பது உறுதி.

## அம்சம்-20




**திறன் உபயோகிப்பு, உள்வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளல் ஆகியவற்றின் மூலமாக, அரசு அமைப்புகளின் இயக்கத்தை மேம்படுத்துதல்.**

அகில இந்திய அடிப்படையில் 37 போக்குவரத்துக் கழகங்களின் திறன் ஆய்வு செய்யப்பட்டன. தமிழகத்தைப் பொறுத்தவரையில் திருவள்ளுவர்போக்குவரத்துக் கழகம் அதனுடைய திறனை ஒரு நாளுக்கு 21,952 பயணிகள் என்ற அளவில் வெற்றி பெற்றுள்ளது.





# மதுரை மாவட்டம்

மதுரை மாவட்டம், நக்கலாபட்டி கிராமத்திற்குச் சுமார் 0.80 கி.மீ. தெற்கே அசுவமாநதி ஆற்றின் குறுக்கே கட்டப்படும் அணையானது, மாதரை மற்றும் உசிலம்பட்டி கண்மாய்களுக்குப் பாசன நீர் கொடுக்கும் வகையில் அமைந்துள்ளது. இத்திட்டத்தின் வேலைகளை 1985-ல் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் செயல்பட்டு முடிக்கப்பட்டது. இந்த அணை கட்டி முடிக்கப்பட்டதால் சுமார் 84.35 டன்கள் உணவுப் பொருள்கள் அதிகமாக உற்பத்தி கிடைக்குமெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

கொங்கம்பட்டி கிராமத்திற்கு மேற்கே சுமார் 1 கி.மீ.தூரத்தில் வேலைத்தளம் அமைநதுள்ளது. கொங்கம்பட்டி கிராமமானது மேலூர் திருப்பத்தூர் நெடுஞ்சாலைக்கு வடக்கே சுமார் 2. கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. மேற்கூறப்பட்ட வேலை முடிக்கப்பட்டதால் சுமார் 64.30 டன்கள் உணவுப் பொருட்கள் அதிகமாக உற்பத்தி கிடைக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

உசிலம்பட்டி வட்டத்தில், சிறுபட்டி கிராமத்திற்கு வடக்கே சுமார் 1.60 கி.மீ. தூரத்தில் சிறுபட்டி கண்மாய் அமைந்துள்ளது. இந்தக் கண்மாய் வேலை முடிக்கப்பட்டதனால் சுமார் 90.72 டன்கள் உணவுப் பொருள்கள் அதிகமாக உற்பத்தி ஆகுமெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தில் பயறு வகைப் பயிர்கள் 40,000 எக்டேர் பரப்பளவில் பயிர் செய்யப்பட்டு 15,000 மெ.டன் பயறு உற்பத்தியாகிறது. ஒரு எக்டேரில் கிடைக்கும் சராசரி மகசூல் 350 கிலோ ஆகும். பயறு உற்பத்தியைப் பெருக்குவதற்கு மாநில, மத்திய அரசுகள் மிகவும் முக்கியத்துவம் கொடுத்து, 20 அம்சத் திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 31.3.86 முடிய ரூ. 176.64 இலட்சம் மானிய குறியீட்டுக்கு எதிராக 176.17 இலட்சம் மானியம் செலவிட்டு வங்கியிலிருந்து ரூ.302.08 இலட்சம் கடன் பெறப்பட்டுள்ளது. இது ஆண்டு குறியீட்டில் 100.|· ஆகும். இவ்வாண்டில் 11,311 குடும்பக் குறியீட்டிற்கு எதிராக 13,432 குடும்பங்களுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது. இச்சாதனை குறியீட்டில் 118.8 சதவீதமாகும்.

1985-86ஆம் ஆண்டில் குறைந்தது 6430 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு மானியம் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கிற்கு எதிராக 6,811 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு ரூ. 64.77 இலட்சம் மானியம் வநியோகிக்கப்பட்டு ரூ. 129.72 இலட்சம் கடன் வங்கியிலிருந்து பெறப்பட்டுள்ளது. இது குறியீட்டிற்கு 106 சதவீதம் சாதனையாகும். இந்த ஆண்டில் மதுரை மாவட்டத்தில் 56 மலைவாழ் பழங்குடியினருக்கு (அவர்களின் குடும்பங்களுக்கு) மானியம் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. நிர்ணயிக்கப்பட்ட 56 பழங்குடியினர் குடும்பங்களுக்கு ரூ. 0.90 இலட்சம் மானியம் விநியோகிக்கப்பட்டு ரூ. 1.89 இலட்



ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.

# தமிழ்நாட்டில் சீரிய விவசாயப் பணி

தமிழகத்தில் புதுக்கோட்டை அருகே குடுமியான் மலையில் உள்ள விவசாயப் பண்ணையை உலக வங்கியின் புதுடெல்லி பிரிவு வேளாண்மை ஆலோசகர் டாக்டர் ஏ. எஸ். இராமாராவ் பார்வையிட்டார். தமிழக அரசு வேளாண்மைப் பயிற்சித் திட்டங்களைச் சிறப்பான முறையில் செயல்படுத்தி வருவதற்குப் பாராட்டுத் தெரிவித்தார். வேளாண்மைத் துறையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள நவீன முறைகள், இயந்திர சாதனங்களைப் பயன்படுத்தி, சீரிய முறையில் விவசாயம் நடப்பதாகத் தெரிவித்த அவர், குறிப்பாகத் தமிழகத்தில் உள்ள கிராம சேவகிகள் நல்ல முறையில் பயிற்சி பெற்றுள்ளதாகவும், மற்றவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் முறையில் திட்டங்கள் நடந்து வருவது மகிழ்ச்சி தருவதாகவும் தெரிவித்தார்.

5 ஊராட்சி ஒன்றியங்களில் தலா 60 வயது வந்தோர் கல்வி மையங்கள் வீதம் 300 மையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இதில், 9,140 கற்போர்கள் சேர்ந்து பயனடைந்தார்கள். இதில் 3342 போகள் ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்கள்.

மூன்றாம் கட்டமாக மையங்கள் 1.4.86 முதல் ஐந்து ஊராட்சி ஒன்றியங்களில் ஆரம்பிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. இதிலும் 9,000 கற்போாகள் சோககப்பட்டுப் பயின்று வருகிறார்கள். இதில் 2667 ஆதிதிராவிடர்களாவர். மலைச்சாதியினர் 27 பேர் ஆகும்.

இதுவரை நடைபெற்ற இரண்டு கட்டங்களிலும், இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் மூன்றாம் கட்டம் ஆகிய வற்றிலுமாகச் சேர்த்து மொத்தம் 28,328 கற்போர்கள் பயனடைந்து உள்ளனர். இதில் 11,481 பேர்கள் ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்தவர்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நஞ்சை தரிசிலும், மரச்சீனியுடனும், வாழையுடனும் ஊடுபயிராகப் பயறுவகைகள் சாகுபடி செய்யப்படுகின்றது. புதிய 20 அம்சத்திட்டத்துல 1985-86ஆம் ஆண்டில் 6000 எக்டேர் பரப்பில் பயறுவகைகள் சாகுபடி செய்யக் குறயீடு வழங்கப்பட்டது. சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகளைப் பயறு வகை உற்பத்தியில் ஊக்குவித்து அதிக உற்பத்தி செய்வதற்காக 6,997 சிறு தழைகள் இலவசமாக வழங்கப்பட்டன. ஒவ்வொரு சிறுதழைப் பொட்டலத்திலும் 4 கிலோ விதை, ஒரு நுண்ணுயிர்ப் பொட்டலம், ஒரு சாகுபடிக் குறிப்பு அடங்கியிருக்கும்.

இவ்வாறு சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளை ஊக்குவிப்பதனாலும், உரிய காலத்தில் தேவையான விதைகள் மற்றும் பூச்சி மருந்துகள் வழங்கப்பட்டதனால் சென்ற ஆண்டு பயறு உற்பத்திக்கு ஒதுக்கப்பட்ட குறியீடான 1200 மெ.டன்னுக்கு 1190 மெ.டன் உற்பத்தி செய்ய முடிந்தது.

ஆதிதிராவிட மற்றும் மலைசாதி மக்களின் குழந்தைகள் கல்வியில் ஆக்கமும், ஊக்கமும் பெற்றிட சிறப்பு மேற்பார்வைத் திட்டம் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்காக 11 அரசு மேல் நிலைப் பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டது.

''சிறுதுளி பெருவெள்ளம்'' என்ற பழமொழிக்கேற்ப சேமிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்க இம்மாவட்டக் கல்வித் துறைக்கென அரசினரால் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 15 இலட்சத்தை இலக்காகக் கொண்டு பணிபுரிந்ததில் ரூபாய் பதின்மூன்று இலட்சத்துப் பதினைந்தாயிரத்து எழுபத்திரண்டு அடையப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1986-87ல் பாலூர், பத்தரை, உடையடி ஆகிய இடங்களில், ஆதிதிராவிடர்களுக்கு மொத்தம் 36 வீடுகள் கட்டிக் கொடுக்க ரூ. 2,16,000 அனுமதிக்கப்பட்டுள்ளது.

நகர்ப்புறத் திட்டத்தின் கீழ் சுயவேலை வாய்ப்புத்திட்டத்தின் மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்த 162 நபர்களுக்கு ரூ. 3,36,536 வழங்கப்பட்டுள்ளது.

தொகுப்பு வளர்ச்சித் திட்டத்தில் அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியத்தில் இலுப்பையாடி கிராமத்தில் நூல் நூற்கும் தொழில் 15 ஆதிதிராவிடர்களுக்கும், கற்காடு கிராமத்தில் 15 ஆதிதிராவிடர்களுக்குப் பயிற்சியுடன் நிரந்தர வேலைவாய்ப்பும் வழங்க ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் ஆதிதிராவிடர்களுக்குப் பயிற்சியுடன் வேலை வாய்ப்பு கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆறு காணி கிராமத்தில் 40 மலை சாதிப் பெண்களுக்கு இவ்வாண்டில் தையல் பயிற்சி நடைபெற உள்ளது.

ஊரகச் செயல்முறை எழுத்தறிவுத் திட்ட மையங்களில் தயாரிக்கப்பட்ட பொருள்கள்



20 அம்சத் திட்டச் சாதனைகள்

# தென்ஆர்க்காடு மாவட்டம்

புதிய இருபது அம்சத் திட்டத்தில் முதலாவது அம்சம் பாசன வசதியை அதிகரித்தலாகும். இந்தியாவின் முக்கியத் தொழிலாக விளங்குகிற விவசாயம்தான் தென்னார்க்காடு மாவட்டத்தின் முக்கிய தொழிலாகும். எனவே, பாசன வசதியைப் பெருக்குவது எல்லா வகையிலும் மாவட்டத்தை முன்னேற்றுகிற பணியாகும்.

நடப்பாண்டில் 4,900 எக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதியைப்புதிதாக அளிக்கவேண்டும் என்பது இலக்கு ஆகும். இதில் இவ்வாண்டு ஆகஸ்டு திங்கள் முடிய 2,664.2 எக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கப்பட்டுள்ளது. இது இலக்கில் 54 விழுக்காடு சாதனையாகும்.

இரண்டாவது அம்சமான பருப்பு எண்ணெய் வித்துக்கள் இம்மாவட்டத்தில் 9 டன் விதைகளும் 24.8 டன் எண்ணெய் வித்துக்களும் உற்பத்தி செய்யப் பட்டுள்ளன.

கிராமங்கள் பெரிதும் நிறைந்த தென்னார்க்காடு மாவட்டத்தில் மூன்றாவது அம்சமான ஒருங்கிணைந்த கிராமவளர்ச்சி மற்றும் தேசிய கிராம வேலைவாய்ப்புத் திட்டங்களை வலுப்படுத்துவது, விரிவுபடுத்துவது ஆகிய பணிகள் சிறப்பாக நடந்து வருகின்றன. இவ்வாண்டு ஆகஸ்டுத் திங்கள் வரை ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 7,196 குடும்பங்கள் பயனடைய எடுத்துக் கொண்டதில் இதுவரை 1,659 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் 2,52,000 மனித வேலை நாட்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் வளர்ச்சிக்கான திட்டங்களை வேகப்படுத்துதல் இத்திட்டத்தின் ஏழாவது அம்சமாகும். தென்னார்க்காடு மாவட்டத்தில் நடப்பாண்டில் 9,555 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு உதவியளிக்க வேண்டுமென்பது இலக்கு ஆகும். இதுவரை 1,610 ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயனடைந்துள்ளன. ஆதிதிராவிடர் நலம் பேணுகின்ற இத்திட்டத்தின் கீழ் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் நடப்பாண்டில் 179 நபர்களுக்கு ஆடுகள் வாங்கி வழங்கப்பட்டு ரூ. 3,74,086.15 செலவிடப்பட்டுள்ளது. இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இலக்கு 400 ஆடு அலகுகள் ஆகும். நடப்பாண்டில் இதுபோக மீதமுள்ள 221 இந்து ஆதிதிராவிட அங்கத்தினர்களுக்கு 50 சதவீத மானியத்தில் ஆடுகள் வாங்கி வழங்கப்படவுள்ளது.

ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கல்வராயன் மலைப் பகுதியில் 1985-86-ல் 18 இணை கறவை மாடுகளும், 50 வீடு அலகுகளும் 150 இணை வேலை எருதுகளும் ஆக மொத்தம் 228 மலைவாழ் மக்களுக்கு ரூ. 4,22,066.25 செலவில் வழங்கப் பட்டன.

குடிநீர்த் தட்டுப்பாடுள்ள கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட





சம் கடன் வங்கியிலிருந்து பெறப் பட்டுள்ளது. இது குறியீட்டிற்கு 101 சதவீத சாதனையாகும்.

இந்த ஆண்டில் 4562 பெண் களுக்கு மானியம் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டு அதற்கு எதி ராக 4,610 பெண்களுக்கு ரூ. 53.52 இலட்சம் மானியம் விநி யோகிக்கப்பட்டு ரூ.107.52 இலட் சம் கடன் வங்கியிலிருந்து பெறப் பட்டுள்ளது. இது குறியீட்டிற்கு 101 சதவீத சாதனையாகும்,

ஊரக இளைஞர் சுயவேலை வாய்ப்புப் பயிற்சி 18 வயது முதல் 25 வயதுள்ள கிராமப்புற ஆண்-பெண் இரு பாலர்களுக்கும் வழங் கப்படுகிறது. பயிற்சி நடை பெறும் 6 மாதக் காலத்திற்கு உதவித் தொகை வழங்கப்படு கிறது. பயிற்சியினை வெற்றிகர மாக முடித்த நபர்களுக்குத் தலா ரூ.500 மதிப்புள்ளகைக் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன,

சிறு விவசாயிகள் மற்றும் குறு விவசாயிகளுக்கான வேளாண்மை உற்பத்திப் பெருக்குத் திட்டத் தின் கீழ் சிறு பாசனத்திற்கும், நிலச் சீர்திருத்தத்திற்கும் பல் வேறு திட்டங்கள் செயல்படுத் தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் மானியத் தொகையாக ரூ. 4.50 இலட்சம் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகின் றது.

ஊரக நிலமற்றோர் வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ், 1985-86ஆம் ஆண்டில் மதுரை மாவட்டத்திற்கு மட்டும் 7 வேலைக்கு இதுவரை 18.96 இலட்சம் செலவினமும், 106.138 மெ.டன் அரிசியும் 65.000 மெ. டன் கோதுமையும் கூலியாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின் கீழ் 1.05 இலட் சம் மனித சக்தி நாட்கள் பெறப் பட்டுள்ளன. அனைத்துவேலைகள் முடிந்துள்ளது. இத்திட்டம் நெடுஞ்சாலைக் கிராமப்பணி மற் றும் கிராமச் சாலை துறையின ரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாசனக் கால்வாய்கள் புன ரமைப்பு மற்றும் பாசன ஏரிகள் சீர்திருத்தத் திட்டத்தின் கீழ் மதுரை மாவட்டத்தில் 18 வேலை கள 1985-86ஆம் ஆண்டு 224.26 இலட்சம் மதிப்பீட்டில் மேற் கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை 161.27 இலட்சம் செலவினமாக வும், 799.868 மெ.டன் அரிசியும் 32.375 மெ.டன் கோதுமையும் கூலியாக வழங்கப்பட்டுள்ளது. இதில் 14 வேலைகள் முடிவு பெறப்பட்டுள்ளன. மீதி வேலை கள் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணியில் 7.98 இலட்சம் மனி சக்தி நாட்கள் பெறபட்டுள்ளன. இது பொதுப் பணித்துறையின ரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கசிவு நீர்க்குட்டைகள் அமைக் கும் திட்டத்தின் கீழ் மதுரை மாவட்டத்தில் 24 வேலைகள் 1985-86ஆம்ஆண்டில்தொடர்ந்து நடைபெறறு வருகிறது. கசிவு நீர்க் குட்டைகள் அமைத்தல், மண் அரிப்பு தடுக்கப்படுவதோடு நிலத்தடி நீர்வளம் பெருகி விவ சாய உற்பத்தியும் பெருகும். வேளாண்மைப் பொறியியல் துறையினர் இதுவரை வேலைகள் மேற்கொண்டுள்ளார்கள். ரூ30.38இலட்சம் செலவினமாக வும், 99.178 மெ.டன் அரிசியும் வழங்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடி மக்கள் குடியிருப்புத் திட்டத் தின் கீழ் ஏழை எளிய ஆதிதிரா விட மற்றும் பழங்குடி மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ.6000 செலவினம் செய்யப்படுகிறது. மலைப்பகுதியாயின் ரூ. 9000 செலவாகிறது. இது முழுமையாக இலவசமாகக் கட்டித் தரப்படு கிறது. மதுரை மாவட்டத்தில் அனைத்து ஊராட்சி—ஒன்றியங் களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1985-86ஆம் ஆண்டில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத் தின் கீழ் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் வேலைகள் எடுத்துச் செய்ய ரூ. 13.75 லட் சம் வீதம் ஒதுக்கீடு வழங்கப்பட் டது. இத்திட்டத்தினால் 1985-86ஆம் ஆண்டில் 1904 வேலைகள் எடுக்கப்பட்டு 1888 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. இத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு நிதி ஒதுக்கீடு ரூ. 222.68 இலட்சங் களாகும். 31.3.1986 முடிய ரூ.233.71இலட்சம் செலவழிக்கப் பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 19.16 இலட்சம் மனித சக்தி நாட்கள் உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டது. 1985-86ஆம் ஆண்டில் 22.14 இலட்சம் மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இது நிர்ணயிக்கப்பட்ட அளவைக் காட்டிலும் 2.98 இலட்சம் கூடுத லாக உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த நிதி ஆண்டு 1985-86ல் மத்தியப் பிரதேசம் சாத்னா மாவட்டத்தில் கொத்தடிமைக ளாக வாழ்ந்து வந்த 34 நபர் களைக் கொத்தடிமைத் தளை யில் இருந்து நீக்கி அவர்களில் 16 நபர்களை, பிரிக்கப்பட்ட அண்ணா மாவட்டத்திலும், மீத முள்ள 18 நபர்களை மதுரை மாவட்டத்தில் உள்ள பெரிய குளம் வட்டத்தில் 14 நபர்களை யும், மேலூர் வட்டத்தில் 4 நபர் களையும் குடி அமர்த்தப்பட்டது. அவர்களின் அனைத்துக் குடும்பங் களுக்கும் இலவச வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி கொத்தடிமைத்தளை யிலிருந்துநீக்கப்பட்டவர்களுக்குக் குடும்பம் ஒன்றுக்கு ரூ. 4000 வீதம் உதவித் தொகை வழங்கப் பட்டுள்ளது. அவர்களுக்குப் பஞ் சாயத்து ஒன்றிய ஆணையர்கள் மூலம் ஆடுகள் வளர்க்கும் திட் டம் மற்றும் உழவு மாடுகள் வாங்குவதற்கு நடவடிக்கையில் உள்ளது. இந்த இனத்தில் குறி யீட்டு அளவுக்கு மேலாக 106 சதவீதம் சாதனை அளவு எட்டிப் பிடிக்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர்களுக்கு வீட்டடி மனை வழங்கும் திட்டத்தின் கீழ் சென்ற நிதி அண்டு 1985-86ல் அரசு நிர்ணயித்த குறியீட்டு அளவு 1300 பட்டாக்கள் ஆகும். சென்ற நிதியாண்டில் ஆதிதிரா விடர்களுக்கு வீட்டடி நிலம் கையகப்படுத்தும் திட்டத்தின் கீழ் பட்டா நிலங்கள் கையகப் படுத்தப்பட்டு, வறுமைக் கோட் டிற்குக் கீழே உள்ள 1348 ஆதி திராவிடர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்குப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆகவே இந்த இனத்திலும் மதுரை மாவட்டத்திற்கு இடப்பட்ட குறி யீட்டு அளவுக்குமேல் சாதனை அளவு எட்டிப் பிடிக்கப்பட்டுள் ளது.

1985-86ஆம் நிதியாண்டில் மதுரை மாவட்டத்திற்கு கிராமிய வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்ட 2313 குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. குறியீடு முழுமையாக 1985-86ஆம் நிதி யாண்டில் எய்தப்பெற்றுள்ளது.



நில உடைமையில் வேளாண் மைக்குரிய அமைப்பையும், பெரு நிலக்கிழார் மற்றும் குடிவாரதார் உறவு முறைகளை மாற்றிய மைத்து நேரடியாக ஊரக ஏழமை நிலையிலுள்ள நிலமறற மக்க ளுக்குச் சமூக பொருளாதார நீதி வழங்குவதே நிலச் சீர்திருத்தத் தின் தலையாய குறிக்கோளாகும். அதன் அடிப்படையில் பெரு நிலக்கிழார்களிடமிருந்து உபரி யாகக் கையகப்படுத்தப்பட்ட 92 ஏக்கர் நிலங்களை, 111 நிலமற் றோருக்குக் கன்னியாகுமரி மாவட்டத்தில் 1985-86ஆம்




ஆண்டில் ஒப்படை செய்யப்பட் டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தி லுள்ள 9 வட்டாரங்களிலும் உள்ள 81 வருவாய்க் கிராமங் களுக்கும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்-வறுமை ஒழிப் புத் திட்டம் அமல்படுத்தப்படு கிறது. விவசாயக் கூலிகள், விவ சாயம் அல்லாத கூலிகள், சேவை மற்றும் வியாபாரம் செய் பவர்கள், ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினரும் பயன் பெற்று வருகின்றனர். ஒவ்வொரு குடும்பத்திற்கும் மானியம் அதிக பட்சமாக ரூ. 3000 வரையும், பழங்குடியினருக்கு அதிகபட்ச மாக மானியம் ரூ.5000 வரையும் வழங்கப்படுகிறது.

சிறு விவசாயிகளுக்குக் கடனில் 25%. மானியமும், ஏனையோர் களுக்கு 33 1/3 சதவீதம் மானிய மும் வழங்கப்படுகிறது. ஆதிதிரா விடர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் கறவைமாடு நீங்கலாக ஏனைய இனங்களுக்கு 33 1/3%. மானிய மும், கறவைமாட்டிற்குச் சிறப்புத் திட்டத்தின்கீழ் 16 2/3%. கூடுதல் மானியத்துடன் மொத்தம் 50%. மானியமும், பழங்குடியினருக்கு 50 சதவீதம் மானியமும் வழங்கப் படுகிறது. கடன் தொகையை அரசுடைமையாக்கப்பட்ட வங்கி களும், விவசாயக் கூட்டுறவச் சங்கங்களும் வழங்குகின்றன.

1985-86ஆம் ஆண்டில் 4215 குடும்பங்களுக்கு அரசு இலக்கு நிர்ணயித்திருந்தது. ரூ. 72.05 இலட்சம் அனுமதி அளித்திருந் தது. 5008 குடும்பங்கள் பயன் பெற்றுள்ளன. இதில் 1980-81 மற்றும் 1981-82ஆம் ஆண்டில் பயன்பெற்றும், வறுமைநிலை நீங் கப்பெறாத 1809 குடும்பங்கள் இரண்டாவது முறையாகப் பயன் பெற்றவர்களும் அடங்குவர். மொத்தம்.62.80 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

தேசிய ஊரக வேலைவாய்ப் புத் திட்டத்தின் கீழ், 1985-86ஆம் ஆண்டு 500 குடியிருப்புகள் கட் டிக் கொடுக்கப்பட்டுள்ளன. அத் துடன் மொத்தம் 695 வேலைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. 1985-86ஆம் ஆண்டு ரூ. 127.30 லட்சம் ஒதுக்கீடு செய்ததில் ரூ. 127.17 லட்சம் செலவு செய்யப் பட்டுள்ளது.

நிலமற்ற ஏழையின் வேலைக்கு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் 1985-86ஆம் ஆண்டு முடிய 31 கிராமச்சாலைகள் செப்பனிடப் பட்டு முடிவடைந்துள்ளன. கூட்டு வீடுகள் திட்டத்தின் கீழ் 1985-86ஆம் ஆண்டு ஆதிதிரா விடர்களுக்கு 550 வீடுகளும், மலைவாழ் மக்களுக்கு 174 வீடு களும் கட்டிக்கொடுக்கப்பட்டன. மேலும் இத்திட்டத்தின் கீழ் 1985-86ஆம் ஆண்டு 110 கழிப் பிடங்கள் கட்டிக் கொடுக்கும் ஏற்பாடுகள் செயல்பட்டு வருகின் றன. சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 5,44,000 இளஞ் செடிகள் வளர்க்கப்பட்டு அவை களைத் தற்பொழுது நடுவதற் குரிய ஏற்பாடுகள் அனைத்தும் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் 1986-87ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் ரூ.38.80 லட்சம் அரசால் ஒதுக்கீடு செய் யப்பட்டு ரூ. 34.41 லட்சம் செல விடப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கிராமிய செயல்முறை எழுத்தறி வுத் திட்டம் 1984 மார்ச் மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டு நடை பெற்று வருகிறது. இத்திட்ட மானது 1984-மார்ச் முதல் 1985 பிப்ரவரி முடிய ஒரு சுற்று (ஒரு கட்டம்) முடிந்துள்ளது. முதல் சுற்றில் அகஸ்தீஸ்வரம், இராசாக் கமங்கலம், குருந்தங்கோடு, கிள்ளியூர் ஆகிய நான்கு ஒன்றி யங்களில் தலா 75 மையங்கள் வீதம் 300 மையங்கள் நடை பெற்றன. இதிலும் குறிப்பாக ஆரம்பிக்கப்பட்ட மையங்கள் அனைத்தும் பெண்கள் மையங் களே. இதில் 182 மையங்களில் முக்கியமாக ஆதிதிராவிடர்கள் அதிகம் பயனடைந்தார்கள்.

முதல் கட்டத்தில் நான்கு ஒன்றியங்களிலுமாக 10,198 பெண்கள் பயனடைந்தார்கள். இதில், 5,472பேர் ஆதிதிரா விடர்களாவர்.

இரண்டாம் கட்டம் 1985-86ல் ஏப்ரல் 85ல் ஆரம்பிக்கப் பட்டது. இதில் முஞ்சிறை, கிள்ளி யூர், குருந்தங்கோடு, இராசாக்க மங்கலம், அகஸ்தீஸ்வரம் ஆகிய



குடிநீர் வழங்குகின்ற எட்டாவது அம்சத்தின் கீழ் இம்மாவட்டத்தில் இதுவரை 15 கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

ஒன்பதாவது அம்சமான வீட்டு வசதியைப்பெருக்குகின்றதிட்டத்தின் கீழ் இம்மாவட்டத்திற்கான இலக்கு 10,000 ஆகும். இதுவரை இத்திட்டத்தின் கீழ் 6,607 வீடுகள் நலிந்தோர்க்கு வழங்கப்பட்டுள்ளன. இலக்கில் இது 66 விழுக்காடு சாதனை ஆகும். இம்மாவட்டத்தில் கூட்டுறவு வீட்டு வசதித்துறை மூலம் 1985-86-ல் 626 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன.

கிராமங்களுக்கு மின்சார வசதி அளித்தல் என்ற 11வது அம்சத்தின் கீழ் தென்னார்க்காடு மின் திட்டம் தெற்குப் பிரிவில் 1985-86-ல் மொத்தம் 28,394 புதிய மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டன. 1986-87-ல் 84 விவசாய நீரேற்று இயந்திரங்களுக்கும் 1,244 குடிசைகளுக்கும் மின் இணைப்பு கொடுக்கப்பட்டது. மேலும் தென்னார்க்காடு மின் திட்டம் தெற்குப் பிரிவில் அனைத்துக் கிராமங்களுக்கும் மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

காடு வளர்ப்பு மற்றும் மாற்று எரிசக்தியைப் பெருக்குகின்ற 12-வது அம்சத்தின் கீழ் இம்மாவட்டத்தில் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 83,32,000 மரங்கள் நடவேண்டுமென்பது இம்மாவட்டத்திற்கான இலக்கு ஆகும். இதுவரை 34,72,000 மரங்கள் நடப்பட்டுள்ளன. இதுவரை 202 சாண எரிவாயு கலங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

புதிய 20 அம்சத் திட்டத்தில் 13வது அம்சமாக விளங்குவது குடும்பநலத் திட்டமாகும். நடப்பாண்டில் குடும்பநல அறுவைச் சிகிச்சைக்கான இலக்கு 48,252 ஆகும். லூப் பொருத்துவதற்கான இலக்கு 17,000 ஆகும். இதுவரை 9,346 பேருக்கு அறுவைச் சிகிச்சையும், 5,342 பேருக்கு லூப் பொருத்துகின்ற சிகிச்சையும் அளிக்கப்பட்டுள்ளன.

வயது 6-லிருந்து 14 வரையிலுள்ள குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வியை அளித்தலும், வயது வந்தோரிடையே எழுத்தறிவின்மையை அகற்றுவதும் புதிய 20 அம்சத் திட்டத்தின் சிறப்புக்குரிய 16வது அம்சமாக விளங்குகிறது. இந்த அம்சத்தின் கீழ் இம்மாவட்டத்திற்கான இலக்கு 6 வயதிலிருந்து 14 வயது வரையுள்ள 19,100 குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வி அளிக்க வேண்டும் என்பதாகும். இதில் இம்மாவட்டம் இலக்கினை மிஞ்சி சாதனை நிகழத்தியுள்ளது. நடப்பாண்டில் இதுவரை 20,000 குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வி வசதி அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் 69,900 நபர்களுக்கு முதியோர் கல்வி அளிக்கப்படல் வேண்டுமென்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 63,647 பேருக்கு முதியோர் கல்வி அளிக்கப்பட்டுள்ளது. இது இலக்கில் 91 விழுக்காடு சாதனை ஆகும்.

சிறு தொழில் வளர்ச்சியை வேகப்படுத்துகிற 18வது அம்சத்தின் கீழ் இம்மாவட்டத்திற்கான இலக்கு மாவட்டத் தொழில் மையத்தின் மூலம் 300 சிறு தொழில்களை ஏற்படுத்துவது ஆகும். இது வரை 131 சிறு தொழில்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இலக்கில் இது 44 விழுக்காடு சாதனை ஆகும்.

வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் பெரிதும் விவசாயத்தையே சார்ந்திருக்கின்ற தென்னார்க்காடு மாவட்டம் புதிய இருபது அம்சத் திட்டப் பணிகளை வேகமாக நிறைவேற்றுவதன் மூலம் எல்லாத் துறைகளிலும் முன்னேறிய மாவட்டமாகத் திகழுகின்ற வகையில் வளர்ந்து வருகின்றது.

**தமிழ்நாடு அரசின் முயற்சியால் சர்க்கரை உற்பத்தி உயர்வு பிரதமர் பாராட்டு**

தமிழ்நாடு சர்க்கரைக் கழகமும் தமிழக அரசும் மேற்கொண்ட தீவிர நடவடிக்கைகளின் காரணமாக தமிழ்நாட்டில் சர்க்கரை உற்பத்தி அதிகரித்துள்ளது. இதன் காரணமாக வெளிநாடுகளிலிருந்து ரூ. 30 கோடி அளவுக்கு சர்க்கரை இறக்குமதி செய்வது தவிர்க்கப்பட்டு அந்நியச் செலாவணி மிச்சப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக மாண்புமிகு பிரதமர் திரு இராஜீவ்காந்தி அவர்கள் தமிழக அரசுக்கு பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

## 20 அம்சத் திட்டச் சாதனைகள்:

இருபது அம்சத் திட்டத்தின் முதல் அம்சம் பாசன வசதியை அதிகரித்தல் ஆகும்.

மழையை நம்பி இருக்கும் விளை நிலங்களுக்குத் தண்ணீரைச் சேமிக்கும யுக்தி மூலம் பாசன வசதியை ஏற்படுததுவதற்கு இம்மாவட்டததில் மானூர் ஒன்றியத்தில் அழகிய பாண்டியபுரம, கட்டாரங்குளம் ஆகிய இரு கிராமங்களிலும் மேல நீலிதநல்லூர் ஒன்றியத்தில் மேல நீலித நல்லூர், தேவர்குளம் ஆகிய இரு கிராமங்களிலும் சிறப்புத் திட்டம் ஒன்றை அரசு ஆணை எண்.1423, வேளாண்மை (ஏ.எஸ்.சி) துறை, நாள் 9.8.85 மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி மழை நீர் ஓட்டத்தினைத் தடுத்து வேகத்தினைக் குறைத்து நீர் நிலத்தில் உப்புச் சம உயர் வரப்புகள் அமைத்தல், பண்ணைக் குட்டைகள் கட்டுதல், சம உயர அகழிகள் கட்டுதல், கசிவு நீர்க் குட்டைகள் அமைத்தல், மண் அரிப்பினைத் தடுக்க தடுப்பு அணைகள் கட்டுதல், நிலத்தைச் சமப்படுத்தி விளை நிலங்களாக்குதல் ஆகிய பணிகள் செய்யப்பட்டுவருகிறது.

இத்திட்டத்தின் மூலம் வீணாகச் செல்லும் 566 மி.ம. மழை நீரில் சுமார் 466 மி.மீ. மழை நீர் சேமிக்கப்பட்டு, பாசனத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. 1985-86ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 6,61,812 செலவு செய்யப்பட்டுள்ளது. 1986-87ஆம் ஆண்டில் 15.70 இலட்சம் ரூபாய் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1985-86ஆம் ஆண்டில் 186.67 எக்டேர் நிலம் பாசன வசதி பெற்றுள்ளது. 1986-87ல் 60 எக்டேர் நிலம் பாசன வசதி செய்யப்படும். இத்திட்டம் பூர்த்தியானால் இந்நிலத்தின் வருவாய் இரண்டு மடங்காக உயரும். இத்திட்டம் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**பருப்புவகை உற்பத்தியும் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியும்**

இரண்டாவது அம்சமான பருப்பு வகை உற்பத்தி மற்றும் எண்ணெய் வித்து உற்பத்தியில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கைப் பூர்த்தி செய்ய, கீழ்க்கண்ட முயற்சிகள் இம்மாவட்டத்தில் 1985-86ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றியும் அதிக மகசூல் தரும் வித்துக்கள் வழங்கியும் மானாவாரியில் புதிய சாகுபடி முறையைப் புகுத்தியும் புதிய வேளாண் கருவிகள் வழங்கியும் 20,500 டன் இலக்கு நிர்ணயித்ததற்கு 32,405 டன் பருப்பு வகைகள் 1985-86ல் உற்பத்து செய்யப்பட்டுள்ளது. எண்ணெய் வித்துக்களை நிலககடலை 17,430 எக்டேரிலும், எள் 9,736 எக்டேரிலும், சூரியகாந்தி 23,322 எக்டேரிலும், பயிரிடப்பட்டது. உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் உயர் ரக எண்ணெய் வித்துக்கள், ஜிப்சம், புதிய வேளாண் கருவிகள் உரமிடுதல ஆகியவைகள் மான்யம் மூலம் வழங்கப்பட்டு, குறியீட்டு உற்பத்தியான 42,425 டன்னை விட கூடுதலாக 42,470 டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். எண்ணெய் வித்துத்துறை மூலம் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ரூ.7,21,426 மானியமாக வழங்கப்பட்டுள்ளது.




**உபரி நிலங்கள் விநியோகித்தல்**

நிலமற்ற ஏழைகளின் சமூகப் பொருளாதார முன்னேற்றம் மலர, உபரி நிலங்களை ஆர்ஜிதம் செய்து விநியோகிப்பது இதன் நோக்கமாகும். 1985-86ஆம் ஆண்டில் இருபது அம்சத் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடு 555 ஏக்கர் ஆகும். இதில் 557 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, 344 விவசாய நிலமற்றோருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் ஒரு மாஜி இராணுவத்தினரும், 127 தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் அடங்குவர்.

**வீட்டுமனை வழங்குதலும், வீடு கட்ட உதவுதலும்**

இத்திட்டத்தின் ஒன்பதாவது அம்சம் வீடற்ற ஏழைகளுக்கு வீட்டுமனை வழங்குவதும், அதில் வீடு கட்டப் பொருளுதவி செய்வதும் ஆகும். இம்மாவட்டத்தில் 1985-86ஆம் ஆண்டில் 12,800 இலக்கு நிர்ணயிக்கப்பட்டதற்கு 13,216 நபருக்கு வீட்டுமனை வழங்கப்பட்டுள்ளது. வீடு கட்டும் பணிக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக 650 பேருக்கும், தமிழ் நாடு அரிசன வீட்டு வசதிக்கழகம்



சுந்தர பாண்டியபுரம் கிராமப்புற வீட்டு வசதி.



ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மூலம் பெற்ற கலப்பின எருமையுடன் பனஞ்சாடி திரு. கணபதி.

மூலம் 50 நபருக்கும் தேசிய கிராம வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை உறுதித் திட்டம், நெசவுத் தொழிலாளர்கள் வீடு கட்டும் திட்டம் ஆகியவைகள் கீழ் 1319 வீடுகளும் ஆக மொத்தம் 2019 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இம் மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடு 2015 ஆகும். இலக்கை விஞ்சிய சாதனை ஆகும். இத்திட்டத்திற்குக் கடனாகவும், மானியமாகவும் ரூ. 111.39 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**மரக்கன்றுகள் நடுதல் காடுகள் வளர்த்தல்**

மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதி வனப்பகுதியாக இருப்பது சிறந்தது என்பது வனக்கொள்கையாகும். ஆனால், நமது நாட்டில் வனத்தின் அளவு மிகக் குறைவான பகுதியே ஆதலாலும், எரிபொருள் தேவைக்காக மரங்களை அதிக அளவில் உபயோகிப்பதனாலும் இதனால் வன அழிவு ஏற்படுவதைத் தடுக்கவும் வன அழிவினால் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்பட்டு, மழைக்குறைவு ஏற்படுவதைத் தடுக்கவும் மரம் நடும் திட்டம் 12-வது அம்சமாக எடுக்கப்பட்டு தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் சமூகக் காடுகள் வளர்த்தலிலும், வனப்பகுதி விரிவாக்கம் செய்தலிலும் மரம் நடுவதில் மக்கள் ஈடுபாடு கொள்ளச் செய்வதிலும் தீவிரமாகச் செயலாற்றப்பட்டது. 1985-86ல் இம்மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடு 10,78,000 மரக்கன்றுகள் நடுதல் ஆகும். ஆனால் 15,17,400 கன்றுகள் நடப்பட்டு சாதனை புரியப்பட்டுள்ளது. 2531 எக்டேரில் காடுகள் புதிதாக வளர்க்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு ரூ. 70.43 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

**துணைச் சுகாதார மையங்கள் ஏற்படுத்துதல்**

மக்கள் நல்வாழ்வுக்கு அடிப்படை சுகாதார வசதிகளைக் கிராம அளவில் வழங்கவும், நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் 5000 ஜனத்தொகைக்கு ஒரு துணைச் சுகாதார மையம் நிறுவ இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் 1985-86ல் 78 துணைச் சுகாதார மையங்கள் நிறுவ குறியீடு நிர்ணயிக்கப்பட்டு அதனைப் பூர்த்தியும் செய்தாகிவிட்டது. இம்மையங்களில் பெண் சுகாதாரப் பணியாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு பேறுகால உதவி, கர்ப்பிணிகளுக்கும், குழந்தைகளுக்கும் நோய்த் தடுப்பூசி-குடும்ப நல முறைகள் எடுத்துக்கூறல், சாதாரண நோய்களுக்கு மருந்து கொடுத்தல் ஆகிய பணிகள் செவ்வனே நடந்து வருகின்றன.

**சிறு தொழில்கள் ஏற்படுத்துதல்**

மாவட்டத் தொழில் மையம் மூலம் 1985-86ஆம் ஆண்டில் 566 சிறு தொழில்கள் ஆரம்பிக்க நிதி உதவி, மானியம், தொழில் நுட்ப உதவி ஆகியவைகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடு 400 ஆகும். இம் மாவட்டத்தைச் சேர்ந்த இராதாபுரம், விளாத்திகுளம், நான்குனேரி, ஆகிய தாலுகாக்கள் தொழிலில் பின்தங்கிய வட்டமாக அறிவிக்கப்பட்டு, இங்கு தொழில் தொடங்க முனைவோருக்கு நிலம், கட்டிடம், இயந்திரம் ஆகிய முதலீடுகளில் 15 சதவீதம் மானியமாக வழங்கப்படுகிறது. ஆறேகால் சதவிகித வட்டியில் கடன் வழங்குகிறது. தொழில் துவங்கியபின் முதலாண்டு மின் கட்டணத்திற்கு 30 சதவிகிதத்தையும், இரண்டாம் ஆண்டுக்கு 20 சதவிகிதம், மூன்றாம் ஆண்டு செலவில் 10 சதவிகிதம் மானியமாகக் கொடுத்தும் ஊக்குவிக்கப்படுகிறது. சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 449 பேருக்கு ரூ. 69.81 இலட்சம் கடனாக வங்கியிலிருந்து பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. விற்பனை வரி கடனாக மூன்று நிறுவனங்களுக்கு ரூ.158 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது. நடைமுறை மூலதனக் கடனாக 97 நிறுவனங்களுக்கு ரூ. 16.04 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு மேலும் பல நபர்கள் தொழில் துவங்க உதவி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மானியத் திட்டம் மூலம் பயன் பெற்ற முக்கூடல் மாணிக்கம் ஆசாரி.









# தருமபுரி மாவட்டம்



சேலம் மாவட்டத்தோடு இணைந்திருந்த தருமபுரி 1965ல் தனி மாவட்டமாகப் பிரிக்கப்பட்டு 21 ஆண்டுகள் ஆகியுள்ளன. மிகவும் பின் தங்கிய தருமபுரி மாவட்டம் மத்திய, மாநில அரசுகளின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் அரவணைப்பினால் பல்வேறு துறைகளில் உரிய வளர்ச்சியினைப் பெற்று வருகிறது.

வளரும் தருமபுரி புதிய 20 அம்சத்திட்டத்தின் கீழ், பல்வேறு சாதனைகளைப் புரிந்துள்ளது. குறிப்பாக 1985-'86ஆம நிதியாண்டில் குறியீட்டையும் தாண்டிச் சாதனைச் சரித்திரம் படைத்துள்ளது.

**பாசன வசதிகளை அதிகரித்தல்**

சிறுசிறு மலைகளாலும், காடுகளாலும் சூழப்பட்டுள்ள இம்மாவட்டத்தில், மழைக்காலங்களில் பெய்யும் மழைநீர் எவ்விதப் பயனுமின்றி வீணாகும் நிலையினை மாற்றிச் சிறுசிறு அணைகளைக் கட்டி மழைநீரைச் சேமித்து விவசாயத்திற்குப் பயன்படுத்திட நீண்டகாலத் திட்டத்தின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் அடிப்படையில் 1985-86ஆம் ஆண்டில் 6,664-32 எக்டேர் நிலப்பரப்பு கூடுதலாக நீர்ப்பாசன வசதியினைப் பெற வகை செய்யப்பட்டுள்ளது. அரசு நிர்ணயித்த குறியீடான 4,629 எக்டேர் நிலப்பரப்பை விடக் கூடுதலாக 2,035.32 எக்டேர் பாசன வசதி செய்யப்பட்டு 143 சதவிகிதம் எய்தப்பட்டுள்ளது.

**பயறு வகைகள் எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிக்க விசேட முயற்சி மேற்கொள்ளல்.**

பொதுவாக மானாவாரிப் பயிர்களையே நம்பியிருக்கின்ற இம்மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சியில் பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. 1985-'86-ல் பயறு வகை உற்பத்தியை அதிகரிக்கக் குறியீடான 34 ஆயிரம் டன்களை விஞ்சி 66.53 ஆயிரம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டு 174 சதவிகிதம் எய்தியுள்ளது. மேலும் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் முயற்சியில், குறியீடான 71.705 ஆயிரம் டன்களைத் தாண்டி, 93.392 ஆயிரம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டு 130 சதவிகிதம் எய்தியுள்ளது இம்மாவட்டம்.

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் ஆகியவற்றை வலுப்படுத்துதலும் விரிவாக்கலும்.**

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சிததிட்டம் இம்மாவட்டத்தின் ஏழை எளியவர்க்கு ஒரு வரப்பிரசாதமான திட்டமாகும். ஏனெ

னில், எவ்விதச் சொத்தும் இல்லாத ஏழையர்க்கு இத்திட்டத்தின் மூலம் ஆடு மாடுகள், கோழி இனங்கள் வளர்க்கவும், சிறு தொழில் செய்யவும் எவ்வித ஜாமீனும் இன்றிக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் வாயிலாக 1985-'86ல் இம்மாவட்டத்தில் 10,248 குடும்பங்கள், வறுமையின் கோரப்பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டு வளம் மிகும் வாழ்வு நோக்கி அடியெடுத்து வைத்துள்ளன. குறியீடு 7567 தான் என்றாலும் 10,248 குடும்பங்களை உய்வித்த இச்சாதனை பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

**'தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்ற விவசாயத் தொழிலாளர் பணி உறுதியளிப்புத் திட்டம்**

இம்மாவட்டத்தின் பெரும்பகுதி 'வானம்பார்த்த பூமியாய்' வறண்டு கிடப்பதன் காரணமாக மழைக்காலங்களில் மட்டுமே விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை கிடைத்து வரும் பரிதாப நிலை இருந்துவந்தது. ஆனால், இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்பு ஓரளவுக்கு விவசாயத் தொழிலாளர்களுக்கு ஏனைய காலத்தில் வேலை வாய்ப்புக் கிடைத்து வருகிறது. இதில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1984-85ன் குறியீடான 9,56,000 மனித வேலை நாட்களுக்கு மேல் 11,73,000, மனித வேலை நாட்களை உண்டாக்கி, 123 சதவிகிதச் சாதனை படைக்கப்பட்டுள்ளது. மேலும், ஊரக நிலமற்ற விவசாயத் தொழிலாளர் பணி உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ், இதே நிதியாண்டின் குறியீடான 9,67,000 மனித வேலை நாட்களுக்கு மேல் 19,14,000 மனித வேலை நாட்கள் உண்டாக்கப்பட்டு, 198 சதவிகிதம் எய்தியுள்ளது.

**உபரி நில விநியோகம்**

நில உச்ச வரம்பின் கீழ், உபரி நிலங்களைக் கையகப்படுத்தல் மற்றும் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை விநியோகிக்கும் பொருட்டு இம்மாவட்டத்தில் 1985-'86-ன் குறியீடு 70 ஏக்கர். ஆனால் 71 ஏக்கர் விநியோகிக்கப்பட்டு 100 சதவீதம் சாதனை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**கொத்தடிமைகள் மறுவாழ்வு**

இம்மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் கொத்தடிமைகளாக இருக்கிறார்கள் என்ற ஆதார பூர்வமான செய்திகள் எப்பொழுது கிடைத்தாலும் உடனடியாக அவர்களை விடுவிக்க அனைத்து முனைப்புகளும் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் அவர்கள் விடுவிக்கப்பட்டு, காவல்துறையின் துணையோடு இங்கு வரவழைக்கப்பட்டவுடன் அவர்களுக்கு இலவச உணவும், தற்காலிகத் தங்குமிடமும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. பின்னர் அவர்களில், சொந்த ஊரில் இருப்பவர்களைச் சொந்த ஊருக்கும், அப்படி இல்லாதவர்களுக்கு உடனடியாக இலவச வீட்டு மனைப்பட்டாக்களும் வழங்கப்படுகின்றன. மேலும், அவர்களுக்குத் தேசிய ஊரக வேலைவாய்ப்பு மற்றும் ஊரக நிலமற்ற விவசாயத் தொழிலாளர் பணி உறுதியளிப்புத் திட்டங்களின் கீழ் முன்னுரிமை தரப்பட்டு, வேலை வாய்ப்பளிக்கப்படுகின்றது. அத்துடன் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், கால்நடை வளர்ப்பு மற்றும் சிறுதொழில் துவங்கக் கடனுதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இம்மாவட்டத்தைப் பொருத்தவரையில், கல் உடைக்கும் தொழிலாளர்கள் தான் அதிக அளவில் கொத்தடிமைகளாக மீட்கப்பட்டுள்ளனர் என்ற காரணத்தால், 2 இடங்களில், விடுவிக்கப்பட்டவர்களை மட்டுமே உறுப்பினர்களாகக் கொண்டு 'கல் உடைக்கும் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்' நிறுவி அவர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு அளித்திட முயற்சிகள் மிக முனைப்போடு செய்யப்பட்டு வருகின்றன. 1985-'86ல் 90 பேர்கள் என்ற குறியீட்டை மிஞ்சி 103 கொத்தடிமைகள் மீட்கப்பட்டு 114 சதவிகிதத்தை எய்தியுள்ளது குறிப்பிடத்தகுந்தாகும்.

**ஆதிதிராவிடர் மற்றும் மலை வாழ் மக்கள் நல வளர்ச்சித் திட்டங்களை முடுக்கிவிடுதல்**

ஆதிதிராவிட மக்களில் அதிலும் குறிப்பாக வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ளவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக இம்மாவட்டத்தில், இலவசத் தொழில் கருவிகள் வழங்குதல், இலவச இல்லங்கள் கட்டித் தருதல், கால்நடை வளர்த்தல், சிறு தொழில் ஆகியவற்றிற்கு எளிய வட்டியில் மானியத்தோடு கூடிய கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 1985-86ல் 113 சதவிகிதத்தை எய்திக் குறியீடான 7573ஐத் தாண்டி 8572 குடும்பங்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மலை வாழ் மக்களின் மேம்பாட்டிற்காக இலவச இல்லங்கள், குடிநீர் வசதி,



**கிராமப்புற வீட்டுவசதி இலக்கை தமிழ்நாடு விஞ்சியது**

கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. ஆறாவது திட்ட காலத்தில் கிராமப்புறங்களில் இரண்டு இலட்சம் வீடுகள் கட்ட வேண்டும என்ற இலக்கை தமிழ்நாடு விஞ்சி உள்ளது.

சாலை வசதி போன்ற அடிப்படை வசதிகளைப் பெருக்குவதோடு அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக, இலவசமாகவும் மானிய விலையிலும் பலன் தரும் மரச் செடி வழங்கல், பட்டு வளர்ப்புக் கடனுதவி, கால்நடை வளர்க்க, சிறுதொழில் துவங்கக் கடனுதவிகள் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன. 1985-86-ல் குறியீடான 872ஐத் தாண்டி 1042 மலைவாழ் குடும்பங்களின் பொருளாதாரத்தில் மறுமலர்ச்சி ஏற்படுத்தி 119 சதவிகிதம் எய்தப்பட்டுள்ளது.

**பிரச்சினைக் கிராமங்கள் அனைத்துக்கும் குடிநீர் வசதி**

மனிதனின் மிக முக்கிய அடிப்படைத் தேவைகளில் ஒன்றான குடிநீர், குடியிருப்புப் பகுதிகளிலேயே கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில், இம்மாவட்டத்தில் 1984-85ல் 31 பிரச்சினைக் கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. மேற்படி 31 கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

**கிராமங்களில் வீட்டுமனை இல்லாத குடும்பங்களுக்கு வீட்டு மனை ஒதுக்குவதும், வீடுகட்ட நிதி வழங்குவதும்**

குடியிருப்பு மனையும், வீடுகளும் இல்லாத ஏழை எளியவர்களுக்கு உதவிடும் வகையில் இம்மாவட்டத்தில் 1985-86ல் வீட்டு மனை வழங்க ஒதுக்கப்பட்ட குறியீடான 11,000ஐத் தாண்டி 11,777 பேர்களுக்கு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டு 170 சதவிகிதச் சாதனை எய்திடப்பட்டுள்ளது. மேலும் வீடுகட்ட உதவிடும் வகையில் நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 1674ஐத் தாண்டி 1776 குடும்பங்களுக்கு உதவி 104 சதவிகிதம் எய்தப்பட்டுள்ளது.



**20 அம்சத் திட்டச் சாதனைகள் :**

# புதுக்கோட்டை மாவட்டம்

புதிய 20 அம்சத் திட்டம் புதுக்கோட்டை மாவட்டத்தில் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1985-86ஆம் ஆண்டில் 14 அம்சங்களில் 100 சதவீதத்திற்கு மேல் சாதனை செய்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

1986-87ஆம் ஆண்டில் கடந்த ஆகஸ்டுத் திங்கள் முடிய கீழ்க் கண்டவாறு சாதனைகள் அடையப்பட்டுள்ளன.

**அம்சம் 1**

பாசனத்தை மேம்படுத்தும் பணியில் ஆண்டு இலக்கு 714 எக்டேர் ஆகும். இதில் 369 எக்டேர் நிலம் பாசனம் பெறும் வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

**அம்சம் 2**

பயறுவகை உற்பத்தியில் ஆண்டு இலக்கு 7,000 டன் ஆகும். இதில் 3,000 டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் 52,000 டன் ஆகும். 11,433 டன் இதுவரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

**அம்சம் 3**

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 5,255 ஏழைக் குடும்பங்கள் பயன்பெறத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் ஆகஸ்டு திங்கள் முடிய 1,838 ஏழைக் குடும்பங்கள் பயனடைந்துள்ளன. தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 5,43,000 மனித சக்தி உழைப்பு நாட்கள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டு, 1,70,000 மனித சக்தி உழைப்பு நாட்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் 1,06,951 மனித சக்தி உழைப்பு நாட்கள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டு 41,070 மனித சக்தி உழைப்பு நாட்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

**அம்சம் 7**

7,735 தாழ்த்தப்பட்ட குடும்பத்தை முன்னேற்றும் பணியில் 1,041 குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன.

**அம்சம் 8**

40 பிரச்சினைக் குடிநீர் கிராமங்களில் 20 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

**அம்சம் 9**

5,300 ஏழைகளுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கத் திட்டமிடப்பட்டு 702 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**அம்சம் 10**

30 ஏழைக் குடும்பங்களுக்கு வீடுகள் இலவசமாக வழங்கத் திட்டமிடப்பட்டு, 119 ஏழைக் குடும்பங்களுக்கு இலவசமாக வீடுகள் வழங்கப்பட்டு சாதனை செய்யப்பட்டுள்ளன.

**அம்சம் 11**

985 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், 146 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

**அம்சம் 12**

57,000 மரக்கன்றுகள் நடுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் 74,000 மரக்கன்றுகள் நடப்பட்டு 131 சதவீதம் சாதனை செய்யப்பட்டுள்ளது. 700 சாண எரிவாயுக் கலன்கள் அமைத்திடத் திட்டமிடப்பட்டு, 119 சாண எரிவாயுக் கலன்கள் ஆகஸ்டு திங்கள் முடிய அமைக்கப்பட்டுள்ளன.

**அம்சம் 13**

13,529 குடும்பநலச் சிகிச்சைகள் செய்யப்பட வேண்டியதில், 3,764 குடும்பநலச் சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன.



**அம்சம் 14**

சுகாதாரத்தைப் பேணும் வகையில் 13 துணைச் சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன.

**அம்சம் 15**

தாய்மார்கள், குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் நலத்தைக் காக்கத் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 9 வட்டாரங்கள் துவக்கத் திட்டமிடப்பட்டு, 3 வட்டாரங்கள் துவக்கப்பட்டுள்ளன.

**அம்சம் 16**

6 முதல் 14 வயதுள்ள குழந்தைகளுக்கான கல்வி 6,900 குழந்தைகளுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டு 449 குழந்தைகளுக்குக் கல்வி வசதியளிக்கப்பட்டுள்ளது. இலக்கினை அடைய 7 சதவீதம் மீது இருக்கிறது. 30,650 முதியோர்களுக்கு, கல்வி வழங்கப்படும் இலக்கில், 29,258 முதி

யோர்களுக்குக் கல்வி அளிக்கப்பட்டுள்ளது. இதில் இலக்கை அடைய 5 சதவீதமே மீதி உள்ளது.

**அம்சம் 18**

100 சிறு தொழில்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டு 62 சிறு தொழில்கள் அமைக்கப்பட்டுள்ளன.

திட்டங்களில் எஞ்சிய பணிகளை முடிக்கத் தீவிரமாகச் செயல்கள் நடைபெற்று வருகின்றன.

பல்வேறு திட்டங்களிலும் முனைப்புடன் செயலாற்றிடும் புதுக்கோட்டை மாவட்டம் இருபது அம்சத் திட்டத்திலும் தனது சீரிய பணியினைச் செவ்வனே செய்து, புதுக்கோட்டை மாவட்ட மக்களின் வாழ்வை வளப்படுத்திட, அயராது பாடுபட்டு வருகிறது.

**அயராது உழைக்கும் நற்சாந்துபட்டி ஆரோக்கியசாமி**

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் நற்சாந்துப்பட்டி சிறு கிராமம். இங்கு திரு ஆரோக்கிய சாமி என்ற ஒரு இளைஞர் சைக்கிள் கடை ஒன்றில் தினசரி ரூ. 3 சம்பாதிக்கும் வேலையாளாகப் பணிபுரிந்து வந்தார்! இவரின் வயதான தாயாரை வைத்துக்கொண்டு, குடும்பத்தின் உணவுத் தேவைகளுக்குக்கூட ஊதியம் ஈட்ட முடியாத நிலையில் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்.

இவருக்கு வங்கியின் மூலமாக ரூ. 5,000 கடனாக வழங்கப்பட்டது. இதில் 1 1/3 பங்கு மான்யம் 1,983 பிப்ரவரி மாதம் சைக்கிள் கடை துவக்கி, கடுமையாக உழைத்து வருமானத்தைப் பெருக்கிக் கொண்டார். விளைவு மிகவும் ஆச்சரியகரமானது. 15 மாத காலத்திற்குள் இக்கடனை முழுவதுமாக அடைத்துவிட்டார்.

இவரின் ஆர்வம் அத்துடன் நின்று விடவில்லை. மாவு ஆட்டும் எந்திரங்கள் நிறுவிட விரும்பிய இவருக்கு மீண்டும் அதே வங்கி மூலம் ரூ. 5,000 கடனாக வழங்கப்பட்டது. தற்போது இவரின் மூன்று மாவு ஆட்டும் மிஷின்களும் ஓயாது ரீங்காரம் செய்கின்றன.

தற்போது இவர் சைக்கிள் கடையிலிருந்து தினசரி ரூ.20ம் மாவு ஆட்டும் மிஷினிலிருந்து ரூ. 10ம் ஆக தினசரி ரூ. 30க்கு மேல் சம்பாதிக்கிறார். இரண்டு கடைகளுக்குச் சொந்தக்காரர் என்ற பெருமையுடன் திகழும் இவர் ,ரூ. 75 மாத சம்பளத்தில் ஒரு ஏழை விதவைப் பெண்ணுக்கும், இரண்டு பையன்களுக்கும் வேலை கொடுத்துள்ளார்.

**செயற்கை வைரம் செதுக்கும் பரம்பூர் பாலமுத்து**

அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஒரு சிறு கிராமம் பரம்பூர். இங்கு அதிகமான அளவில் மக்கள் செயற்கை வைரம் செதுக்கும் தொழிலில் ஈடுபட்டு உள்ளனர். இவர்களில் பெரும்பாலோர் தனிப்பட்ட முதலாளிகளிடம் மிகவும் குறைவான தினக்கூலிக்கு வேலைசெய்து வருபவர்கள்.



இப்பகுதியிலுள்ள தொழிலாளிகளுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உதவி செய்து, அவர்களின் வாழ்வில் பொருளாதார முன்னேற்றம் ஏற்படுத்திடத் திட்டமிட்டு, பலருக்கு வங்கி மூலம் கடன் வாங்கி வழங்கப்பட்டது. பரம்பூர் பாலமுத்துவும் அதில் ஒருவர். இவருக்கு ரூ. 1,500 கடன் வழங்கப்பட்டது. இக்கடனில் இவர் செயற்கை வைரம் செதுக்கும் இயந்திரம் ஒன்று வாங்கி நிறுவி, தானே செயற்கை வைரக் கற்களை வாங்கிச் செதுக்கி விற்பனை செய்திடும் பணியில் ஈடுபட்டார். அவரின் வருமானம் தற்போது தினசரி ரூ. 20.இவரின் கடனில் ரூ. 500 மானியமாக வழங்கப்பட்டது. இவர் கடனை முழுதும் திரும்பச் செலுத்திவிட்டார். அடுத்த கடனையும் வாங்கி மேலும் ஒரு இயந்திரம் நிறுவி, வருமானத்தை மேலும் பெருக்கிக் கொள்ளத் திட்டமிட்டுள்ளார்.

இவரின் வளமான வாழ்க்கைக்கு அடித்தளம் அமைத்த இருபது அம்சத் திட்டத்தினைப் பெரிதும் நன்றி உணர்வுடன் பாராட்டுகிறார்.

**உடுப்பியிலிருந்து புதுக்கோட்டை வரை...**

கர்நாடக மாநிலத்திலுள்ள உடுப்பி மாவட்டத்தில் ஜெயராமன் என்ற ஏழை இளைஞர் வேலைதேடி அலைந்துகொண்டிருந்தார். ஒவ்வொரு இடமாக அலைந்து வேலை கிடைக்காத நிலையில் இவர், தமிழ்நாட்டிலுள்ள புதுக்கோட்டை மாவட்டம், வந்து சேர்ந்தார். பெருஞ்சினை என்ற குக்கிராமத்தில் ஒரு விவசாயப் பண்ணையில் வேலைக்குச் சேர்ந்தார். இங்குள்ள மக்களிடம் பழகி நட்பை வளர்த்துக் கொண்டார். தமிழ்மொழியையயும் எழுதி, பேசப்பழகிக் கொண்டாா. இவர் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அரசு செயல்படுத்தும் பல நலல திட்டங்கள் பற்றி உள்ளூர் ஊர்நல அலுவலர் மூலம் தெரிந்துகொண்டார். இத்திட்டங்களில் பயன்பெற அன்னவாசல் ஊராட்சி ஒன்றிய ஆணையரையும், வங்கியையும் அணுகினார்.

1½ ஏக்கர் நிலத்தைக் குத்தகைக்கு வாங்கி விவசாயத்தைத் துவக்கிவிட்டார். வேளாண்மைப் பெருக்குத் திட்டத்தின் கீழ் இவருக்கு ஆயில் இஞ்சின் வாங்கிட ரூ.7,200 கடன் வழங்கப்பட்டது. வங்கி தனியாக ரூ. 1,000 பயிர்க் கடனாக வழங்கியது. தொடர்ந்து ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 5,000 சைக்கிள் கடை வைக்க வழங்கப்பட்டது. இக்கடன்களில் இவர் இதுவரை ரூ. 5,000க்கு மேல் திரும்பச் செலுத்திவிட்டார்.

இவர் தற்போது இவ்வூர் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும் உள்ளார். இச்சங்கத்தின் மூலம் 58 மந்தை ஆடுகள் (1,218 ஆடுகள்) வாங்கி வழங்கப்பட்டுள்ளன. இவ்வூரில் உற்பத்தியாகும் பாலை வாங்கி சிறு லாபத்திற்கு விற்கிறார். இவ்வூரிலுள்ள இத்திட்டங்களின் கீழ் கடன் வாங்கிய அனைவரின் கடன் மற்றும் தவணை விவரங்களை முறையாகப் பதிவேடுகள் போட்டுப் பதிந்து தேவையான எந்த விவரத்தையும் உடனுக்குடன் தெரிவிக்கும் நிலையில் உள்ளார்.

இவர் வீட்டில் பின்புறம் சாண எரிவாயு ('பயோ கேஸ்') அடுப்பு ஒன்றும் நிறுவி இவரின் மனைவி புகையாத அடுப்பில் சமையல் செய்திட வகை செய்துள்ளதுடன் சாண எரிவாயு மூலம் எரியும் ஒரு (பயோ கேஸ்) விளக்கும் வீட்டில் பொருத்தியுள்ளார். எங்கேயோ இருந்து வந்த ஓர் ஏழை இளைஞன் இன்று, தான் மகிழ்ச்சி நிறைந்த வசதியான வாழக்கை வாழ்வதற்குக் காரணமான இருபது அம்சத் திட்டத்திற்கும் வங்கிக்கும் நன்றி கூறுகிறார்.





# திருச்சி மாவட்டம்



திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இருபது அம்சத்திட்டத்தில் 1985-86ஆம் ஆண்டின் இலக்கு பற்றி இக்கட்டுரை விவரிக்கிறது:

*அம்சம் 1: பாசன வசதியை அதிகரித்தல்:*

1956-86ம் ஆண்டில் இத்திட்டத்திற்காக அரசு நிர்ணயித்த குறியீடு 6,925.30 எக்டேர்.

குழாய்க் கிணறுகள், வடிமுனைக் குழாய்கள், சிறிய மற்றும் பெரிய நீர்ப்பாசனங்கள் கட்டுதல, கிணறுகளை ஆழப்படுத்துதல் ஆகியவற்றை மேற்கொண்டு பாசன வசதியை அதிகரித்து, விளைச்சல் நிலங்களுக்கும் தரிசு நிலங்களுககும் பாசன வசதி அளித்து சுமார் 23,510.49 எக்டேர் நிலங்களைச் சாகுபடிக்கு கொண்டுவந்துள்ளது. அதாவது அரசு குறியீட்டிற்கும் அதிகமாக சாதனை நிகழ்த்தி 339 விழுக்காட்டைப் பெற்றுள்ளது.

*அம்சம் 2 (1) பயறு வகைகள் உற்பத்தி:*

பயறு வகைகள் உற்பத்திக்கு அரசு குறியீடு 16,000 மெட்ரிக் டன்கள் ,இத்திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்பட்டவை 29,718 மெட்ரிக் டன்களாகும். (இதில் முக்கியப் பயறு வகைகள் துவரை, உளுந்து, பச்சைப்பயறு, கொள்ளு மற்றும் இதர பயறு வகைகளாகும்) சாதனை விழுக்காடு 186 ஆகும்.

*அம்சம் 2 (2): எண்ணெய்வித்துக்கள்;*

இம்மாவட்டத்திற்கு இத்திட்டத்தில் அரசு குறியீடு 1,30,700 மெட்ரிக் டன்கள். இத்திட்டத்தில் 1,37,786 மெட்ரிக் டன்கள் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாகி உள்ளன.

*அம்சம் 3(1) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்*

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 18,369 குடும்பங்கள் பயனடைய வேண்டும் என்பது அரசு குறியீடு. (பழைய குடும்பங்கள் எண்ணிக்கை 12.763, புதிய குடும்பங்கள் எண்ணிக்கை 5,606 ). இதில் 19,739 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. (பழைய குடும்பங்கள் எண்ணிக்கை 12,763, புதிய குடும்பங்கள் எண்ணிக்கை 6,976 ஆகும்.)

*அம்சம் 3 (2): தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்*

இத்திட்டத்தின் அரசுகுறியீடு 19,35,000 மனித சக்தி நாட்கள். இதில் 22,64,000 மனித சக்தி நாட்கள் பயன்படுத்தப்பட்டன.

*அம்சம் 3 (3) ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டம்*

இத்திட்டத்தின் கீழ் அரசு குறியீடு 19,32,000 மனித சக்தி நாட்கள். இதில் சாதனையாக 25 லட்சம் மனித சக்தி நாட்கள் பயன்படுத்தப்பட்டன. இதன் விழுக்காடு 129 ஆகும்.

*அம்சம் 4: உபரி நில விநியோகம் பூர்த்தி செய்தல்*

இத்திட்டத்தின் கீழ் அரசு குறியீடு 45 ஏக்கர்களாகும். இத்திட்டத்தில் 48.29 ஏக்கர் உபரி நிலம் விநியோகிக்கப்பட்டது.

*அம்சம் 6: பிணைத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளித்தல்*

பிணைத் தொழிலாளர்கள் 190 பேருக்கு மறுவாழ்வு அளிக்க அரசு குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. 190 பிணைத் தொழிலாளர்களுக்கும் மறுவாழ்வு அளிக்கப்பட்டு குறியீடு முழுமையாக எய்தப்பட்டது.

*அம்சம் 7(1): தாழ்த்தப்பட்டோர் வளர்ச்சிக்கான திட்டங்களை துரிதப்படுத்துதல்*

இம்மாவட்டத்திற்கு அரசு குறியீடு 12,595 தாழ்த்தப்பட்டோர் குடும்பங்களாகும். மண்வளப் பாதுகாப்பு அளவுகள், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட உதவிகள், பால்பண்ணை அபிவிருத்தி, கிராமக் கைத்தொழில்கள், பட்டு வளர்ப்பு, கால்நடை பராமரிப்பு மற்றும் இதர திட்டங்கள் மூலம் பயனடைந்த தாழ்த்தப்பட்டோர் குடும்பங்கள் எண்ணிக்கை 29,562 ஆகும். சாதனையின் விழுக்காடு 230 ஆகும்,

*அம்சம் 7(2): பழங்குடியினர் வளர்ச்சிக்கான திட்டங்களை துரிதப்படுத்துதல்*

1985-86ஆம் ஆண்டின் அரசு குறியீடு 734 ஆகும். ஒருங்கிணைந்த மலைவாழ் வளர்ச்சித் திட்டம் மற்றும் பல்வேறு திட்டங்கள் மூலம் பயன் அடைந்த பழங்குடியினரின் எண்ணிக்கை 2,855 ஆகும். இதின் விழுக்காடு 389 ஆகும்.

அம்சம் 8: நீர் ஆதாரமற்ற கிராமங்கள் அனைத்துக்கும் குடிநீர் வழங்கிடுதல்

இத்திட்டத்தில் 1985-86ம் ஆண்டில் பயனடையவேண்டிய கிராமங்கள் என அரசு குறியீடு செய்த எண்ணிக்கை 220 கிராமங்களாகும். தமிழ்நாடு குடிநீர் வாரியத்தால் 220 கிராமங்களுக்கும் குடிநீர்த் திட்டம் முழுமையாக்கப்பட்டது.

அம்சம் 9(1) வீடற்ற கிராமக் குடும்பங்களுக்கு வீட்டுமனை வழங்குதல்

1985-86ஆம் ஆண்டிற்கு அரசின் குறியீடு 37,000 ஆகும். 54,684 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. சாதனையின் விழுக்காடு 148 ஆகும்.

அம்சம் 9 (2): வீடற்ற கிராம குடும்பங்களுக்கு வீடுகட்ட உதவிடுதல்.

1985-86ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் அரசு குறியீடு 3,289. கிராம வீட்டுவசதி, கூட்டுறவு, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீடு வசதித்திட்டம் ஆகிய திட்டங்கள் மூலம் 3,948 வீடுகள் வீடற்ற கிராமக் குடும்பங்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்டன. இதன் விழுக்காடு 120 ஆகும்.

அம்சம் 10(1) சேரிகளில் சுற்றுப்புற சூழ்நிலை மேம்படுத்தல்

இத்திட்டத்தில் 1985-86ஆம் ஆண்டில் பயன்பெற வேண்டியோர் குறியீடு 2,520. இத்திட்டத்தினால் குடிசைப் பகுதிகளுக்கு சாலை வசதி, குடிநீர், கழிப்பிடம், மின் விளக்கு போன்ற அடிப்படை வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. இதனால் இம்மாவட்டத்தில் நகராட்சிகளில் சேரி வாழ்மக்கள் 17,185 பேர்கள் பயன்பெறும் வகையில் வேலைகள் முடிக்கப்பெற்றுள்ளன.

அம்சம் 10(3) பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்துள்ள எளிய பிரிவினருக்கு வீடு கட்டும் திட்டம் அமுலாக்கிடுதல்

1985-86ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் அரசு குறியீடு 214க்கு 411 வீடுகள் புனர் வாழ்வு திட்டத்தின் கீழும், கைத்தறித் துறைத் திட்டத்தின் கீழும், நலிவடைந்தோர் பிரிவினருக்கு கட்டிக் கொடுக்கப்பட்டன. சாதனையின் விழுக்காடு 171 ஆகும்.

அம்சம் 11(2) பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்குதல்

1985-86ஆம் ஆண்டில் 4,124 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்க வேண்டுமென்பது குறியீடு. இதில் 3,533 பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டன.





அம்சம் 12 (1) மரங்கள் நடுதல்

இம்மாவட்டத்தில் 1985-86ஆம் ஆண்டின் குறியீடு ஒரு கோடியே பன்னிரண்டு லட்சம் மரங்கள் நடுதலாகும். இவ்வாண்டில் ஒரு கோடியே எண்பத்திரண்டு லட்சம் மரங்கள் நடப்பட்டன. சாதனை 163 விழுக்காடு ஆகும்.

அம்சம் 12(2) சாண எரி வாயு கலன்கள் அமைத்தல்

1985-86ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் அரசு குறியீடான 2,015க்கு, 2,082 சாண எரிவாயு கலன்கள் அமைக்கப்பட்டு உள்ளன.

அம்சம் 13 குடும்ப நலத்திட்டத்தை ஒரு மக்கள் இயக்கமாக பரப்புதல்

குடும்பநலத் திட்டத்தில் 1985-86ம் ஆண்டிற்கு அரசின் குறியீடு 41,400 நபர்களுக்கு குடும்பநல அறுவை சிகிச்சை செய்வதாகும். இதில் இலக்கை விஞ்சி 41,754 நபர்களுக்கு குடும்பநல அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

அம்சம் 14(1) ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

1985-86ஆம் ஆண்டில் ஆரம்பச் சுகாதார நிலையம் ஒன்று அமைக்க குறியீடு அரசிடம் இருந்து பெறப்பட்டு, திருவரம்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் துவாகுடி கிராமத்தில் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் நிறுவப்பட்டுள்ளது.

அம்சம் 15(1) 6 லிருந்து 14 வயது வரை உள்ள குழந்தைகளை பள்ளியில் சேர்த்தல்

1985-86ஆம் ஆண்டில் 6-14 வயது குழந்தைகளை பள்ளியில் சேர்ப்பதில் அரசின் குறியீடு 18,300 (இதில் 6-11 வயது 7,900, 11-14 வயது 10,400) இம்மாவட்டத்தில் 9 வயது முதல் 13 வயது முடிய உள்ள 19,181 குழந்தைகளை பள்ளியில் சேர்த்து குறியீடு விஞ்சப்பட்டது. (6-11 வயது 7,981 ) (11-14 வயது 11,200 )

அம்சம் 16(2) வயது வந்தோர் கல்வி

1985-86ஆம் ஆண்டு வயது வந்தோருடைய எழுத்தறிவின்மையை அகற்றும் திட்டத்தின் கீழ், 48,800 நபர்களுக்கு கல்வி புகட்டப்பட்ட அரசு குறியீடுநிர்ணயித்ததில்59,628 நபர்களுக்கு கல்வி அறிவு புகட்டப்பட்டது. இதன் விழுக்காடு 120 ஆகும்.

## 20 அம்சத் திட்டச் சாதனைகள் :

# காமராஜர் மாவட்டம்

நாடு முன்னேற நம் பாரதப் பிரதமர் மறைந்த இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் நமக்களித்த திட்டம்தான் 20 அம்சத் திட்டம். இந்தியாவில் பொதுவான வளர்ச்சித் திட்டங்களைத் தவிர, பல்வேறு பிரிவினரின் இன்னல்களைக் குறைக்கவும், மக்களின் பொருளாதார சமூக வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் பல்வேறு குறைகளை சரி படுத்தவும், தினந்தோறும் ஏற்படும் புதிய சவால்களை சமாளிக்கவும் அரசு 20 அம்சத் திட்டத்தினை வகுத்தது. இத்திட்டத்தில் காமராசர் மாவட்டம் தனது குறியீட்டினை எட்டி சாதனை புரிந்துள்ளது.

1985-86ஆம் ஆண்டிற்கு இம்மாவட்டத்தில் குறியீடான 361 எக்டேரைத் தாண்டி, 1,036 எக்டேருக்குப் பாசன வசதியை அதிகரித்துள்ளது. 1986-87 நடப்பாண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் 338 எக்டேர் என அரசு நிர்ணயித்துள்ளது. பாசன வசதி அதிகரிக்க இம்மாவட்ட பொறியாளர்கள் தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். இதுவரை 216 எக்டேர் பாசன வசதி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1985-86ஆம் ஆண்டிற்கு அரசு நிர்ணயித்த குறியடான 4,000 மெட்ரிக் டன்னுக்கு மேல் 6,820 மெட்ரிக் டன் பயறு வகைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

1986-87ஆம் ஆண்டிற்கு அரசு 9,000மெட்ரிக் டன் குறியடாக நிர்ணயித்துள்ளது.

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியினை அதிகரிக்க அரசு 1985-86ம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 37,000 மெட்ரிக் டன்னுக்கு மேல் 37,215 மெட்ரிக் டன் அடைந்துள்ளது. 1986-87ஆம் ஆண்டிற்கு அரசு 14,100 மெட்ரிக் டன் குறியீடு நிர்ணயித்துள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 80 இலட்சமும், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 115 இலட்சமும், தீவிர வேளாண்மை உற்பத்திப் பெருக்கத் திட்டத்தின் கீழ் ரூ. 50 இலட்சமும், வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 75 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்களின் மூலமாக 7,500 நலிந்தோர் பயன்பெற்றுள்ளனர். சுமார் 24.5 இலட்சம் மனிதவேலை நாட்கள் கிராமப்புறப் பகுதிகளில் வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 110 இலட்சமும், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 143 இலட்சமும், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்



டத்தின் கீழ் ரூ. 163 இலட்சமும், தீவிர வேளாண்மை உற்பத்திப் பெருக்குத் திட்டத்தின் கீழ் ரூ. 50 இலட்சமும், வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 89 இலட்சமும், ஆக மொத்தம் ரூ. 5.5 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டங்களின் மூலமாக 9,300 நலிந்தோர் பயனடைவார்கள். 6 இலட்சம் மனித வேலை நாட்கள் கிராமப்புறங்களில் வளர்ச்சிக்கு கொடுக்கப்படவுள்ளது.

1985-86 ஆண்டின் திட்டங்களின் வாயிலாக 4,413 ஆதிதிராவிடர்கள் ரூ. 4.84கோடி மதிப்புள்ள திட்டங்களின் பயனாக பயன் பெற்றுள்ளனர்.

நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டளவான 15 ஏக்கருக்கு மேல், 16.93 ஏக்கர் உபரிநிலம் விநியோகம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினரின் வளர்ச்சிக்காக திட்டங்களைத் துரிதப்படுத்தும் திட்டத்தின் கீழ் 1985-86ஆம் ஆண்டிற்கு தாழ்த்தப்பட்டோர் 4,610 பேரும், பழங்குடியினர் 18 பேரும் வளர்ச்சித் திட்டங்கள் மூலம் பயன்பெற வேண்டும். ஆனால் இக்குறியீட்டைத் தாண்டி தாழ்த்தப்பட்டோரில் 4,962 பேரும், பழங்குடியினரில் 23 பேரும் பயன் பெற்றுள்ளனர். 1986-87ல் 2,405 தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் பயன்பெற உள்ளனர்.

குடிநீர் பிரச்சினையுள்ள 75 கிராமங்களுக்கு குடிநீர் வழங்குதலில் முழுமையாகக் குறியீட்டை இம்மாவட்டம் எட்டியுள்ளது. நடப்பாண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் 40 குடிநீர் பிரச்சினையுள்ள கிராமங்கள் குடிநீர் வசதி பெறவுள்ளன.

1985-86ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 6,000 என்ற குறியீட்டளவைத் தாண்டி 6,918 வீடற்ற கிராமக் குடும்பங்களுக்கு, வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. வீடுகட்ட உதவும் திட்டத்தின் கீழ் அரசு நிர்ணயித்த குறியீடான 820க்கு மேல் 1,468 பேர்களுக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது.

1986-87ல் இத்திட்டத்தின் கீழ் 6,600 வீடற்ற கிராமக் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டாவும், 2,000 பேர்களுக்கு வீடுகட்டுவதற்கு உதவும் திட்டமும் செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 1985-86ல் 345 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு அளிப்பதென குறியீடு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால் குறியீட்டளவை தாண்டி 773 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிற்கு 700 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புத் தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் சென்ற ஆண்டில் 23,56,800 மரக்கன்றுகள் நடப்பட்டன. மேலும் 171 கரிம வாயு கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் 32,44,000 மரக்கன்றுகள் நடப்படவுள்ளன. 200 கரிமவாயு கலன்கள் அமைக்கப்படவுள்ளன.



1985-86ல் இம்மாவட்டத்தில் ஒவ்வொரு மாதமும் சிறு குடும்பநல இயக்கம் நடத்தப்பட்டு 16,010 நபர்களுக்கு குடும்ப நலத் திட்டத்தின் கீழ் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு, குறியீட்டளவிற்கு மேல் சாதனை எய்தப்பட்டது.

1985-86ஆம் ஆண்டின் குறியீட்டளவான 50 கிளை ஆரம்பச் சுகாதார நிலையங்கள் முழுவதும் திறக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் 11 கிளை ஆரம்பச் சுகாதார நிலையங்கள் திறக்கப்படவுள்ளன.

1985-86ல் இத்திட்டத்தின் கீழ் 6 வயதிலிருந்து 14 வயது வரையிலுள்ள குழந்தைகளை பள்ளியில் சேர்க்கும் திட்டத்தின் குறியீடாக அரசு நிர்ணயித்த 7,500 தாண்டி 11,992 குழந்தைகள் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். 1985-86ல் 24,603 பேர்களுக்கு முதியோர் கல்வி அளிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 7,300 குழந்தைகளை பள்ளிகளில் சேர்த்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதுபோல் 32,800 முதியோர்களுக்கு முதியோர் கல்வி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**சிறுதொழில்கள் அமைத்தல்**

1985-86ல் 308 சிறு தொழில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இது அரசின் குறியீடான 200க்கு மேல் 154 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பால் உற்பத்திப் பெருக்கத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டுத் துறை திட்டத்தின் கீழ் 150 இந்து ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு 1985-86ல் கறவை மாடுகள் வாங்கிட மானியமாக ரூ. 1,250 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மதம் மாறிய ஆறு கிறித்துவ குடும்பங்களுக்கு ரூ. 0.05 இலட்சம் மானியமாக வழங்கப் பட்டுள்ளது. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி கழகத்தின் மூலம் ,பால் கூட்டுறவு சங்கங்களைச் சேர்ந்த 310 இந்து உறுப்பினர்களுக்கு கறவை மாடுகள் வாங்கிட மான்யமாக ரூ. 2.58 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.





# செங்கல்பட்டு மாவட்டம்

ஏர்மிகும் இருபது அம்சத் திட்டங்கள் செயலாக்கம் செய்யப் பெற்றதிலிருந்து செங்கை மாவட்டத்தில் பயறு வகைகள் அதிக அளவில் பயிரிடப்படுகின்றன.

இம்மாவட்டத்தில் பயறுவகைகளில் இயல் பரப்பு 18,000 எக்டேர் ஆகும். ஆனால் தற்போது பரப்பு 30,000 எக்டேர் வரையிலும் உயர்ந்துள்ளது. பயறு வகைகளில் துவரை, உளுந்து, பாசிப்பயிறு, காராமணி, மொச்சை, கொள்ளு ஆகியவை பயிராகின்றன. துவரை நீங்கலாக ஏனைய பயறுகள் 65 முதல் 85 நாட்கள் வரை வயதுடையவை. இவற்றில் டி.9 உளுந்து, கே.எம். 2 பாசிப்பயறு சி.152 காராமணி எஸ்.ஏ. 1 மற்றும் கோ.1 துவரை போன்ற ரகங்கள் இம்மாவட்டத்தில் பிரபலமாக உள்ளன.



## 1985-86ஆம் ஆண்டில் பயறுவகை திட்டத்தின கீழ் பிற சாதனைகள்

விநியோகிக்கப்பட்ட நுண்ணுயிர்ப் பொட்டலங்கள் 25,000 எண்கள்.

1985-86ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் 8500 மெ.டன்கள் பயறு வகை உற்பத்தி குறியீட்டுக்கு 11200 மெ. டன்கள் வரை சாதனை அடையப்பட்டது.

டி.ஏ.பி. இலை, தெளிப்பு செய்தது 100 எக்டேர்.

பயறு மினி கிட்டுகள் வழங்கியது (4 கிலோ) 16,649 எண்கள்.

பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் வழங்கியது 15 எண்கள்.

பயறுவகைகளில் உழவர்க்குப் பயிற்சி 2700 நபர்கள் பயனடைகிறார்கள்.

இவை தவிர, செயல் விளக்கத் திடல்கள் பல அமைக்கப்பெற்றன. உழவர்களுக்குப் பயறுவகைச் சாகுபடியில் பயிற்சி அளிக்கப் பெற்றது. சுமார் 6 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பயறு (மினிகிட்டுகள்) விநியோகிக்கப்பட்டது.

## பட்டு வளர்ச்சித் துறை 1985-86

43 தாழ்த்தப்பட்ட விவசாயிகளுக்கு மல்பரி பயிர் செய்ததற்காக ஏக்கருக்கு ரூ.100 வீதம் மான்யம் வழங்கப்பட்டுள்ளது. ரூ. 400 மதிப்புள்ள சிறப்புத் தளவாடங்கள் வழங்கப்பட்டுள்ளன. 23 விவசாயிகளுக்குப் பட்டு விவசாயத்தில் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. 14 நபர்களுக்குத் தொழில் செய்வதற்கான தளவாடசாமான்கள் வாங்குவதற்கு ரூ. 500 வீதம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. 7 நபர்களுக்குப் புழு வளர்ப்பு மனை கட்ட ரூ. 750 வீதம் மான்யம் வழங்கப்பட்டுள்ளது.

1986-87ன் மொத்தக் குறியீடு 40 நபர். அதில் ஜூன்'86 வரை 10 சதவீதம் சாதனை செய்யப்பட்டுள்ளது. 1986-87ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு பெறப்படவில்லை. பட்டு வளர்ச்சித் துறையால் தாழ்த்தப்பட்ட , நிலமுடைய பட்டு விவசாயிகள் ஆண்டிற்கு, ஏக்கருக்கு ரூ. 10,000க்கு மேல் வருமானம் பெற்றுள்ளனர்.

கூடுதல் மாணவர் சேக்கை 1986-87 :

இம்மாவட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட குறியீடு 16,700 எண்ணிக்கை: 20,765 மாணவர்களைக் கூடுதலாகச் சேர்த்து 124 சதவீத இலக்கை மிஞ்சியுள்ளது. 6-11 வயதுப் பிரிவில் கூடுதலாகச் சேர்க்கப்பட்ட பிள்ளைகள் 9766ல் 8036 பேர் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தவர்களாவா. 11-14, வயது பிரிவில் 4860 பேர் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தவர்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். 292 மாணவர்கள் 14-18 வயதுப் பிரிவில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தவர்களிலிருந்து சேர்க்கப்படடுள்ளார்கள். 1985-86ல் கூடுதலாகச் சேர்க்கப்பட்ட மாணவர்களில் 75 சதவீதத்தினர் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தைச் சார்ந்தவர்கள்.

**வயது வந்தோர் கல்வி**

இத்திட்டத்தில் 15 முதல் 35 வயதுடைய அனைவரும் சேர்ந்து பயனடையலாம். இத்திட்டத்தின் குறிக்கோள் மூன்றாகும். 1. எழுத்தறிவு,எண்ணறிவு பெறுதல், 2. விழிப்புணர்ச்சி பெறுதல, 3. செயல் திறன் மேம்பாட்டைதல.

1985-86ஆம் ஆண்டில் மாநில வயது வந்தோர் கல்வித் திட்டத்

லாளர்களுக்குப் பல்வேறு உதவிகள் செய்யப்பட்டு மறுவாழ்வு வழங்கப்பட்டதன் மூலம் நூற்றுக்கு நூறு வெற்றி காணப்பட்டது.

7வது அம்சத்தின் கீழ் 8,104 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்ற குறியீட்டிற்கும் மேலாக 43,313 குடும்பங்களுக்குப் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு 534 சதவீதம் சாதனை புரியப்பட்டுள்ளது.

இதுபோன்ற குறியீடாக நிர்ணயிக்கப்பட்ட 176 மலைவாழ் மக்களின் குடும்பங்களுக்கும் அதிகமாக 740 குடும்பங்களுக்குப் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு இதிலும் 420 சதவீதம் சாதனை அடையப்பட்டுள்ளது.

8வது அம்சத்தில் பிரச்சினைக் கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்ற திட்டத்தின் கீழ் 14 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்க வேண்டும் என்ற குறியீட்டிற்கேற்ப 14 கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கப்பட்டு இதில் 100 சதவீதம் சாதனை செய்யப்பட்டது.

9வது அம்சத் திட்டத்தின் கீழ் 6,500 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படுதல் வேண்டும் என்ற குறியீட்டுக்கு மேலாக 7,165 நபர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்களை வழங்கி 110 சதவீதம் சாதனை புரியப்பட்டது.

1,823 பேர்களுக்கு வீடுகள் கட்ட உதவி வழங்க வேண்டும் என்ற குறியீட்டினைத் தாண்டி 2,138 பேர்களுக்கு வீடுகள் கட்ட உதவிகள் வழங்கப்பட்டு 110 சதவீதம் சாதனை அடையப்பட்டது.

10வது அம்சத்தின் கீழ் 5,680 குடிசைவாழ் மக்களுக்கு வசதி செய்யப்படவேண்டும் என்ற குறியீட்டினுக்கேற்ப 5,680 பேர்களுக்கும் வசதிகள் வழங்கப்பட்டு இதில் 100 சதவீதம் சாதனை எய்தப்பட்டுள்ளது.

வாழ்வில் நலிவுற்றோர்க்கு வீட்டு வசதி செய்வதில் குறியீடான 305 பேர்களுக்கும் மேலாக 365 பேர்களுக்கு வழங்கப்பட்டு 120 சதவீதம் சாதனை புரியப்பட்டுள்ளது.

11வது அம்சத்தின் கீழ் இம்மாவட்டத்தில் 1,713 நீரேற்றிகளுக்கு மின்விசை வழங்கப்பட வேண்டும் என்ற குறியீட்டினை விஞ்சி 1,725 நீரேற்றிகளுக்கு மின்விசை வழங்கப்பட்டு 101 சதவீதம் சாதனை எய்தப்பட்டுள்ளது.

12வது அம்சத்தின் குறியீடான 28 இலட்சத்து 30 ஆயிரம் மரங்கள் நடுவதற்கும் மேலாக இம்மாவட்டத்தில் 45 இலட்சத்து 46 ஆயிரம் மரங்கள் நடப்பட்டு 161 சதவீதம் சாதனை புரியப்பட்டுள்ளது.

1,575 சாண எரிவாயுக் கலன்கள் அமைக்க வேண்டும் என்ற குறியீட்டினை விஞ்சி 1,654 சாண எரிவாயுக் கலன்கள் அமைக்கப்பட்டு 105 சதவீதம் சாதனை செய்யப்பட்டுள்ளது.

13வது அம்சத்தின் கீழ் 35,300 பேர்களுக்குக் குடும்பநல சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் என்ற குறியீட்டினை விஞ்சி 37,102 பேர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு 105 சதவீதம் சாதனை எய்தப்பட்டு இம்மாவட்டம் மாநில அளவில் குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் இரண்டாம் இடத்தினை அடைந்துள்ளது.

14வது அம்சத்தின் கீழ் ஓர் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்ற குறியீட்டிற்கேற்ப வால்பாறையில் முடிசில் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

16வது அம்சத்தின் கீழ் 6முதல் 14 வயதுவரையுள்ள குழந்தைகள் 10,800 பேர்களைப் பள்ளிகளில் சேர்க்க வேண்டும் என்ற குறியீட்டினை விஞ்சி 16,077 குழந்தைகள் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு இம்மாவட்டம் 149 சதவீதம் சாதனை புரிந்துள்ளது.

39,600 பேர்களுக்கு வயது வந்தோர் கல்வி வழங்கப்பட வேண்டும் என்ற குறியீட்டினை விஞ்சி 118 சதவீதம் சாதனை படைத்து 46,684 வயது வந்தோர்களுக்குக் கல்வி வழங்கப்பட்டுள்ளது.

18வது அம்சத்தின் கீழ் 750 சிறுதொழில்களை நிறுவ உதவி வழங்க வேண்டும் என்ற குறியீட்டிற்கும் மேலாக 245 சதவீதம் சாதனை புரிந்து இம்மாவட்டத்தில் 1,838 சிறு தொழில்கள் நிறுவ உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

வறுமைக்கோட்டிற்குக் கீழே வசதியற்று வாழ்வோருக்கு ஒளி விளக்காய்த் திகழும் இருபது அம்சத் திட்டம் இம்மாவட்டத்தில் நூற்றுக்கு நூறு சாதனை படைக்கும் விதத்தில் சீரோடும் சிறப்போடும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மக்கள் நலனுக்காக இத்திட்டம் வரும் ஆண்டுகளில் தொடர்ந்து மேலும் சிறப்பான முறையில் செயல்படுத்த தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## கோவை மாநகராட்சி 1985-86-ல் 20 அம்சத் திட்டச் சாதனைகள்



கோவை மாநகராட்சியில் குடிசைப் பகுதி அபிவிருத்தித் திட்டம் 1985-86ல் இருபது அம்சத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு பணி முடிக்கப்பட்டது. அம்மன்குளம், மணியகாரம் பாளையம், நல்லாம்பாளையம், காமராஜ்புரம் (கணபதி) சொக்கம்புதூர், பனைமரத்தூர், வெங்கிட்டாபுரம், பூசாரி பாளையம் மற்றும் கமலா மில் குட்டை ஆகிய ஒன்பது பகுதிகளில் இப்பணி நிறைவேற்றப்பட்டது. இந்தப் பகுதியில் பதின்மூன்று குடிநீர்க் குழாய்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. குழாய்கள் அமைக்கும் பணிக்காக செலவு ரூ. 2.93 இலட்சம் ஆகும். இதனால் 14,586 மக்கள் பயனடைந்துள்ளனர்.

1985-86ஆம் ஆண்டில் இம்மாநகராட்சி எல்லைக்குள் உள்ள 9 இடங்களில் 2,045 சாலை மரங்கள் ரூ. 2.98 இலட்சம் செலவில் நடப்பட்டுள்ளன.



# சேலம் மாவட்டம்

சேலம் மாவட்டத்தில் எண்ணெய வித்துப்பயிர் சுமார் 1.25 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பில் மானாவாரிப் பயிராகவும், இறவைப் பயிராகவும் பயிர் செய்யப்பட்டு வருகிறது. இது பயிர் செய்யப்படும் மொத்தப் பரப்பில் 25 சதவீதம் ஆகும்.

சிறு-குறு விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், புதிய புதிய கண்டுபிடிப்புகளின் பயனை அவ்வப்பொழுது உணர்ந்து உற்பத்தியினைப் பெருக்கவும், சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்த ரூபாய் 9,34,500 செலவிட்டு 9,551 சிறு-குறு உழவர்களுக்கு இடுபொருள் இனாமாக வழங்கப்பட்டது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1985-86-ஆம் ஆண்டுக்கு முதலில் ரூ. 257.29 இலட்சம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அரசு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டு 1985-86-ஆம் ஆண்டுக்கு ரூ. 280.210 இலட்சம் புதிய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. மத்திய மற்றும் மாநில அரசுகளால் 50 : 50 அளவில் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

சேலம் மாவட்டத்தில் 1985-86-ஆம் ஆண்டிற்கு 1266 நபர்களுக்குப் பயிற்சி அளிக்க அரசு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் இரண்டு தொழிற் பயிற்சி நிலையங்களின் மூலம் மின்சாரப் பம்ப் பழுது பார்க்க ஒரு மாதக் கால பயிற்சி அளித்து, அவர்களைக் கொண்டு கிராமத்திலுள்ள நபர்களுக்குப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. 964 நபர்களுக்குப் பல்வேறு தொழிலில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 1985-86-ஆம் ஆண்டு நாளது வரை 10.53 இலட்சம் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு 1985-86-ஆம் ஆண்டில், இம்மாவட்டத்திற்கான ஒதுக்கீட்டுத் தொகை ரூ. 296.40 இலட்சத்தில் 31-3-86 வரை ரூ. 245.44 இலட்சம் மட்டும் அரசினரால் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதில் ரூ. 36.81 இலட்சம் பேரூராட்சிகளுக்கும் ரூ. 207.88 இலட்சம் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் பிரித்து வழங்கப்பட்டுள்ளது. மீதித்தொகையான ரூ. 75,000-ஐ சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பணியாளருக்குரிய நிர்வாகச் செலவினங்களுக்காக வைத்துக் கொள்ளப்பட்டது. மேலும் ரூ. 210.69 இலட்சம் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகவும் ரூபாய் 23.96 இலட்சம் பேரூராட்சிகள் மூலமாகவும் ஆக மொத்தம் ரூ. 234.65 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. (உணவுப் பொருட்கள் நீங்கலாக).

1985-86-ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில உருவாக்கப்பட வேண்டிய மனித சக்தி நாட்களின் இலக்கு 18.62 இலட்சம். தேசிய ஊராமய வேலைவாய்ப்புத் திட்டத்தில் 1985-86ஆம் ஆண்டில் 23.67 இலட்சம் மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டன.

''சமூகக் காடுகள்'' தலைப்பில் 1985-86-ல் ரூ. 60.42 இலட்சம்

ஓலைப்பட்டி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க நெசவாளர் குடியிருப்பு கட்டுமானப்பணி



தின் கீழ் வாலாசாபாத், அச்சரப்பாக்கம், சித்தாமூர், ஆர்.கே. பேட்டை, பூந்தமல்லி, திருத்தணி, பள்ளிப்பட்டு, இலத்தூர், ஆகிய ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும் ஊரக செயல்முறை எழுத்தறிவுத் திட்டத்தின் கீழ் மீஞ்சூர், சோழவரம், எல்லாபுரம், கடம்பத்தூர், ஈக்காடு, திருவாலங்காடு ஆகிய பகுதிகளிலும், தொண்டு நிறுவனங்களின் கீழ் இதர ஒன்றியப் பகுதிகளிலும் செயற்படுத்தப்பட்டுள்ளது.

**மாநில வயது வந்தோர் கல்வித் திட்டம்**

மொத்தம் பயனடைந்த கற்போர் எண்ணிக்கை 24,200 பேர். இதில் தாழ்த்தப்பட்டோர் 12,100 பேர் பயன் அடைந்துள்ளனர். மலைவாழ்வோர் 375 பேர்கள் பயன் அடைந்துள்ளனர். மொத்த ஊக்குநர்களின் எண்ணிக்கை 800 ஆகும். மேற்பார்வையாளர்கள் 24 பேர்கள்.

ஊரகச் செயல்முறை எழுத்தறிவுத் திட்டம்:

மொத்தம் பயனடைந்தோர் 19,700 பேர்கள். இதில் 11,700 பேர் தாழ்த்தப்பட்டோர்களும், 230 பேர் மலைவாழ்வோர்களும் பயனடைந்துள்ளனர்.

600 ஊக்குநர்களும், 20 மேற்பார்வையாளர்களும் எண்ணிக்கையாகும்.

**தாட்கோ 85-86**

மத்திய அரசின் உதவி பெற்ற ஆதிதிராவிடர்களுக்கு 65 தொகுப்பு வீடுகள் மானிய விலையில் சிறுவாக்கம் (காஞ்சிபுரம்) பெருமாள்சேரி (திருக்கழுக்குன்றம்) நொச்சிலி (திருத்தணி) ஆகிய இடங்களில் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. மொத்த மதிப்பு ரூ. 3,90,000 ஆகும். சிறு பெட்டிக் கடைகள் வைக்க ஆதிதிராவிடர்களுக்கு ரூ. 70,750 கடன், 25 சதவீதம் மானியமாகக் கொடுக்கப்பட்டது. இதனால் 79 பேர்கள் பயன் அடைந்துள்ளனர்.

**நகர்ப்புறப் பொருளாதார வளர்ச்சித் திட்டம் (சுயவேலை வாய்ப்பு)**

326 ஆதிதிராவிடர்களுக்கு வங்கிகள் மூலமாக மானியமாகக் கடன் கொடுக்கப்பட்டுள்ளது. ரூ.440 இலட்சம் ஆதிதிராவிடர்களுக்கு 33½ சதவீதம் மானியமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர்களுக்கு மானியமாக 'தாட்கோ' மூலமாக ரூ.



2.46 இலட்சம் வேளாண்மை இணை இயக்குநர் மூலமாக விவசாய மக்களுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

**தாட்கோ**

ஆதிதிராவிடர்களுக்கு காஞ்சிபுரம், சிறுவாக்கம், திருக்கழுக்குன்றம், பெருமாள்சேரி, திருத்தணி, நொச்சிலி ஆகிய இடங்களில் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மத்திய அரசின் உதவி பெற்று ஆதிதிராவிடர்கள் சிறப்பு உதவித் திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டிற்கு ரூ. 6.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு 220 நபர்கள் பயன்பெறப் பணிக் குறியீடும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் இதுவரை 40,000 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. திருக்கழுக்குன்றம் அருகே 'நெய்குட்டி'யில் சவுக்குக்கன்று 15 எக்டேரில் நடப்பட்டுள்ளது.

குடும்ப நல அறுவைச் சிகிச்சை இந்த ஆண்டில் 2,604 செய்யப்பட்டுள்ளன. சென்ற ஆண்டு இலக்கு 41,140. அறுவைச் சிகிச்சைகள் சாதனையோ 45,813. இது இலக்கை மிஞ்சிய 111.3 சதவிகித சாதனையாகும். குடும்ப அறுவைச் சிகிச்சையில் சென்ற ஆண்டில் செங்கை மாவட்டம் தமிழ்நாட்டில் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது.

இதுபோலவே கண்புரை நோய் அறுவைச் சிகிச்சையிலும் மாவட்டம் மாநிலத்தில் மூன்றாவது இடத்தைச் சென்ற ஆண்டில் பெற்றது. அரசு முகாம்களில் 1,724 புரை நீக்கு அறுவைகளும் தனியார் முகாம்களில் 427 புரை நீக்கு அறுவைகளும் செய்யப்பட்டன. இந்த ஆண்டில் இதுவரை 731 தொழுநோயாளிகளுக்கும் சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது. 164 புரை நீக்கு நோய்ச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செங்கற்பட்டு மாவட்டத்தில் 85-86ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 232.34 இலட்சம் செலவிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் மொத்தம் ரூ. 222.26 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இதனால் மொத்தம் சுமார் 14,320 பேர் பயனடைந்தனர். இவர்களில் சுமார் 8,000 பேர் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர். சுமார் 5,000 பேர் மகளிர் ஆவர்.

சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கான மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 85-86ஆம் ஆண்டில், மொத்தம் ரூ. 60 இலட்சம் செலவு செய்யப்பட்டதால் சுமார் 1,000 தாழ்த்தப்பட்டவர்களும் மற்றவர்கள் சுமார் 2,000 பேரும் பயனடைந்தனர்.

ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 85-86ஆம் ஆண்டில் மொத்தம் சுமார் 247 இலட்சம் செலவு செய்யப்பட்டது. சுமார் 2200 மெட்ரிக் டன் அரிசியும், சுமார் 900 மெட்ரிக் டன் கோதுமையும் விநியோகிக்கப்பட்டது. மொத்தம் சுமார் 22 இலட்சம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டன. சுமார் 300 கி.மீ கிராமச் சாலைகள் போடப்பட்டன. சமுதாயக் கடன்கள் தொகுப்பு வீடுகள் சுமார் 600 ஆகியவை கட்டப்பட்டன.

**தொழில் மையம்**

மத்திய அரசின் உதவி பெற்று ஏனைய திட்டத்தின் கீழ் மே '86ஆம் மாதம் முடிய 99 தொழில்கள் தொடங்கப்பட்டுள்ளன.

**கால்நடை**

மத்திய அரசின் உதவி பெற்ற ஏனைய திட்டத்தின் கீழ் கால்நடைகளுக்கு அம்மை நோய்த் தடுப்பு இயக்கத்திற்கு ரூ.2.25 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 0.165 இலட்சம் நிதி செலவழிக்கப்பட்டுள்ளது. இதன் சாதனை 7 சதவீதம். இத்திட்டத்திற்குப் பணி குறியீடு எதிர்பார்க்கப்படுகிறது. 3917 கால்நடைகளுக்குச் செயற்கைக் கருவூட்டப்பட்டுள்ளது.



20 அம்சத் திட்ட

# கோவை மாவட்டம்

**கோ**வை மாவட்டம், இந்தியப் பிரதமரின் 20 அம்சத் திட்டத்தைச் செயல்படுத்தியதில் 1985-86ஆம் ஆண்டில் 100 சதவீதமும் அதற்கு மேலும் சாதனை புரிந்து மாநிலத்தில் முதலிடம் பெற்று அரசின் பாராட்டுச் சான்றிதழைப் பெற்றது பெருமைக்குரியதொன்றாகும். அத்தோடு இம் மாவட்ட மக்களுக்குப் பயன் தருகின்ற வகையில் செலவிடுவதற்காக ரூ. 7.5 இலட்சம் அரசு பரிசாக வழங்கியுள்ளது.

1985-86ஆம் ஆண்டில் 20 அம்சத் திட்டத்தில் முதல் அம்சமான பாசன வசதியைப் பெருக்குதலில் இம்மாவட்டத்திற்கான குறியீடு 6,004 எக்டேராகும். இதில் 6,387 எக்டேருக்குப் பாசன வசதியைப் பெருக்கி இம்மாவட்டம் 106 சதவீதம் சாதனை புரிந்துள்ளது.

இரண்டாம் அம்சத்தில் பயறு வகை உற்பத்தியைப் பெருக்குதலில் குறியீடான 33 ஆயிரம் மெட்ரிக் டன்னுக்கும் மேலாக 51 ஆயிரம் மெட்ரிக் டன் பயறு வகை உற்பத்தியினைப் பெருக்கி 155 சதவீதம் சாதனை படைத்துள்ளது.

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியைப் பெருக்கும் வகையில் குறியீடான 107 ஆயிரம் மெட்ரிக் டன்னை விஞ்சி 111 ஆயிரம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்து 104 சதவீதம் சாதனை அடைந்துள்ளது.

3வது அம்சத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டத்தின் கீழ் ஏற்கெனவே இத்திட்டத்தின் கீழ் உதவி பெற்றவர்களில் 5,375 பேர்களுக்கு உதவி வழங்கப்பட வேண்டும் என்ற குறியீட்டிற்கு எதிராக 5,379 பேர்களுக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் புதிதாக 3,800 பேர்களுக்கு உதவி வழங்க நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டினை விஞ்சி 4,557 பேர்களுக்கு உதவி செய்யப்பட்டு 120 சதவீதம் சாதனை எய்தப்பட்டது.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 15 இலட்சத்து 44 ஆயிரம் மனித சக்தி நாட்களை உருவாக்குவதற்கான குறியீட்டினை விஞ்சி 20 இலட்சத்து 38 ஆயிரம் மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டு 132 சதவீதம் சாதனையும், ஊரக நில மற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 17 இலட்சத்து 66 ஆயிரம் மனித உழைப்பு நாட்களுக்கு மேலாக 20 இலட்சத்து 16 ஆயிரம் மனித உழைப்பு நாட்களும் உருவாக்கப்பட்டு 114 சதவீதம் சாதனை அடையப்பட்டுள்ளது.

4வது அம்சத்தில் 355 ஏக்கர் உபரி நிலம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற குறியீட்டினை விஞ்சி 366 ஏக்கர் உபரி நிலம் பகிர்ந்தளிக்கப்பட்டு 103 சதவீதம் சாதனை எய்தப்பட்டுள்ளது.

6வது அம்சத்தின் கீழ் விடுவிக்கப்பட்ட 46 பிணைத்தொழி





நலிந்தோருக்கான இல்லம் இராசிபுரம்

செலவிடப்பட்டுள்ளது. 1046 எக்டேர் பரப்பளவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. நாற்றங்கால்களில் வளர்க்கப்பட்ட மொத்தம் 81.63 இலட்சம் செடிகளில் 1985-86-ல் 20.87 இலட்சம் செடிகள் நடப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 100 குடும்பங்களுக்கு 700 தேனீப் பெட்டிகளை வழங்கிட அனுமதி வழங்கப்பட்டது.

இத்திட்டம், சேலம் மாவட்டத்தின் கல்ராயன் மலைப் பகுதியிலுள்ள பண்டைய பழங்குடியினர் முன்னேற்றத்திற்கு அனுமதிக்கப்பட்டது. 700 தேனீப் பெட்டிகளும், 100 பழங்குடியினருக்கு 100 சதம் மானிய அடிப்படையில் வழங்கிட அனுமதிக்கப்பட்டதாகும்.

வீடற்ற ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டம் வருவாய்த் துறையில் மேற்கொள்ளப்படுகிறது. 1985-86-ஆம் ஆண்டில் நாமக்கல் வருவாய்க் கோட்டத்தில் 5560 நபர்களுக்கு 93.15 ஏக்கர் நிலத்திற்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது.

1985-86-ஆம் ஆண்டில் 20 அம்சத் திட்டத்தின் கீழ் 4,000 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்த இலக்கீட்டிற்கு அதிகமாகவே, 4,186 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இராசிபுரம் கிராமத்தில் 20 அம்சத் திட்டத்தின் கீழ் வருவாயில் நலிந்த பிரிவினருக்கான 61 வீடுகள் கட்டி முடிக்கப் பெற்று உள்ளன.

1985-86-ஆம் ஆண்டில் 2000 கைத்தறிகள் கூட்டுறவின் கீழ் கொண்டு வரப்பட்டு ஆண்டு இறுதியில் 36,800 கைத்தறிகள் கூட்டுறவின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இது மொத்த கைத்தறிகளில் 46 சதவீதம் ஆகும். இச்சரகத்தில் மொத்தம் 79 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன.

குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கூட்டுறவு துறையில் உள்ள நெசவாளர்களுக்கு வீட்டுவசதி மற்றும் நகர்புற மேம்பாட்டுக் கழகம் கடன் உதவியுடன் ரூ. 12ஆயிரம் மதிப்பில் வீடுகள் கட்டி கொடுக்கப்படுகின்றன. இதற்கென ஒரு வீட்டிற்குக் கடன் ரூ.9,600-ம் தமிழநாடு அரசு மானியம் ரூ. 1,000 வழங்குகிறது. மீதமுள்ள தொகை ரூ. 1,400 உறுப்பினர் ஏற்க வேண்டும்.

1985-86-ஆம் ஆண்டில் சேலம் மாவட்டம் தலைவாசல் ஒன்றியம் ஆரகளூரில் ரூ. 12.90 இலட்சம் திட்டத்தில் 100 இந்து ஆதிதிராவிடர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் பொருட்டு ஒரு தொழில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் தொடங்கப்பட்டுள்ளது.

தாரமங்கலம் தந்தை பெரியார் தொழில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் 'ட்ரைசம்' திட்டத்தில் 20 ஆதிதிராவிடர்களுக்குக் கைத்தறி நெசவுத் தொழிலில் பயிற்சி அளிக்கப்பட்டு மொத்தம் ரூ. 0.18 இலட்சம் மானியம் பெறப்பட்டு உதவித்தொகையாக வழங்கப்பட்டது.

1985-86-ஆம் ஆண்டில் 8 கிராமங்களுக்கு மின்வசதி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், 7 கிராமங்களுக்கு 1985-86-ஆம் ஆண்டில் மின்வசதி அளிக்கப்பட்டது.

இம்மாவட்டத்தில் உள்ள 237 துணைச் சுகாதார நிலையத்துடன் இந்த ஆண்டில் புதியதாக 37 புதிய சுகாதாரத் துணை நிலையங்கள் திறக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

இம்மாவட்டத்தில் 1874 ஆரம்பப்பள்ளிகளும், 209 நடுநிலைப்பள்ளிகளும், 141 உயர்நிலைப் பள்ளிகளும், 107 மேல்நிலைப்பள்ளிகளும் உள்ளன. 1985-86-ஆம் ஆண்டில் 6-14 வயது வரம்பில் 17,764 மாணவ மாணவியர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இப்பள்ளிகளில் 1976 பள்ளிகளில் ரூ. 2,81,454.45 மதிப்புள்ள 1,55,952 புத்தகங்கள் உள்ளன. புத்தக வங்கிகள் மூலம் 10,345 ஆதிதிராவிட மாணவ, மாணவியர்களும், 1869 பழங்குடி மாணவ மாணவியர்களும், 69,281 இதர மாணவ மாணவியர்களும் பயனடைகின்றனர்.

1985-86-ஆம் ஆண்டில் மாவட்டத் தொழில் மையத்தின் மூலம் புதிதாக 550 தொழிற்சாலைகள் துவங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அந்தக் குறியீட்டிற்கு எதிராக 1405 புதிய தொழிற்சாலைகள் சேலம் மாவட்டத்தில் அமைந்துள்ளன.

இதே போல் 1985-86-ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் 506 கைவினைக் கலைஞர்களுக்குக் கைவினைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இவைகளின் மூலம் 2861 நபர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதைத்தவிர 1985-86-ஆம் ஆண்டில் கிராமியக் கைவினைஞர்கள் பயிற்சித் திட்டத்தின் கீழ் 78 ஆதிதிராவிட-பழங்குடியினருக்கு பொறியியல், கயிறு தயாரித்தல், கவர் தயாரித்தல், அச்சுக் கோப்பு போன்ற தொழில்களில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

குழாய்க் கிணறுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் 40 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு, குறியீடான, 140 ஏக்கருக்கு, 160 ஏக்கர் பரப்பு பயனடைந்தது.

மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் குறியீடான 400 குடும்பங்களுக்கும் உதவப்பட்டது. 319.67 ஏக்கர் பயனடையப் பெற்று ரூ. 1.7 இலட்சம் செலவிடப்பட்டது.



# பெரியார் மாவட்டம்

பொதுவாகப் பெரியார் மாவட்ட மக்களுள் அதிலும் குறிப்பாகக் கொங்கு வேளாள இனத்தைச் சார்ந்தவர்கள் பெரும்பாலும் விவசாயிகளே ஆவர். "அதிகக் குழந்தைகள் பிறப்பின், நிலங்கள் படிப்படியாகப் பிரிக்கப்படும். அப்படிப் பிரிக்கப்பட்டுச் சிறு தேங்காய்களாகிவிடும் என்பதை நன்கு உணர்ந்தவர்கள். எனவே தான் 'ஒரு குடும்பம் ஒரு வாரிசு' என்ற தாரக மந்திரத்தை உறுதியுடன் கடைப்பிடித்து ஒழுகுபவர்கள் அய்யம்புதூர் (கோபி அருகில்) கரட்டுப்பாளையம் (சென்னிமலை அருகில்) முதலிய ஊர் மக்கள் சான்றாகத் திகழ்கிறார்கள். ஆகவே இம்மாவட்டம் பிற மாவட்டங்களுக்கு இத்துறையில் முன்மாதிரியாகத் திகழ்கிறது.

இம்மாவட்டத்திலுள்ள அரசு மருத்துவமனைகளில் 1985-86ல் மட்டும் 10382 பிரசவங்கள் நிகழ, அவற்றுள் 8907, குழந்தைகள் பிரசவித்த தாய்மார்கள் குடும்ப நல முறையை (60%) மேற்கொண்டு தமிழகத்தில் இம்மாவட்டம் முதல் நிலை வகிக்கிறது.

தகுதி வாய்ந்த தம்பதியினர் 41,980 பேர் உள்ளனர். ஒரே ஒரு குழந்தையுடன் உள்ளவர்களின் எண்ணிக்கை 73,736.

தற்காலிக முறைகளுள் ஒன்றான கருத்தடை வளையம் பொருத்துவதில் இம்மாவட்டத்திற்கு நிர்ணயித்த இலக்கு 6700 ஆகும். 5338 தாய்மார்கட்குக் கருத்தடை வளையம் பொருத்தப்பட்டுள்ளது. ஆக, இத்துறையில் சுமார் 80% சாதனையை இம்மாவட்டம் புரிந்துள்ளது.

கடந்த 1985-86 இல் மட்டும் இம்மாவட்டத்தில் 70 லேபராஸ்கோபிக் முகாம்கள் நடைபெற்றன. அவற்றின் வழி மட்டும் 4219 தாய்மார்கள் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டனர். அத்தாய்மார்கட்கு அரசு வழங்கும் ஈட்டுத்தொகையுடன் பல்வேறு ஊக்கப்பரிசுகளும் (அடிஷனல் இன்சென்டிவ்ஸ்) அவ்வப்பொழுது செயலாண்மைக் கழகங்களால் (வாலண்டரி ஆர்கனைசேஸன்ஸ்) அன்புடன் அளிக்கப்பட்டன.

கிராமங்களில் பொருளாதார வளர்ச்சியையும், மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தவும், வேலைவாய்ப்பு ஏற்படுத்துவதைக் குறிக்கோளாகவும் அதிக அளவில் வேலை வாய்ப்புள்ள தொழில்களை அங்கே தொடங்கச் செய்து அப்பகுதி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டும், தொழில் துவங்க உள்ள இடர்ப்பாடுகளை நீக்கி உதவவும் மேலும் ஒரே இடத்தில் அனைத்து வசதிகளைப் பெறவும் மாவட்டத் தொழில் மையம் தொடங்கப்பட்டது. பெரியார் மாவட்டத் தொழில் மையம் 1979-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17-ஆம் நாள் தொடங்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.

மத்திய அரசின் 20 அம்சத் திட்டத்தின் கீழ் புதிய சிறு தொழில் நிறுவனங்கள் ஏற்படுத்துதல், சிறு தொழில்களுக்கு அனைத்து வசதிகளைச் செய்து தருதல், தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களின் முன்னேற்றத்திற்கான திட்டங்களைத் தீட்டி நிதியுதவி வழங்கல், தொழில் முனைவோர்க்கு சம்பந்தப்பட்ட தொழிலில் பயிற்சி அளித்தல், கைவினைஞர்களை இனங்கண்டு கொண்டு பதிவு செய்தல், அவர்களின் தொழில் முன்னேற்றத்திற்



கான நிதியுதவி வழங்குதல், படித்த வேலையில்லா இளைஞர்-யுவதிகளுக்கு அவர்கள் சுயமாகத் தொழில் துவங்க வங்கிகளின் மூலம் கடன் வசதி செய்து தருதல் ஆகிய பணிகளைச் சீரிய முறையில் செவ்வனே நடத்தி வருகிறது.

20 அம்சத் திட்டத்தின் கீழ் 1985-86 ஆம் ஆண்டின் சாதனை கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

புதிதாகத் தொடங்கப்பட்ட சிறு தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 603.

இவற்றின் மூலம் வேலை வாய்ப்புப் பெற்ற நபர்களின் எண்ணிக்கை 4117.

இத்திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் / பழங்குடி வகுப்பைச் சார்ந்த 12 நபர்கள் சிறு தொழில் நிறுவனங்களை ஏற்படுத்திப் பயனடைந்துள்ளனர்.

தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களின் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மூன்று நபர்களுக்கு ரூ. 15,297.35 விதைப்பணமாக இவ்வாண்டு வழங்கப்பட்டுள்ளது.

கைவினைஞர்களை இனம் கண்டு அவர்கள் தொழிலைப் பதிவு செய்து கைவினைத் தொழிலுக்கான சான்றிதழ் வழங்கப்படுகிறது. கைவினைஞர்களுக்கு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் பெற்றுத் தருகிறது. மாநில விருது, தேசீய விருதுகளில் சிறந்த கைவினைஞர்கள் கலந்து கொள்ள ஏற்பாடு செய்து தருகிறது. பயிற்சி பெற விரும்பும் கைவினைஞர்கள் பயிற்சி பெறுவதற்கு வழிவகைகளைச் செய்கிறது. பூம்புகார் விற்பனை நிலையங்களில விற்பனை செய்ய வழிவகை செய்து தருகிறது. 1985-86 ஆம் ஆண்டில் 252 கைவினைஞர்கள் இனம் கண்டு கொள்ளப்பட்டு அவர்களுடைய தொழில்கள் பதிவு செய்யப்பட்டன. 8 கை வினைஞர்களுக்கு வங்கிக் கடன் பெறப் பரிந்துரை செய்யப்பட்டது.

காங்கயத்தைச் சேர்ந்த திரு எம். பாஸ்கரன் என்ற கைவினைஞர், தேசீய கைவினைஞர் விருதில் கலந்துகொள்வதற்காகப் பரிந்துரை செய்யப்பட்டது.

கிராமப்புற வினைஞர் திட்டம் இம்மையத்தின் மூலம் நேரடியாகச் செயல்படுத்தப்படுகிறது. கிராமப்புறத்தில் புதிய தொழில் துவங்குவதற்கான தொழில் நுட்பப் பயிற்சியை அளித்து அதன் மூலம் சுயவேலை வாய்ப்பை ஏற்படுத்துவதும், பொருளாதார முன்னேற்றம் அடைய வகை செய்வதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1985-86ஆம் ஆண்டில் 83 கிராமப் புற வினைஞர்களுக்கு விசைத்தறி, சர்க்கா, எம்பிராயடரி, ஸ்கிரீன் மேக்கிங், பிரிண்டிங் ஆகிய தொழில்களில் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி பெற்ற 83 நபர்களில் ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்தவர் 29 பேர் ஆவர். இத்திட்டத்திற்காக ரூ. 52,456.95 செலவிடப்பட்டுள்ளது.

பாரதப் பிரதமர் - படித்த வேலையில்லாத இளைஞர், யுவதிகளின் சுயவேலை வாய்ப்புத் திட்டம் 1983-84 முதல் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1985-86ஆம் ஆண்டில் 986 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, கடன் பெற வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது. 602 நபர்களுக்கு ரூ.105.02 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட பழங்குடி வகுப்பைச் சார்ந்த 13 நபர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர். ரூ.2.50 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

### சிறப்பு மத்திய உதவியுடன் நடைபெறும் திட்டம்

பெரியார் மாவட்டம் தாராபுரம் சரகத்தில் இந்து ஆதிதிராவிடர்களின் மேம்பாட்டிற்கென செம்மறியாடு அபிவிருத்தித் திட்டம் 1985-86-ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டது.

### திட்டத்தின் நோக்கம்

இத்திட்டத்திற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்து ஆதிதிராவிடர்களுக்குச் செம்மறியாடுகளை வளர்ப்பதன் மூலம் கூடுதலாக வருமானம் பெறுவதுதான் திட்டத்தின் தலையாய நோக்கமாகும். செம்மறியாடுகளை அறிவியல் முறையில் வளர்க்கவும் மற்றும் ஆடுகளின் தரத்தை அபிவிருத்தி அடையச் செய்வதும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

### திட்டத்தினால் பயனடைந்தோர்

கிராமங்களில் வட்டார வளர்ச்சி அலுவலர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்து ஆதிதிராவிடர்கள்தான் இத்திட்டத்தினால் பயனடைந்தோர்கள் ஆவர்.

மொத்தப் பயனடைந்தோர்களில் 50 விழுக்காடு, மகளிராக உள்ளனர்.

வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள இந்து ஆதிதிராவிடர்கள் தான் இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

### திட்டத்தின் பயன்

ஒவ்வொரு பயனடைவோர்க்கும் மாதந்தோறும் சராசரியாக ரூ. 250 கூடுதலாகக் கிடைக்கும் வருமானந்தான் இத்திட்டத்தில் ஏற்பட்ட பயன் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**தாழ்த்தப்பட்ட [illegible]**

1985-86ம் ஆண்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் ரூ.2[illegible]- 10 தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குக் கடனாக ரூ.2250, மானியமாக ரூ.250 நிதி உதவியாக சமமாகப் பகிர்ந்து அளித்து அவர்களை காலணிகள் தயாரிக்க ஊக்குவிப்பதின் மூலம் வறுமைக் கோட்டிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் ரூ.67,500 தோல் பதனிடுதலை குலத்தொழிலாகக் கொண்ட 15 நபர்களுக்கு ரூ. 3750 கடனாகவும் ரூ.750 மானியமாகவும் அளித்து அவர்களையும் வறுமைக்கோட்டிலிருந்து விடுவிக்க வழி செய்யப்பட்டது. மொத்தம் ரூ.92,500. வாரியக் கடன் நிதி உதவி மூலம் 1985-86ஆம் ஆண்டில் 25 தாழ்த்தப்பட்ட குடும்பங்களுக்கு அ[illegible]க்கப்பட்டு அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

### மானியம்

யூனிட்டின் 50 விழுக்காட்டுத் தொகை தாட்கோவின் மூலம் சிறப்பு மத்திய உதவித் திட்டத்தினின்றும், மீதி 50 விழுக்காட்டுத் தொகை நிதியுதவி செய்யும் அரசுடமையாக்கப்பட்ட வங்கிகளின் வழியாகவும் அளிக்கப்படுகிறது.

### காப்பீடு: (இன்சூரன்ஸ்)

இத்திட்டத்தில் வாங்கப்பெற்ற ஆடுகளுக்குக் காப்பீடு செய்யப்படுவதில் அரசும் திட்டத்தில் சேர்ந்த நபரும் சரிபாதியாகப் பங்கிட்டுக் கொள்கிறார்கள். அதிகப்படியாக ரூ. 65 வரை அரசு தனது பங்காகக் காப்பீட்டுத்தொகையை அளிக்கிறது.

இத்திட்டத்திற்கென வாங்கப்பெற்ற மருந்துகள் இத்திட்டத்தில் வாங்கப் பெற்ற செம்மறியாடுகளுக்கு முழுவதுமாகப் பயன்படுத்தப்பட்டன. குடற்புழு நீக்குதல் மற்றும் வரையறுக்கப்பட்ட கால அட்டவணைப்படி தடுப்பூசி போடுதல் போன்ற பணிகளும் செம்மறியாடுகளின் தேக ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் பணிகளில் உள்ளடங்கியது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.





# அண்ணா மாவட்டம்

அண்ணா மாவட்டத்தில் இருபது அம்சத் திட்டத்தின் கீழ் 1985-86இல் புறக்கடை கோழி வளர்ப்புத் திட்டம் செயல்பட்டது.

இத்திட்டத்தின் 115 யூனிட்டுகள் பயன் அடைவோர்க்கு வழங்கப்பட்டது. புறக்கடை கோழி வளர்ப்புத் திட்டத்தில் ஒவ்வொரு யூனிட்டுக்கும் 10 கோழிகள் மற்றும் 1 சேவல் ஆகியவைகள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு யூனிட்டுக்கும் இத்திட்டத்தில் ஒதுக்கிய தொகை ரூ. 210 ஒவ்வொரு யூனிட்டுக்கும் ரூ. 105 மான்யமாக வழங்கப்பட்டு மீதமுள்ள ரூ. 105ஐ சம்பந்தப்பட்டவரிடம் வசூலிக்கப்பட்டது. மேற்படி 115 நபர்களில் 64 நபர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள். 51 நபர்கள் இதர வகுப்பினரைச் சார்ந்தவர்கள்.

திரு.ப.ம. சுப்பிரமணியம், மாலைப்பட்டி (தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்) இவர் கருவி பொறியியல் பணியலகம், திண்டுக்கல் மூலம் பயிற்சி பெற்றுள்ளார்.

அவர் கனரா வங்கி நாகல் நகர் கிளையின் மூலம் ரூ. 41,000 கடன் பெற்று சுயமாகத் தொழில் ஆரம்பித்துள்ளார். அவர் சைக்கிள் ஸ்டாண்டு கேரியர் மற்றும் இரும்பு எஃகு மூலப்பொருள்களிலிருந்து பாகங்களைத் தயாரித்து கொடுக்கிறார். இப்பொருட்களுக்கு அருகாமையில் உள்ள மாவட்டங்களில் நல்ல சந்தை வாய்ப்பு உள்ளது. இராணிமங்கம்மாள்போக்குவரத்துக் கழகத்திற்குத் தேவையான வாசகர்களைத் தயாரித்து வழங்கி வருகிறார். இதன் மூலம் இவர் கூடுதலாக இரண்டு நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளார். இவரது மொத்த விற்பனை தோராயமாக ரூ.3,000. இவருக்கு மாத வருமானம் ரூ. 600. இந்த நிறுவனம் நல்ல முறையில் இயங்கி வருகிறது.



திரு எஸ்.எ.செபஸ்டியன் ஜெயக்குமார் (பி.ஏ.) 95 ஏ. ரயில்வே ஸ்டேசன் ரோடு, திண்டுக்கல் எஸ்.எ.எஸ். ஹோசரிஸ் என்னும் நிறுவனம் பாரதப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 25,000 கடன் உதவி பெற்று ஆரம்பித்துள்ளார். இவர் பனியன் மற்றும் துணியினால் ஆன ஆடைகளைத் தயாரித்து விற்பனை செய்கிறார். இந்நிறுவனத்தின் மூலம் இவர் கூடுதலான நபர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்துள்ளார். இதில் இவரது மாத வருமானம் ரூ. 600. இவ்விதமாக தொழில் நல்லபடியாக செயல்பட்டு வருகிறது.

கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் அண்ணா மாவட்டம் செயல்படுத்திய திட்டங்கள் 1985-86 ஒரு சிறு கண்ணோட்டம்:

கிராமப்புறங்களில் பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள முக்கியமாக ஆதிதிராவிடர்களின் குடியிருப்பு வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கத்தில் 1977ம் ஆண்டு கிராமிய வீட்டு வசதித் திட்டம் தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டது. இத்திட்டத்தில் முதல் மூன்று ஆண்டுகளுக்கு 1 லட்சம் வீடுகள் கட்ட குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு பின்பு இந்த குறியீடு 1985ம் ஆண்டுவரை இரண்டு லட்சம் வீடுகள் கட்டுவதற்கு திருத்தியமைக்கப்பட்டது.

தமிழ்நாடு முழுதும் வட்ட மற்றும் கோட்ட கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டது. அண்ணா மாவட்டத்தில் இம்மாதிரியான சங்கங்கள் கீழ்க்கண்ட இடங்களில் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

| சங்கத்தின் பெயர் | தலைமையிடம் |
| --- | --- |
| பழநி வட்ட கிராமிய கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் | பழனி |
| திண்டுக்கல் கோட்ட கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் | சின்னாளபட்டி |
| வேடசந்தூர் வட்ட கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் | வேடசந்தூர் |
| [illegible]காட்டை வட்ட [illegible]வு வீட்டுவசதிச் சங்கம் | நிலக்கோட்டை |

[illegible]வது ஐந்தாண்டு திட்ட ஆரம்ப காலத்[illegible]லிருந்து ஆண்டு ஒன்றுக்கு 5,000 வீடுகள் [illegible]ளாதாரத்தில் நலிவுற்ற ஆதிதிரா



விடரல்லாதவர்களுக்கு கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் கடன் வழங்க 1985-86ஆம் நிதியாண்டில் அண்ணா மாவட்டத்திற்கு 299 வீடுகள் கட்ட குறியீடு நிர்ணயிக்கப்பட்டது.

வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள ஆதி திராவிடரில்லாதவர்களுக்கு வீடுகள் கட்ட கடன் உதவி வழங்கி சிமிண்ட் முதலிய கட்டடம் கட்ட தேவையான பொருள்களையும் சங்கம் மூலமே வழங்கி இவர்கள் நல்ல முறையில் அமைத்த வீட்டில் குடியிருக்க செய்யப்பட்டது. ஆதிதிராவிடரல்லாத வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள நபர்களின் வீடில்லாத பிரச்சினையை தீர்த்து அவர்களது வாழ்க்கைக்கு வளமூட்டியது கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் ஆகும்.

எனவே, பொருளாதாரத்தில் நலிவுற்ற ஏழை மக்களுக்கு கிராமத்தில் வாழும் ஆதி திராவிடரல்லாதவர்களுக்கு வாழ்க்கையில் மூன்று கட்டமாகிய உண்ண உணவு உடுக்க



உடை இருக்க உறையுள் (வீடு) என்ற மூன்றில் மூன்றாவது கட்டத்தினை இந்த கிராமியக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் வழங்கி வருவது நினைவில் நிற்கக்கூடியது. வரும் ஆண்டுகளிலும் இத்திட்டத்தின் மூலம் இன்னும் அதிக மக்கள் பயனபெறத் திட்டம் தீட்டப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

**20 அம்சத் திட்டம் 16 (11) அண்ணா மாவட்டத்தில் கல்வி சாதனைகள்**

| | குறியீடு 1985-86 | மையங்களின் எண்ணிக்கை | பயனடைந்தோர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| கிராமிய செயல்முறை எழுத்தறிவுத் திட்டம் திண்டுக்கல் | 25968 | 300 | 9489 |
| மாநில வயதுவந்தோர்க் கல்வி திட்டம் | | 400 | 12400 |
| கல்லூரிகள் மற்றும் பல்கலைகழகம் | | 160 | 4841 |
| தொண்டு நிறுவனங்கள் | | 122 | 3660 |
| மொத்தம் | 24968 | 982 | 30390 |



## 20 அம்சத் திட்டச் சாதனைகள்

# வட ஆர்க்காடு மாவட்டம்

வட ஆர்க்காடு மாவட்டத்தில் வேளாண்மைத் தொழிலையே பெரும்பாலான மக்கள் நாடி உள்ளனர். இம்மாவட்டததில் 5 இலட்சம் வ்வசாயப் பெருமக்களில் 80 சதவீதம் சிறு, குறு விவசாயிகளே. நிரந்தர நீர்ப் பாசனமற்ற இம்மாவட்டம், பாசனக் கிணறுகளான சுமார் 2 இலட்சம் கிணறுகளையே வேளாண்மைத் தொழிலில் நம்பியிருக்கிறது.

தாவர எண்ணெய் உற்பத்தியில் இந்திய நாடு பற்றாக்குறை நாடு. தானிய உற்பத்தியில் பற்றாக்குறை நாடாக இருந்த நமது இந்தியா தற்போது உபரி நாடாக விளங்கி பங்களாதேஷ் போன்ற நாடுகளுக்கு நெல், கோதுமை போன்ற தானிய வகைகளை ஏற்றுமதி செய்யும் அளவுக்கு நாம் முன்னேறி உள்ளோம். இம்முன்னேற்றம் விவசாயிகளின் தீவிர முயற்சி என்பதை யாரும் மறுக்க இயலாது.

அந்த நிலையில் கடந்த 85-86ஆம் ஆண்டில் 20 அம்சத் திட்டத்தின்கீழ், முக்கியத்துவம் வாய்ந்த மணிலா கீழ்க்கண்டவாறு மூன்றுபருவங்களிலும்சிறப்பாகப் பயிரிடப்படுகிறது-

| | எக்டேர் |
|---|---|
| மானாவாரிப் பருவம் | 2,03,000 |
| இறவைப் பருவம் | 44,000 |
| கோடை சிறப்புப் பருவம் | 6,000 |
| மொத்தம் | 2,53,000 |

இம்மாவட்டத்தில் அமைந்துள்ள 33 ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் மணிலா விற்பனையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்றால் - மாவட்ட அளவில் உற்பத்தி பெருகியுள்ளது என்பதை உணரலாம். ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களும் விவசாயிகளது தேவைக்கேற்றவாறு பெருகி உதவி செய்து வருகின்றன.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் மானாவாரியில் கலப்புப் பயிராகத் துவரை, சோளம், பச்சைப் பயறு, மொச்சை, கொள்ளுப் பயறுகள் பயிரிட்டு வருகின்றனா. பயறு வகைகளில் மகசூலைப் பெருக்க, அதிக விளைச்சல் தரும் இரகங்கள் பயிரிடுதல், பயிர் எணணிக்கை பராமரித்தல், வரிசை விதைப்பு மேற்கொள்ளுதல், விதைகளுடன் நுண்ணுயிர் கலந்து விதைத்தல், சரியான விதையளவு மேற்கொள்ளுதல், இரசாயன உரம் இடுதல், பயிர்ப் பாதுகாப்பு, ஆகிய தொழில் நுட்பங்கள் பற்றி விவசாயிகளுக்கு விளக்கி பயறு உற்பத்தியினைப் பெருக்கிட ஊக்குவிக்கப்பட்டது.

கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம் மலைவாழ் பழங்குடியினருக்காக 1985-86-ஆம் ஆண்டில் ஜவ்வாது மலையில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி உள்ளது.

தமிழ்நாடு அரசு மலைவாழ் மக்கள் மேம்பாட்டுக்கென்றே பல்வேறு திட்டங்களைத் தமிழகமெங்கும் செயல்படுத்தி வருகின்றது. வடஆர்க்காடு மாவட்டத்தில் ஜவ்வாதுமலைத் தொடரில் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம் தமிழ்நாடு அரசின் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் 1977-78 ஆம்ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

வட ஆர்க்காடு மாவட்டத்தின் பகுதியில 7 தாலுக்காக்களை மட்டும் இக்கோட்டத்தினைச் சார்நத 6 வனச் சரகங்களின் கீழ் எல்லையாகக் கொண்டு வரப்பட்டு-வேலூர், ஆர்க்காடு, குடியாத்தம், வாலாசாப் பேட்டை, செய்யாறு மற்றும் அரக்கோணத்தின் சமூக வனவியல் வனச்சரகங்கள் செயல்பட்டு வருகின்றன.

1981-82 முதல் 1983-84வரை மூன்றாண்டுகளில் மட்டும் ரூபாய் 26,912.55ம் ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இது 1984-85ஆம் ஆண்டிலிருந்து உயிருள்ள செடிகள ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 2.50 வீதம் வழங்கப்படவுள்ளது. இக்கோட்டத்தில் இதுவரை 10,229 குடும்பங்கட்கு 26,50,121 செடிகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் குறைந்த விலையில், பொதுமக்களுக்குப் பழக் கன்றுகள் கொய்யா, நெல்லி, புளி, நாவல், சீதாப்புளி போன்ற செடிகளும் மற்றும் புங்கன், நீர்மத்தி, ஆச்சான், செம்மரம், தைலக்கன்றுகள், நிழல் தரும் மற்றும் அலங்காரப் பூக்களை வழங்கும் மயில்கொன்றை மரக்கன்றுகளும் விற்கப்படுகின்றன. இதுவரை 5 ஆண்டுகளில் 53,05,588 செடிகள் விற்கப்பட்டுள்ளன.



இக்கோட்டம் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட 63 தோட்டங்கள் பத்தாண்டுகட்குப் பின்னர் நன்கு வளர்ந்த, முதிர்ச்சியடைந்த நிலையில் பொது ஏலத்தில் விடப்

பட்டு, இதுவரை ரூ.24,36,226.90 வனத்துறைக்கு வருமானம் தேடித்தந்துள்ளது. சுமார் 8,906 மெட்ரிக் டன் விறகுகள் எரிபொருளாக இக்கோட்டத்திலிருந்து கிடைத்துள்ளது.

இக்கோட்டத்தில் இதுவரை 1981-82லிருந்து 1985-86 வரையிலான ஐந்தாண்டுக் காலத்தில் 10,115.73எக்டேர் பரப்பில் அடர் நடவு செடிகளும் 411.95 கி.மீ. தூரத்திற்கு சாலையோரம், கால்வாய் ஆற்றுப்படுகை மற்றும் இருப்புப் பாதையோரங்களிலும் அழகு மற்றும் நிழல்தரும் செடிகளும் நடப்பட்டுள்ளன.

பொருளாதார நிலையில் நலிவுற்ற பிரிவினருக்கு வீடுகள் கட்டித்தருவதில் மறுவாழ்வுத் துறையும் பெரும் பங்கு வகிக்கிறது.

இதுவரை 40,165 குடும்பங்களுக்கு வீட்டுக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

பர்மாவிலிருந்து இதுவரை 1,44,305 நபர்கள் தாயகம் திரும்பியுள்ளனர். இவர்களில் 19,525 குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்ளக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

வியட்நாமிலிருந்து இதுவரை 501 குடும்பங்களைச் சார்ந்த 2055 நபர்கள் தாயகம் திரும்பியுள்ளனர். இவற்றில் 25 குடும்பங்கள் வீட்டுக் கடன் பெற்றுள்ளனர்.

இவ்வாறு தாயகம் திரும்பியோருக்கு வழங்கப்படும் வீட்டுக் கடன்களைத் தவிர இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு இந்தியா திரும்பியுள்ள அகதிகளைக் குடியமர்த்துவதற்காக இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மண்டபம் முகாமில் 1400 வீடுகளும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள கொட்டப்பட்டு முகாமில் 100 வீடுகளும், தூத்துக்குடியில் 100 வீடுகளும் கட்டப்பட்டு முடியும் தருவாயிலுள்ளன.

**சிறப்புக் கால்நடைப் பராமரிப்புத் திட்டம் (ஆடு வளர்ப்பு)**

இத்திட்டம் 1976-77 முதல் செயலாக்கப்பட்டு வருகிறது.



மாவட்டக் காசநோய்ச் சங்கத்தின் மூலம், காசநோய்க் கண்டுபிடிப்பு மற்றும் தடுப்பு முறைகளை மாவட்ட காசநோய் இயக்கத்தின் கீழ் சிறந்த முறையில் விளம்பரப்படுத்தி சாதனை புரிந்ததற்காகப் பாராட்டி, தமிழ்நாடு காசநோய்த் தடுப்புச் சங்கத்தினரால், டாக்டர் ராஜா சர் முத்தையா செட்டியார் நூற்றாண்டு நினைவு சுழற் கேடயமும், தகுதிச் சான்றிதழும் வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு அளிக்கப்பட்டது.

34 காசநோய் வில்லை இயக்கத்தின் கீழ், அதிக மதிப்புள்ள காசநோய் வில்லைகளை ஆர்வத்துடன் உற்சாகமாக விற்பனை செய்ததைப் பாராட்டி, தமிழ்நாடு காசநோய்த் தடுப்புச் சங்கத்தினால் சுழற்கோப்பையும், தகுதிச் சான்றிதழும் வடஆர்க்காடு மாவட்டத்திற்கு வழங்கப்பட்டன.

ரூ. 4,500 மொத்த செலவில் 20 பெண் ஆடுகளும், 1 கிடாவும் அடங்கிய ஆட்டு அலகுகள் ஏற்படுத்துவதற்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது. சிறுவிவசாயிகளுக்கு ரூ. 1,125 மானியமாகவும், குறுநில விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு ரூ. ரூ. 1,500 மானியமாகவும் வழங்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் 1985-86ல் 400 குறியீடு அலகுகளில், 401 அலகுகள் பிரிவுகள் ஏற்படுத்தி, வெற்றிகரமாக இலக்கினை அடைந்துள்ளது.

1985-86ஆம் ஆண்டில் 170 அலகுகள் கொல்லைப்புறக் கோழி வளர்ப்பு பிரிவுகள் நிர்ணயம் செய்ததில், 182 அலகுகள் மானிய விலையில் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பயனடைந்தோர் ஒவ்வொருவருக்கும் ரூ. 105 வீதம் பிரிவு ஒன்று வீதம் ரூ. 17,802 மானியமாக அளிக்கப்பட்டுள்ளன.

1985-86ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் ஏலகிரி மற்றும் ஜவ்வாது மலைகளில் வாழும் பழங்குடியினரின் நல்வாழ்விற்குக் கீழ்க்கண்ட கால்நடைகள் 50 சத வீத மானியமாக வழங்கப்பட்டுள்ளன:

கறவை மாடுகள் 40 அலகுகள், ஆடு வளர்ப்பு பிரிவு 50 அலகுகள், எருதுகள் 40 அலகுகள் ஆக மொத்தம் 120.

இவ்வாண்டில் மானியமாக ரூ. 1,77,500 மேற்கூறிய பிரிவுகள் பழங்குடியினர்கள் ஏற்படுத்தியதற்காக வழங்கப்பட்டுள்ளன.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான ஊக்குநர்களைக் கொண்டு கிராமங்களில் 20 அம்சத் திட்டத்தின் கீழ் வயது வந்தோர் கல்வித் திட்டமும், பள்ளிசாராக் கல்வித் திட்டமும், சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இத்திட்டங்கள் மூலம் 1971ல் கற்றோர் 39 விழுக்காட்டிலிருந்து 1981ல் 46ஆக உயர்ந்ததால், ஐக்கிய நாட்டுச் சபையின் கல்வி, அறிவியல், பண்பாட்டுக் குழு தமிழகத்தைப் பாராட்டி, சான்றிதழும் "நடேஸ்டா ருப்ஸ்கயா" பரிசும் வழங்கிக் கௌரவித்துள்ளது. மாவட்ட அளவில் இத்திட்டங்களின் குழுத் தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவர் சிறப்பாகச் செயல்புரிந்து வருகிறார். 1976ஆம் ஆண்டு முதல் இன்று வரை 21,776 ஆண்களும், 67,182 பெண்களும் ஆக மொத்தம் 88,958 பேர் பயனடைந்துள்ளனர். 1985-86ஆம் ஆண்டில் 15-35 வயது பிரிவினரில் 9,162 ஆண்களும் 26,707 பெண்களும் ஆக மொத்தம் 36,319 பேர் எழுத்தறிவும், எண்ணறிவும் பெற்று வருகின்றனர். இவர்களில் பெரும்பாலோர் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மற்றும் சமுதாயத்தில் தாழ்ந்த நிலையில் உள்ள மக்கள் கல்விச் செல்வத்தை முதன் முதலாகத் தமிழக அரசு உதவி மூலம் பெறுகின்றனர்.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் நிறுவப்பட்ட மொத்த புதிய தொழில்கள் 803

சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட இனங்கள் 2559 : ரூ. 634.98 என்கள் இலட்சங்கள்.



# தஞ்சாவூர் மாவட்டம்



ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் முன்னேற்றத் திட்டத்தின் கீழ் 1985-86ஆம் ஆண்டுக்கு நிர்ணயித்த இலக்கான 314 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு மேலாக மொத்தம் 387 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்குச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர் மற்றும் மதம் மாறிய ஆதிதிராவிடர் கிறித்துவர்கட்கு உழவு மாடுகள் வாங்க ரூ. 600க்கு மேற்படாமல் 3ல் 1 பாகம் மான்யமாகவும் மீதி 3ல் 2 பாகம் கடனாகவும் வங்கிகள் மூலம் வழங்கப்பட்டுள்ளன. இதற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 56 குடும்பங்களுக்கும் உதவி வழங்கப்பட்டு விட்டது.

பாசனக்கிணறு தோண்ட 3ல் 1 பாகம் மான்யமாகவும் 3ல் 2 பாகம் நிலவள வங்கி மற்றும் இதர முன்னணி வங்கி மூலம் கடனாகவும் ஆதிதிராவிடர் மற்றும் மதம்மாறிய ஆதிதிராவிடர் கிருத்துவக் குடுமபங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இதற்கென நிர்ணயிக்கப்பட்ட குடும்பங்கள் 8. குடும்பம் ஒன்றுக்கு ரூ. 6000 வரை மான்யம் வழங்க இத்திட்டம் வகை செய்கிறது.

இவ்வகுப்பைச் சேர்ந்த தொழில் நுட்பக்கலைஞர்களுக்கு தச்சுப்பட்டறை, கொல்லுப்பட்டறை, தையல் இயந்திரம் மற்றும் 18 இன தொழிற்கருவிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 206 குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன. இதற்கென நிர்ணயிக்கப்பட்ட குடும்பங்கள் 200.

நகரப் பகுதிகளில் வாழும் இந்து ஆதிதிராவிடர்களுக்கு தொழில் செய்ய கடன் வழங்கும் திட்டம் 1984-85 முதல் தாட்கோ மூலம் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் 50 குடும்பங்களுக்கு சைக்கிள்கடை, சிற்றுண்டிக்கடை, பலசரக்கு கடை போன்ற சிறுதொழில்களுக்குக் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் இலக்கை மீறி இதுவரை 117 குடும்பங்களுக்கு கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

1986-87ஆம் ஆண்டில் பிரச்சனையுள்ள 235 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டு அவ்வேலை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இவ்வாரியம் 235 குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்கும் வேலையை முழுவதுமாக நிறைவேற்றி உள்ளது. ரூ. 193 இலட்சம் செலவிலான இத்திட்டத்தால் 1 இலட்சத்து 63 ஆயிரம் பேர் பயன் பெறுகின்றனர்.

சமூகக் காடுகள் திட்டத்தின் கீழ் 1985-86ல் தஞ்சை சமூகக் காடுகள் கோட்டத்தால் 16,35,967 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. மரவளர்ப்பு ஊக்குவிப்பு திட்டத்தின்கீழ் பொது மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்ட 3,92,403 மரக்கன்றுகள் மற்றும் மரவளர்ப்பு விஸ்தரிப்பு திட்டம், மனமகிழ்காடுகள் திட்டம் ஆகியவற்றில் விற்பனை செய்யபபட்ட 7,08,072 மரக்கன்றுகளை உள்ளடக்கியதாகும் இவை. ஏறத்தாழ 4,969 குடும்பங்கள் இதன் மூலம் பயனடைந்துள்ளன.

படுகை நிலம், கண்மாய்கள் ஆகியவற்றில் அடர் நடவு மூலம் 252 ஹெக்டேர்களிலும், சாலையோரம், ஆறுகால்வாய் ஓரம் மற்றும் புகைவண்டித்தொடர் ஓரம் ஆகியவற்றில் 46 கி.மீட்டர்களிலும் மரக்கன்றுகள் நடப்பட்



டுள்ளன. 1985 காவிரிக்கரை கால்வாய்த் தோட்டம், பாபநாசம் ஒன்றியத்தில் கபிஸ்தலம் முதல் அண்டகுடி வரை உள்ள 5 கி.மீ. தோட்டம் இவை சமூகக்காடுகள் திட்டத்தின் கீழ் எடுத்துக்காட்டாய் விளங்கும் சிறந்த தோட்டங்களாகும். 28.7.85 அன்று நடப்பட்ட மரக்கன்றுகள் சுமார் 7 மாதங்களில் அதிகப்பட்சமாக 4.6 மீட்டர் உயரம் வளர்ந்துள்ளன.

இம் மாவட்டத்தில் 9 கோட்ட மற்றும் வட்ட அளவு கிராம கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் பொருளாதாரத்தில் பின்தங்கிய ஏழைகளின் தேவையைப் பூர்த்தி செயயும் வகையில் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் கிராமப்புறங்களில் வசிக்கும் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள் ரூ.6,000 மதிப்பீட்டில் குடியிருப்பு வீடுகள் கட்டிக் கொள்ள கடனாக ரூ. 4,500 நிதி உதவி வழங்குகிறது.

இக்கடனுதவி வீடுகளின் கட்டுமானப்பணியின் முன்னேற்றத்தினை அனுசரித்து ரூ. 1,000, ரூ. 1,500, ரூ. 1,000, ரூ. 1,000 என்ற முறையில் நான்கு தவணைகளாக வழங்கப்படுகின்றன. கட்டப்படும் வீடுகளின் பூச்சுக்கு கட்டுப்பாடு விலையில் சிமெண்ட்டும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது. வழங்கப்படும் இக்கடன் தொகை, உறுப்பினரின் வயது மற்றும் கடனை திருப்பி செலுத்தும் சக்தி ஆகியவற்றின் அடிப்படையில் 10 முதல் 20 ஆண்டுக்காலத்தில்திருப்பிசெலுத்தும் வகையில் வழங்கப்படுகிறது. 1985-86ஆம் ஆண்டுக்கு 3,758 வீடுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இக்குறியீடு முழுமையாக எய்தப்பட்டது.

மாநில வயது வந்தோர் கல்வித்திட்டம் 1980 முதல் மூன்று ஆண்டுகளில் பூதலூர், குத்தாலம், கீவளூர், கோட்டூர், திருத்துறை பூண்டி ஒன்றியங்களிலும் 1983 முதல் மூன்று ஆண்டுகளில் மயிலாடுதுறை, திருவாரூர், மன்னார் குடி, நீடாமங்கலம், தலைஞாயிறு ஒன்றியங்களிலும் செயல்படுத்தப்பட்டது. திருப்பனந்தாள், நன்னிலம், மதுக்கூர், வேதாரண்யம், நாகப்பட்டினம், ஆகிய பகுதிகளில் 54 இடங்களில் இத்திட்டம் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியங்களும் இத்திட்டத்தால் பயன்பெற்றுள்ளன.

கற்போருக்கு எழுத்தறிவு, எண்ணறிவு, விழிப்புணர்ச்சி, செயல் மேம்பாட்டுத் திறன் போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மத்திய அரசின் முழுஉதவியுடன் இத்திட்டம் தஞ்சை மாவட்டத்தின் அடுத்தடுத்துள்ள 3 ஒன்றியங்களில் மொத்தம் 300 மையங்களில் செயல்படுகிறது. ஆண்டுக்கு 200 நாட்களும் நாள்தோறும் 2 மணி நேரம் விதம் செயல்படும் இத்திட்டத்தால் ஒரத்தநாடு, திருவோணம், பட்டுக்கோட்டை, திருவையாறு, தஞ்சாவூர், அம்மாபேட்டை, பாபநாசம், கும்பகோணம், திருவிடைமருதூர், வலங்கைமான் ஆகிய ஒன்றியங்கள் பயன் பெற்றுள்ளன.

தேசிய கரிம எரிவாயுத்திட்டத்தின் கீழ் தஞ்சை மாவட்டத்திற்கு, 1985-86ஆம் ஆண்டிற்கு இலக்கு 1,230 என நிர்ணயிக்கப்பட்டது. நிர்ணயிக்கப்பட்ட 1,230 கலன்கள் முழுவதும் அமைக்கப்பட்டு, இலக்கு எய்தப்பட்டுள்ளது. கலன்கள் பரவலாக அமைப்பதைத் தவிர்த்து, தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் அதிக அளவில் கலன்கள் அமைக்கப்படுகிறது.

பாபநாசம் ஊராட்சி ஒன்றியம், கருப்பூர் கிராமத்தில் திரு கிருஷ்ணமூப்பனார் அவர்களின் இல்லத்தில் 6 க.மீ. கதர் மற்றும் கிராமத் தொழில் வாரிய வடிவமைப்பு கலன் அமைக்கப்பட்டுள்ளது. குடும்பங்களிலுள்ள 12 நபர்களுக்கும் சமைக்கப் பயன்படுவதோடல்லாமல், விளக்கு எரிக்கவும் இக்கலன்களிலிருந்து வரும் எரிவாயுவைப் பயன்படுத்துகிறார்கள்.





# நீலகிரி மாவட்டம்



ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம் மாவட்டத்தில் கடந்த 1985-86ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 1830 குடும்பங்கள் பயன் அடைந்துள்ளார்கள். இதற்காகக் கொடுக்கப்பட்ட மானியம் ரூ. 21.40 இலட்சம் ஆகும். இதன் அடிப்படையில் 851 நபர்களுக்குக் கறவை மாடுகளும் 99 நபர்களுக்கு வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளும் 40 நபர்களுக்கு உழவு மாடுகள் மற்றும் வண்டிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இவை தவிர 338 கைவினைஞர்களுக்குத் தொழில் தொடங்க கடனுதவியும் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்ற இளைஞர்களுக்குத் தொழில் துவங்க உதவியும். 138 இளைஞர்களுக்குப் பல்வேறு பிரிவுகளில் தொழில்நுட்பக் கல்லூரியில் பயிற்யும் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் நீலகிரியில் தேயிலைத் தொழில் முக்கிய தொழிலாய் உள்ளதால் புதிதாகத் தேயிலை பயிரிடும் 29 நபர்களுக்குக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

1980-81 மற்றும் 1981-82 ஆண்டுகளில் பயன் அடைந்த 333 பேர்களுக்கு மீண்டும் கடன் உதவி அளிக்கப்பட்டுள்ளது. பயன் அடைந்தவர்களில் 1,005 பேர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியைச் சார்ந்தோராகும். மொத்தத்தில் பயனடைந்த பெண்கள் 411 பேர். நடப்பு ஆண்டாகிய 1986-87-ல் 3,053 நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ. 40.16 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1985-86-ஆம் ஆண்டில் அரசு ரூ. 31.40 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. ஆரம்ப இருப்புடன் சேர்த்து இதில் ரூ. 59.66 இலட்சம் சமூகக் காடுகள் வளர்ப்பதற்கும், சாலைகள் போடுதல், தடுப்புச் சுவர்கள் கட்டுதல் மற்றும் இதர வேலைகளுக்கும், ஆதிதிராவடர்களுக்கு வீடு கட்டுவதற்கும், சத்துணவு சமையல்கூடம், மற்றும் குழந்தைகள் காப்பகம் கட்டுவதற்கும் செலவிடப்பட்டுள்ளது. இதற்கு 2.75 இலட்சம் மனித சக்தி நாட்கள் உற்பத்தி செய்யப்



பட்டன. இதில் 43,000 ஆதி திராவிடர்கள் வேலை வாய்ப்புப் பெற்றனர். இதன் மூலமாகப் பயனடைந்தவர்கள் 1.09 இலட்சம் நபர்களாகும். நடப்பு ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு அரசு ரூ. 30.46 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

கிராமப்புற நிலமற்றோர்வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கடந்த 1985-86-ஆம் ஆண்டில், 145 தொகுப்பு வீடுகள் கட்டவும், 50 ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் வாழுமிடங்களில் கழிவறைகள் கட்டவும், அரசு ஒப்புதல் அளித்தது. நடப்பு ஆண்டில் 286 வீடுகள் கட்டவும், 100 சுகாதாரக் கழிவறைகள் கட்டவும் ரூ. 32.39 இலட்சம் செலவிடத் தீர்மானிக்கப்பட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.



நீலகிரி மாவட்டத்தில் எதிர்கால நலனுக்காக உள்ள திட்டங்களில் சிறப்பானது சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டமாகும். இம்மலைப்பகுதியில் மழைவளம் பெருகி, மக்களின் வாழ்வு, எதிர்வரும் காலங்களில் சிறப்புடன் அமைவதற்காக இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1985-86-ஆம் ஆண்டில் 9,70,000 மரங்கள் நடுவதற்குத் திட்டமிடப்பட்டு 31,52,278 மரங்கள் நடப்பட்டு 325 சதவிகிதம் சாதனை அடைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இதன் அடிப்படையில், மலைத்தோட்டங்கள் 91 எக்டேர் நிலத்திலும், சாலையோரத் தோட்டங்கள் 10 கி. மீட்டர் அளவிலும் இருப்புப் பாதையோரத் தோட்டம் 5 கி. மீட்டர் அளவிலும் அமைக்கப்பட்டுள்ளன. 1986-87-ஆம் ஆண்டு, 10 எக்டேர் நிலத்தில் மலைத்தோட்டங்கள் அமைப்பதற்கும், 5 கி. மீட்டர் அளவிற்கு இருப்புப்பாதையோரத் தோட்டம் அமைக்கவும், இலவச நாற்றுகள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிராமக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் 10 குக்கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு 35.90 இலட்சத்திற்குப் பணிகள் நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மலைவாழ் மக்கள் மற்றும் தாழ்த்தப்பட்டோருக்கு உதவி அளிக்கும் திட்டத்தின் கீழ் தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைவாழ் மக்களுக்காக 1985-86ஆம் ஆண்டில் விவசாயக் கருவிகள், தையல் இயந்திரங்கள், கருமான்கருவிகள், உழவு மாடுகள், முர்ரா மாடுகள், சிறுதொழில் கடன் ஆகியவை 1834 நபர்களுக்கு ரூ. 2,24,650 செலவில் வழங்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் இத்திட்டங்களுக்கு ரூ. 8,90,750 செலவிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் 1985-86-ஆம் ஆண்டில் 100 இடங்களில் சாண எரிவாயுத் தொட்டிகள் அமைக்கப்பட்டன. நடப்பு ஆண்டில்மேலும் 100 தொட்டிகள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.



1985-86-ஆம் ஆண்டில் பள்ளிகளில் 6 வயது முதல் 14 வயது வரையுள்ள மாணவர்களைச் சேர்க்கும் திட்டத்தில் 3,200 என்ற இலக்கிற்கு 4,950 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். மேலும் வயது வந்தோர் கல்வித் திட்டத்தின்கீழ் 13,200 என்ற இலக்கிற்கு 14,158 நபர்கள் பயற்றுவிக்கப்பட்டுள்ளனர். நடப்பு ஆண்டில் 6 முதல் 14 வயது மாணவர்கள் 3,200 என்ற இலக்கிற்கு 3,252 பேர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள். வயது வந்தோர் கல்வித் திட்டத்தின்கீழ் இதுவரை 11,600 பேர்கள் பயன் அடைந்துள்ளனர்.

1985-86-ஆண்டில் குடும்ப நலத் திட்டத்தின்கீழ் 6,561 நபர்களுக்கு குடும்ப நலச் சிகிச்சை அளிக்கப்பட்டது. நடப்பு ஆண்டிலும் குறியிடப்பட்ட இலக்கான 7,563-ஐ அடைய தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1985-86-ஆம் ஆண்டில் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், அகதிகள், பிற்பட்டோர், முன்னாள் படைவீரர் உட்பட 1,709 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. நடப்பு ஆண்டில் இதுவரை 913 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.







# சென்னை மாவட்டம்

சென்னை மாவட்டத்தில் 20 அம்சத் திட்டப் பணிகளில் எல்லாவற்றிலும் 1985-86ஆம் ஆண்டு குறியீட்டைவிடச் சாதனை கூடுதலாக அடையப்பெற்றுள்ளது.

குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதிலும் அம்சம் 7 (I) நலிந்த பிரிவினருக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதிலும் அம்சம் 10 (II) முறையே மூன்று மடங்கு (307.85%), இரண்டு மடங்கு (216.47%) சாதனை அமைந்துள்ளது.

அதேபோல் 1985-86ஆம் ஆண்டில் குடும்பநலத் திட்டத்தின் கீழ் அறுவைச் சிகிச்சைக்கான குறியீடு 46,300 என்று நிர்ணயிக்கப்பட்டது. பொதுமக்களுடைய முழு ஒத்துழைப்புடன் சிறப்பான முறையிலே இந்தக் குறியீடு எட்டப்பட்டு, 54,321 குடும்பநல அறுவைச் சிகிச்சை சென்னை நகரத்தில் செய்யப்பட்டுள்ளது.

6 வயதிலிருந்து 14 வயதுவரை உள்ள வயதுக் குழந்தைகள் பள்ளியிலே சேர்ப்பதற்கான குறியீடும் அம்சம் 16 (i) முழுவதுமாக அடையப்பட்டுள்ளது. அதேபோல் முதியோர் கல்விக்கான குறியீடு, 21,750ல் சாதனை 23,174 அடையப்பட்டுள்ளது.

சிறு தொழில்கள் அமைப்பதற்கான குறியீடு 700 ஆக சென்னைக்குக் கொடுக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ்1985-86ஆம் ஆண்டில் 1,130 சிறு தொழில்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு 161.42% சாதனை அடைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

மொத்தத்தில் சென்னை மாவட்டம் 20 அம்சத் திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டங்களில், கீழ்க்கண்ட சாதனை புரிந்துள்ளது:

**1985-86ஆம் ஆண்டுக்கான 20 அம்சத் திட்டச் சாதனையின் விவரம்**

| அம்சத் திட்ட எண். | | விவரம் | 1985-86-ஆம் ஆண்டுக் குறியீடு | 1985-86-ஆம் ஆண்டுச் சாதனை |
|---|---|---|---|---|
| 7 | (i) | தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவி | 420 | 1,293 |
| 10 | (i) | குடிசைவாழ் மக்களுக்கு உதவி | 7,080 | 7,080 |
| | (ii) | நலிந்தோருக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டம் | 3,815 | 8,338 |
| 13 | | குடும்பநல அறுவைச் சிகிச்சை | 46,300 | 54,321 |
| 16 | (i) | 6 முதல் 14 வயது வரை குழந்தைகள் பள்ளியில் சேர்த்தல் | 7,300 | 7,807 |
| | (ii) | வயது வந்தோர் கல்வி | 21,750 | 23,174 |
| 18 | (i) | சிறுதொழில்கள் அமைத்தல் | 700 | 1,130 |



# லைப்பாய் இருக்குமிடம்... அதுவே ஆரோக்கியம் இருக்குமிடம்!




போராடிப் பொழுதெல்லாம்
உழைத்தபின்...ஜோராக ஆடிய பின்,
நீராடுவீர் லைப்பாய் கொண்டு...குளித்த
உடம்பிலே குலவக் காண்பீர் சுத்தமே
உருவான ஆரோக்கிய மலர்ச்சி!

**லைப்பாய்**

**அழுக்குடனே கிருமிகளை அறவே கழுவிக் களைகிறது**

LINTAS L 95 2317 TM.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு


# மேற்கு மாம்பலத்தில் 14 இலட்சம் செலவில் குடிநீர்

# கல்வி வளர்ச்சியில் பொதுமக்கள்

கல்வி வளர்ச்சியில் அன்று முதல் இன்றுவரை காமராஜர் மாவட்டம் தனக்கென ஒரு தன்னிகரில்லா இடத்தைப் பெற்று வருகிறது. ஒருங்கிணைந்த இராமநாதபுரத்தில் சேர்ந்து இருந்தபோதும் விருதுநகர் சிவகாசி, சாத்தூர், இராசபாளையம், பகுதிகள் கல்வி வளர்ச்சியில் மேலோங்கியே இருந்தன.

ஒரு நாட்டின் கல்வி வளர்ச்சியில் அரசின் பங்கு எவ்வளவுதான் இருந்தாலும், பொதுமக்களும் இணைந்து ஆதரவு காட்டி செயலபட முன்வரும் போது அப்போது கிடைக்கும் வெற்றிக்கும், முன்னேற்றத்திற்கும் ஈடுஇணை இல்லை! இதனை சிவகாசியில் 8-9-86 அன்று நடைபெற்ற பள்ளிச் சீரமைப்பு மாநாடு தெளிவாக எடுத்துக் கூறியது!...

இந்தப் புதிய மாவட்டத்தில் 570 துவக்கப் பள்ளிகளும், 111 நடுநிலைப் பள்ளிகளும், 36 உயர்நிலைப்பள்ளிகளும், 32 மேல்நிலைப்பள்ளிகளும், ஒரு ஆசிரியர் பயிற்சி நிறுவனமும் உள்ளன. இவற்றில் மொத்தம் 5,420 ஆசிரியப் பெருமக்கள் பணிபுரிகிறார்கள். இம்மாவட்டத்தில் உள்ள 712 சத்துணவு மையங்கள் மூலம் 1,31,005 மாணவர்கள் சத்துணவு பெறுகிறார்கள். இவர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்களும், சீருடைகளும் இலவசமாக விநியோகம் செய்யப்படுகின்றன. இவைகள் எல்லாம் தமிழக அரசின் சீரிய திட்டங்கள் மூலம் அரசின் நிதி உதவியோடு செயல்படுத்தப்படுபவை!

ஆனால் இதற்கு மாறாக விருதுநகர் கல்வி மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களும், பொதுமக்களும் சேர்ந்து அறச் சிந்தனையாளர்களை அணுகி, கிராமப் புறங்களில் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்து, அதன் மூலம் கல்வித்தரம் உயரவும், ரூ. 44 இலட்சம் பெறுமானமுள்ள பொருட்களைத்திரட்டி, பல்வேறு பள்ளிகளின் வளர்ச்சிக்கும் தந்துள்ளனர்.

இராஜபாளையம் புறநகர் ரூ. 10,42,875-க்கும், இராஜபாளையம் நகாப்புறம் ரூ. 11,14,657-க்கும், திருவில்லிபுத்தூர் ரூ. 2,32,810-க்கும் விருதுநகர் ரூ. 2,09,080-க்கும், வெம்பக்கோட்டை ரூ. 2,15,655-க்கும், வத்திராயிருப்பு ரூ. 3,09,541-க்கும், சிவகாசி ரூ. 3,93,528-க்கும் ஆக மொத்தம் சேர்த்து ரூ. 44,18,146-க்கு கட்டடங்களாகவும், பொருள்களாகவும் சேர்த்துத் தந்துள்ளனர். நன்கொடையாளர்கள் அனைவரும் இத்தொகையை புதிய கட்டடங்களாகவும், கடிகாரங்கள் நூலகப் புத்தகங்கள், பாடபோதனைக் கருவிகள், தளவாடச்சாமான்கள் கழிப்பறைக் கட்டடங்கள், சத்துணவுக்கூடங்கள் கட்டுதல் போன்றவை மூலம் தந்துள்ளனர்.

வளர்ந்து வரும் சமுதாயத்தில் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அரசோடு இணைந்து பொதுமக்களும் உதவ முன்வந்திருப்பதைப் பார்க்கும்போது தமிழகத்தில் கல்வியில் மறுமலர்ச்சி இந்தச் சரித்திர நாயகனின் ஆட்சிக்காலத்திலேயே நிகழும் என்று கூறினால் மிகையில்லை!


**ரெ. இராவணன்,**
உதவி மக்கள்-தொடர்பு அலுவலர்,
[illegible] மாவட்டம்.


**மே**ற்கு மாம்பலத்தில் குடிநீர் அமைப்புகளை மேம்படுத்த சென்னைக் குடிநீர் வாரியம் பல பணிகளை மேற்கொண்டுள்ளது.

இவற்றில் ஒன்றாக லேக்வியூ சாலைக்கு வடக்கு பகுதியில் 115, 117, 118 கோட்டங்களில் குடிநீர் அபிவிருத்தி செய்வதற்கான திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. மேற்கு மாம்பலம் பகுதக்கு தற்சமயம் யுனைடெட் இந்தியா காலனி, தவிர ரயில்வே பார்டர் சாலை ஆகிய இரு வழிகள் மூலம் போடப்பட்டுள்ள இரு துணை பிரதான குழாய்கள் மூலமாகவும் மற்றும் விநியோக குழாய்கள் மூலமாகவும் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. யுனைடெட் இந்தியா காலனி வழியாக வரும் குழாய்கள் மூலம் விநியோகிக்கப்படும் பகுதிகளுக்கும், பிருந்தாவனம் தெரு வரைக்கும் குடிநீர் விநியோகம் திருப்திகர்மாக இருப்பதாகத் தெரியவருகிறது.

பிருந்தாவனம் தெருவிற்கு தெற்கே உள்ள சுப்பிரமணியம் தெரு, ஜுபிலி ரோடு பகுதியிலும், ஆரிய கௌடா தெருவின் பக்கங்களிலும் குடிநீர் விநியோகம் திருப்திகரமாக இல்லை என்று மனுக்கள் சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு வந்துள்ளன. இந்த குறைபாடுகளை நிவர்த்திப்பதற்காக ஒரு புதிய 250 மி.மீ. விட்ட அளவுள்ள துணை பிரதான குழாய் அஜீஸ் நகர் இரண்டாவது தெரு, இரயில்வே பார்டர் ரோடு சந்திப்பிலிருந்து ஆரிகௌடர் தெரு, ஜுபிலி தெரு சந்திப்பில் தெற்கு முனை வரை 1,610 மீட்டர் நீளத்திற்கு போடப்பட உள்ளது. இதன் தொடர்பாக 169 மி.மீ. அளவுள்ள பி.வி.சி. குழாய்கள் 210 மீட்டர் நிளத்திற்கும் போடப்படும். இந்த குழாய்கள் போடுவதன் மூலம் நீரழுத்தம் அதிகரிப்பதால் அதிகமான அளவு குடிநீர் கைப்பம்புகள் மூலம் பெறவும் முடியும்.

இந்த புதிய குழாய்கள் அஜீஸ் நகர் 2வது தெரு, விஸ்வநாதபுரம் மெயின்ரோடு, எல்.ஜி.சி. மெயின் ரோடு, தம்பையா சாலை, உமாபதி தெரு, ஆரிகௌடர் தெரு, சீனிவாசா தெரு வழியாக போடப்படும்.

இந்த மூன்று கோட்டங்களில் மக்கட்தொகை சுமார் 16,000 ஆகும். இத்திட்டத்தினை நிறைவேற்றுவதன் மூலம் கீழ்க்கண்ட தெருக்களில் குடிநீர் வசதி அபிவிருத்தியாகும்.

**கோட்டம் 115**

1. போஸ்டல் காலனி 1 முதல் 4 தெருக்கள் 2. மகாதேவர் தெரு, 3. பாலகிருஷ்ணா தெரு, 4. ஆதிகேசவ தெரு, 5. சீனிவாசதெரு 6. சுப்பிரமணிய தெரு, 7. ராஜகோபால் தெரு, 8. பாரதி தெரு. 9. விநாயகம் தெரு 10. மூர்த்தி தெரு விரிவு

**கோட்டம் 117**

1. ஆரிகௌடர் தெரு

**கோட்டம் 118**

1. காசி விஸ்வநாதர் காலனி 1 முதல் 6வது தெரு வரை.
2. வேலு தெரு.
3. பாலகிருஷ்ண தெரு.




# மலர்ந்தது சிதம்பரனார் மாவட்டம்



முத்துக் குளிப்புக்குப் பெயர் போன தூத்துக்குடி நகரம் விழாக் கோலம் பூண்டிருந்தது. நகரத்து மக்களின் அகங்களிலும் முகங்களிலும் மகிழ்ச்சி அலைகள்.

ஊரெங்கும் வளைவுகள்; சிதம்பரனார் மாவட்டத்தைத் தொடங்கி வைக்கும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு வாழ்த்துகளை வழங்கும் வண்ணச் சுவரொட்டிகள்.

திரும்பும் திசை எல்லாம் தேசியப்பாடல்கள் ஒலித்துக் கொண்டிருக்க, விழா நடைபெறும் வ.உ.சி. கல்லூரியை நோக்கி மக்கள் ஆர்வத்துடன் சென்ற வண்ணம் இருந்தனர்.

அக்டோபர் 18-ஆம் நாள் (1986) காலை 9 மணியளவில் வ.உ.சி. கல்லூரி கலை அரங்கத்தில் திருநெல்வேலி திரு இராமகிருஷ்ண கம்பரின் நாயன இசையுடன் விழா தொடக்கமாகியது.

வ.உ.சி. வாழ்க்கை நிகழ்ச்சிகள் தொடர்பான புகைப்படங்களின் கண்காட்சியை மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் திறந்து வைத்தார்.

விடுதலை வீரர் சிதம்பரனார் என்ற பொதுத் தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கிற்கு மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு என். நல்லுசாமி அவர்கள் தலைமை ஏற்றார்.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியாளர் திரு பி.ஆர். பிந்து மாதவன், இ.ஆ.ப. வரவேற்புரையாற்றினார்.

கருத்தரங்கத்தைத் தொடங்கி வைத்து உரையாற்றிய மாண்புமிகு பொதுப்பணித்துறைஅமைச்சர் திரு யா.சை.மு.யூசுப் தெரிவித்தார்:

''பெரிய மாவட்டங்களைப் பிரித்துச் சிறிய மாவட்டங்களாக உருவாக்குவதன் மூலம் ஆட்சித் தலைவர்களைச் சாதாரண மக்கள் எளிதில் அணுக முடியும் என்ற முறையில் தான் புதிய மாவட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவர் உருவாக்கி வருகிறார்."

செங்கோட்டை திரு சனார்த்தனம், திரு இல. இராமகிருஷ்ணன், திரு ஆலடி அருணா எம்.பி. திரு.சங்கர வள்ளி நாயகம், திரு மறு இளம்பிறை மணிமாறன், திரு கடம்பூர் எம்.ஆர். சனார்த்தனம் எம்.பி., திரு எஸ்.என். இராசேந்திரன் எம்.எல்.ஏ. திரு. கி.சு.மணி ஆகியோர் கருத்தரங்கில் பங்குகொண்டு உரையாற்றினர்.

கருத்தரங்கத் தலைவர் மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு என்.நல்லுசாமி அவர்கள் தமது உரையில் தெரிவித்தார்:

''அடிமைப்பட்ட நாட்டை விடுதலை செய்யப் பாடுபட்ட தலைவர்களில் சிறப்பானவர் சிதம்பரனார்.

''சிதம்பரனாரின் இலட்சியம் நாடுபிடிக்கும் இலட்சியமல்ல; சொந்த நாட்டை அடிமைத் தளையிலிருந்துவிடுவிக்கும் இலட்சியம்''

கருத்தரங்கிற்குப் பின்னர் அரசுக் கவிஞர் புலவர் புலமைப்பித்தன் அவர்களின் தலைமையில் 'சிதம்பரனாரின் சிந்தனைகள்' என்ற தலைப்பில் பாட்டரங்கம் நடைபெற்றது.

திருமதி மாலதி அரிந்திரன், திரு எம்.பி.அழகிய நம்பி, புலவர் ஆ. முத்துராமலிங்கம், திரு இளசை அருணா, திரு அ.ஜகதீசன், திருமதி விசயலக்குமி நவ



நீதன் ஆகியோர் தமது கவிதை களை அரங்கேற்றினர்.

பாட்டரங்கத்தைத் தொடங்கி வைத்த மாண்புமிகு வேளாண் மைத்துறை அமைச்சர் டாக்டர் கா.காளிமுத்து அவர்கள் தமது உரையில் தெரிவித்தார்:

''வ.உ.சி. தொழிலாளர் தலைவர்; சிறந்த தேசாபிமானி; கூட்டுறவுப் பார்வை கொண்டவர்; தமிழ் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்; அரசியல் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் -சமுதாய மறுமலர்ச்சிக்கு வழிவகை செய்தவர் என்று மகாகவிபாரதியாராலேயே வாழ்த்தப் பெற்றவர்''.

பிற்பகல் 6 மணியளவில் ''வ.உ.சி.யின் வாழ்வில் விஞ்சி விளங்குவது தமிழ்த் தொண்டா? தேசியத் தொண்டா?' என்ற தலைப்பில் பட்டி மண்டபம் நடைபெற்றது. திரு வலம்புரிஜான், எம்.பி. நடுவர் பொறுப்பேற்றார்.

பட்டிமண்டபத்தை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப. உ. சண்முகம் அவர்கள் தொடக்கி வைத்தார். அப்போது அவர் தெரிவித்ததாவது:

''தியாகச் செயலில் தன்னைத் தானே ஒப்படைத்துக் கொண்டு, சிறைப்பட்டு, செக்கிழுத்து, வறுமைக்கு ஆளாகி, இறுதியில் காப்பாற்ற ஆளில்லாது, மரணத்தின் வாயிலில் விழுந்துவிட்ட உத்தம மனிதரின் பெயரால் ஒரு மாவட்டம் துவக்கப்படுகிறது. காலா காலத்துக்கும் இனி வ.உ.சி. நிலைத்திருக்கப் போகிறார்.

''தமிழ்த் தொண்டையும் தேசியத் தொண்டையும் தமது இரண்டு கண்களாக வளர்த்து வந்தவர் வ.உ.சி.''

பட்டி மண்டப அறிமுக உரையை நிகழ்த்திய சொல் விளங்கும் பெருமாள் குறிப்பிட்டார் .

''பட்டி மண்டபம் என்பது தற்காலத்தில் தோன்றிய ஒன்று என்று கருதுகிறார்கள். அது மிகவும் பழமையானது.''

'வ.உ.சியின் வாழ்வில் விஞ்சி விளங்குவது தமிழ்த் தொண்டே' என்னும் அணிக்குத் திரு பாண்டியன் தலைமை ஏற்றுப்பேசினார். திருமதி இந்திர பவானி, திரு பாளை உ. முருகன் ஆகியோர் அவருக்குத் துணை நின்று வாதிட்டனர்.

'தேசியத் தொண்டே' என்னும் அணிக்குத் திரு அ.பாஸ்கர



பால்பாண்டியன் தலைமை ஏற்றுப் பேச, திருமதி குருலக்குமி, திரு நெல்லை கண்ணன் ஆகியோர் துணை நின்று வாதிட்டனர்.

இரு அணியினரின் வாத உரைகளைக் கேட்டு நடுவர் அளித்த தீர்ப்பு வருமாறு:

'தாகூர் சிறந்த ஓவியர், ஆனால் அவரைக் கவிஞர் என்றுதான் நாடறியும். அருட்ஜோதி வள்ளலார் சிறந்த கவிஞர்; ஆனால் அவரை ஆன்மீக ஞானி என்று தான் உலகு சொல்லி வந்தது. அவர்களிடம் எந்தப் பண்பு விஞ்சி நின்றதோ அதனைத்தான் அனைவரும் புகழ்ந்தனர். சிதம்பரனாரிடம் தமிழ்ப்பற்றும் இருந்தது. தேசப் பற்றும் இருந்தது. என்றாலும் இந்த இரண்டிலும் தேசியத் தொண்டுதான் அவரிடம் விஞ்சியிருந்தது''

பட்டி மண்டப நிகழ்ச்சிக்குப் பிறகு, கவிஞர் சுப்பு ஆறுமுகம் குழுவினர் நடத்திய 'வ.உ.சி.வந்தார் வில்லிசை நிகழ்ச்சி,பொது மக்களைப் பெரிதும் கவர்ந்தது.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி 19.10.86 காலை 9 மணிக்கு, வ.உ.சி கல்லூரித் திறந்த வெளி அரங்கில் திரு பத்தமடை ராஜாவின் நாயன இசையுடன் தொடங்கியது.

அதன்பின்னர், 'வளர்ச்சித் திட்டங்களை வகுத்திடுவோம்' என்ற கருத்தரங்குக்கு, மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் தலைமை ஏற்றார்.

வரவேற்புரை ஆற்றிய செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு இரா. கற்பூரசுந்தர பாண்டியன், இ.ஆ.ப. குறிப்பிட்டார்:

''சிதம்பரனார் மாவட்டம் 20வது மாவட்டமாக மலர்கிறது. நாட்டுக்குத் தொண்டு செய்த நல்லவரை நினைவுகூரும் நிகழ்ச்சி மகிழ்ச்சி அலையை எழுப்புகிறது''

கருத்தரங்கத்தைத் தொடங்கி வைத்த மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர்.எம்.வீரப்பன் அவர்கள் குறிப்பிட்டார்:

''வெள்ளையர்களை விரட்ட வேண்டுமானால், அவர்களது வர்த்தகத்தை நாம் கைப்பற்றியாக வேண்டும் என்ற முறையில் கப்பல் கழகத்தைத் தொடங்கி, கப்பல் போக்குவரத்தை முதன் முதலில் நடத்திய மாபெரும் தலைவர் வ.உ.சிதம்பரனார்.

''நாட்டு விடுதலைக்குப் பாடுபட்ட சிதம்பரனார் தமிழ்த் தொண்டும் புரிந்தார் என்பதை நாம் இளைஞர்களுக்குச் சொல்லியாக வேண்டும்.

''அவரது நூல்களை மாண்புமிகு முதல்வர் அவர்களின் அனுமதியுடன், வெளியிடுவதற்குச் செய்தி மக்கள் தொடர்புத்துறை பாடுபடும்''

திரு.வி.வி.டி. நித்தியானந்தம், திரு எம்.எஸ். செல்வராஜ், தூத்துக்குடித் துறைமுகப் பொறுப்புக் கழகத் தலைவர் திரு கே.ஏ. சுந்தரம், இ.ஆ.ப., திரு செவாலியர் சி.ஐ.ஆர். மச்சாது, திரு எஸ்.என்.ராமசாமி எம்.எல்.ஏ., திரு டேனியல்ராஜ்,எம்.எல்.ஏ., திரு ஆர்.எஸ்.ஆறுமுகம் எம்.எல்.ஏ., திரு டி.ஆர்.வெங்கடரமணன் எம்.எல்.ஏ., திரு ஆர்.ரங்கசாமி எம்.எல்.ஏ., திரு எஸ்.பாலசுப்பிரமணியம் எம்.எல்.ஏ., திரு எஸ்.ஆர்.சுப்பிரமணிய ஆதித்தன் எம்.எல்.ஏ., திரு ஜான் வின்செண்ட் எம்.எல்.ஏ., முன்னாள் சபாநாயகர் திரு.செல்ல பாண்டியன் ஆகியோர் கருத்தரங்கில் உரையாற்றினர்.

முந்திய நாள் நடைபெற்ற கருத்தரங்கில் பங்கு பெறவேண்டிய திரு குமரி அனந்தன் அன்று வராமல், வளர்ச்சித் திட்டக் கருத்தரங்கிற்கு வந்து சேர்ந்தார். 'செக்கிழுத்த செம்மல்' என்ற பொருளில் உரையாற்றிய அவர் தெரிவித்தார்;

''பாரதியின் பாடலுக்குக் கருக் கொடுத்தவர் சிதம்பரனார்.



இந்திய மக்கள் அனைவரும் சேர்ந்து ஒற்றுமையாக விடுகின்ற மூச்சுக்காற்றினாலேயேவெள்ளையர்களை அவர்களது நாட்டுக்கு அனுப்பி விடலாம்' என்று சிதம்பரனார் சொல்ல, அந்த மூச்சு என்ற சொல்லை வைத்து, 'எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே' என்று பாடினார் பாரதி''.

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.க. இராசாராம் அவர்கள் தமது உரையில் தெரிவித்ததாவது:

தீர்த்த பெருமை இந்த அரசுக்கு உண்டு. உழைப்போரே உயர்ந்தவர் என்பது புரட்சித் தலைவரின் முதல் முழக்கம். புரட்சித் தலைவர் தீட்டும் பொருளாதாரத் திட்டம் தமிழகத்திற்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கே வழிகாட்டும் திட்டம் ஆகும்''.

பிற்பகல் 4 மணி அளவில் தூத்துக்குடி நகரமே அதிர்ந்து போகும் அளவுக்கு பள்ளி, கல்லூரி மாணவ மாணவியரின் அணி வகுப்பு ஊர்வலம் நடைபெற்றது. அது.தூய சவேரியார் பள்ளி

தது. பின்னர் அவை அபிவிருத்திப் பணிகளுக்காக என்ற நிலை மலர்ந்தது. அதன் விளைவுதான் பெரிய மாவட்டம், சிறிய மாவட்டங்களாக உருவாக்கப்படும் திட்டம் ஆகும். மற்ற மாநிலங்களில் சிறிய மாவட்ட அமைப்புகள் ஏற்கனவே உருவாகியுள்ளன.''

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு பிந்து மாதவன், இ.ஆ.ப. சிதம்பரனார் மாவட்டம் குறித்த விளக்கவுரை ஆற்றினார்;




''குமரி மாவட்டத்திலிருந்து திருச்செந்தூர் வரை கிடக்கும் அற்புதமான மணலில் சோடியம் கிடைக்கிறது. இந்த மணலை வளப்படுத்த வேண்டும்.

''வறண்ட பகுதியில் உடை மரம் வளர்த்தால், காகித ஆலைகள் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும்''

கருத்தரங்கிற்குத் தலைமை ஏற்ற மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ்.இராமச்சந்திரன் அவர்கள் தமது உரையில் தெரிவித்ததாவது:

''இந்தியா ஏற்றம் பெறுவதற்கு அதன் தற்சார்புக் கொள்கைதான் காரணம். தலை சிறந்த இந்தக் கொள்கையை அன்றே உணர்ந்து வழிகாட்டிய பெருமை சிதம்பரனாருக்கு உண்டு.

''சோறும் போட வேண்டும்; வேலையும் கொடுக்க வேண்டும். இதுதான் இந்த அரசின் கொள்கை. பசி வேதனையைத்

யிலிருந்து புறப்பட்டு வ.உ.சி. கல்லூரித் திடலை அடைந்தது. இந்த அணி வகுப்பு ஊர்வலத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பாளையங்கோட்டை குருஸ்பர்னாந்து சிலை அருகில் அமைக்கப்பட்டிருந்த தனிமேடையில் நின்றவாறு பார்வையிட்டார்.

பிற்பகல் 5 மணி அளவில், வ.உ.சி. கல்லூரி திறந்தவெளி அரங்கில் திரு டி.பி.எஸ்.எச். அமர்நாத் பிரபாகர் ராம்சேட் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

பிற்பகல் 6 மணியளவில், சிதம்பரனார் மாவட்டத் தொடக்க விழா தொடங்கியது.

தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் திரு ஏ.பத்மநாபன், இ.ஆ.ப. தமது வரவேற்புரையில் தெரிவித்தார்:

''மாவட்ட அதிகாரம் ஆங்கிலேயர்களின் காலத்தில் சட்டம், அமைதி என்ற நிலையில் இருந்

''மீன்பிடி தொழிலில் 20 ஆயிரம் பேர் ஈடுபட்டுள்ளனர். மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் 23 இங்கே உள்ளன. சங்கு குளிக்கும் தொழில் இங்கே மிகவும் புகழ் பெற்றதாகும். சிவகாசிக்கு அடுத்து தீப்பெட்டித் தொழில் இந்த மாவட்டத்தைச் சேர்ந்த கோவில்பட்டியில் சிறந்து விளங்குகிறது''

வ.உ.சி.யின் குமாரர் வ.உ.சி. சுப்ரமணியம் உரையாற்றுகையில் தெரிவித்தார்:

''சிதம்பரனார் மாவட்டத்தை உருவாக்கியமைக்காகத் தமிழக முதல்வர் அவர்களுக்கு, தேச பக்தர்களின் சார்பிலும் விடுதலை வீரர்களின் சார்பிலும் வ.உ.சி குடும்பத்தினரின் சார்பிலும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''சுங்கவரி இல்லாத விற்பனை மையம் ஒன்று இங்கு அமைக்கப்பட வேண்டும். பல்கலைக் கழகம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.



## சென்ற இதழ்........

வ உ. சிதம்பரனார் திருவுருவப்படத்தை, சென்ற இதழ் (16.10.86) அட்டை அலங்கரித்தது.

நாவாய்ப் பயிற்சி கற்றுத் தரப் பட வேண்டும்''

திரு எஸ்.எம். சோமயாஜுலு உரையாற்றுகையில் தெரிவித்தார்:

''கள்ளுக்கடை மறியலில் நானும் பலரும் கலந்துகொண்ட போது கைது செய்யப்பட்டோம். ராஜாஜி அவர்கள் எதிர்த்து வாதாடச் சொன்னார். எங்களுக்காக வ.உ.சி. வாதாடுவதற்கு முன் வந்தார்.''

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு பி.எச்.பாண்டியன் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''ஒரு ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் நெஞ்சுரம் கொண்டவர் வ.உ.சி. வெள்ளையர்களை ஆட வைத்தவர் அவர்.

மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் தமது உரையில் குறிப்பிட்டார்:

''சிதம்பரனார் வீறுகொண்ட விடுதலை வீரர்: தியாக ஒளிவீசத் தூண்டிய மணி விளக்கு; தளர்வடையாத அடலேறு, தளராத தொழில் முனைவோர், அறநெறி காத்த ஆண்மையாளர், நீதிக்கு வாதாடிய வழக்கறிஞர், கொள்கையில் குன்றாத கோமான், சீர்திருத்த உணர்வு கொண்ட செம்மல், அஞ்சா நெஞ்சம் படைத்தவர்.''

நாவலர் உரையாற்றிக் கொண்டிருக்கும்போதே,'' சிதம்பரனாரின் பேத்தி சேது லட்சுமியின் மகள் திருமணத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 25 ஆயிரம் ரூபாய் உதவிசெய்கிறார்கள்'' என்ற அறிவிப்பை வெளியிட்டார்.

மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள், தமது உரையில் குறிப்பிட்டார்:

''சிவாவுக்கும் சிதம்பரனாருக்கும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. சிதம்பரனாருக்கு ஜாமீன் கிடைத்தது. சிவாவுக்கு ஜாமீன் தர யாரும் வரவில்லை. உடனே, சிதம்பரனார் 'எனக்கு ஜாமீன் வேண்டாம்' என்று சொல்லிச் சிறைக்குள் புகுந்தார்.''

பின்னர், மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்கள், வ.உ.சி, மாவட்டத்தைத் தொடக்கி வைத்தார்.

தமிழக அரசின் செய்தித்துறை வெளியீடான 'வ.உ.சிதம்பரனார் வரலாறு' என்னும் கையேட்டினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்டார்.

வ.உ.சி. அவர்களின் குமாரர்களான வ.உ.சி.சுப்ரமணியம், வாலேஸ்வரன் இருவருக்கும் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார் மாண்புமிகு முதல்வர்.

பின்னர், திட்டப் பணிகள் பலவற்றிற்கு அடிக்கல் நாட்டியதுடன, நலிவுற்றோர்க்கு நலத் திட்ட உதவிகளையும், அரசு அதிகாரிகளுக்கு நினைவுப் பரிசுகளையும் வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர்அவர்கள் தமது வாழ்த்துரையில் தெரிவித்தார்:

''என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழி நடத்திச் செல்லும் பெரியோர்களே! என் ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புக்களே!

''இந்த விழாவில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

''மக்களுக்கும் அரசுக்கும் இடையில் நெருக்கமான தொடர்பு இருக்க வேண்டும். அதன் அடிப்படையில்தான் புதிய மாவட்டங்கள் உருவாக்க வேண்டும் என்று முடிவு எடுக்கிறேன்.

''புதிய மாவட்டங்களுக்குச் சரித்திரச் சான்றோர்களின் பெயர்களைச் சூட்டுகிறோம். அந்த முறையில் கப்பலோட்டிய தமிழன், செக்கிழுத்த செம்மல், தியாக சீலர் சிதம்பரனாரைப் போற்றும் வகையில்தா இந்தப் புதிய மாவட்டத்திற்கு சிதம்பரனார் மாவட்டம் என்று பெயர் சூட்டி உள்ளேன்.

''சிதம்பரனார் மாவட்டத்துக்குத் தலைநகராகத் தூத்துக்குடி அமைந்துள்ளது. நாட்டு விடுதலைப் போரில் தன்னைத் தந்த பெருமை தூத்துக்குடிக்கு உண்டு.

''வீரபாண்டிய கட்டபொம்மனும், மகாகவி பாரதியும் பிறந்த புண்ணிய பூமி இது. சிதம்பரனார் மாவட்டம் தேசிய எழுச்சியின் சின்னமாக அமைகின்றது.

''இந்த மாவட்டம் எல்லாத் துறைகளிலும் தொடர்ந்து முன்னேற வேண்டும் என்று வாழ்த்துகிறேன். இம்மாவட்ட மக்களுக்கு என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''தூத்துக்குடியைத் தலைநகராகக் கொண்ட சிதம்பரனார் மாவட்டத்தை மகிழ்ச்சியுடன் தொடங்கி வைக்கிறேன்.

''ஆங்கிலேயர் ஆதிக்கத்தை எதிர்த்து வீரப்போர் புரிந்த வீரபாண்டிய-கட்டபொம்மன் சுதந்திரத்திற்காகத் தன்னையும் தன் உடைமைகளையும் இழந்தார். அவருடைய நினைவாக நெல்லை மாவட்டம் இன்றுமுதல் 'நெல்லை கட்டபொம்மன் மாவட்டம்' என்று அழைக்கப்படும்.

'அண்ணா நாமம் வாழ்க!
நன்றி! வணக்கம்! ''

பின்னர், சிதம்பரனார் மாவட்ட ஆட்சியாளர் திரு ரெ. ஆறுமுகம் இ.ஆ.ப. நன்றி நவின்றார்.

சிதம்பரனார் மாவட்டத் தொடக்க விழா ஒவ்வொருவரின் சிந்தையிலும் தேன் பாய்ச்சும் விழாவாக அமைந்தது என்று சொன்னால் அது மிகையாகாது!

—நமது செய்தியாளர்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23










கூட்டுறவு என்ற சொல்லில் 'கூட்டு' 'உறவு' என்று இரண்டு வார்த்தைகள் அடங்கியுள்ளன. 'கூட்டு' மட்டும் என்றால் இலாபம் மட்டும் என்றுதான் பொருள்படும். உறவு கூட்டு டன் சேர்ந்தால்தான் தோழமை யின் அடிப்படையாக - இலாப மற்ற நோக்கம் தெளிவாகிறது.

—பேரறிஞர் அண்ணா


**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2017
அட்சய - கார்த்திகை 1
மலர் : 17 இதழ் : 10
16-11-1986


85379



"கூட்டுறவு என்பது மனித னுக்கு மனிதன் தகுதியை உணர்வது மட்டுமல்ல-தரத்தை மட்டுமல்ல-அவர்களை மதிக்கக் கூடிய பணியைப் பெறுவது மட்டுமல்ல-தங்களுக்கு முடி வதை - பிறர் இயலாமையை எண்ணி அவர்களுக்கு உதவி செய்யக்கூடிய அந்த எண்ணமே கூட்டுறவியக்கத்தின் அடிப் படை மூலதனமாகும்."

—மாண்புமிகு முதல்வர்
டாக்டர் எம்.ஜி.ஆர்



விவசாய இடுபொருள் விற்பனை நிலையம் மூலம் உரம் பெறுதல்.

உயர்த்துவதற்காக, ரிசர்வ் வங்கியின் வழிமுறைப்படி நகர வங்கிகள் வழங்கும் கடனில் 60 சதவீதம் குடிசைத் தொழில் மற்றும் சிறுதொழில் புரிபவர்களுக்கு வழங்கப்படுகிறது. 1986-87ஆம் ஆண்டில் சுமார் ரூ. 5 கோடி அளவுக்கு இத்தகைய கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

வேளாண்மை விளை பொருட்களை விற்பனை செய்வதில் உழவர்களுக்கு உதவி செய்து வருவதில் 144 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஈடுபட்டுள்ளன. இவைகள் 1985-86ல் சுமார் ரூ. 145 கோடிக்கு விளைபொருட்கள் விற்பனை செய்தன. நடப்பு ஆண்டில் சுமார் ரூ. 135 கோடியளவுக்கு விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

மக்களுக்கு வீட்டுக்கு வேண்டிய அன்றாடத் தேவைகளைத் தரமாகவும், சரியான எடை அளவிலும், நியாய விலையிலும் வழங்கும் பணியில் 3848 ஆரம்பக் கூட்டுறவுப் பண்டக சாலைகள் ஈடுபட்டுள்ளன. அவை கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் செயல்பட்டு வருகின்றன. 1985-86ல் இந்த நிறுவனங்கள் ரூ. 605 கோடி அளவுக்கு நுகர்பொருளை விற்பனை செய்துள்ளன. மாணவ மணிகள் இன்றைய அரும்புகள், நாளைய மலர்கள். அவர்களுக்குப் பாட நூல்கள், குறிப்பேடுகள் மற்றும எழுது பொருட்கள் வழங்கும் பொருட்டு 3039 பண்டகசாலைகள், கல்லூரிகளிலும், உயர் நிலைப்பள்ளிகளிலும் செயல்பட்டு வருகின்றன. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் 1986-87ல் ரூ. 500 கோடி மதிப்புள்ள பொருள்களை விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் ஆண்டுக்கு ரூ. 5 கோடிக்கு மேல் விற்பனை செய்யும் 34 பெரிய நுகர்வோர் கூட்டுறவு நிறுவனங்களில் 17 தமிழ்நாட்டில் உள்ளன. அவற்றில் முதல் 10 நிறுவனங்களில் தமிழ்நாட்டில் மட்டும் 6 நிறுவனங்கள் உள்ளன. இந்தியாவில் நுகர்வோர் கூட்டுறவு அமைப்பில் வட ஆர்க்காடு மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்தப் பண்டகசாலை இரண்டாவது இடம் வகிக்கிறது. இது தமிழகத்துக்கே பெருமை தருவதாகும். கிராமங்களில் உள்ள மக்களுக்கு இன்றியமையாப் பண்டங்களைச் சீராக வழங்குவதற்கு 12600 கிராமக் கூட்டுறவு அங்காடிகள் அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. இந்த அங்காடிகள் மூலம் 1985-86ல் சுமார் 199 கோடி ரூபாய்க்குப் பண்டங்கள் விற்பனை செய்யப்பட்டன.

நுகர்வோர் தமக்கு வேண்டிய பொருட்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வசதியாக 14 இடங்களில் சுயசேவைப் பிரிவுகள் துவக்கப்பட்டுள்ளன.

''ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்''-என்றார் பேரறிஞர் அண்ணா. அதற்கேற்ற பணிகளைப் புரிய சலவைத் தொழிலாளர்கள், மலைச் சாதியினர் போன்ற நலிந்த பிரிவினரின் நலன் காக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கிவருகின்றன. சைக்கிள் ரிக்ஷாக்காரர்கள் மோட்டார் பொருத்திக்கொள்ள உதவி செய்யக் கடனாகவும், மானியமாகவும் நிதியுதவி செய்யப்படுகிறது. உடல் ஊனமுற்றோருக்கும் உதவுவதற்காக ஐந்து கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மலைவாழ் பழங்குடியினரின் இருண்ட வாழ்வில் ஒளியேற்ற 13 பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயக் கடனுதவி, நுகர்பொருள் வழங்குதல், விற்பனை போன்ற பணிகளைச் செய்து வருகின்றன.

நாட்டில் கூட்டுறவின் பணிகள் இல்லாத இடம் இல்லை. சமூகத்தில் அருகுபோல் வேரூன்றி ஆல்போல் தழைத்து அன்றாட வாழ்வில் கூட்டுறவியக்கம் ஒன்றிவிட்டது. கூட்டுறவு வெறும் தத்துவம் என்று இருந்த காலம் மாறி-வாழ்க்கை நெறி என்ற நிலை உருவானதற்கு அன்றாட வாழ்வில் கூட்டுறவின் பணிகள் உண்டாக்கிய மாற்றமே காரணம். படித்து வேலைகிடைக்காத இளைஞர்களுக்குச் சுய வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதற்கான கடன்களை வழங்குவதற்குத் தனிவகைக் கூட்டுறவுக் கடன் சங்கம் ஒன்று சென்னையில் நிறுவப்பட்டுள்ளது. பிற மாவட்டங்களிலும் இதுபோன்ற அமைப்புக்களை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வேலையில்லாப் பொறியாளர்களுக்குச் சுய வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் நோக்குடன் வேலையில்லாத பொறியியல் பட்டதாரிகளுக்கும் டிப்ளமாதாரர்களுக்கும் கட்டுமானக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று சென்னையில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

''எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான இடம் நோக்கிச் செல்கின்றது இந்த வையம்''

என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பாடியவாறு, அந்தப் புதிய உலகு நோக்கிப்பயணம் செய்ய ஏற்ற வழி கூட்டுறவாகும்!

''கூட்டுறவு என்பது மனிதனுக்கு மனிதன் தகுதியை உணர்வது மட்டுமல்ல-தரத்தை மட்டுமல்ல-அவர்களை மதிக்கக்கூடிய பணியைப் பெறுவது மட்டுமல்ல-தங்களுக்கு முடிவதைப் பிறர் இயலாமையை எண்ணி அவர்களுக்கு உதவி செய்யக்கூடியதும் ஆகும். அந்த எண்ணம் கூட்டுறவியக்கத்தின் அடிப்படை மூலதனமாகும்''-என்ற மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவர் அவர்கள் கூறிய பொன்மொழியை நினைவிற்கொண்டு ஏற்றத்தாழ்வற்ற புதிய சமுதாயம் உருவாக்கும் பணியில் நாம் கூட்டுறவு முயற்சியில் முழுமூச்சுடன் இறங்குவோமாக!



# புகழ் பரப்பும் பால் பெருக்குத் திட்டங்கள்

பால்வளத்தில் இன்று தமிழகம் முன்னணிக்குச் சென்று கொண்டிருக்கிறது. அதன் பின்னணி என்ன? ஒன்றன்பின் ஒன்றாகப் பால் பெருக்குத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அதன் காரணமாக அங்கிங்கெனாதபடித் தமிழ் நிலம் எங்கும் பால்வளம் சிறக்கக் காணுகின்றோம்.

நமது மாநிலத்தில் பால் பெருக்குத்திட்டம் 1972-ஆம் ஆண்டு முதல் கட்டமாக 9 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. (1. செங்கல்பட்டு, 2. வடஆர்க்காடு, 3. தென் ஆர்க்காடு 4. தர்மபுரி, 5. சேலம், 6. பெரியார் 7. கோயம்புத்தூர், 8. நீலகிரி, 9. மதுரை). இத்திட்டத்தின் முதல் கட்டத்திற்கு ரூ. 15.62 கோடி செலவிடப்பட்டது. இத்திட்டத்தின் முதல் கட்டம் 1982 மார்ச் மாதத்தில் முடிவடைந்தது.

இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தும் வகையில் 1982-ஆம் ஆண்டு பால் பெருக்குத் திட்டம் (2ஆம் நிலை) ரூ. 42.87 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. தற்போது தமிழ்நாட்டில் மொத்தம் 13 மாவட்டங்களில் பால் பெருக்குத் திட்டம், தேசிய பால் பண்ணைக் கழகம் மற்றும் இந்தியப் பால் பண்ணைக் கழகத்தின் நிதி உதவியுடன் 56.89 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல் படுத்தப்பட்டு வருகின்றது.

எஞ்சியுள்ள 5 மாவட்டங்களான இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம், காமராசர், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மத்திய அரசு மற்றும் மாநில அரசு உதவியுடன் பால் பெருக்குத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

பால் பெருக்குத் திட்டங்களைப் பாங்குடன் நிறைவேற்ற மூன்றடுக்கு நிர்வாக முறை பயன்படுகிறது.

கிராம அளவில், பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மாவட்ட அளவில், ஒன்றியங்கள் மாநிலம் முழுமைக்கும் சேர்ந்து, ''பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்'' என மகிழ்ச்சியுடன் கூறலாம். திட்டங்களை நிறைவேற்றுவதில் மற்ற மாநிலங்களுக்கு நாம் முன்னோடியாகயிருந்து வருகின்றோம்.

**க. கலைமணி**
**தலைவர்,**
**தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம்.**

தமிழ்நாட்டில் மொத்தம் 91 கால்நடை மருத்துவ அமைப்புகள் உள்ளன. (பால் பெருக்குத் திட்டம் செயல்படும் 13 மாவட்டங்களில் 85 கால்நடை மருத்துவ அமைப்புகளும், இதர 5 மாவட்டங்களில் 6 காலநடை மருத்துவ அமைப்புகளும் உள்ளன). இதில் 29 அவசர அமைப்புகளாகவும் மற்றவை நடமாடும் அமைப்புகளாகவும் உள்ளன.

1985-86ஆம் ஆண்டு 7,54,980 கால்நடைகள் மருத்துவ வசதி அமைப்பின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. 4,58,032 கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

கால்நடை மருத்துவத் திட்டத்தில் உயர்ரகக்காளைகளின் விந்துகளிலிருந்து உயர்ரகக் கறவை மாடுகளை உருவாக்கி வளர்ப்பது ஒரு முக்கிய அம்சமாக உள்ளது. வெகு தூரத்திலுள்ள கிராமங்களுககு உயர்ரகக் காளைகளின உறைவிந்தை எடுத்துச் சென்று கலப்பின உயர்ரகக் கால்நடை வளர்ச்சிகாண்பது இன்று தமிழகமெங்கும் ஒரு நடைமுறைச் சாத்தியமாகிவிட்டது. இரண்டாவது பால் பெருக்குத் திட்டங்கள் செயல்படும் 13 மாவட்டங்களில் 1,727 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் செயற்கை முறைக் கருத்தரிப்புப் பணி நடந்து வருகின்றது.



மாதவரம் பால் பண்ணை மற்றும் ஆம்பூரிலுள்ள கால்நடை தீவன ஆலைகள் ஒவ்வொன்றும் தற்போது மாதமொன்றுக்குச் சராசரி 1,490 டன் கால்நடை தீவனம் உற்பத்தி செய்கின்றன.

ரூபாய் பத்து இலட்சம் செலவில் குளிகை வடிவில் தீவனம் தயாரிக்கும் ஆலை மாதவரத்தில் நிறுவப்பட்டுள்ளது. இதைத் தவிர தென் மாவட்டங்களின் தேவைக்கேற்ப ஒரு புதிய கால்நடை தீவன ஆலை ஒரு நாளைக்கு 100 டன் தீவன உற்பத்தி செய்கின்ற வகையில் மதுரையில் துவங்கப்படும்.

தேசியப் பால்பண்ணைக் கழகம் தொடர்பான பால் பெருக்குத் திட்டங்கள் மட்டுமின்றி, தமிழகத்தில் பால் பண்ணை அபிவிருத்தித் துறையினால் செயல்படுத்தப்படும் திட்டங்கள், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள், வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டங்கள், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்கள், ஆதிதிராவிட நலத்திட்டங்கள் கீழ், பால் பெருக்குப் பணிகள் தமிழகமெங்கும் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இன்று நுகர்வோர்களுக்குத் தரமான பால் நியாயமான விலையில் கிடைக்கின்றது. உற்பத்தியாளர்களுக்கு ஆண்டு முழுமைக்கும் பாலுக்கு நல்ல விலை தரப்படுகின்றது.

பொன்மனத் தலைவர் ஆட்சியில் புகழ்பரப்பும் வகையில் பால் பெருக்குத்திட்டங்கள் தமிழகத்தில் பயன தரத் தொடங்கிவிட்டன. வெண்மைப் புரட்சியும், தமிழகத்தில் அதனால் விளைந்திட்ட நன்மைகளும் நாடறிந்த உண்மையாகிவிட்டன.



# வாட்டம் போக்கும் கூட்டுறவு

மாண்புமிகு நிதி மற்றும் கூட்டுறவு அமைச்சர் டாக்டர் நாவலர்

திரு. இரா. நெடுஞ்செழியன்

உயிரினங்களிலேயே சிந்திக்கத் தெரிந்த இனமும், சிந்தித்ததைச் செயற்படுத்திக் காட்டும் திறன் கொண்ட இனமும், கூடிவாழும் தன்மை கொண்ட இனமும், கூட்டு முயற்சியால் வளரும் இனமும் மனித இனம் மட்டுமேயாகும்.

கூட்டு வாழ்க்கையில் ஒவ்வொருவரும் எல்லோருக்குமாகப் பாடுபட வேண்டும்; எல்லோரும் ஒவ்வொருவருக்காகவும் பாடுபட வேண்டும். மக்களின் கூட்டு முயற்சியும், கூட்டு ஒத்துழைப்பும் கூட்டு உற்பத்தி - கூட்டு விற்பனை - கூட்டுவிநியோகம் - கூட்டு நுகர்வு ஆகியவற்றிற்கு வழிகோலுகின்றன. இந்தத் தத்துவத்தைத்தான் ''கூட்டுறவு'' என்னும் சொற்றொடரால் குறிப்பிடுகிறோம்.

மக்கட் சமூகத்திடையே ஜனநாயகப் பண்பு வளர, சமதர்ம உணர்வு மலர, சமத்துவ முறை ஓங்க, கூட்டுறவு இயக்கம் பெருந்துணை புரிகிறது. தனி மனிதனின் சுரண்டலைத் தடுக்க, இலாபத்தைப் பரவலாகப் பலர்க்கும் பங்கீடு செய்ய, விலைவாசிகளைக் கட்டுப்படுத்த, நியாயமான விலைகளை நிலைநாட்ட, தொழிலை வளர்க்க, உற்பத்தியைப் பெருக்க, வாணிகத்தை வளர்க்க, வருவாயைத் திரட்டப் பாமர மக்களுக்கு உறுதுணையாக அமைவது கூட்டுறவு அமைப்பேயாகும்.

கூட்டுறவு இயக்கம் சென்ற ஒரு நூற்றாண்டு காலத்துக்கு மேலாக உலகெங்கிலும் உள்ள எல்லா நாடுகளிலும் வேரூன்றத் தொடங்கி, இன்று பல நாடுகளிலும் ஆலமரம் போல் தழைத்தோங்கி வளர்ந்து, கிளைகளைப் பெருக்கி, விழுதுகளை விட்டு வலிவோடு திகழ்கின்றது. ஆலந்து, பெல்சியம், நார்வே, சுவீடன், சுவிட்சர்லாந்து போன்ற சிறுசிறு நாடுகள் கூட்டுறவுக் கொள்கையைக் கடைப்பிடித்துப் பொருளாதாரத்திலே செழிப்புமிக்க நாடுகள் என்று போற்றிப் புகழுகிற அளவுக்குச் சிறந்தோங்கி நிலைத்து நின்று வாழ்கின்றன.

கூட்டுறவுக் கொள்கைகளுக்குப் பொலிவும், வலிவும் ஊட்டும் வண்ணம் செயல்பட்டு வருபவை கூட்டுறவு நிறுவனங்களே யாகும். கூட்டுறவு நிறுவனங்கள், மக்கள் வாழ்வில் ஏற்படும் பொருளாதாரச் சிக்கல்களுக்கெல்லாம் தீர்வு காண்கின்றன என்பது மட்டுமல்லாமல், சமூக முன்னேற்றத்திற்கு உறுதுணையாகவும் அமைகின்றன.

மலைவாழ் மக்களுக்கு நுகர்பொருள் வழங்குதல்



மக்களின் இன்றியமையா அடிப்படைத் தேவைகள் உண்டி-உடை-உறைவிடம் ஆகியவையாகும். இவற்றையெல்லாம் தங்கு தடையின்றி உற்பத்தி செய்யவும், பெறவும், நகரவும் வேளாண்மை – மீனளம்-நெசவு-கட்டுமானப்பொருள்கள் உள்ளிட்ட பல்வேறு தொழில்களைச் செய்யவும் கூட்டுறவு எல்லா வகையிலும் கைகொடுக்கிறது என்பது எல்லோரும் அறிந்த ஒன்றாகும்.

தமிழகத்தில், கூட்டுறவு இயக்கம், பல ஆண்டுக்காலமாகச் சிறப்பாக வேரூன்றிப், பல்வேறு துறைகளிலும், நல்ல பலன்களை அளித்துக்கொண்டு வருகின்றது.

பொருளாதாரத்தில் முதுகெலும்பு போன்றது வேளாண்மைத் தொழில். அதற்குத் தேவையான கடன், தரமான விதைகள், உரம், பூச்சி மருந்து போன்றவைகளையும் பயிர்த் தொழிலுக்குத் தேவையான உதவிகள் அனைத்தும் செய்ய 4700 கிராம வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களின் மூலமாக நடப்பு ஆண்டில் உழவர்களுக்கு ரூ. 180 கோடி குறுகிய கால, மத்திய கால உழவர் பயிர்க் கடனாகவும், ரூ. 20 கோடி நீண்ட காலக் கடனாகவும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இன்றைய நிலையில் தமிழகத்தில் உள்ள வேளாண்மைக் குடும்பங்களில் முக்கால் பங்குக்கு மேல் வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர். அவர்களில் பெரும்பகுதி சிறிய மற்றும் மிகச் சிறிய வேளாண்மைக் குடும்பங்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆறாவது திட்டக்கால இறுதியில் தமிழகத்தில் உள்ள மொத்த வேளாண்மைக் குடும்பங்களில் 85.6 சதவீத குடும்பங்கள் கூட்டுறவு இயக்கத்தில் கொண்டு வரப்பட்டுள்ளன. அவர்களில் 83 சதவீதம் சிறிய மற்றும் மிகச் சிறிய விவசாயக் குடும்பத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒருவரை உறுப்பினராக்குவதன் மூலம் ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த 90,000 குடும்பங்கள் இதுவரை கூட்டுறவுச் சங்கங்களில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். நடப்பு ஆண்டில் மேலும் 10,000 பேர் சேர்க்கப் படவுள்ளார்கள்.

'லாம்ப்' சங்கத்தில் புளி சேகரித்தல்





கூட்டுறவு நகர வங்கிகள் சிறுதொழில் புரிய கடனுதவி செய்கின்றன.

''வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்'' என்றார் வள்ளலார். உழவுத் தொழிலுக்குக் குறைந்த வட்டியில் உழவர்களுக்குக் கடன் வழங்கியது மட்டுமின்று, உழவர்கள் இடர்ப்பட்டுத் தவித்து நின்றபோது, சாதாரண வட்டி தள்ளுபடி, அபராத வட்டி தள்ளுபடி, வட்டியில் சலுகை போன்ற பல்வேறு சலுகைகளை ரூ. 125 கோடி அளவுக்கு உழவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவர் அவர்கள் குறிப்பறிந்து வழங்கியிருக்கிறார்கள். 30.6.86ல் கடன் தொகை முழுவதையும் கட்டியவர்களுக்கு வட்டி, அபராதவட்டி மற்றும் கூடுதல் வட்டி முழுமையும் திருப்பிச் செலுத்தப்படும். இதனால், ரூ. 19 கோடி சலுகை கிடைக்கும்.

மேற்கண்ட இவற்றால் உழவர்களின் கடன் சுமை குறைகிறது. கவலையை மறந்து புதிய வாழ்வைத் தொடர வழி ஏற்படுகிறது. வருங்காலத்தில் கடன் பளுவே இல்லாதபடி புதிய பயணத்தை உழவர் மேற்கொள்ள முடியும்.

கிராம வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் மாநில மத்திய வங்கிகளின் கிளைகள், கூட்டுறவு நகர வங்கிகள், அவற்றின் கிளைகள் ஆகிய 2,114 கூட்டுறவு நிறுவனங்கள் நகைக் கடன்கள் வழங்குகின்றன. 1985-86ல் ரூ. 290 கோடி அளவிற்கு நகைக்கடன் வழங்கப்பட்டது. இதனால் சுமார் 13 இலட்சம் பேர் பலனடைந்துள்ளார்கள். நடப்பு ஆண்டில் ரூ. 300 கோடி கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் கூட்டுறவு நிறுவனங்கள் நலிந்த பிரிவினரின் அவசரக் கடன் தேவைகள் நிறைவு செய்யப்படுகின்றன.

நகர்ப்புற மக்களுக்கும், நகரை ஒட்டியுள்ள முக்கிய மக்களுக்கும் குறுகிய, மத்திய காலக் கடன்களையும் வங்கி வசதிகளையும் 133 நகர வங்கிகள் அளித்து வருகின்றன. [illegible], குடிசைத் தொழில் மற்றும் சிறு தொழில்களுக்கு நிதியுதவியும் குறைந்த [illegible] செய்து வருகின்றன.

சமுதாயத்தில் நலிந்த பிரிவினரின் வருமானத்தையும் வாழ்க்கைத்தரத்தையும்



# நலிந்தோர்க்குக் கூட்டுறவு

நலிவடைந்த மக்களினம் நன்மைபெற, கூடிநின்று பொலிவு பெறச் சேருகின்ற அமைப்பு-இது பொது நலமே காணுகின்ற அமைப்பு. ஒருவரோடு மற்ற வரும் ஒன்றுபட்டு உழைத்திடலாம்; உயர்வதற்கு வழிவகுக்கும் இயக்கமே,இதில் ஒன்று சேர வருவதென்ன தயக்கமே.

ஆம். சமுதாயத்தில் நலிவடைந்த மக்கள் தங்களுடைய பொருளாதாரத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திக் கொள்ளத் தாங்களாகவே முன் வந்து ஒன்று சேர்ந்து அமைத்துக் கொள்ளும் அமைப்பு தான் கூட்டுறவு இயக்கம்.

கடந்த 80 ஆண்டுகளுக்கு மேல் சமுதாயத்திலுள்ள அனைத்துத் தரப்பு மக்களுக்கும்-குறிப்பாக நலிவடைந்த பிரிவினரான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்க்குக் கூட்டுறவு இயக்கம் ஆற்றிவரும் தொண்டு மகத்தானது.

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நாபாாடு) வகுத்துள்ள வழிமுறைகளின்படி வழங்கப்படும் மொத்த குறுகிய காலக் கடன்களில் 20% நலிந்த பிரிவினருக்கு, அதாவது ஐந்து ஏக்கர் அல்லது அதற்குக் குறைவான நிலங்களைச் சொந்தமாக வைத்திருப்பவர்களுக்கு அல்லது குத்தகைக்குப் பயிரிடுபவர்களுக்கு வழங்கப்படவேண்டும். மொத்தக் கடன் பட்டுவாடாவில் குறைந்தது 50%க்கு நலிந்த பிரிவினரின் பங்கை அகில இந்திய ரீதியில் உயர்த்த வேண்டும் என்பது ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் கொள்கை அளவிலான நோக்கமாகும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் இறுதியில் தமிழ்நாட்டில் உள்ள விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் நலிந்த பிரிவினருக்கு வழங்கிய கடன் அளவு சிறப்பானது

இவ்வகையில் தேசிய வேளாண் வங்கி நிர்ணயித்துள்ள இலக்கை விடக் கூடுதலாக அடைந்து, கூட்டுறவுச் சங்கங்கள் சாதனை புரிந்துள்ளன.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் முதலாண்டில் அதாவது 1985-86ல் குறுகிய காலக் கடன்களில் 54 சதவிகிதமும், மத்தியக் காலக் கடன்களில் 90 சதவிகிதமும், நீண்ட காலக் கடன்களில் 42 சதவிகிதமும் நலிந்த பிரிவினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 1986-87 ஆம் ஆண்டில் நலிந்த பிரிவினருக்கான பங்கினைக் குறுகிய காலக் கடன்களில் 66 சதவிகிதமும், மத்தியக் காலக் கடன்களில் 89 சதவிகிதமும், நீண்ட காலக் கடன்களில் 50 சதவிகிதமும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறாகக் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கும் கடன்களில் கணிசமான அளவிற்கு நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பெற்று அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**ஆர். சந்தானம், இ.ஆ.ப.,**
**கூட்டுறவுச்சங்கங்களின் பதிவாளர்**

## ஆதிதிராவிட வகுப்பினர்களுக்குக் கடன் வழங்குதல்

தற்போது வழங்கப்படும் குறுகிய காலக்கடன்களில் 5 சதவிகிதமும், மத்தியக் காலக் கடன்களில் 16. சதவிகிதமும, நீண்ட காலக் கடன்களில் 4 சதவிகிதமும், ஆதிதிராவிட மற்றும பழங்குடி வகுப்பைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்றன.

1986-87ஆம் ஆண்டில் இவ்வகை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் கடனின் அளவு குறுகிய





குடியவூர் விவசாயக் கூட்டுறவுச் சங்கத்தில் பங்கு தரம் அளிக்கப்படுகிறது.

காலக்கடன்களில் 8.8 சதவிகிதமாகவும், மத்தியக் காலக் கடன்களில் 18.2 சதவிகிதமாகவும், நீண்ட காலக் கடன்களில் 8.8 சதவிகிதமாகவும் உயர்த்தப்படும்.

விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களில் ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த உறுப்பினர்களை அதிகமாகச் சேர்க்கும் பொருட்டு தமிழக அரசே ஒரு நபருக்கு ரூ.100 மானியமாக வழங்கி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆறாவதுஐந்தாண்டுத்திட்டகாலததுல் 90,000 ஆதிதிராவிட உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர். 1985-86ஆம் ஆண்டு மேலும் 10,000 உறுப்பினர்கள் இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டனர். ஆக, திட்டம் ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 1985-86 வரை அரசு பங்குத் தொகையாக ஒரு கோடி ரூபாய் அளித்துள்ளது.

மேலும் விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ள ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த உறுப்பினர்கள் தேவையான அளவிற்குக் கடன்களைப் பெறுவதற்காக, கூடுதல் பங்குத்தொகை செலுத்துவதற்கும், உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் 250 ரூபாய் விதம் வட்டியில்லாக் கடனாக வழங்கப்படுகிறது. 1985-86ஆம் ஆண்டில் 2.59 இலட்ச ரூபாய் அளவிற்குக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. 1986-87ஆம் ஆண்டில் இவ்வகை உறுப்பினர்களில் 1250 பேர் இத்திட்டத்தின் கீழ் உதவி பெறுவர்.

கடன் நிவாரணச் சட்டம் இயற்றப்பட்டதால், நிறுவன அமைப்பில்லாத தனியார் நிறுவனங்களிடமிருந்து கடன் கிடைப்பது அரிதாகியதால் ஏற்பட்டுள்ள நிதித் தேவைகள் நகைமீட்டின் பேரில் அளிக்கப்படும் கடன்கள் மூலம் பூர்த்தி செய்யப்படுகின்றன. 1985-86ஆம் ஆண்டில் 2114 கூட்டுறவு அமைப்புகள் மூலம் 13.01 இலட்ச நபர்களுக்கு ரூ. 289.82 கோடி ரூபாய் அளவிற்கு நகைக்கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாண்டு வழங்கப்பட்ட நகைமீட்டுக் கடன்கள் எப்பொழுதும் இல்லாத அளவிற்கு அதிகமாக வழங்கப்பட்டுள்ளன.

1986-87ஆம் ஆண்டில் 300 கோடி ரூபாய் அளவிற்கு நகைக் கடன்கள வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள் சமுதாயத்தில் நலிந்த பிரிவினரின் அவசர நிதித் தேவைகளை நகைக்கடன்கள் வழங்குவதன் மூலம் பயன் விளையத்தக்க வகையில் பூர்த்தி செய்து வருவதன் வாயிலாக அவை சமுதாயத்தில் பின்தங்கிய பிரிவினரின் - குறிப்பாகக் கிராமங்களில் உள்ள வேளாண்மைச் சமுதாயத்தின் நலன்களைப் பாதுகாப்பதில் முக்கிய பங்கை ஆற்றி வருகின்றன.

ஆண்டொன்றுக்கு 4 சதவிகிதத்தில், தொழிற் கடன்களை நலிந்த பிரிவினர்களுக்கு மத்தியக் கூட்டுறவு வங்கிகள், உழவர் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள் தொடர்ந்து வழங்கி வருகின்றன. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி அங்கீகரித்துள்ள 22 வகையான சிறு தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்களில் ஏதேனும் ஒன்றை மேற்கொள்ள எல்லா வகையிலும் ஆண்டு வருவாய் ஊரகப் பகுதிகளில் 2,500 ரூபாய்க்கும், ஓரளவு நகர்ப்புறங்கள் மற்றும் நகரங்களில் 3,000ரூபாய்க்கும் மேற்படாமல் உள்ளவர்களுக்கு இக்கடன் வழங்கப்படுகின்றது.

இக்கடன் நபர் ஜாமீன் பேரில் ஒருவருக்கு நிரந்தர மூலதனச் செலவிற்காக 5,000 ரூபாயும், நடைமுறை மூலதனச் செலவிற்காக 2,000 ரூபாயும் ஆக மொத்தம் 7,000 ரூபாய் வரையில் வழங்கப்படுகிறது. இத்தகைய கடன்கள் 1985-86ஆம் ஆண்டில் 191.98 இலட்ச ரூபாய் அளவிற்கு வழங்கப்பட்டுள்ளன. இத்தகைய கடன்களைச் சமுதாயத்தின் நலிந்த பிரிவினர்களுக்கு 1986-87ஆம் ஆண்டிலும் மேற்குறிப்பிட்ட கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்ந்து வழங்கும்.

சமுதாயத்தில் நலிந்த பிரிவினரின் வருமானத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவதன் மூலம் நியாயமான விநியோக முறை உறுதி செய்யப்பட வேண்டும் என்ற அடிப்படை நோக்கத்தை வங்கிகள்நிறைவேற்றுவதற்கு ஏதுவாக, கூட்டுறவு நகர வங்கிகள் வழங்கும் கடன்களில் 60 சதவிகிதம் குடிசைத் தொழில் மற்றும் சிறுதொழில்கள் உள்ளிட்ட முதன்மைப் பிரிவிற்குச் சேர வேண்டும் என்று இந்திய ரிசர்வ் வங்கி வழிமுறை

களை வகுத்துள்ளது. எனவே தமிழகத்தில் செயல்படும் 135 கூட்டுறவு நகர வங்கிகள், குடிசைத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்களுக்காக வழங்கும் கடனளவை 1986-87ஆம் ஆண்டில் 5 கோடி ரூபாய்க்குக் குறைவில்லாமல் உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

மகளிர் நலனுக்காகவும், கூட்டுறவுச் சங்கங்கள் பணிபுரிகின்றன. விதவைகள் உட்பட நலிந்த பிரிவைச் சார்ந்த மகளிரும் குடிசைத்தொழில்களை மேற்கொண்டு, தம் வருவாயை அதிகரித்துக் கொள்ள ஏதுவாக சென்னை மற்றும் கோயம்புத்தூரில் மகளிர் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்களின் சிரமத்தைக் குறைத்து ஊதியத்தைப் பெருக்கும் வகையில் சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டார் பொருத்திக் கொள்ள உதவும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுகாறும் 217 சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்கள் பயன் அடைந்துள்ளனர். இவர்கள் ரிக்ஷாக்களில் மோட்டார் இயந்திரம் பொருத்திக் கொள்ள 2.15 இலட்ச ரூபாய்க்கு அரசு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

உடல் ஊனமுற்றோர் நலன் கருதி உடல் ஊனமுற்றோர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆறு ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மாவட்ட சமூக நல அலுவலர்களுடன் கலந்தாலோசித்து, சங்கங்களின் உறுப்பினர்களுக்குப் பயனுள்ள வேலைகளைத் தரக் கூடிய பணிகளை ஏற்று நடத்துவதற்கு ஏதுவாக இவை அமையும். இச்சங்கங்களின் நிதிநிலையை மேம்படுத்த இதுகாறும் 4 சங்கங்களுக்குத் தலா அரசு பங்கு மூலதனமாக ரூ. 50,000 வழங்கியுள்ளது. மேலும் இரண்டு சங்கங்களுக்கு 1986-87 ஆம் ஆண்டில் நிதியுதவி வழங்கப்படும்.

மாநிலத்தில் 13 பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 44,530 உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகின்றன. இச்சங் :ங்கள் தமது விவகார எல்லைகளில் உள்ள எல்லாப் பழங்குடியினர் குடும்பங்களையும் உறுப்பினர்களாக்கியுள்ளன. பழங்குடியினரின் நலிந்த பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டு அரசு இச்சங்கங்களுக்கு நிதியுதவி அளித்து வருகிறது. 1.4.1985 முதல் இச்சங்கங்கள் பழங்குடியினர் உறுப்பினர்களுக்கு வட்டியில்லாக் கடன்களை வழங்கி வருகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் சீரிய முறையில் சமூகப் பணிகளையும் புரிந்து வருகின்றன. இரத்த வங்கிக்கு மனமுவந்து இரத்ததானம் செய்தல், உடல் ஊனமுற்றோருக்குச் சக்கர நாற்காலி போன்ற துணைக்கருவிகளை வழங்குதல், ஏழை மகளிருக்குத் தையல் இயந்திரங்களைக் கொடுத்தல், தமிழ்நாடு சட்ட உதவி மற்றும் ஆலோசனை வாரியத்துக்கு நன்கொடை வழங்குதல், இலங்கைத் தமிழர் நிவாரண நிதிக்கு நன்கொடை வழங்குதல், முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்திற்கு நன்கொடை வழங்குதல் போன்ற மதிப்பு மிக்க சமூக சேவைகளையும் புரிந்து வருகின்றன.

நலிந்தோர் கடன் உதவி பெற்ற கல் உடைக்கும் தொழிலாளி.





# கூட்டுறவுக் கல்வி

மு. சுப்பையா,
தனி அலுவலர்,
தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்.



உறுப்பினர் கல்வித் திட்ட வகுப்பில் விளக்க உரை நிகழ்த்துதல்

சுமார் 80 ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு இயக்கம் இன்றைக்குத் தமிழ்நாட்டில் அருகுபோல் வேன்றி ஆல்போல் தழைத்து வளர்ந்துள்ளது. விவசாயக் கடன், நகர்ப்புறக் கடன், நுகர்வோர், விற்பனைத் தொழில், கிராமியத் தொழில், மீன் வளர்ச்சி, பால் பெருக்கம், வீடுகட்டுதல் போன்ற பலவிதமான நடவடிக்கைகளுக்கும் இன்று கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டு வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.

சங்க உறுப்பினர்களுக்கும், நிர்வாகஸ்தர்களுக்கும் அவர்களுடைய கடமைகளையும், பொறுப்புக்களையும் உணர்த்துவதுதான் கூட்டுறவுக் கல்வியாகும்.

ஒரு சில சமயங்களில் உறுப்பினர்கள் தங்கள் பொறுபபுக்கலை உணராத காரணத்தால் சங்கத்திற்கு அவர்கள் ஆற்ற வேண்டிய கடமையிலிருந்து தவறிவிடுகிறார்கள். இதைத் தொடர்ந்து சங்கத்தின் வளர்ச்சியும் பாதிக்கப்படுகிறது. இத்தகைய ஒரு நிலை கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிலும் குறிப்பாக, கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்களுக்கு ஏற்படக் கூடாதென்ற கருத்துடன் தமிழ்நாடு கூட்டுறவு ஒனறியம் உறுப்பினர் கல்வித் திட்டம் என்ற திட்டதைப் பரீட்சார்த்தமாக 1984-ஆம் ஆண்டில் நான்கு மாவட்டங்களிலும் பின்பு 1985-ஆம் ஆண்டு முதல் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர், மாநிலப் பதிவாளர் அவர்களின் ஆலோசனைப்படி தமிழ்நாடு முழுவதும் நிறைவேற்றிக் கொண்டு வருகிறது.

இத்திட்டத்தின்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கூட்டுறவு வளர்ச்சி அலுவலர் மற்றும் கல்வி பயிற்றுநர் பணியில் அமர்த்தப்பட்டு அவர்கள் ஒவ்வொரு சங்கத்தின் உறுப்பினர்களுக்கும் மாலைவேளைகளில் மூன்று நாள் கல்வி முகாம் நடத்துகிறார்கள். இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஓர் ஆண்டிற்குள்ளாகவே சுமார் ஒரு இலட்சம் உறுப்பினர்களுக்கு மேல் இத்திட்டத்தால் பயன் அடைந்திருக்கிறார்கள்.

இந்தியாவிலுள்ள பல்வேறு மாநிலங்களிலும் உறுப்பினர் கல்வித் திட்டம் நடைபெற்று வருகிறது என்றாலும்கூட தமிழ்நாட்டிலுள்ள திட்டத்தில் பல சிறப்பு அம்சங்கள் உள்ளன.

சங்க உறுப்பினர்களுக்குக் கூட்டுறவுப் பொருட்கள் மட்டுமின்றி அவர்களுக்குப் பயன்படக் கூடிய ஏனைய பொருட்கள் பற்றியும் உரைகள் நிகழ்த்தப்படுகின்றன. மண் பரிசோதனை செய்தல, விரிய விதைகள் பயன்படுத்துதல், இரசாயன உரங்களைபபயன்படுத்துதல், பயிர்கள் பாதுகாப்பு முறைகள் ஆகிய வேளாண்மைப் பொருள்கள் பற்றியும் கால்நடைகளிடையே காணப்படும் பொதுவான வியாதிகள், அதற்கு எடுக்கப்படவேண்டிய முதலுதவி, கால்நடைத் தீவனம, பால்பண்ணை அமைத்தல், கோழிப் பண்ணை அமைத்தல், மற்றும் ஆடு வளர்த்தல் போன்ற கால்நடைப் பொருட்கள் பற்றியும், குடும்பக் கட்டுப்பாடு, சுற்றுப்புறச் சூழ்நிலைகளைச் சுகாதாரத்துடன்



உறுப்பினர் கல்வித் திட்டம் – திரைப்படம் காட்டுதல்





உதவி வளர்ச்சி அலுவலர் வகுப்பு நடத்துகிறார்

வைத்துக் கொள்வது, குழந்தைகள் பராமரிப்பு போன்ற குடும்ப நலப் பொருட்கள் பற்றியும் விளக்கமாக எடுத்துரைக்கப்படுகின்றன.

வேளாண்மை, கால்நடை மற்றும் குடும்ப நலம் ஆகிய பொருட்கள் பற்றி, சம்பந்தப்பட்ட துறைகளைச் சார்ந்த அதிகாரிகள் எடுத்துரைக்கின்றார்கள். இந்தச் சிறப்புத் தன்மையை இந்திய அரசின் அதிகாரிகள் மற்றும் வெளிநாட்டிலிருந்து வந்த கூட்டுறவு அதிகாரிகள் ஆகியோர் மிகவும் பாராட்டியுள்ளார்கள்.

கூட்டுறவு சம்பந்தமான பல்வேறு பொருள்கள் பற்றியும், கூட்டுறவுச் சங்கங்களின் நடவடிக்கைகள் பற்றியும் விரிவாக அழகான வண்ண ஸ்லைடுகள் மூலம் காண்பிக்கப்படுகின்றன. ஒவ்வொரு ஸ்லைடும் காண்பிக்கப்பட்டவுடன் அதுபற்றிச் சில விளக்கங்களை உதவி வளர்ச்சி அதிகாரி தெரிவிப்பார். இந்த யுக்தி, உறுப்பினர் கல்வித் திட்டத்தில் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் கையாளப்பட்டு வருகிறது.

வண்ண ஸ்லைடுகள் மட்டுமின்றி, கூட்டுறவு இயக்கத்தின் பல நடவடிக்கைகள் பற்றியும் கூட்டுறவுக் கடனை உரிய காலத்தில் செலுத்த வேண்டிய அவசியம் பற்றியும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் தயாரித்துள்ள சினிமா படங்களும் ஒவ்வொரு நாளும் கல்வித் திட்ட வகுப்பில் காட்டப்படுகின்றன.

கூட்டுறவுக் கல்வியைப் போலவே கூட்டுறவுப் பயிற்சியிலும் கூட தமிழ்நாடு இதர மாநிலங்களைவிடப் பல வகையிலும் சிறந்து விளங்குகிறது.

நீண்ட காலப் பயிற்சி மட்டுமின்றி, பணியாளர்கள் அவ்வப்போது ஏற்படக்கூடிய மாறுதலைத் தெரிந்து கொள்ளும் வகையில் குறுகிய 'காலப்பயிற்சியும் தொடர்ந்து பெற வேண்டுமென்ற ஒரு நோக்கத்துடன் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் கூட்டுறவின் பல்வேறு துறைகளிலுள்ள அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு மூன்று தினங்கள் முதல் இரு வாரங்கள் வரையிலான குறுகிய காலப் பயிற்சிகள் நடத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் சென்னையிலும் மதுரையிலுமுள்ள கூட்டுறவுப் பயிற்சிக் கலலூரிகளுக்குச் சுமார் 8.00 இலட்சம் ரூபாய் வரை மானியமாக அளிக்கிறது.

இந்தியாவிலுள்ள ஏனைய எந்தக் கல்லூரியிலுமே இந்த அளவுக்கு அல்லது இதில் கால்பாகம் கூட மாநில ஒன்றியம் அல்லது மாநிலக் கூட்டுறவுச் சங்கம் நிதியுதவி தருவதில்லை. ஒன்றியம் மட்டுமின்றி தமிழக அரசும் மதுரை கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிக்கு மொத்தச் செலவில் 25 சதவிகிதத்தைக் கொடுக்கிறது. சென்னைக் கல்லூரியில் குறுகிய காலப் பயிற்சிக்காகச் சுமார் 1.00 இலட்சம் ரூபாய் தமிழக அரசு அளித்துள்ளது. கூட்டுறவுப் பயிற்சிக்குத் தமிழக அரசு எந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுத்து இருக்கிறதென்பதனை இதன் மூலம் அறியலாம்.

இளநிலைப் பயிற்சிக்காகத் தமிழ்நாட்டிலுள்ள ஏழு கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களிலும் பொது அடிப்படைப் பயிற்சிக்கென்று நீண்ட காலப் பயிற்சி நடைபெற்று வருகிறது. இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களிலும் இந்த அடிப்படைப் பயிற்சியின் காலம் 18 வாரம் முதல் 24 வாரம் வரைதான். ஆனால் தமிழ்நாட்டில் இதன் காலவரை 36 வாரம் ஆகும். இதற்குக் காரணம், கூட்டுறவுத் துறையில் பணிக்குச் சேருபவர்கள் கூட்டுறவு பற்றிய அனைத்துப் பொருட்களையும் மிகவும் விரிவாகவும், தெளிவாகவும் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற வகையில் பாடத் திட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதே.

கூட்டுறவுப் பயிற்சி விஷயத்திலும் வெறும் விரிவுரை மூலம் மட்டுமின்றி, சில சிறப்பு யுக்திகளைக் கையாண்டும் பயிற்சியாளர்களுக்குப் பாடங்களைக் கற்றுத் தரவேண்டுமென்ற நோக்கத்துடன் ஓவர்ஹெட் புரொஜெக்டர் போன்ற நவீன கருவிகளைப் பயிற்சி நிலையங்கள் பயன்படுத்தி வருகின்றன. மேலும் கூட்டுறவுப் பாடங்களின் திட்டத்திற்கு ஒப்ப தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் பயிற்சியாளர்களுக்குப் பயன்படும் வகையில் பாடநூல் புத்தகங்கள் வெளியிட்டிருக்கிறது.

1986-ஆம் ஆண்டு ஆகஸ்டு புதுடெல்லியில் நடந்த தேசியக் கூட்டுறவுப் பயிற்சி மாநாட்டில் தமிழ்நாட்டின் இத் திட்டத்தைப் பாராட்டியது மட்டுமின்றி, இதை இதர மாநிலங்களும் செயல்படுத்த வேண்டுமென்ற ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்கள் அருகாமையிலுள்ள கிராமங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களைத் தத்து எடுத்துக் கொண்டு, இரண்டு வாரத்திற்கு ஒருமுறை அங்குச்சென்று சங்கம் வளர்வதற்கான ஆலோசனைகளைக் கூறுவதுடன், நேரடியாகவே சில நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

கூட்டுறவுக் கல்வி மூலமும், பயிற்சி மூலமும் சிறந்த உறுப்பினர்களையும், பணியாளர்களையும், கூட்டுறவு இயக்கத்திற்குத் தயார் செய்து கொடுக்கும் மிகப் பெரிய பணியில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் ஈடுபட்டிருக்கிறது. இந்தப் பணிகளை நிறைவேற்றும் முறைகளில் பல மாநிலங்களிலும் இல்லாத வகையில் சில சிறப்புத் தன்மைகளையும் பெற்றிருக்கிறது.

இத்தன்மைகள், தேசிய அளவிலுள்ள அதிகாரிகளும், இதர மாநில அமைச்சர்களும், அதிகாரிகளும் வெளிநாட்டவரும் பாராட்டும் வகையில் அமைந்துள்ளன.

கூட்டுறவு நிறுவனங்கள் ஆற்றி வரும் பணிகள், சாதனைகள், செயல் திட்டங்களை அனைவரும் அறிந்து பயன்பெறும் வகையில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் பிரச்சாரப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த வகையிலும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் பிற மாநிலங்களைவிட முன்னணியில் நிற்கின்றது என்று கூறமுடியும்.




# கூட்டுறவில் ஒரு விடிவெள்ளி

சென்னை நகர மக்களால் எம். சி. சி. வங்கி என அன்புடன் அழைக்கப்படும் இவ்வங்கியின் துவக்கம்1930-ல் தொடங்கி, இன்று 37 கிளைகளுடன் விரிந்து 'வைர விழா' நோக்கி விரைந்து வளர்ந்து வருகிறது. நகரில் உள்ள அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நிதியுதவி செய்து வரும் எம். சி. சி. வங்கி பிரதம கூட்டுறவு சங்கங்களுக்கும் நிறைய உதவி வருகிறது. வங்கியின் பங்கு மூலதனம் ரூ. 500 இலட்சமாகும். இது தவிர தமிழ்நாடு அரசும் கூட்டுறவு வளர்ச்சிக்காக ரூ. 7.00 இலட்சம் பங்குத் தொகை வங்கியில் வைத்துள்ளது.

வைப்புகளுக்கு அதிக வட்டி தந்து நகர மக்களைக் கவர்ந்துள்ள இவ்வங்கி ரூ.56 கோடிக்கு மேல் வைப்புகள் பெற்று வளர்ந்து வருகிறது. இவ்வங்கியின் பல பெருமைமிகு திட்டங்கள், பணிகள் மூலம் சென்னை மக்கள் மட்டுமல்லாது தமிழக மக்களும் மற்ற மாநில மக்களும் எம். சி. சி. வங்கி பற்றி நன்கு தெரிந்து கொண்டுள்ளார்கள்.

வங்கி நடமாடும் கிளையொன்றை நகரில் பணியில் விட்டு பார் புகழ் கொண்டுள்ளது. பாமர மக்களிடம் இக்கிளை சுமார் 25.00 இலட்சம் வைப்புகளை ஈட்டியுள்ளது இதன் சிறப்பாகும். லாப நோக்கு ஏதுமின்றி 'சேவை' ஒன்றே குறிக்கோளாக நடமாடும் கிளை இயங்கி வருகிறது.

இத்துடன் நகரெங்கும் நிறைந்துள்ள எம்.சி.சி. வங்கிக்கிளைகள் மூலம் வங்கி துரித முன்னேற்றம் கண்டு 1986-ஆம் ஆண்டில் 48.22 சதவீதம் வைப்பு வளர்ச்சி விகிதம் பெற்று நாட்டுடைமை வங்கிகளை விடச் சிறப்புப் பெற்றுள்ளது. இதன் காரணமாகவே தமிழ்நாட்டில் உள்ள மற்றெந்த மத்தியக் கூட்டுறவு வங்கிகளையும்விட அதிக லாபம் பெற்று முதலிடத்தில் உள்ளது.

பலதரப்பட்ட மக்களும் நாடி வரும் எம். சி. சி. வங்கியில் அனைவருக்கும் ஏற்றவகையில் ஒரு வைப்புத் திட்டம் உள்ளது. குழந்தைகளுக்காக கவர்ச்சியான வட்டி விகிதத்தில் அழகிய இலவச உண்டியல் ஒன்றுடன் சேமிப்புக் கணக்கு உள்ளது. இதில் பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் கணக்குகளைத் துவக்கியுள்ளனர். இதன் மூலம் வங்கி சேமிப்புப் பழக்கத்தை இளமையிலே அவர்களுக்கு வளர்த்து வருகிறது.


வெ. மோகனகிருட்டிணன்
தனி அலுவலர்,
சென்னை மத்தியக்கூட்டுறவுவங்கி.


இதுபோல் கல்லூரியில் மாணவ மாணவியர்களுக்காகவே 'கலைமகள்' என்ற சிறப்புத் திட்டத்தினை வங்கி உருவாக்கியுள்ளது. மாதா மாதம் சேமிக்கும் பணத்தைக் கல்லூரித் திறப்பின் போது திரும்பப்பெற்றுக்கல்லூரிக் கட்டணங்களைப் பெற்றோர் சிரமமின்றிச் சமாளிக்க இத்திட்டம் பெரிதும் உதவும்.

முதியவர்களுக்காகக் கற்பகம் இரட்டை ஓய்வூதியத் திட்டம் போன்ற வசதியான திட்டங்கள் பணிஓய்வுக்காலத்திற்குப் பிறகும் நிரந்தர வருமானம் பெற உதவும் திட்டமாகும். இவை அனைத்துக்கும் மேலாக, சமீபத்தில் எம். சி. சி. வங்கியில் அறிமுகம் செய்யப்பட்ட 'வீட்டு சேவைத் திட்டம்' இல்லங்கள் அனைத்தையும் கவர்ந்து, உள்ளங்களைக் கொள்ளை கொண்ட திட்டமாகும்.

இதன் மூலம் ரூ. 500 தொடர்ந்து கணக்கில் வைத்துள்ள ஒரு வாடிக்கையாளர் தனது இல்லக்கிழத்தியோ, தானோ நேரில் சென்று செலுத்த வேண்டிய நானாவிதக் கட்டணங்களையும் வங்கி மூலமே நிறைவேற்றிக் கொள்ள இயலும். உதாரணமாக, மாதாமாதம் செலுத்திப்பெறவேண்டிய ஆவின் பால் அட்டைகள், பேருந்து சீசன் டிக்கட்டுகளை வங்கி பெற்றுத்தரும். மேலும், வீட்டு வசதி வாரியப்பராமரிப்பு மற்றும் தவணைத் தொகைகள், தண்ணீர் வரி, மின்சாரக் கட்டணம், பள்ளி, கல்லூரிக்கட்டணங்களைவங்கியே செலுத்தி வாடிக்கையாளர் சிரமங்களைக் குறைக்கிறது. இந்த அரிய சேவையை அனைவரும் பாராட்டுகின்றனர்.

இத்துடன் கடன் வசதி வழங்குவதிலும் எம். சி. சி. வங்கி முன்னணியில் உள்ளது. நகர மக்களின் பொருளாதார மேம்பாட்டில் இவ்வங்கி பெரும் பங்கு வகிக்கிறது எனச் சொன்னால் அது மிகையில்லை. 4 சதவீதக்குறைந்த வட்டியில் சிறு கைத்தொழில் மற்றும் குடிசைத் தொழில்கள் செய்ய ரூ. 7,000 வரை ஏழை மக்களுக்குக் கடன் தந்து அவர்கள் வாழ வசதி செய்துள்ளது.

மேலும் நடுத்தர மக்களின் தேவைகளையும் புரிந்து கொண்டுள்ள எம். சி. சி. வங்கி இன்றைய காலத்தில் அத்தியாவசிய தேவைகளாகிவிட்ட தொலைக் காட்சிப் பெட்டிகள், குளிர் சாதனப் பெட்டிகள் போன்ற வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கிடவும் ரூ. 7,500 பொதுமக்களுக்கு வழங்கி இதுவரை எந்த வங்கியும் தந்திராத அளவு இவ்வகையில் ரூ. 50 இலட்சம் தந்து நடுத்தர வர்க்கம் நல்லதொரு வாழ்க்கை நடத்திட உதவி வருகிறது.

## மாநிலத்தில் முதல் நடமாடும் கூட்டுறவு

1980ம் ஆண்டு மே மாதம் முதல் சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி தனது நடமாடும் கிளையை இயக்கி வருகிறது. தமிழ் நாட்டில் வங்கி வரலாற்றிலேயே புதுமையான திட்டமாக நடமாடும் கிளை ஒன்றை சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி துவக்கியுள்ளது. இது வாடிக்கையாளர்களுக்கு அளிக்கப்படும் மாறுபட்ட புதிய சேவையாகும். இந்தியாவிலேயே மூன்றாவதாக இங்குதான் நடமாடும் கிளை உள்ளது. இந்த நடமாடும் கிளை எல்லா விதமான வங்கிப் பணி வசதிகளை இட்டு வைப்பாளர்களுக்கு வழங்குவது மட்டுமின்றி சிறு சேமிப்பு இட்டு வைப்பு சேகரிப்பதில் முழு கவனத்தையும் ஒருங்கே செலுத்தி வருகின்றது.





# நியாயவிலைக் கடைகள்

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டமைப்பு-3039 கல்லூரி மற்றும் உயர்நிலைப்பள்ளி மாணவர் கூட்டுறவுப் பண்டகச் சாலைகள், 301 தொழிற்சாலை மற்றும் தோட்டத் தொழிலாளர் பண்டக சாலைகள், 15 மகளிர் கூட்டுறவுப் பண்டக சாலைகள் உட்பட 3,848 பிரத கூட்டுறவுப் பண்டக சாலைகள் அவற்றின் 550 கிளைகளையும், 29 கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலைகளையும் அவற்றின் 1,686 கிளைகளையும் மாநில நுகர்வோர் கூட்டுறவு இணையத்தையும் கொண்டுள்ளது.

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செய்த சில்லறை விற்பனையின் மதிப்பு 1984-85-ஆம் ஆண்டில் 285 கோடி ரூபாயிலிருந்து, 1985-86ஆம் ஆண்டில் 31.1.86 முடிய 505 கோடி ரூபாய்க்கு உயர்ந்துள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் 1984-85ஆம் ஆண்டில் செய்துள்ள சில்லறை விற்பனையின் மதிப்பு நாடு முழுவதிலும் உள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செய்துள்ள சில்லறை விற்பனையின் மதிப்பில் மூன்றில் ஒரு பங்காகும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியாண்டு இலக்கான 450 கோடி ரூபாய்க்கும் அதிகமாகத் தற்போதே 1986-87ஆம் ஆண்டில் 500 கோடி ரூபாய்க்கு நுகர்பொருள் சில்லறை விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

## கிராமங்களில் இன்றியமையாப் பொருட்கள் விற்பனை

இன்றியமையாப் பொருட்களை விற்பனை செய்ய, ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திலும் ஒரு நியாய விலைக்கடை துவக்கி நடத்தும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மாநிலத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒதுக்கப்பட்ட வருவாய்க் கிராமங்களில் 11,159 நியாய விலைக் கடைகள் நடத்தப்பட்டன. குடும்ப அட்டைதாரர்கள் நியாய விலைக்கடைகளிலிருந்து இன்றியமையாப் பொருட்களை விரைவில் வாங்கிச் செல்வதற்கு ஏதுவாக ஓராயிரம் குடும்ப அட்டைகளுக்கு மேல் கொண்டிருந்த நியாய விலைக்கடைகள் இரண்டாகப் பிரிக்கப்படவேண்டும் என்ற அரசின் தீர்மானத்திற்கு இணங்க, கூடுதலாக 1437 கடைகள் ஊரகப் பகுதிகளில் திறக்கப் பட்டன. இதனால் தற்போது 12,596 நியாய விலைக் கடைகள், கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

விற்பனையாளர்கள் சம்பளம், வாடகை மற்றும் இதர சில்லறை செலவுகளுக்காக, கிராமக் கடைகளுக்கு அரசு தொடர்ந்து மானிய உதவி வழங்கி வருகிறது. 12.4.85லிருந்து கிராமக் கடை விற்பனையாளர்களின் சம்பளம் 150 ரூபாயிலிருந்து 200 ரூபாய்க்கு உயர்ந்ததால், அதிகப் பட்சத்தொகையாக, ஒவ்வொரு முழுநேரக் கடைக்கு 3,600 ரூபாய்க்குட்பட்டும், ஒவ்வொரு பகுதி நேரக்கடைக்கு 2,400 ரூபாய்க்குட்பட்டும், ஒவ்வொரு மாற்றியமைக்கப்பட்ட கடைக்கு 804 ரூபாய்க்குட்பட்டும், அரசு மானிய உதவி வழங்குகிறது.

கிராமக் கடைகள், 1984-85ஆம் ஆண்டில் 126.20 கோடி ரூபாய் அளவிற்கே விற்பனைசெய்திருக்க, 1985-86ஆம் ஆண்டில் 31.12.85 வரை 151.46 கோடி ரூபாய் அளவிற்கு இன்றியமையாப் பொருட்களை விற்பனை செய்துள்ளன. இவ்வாறாக, கிராமக்கடைகளில் பொருட்களின் விற்பனை கணிசமான அளவு உயர்ந்துள்ளது.

பொது விநியோகத் திட்டத்தில் கூட்டுறவுகளுக்குப் பெரும் பங்கை அளித்து அதனைத் திறம்படச் செயற்படுத்தி வருவதில், நாடு முழுவதற்கும் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது. திறமையுடன் செயற்படுத்தப் பட்டு வரும் பொது விநியோகத் திட்டம், இன்றியமையாப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதிலும், சரியான நேரத்தில் உரிய முறையில் பொதுவாக மக்களுக்கு -குறிப்பாக நலிந்த பிரிவினர்க்கு விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்வதிலும், உதவி செய்கிறது என்ற ஒருமித்த கருத்து எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப் படுகிறது.

எந்த ஒரு தனியார் நிறுவனமும் இதில் ஈடுபடுத்தப்படவில்லையென்தே தமிழ்நாட்டில் உள்ள பொது விநியோகத்தின் தனித்தன்மையாகும். கிராமப்பகுதி அளவில், விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களும் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகமும் இக்கடைகளை நடத்திவரும் பொறுப்பை ஏற்றுள்ள நிறுவனங்களாகும். கூட்டுறவுச் சங்கங்கள் மாநிலத்தில் உள்ள கடைகளில் 75 சதவீதக் கடைகளை நடத்தி, மொத்த முள்ள 120 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களில், 90 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்குச் சேவை செய்து வருகின்றன.

## 2-வது அட்டை சொல்லும் செய்திக் கட்டுரை



# இல்லத்தரசியின் இனிய கனவு

தமிழகத்தில் நுகர்வோரின் தேவையறிந்து நுகர் பொருட்களை வழங்கி அரிய சேவை புரிந்து வருவதில் கூட்டுறவுச் சிறப்பங்காடிகள் சிறப்பிடம் வகிக்கின்றன.

தரமான பொருட்களைச் சரியான எடை அளவில் நியாய விலையில் வழங்கும் பணியில் தமிழகத்திலுள்ள நுகர்வோர் கூட்டுறவு நிறுவனங்கள் முன்னணியில் நிற்கின்றன.

எல்லாவகையிலும் புதுமைகள் செய்து வழிகாட்டி முன்னோடியாகத் திகழும் தமிழகம் நுகர்வோர் பணியில் நுகர்வோரின் நலன் கருதி அண்மையில் சில புதுமைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

கூட்டுறவுச் சிறப்பங்காடிகளில் பொருட்களை வாங்கும் வாடிக்கையாளர்கள் பல பிரிவுகளுக்குச் சென்று பொருட்களைக் காத்திருந்து வாங்க வேண்டியிருந்த காலம் மாறிவிட்டது.

தற்போது நுகர்வோர் இயக்கத்தில் ஒரு திருப்புமுனையாகக் கூட்டுறவுச் சிறப்பங்காடிகளில் சுய சேவைப் பிரிவுகள் துவக்கப்பட்டுள்ளன. மிகப்பெரிய அளவில் விரிவான இடத்தில் வாடிக்கையாளர்களின் வசதிக் கேற்ற வண்ணம் சுயசேவைப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

நுகர்வோர்கள் தாங்கள் விரும்பும் பொருட்களை உரிமையுடன் எடுத்து, தரத்தைக் கண்டறிந்து விலைகளை ஒப்பிட்டுப் பார்த்த பிறகு வாங்குவதையே பெரிதும் விரும்புகின்றனர். நுகர்வோரின் இந்த மனப்பாங்கினைப் பூர்த்தி செய்யவே கூட்டுறவுச் சிறப்பங்காடிகளில் சுய சேவைப் பிரிவுகள் துவக்கப்பட்டுள்ளன.

அடர்ந்த சோலையில் பல்லாயிரம் மலர்கள் அழகூட்டுவது போல ஒரே இடத்தில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பல் வகைப் பொருட்கள் கண்ணையும், கருத்தையும் கவரும் வண்ணம் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் காட்சி வாடிக்கையாளருக்கு அழைப்பு விடுப்பது போலத் தோன்றும்.

சிறுவர் முதல் பெரியோர்வரை எல்லோருடைய தேவைகளுக்கும் ஏற்றவாறு எல்லாப் பண்டங்களும் சுய சேவைப் பிரிவிலே கிடைக்கும்.

வாடிக்கையாளர்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களைத் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

ஒவ்வொரு பொருளின் மேலும் அதன் விலை குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்.

தாராளமாகச் சுற்றிப் பார்த்துப் பொருட்களைத் தேர்ந்தெடுக்கலாம்.

* அந்தந்தப் பகுதிக்கேற்றவாறு வழி காட்டும் பெயர்ப் பலகையும் பொருத்தப்பட்டுள்ளது.

* பொருட்களைத் தேர்ந்தெடுத்து வைத்துக் கொள்ளத் தேவையான பிளாஸ்டிக் கூடைகளும் தரப்படுகின்றன.

* அதிக அளவு பொருட்களை வாங்க வேண்டியிருந்தால் சக்கரம் பொருத்தப்பட்ட வண்டியில் வைத்துச் சுலபமாகத் தள்ளிச் செல்லலாம்.

* விரைவில் விலைப் பட்டியல் தயாரித்து பில்போட வசதி செய்யப்பட்டுள்ளது. அதற்காகக் காத்திருக்க வேண்டியதில்லை.

* பொருட்களை வீடுகளுக்கு எடுத்துச் செல்ல அழகான பாலிதீன் பைகள் தரப்படுகின்றன.

* சுயசேவைப் பிரிவில் விற்கப்படும் பொருட்கள் நியாய விலையிலும் தரமானதாகவும் இருக்கும்.

* தமிழகத்தில் 14 சுயசேவைப் பிரிவுகள் கூட்டுறவுச் சிறப்பங்காடிகளில் அமைக்கப்பட்டுள்ளன. பழம்பெரும் நுகர்வோர் கூட்டுறவு நிறுவனமான டி.யு.சி.எஸ்.-ல் அமைக்கப்பட்டுள்ள சுயசேவைப் பிரிவு ஒரு புதுமையான அமைப்பு. இந்தியாவிலேயே மிகப் பெரிய இரண்டாவது சுயசேவைப் பிரிவு இதுதான்.

* கூட்டுறவுச் சிறப்பங்காடியின் சுயசேவைப் பிரிவில் பண்டங்களை வாங்குவது...

குடும்பத்துக்கே ஒரு பொழுது போக்கு!

குறைந்தவிலையில் சிறந்த பொருட்களை ஒரே இடத்தில் வாங்கலாம்!

இல்லத்தரசிகளின் இனிய கனவு இதனால் நனவாகிறது!



## ஒருமைப்பாடே உயிர் மூச்சாகும் – நேரு



நம்முடைய தேசத்தின் ஒற்றுமைக்கு, ஐக்கியத்துக்கு இடையூறு செய்து அதைப் பலவீனப்படுத்தும் செயலைச் செய்வது, பாரத சமுதாயத்தினால் மன்னிக்க முடியாததொரு கொடுஞ்செயல் என்றே நான் விளக்க முற்படுகிறேன்,

இந்திய ஐக்கியம் இந்தியர் ஒவ்வொருவரின் உயிர் மூச்சாகும். இந்திய ஐக்கியத்தைச் சிதைக்க எண்ணும் எந்தவொரு ஆணும், பெண்ணும் தற்கொலை செய்து கொள்ள முயலுகிறார் என்றுதான் அர்த்தம். தற்கொலை முயற்சியில் ஈடுபடும் எவனையும், மனிதத் தன்மையிலிருந்து கீழிறங்கியவன் என்றுதான் நான் கருதுகிறேன்.

தேச ஐக்கியத்துக்கு ஊறு செய்பவர்கள் என்று நான் குறிப்பிடும் போது, வெறும் பிரிவினைவாதிகளை மட்டுமே நான் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை. வகுப்பு வாதம், மாகாணப் பித்து, சாதி வெறி ஆகியவையும் தேச ஐக்கியத்தின் எதிர்ச் சக்திகள் என்று நான் கூறுகிறேன். மொழிப் பிரச்சினைகளைப் பிரமாதப்படுத்திக் கூச்சலிடுவதைக் கூட, முற்றிலும் சரியான முறை என்று நான் ஒப்புக் கொள்ளவில்லை.

திண்மையும், தீரமும் வாய்ந்ததாக நம்முடைய தேசிய சமுதாயம் இருக்க வேண்டும். அதன் மக்கள், சகோதர பாவத்துடனும் ஐக்கிய உணர்வுடனும் இணைந்திருக்க வேண்டும். ஒரு தேசிய சமுதாயத்துக்கு ஆக்கம் அளிக்கின்ற மனோபாவ ரீதியான, இதயபூர்வமான, ஆன்மீகரீதியான ஐக்கியத்தை உருவாக்குவதுதான் ஜீவாதாரமான செயல் முறையாகும்.

உணர்ச்சிபூர்வமான ஒருமைப்பாடு நமக்குத் தேவை. லோகாயுத ரீதியில் நாம் முன்னேற்றம் காணலாம். ஆனால், மனவேறுபாடற்று ஒத்துவாழவும், ஒத்துழைக்கவும் நம்மால் முடியாவிட்டால் இந்த முன்னேற்றத்தின் பயனெல்லாம் வியர்த்தமாகத்தான் முடியும்.

'நமது சமுதாயம்' என்று பெருமையுடன் நாம் கூறிக் கொள்வதெல்லாம் பாரத சமுதாயத்தைப் பற்றியதாகத்தான் இருக்க வேண்டும். நமது நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் இதனுள் அடக்கம்.



இந்தியாவில் ஏராளமான மதங்கள் இருந்தன; இருக்கின்றன. இந்தியாவின் ஒவ்வொரு மதத்திற்கும் தனிச்சிறப்புகள் உண்டு என்பதை நன் ஒப்புக் கொள்கிறேன். இந்திய மதங்கள் எல்லாமே நம்முடைய மரியாதைக்கு உரியவைதான்.

நாம் சொந்த வாழ்வில் எந்த மதத்தை வேண்டுமானாலும் பின்பற்றலாம். எந்த விதத் தடங்கலும் இல்லை. ஆனால் நாம் எல்லோருக்குமாகச் சேர்ந்து 'பொது மதம்' ஒன்று இருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது. இந்த மதத்தை 'இந்தியமதம்' என்று அழைப்போமே!

இந்த மதத்தின் அடிப்படை ஒன்றே ஒன்றுதான்! இந்தியச் சமுதாயத்தைச் சேர்ந்த எல்லோருக்கும் உடல் வெவ்வேறாக இருந்தாலும், உயிரும், உணர்ச்சியும் ஒன்று என்பதுதான் இந்த மதத்தின் தத்துவம்.

நீங்கள் எந்தக் காரியத்தைத் தொடங்குவதாக இருந்தாலும் தொடங்குவதற்கு முன்னால் அதன் மூலம் ஒற்றுமை ஏற்படுமா, பிளவு ஏற்படுமா என்று உங்களையே கேட்டுக் கொள்ள வேண்டும். உங்களுடைய செயல்களையெல்லாம் மதிப்பிடுவதற்கான உரைகல் இதுவே.

மக்களை ஒன்று சேர்க்கின்ற காரியங்கள் எல்லாம் நல்லவை; மக்களைப் பிரித்து வைக்கும் காரியங்கள் எல்லாம் கெட்டவை.

கட்டுப்பாடும், ஐக்கியமுமே நமது தேசத்திற்கு முதலில் தேவை. ஒன்றாக அடியெடுத்து வைக்கும் இராணுவக் கட்டுப்பாட்டை நான் குறிப்பிடவில்லை; இதயபூர்வமான, மனப்பூர்வமான கட்டுப்பாடும், ஐக்கியமுமே தேவை.



## தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி

இவ்வங்கி 1905-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் இருபத்து மூன்றாம் நாள் பதிவு செய்யப்பட்டு அம்மாதம் இருபத்தாறாம்தேதி முதல் சென்னை மத்திய நகர வங்கி என்ற பெயரில் பணி துவக்கப்பட்டது. இவ்வங்கியின் தற்போதைய அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 5 கோடியாகும். வங்கியின் தற்போதுள்ள (30-6-86) செலுத்தப்பட்ட மூலதனத்தொகை ரூ. 5.45 கோடியாகும். இது தமிழக அரசின் ரூ. 1.26 கோடியும், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலுள்ள 17 மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் பங்குத் தொகையான ரூ. 4.17 கோடியும் உள்ளிட்டதாகும்.

**வளர்ச்சி:**

இவ்வங்கியில் பொது மக்களின் இட்டுவைப்புத் தொகை 1976-ஆம் ஆண்டில் ரூ. 39.38 கோடியாக இருந்து 30-6-86

**ஆ. சண்முகம்**
**தனி அலுவலர்,**
**தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி.**

அன்று ரூ. 201.90 கோடியாகவும், 31-8-86 அன்று ரூ. 204.58 கோடியாகவும் உயர்ந்துள்ளது. இவ்வங்கியின் வைப்புத்தொகை வளர்ச்சி மற்றும் வழங்கிய நேரடி மறுநிதிக் கடன்கள் வருமாறு:

| வருடம் | வைப்புத் தொகை (ரூபாய் கோடியில்) | கடன்கள் (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1980—81 | 170.57 | 109.72 |
| 1981—82 | 158.47 | 186.38 |
| 1982—83 | 141.10 | 203.29 |
| 1983—84 | 158.00 | 244.48 |
| 1984—85 | 177.22 | 266.76 |
| 1985—86 | 183.93 | 330.40 |

(31-12-85) வரை

இவ்வளர்ச்சி வங்கியின் மீதான பொதுமக்களின் பேராதரவையும் பெருநம்பிக்கையையும் பிரதிபலிக்கிறது.

தற்போது சென்னை நகரில் இவ்வங்கியின் 34 கிளைகள் இயங்கி வருகின்றன. பெரும்பாலும் குடியிருப்புப் பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள இக்கிளைகள் சனிக்கிழமை காலையிலும், மற்ற வேலை நாட்களில் வங்கியின் வாடிக்கையாளர்களின் வசதியை முன்னிட்டு தினசரி காலையிலும் மாலையிலும் இரண்டு முறை செயல்பட்டு வருகின்றன. வங்கியின் தலைமையகமும் 23 கிளைகளும் பாதுகாப்புப் பெட்டக வசதியுடன் செயல்படுகின்றன.

## சென்னை நகர கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம்

சென்னை நகரக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் தமிழகத்தின் தலைநகராம் சென்னை மாநகரில் 1912-ஆம் ஆண்டில் மூக்காத்தாள் தெருவில் தொடங்கப்பட்டு, படிப்படியாக வளர்ந்து 1936-ஆம் ஆண்டில் சென்னை நகரின் மையப்பகுதியிலே 18 மனைகளுடனும், ஒரு பெரிய கட்டடத்துடனும் வாங்கப்பட்டு மென்மேலும், வளர்ச்சியுற்று, சென்னை நகர மக்களுக்குக் கடந்த 74 ஆண்டுகளாக மக்களின் தேவையறிந்து சேவை செய்து ஆலமரம் போல அழகுடனும், வலிமையுடனும் வளர்ந்து பணிபுரிந்து வருகிறது.

சங்கத்திற்குச் சொந்தமாக 1972-ஆம் ஆண்டு ஒரு உறுதியான வசதி நிறைந்த கட்டடம் கட்டப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது.

அதன் பின்பு சங்கத்தின் 60-ஆம் ஆண்டு விழாவினை விமரிசையாகக் கொண்டாடியபோது அந்த வைபவத்தில் அப்போதைய இந்தியக் குடியரசுத் தலைவர் மேதகு வி. வி. கிரி அவர்கள் வருகை தந்து சிறப்புரை ஆற்றியது சங்க வளர்ச்சிக்கு மற்றுமொரு சான்றாக விளங்குகிறது.

குன்றின் மீது ஏற்றி வைத்த விளக்காக ஏற்றத்தாழ்வு கருதாமல் அனைவருக்கும் நம்பிக்கை ஒளிவீசி 30-6-85-ஆம் ஆண்டின் இறுதியில் நல்ல முறையில் பணியாற்றி தாய்ச் சங்கமான தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தின் உதவியுடன் வீடுகட்டடகடனாக 4.18 கோடி ரூபாய் பட்டுவாடா செய்துள்ளது பிரதம வீட்டு வசதி சங்கங்களின் வரலாற்றில் ஒரு மாபெரும் சாதனையாகத் திகழ்வதோடு தமிழகத்தில் வேறு எந்தப் பிரதம வீட்டு வசதிச் சங்கமும் இச் சாதனையை எட்டவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.





## கால்நடை வளர்ப்போம்!

தமிழ்நாட்டில் செம்மறி ஆடு வளர்ப்பு ஊரக வளர்ச்சியின் மேம்பாட்டிற்கு மிகப் பெரும் அளவில் துணை புரிந்து வருகிறது. செம்மறி ஆடு வளர்ப்பு மலைவாழ் மக்கள் வறட்சிப் பகுதியில் வாழும் மக்கள் மற்றும் சிற்றூர்களில் வாழும் ஏழை எளிய மக்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கிறது. சிற்றூர்களில் வாழும் ஏழைக்குடியானவர்களுக்கு (உழவர்கள்) ஆடு வளர்ப்பு ஒரு சிறந்த துணைத் தொழிலாக இருப்பதால், கிராமப்புறங்களில் செம்மறி ஆடு இனப் பெருக்கம் மிக விரைவாக முன்னேறி வருகிறது.

கோழி வளர்ப்பைக்குலத்தொழிலாகக்கொண்டவர்களின் நலத்திற்காகவும், இதனைத்துணைத் தொழிலாகக் கொண்டுள்ள ஏழை மக்களின் நலத்திற்காகவும் கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழகத்தில் துவக்கப்பட்டுள்ளன. 30.6.86 முடிய 150 கோழி வளர்ப்புக்கூட்டுறவுச்சங்கங்கள் உள்ளன. இவற்றுள் 18 சங்கங்கள் மிகவும் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன.

ஆடு வளர்ப்பைக் குலத்தொழிலாகக் கொண்டுள்ளவர்களின் நலத்திற்காகவும், ஆடு வளர்ப்பைத் துணைத்தொழிலாக கொண்டுள்ள ஏழைக் குடியானவர்களின் நலத்திற்காகவும் ரூ. 83 இலட்சம் செலவில் வேளாண்மை மறு நிதிக் கழகத்தின் உதவியுடன் ஆடு இனப் பெருக்கத் திட்டத்தைத் தமிழக அரசு செயல்படுத்தியுள்ளது. 39 ஆடு வளர்ப்புக்கூட்டுறவுச்சங்கங்கள் தொடங்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ. 83 இலட்சம் ஆகும். வேளாண்மை மறுநிதிக் கழகம் ரூ. 38.21 இலட்சம் அளித்துள்ளது. தமிழக அரசு 12.7 இலட்சம் வழங்கியுள்ளது.

### சிறப்புக் கால்நடைப் பராமரிப்புத் திட்டம்

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் ஏழை எளிய சிறிய குடியானவர்களின் வருமானத்தை ஆடு வளர்ப்பு மூலம் பெருக்குவது ஆடு வளர்ப்பில் புதிய அறிவியல் முறைகளைப் புகுத்தி நல்லதரமான ஆடுகளைப்பெரும் அளவில் உற்பத்திச் செய்வது ஆகியவையாகும். இத்திட்டம் மத்திய அரசால் உருவாக்கப்பட்டது. ஆகும

இத்திட்டமானது சேலம், வட ஆர்க்காடு மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஐந்தாவது மறறும ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 17,994 யூனிட்டுகள் நிறுவப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் ஒரு அலகு(யூனிட்டு)க்கு 20 பெட்டை ஆடுகளும் ஒரு கிடாவும் அடங்கியுள்ளன.மேலும் இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு யூனிட்டுக்கும் ரூ. 4,500 அதில்

**எஸ். ரங்கராஜ்**
**இயக்குநர்,**
**கால்நடைப்பராமரிப்புத் துறை,**
**சென்னை.**

சிறிய விவசாயிகளுக்கு ரூ.1,125 25%நடுத்தர விவசாயிகள் மற்றும் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு ரூ. 1,500 (33 1/3%) மானியமாக வழங்கப்படுகிறது. மீதியுள்ள தொகை வங்கிக் கடன் மூலம் அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் உள்ள ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள்யாவும்,நாட்டுடைமையாக்கப்பட்டுள்ள (தேசியமயமாக்கப்பட்டுள்ள) வங்கிகளிடமிருந்தும், கூட்டுறவு வங்கிகளிடமிருந்தும் கடன் பெற்று நன்மை அடைகின்றன. இதுவரை ரூ.192.1 இலட்சம் மான்யமாக வழங்கப்பட்டுள்ளது.

4.12.1979ல் இந்திய அரசால் நடைபெற்ற சிறப்புக் கால்நடை பராமரிப்புத் திட்ட ஆய்வுக்குழு கூட்டத்தில் இத்திட்டம் தமிழ்நாட்டில் முழு அளவில் வெற்றி பெற்றிருப்பது ஆடு இனப் பெருக்கம் விரைவாக முன்னேறி இருப்பது வெகுவாக பாராட்டப்பட்டது. ஊரக வளர்ச்சிக்கு இத்திட்டம் பெரிதும் பயன்பட்டு வருகிறது. மேலும் ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் 1985-86ம் ஆண்டிற்கு 1,216யூனிட்டுகள் நிறுவப்பட்டு ரூ.17.05 இலட்சம் மான்யமாக வழங்கப்பட்டுள்ளது.



# நேருவின் அமுத மொழிகள்



**ம**னிதனுடைய கை, மூளை ஆகியவற்றின் விரிந்த வளர்ச்சியே கருவிகள். கருவிகள் மூலமாக உங்கள் கைத்திறனையும், மூளைத்திறனையும் பெருக்காவிட்டால் உங்களுடைய ஆற்றலும் வளராமல் சுருங்கிக் கெடும்.

**ச**முதாய நீதி வேண்டும் என்று இன்று மக்கள் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள். ஏழையாகப் பிறந்தால் ஏழையாகவே இருக்க வேண்டும் என்று நினைத்து 'விதி' 'தலை எழுத்து' என்றெல்லாம் பேசுகிற பேச்சை இன்றைய மக்கள் குறைவாகவே மதிக்கிறார்கள். எனவே, செல்வர்க்கும், வறியவர்க்கும் இடையேயுள்ள வேற்றுமைகளை நீக்க முயல்வது தவிர வேறு வழியில்லை. எல்லாருக்கும் சமவாய்ப்பு ஏற்படுத்தும் வகையிலே நாம் திட்டங்கள் வகுக்கவேண்டும்.



**வா**ழ்வில் எதையும் வெறுத்துக் குறை காண்பவன் எவ்வளவுதான் அறிவுக் கூர்மை படைத்திருந்தாலும் செயல்படுவதிலே ஊக்கமும் ஆற்றலும் இன்மையால் எப்போதும் எதுவுமே செய்யான்.

**அ**டைந்த பலன்களை வைத்துத்தான் இலட்சியங்களின் சிறப்பைச் சோதிக்க வேண்டும்.



பழைய நாகரிகங்களிலே பல சீர்மைகள் உண்டு; என்றாலும் இன்றையத் தேவைகளுக்கு அவை போதியவை அல்ல என்பது தெளிவாகி விட்டது.

**உ**ண்மையான நம்பிக்கை மட்டுமே ஒருவனுக்கு இருக்குமாயின், அந்த நம்பிக்கையே மலைகளைக் கூட அசைத்துவிடும்.

**நெ**ற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டால் தான் செல்வத்தை உண்டாக்க முடியும் என்பதை நாம் எல்லாரும் நினைவில் கொள்ளவேண்டும்.

**ஆ**ணைகள் பிறப்பித்துச் செல்வத்தை உண்டாக்கிவிட முடியாது; உழைப்புத் தான் செல்வத்தைப் படைக்கும்.



**ம**க்களுக்கு எழுச்சியூட்ட வேண்டுமாயின் பெண்ணுக்கு விழிப்பூட்ட வேண்டும். பெண்மை சக்தி கிளர்ந்தெழுந்தால் குடும்பம் கிளர்ந்தெழும்; கிராமமும் கிளர்ந்தெழும்-நாடும் கிளர்ந்தெழும்.

**ப**ணம் பணம் என்றே மக்கள் பேசுகிறார்கள். பணம் பயனுடையதுதான், ஐயமில்லை; ஆனால் முடிவான மதிப்பு மனிதனுக்குத்தான். பணத்துக்கு அன்று. வரலாற்றை உருவாக்கினவன் -மனித சமுதாய முன்னேற்றத்தை உருவாக்கினவன் மனிதன்தான். பணம் அன்று.

**ஆ**ற்ற வேண்டிய பணிகளைப் பற்றிப் போதிய அளவு சிந்திக்கப் பலர் முன்வருவதில்லை; அதற்குப் பதிலாக அறிவுரைகள் வழங்கவோ, குற்றங் காணவோ சிறிதும் தயங்குவதில்லை.



# நேருவைப் பற்றி நேரு



**மறுமணம் செய்யாதது ஏன்?**

சௌதரி: கமலா காலமான பின்னர் மீண்டும் திருமணம் செய்துகொள்ளாமல் உங்களைத் தடுத்தது எது? புலனடக்கமா? நாட்டின் பொருட்டுத் தம்மை அர்ப்பணித்துக்கொண்டதா? குடும்பத் தொல்லைகள் பற்றிய அடக்கமா? இந்திரா மீதுள்ள பாசமா? அல்லது கொள்கைப் பிடிப்பா?

நேரு: மீண்டும் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்ற நினைப்பே எனக்கு ஒரு போதும் இருந்தது இல்லை. எனது வேலையில் நான் ஈடுபட்டு இருந்தேன்.

**அறிவும் நேர்மையும்!**

சௌதரி: பொதுநல ஊழியனுக்கு மிகக் கேடு பயக்கும் ஒரு குறைபாடு எது என்பது உங்கள் கருத்து?

நேரு: நேர்மை இல்லாத குறை என்று இதை நான் கருதுகிறேன். பணம் குறித்து நான் கூறவில்லை. அது இருக்கவே இருக்கும். ஆயினும் தனக்குத் தானே நேர்மையாக நடப்பது மிக முக்கியமாகும். இது உலகம் முழுமைக்கும் முக்கியமாகும். இந்தியாவுக்கு அதி முக்கியமாகும். இந்தியாவில் அறிவை மதிப்பதைக் காட்டிலும் நேர்மையை அதிகம் மதிப்பார்கள்.

சௌதரி: தாங்கள் குழந்தைகளை அதிகம் நேசிக்கிறீர்களே; என்ன காரணமோ?

நேரு: இது ஒரு சிரமமான கேள்வி; இந்தக் கேள்விக்குக் கச்சிதமாகப் பதில் கூறுவது சாத்தியமன்று.

சௌதரி: தங்களுக்கு ஒரே ஒரு குழந்தை இருப்பது காரணமாய் இருக்குமா? அல்லது குடும்பத்துக்குத் தாங்கள் ஏகபுதல்வனாக இருந்து, மிகுந்த அன்புடனும் கவனத்துடனும் தங்களை வளர்த்தது காரணமாய் இருக்குமா?

நேரு: குழந்தைகளை நான் அதிகம் நேசிப்பதற்கு இவை இரண்டும் காரணங்களாய் இருக்கும் என்று நான் நினைக்கவில்லை.

சௌதரி: குழந்தைகளை மோசமாக நடத்துவதைத் தாங்கள் காண்பது காரணமாய் இருக்குமா? அல்லது தங்கள் மனைவியின் அகால மரணம் காரணமாய் இருக்குமா?

நேரு: இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லும் நிலையில் நான் இல்லை. ஆயினும் குழந்தைகளிடம் எனக்குப் பிரியம் அதிகம் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆண்டுகள் ஆக, ஆக எனது பிரியமும் குழந்தைகளிடம் அதிகரித்துக் கொண்டு வந்திருக்கிறது.

**தன் கையே தனக்குதவி**

சௌதரி: நாள்தோறும் நீங்களே சவரம் செய்து கொள்கிறீர்களா? அல்லது நாவிதன் வந்து செய்துவிடுகிறாரா?

நேரு: நாள்தோறும் நானே சவரம்செய்து கொள்கிறேன். நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக நான் சொந்தமாகவே சவரம் செய்து கொள்கிறேன்?

சௌதரி: நாள்தோறும் நீங்கள் உடை மாற்றிக் கொள்வது உண்டா?

நேரு: நாள்தோறும் உடை மாற்றிக் கொள்வேன். சில சமயம் இரு முறைகூட மாற்றிக் கொள்வதும் உண்டு. நாள் முழுதும் கழிந்தபின்

உடை அழுககாகவோ ஈரமாகவோ இருந்தால் மாற்றிக் கொள்வது உண்டு.

சௌதரி: நாள்தோறும் செருப்புக்குப் பாலிஷ்போட்டுக் கொள்வது உண்டா?

நேரு: ஆம், போட்டுக்கொள்வது உண்டு.

சௌதரி: எதைக் கொண்டு நீங்கள் பல் துலக்குகிறீர்கள், பிரஷினாலா அல்லது பற்குச்சியாலா?

நேரு: இந்தியப் பற்பொடி கொண்டு நாள்தோறும் இருமுறை துலக்குவது உண்டு. பற்பசையும் பிரஷும் பயன்படுத்துவது உண்டு.

சௌதரி: இரு முறையா?

நேரு: ஆம். காலையிலும் இரவிலும்.

**புகையும் புலாலும்**

சௌதரி: புகை பிடிப்பதையும் புலால் உண்பதையும் நீங்கள் விட்டு விட்டீர்கள். எதற்காக இரண்டையும் விட்டீர்கள்? இப்பொழுது நீங்கள் புலால் உண்பது உண்டா? அப்படியனால் ஏன்?

நேரு: குறிப்பிடத்தக்க காரணம் எதுவும் இல்லை. புகை பிடிப்பது வீண் செலவு என்பதால் அதை நான் விட்டுவிட்டேன். இரண்டாவதாக எந்த ஒரு பழக்கத்திலும் சிக்கிக் கொள்ள நான் பிரியப்படுவது இல்லை. புலால் உண்ணாமல் இருப்பதை நான் விரும்பியதால் அதை விட்டுவிட்டேன். ஐந்தாறு ஆண்டுகள் நான் புலால் சாப்பிடாமல் இருந்தேன். பிறகு ஐரோப்பா போனபோது படிப்படியாக மீண்டும் புலால் உண்ண ஆரம்பித்தேன். எப்பொழுதும் நிறையச் சாப்பிடுவது இல்லை. குறைவாகவே சாப்பிடுகிறேன்.

**கார்ட்டூன் பற்றிய கருத்து**

சௌதரி: போட்டோ எடுக்க மிகவும் ஏற்ற உருவம் உங்களுக்கு இருப்பதாக எப்பொழுதாவது நீங்கள் கருதியது உண்டா? இதைப்பற்றி உங்கள் கருத்து என்ன? உங்களைக் குறித்து போடப்படும் கார்ட்டூன்களைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

நேரு: எனது முகம் குறித்து நான் என்ன கூறமுடியும்? போட்டோவுக்கு ஏற்ற முகம் என்று பலர் கூறுகிறார்கள். அதற்குப் பலபொருள் உண்டு. முதலாவதாக, போட்டோ எடுக்கும்போது எனக்குக் காமிரா உணர்வு இருப்பது இல்லை. அந்த உணர்வு உங்களுக்கு இருக்குமானால் முகத்தையும் உங்களையும் நீங்கள் தயார்ப்படுத்திக் கொள்வீர்கள். இப்படிச் செய்வதால் முகம் தனது இயல்பை இழந்து விடுகிறது. அதனால் உண்மையாக அனைத்தும் கெட்டுவிடுகின்றன. இன்னொரு கேள்வி என்ன?

சௌதரி: கார்ட்டூன்களைப் பற்றி..

நேரு: கார்ட்டூன்களைப் பற்றியா? கார்ட்டூன்கள்-அவை மனிதனைப் பாதிப்பது இல்லை. சில நல்லவை; சில தீயவை. சில பயனற்றவை.

சௌதரி: குறைகூறும் கார்ட்டூன்கள்?

நேரு: கார்ட்டூன்கள் பலவிதமாய் உள்ளன. சில கண்ணியமாயும் சில கண்ணியக் குறைவாயும் உள்ளன. கண்ணியக் குறைவாகக் கண்டித்துப் போட்டுள்ள கார்ட்டூன்களை நாம் புறக்கணித்து ஒதுக்க வேண்டியது தான்.

**பலாத்காரம் பயன் தருமா?**

சௌதரி: அஹிம்சையில் உங்களுக்கு எவ்வளவு தூரம் நம்பிக்கை உண்டு? வலிய வந்து யாராவது உங்களைத் தாக்கினால், பலாத்காரத்தின் மூலம் உங்களை நீங்கள் பாதுகாத்துக் கொள்வீர்களா? அல்லது மாட்டீர்களா? முதியவர், குழந்தை, பெண்கள் இவர்களை உங்கள் எதிரில் யாராவது தாக்கினால், நீங்கள் என்ன செய்வீர்கள்?

நேரு: இயன்ற மட்டும் முயன்று பலாத்காரத்துக்கு உட்படும் மனிதரை நான் காப்பாற்ற முயல்வேன். தேவைப்பட்டால் எனது முழு ஆற்றலைக்கொண்டு பலாத்காரத்தையும் நான் பயன்படுத்துவேன்.

சௌதரி: உங்களை யாராவது தாக்கினால்?

நேரு: எவ்விதத் தயக்கமும் இன்றி, பதிலுக்கு நான் பலாத்காரத்தைப் பயன்படுத்துவேன்.

சௌதரி: முந்திக்கொண்டு நீங்கள் பலாத்காரத்தில் இறங்குவீர்களா?

நேரு: நான் இறங்குவது கூடாது; ஆனால் அந்த நேரத்தில் நான் என்ன செய்ய வேண்டும் என்பதும் எனக்குத் தெரியாது!

திரு நாராயணராம் சௌதரி என்பார் பல்வேறு சந்தர்ப்பங்களில் பண்டித நேருவைக் கண்ட பேட்டிகளிலிருந்து...

**தொகுப்பு : இல. இராசேந்திரன்**

---

மனிதன் புற உலகை வெல்கிறான்; தன்னைத் தான் வெல்வதிலே தோற்கிறான்.

—ஜவகர்லால் நேரு






## இறைமனிதர் சிவானந்தா

ஆசிரியர்: நா.அனந்தநாராயணன்

வெளியீடு: ராஜ்ஸ்ரீ பிரிண்டர்ஸ், 156, ஔவை சண்முகம் சாலை, சென்னை-600 086.

விலை: ரூ. 40.00 பக்கம்: 527

இளமையிலேயே தன்னலமற்ற நெறிநின்ற சிறுவர் குப்புசாமி டாக்டர் குப்புசாமியாகி மலேயாவில் செய்த சேவைகள் மற்றவர்க்கு வழிகாட்டும் வகையில் எழுதப்பட்டுள்ளன. ஆன்மீக நூல்கள் பலவற்றைக் கொண்டதொரு நூல்நிலையத்தைத்தன் வீட்டில் அமைத்தார்.

உடல் நலம் பேணும் மருத்துவராக இருந்த டாக்டர் குப்புசாமி, உள்ளத்தை உன்னத நிலைக்குக் கொணரவல்ல ஜெபத்தில் ஈடுபட்டார். இறைவழிபாடு அவருக்கு விருப்பமான ஒன்று.

தன் வீட்டுச்சமையல்காரரைத் தன் நண்பராக மதித்துப் போற்றித் தனக்கு இணையாக அவரை நடத்தியவர் தான் தரையில் படுத்துக் கொண்டு, அவருக்குத் தன்னிடம் வந்த யாரையுமே அவர் வெறுங்கையுடன் அனுப்பியதில்லை.

மக்களுக்குத் தொண்டு செய்தல், ஆன்மீக நெறிநிற்றல், மகாத்மாக்களுடன் உறவு கொள்ளுதல், வீட்டில் பக்தியில் திளைத்தல் இவையே அவருடைய விருப்பங்கள்.

புகழ்வாய்ந்த டாக்டராக இருந்த குப்புசாமி, மெல்ல மெல்ல உலகியல் வாழ்வை நீத்து இறைவனடிக்கு அடிமையான பாங்கு அழகாகச் சொல்லப்பட்டுள்ளது.

1924 ஜூன் 1இல் சுவாமி சிவானந்த சரசுவதியானார் குப்புசாமி.

சாதாரண ஒரு மனிதர் இறையுணர்வு பெற்று அவன் அடித்தொண்டனாக இலங்குவது இயலும் என்பதற்கு, சிவானந்த சுவாமயின் வாழ்க்கை சிறந்ததோர் எடுத்துக்காட்டாக அமைவது தெள்ளிதின் புலப்படுத்தப்படுகின்றது.

நாவடக்கமும் மன அடக்கமும் மிக எளிதாக சுவாமியிடம் அமைந்திருந்தன. தம் சீடர்களையும் நண்பர்களாகவே கருதிய சிவானந்தாவின் சிறப்பு பெரிதும் பாராட்டப்பட்டுள்ளது.

''நல்லவர்கள் ஏற்கெனவே நற்குணத்தவர் ஆவர். குண்டர்களை மட்டுமே நான் சீர்திருத்த வேண்டும். இதுவே எனது சிறப்பான பணி'' என்று சுவாமிஜி குறிப்பிடுவதாகச் சொல்லப்பட்டுள்ள பகுதி நன்கு உணர்த்தப்பட்டுள்ளது.

''ஓம், அமின், ஆமென் எல்லாம் ஒன்றுதான். எல்லா மதங்களின் அடிப்படைக் கருத்துக்களும் ஒன்றுதான்'' என்ற உண்மைக் கருத்து சுவாமிகளால் நாடெங்கும் பரப்பப்பட்டமை குறிக்கப்பட்டுள்ளது. இன்றைய நிலையில் பயன்மிகு கருத்தாகும் இது. ஆன்மீகமேம்பாட்டின் மூலம் தான் சமய ஒற்றுமை ஏற்பட முடியும் என்பது வலியுறுத்தப்படுகின்றது.

தம் பேச்சாலும் எழுத்தாலும் ஆன்மீக நெறி நின்று வாழ்ந்து உயர்ந்த பெருமகனாரின் வாழ்க்கை மிக நல்ல முறையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

சேவையாலும் அன்பாலும் அனைத்து உள்ளங்களையும் கொள்ளை கொள்ள முடியும் என்பதற்கு, சுவாமி சிவானந்தாவின் வாழ்க்கை மிகச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாக அமைந்தமை இந்நூல் முழுவதும் சிறந்த முறையில் வெளியிடப்பட்டுள்ளது அனைவரும் அறிய வேண்டிய கருத்துக்களடங்கிய நல்லதொரு நூல் இது. ஆன்மீக நெறி விரும்புவோர்க்கு அருமையானதொரு படைப்பு.

## பாரதிதாசன் நறுமலர்க் கொத்து

தொகுப்பாளர்கள்: மன்னர் மன்னன், முல்லைமுத்தையா,

வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்., 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை-600098.

விலை: ரூ. 15. பக்கம்: 216.

1946ஆம் ஆண்டு பாவேந்தரைப் பற்றி எழுதிய பல்துறைச் செல்வர்கள் பலரின் மணமிகு மலர்கள் மலர்ந்து மணம் பரப்பும் பூக்காடாகத் திகழ்கின்றது இந்நூல். நூலுக்குரிய முன்னுரையும் அரியதொரு வரலாற்றுக் கட்டுரையாக அமைந்துள்ளது.

கலையைக் காட்சிப் பொருளாக்கிய காலம் மாறி, கலை நம் வாழ்க்கையில் தோழனாக மிளிர்வதுதான் என்பதை முதன் முதலில் நிறுவியவர் பாரதிதாசனே என்கிறார் மறைந்த முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணா.

''தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்'' என்ற பாவேந்தரின் நெடுமொழி, நாவலரால் போற்றப்படுகின்றது இந்நூலில்.

''ஆவேசத்தையும் உணர்ச்சியையும் வெள்ளமாகக் கொட்டும் உயிர்க்கவி பாரதிதாசன் என்பது என் எண்ணம்'' என்கிறார் வ.ரா. முற்றிலும் பொருத்தமானதொரு கருத்து இது.

''தன் உள்ளத்தில் ஊறும் கருத்தினைப் பிறருக்கு எடுத்துச் சொல்லும் ஆற்றல் படைத்தவன் என்பதால்தான் மனிதன் உயர்ந்தவனாகிறான்'' என்ற புதுவைக் குயிலின் கருத்து, அவர் மகன் வாயிலாக வெளிப்படுகின்றது.

பார்வையில் மிடுக்கும் பாடலில் எழுச்சியும் கொண்ட பாவேந்தர், உள்ளத்தில் குழந்தையாகவே திகழ்ந்தமை அவர் பேரன் செல்வம் மூலம் தெரிகிறது.

1946-ல் வெளியான 44 கட்டுரைகள் வாயிலாக, புதுவைக் குயிலின் புரட்சிக் குரல் வெகு அழகாக இசைக்கப்பட்டுள்ளது. பாவேந்தரை ஆழமாக அறிய விரும்புவோர்க்கு இத்தொகுப்பு நூல், நல்லதொரு சாதனமாகும்.

— டாக்டர் சிவ அரசி முத்துக்காளத்தி

## அன்புதாசனின் மருத்துவக் கட்டுரைகள்

வெளியீடு: இமயப் பதிப்பகம்,
20, பெருமாள் தெற்குவீதி,
நாகப்பட்டினம்-611 001

விலை: ரூ.10 பக்கம்-144

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது நமது நாட்டில் வழங்கப்படும் பழமொழி. நோயினால் அவதிப்பட்ட யாரோ ஒருவர் மிகுந்த அனுபவத்துடன் சொல்லிய வாசகம் இது.

மனிதப் பிறவிக்கு ஏற்படுகின்ற நோய்களைக் குறித்தும் அவை வராமல் காத்துக் கொள்வதற்கு உரிய வழிவகைகளும் இந்நூலில் சொல்லப்பட்டுள்ளன.

துன்பம் நேரும்போது ஒரு மனிதன் அழுது கண்ணீர் விடுகிறான். அந்தக் கண்ணீரை அவனது துயரத்துக்கு வடிகால் மட்டுமல்ல-நரம்பு நோய், இருதய நோய், இரத்த அழுத்தம், அல்சர் போன்ற பலவித நோய்கள் நீங்குவதற்குப் பயன்படும் சஞ்சீவியாகவும் திகழ்கிறது என்ற செய்தி இந்நூலில் கிடைக்கிறது.

நாம் அன்புடன் நமது இல்லத்தில் வளர்த்துவரும் பிராணிகளில் எது எது எந்தெந்த நோயைப் பரப்புகிறது என்ற விவரமும் இதில் சொல்லப்பட்டிருக்கிறது.

எம்.பி.பி.எஸ். பட்டம்பெற்ற டாக்டர்களுக்கு இணையாக மருத்துவம் குறித்து இந்நூலில் எழுதியிருக்கிறார் நூலாசிரியர். இனிய எளிய நடை, நூலைப் படிக்கத் தூண்டுகிறது.

—தமிழ்ப்பித்தன்

## பேரறிஞர் பெர்னார்ட்ஷா

ஆசிரியர்: முல்லை பி.எல். முத்தையா,
வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ பிரைவேட் லிமிடெட்
41-பி,சிட்கோ எஸ்டேட்,
சென்னை-600 098.
விலை: ரூ.10 பக்கம்: 148

உலகச் சிந்தனையாளர்களில் பேரறிஞர் பெர்னார்ட்ஷா மிகச் சிறப்பான இடத்தைப் பெறுகிறார். 'சிரிக்க -சிந்திக்க' என்பது அவரது கொள்கையாக இருந்தது. அவரது எழுத்தும் பேச்சும் நகைச்சுவை கலந்ததாக இருந்தது. அதே சமயத்தில் சிந்தனைக்கு விருந்தூட்டுவதாகவும் இருந்தது.

நாடகத்துறையில் பேரும் புகழும் பெற்ற பெர்னார்ட்ஷா, தம் இளமைக் காலத்தில் நூலகமே கதியெனக் கிடந்தவர். நூலக அறிவே அவரைச் சிறந்த மேதையாக்கியது. அவரது வாழ்க்கை வரலாறு சுவையானது. படிப்பினை ஊட்டுவது. வாழ்க்கையில் முன்னேற நினைப்பவர்கள் இந்நூலைப் படிக்க வேண்டும்.

—பி.வி. கிரி

## புகழ்பெற்ற புதிர்க் கதைகள்

ஆசிரியர்: எ.சோதி,
வெளியீடு: நன்மொழிப் பதிப்பகம்
53, அரவிந்தர் வீதி, புதுச்சேரி.
விலை ரூ. 7.50. பக்கம் 96.

வெறுங்கதைகளைவிட, புதிர்க் கதைகள் நம் அறிவுக்கு வேலை தருவன. இந்நூலில் இடம்பெற்றுள்ள குட்டிக்கதைகள், கதையின் முடிவில் கேள்விக்குறியோடு முடிவை நம்மிடமே விட்டுவிடுகின்றன. கேள்விக்கு விடை தெரியாமல் விழிப்பவர்களுக்கு விடையும் நூலின் இறுதியிலே கொடுக்கப்பட்டிருக்கிறது.

பல கதைகள் நமக்குத் தெரிந்தவை என்றாலும், அவை புதிய வடிவில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இந்நூலில் உள்ள 40 கதைகள் குழந்தைகளைக் குதூகலிக்கச் செய்யும்.

—பி.வி. ஜி.

## புதிர்க் கணக்குகள்

ஆசிரியர் : பேராசிரியர் எ.சோதி, எம்.ஏ., பதிப்பாளர் : நன்மொழிப் பதிப்பகம்,: 56. அரவிந்தர் வீதி, புதுச்சேரி-605 001.

பக்கம்: 88. விலை ரூ. 7.50

மாணவ-மாணவிகளிடையிலும், கிராமப்புறங்களிலும் விடுகதைகள் வழக்கிலிருப்பதைக் காண்கிறோம்; கதைகளாக மட்டுமன்றிக் கணக்குகளாகவும் அவை இருப்பதுண்டு. அப்படிப்பட்ட புதிர்க் கணக்குகளின் தொகுப்பே இந்த நூல்.

சிறுவர் சிறுமியர் மட்டுமன்றிப் பெரியவர்களும் படித்தின்புறத் தக்க பல புதிர்க் கணக்குகள் (60) இப்புத்தகத்திலே இடம் பெற்றுள்ளன. செவியில் விழுந்தவை மட்டுமல்லாமல்பல்வேறு ஆங்கில-தமிழ்ப் புத்தகங்களின் துணை கொண்டும் இந்நூலை உருவாக்கியிருப்பதாக முன்னுரையில் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

கணிதத் தேர்ச்சி பெற்றவர்கள் மட்டுமல்ல; பொது அறிவுள்ளாரும் புரிந்து கொள்கிற விதத்தில், கதை வடிவாகவும் சில கணக்குகள் இதில் தரப்பட்டுள்ளன. முக்கியமானவற்றிற்குப் படங்களும் போடப்பட்டுள்ளன.

எல்லாத் தரப்பினரும் ரசித்துப் படிக்கத் தக்க இனிய நூல் இது.

—பி எல்.ஆர்.

## உயிரில்லாத உடம்பு!

*நூல் நிலையம் இல்லாத வீடு உயிரில்லாத உடம்பு போன்றது.

—தாமஸ் ஆல்வா எடிசன்

*சில புத்தகங்களைச் சுவைத்துப் பார்க்க வேண்டும்; சிலவற்றை அப்படியே விழுங்கிவிட வேண்டும்; சிலவற்றை மட்டும் நன்கு சுவைத்து சீரணம் செய்ய வேண்டும்.

—பேக்கன்

## கல்விச் சிந்தனைகள்

ஆசிரியர் :
செ.அரங்கநாயகம்

வெளியீடு : பத்மா பதிப்பகம்,
31, போஸ்டல் காலனி,
முதல் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை 33
விலை ரூ. 16.00 பக்கம் 172

முன்னாள் தமிழகக் கல்வி அமைச்சர் அவர்கள் பல ஊர்களில், பல பல்கலைக் கழகங்களில் ஆற்றிய பேருரைகளின்தொகுப்பு.

கல்வியைப் பொறுத்த மட்டில் மாணவர், பெற்றோர் ஆசிரியர்களின் பங்கினையும், பொறுப்புகளையும் தன் உரைகளில் தெளிவாக விளக்கியுள்ளார்.

பயிற்று மொழி, தேர்வுமுறை, பாடத்திட்டம் போன்ற கல்வித் துறையின் பல்வேறு துறைகளில் சமுதாயத்துக்குத் தேவையான பல மாற்றங்கள் பற்றியும் குறிப்பிடுகிறார்.

கல்வி, மனித ஆற்றல், ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளில் சோவியத் யூனியனைப் புகழ்கிறார், பின்பற்றலாமென்கிறார்.

அவரின் உரையினைக் கேட்க வாய்ப்பில்லாதவர்கள், அவரது ஆக்கப்பூர்வமான முற்போக்குச் சிந்தனைகளை இந்நூலில் படித்து உணரலாம்.

—அ. மருதவிநாயகம்.





# கல்வியும் பெண்களும்

—பண்டித ஜவகர்லால் நேரு

பெண்கள் கல்விப் பயிற்சிபெற வேண்டுமென்ற ஆவல் இன்று சமுதாயத்தில் பெருகியிருக்கிறது. இந்த விழிப்புணர்ச்சி வரவேற்கத் தக்கதாகும்.

சமுதாயத்தில் பெண்கள் பெறும் கல்வியின் பயன், அவர்கள் குடும்பத்தோடு நின்றுவிடாமல் சமுதாய முழுமைக்கும் பயன்படுகிறது. ஒரு குடும்பத்தை மிகச் சிறந்த முறையில் வைத்துக் கொள்வதே உயர்ந்ததொரு சமுதாயப்பணியாயிற்றே! அந்தப் பணியை ஒழுங்குறச் செய்பவள் பெண்ணல்லவா! அவள் மனத் தெளிவுடன் செயற்படவேண்டியது அவசியமல்லவா! அந்த மனத்தெளிவை அளிப்பது கல்வி என்பதில் இரண்டு கருத்துக்கள் ஏது!

பெண் கல்வி என்று சொல்லும் போது ஒரு விஷயத்தை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பெண்கள் இன்று பெரும்பாலும் ஏதாவது உத்தியோகம் பெறும் நோக்கத்தில் தான் கல்விப் பயிற்சியை விரும்புகிறார்கள். இது தவறு என்றோ, குற்றம் என்றோ நான் கூறவில்லை. ஆனால் இது மட்டுமே கல்வியின் இலட்சணமாகி விடக் கூடாது.



எந்த மூலையிலும் ஒதுங்கி வாழ்ந்துவிட முடியாது. உலகத்தில் எங்கோ ஓர் இடத்தில் நடக்கும் ஒரு காரியம், மறு கோடியில் உள்ள சாமானிய மனிதர்களையும் பாதிக்கும் அளவுக்கு விவகாரம் பெருகி விட்டது.

ஒவ்வொரு பெண்ணும் பொது அறிவு ஞானம் பெற்று விளங்க வேண்டும். நாட்டின் சூழ்நிலையைத் தெளிவுறப் புரிந்து கொள்ளும் சக்தியைப் பெற வேண்டும். உலகம் எப்படிப் போகிறது, உலகத்தில் தோன்றும் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் என்ன என்பதையெல்லாம் கூர்ந்து நோக்கிப் புரிந்து வைத்துக் கொள்ளும் கூர்மதி வேண்டும்.

இந்த நிலையில் வெளி உலகத்தைப் பற்றி ஒரு சிறிதும் கவலைப்படாமல் தங்கள் குடும்பத்தோடு, வீட்டோடு முடங்கிக் கிடந்து வாழ்ந்துவிட முடியாது. ஆகவேதான் ஆண்களைவிட பெண்களுக்கு வெளி உலகத்தைப் பற்றிய சரியான ஞானம் இருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

இந்தியப் பெண்கள் பொது நலத் தொண்டில் பெருவாரியாக ஈடுபடுவதில்லை என்று ஒருகுறை சொல்வார்கள். இந்தக் குறைக்கு அடிப்படையே, அடுத்த வீட்டைப் பற்றி அக்கறை கொள்ளாது தங்கள் வீட்டோடு முடங்கிக் கிடக்கும் நம் பெண்களின் பண்புதான்!

ஆகவேதான் வெறும் உத்தியோக நோக்கத்தோடு கல்வி பயிலுவதோடு நின்றுவிடாமல், அறிவு வளர்ச்சி நோக்கத்தோடும் நம் பெண்கள் கல்வி பயில முற்பட வேண்டுவது அவசியம்.

# நேருவின் உயில்



பண்டித நேரு அவர்கள் 1954 ஜூன் 21 அன்று விருப்ப ஆவணம் ஒன்று எழுதி வைத்திருந்தார். அந்த ஆவணத்தைப் பின் மாற்றவோ திருத்தவோ இல்லை. எனவே, அதுவே அவர் தம் இறுதி விருப்ப ஆவணமாயிற்று. அதன் ஒரு பகுதி கீழே கொடுக்கப் பெற்றுள்ளது:

''இந்திய மக்களின் பேரன்பையும் பெருமதிப்பையும் நான் பெருமளவில் பெற்றுள்ளேன். அதில் ஒரு சிறு அளவுகூட நான் அவர்களிடம் திரும்பக் காட்ட முடியாது. மேலும் ஈடிணையற்ற அன்புக்குக் கைம்மாறு செய்வது என்பதும் இயலாததொன்று.

''இந்திய மக்கள் பலரைப் பாராட்டியிருக்கிறார்கள். சிலரைப் போற்றி வணங்கியிருக்கிறார்கள். ஆனால் இந்தியாவின் பல தரப்பட்ட மக்களும் என் மீது பெருத்த அளவு அன்பு சொரிந்துள்ளனர். இதைக்கண்டு என் மகிழ்ச்சி பொங்கிப் பெருகியது. என் அவா ஒன்றே ஒன்று தான். அது என் வாழ்நாளின் எஞ்சிய பகுதியிலும் என் நாட்டினருக்கும் அவர்கள் காட்டும் அன்பிற்கும் நான் தகுதியுடையவனாகத் தொடர்ந்து நடப்பதுதான்.

''என்னுடைய கணக்கற்ற தோழர்களுக்கும் என்னுடன் பணி செய்வோர்க்கும் நான் இன்னும் தனிப்பெருங் கடப்பாடுடையேன்.

''பல பெருமுயற்சிகளிலும் பணிகளிலும் நாங்கள் ஒன்றாகப் பங்கெடுத்துள்ளோம். அதில் கிடைத்த வெற்றிகளையும் வேதனைகளையும் பகிர்ந்துள்ளோம்.



''நான் இறந்தபின் எனக்காகச் சமய அடிப்படையில் இறுதிச் சடங்குகள் எவையும் செய்ய வேண்டாம் என்று மனப்பூர்வமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இவை போன்ற சடங்குகளில் எனக்கு நம்பிக்கை இல்லை. பெயரளவில் அவற்றில் ஈடுபடுவதுகூட வெளிவேடமாகவும் நம்மையும் பிறரையும் ஏமாற்றும் முயற்சியாகவும் அமையும்.''

''இறந்தபின் என் உடலை எரியூட்டவேண்டுமென்பதே என் விருப்பம். அயல்நாட்டில் இறந்துவிட்டால் உடலை அங்கேயே எரித்துவிட்டுச் சாம்பலை மட்டும் அலகாபாத் கொண்டு வரவேண்டும். ஒரு பிடி சாம்பல் கங்கையில் தூவப்படவேண்டும். சாம்பலின் பெரும்பகுதியைக் கீழ்க் கண்டவாறு செய்ய வேண்டும். சாம்பல் சிறிது கூடக் காப்பாற்றி வைக்கப்படக் கூடாது.

''அலகாபாத்தில் ஓடும் கங்கையில் ஒரு பிடிச் சாம்பலைப்போட வேண்டுமென்பதில் சமய நோக்கம் ஒன்றும் கிடையாது. இளமையிலிருந்தே அலகாபாத்தில் ஓடும் கங்கை, யமுனை மீது பற்று மிகவுடையவன் நான். நான்வளர வளர இந்தப் பற்றும் வளர்ந்து கொண்டே வந்திருக்கிறது.

''பருவங்களின் மாறுதல்களுக்கேற்ப நதிகளின் போக்கும் மாறுபடுவதை நான் கண்டிருக்கிறேன். அப்பொழுது பன்னெடுங்காலமாக அந்த நதியோடு ஒட்டி வளர்ந்து வந்துள்ள வரலாறு, புராணம், மரபு, பாட்டு, கதை ஆகியவற்றை நினைத்துப் பார்ப்பதுண்டு.

''இந்தியாவில் வற்றாத நதியான கங்கை, மக்களால் பெரிதும் விரும்பப்படுகிறது. அதைச் சுற்றியே பல இனமக்களின் நினைவுகளும், அவர்களுடைய ஆர்வங்களும், அச்சங்களும், அவர்களுடைய வெற்றிப் பாடல்களும் அவர்களுடைய வெற்றி தோல்விகளும் பின்னிப் பின்னிக் கிடக்கின்றன.

''இந்தியாவின் நெடுங்காலப் பண்பாட்டிற்கும் நாகரிகத்திற்கும் அது ஒரு சின்னமாக விளங்குகிறது. அந்நதி ஓடிக் கொண்டேயிருந்தாலும், மாறிக் கொண்டேயிருந்தாலும் அது என்றும் மாறாத நதியாகவே உள்ளது. அது என்னை என்றென்றும் கவரும். இமயத்தின் பனிபடிந்த சிகரங்களையும் ஆழ்ந்தகன்ற பள்ளத்தாக்குகளையும் என் வாழ்வும் பணியும் உருவாவதற்கிடமாக அமைந்த வளமிக்க சமய வெளியாகவும் அது நினைவூட்டுகிறது.

''கங்கை காலை இளவெயிலில் ஒளி வீசிக் களிநடமிடுகின்றாள். மாலை நிழலிலே கறுத்துஇருண்டு மறை பொருளாய் இருள் பரவும்



பொழுது இனம் புரியாத அச்சத்தை ஊட்டுபவளாய் மாறுகிறாள். குளிர் காலத்தில் குறுகி மென்னடையிட்டு ஒயிலாக ஓடுகிறாள். இந்தியாவில் கடந்த கால நினைவில் தோன்றி, நிகழ்கால நனவாக ஓடி, எதிர்காலக் கனவுக் கடலில் கலக்கச் செல்லும் கன்னியாகக் கங்கை காட்சியளிக்கிறாள்.

''கடந்த காலத்தின் மரபுகளையும் பழக்க வழக்கங்களையும் நான் கைவிட்டுவிட விரும்புகிறேன். இந்தியாவும் தன்னைப் பிணைத்துள்ள தளைகள் அனைத்தையும் உடைத்தெறிந்து விடுதலையடையவேண்டுமென்று விரும்புகிறேன். மக்களுக்குள் பல பிரிவை உண்டு பண்ணி அவர்களில் பெரும்பாலோரைத் தரம் தாழ்த்தி, உடலும் மனமும் தன்னிச்சைபோல் வளரவிடாது தடுக்கும் நிலை மாறவேண்டுமென நான் விரும்புகிறேன். ஆயினும் கடந்த காலத்திலிருந்து என்னை முழுதும் துண்டித்துக் கொள்ள விரும்பவில்லை.

''மாபெரும் மரபின் வழியில் ஒருவனாகத் தோன்றியதற்கு நான் பெருமைப்படுகிறேன். வரலாற்றின் தொடக்க காலத்திலிருந்து தொடர்ந்து வரும் சங்கிலிப் பிணைப்பில் ஓர் இணைப்பாக நானும் மற்ற எல்லோரையும் போல இருப்பதை எண்ணிப் பெருமைப்படுகிறேன். எனக்கு இந்தப் பிணைப்பை உடைக்க விருப்பமில்லை.

''ஏனெனில் நான் அதைப் போற்றிக் காத்து அதிலிருந்து ஊக்கம் பெறவும் விரும்புகிறேன். என்னுடைய இந்த அவாவை வெளிப்படுத்தவும் இந்தியப் பண்பாட்டின் பெருமைக்கு நான் செய்யும் இறுதி வணக்கமாகவும் என்னுடைய சாம்பலில் ஒரு பிடியை அலகாபாத்தில் ஓடும் கங்கை நீரில் போடவேண்டும் என்று என் வேண்டுகோளை எழுப்புகிறேன். இந்தியாவை அலைகளால் அரவணைத்துக் கிடக்கும் பெருங்கடலுக்கு, அச்சாம்பலைக் கங்கையாறு சுமந்து செல்லுமாக!

மீதியுள்ள சாம்பலை வான்மீது ஊர்தியில் கொண்டு சென்று இந்தியாவின் உழவர்கள் பாடுபடும் வயல்கள் மீது தூவி, அச்சாம்பல் நாட்டின் மண்ணோடு மண்ணாக கலந்து மக்கிப் போய் இந்திய மண்ணிலிருந்து பிரிக்க முடியாதவாறு இரண்டறக்கலக்கவேண்டும் என்பதே என் அவா.



பிஞ்சுப் பருவத்தில் நேரு



சமுதாயத்தில் நலிவுற்றோர் நல்வாழ்வு பெறத் துணைபுரிவதே நமது குறிக்கோள்களில் ஒன்று. கூட்டுறவு அணுகுமுறை இதற்கு உறுதுணை புரிகிறது. அல்லது அந்த வழியில் துணை புரிய வேண்டும்.

—பண்டித ஜவகர்லால் நேரு

## கூட்டுறவுத் துறையில் ஓர் சகாப்தம்

**1905 - 1986**

"கூட்டுறவே நாட்டுயர்வு"

அறிவியல் வளர்ச்சியும், தொழில் வளமும் நம் நாட்டை இருபத்தியொன்றாம் நூற்றாண்டிற்குத் தகுந்த முறையில் நடத்திச் செல்லத் தயார் செய்துகொண்டிருக்கின்றன.

இம் மாபெரும் வளர்ச்சியை மென்மேலும் ஊக்குவிப்பதற்கும், அடித்தள மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கும், வேளாண்மை மற்றும் கைத்தறித் தொழில் முன்னேற்றத்திற்கும் தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி, உங்கள் ஈடுபாட்டுடன் தன் எண்பது ஆண்டுக் காலப் பொறுப்புமிக்க நற்பணிகளைச் செவ்வனே தொடர்கின்றது.

இந்த சகாப்தம், பெரும் சாதனையின் ஆரம்பம்.




ஆ. சண்முகம்
தனி அலுவலர்.

தமிழ்நாடு மாநிலக்
கூட்டுறவு வங்கி லிட்.
255, என். எஸ். சி. போஸ் சாலை,
சென்னை - 600 001.


மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் மூலம்

*மீன்வளர்ப்பில் ஈடுபடுவீர்!*
*மிகுந்த வருவாய் ஈட்டிடுவீர்!''*

நம் நாட்டு மக்களிடையே அதிக அளவில் காணப்படும் புரதச்சத்துப் பற்றாக்குறையை நீக்குவதில் மீன் முக்கிய பங்கேற்கிறது. மீனில் புரதம், உயிர்ச்சத்துக்கள், கொழுப்பு, தாதுப்பொருட்கள் ஆகியவை நிரம்பியுள்ளன. மீனின் புரதம் எளிதில் செரிக்கும் தன்மையுள்ளது. மனிதனுக்குத் தேவையான இன்றியமையா அமிலோ அமிலங்கள் அனைத்தும் மீனின் புரதத்தில் அடங்கியுள்ளன. அதனால் தான் குழந்தைகளுக்கும், கருவுற்ற பெண்களுக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் சத்துணவிற்காக மருத்துவர்களால் மீன் உணவு பரிந்துரை செய்யப்படுகிறது.




**மீன்வளர்ப்பு மிகுந்த வருவாய் ஈட்டித்தருவது**

அண்மைக்காலம் வரை நமது மாநிலத்தில் உள்ள ஏரிகள், குளங்கள், குட்டைகள், கண்மாய்கள் ஆகியவற்றில் நீர் வற்றும் காலங்களில் மட்டுமே அவற்றில் இயற்கையாக வளரும் மீன்கள் பிடிக்கப்பட்டு உணவாகப் பயன்படுத்தப்பட்டாலும், தற்பொழுது புதிய தொழில் நுட்ப முறையில் மேற்கண்ட நீர்நிலைகளில் பொருளாதார ரீதியில் அதிக வருவாய் ஈட்டித்தரும் 'மீன்வளர்ப்பு' முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் புதிய மீன்வளர்ப்பு மூலம் எளிதாக எக்டேர் ஒன்றுக்கு 1,000 கிலோ முதல் 3,000 கிலோ வரை மீன் உற்பத்தி செய்து ரூ. 5,000 முதல் ரூபாய் 15,000 வரை நிகர இலாபம் பெற முடியும். இம்முறை கூட்டு இன மீன்வளர்ப்பு என அழைக்கப்படுகிறது. இம்முறையில் கட்லா, ரோகு, மிர்கால், சாதாக்கெண்டை, வெள்ளிக் கெண்டை மற்றும் புல்கெண்டை ஆகிய ஆறு இனங்கள் கூட்டாக வளர்க்கப்படுகின்றன.

**தென்னார்க்காடு மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை:**

இம்மாவட்டத்தில் 50,973 எக்டேர் பரப்பளவு உள்ள உள்நாட்டு நீர்நிலைகள் இருப்பதைக் கண்டறிந்து அவற்றிலிருந்து சராசாரியாக ஆண்டு ஒன்றுககு ஒரு எக்டேரில் 25 கிலோ மீன் பிடிக்கப்படுவதை மாற்றி 3,000 கிலோவுக்கு உயர்த்தவும், படித்து வேலையற்றோருக்கும், மீன் வளர்ப்பில் ஊக்கம் உள்ளவர்களை ஊக்குவித்து சுய வேலை வாய்ப்புத் திட்டத்தை உருவாக்கும் நோக்கத்துடன் மத்திய, மாநில நிதி உதவியுடன் 1-12-1980 அன்று கடலூரில் இம் முகமையின் அலுவலகம் திறக்கப்பட்டது.

இதுவரையில் கடலூர், சிதம்பரம், மற்றும் காட்டுமன்னார்கோயில் வட்டங்களில் உள்ள ஆறு பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள குளங்களை எடுத்து மீன் வளர்ப்பு செய்து வந்தது. இவ்வாண்டில் மேலும் இதர பஞ்சாயத்து யூனியனில் உள்ள குளங்களை முகமை எடுக்க ஆய்வு நடத்தி வருகிறது.

**இம்மாவட்டத்தில் முகமை ஆற்றும் பணிகள்:**

1. மீன் வளர்ப்புக்கு ஏற்ற நீர்நிலைகளை நீண்டகாலக் குத்தகைக்கு முகமை எடுத்து, அதில் மீன்வளர்ப்பை ஏற்று நடத்தி, படித்த வேலையில்லா இளைஞர்களுக்குச் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஊக்குவித்தல்.

2. மீன் வளர்ப்பில் நவீன பயிற்சி அளித்தல்.

3. நீர்நிலைகளைச் சீர்திருத்தவும், தேவையான உயர்ந்த ரக மீன் குஞ்சுகளை வழங்கவும், இடுபொருள் மற்றும் குளச் சீரமைப்புக்கான கடன்களை வங்கியின் மூலம் பெற்று வழங்குதல்.

4. மீன்வளர்ப்பிற்குத் தேவையான தொழில் நுணுக்க உதவிகள் செய்தல்.

5. மீன்பிடித்தல் மற்றும் விற்பனைக்கு ஏற்பாடு செய்தல்.

6. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மானியம் பெற வழி வகை செய்தல்.

**இதுவரை இம்முகமை ஆற்றிய பணிகள்:**

1. மீன்வளர்ப்புக்கு முகமை வழங்கப்பட்ட குளங்களின் எண்ணிக்கை—390. அவற்றின் பரப்பளவு—304.6 எக்டேர்.
2. பயன்பெற்ற மீன்வளர்ப்போர்—420
3. பயிற்சி அளிக்கப்பட்டோர்—272.
4. சீரமைக்கப்பட்ட குளங்கள்—170.
5. குள சீரமைப்புக்கு வங்கி வழங்கிய கடன் ரூ. 10,72,634.
6. குளச்சீரமைப்பிற்கு வழங்கப்பட்ட அரசு மானியம் இம்முகமையின் மூலம் ரூபாய் 1.87 இலட்சம்.
7. வழங்கப்பட்ட உள்ளீட்டுக் கடன் முகமை மூலம் ரூ. 025 இலட்சம். வங்கியின் மூலம் —ரூ. 10.84 இலட்சம்.
8. உள்ளீட்டுக் கடனுக்கு வழங்கப்பட்ட அரசு மானியம் முகமையின் மூலம் —ரூபாய் 0.50 இலட்சம்.
9. வளர்ப்பிற்கு வழங்கப்பட்ட மீன் குஞ்சுகள் 42.72 இலட்சம்.
10. முகமையின் குளங்களில் மீன் உற்பத்தி —559.60 டன்கள்.
11. அவற்றின் மதிப்பு ரூபாய் 47.40 இலட்சம்.
12. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட உள்ளீட்டுக் கடனுக்கான மானியம் — ரூ. 0.72 இலட்சம்.

இத்திட்டத்தின் மூலமாக 420 பேருக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதுடன் எக்டேருக்கு 25 கிலோவாக இருந்த உற்பத்தியை மாற்றி எக்டேருக்கு 1,000 கிலோவாக கடந்த ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் இதனை 1,500 கிலோவிற்கு உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணை:**

குறிஞ்சுப்பாடி பஞ்சாயத்து யூனியனில் குள்ளஞ்சாவடி அருகில் அகரம் மேற்குக் கிராமத்தில் மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணை அமைக்க 4 எக்டோ நிலப் பரப்பு கையகப் படுத்தப்பட்டுள்ளது. தேசிய ஊரக வேலை வாயப்புத் திட்டத்தின் கீழ் 4 இலட்சம் செலவில் இவ்வாண்டில் மீன் பண்ணை அமைக்கப்பட இருக்கிறது.

மத்திய மாநில அரசு நிதியுதவியுடன் அதே இடத்தின் அருகில் 6.28 இலட்ச மதிப்பீட்டில் அமைக்கப்படவிருக்கும் மற்றொரு மீன்குஞ்சுப் பண்ணைக்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு கட்டுமானப்பணி தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த ஆண்டில் முகமை மீன்வளர்ப்பவர்களில் ஆர்வம் உள்ள 12 நபர்கள் நாற்றங்கால் மற்றும் மிதவைக் கூடுகளில் நுண்மீன் குஞ்சுகள் வளர்த்து, முகமைக்கு விற்பனை செய்ததில் சராசரியாக ஒரு நபருக்கு ரூ. 2,000 ஒன்றரை மாதத்தில் நிகர லாபமாகக் கிடைத்துள்ளது. இந்த ஆண்டில் முகமையின் சுய தேவையைப் பூர்த்தி செய்யும் அளவில் மீன்குஞ்சுகள், நாற்றங்கால் மற்றும் மிதவைக்கூடுகளில் வளர்த்து முகமை மீன்வளர்ப்போர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதனால் மீன்குஞ்சு உற்பத்தி இலாபத்துடன், மீன்குஞ்சுகள் விற்பனையின் மூலம் சராசரியாக ரூ. 3,000 நிகர லாபமாகக்கிடைக்கவும், அவர்களுடைய வாழ்க்கைத் தரம் மேலும் உயர்த்தவும், முகமை வழி காட்டியுள்ளது. நீலப்புரட்சியில் இந்த முகமை முன்னணியில் நிற்கிறது.

— ந. பாலையா,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
தென்னார்க்காடு மாவட்டம்.

---

## வள்ளுவர் வழங்கிய சொல்

காய் முற்றிக்கனிந்தால் கனி, காய்ப் பருவத்திற்கு முந்தியது பிஞ்சு எனப்படுகின்றது. திருவள்ளுவர் 'கருக்காய்' என்றார்.

''துனியும் புலவியும்
இல்லாயின் காமம்
கனியும் கருக்காயும் அற்று''

—என்பது குறள் (1306)

கருப்பிடித்து, ஆனால் 'கரு முற்றாத காய்' என்னும் பொருளில் இச்சொல் உருவாக்கப்பட்டுள்ளது. இச்சொல்லை முதன்முதலாகத் திருக்குறளில் காண்கின்றோம். காலப்போக்கில் கருப்பிடித்து, முற்றாமல் சாவியான நெல்பதர்க்கு இச்சொல் வழங்கப்படுவதாயிற்று.

நன்றி : தமிழ்ப் பல்கலைக்கழகச் செய்தி மலர்.



---

ணவர் பக்கம்

## உங்களுக்குத் தெரியுமா?



கடலில் மூழ்குபவர்கள் (Divers) 540 அடி ஆழம் வரை செல்ல முடியும். 600 அடி ஆழத்திற்குக் கீழே, தகுந்த பாதுகாப்பு இல்லாமல் சென்றால் உயிருக்கு ஆபத்து.

திராட்சை விதையைக்கொண்டு கொடி அபிவிருத்தி செய்ய முடியாது. பதியங்கள் தயாரித்துத் தான் திராட்சைக் கொடி வளர்க்க முடியும்.

பம்பாய் நேரு ப்ளானட்டோரியத்தில் இருக்கும் எடை பார்க்கும் கருவிகளில் சூரியனில் சந்திரனில் தம்முடைய எடை எவ்வளவு இருக்கும் என்று அறிந்து கொள்ளலாம்.

1866-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் பௌர்ணமியே இல்லாமல் போய்விட்டது. உலகம் தோன்றிய நாளிலிலிருந்து இம்மாதிரி ஏற்பட்டதே கிடையாது. இனி ஏற்படப் போவதுமில்லை.

மனிதர்களைப் போலவே நண்டு, இறால் மீன் ஆகியவை உடம்பிலிருந்து வியர்வை போன்ற திரவத்தை வெளியேற்றுகின்றன.

இரஷ்யாவில் உள்ள நகரங்கள் மலைகள், ஆறுகள், ஏரிகள் இவற்றின் பெயர்களை மாஸ்கோ நகர வீதிகளுக்கு வைத்திருக்கிறார்கள்.

இரகசிய வழி (The Secret way) என்னும் ஆங்கிலக் கவிதையைப் பின்பற்றி எழுதப்பட்டது பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் மனோன்மணீயம்.

கி.மு. 321-ஆம் ஆண்டில் உரோமாபுரி மன்னன் கான்ஸ்டன்டைனால் ஞாயிறு விடுமுறை தொடங்கியது.

1909-ஆம் ஆண்டில் வட துருவத்தை பியர் என்பவரும், 1911-இல் தென் துருவத்தை அமூன் ஸென் என்பவரும் கண்டு பிடித்தார்கள்.

ஆசியாவிலேயே மிகப் பெரியதான 'டெலி கம்யூனிகேஷன்' பயிற்சி நிலையம் ஜபல்பூர் கன்டோன்மெண்டில் உள்ளது.

பாதாம் பருப்பை விடப் பச்சைப் பயறில் உணவுச் சத்து அதிகம். அதேபோல நிலக் கடலை, பாலையும் முட்டையையும் விடச் சத்து வாய்ந்தது.

'ஒய்போ' என்றால் நைஜீரியாவில் தனி மரியாதை உண்டு. அங்கு வசிக்கும் வெளிநாட்டு மக்களை நைஜீரியர்கள் இப்படித் தான் அழைக்கிறார்கள்.

குரல், துத்தம், கைகிளை, உழை, இளி, விளரி, தாரம்— இவை ஏழும் சங்கீத சப்தசுரங்கள் 'சரிகமபதநி' என்பவற்றின் தூய தமிழ் விளக்கச் சொற்கள்.

ஒருவருக்கு 50-ஆவது வயதில் பொன் விழாவும், 60-ஆவது வயதில் மணிவிழாவும், 80-ஆவது வயதில் முத்துவிழாவும் நடத்துவார்கள்.

—தொகுப்பு:
ஆர். எஸ். சுப்பிரமணியன்

## எண்ணமெல்லாம் இனிப்பவர்

**புலவர் தணிகை உலகநாதன்**

நினது பிறந்த திருநாளை,
தங்கக் குழந்தைகள் திருநாளாய்,
மனது மகிழச் செய்தவர்யார்?
மனித குலத்தின் மாணிக்கம்!

நேரு அண்ணல் திருப்பெயரை
நெஞ்சில் வைத்தால் இனித்திடுமே
பேரும் புகழும் பெற்றவராம்
பெரிய பாரதத் திலகமவர்!

இன்றைய அரும்பே மலராகும்;
இன்றைய செடியே மரமாகும்;
என்றே எண்ணிக் குழந்தைகளின்
ஏற்றம் கருதிப் போற்றியவர்!

உலகம் அமைதி பெற்றிடவே
ஒவ்வொரு நாளும் உழைத்தவராம்
கலகம் பலவும் போக்கியவர்
கட்டிக் காத்தார் பாரதத்தை!

சத்தியம், தியாகம், சமரசமும்
தாமே உருவாய் வந்தவராம்
உத்தமர் அவர்வழி நடப்போமே
உலகில் நலமாய் வாழ்வோமே!



# அற்புதப் பொருள் அரக்கு!

பி. வெங்கட்டராமன்
தொழிற்கூட மேலாளர்.
அரக்குத் தொழிற்கூடம்,
சென்னை.

இன்றைக்கு ஏறக்குறைய நான்காயிரம் ஆண்டுகட்கு முன்பே மக்கள் அரக்கின் பயன்களைத் தெரிந்திருந்தனர் என்ற வியத்தகு உண்மையை நம் புராணங்கள் தெளிவாக்குகின்றன.

அரிய சிறிய பூச்சியினம் தாம் வாழும் மரக்கிளைகளின் மேல் தம்மைக் காக்க தம் உடலிலிருந்து சுரந்து பெருக்கும் பசைப் பற்றுள்ள, வெப்பத்தில் எளிதில் உருகும் சிவப்பு, மஞ்சள் நிறம் கலந்த கழிவுப் பொருளே அரக்கு எனப் பெறும். இப்பூச்சியினம் தம்மைச் சுற்றி சூழ்ந்து கொள்ளும் இப்பொருளின் தனிக்குணங்களைக் கண்ட மக்கள் இதனைத் தம் பயன்பாட்டுக்கு உகந்ததாகக் கருதி, இதைத் தூண்டு முறையில் பயிராக்கவும் முனைந்தனர்.

அரக்கு என்பது யாது? குறிப்பிட்ட சில இன மரக்கிளைகளில மட்டும் வாழும் பூச்சியினமான Laccifer Lacca என்ற நுண்ணிய பூச்சி, விரல் வண்ணமே உள்ள கிளைகளில் பதிந்து, மரச்சாற்றினை உறிஞ்சி உண்ணவும், முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்யவும், தம் உடலில் இருந்து மென்மையான, எளிதில் உருகும், மிகவும் பசைப்பற்றுள்ள கழிவுப் பொருளைச் சுரந்து தம்மைச் சுற்றிக் கூடுகள் கட்டிக் கொள்ளுகின்றன. இவை மழை மற்றும் வெப்பத்தால் பாதிக்கப்படாதவாறு கட்டியாகி, பூச்சிகட்குப் பாதுகாப்பு அளிக்கிறது. இவற்றைச் சேகரம் செய்து சுரண்டி எடுக்கப்படும் மேற்கூடுகள் மூல அரக்காகும். (Brood Lac). இவற்றை மேன்மேலும் சுத்தம் செய்து பலவிதமான பயன்பாட்டுக்கும் உரிய அரக்காகச் செய்யப்படுகிறது.

நமது தமிழகத்தில் மதுரை, சேலம் பகுதியில் மிகச்சிறிதளவும் வட இந்தியாப் பகுதிகளில் மத்தியப் பிரதேசம், பீகார், மேற்கு வங்காளம், அசாம் போன்ற பகுதிகளில் பெருமளவும் பயிராக்கப் படுகிறது. அரக்குப் பூச்சிகள் பொதுவாகக் குசும் மரங்கள், கருவேல், அத்தி, ஆல மரங்கள் மற்றும் இலந்தை மரங்களில் கூடு கட்டி வாழும். இவையாவும் இப்பூச்சிகள் உறிஞ்சி உயிர் வாழத் தேவையான சத்து நீரை உள்ளடக்கிக் கொண்டுள்ள மரங்களாகும். இவை சுமார் 8 முதல் 15 ஆண்டுகள் வயது எய்தியவுடன் இவைகளில் அரக்குப் பயிராக்கத் தகுதி பெறுகின்றன.

பயிர் செய்யு முன் தேவையற்ற கிளைகளை வெட்டி நீக்கி, நல்ல இடை வெளியும் வெளிச்சமும் வருமாறு செய்யப்படுகிறது.

அரக்கு வாணிகத்தில் கீழ்க்கண்டவாறு பாகுபடுத்தப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

1. பொன்னிற அரக்கு
2. கிச்சிலிப் பழநிற அரக்கு
3. கருஞ்சிவப்பு நிற அரக்கு
4. அடர்ந்த, கருமை நிற அரக்கு ஆகியனவாம்.

முற்றிய அரக்குப் பயிரே அறுவடைக்குகந்ததாம். முற்றாத கூடுகளை அறுவடை செய்வதானது கூட்டினுள் வசிக்கும் பூச்சிகளைப் பாதிப்பதாகும். தக்க காலத்தில் தக்க முறைகளைப் பயன்படுத்திப் பெறும் அரக்கு பலவிதமாக மேன்மேலும் சுத்தம் செய்யப்பட்டு மாறுதல் பெறுகிறது.

அரக்கின் வகைகளாக முதன்மையானதாகக் கருதப்படுபவை:

1. குச்சிகளின் மேல் படர்ந்துள்ள பூச்சிகளோடு கூடிய கொம்பரக்கு.

2. குச்சியிலிருந்து செதுக்கிச் சேகரம் செய்யப்பட்ட விதை அரக்கு அல்லது நொய்யரக்கு.

3. மேற்படி பெறப்பட்ட அரக்கினை மனித உழைப்பாலோ அல்லது இயந்திரங்களாலோ கழுவி சுத்திகரித்துத் தேவையான அளவு பசைப்பற்றுள்ளதாகவும் கரையக்கூடியதாகவும் அடைந்த செல்லாக் அரக்கு.

4. மென்மேலும் தேவைக்கேற்ப மெழுகு நீக்கி வெண்மையாக்கப்பட்ட அரக்கு.

**அரக்கைப் பதப்படுத்தும் முறை**

1. நொறுக்கித் தூய்மை செய்தல், அதிக நீர்பட்டு சுத்தம் செய்யப்படும் வண்ணம் துகள்களாக்கிடுதல்.

2. கழுவுதல் நொறுக்கிக் கலக்கப்பட்ட நொய்யாக்கியதில் கலந்துள்ள நீரில் கரையும் சாயங்கள், சர்க்கரைப் பொருட்கள், பூச்சியின் பகுதிகள் மரச்செதில்கள் மற்றும் நொறுக்கப்படாத அரக்குத் திசுக்களைக் கழுவி அகற்றும் முறை:

கழுவிய பின்னர், அரக்கு சிமிட்டிச் சாந்திடப்பட்ட வெளியில், நிழலில் காயவிடப்பட்டு மாறி மாறிப் புரட்டிக் களையப்பட்டு, உலர வைக்கப்படுகிறது. கழுவியதால் நீக்கப்படாத அசுந்தங்கள் சலித்தெடுக்கப்படுகின்றன. இயந்திரங்கள் உதவியால் மெழுகு அகற்றப்பட்ட அரக்கு சாயம் அகற்றிய அரக்கு ஆகியவையும் உற்பத்தி செய்யப்பட்டு வாணிபம் செய்யப்படுகின்றன.

இது பூச்சியின் கழிவுப் பொருளேயாயினும், அதில் அடங்கியுள்ள தனிப் பெருங்குணங்கள் கருதி, பலவகையிலும் அரக்கைப் பயன்படுத்தலாம். அவற்றின் பயன்கள் கீழ்க்கண்டவாறு அமையும்:

1. இசைத்தட்டுத் தொழில், 2. மின்கசிவுக் காப்புப்பொருள்கள் 3. காப்புப் பூச்சுகள் 4. மேற் பூச்சுக்கான பாலீஷ் 5. அழகுப் பொருட்கள் 6. சாராய மேற் பூச்சுத்தொழில் 7. முத்திரை அரக்குகள் 8. சிமிட்டி மற்றும் ஒட்டும் பொருள்கள் 9. அச்சுத் தொழில் 10. மின் விளக்கு ஆகியவை முதன்மையான பயன்களாம்.

காகிதம், மெருகூட்டல், மருந்துகள், நகல் பூச்சுகள் பற்பசைகள் நூற்கூம்புகள் பூச்சு, வெடிப்பு மருந்துகள் மேல் பூச்சு, நகைத் தொழில், கண்ணாடிப்பூச்சு, மெழுகு, வண்ணக் குச்சிகள், காலணித் தொழில் ஆகியவைகளிலும் அரக்கு பெரும்பான்மையாகப் பயன்படுகிறது.

மூல ஏற்றுமதிப் பொருளாக விளங்கும் அரக்கு பெரும் அந்நியச் செலாவணியையும் நமது அரசுக்கு ஈட்டித் தருகிறது. தற்காத்துக் கொள்ளச் செய்யப்படுகின்ற ஆனால் பிறரை பெருமளவில் அழிக்கச் செய்யப்படும் படைக்கலன்கள், வெடிகுண்டுகள் போன்றவற்றை வைத்துக் காக்கும் காகித உறைகளின்மேல் தீட்ட இந்தச் சாராய அரக்குக் குழம்பு பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இயற்கையளிக்கும் இவ்வற்புதப்பொருளை ஆக்கத்திற்காகவே மனிதன் பயன்படுத்தினால், ஏற்படும் பயன்கள் மிகப் பலவுண்டு.






# அன்னை இந்திராவுக்கு அஞ்சலி

மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களை நினைவு கூரும் வகையில் அக்டோபர் 31-ஆம் நாள் தேசிய மறு சமர்ப்பண நாள் தமிழக அரசின் சார்பில், ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு வந்திருந்தோரை தலைமைச் செயலர் திரு ஆ. பத்மநாபன், இ.ஆ.ப. வரவேற்றார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

''மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி அன்னை இந்திராகாந்தி அவர்களை நினைவு கூரும் வகையில் நாடே இன்று மறு சமர்ப்பண நாளைக் கொண்டாடுகிறது. அன்னை இந்திரா காந்திக்கு அஞ்சலி செலுத்தவும் நாட்டுக்கு நம்முடைய பணியை அர்ப்பணிக்கவும் இங்கே கூடியிருக்கிறோம்.



''ஏழை மக்களிடம் அவர் கொண்டிருந்த அன்பு - இந்திய நாட்டிடம் அவர்கள் கொண்டிருந்த பற்று, உலக அமைதிக்கு அவர்கள் ஆற்றிய தொண்டு எல்லாம் இந்திய வரலாற்றிலே மட்டுமல்லாமல் உலக வரலாற்றிலேயே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும் சிறப்புப் பெற்றவை ஆகும். நம்முடைய நாட்டையும் தமிழகத்தையும் மேலும் வளமடையச் செய்ய இந்தநாளில் நாம் உறுதி எடுத்துக் கொள்வோமாக.''

திரு செ. கு. தமிழரசன் எம். எல். ஏ. உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''இந்த நாடு இன்னமும்கூட எத்தனையோ மதங்களாலும் சாதிகளாலும் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இந்த தேசிய மறு சமர்ப்பண நாளிலே அன்னை இந்திராவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நம்மிடையே உள்ள இந்த வேறுபாட்டை ஒழிப்பதில் தீவிரமாகப் பணியாற்றுவதுதான் இந்த தேசத்துக்கும் அன்னை இந்திராவுக்கும் உண்மையிலேயே செலுத்துகிற அஞ்சலியாக இருக்கக்கூடும்.''

டாக்டர் எச். வி. அண்டே எம். எல். சி. உரையாற்றுகையில் குறிப்பிட்டார் :

''இந்த நாளில் நாம் சிந்திக்க வேண்டியது-எப்படிப்பட்ட உன்னதமான ஒரு தியாகத்தை அன்னை இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதை நாம் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.''

திரு. குமரி அனந்தன் எம்.எல்.ஏ. உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது :

''ஒரு பெண் எதை எதை விரும்புவாளோ அதை அதை எல்லாம் தன்னுடைய குடும்பத்தைப் பொறுத்தவரைஇந்திரா இழந்திருக்கிறார். தான் இறந்ததற்குப் பிறகு தன் கணவன் இருக்க வேண்டும். கணவனுக்கு முன்னால், தான் இறக்க வேண்டும் என்று ஒரு இந்தியப் பெண் விரும்புவாள். அந்த வாய்ப்பு இந்திராவுக்குக் கிடைக்கவில்லை. பெரோஸ் காந்தி முதலிலேயே போய்விட்டார்! தன்னுடைய பிள்ளை தன்னைக் காப்பாற்றுவதற்கு இருக்க வேண்டும் என்று சொல்வார்கள்; ஒரு பிள்ளை அவர் வாழ்ந்து கொண்டிருக்கும் போதே விமான விபத்திலே போய் விட்டார். இவைகளையெல்லாம் பார்க்கும்போது குடும்பத்திலே அவருக்கு ஏற்பட்ட சோதனை ஒருபுறம்; அதனாலே அனுபவித்துக் கொண்டிருந்த வேதனை ஒருபுறம். இத்தனைக்கும் மத்தியிலேதான் பாரதத்தை காப்பதிலே துணிந்து நின்றார் அந்தப் பெண்மணி''.

திரு. ஏ. கே. ஏ. அப்துல்சமத் எம். எல். ஏ. அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''இந்தியப் பேரரசினுடைய பிரதம அமைச்சராக ஏற்றம் பெற்று, இந்தியாவினுடைய தலைவியாக மாத்திரமல்லாமல் விடுதலை பெற்ற ஒரு நூற்றுக்கும்மேற்பட்ட நாடுகளினுடைய-அணிசேரா நாடுகளுடைய அருந்தலைவியாகவும் உருப்பெற்று, அவருடைய முழு ஆற்றலும் உலகமெலாம் அறியத்தக்க வகையில் அரிய பணிகளை ஆற்றி உலகமெலாம் வியக்கக்கூடிய ஒரு வீராங்கனையை நம்முடைய நாடு தலைவியாகப் பெற்றிருக்கிறது என்ற பெருமித உணர்ச்சியோடு நாமெல்லாம் நடமாடிக்கொண்டிருந்த ஒருகால கட்டத்தில், மேலும் நீண்ட காலத்திற்கு வழிகாட்டக் கூடிய ஒரு தகுதியும் திறமையும் பெற்ற ஒரு தலைமை உலகளாவிய தலைமையாக உருவாகி வருகிறது என்று உலகத்தினுடைய பெருந்தலைவர்களெல்லாம் கணித்துக்கொண்டிருந்த ஒரு நாளில்-அவர் திடீரென்று நம்மிடமிருந்து பிரிக்கப்பட்டார்.''

திரு எம். கல்யாணசுந்தரம் அவர்கள் பேசுகையில் தெரிவித்தார்:

''உலகமே இந்திராகாந்தியைப் பாராட்டுகிறதென்றால் அந்த அம்மையார் இந்தியாவுக்காக மட்டும்போராடவில்லை, உலகத்திற்காகப் போராடினார். மனித குலம் முழுவதற்குமாகப் போராடினார்.''

மாண்புமிகு சுற்றுலா, மது விலக்கு, மின்துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன்அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது :

''மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாபெரும் தலைவராக அன்னை இந்திரா விளங்கினார். இந்தியாவினுடைய கௌரவத்தையும் ஒற்றுமையையும் உலகம் பாராட்டுகிற அளவுக்கு எந்த நாடும் - அமெரிக்காவானாலும் தூரக்கிழக்கு நாடுகளானாலும் இந்தியாவுடைய மண்ணையே மிதிப்பதற்கு அஞ்சும்படியாக ஒரு வலுவுள்ள நாடாக அவர்கள் இதை ஆக்கினார்கள்.

'' இந்தியாவிலும், ஆசியாவிலும் உலகத்திலும் அமைதி நிலவ வேண்டுமென்பதற்காக இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் தம் வாழ்நாள் முழுதும் பாடு பட்டார்கள்.''

மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டதாவது:

'' நாட்டிற்காகத் தொண்டாற்றும்போதே நான் இறந்துபட நேரிட்டாலும்,நான்அதனைப் பெருமைக்குரியதாகவே கொள்ளுவேன். என்னுடைய உடலில் உள்ள ஒவ்வொரு சொட்டு இரத்தத்தையும் நாட்டின் வளர்ச்சிக்கும் அதனை வலிவுபடுத்துவதற்கும் பலப் படுத்துவதற்குமே பயன்படுத்துவேன் என்று உறுதி கொள்ளுவேன் என்றுதான் இந்திரா அம்மையார் மிகத் தெளிவுபடஎடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

'' இதிலிருந்து அவருடைய உள்ள உறுதியையும் தன்னை நாட்டுக்கு ஒப்படைத்த தன்மையையும் நாம் காணலாம்.''

மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் தலைவர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் தமது தலைமை உரையில் குறிப்பிட்டதாவது :

''பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக இந்திரா காந்தி

> உழைப்பும் தியாகமும் சேர்ந்தால் தான் ஒற்றுமையுணர்ச்சி பிறக்கும்.
>
> - தாகூர்

அம்மையார் இந்த நாட்டிலேஅவதரித்தார். பெண்ணே பிரதமராக வருவது பிரிட்டனில் நடக்கிறது. இன்னும் பல நாடுகளில் நடந்திருக்கிறது. ஆனால் பெண் பிரதமராக இருந்தார் என்பதற்

காக அல்ல இந்திராகாந்திக்கு வந்த பெருமை-பாராட்டு-புகழ்! உலகத் தலைவியாக வந்தார் என்பதற்காக!

''அந்நியன் ஒருவன் ஆளுகிற போதுதான் நாட்டைத் துண்டாட முடியுமே ஒழிய ஒருநாட்டு மக்கள் தங்களைத் தாங்களே ஆளுகின்றபோது நாட்டைத் துண்டாடுகிற சக்தி பிறக்கவில்லை. பிறக்கப்போவதும் இல்லை. பிறந்தாலும் உயிர் வாழவடப்போவதுமில்லை. இதுதான் மறு சமர்ப்பணம் என்ற உறுதியை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும்.''

செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப அவர்கள் நன்றி நவின்றார்.

நிகழ்ச்சியின் தொடக்கத்தில் தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் வகையில் பல்வேறு பள்ளிகளைச் சார்ந்த மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகளும் - இறுதியில் சீர்காழி சிவ சிதம்பரத்தின் தேசியப் பாடல் நிகழ்ச்சியும் நடைபெற்றன.

—நமது செய்தியாளர்



# வேலை வாய்ப்புத் தரும் தேயிலைத் தொழில்

நீலகிரி மாவட்டத்தில் ஒரு ஏக்கருக்கும் குறைவான நிலமுள்ள சிறு விவசாயிகள் கணிசமாக உள்ளனர். இவர்கள் தோட்டங் களில் விளையும் பச்சைத் தேயிலைக்கு நல்ல விலை கிடைக்காது. அவதியுற்று வந்தனர். அவர்கள் தனியார் தேயிலைத் தொழிற்சாலை களாலும், இடைத்தரகர்களாலும் நசுக்கப் பட்டு நல்வுற்றிருந்தனர். இந்நிலையை மாற்றிட, தொழில் கூட்டுறவுச் சங்க அமைப்பு அமைக்கப்பட்டது. இச்சிறு விவசாயிகளை உறுப்பினர்களாகக் கொண்ட இந்த அமைப்பு, சிறு விவசாயிகளிடமிருந்து பச்சைத் தேயிலையை வாங்கி, சங்கத்தால் அமைக்கப் பட்ட தொழிற்சாலையில் அவற்றைப் பதப் படுத்தி விற்பனை செய்கின்றது. இந்த அமைப்பால் பச்சைத் தேயிலைக்கு விவசாயி கட்குக் கிடைக்கும் விலை மிகக் கணிசமாக உயர்ந்துள்ளது. தேயிலை விலை கூடும் காலத்தில் பச்சை இலை விலையைக் கூடுத லாக்கி விலையேற்றத்தால் விளைந்திடும் நன்மை விவசாயிக்குக் கிடைக்க இச்சங்கங்கள் வழி வகுத்துள்ளன.

தற்போது 12 தேயிலைச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. மற்றொரு சங்கம் அமைக்கப்பட்டு, கட்டுமானப் பணி நடை பெற்று வருகிறது. நடப்பாண்டில் இது செயற் படத் துவங்கும். 8,500 சிறு விவசாயிகள் இச் சங்கங்கள் மூலம் பயன்பெற்று வருகின்றனர்.

தமிழ்நாடு தேயிலை உற்பத்தியில் பத்து விழுக்காட்டிற்கு மேல் இச்சங்கங்களால் உற் பத்தி செய்யப்படுகிறது. ஏறத்தாழ 55,000 நபர்கள் இச்சங்கங்கள் மூலம் வேலைவாய்ப்பு பெற்று வருகின்றனர். தமிழ்நாடு அரசு தேயிலை வாரியம், தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் ஆகியவை கணிசமான நிதியுதவியை இச்சங்கங்களுக்கு அளித்துள்ளன. மைய அரசு சுங்கவரிச் சலுகை அளித்துள்ளது. மலைப் பகுதிகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கணிச மான நிதியுதவி இவற்றிற்கு அரசால் வழங்கப் பட்டுள்ளது. இவ்விதம் வழங்கப்பட்ட நிதி யுதவி வருமாறு:

| | ரூ. இலட்சத்தில் |
|---|---|
| 1980—81 | 13.98 |
| 1981—82 | 20.00 |
| 1982—83 | 15.00 |
| 1983—84 | 15.00 |
| 1984—85 | 14.00 |
| 1985—86 | 50.00 |

இத்தேயிலைக் கூட்டுறவுத் தொழிற் சாலைகளின் மத்திய சங்கமாகச் செயற்பட்டு வரும் இன்கோசெர்வ் கடந்த ஆண்டில் 30,200 கிலோ தேயிலை ஏற்றுமதி செய்துள் ளது. இந்திய இராணுவத்துக்கு ரூ. 97.49 இலட்சம் மதிப்புள்ள தேயிலை விற்பனை செய்துள்ளது.

நடப்பாண்டில் கொடைக்கானலில் ரூ.58.55இலட்சம் செலவில்2,000ஏக்கர் பரப் பில் ஒரு தொழில் கூட்டுறவுத் தேயிலைத் தோட்டம் அமைக்கப்பட உள்ளது. இதன் மூலம் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த 900 நபர்கள் பயன் பெறுவர். தவிர நீலகிரி மாவட்ட சின்னக்கோரையில் ரூ. 60 இலட்சம் செலவில் மற்றொரு தேயிலைத் தொழில் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட உள்ளது.

# கூட்டுறவுக் கொடியின் கதை

வானவில் என்பது ஊக்கத் திற்கும் நம்பிக்கைக்கும் காரணமான ஒரு சின்னமாக உலக இலக்கியங்களில் கற்பனையாகக் கையாளப்பட்டு வந்திருக்கிறது.

கூட்டுறவு இயக்கத்தின் நோக்கத்தையும் லட்சியத்தையும் பிரதிபலிப்பதற்கு வானவில் கொடியை விட சிறந்த பொருத்தமான சின்னம் வேறு எதுவும் இருக்க முடியுமா? ஏனென்றால் வானவில்லைப் போலவே, கூட்டுறவு இயக்கமும் மனம் நொந்தவர்களுக்கு நம்பிக்கையளிக்கிறது. முரண்பட்ட நலன்களுக்கிடையே ஒற்றுமையையும் இறுதியாக சுருதி பேதமற்ற வாழ்க்கையையும் பெறலாமென்ற நம்பிக்கையும் இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் இது சர்வதேச சமரச சன்மார்க்கத்தின் கொடியாகும். ஜாதி, மதம், இனம், நிறம் இவற்றிற்கு இங்குவேலையில்லை.

இக்கொடியின் வரலாறு வளமை மிக்கதாகும். பிரெஞ்சு நாட்டுக் கூட்டுறவாளர்களில் முன்னோடியான சார்லஸ் பௌரியர் (Charles Fourier), என்பவர் தனது லட்சிய சமூக அமைப்பான 'பாலன்ஸ்டீரி'க்கு (Phalans-tere) வானவில்லை சின்னமாகக் கொண்டு 'வேற்றுமையில் ஒற்றுமைக்கு' அடையாளமாக அமைத்தார். அவர் மறைவுக்குப் பிறகு அவரது சீடர்கள் இந்த சின்னத்தைப் பின்பற்றிவந்தனர். 1896ல் பாரிஸ் நகரில் நடைபெற்ற அகில உலக கூட்டுறவு அமைப்பின் இரண்டாவது மாநாட்டில் 'பேமிலிஸ்டிரிக் டி கைஸ்' என்னும் தொகுதியில் இருந்து வந்திருந்த பிரதிநிதி எப். பெர்னார்டாட் (F. Bernardot) என்பவர் தான் முதன் முதலில் வானவில் சின்னத்தை அகில உலக கூட்டுறவு அமைப்பின் கொடிக்கு பின் பற்ற வேண்டும் என்று கருத்து தெரிவித்தார். இக்கருத்து உடனடியாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. எனினும் பிரான்சு நாட்டின் கூட்டுறவாளரான சார்லஸ் கிடி (Charles Gide) இக்கருத்துக்கு உயிர் கொடுத்துக் கொண்டே இருந்தார். 'கூட்டுறவின் பன்னிரண்டு அறப் பண்புகள்' என்னும் நூலில் அகில உலக கூட்டுறவு அமைப்பின் கொடி 'பாலன்ஸ்டீரியர்களுடை'யதைப் போல வானவில்லின் ஏழு வண்ணங்களை கொண்டதாக இருக்க வேண்டும் என்று எழுதினார். ஏறக் குறைய 30 ஆண்டுகள் கழித்து 1923–ல் கென்ட் (Ghent) எனும் இடத்தில் நடைபெற்ற அகில உலக கூட்டுறவு அமைப்பின் கூட்டத்தில் வானவில்லின் நிறத்தையே கூட்டுறவுக் கொடிக்கும் பயன்படுத்த வேண்டும் என்ற கருத்தை அவர் முன் வைத்தார். அகில உலக கூட்டுறவு அமைப்பின் செயற்குழு இதனை ஏற்றுக் கொண்டது.

வானவில்லின் வண்ணங்களை கொடியில் சரியாகக் கொண்டு வருவதில் உள்ள சிரமங்களை அறிந்த கிடி (Gide) இதற்கு ஒரு யோசனை சொன்னார். அதாவது வெள்ளை நிற பின்னணியில் ஏழு வண்ணங்களும் ஒன்றின் கீழ் ஒன்று பொருந்தியிருக்குமாறு அமைத்துக் கொள்ளச் சொன்னார். ஒரு நட்சத்திரத்தையும் கொடியில் வைத்துக் கொள்ளச் சொன்னார். 1924–ல் கென்ட்டில் (Ghent) நடைபெற்ற அகில உலக கூட்டுறவுக் கண்காட்சி மற்றும் கூட்டுறவு மாநாட்டில் முதன் முதலாக ஏற்றி வைக்கப்பட்ட கூட்டுறவுக் கொடி இத்தகைய அமைப்பைக் கொண்டதாகவே இருந்தது. ஆனால் அடுத்த ஆண்டில் நடைபெற்ற இதன் செயற்குழு தற்போதுள்ளபடி வானவில் வண்ணத்தை நீள் சதுர பட்டை வடிவில் கொண்ட கொடியை ஒப்புதல் செய்தது. நட்சத்திரம் போய்விட்டது.

குறுகிய தேசிய மற்றும் இனப் போராட்டங்களால் மனிதத் தன்மை அச்சுறுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த அணு ஆயுத காலத்தில், ஆயுதக் குவிப்புக்கு மத்தியில், கூட்டுறவு உணர்வுகளை பிரதிபலிப்பதாக இந்தக் கொடி இருந்து கொண்டிருக்கிறது. பல்வேறு தேசத்தவர்களாக இருந்தாலும் சரி, பல்வேறு இனத்தவர்களாக இருந்தாலும் சரி அவர்கள் குறுகிய உணர்வுகளை விட்டொழித்து அமைதியாகவும் ஒற்றுமையாகவும் வாழவேண்டும் என்பதையே இக் கொடியின் ஏழு வண்ணங்கள் மனிதர்களுக்கு உணர்த்துகின்றன. கூட்டுறவு முறை வாழ்க்கையின் ஒட்டுமொத்த லட்சியமும் இதுதான்.



# கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள்

மாநில அரசு கரும்பு பயிரிடுவதிலிருந்து சர்க்கரை உற்பத்தி செய்து நுகர்வோருக்கு வழங்கும் வரை திட்டமிடுதல், செயல்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது.

தமிழகத்திலுள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் பன்னிரண்டு. செயல்படும் ஆலைகள் 11. கட்டுமானப் பணியில் 1, ஆகமொத்தம் 12. ஆலைகளில் சேர்ந்து பயன்பெறும் உறுப்பினர்கள் 1,57,809 பேர். 1985-86ல் பிழிந்த கரும்பின் அளவு 35.88 இலட்சம் டன்கள். தயாரித்த சர்க்கரையின் அளவு .49 இலட்சம் டன்கள். 1986-87ல் பிழியவிருக்கும் கரும்பின் குறியீடு 34.03 இலட்சம டன்கள். 1986-87ல் தயாரிக்கவிருக்கும் சர்க்கரையின் குறியீடு 3,11,115 மெ.டன்கள்.

சர்க்கரைத்துறை சம்பந்தப்பட்ட வரையில் மயிலாடுதுறை கூட்டுறவு சர்க்கரை ஆலை புதிய 20 அம்சத் திட்டத்தின் கீழ் கொண்டு வந்து அமுல்படுத்தப் பட்டுள்ளது. தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறையில் நாளொன்றுக்கு 1250 டன் 'பிழிதிறன்' கொண்ட ஒரு சர்க்கரை ஆலை நிறுவுவதற்கு மத்திய அரசு உரிமம் வழங்கியுள்ளது. கூட்டுறவுத் துறையில் தலைஞாயிறில் அமைக்கப்பட்டுள்ள இந்த ஆலையின் திட்டச் செலவு ரூ. 1177 இலட்சமாகும். அரசின் பங்கு மூலதனமாக இதுகாறும் ரு.354 இலட்சம் ஆலைக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த சர்க்கரை ஆலை 100 ஏக்கர் கொண்ட நிலப்பரப்பை இதற்காக வாங்கியுள்ளது.

**எம். இராமன், இ.ஆ.ப.**
**இயக்குநர் (பொறுப்பு)**
**சர்க்கரைத்துறை.**

நிதி ரூ. 695 இலட்சத்தில் ரூ. 555 இலட்சம் I.C.I.C.I. ஆல் அனுமதிக்கப்பட்டுள்ளது. உறுப்பினர்களின் பங்கு மூலதனமாக இந்த சர்க்கரை ஆலை ரூ.120 இலட்சம் 31.7.86 வரை சேகரித்துள்ளது. அனைத்துக் கட்டுமான பணிகளும் மிக வேகமாக முடிக்கப்பட்டு வருகின்றன. டிசம்பர் 86ல் இந்த ஆலை அரவையை துவங்க திட்டமிடப்பட்டுள்ளது.

மத்திய அரசின் பரந்த கொள்கையின் கீழ், தமிழகம் நாளொன்றுக்கு 46,400 டன்கள் கரும்பு அரவை செய்யும் உரிமம் பெற்றுள்ளது. இந்த பிழிதிறனை 14 கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளும் 10 தனியார் சர்க்கரை ஆலைகளும் பகிர்ந்து கொண்டுள்ளன. கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் பிழிதிறன் மட்டும் நாளொன்றுக்கு 21,950 டன்கள், நாட்டின் சர்க்கரை உற்பத்திக்கு தமிழகத்திலுள்ள வரையறுக்கப்பட்ட கொள்கைகளே சர்க்கரை இயக்குநரின் பணிகளுக்கு பின்னணியாக உள்ளது என இதனால் புலனாகும். 24 சர்க்கரை ஆலைகளும் தொடர்ந்து நிலையான பங்களித்து வருகின்றன. நாட்டின் சர்க்கரை உற்பத்தியில் 10 சத



## 1987-ஆம் ஆண்டு அரசு விடுமுறை நாட்கள்

1987-ஆம் ஆண்டு பொது விடுமுறை நாட்களாக, கீழ்க்கண்ட நாட்களைத் தமிழக அரசு அறிவித்துள்ளது:—

| | | | |
|---|---|---|---|
| சனவரி | 1 | வியாழன் | ஆங்கிலப் புத்தாண்டு நாள் |
| ,, | 14 | புதன் | பொங்கல் |
| ,, | 15 | வியாழன் | திருவள்ளுவர் நாள் |
| ,, | 16 | வெள்ளி | உழவர் திருநாள் |
| ,, | 26 | திங்கள் | குடியரசு நாள் |
| மார்ச் | 30 | திங்கள் | தெலுங்குப் புத்தாண்டு நாள் |
| ஏப்ரல் | 14 | செவ்வாய் | தமிழ்ப் புத்தாண்டு நாள் |
| ,, | 17 | வெள்ளி | நல்ல வெள்ளி |
| மே | 1 | வெள்ளி | மே நாள் |
| ,, | 30 | சனி | ரம்சான் |
| ஜூன் | 30 | செவ்வாய் | வங்கிக் கணக்குகள் அரையாண்டு முடிப்பு |
| ஆகஸ்ட் | 6 | வியாழன் | பக்ரீத் |
| ,, | 15 | சனி | விடுதலை நாள் |
| ,, | 28 | வெள்ளி | விநாயகர் சதுர்த்தி |
| செப்டம்பர் | 5 | சனி | மொகரம் |
| அக்டோபர் | 1 | வியாழன் | ஆயுத பூஜை |
| ,, | 2 | வெள்ளி | ஆயுத பூஜை மற்றும் காந்தி ஜெயந்தி |
| ,, | 21 | புதன் | தீபாவளி |
| நவம்பர் | 5 | வியாழன் | மிலாடிநபி |
| டிசம்பர் | 25 | வெள்ளி | கிருஸ்துமஸ் |
| ,, | 31 | வியாழன் | வங்கிக் கணக்குகள் ஆண்டு முடிவு |

குறிப்பு:- ரம்ஜான், விடுதலை நாள், மொகரம் ஆகியவை விடுமுறை நாளான சனிக்கிழமையில் வந்தாலும், குறிப்புப் பார்க்க வசதியாக, இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

ஜூன் 30, டிசம்பர் 31 ஆகிய விடுமுறை நாட்கள் அரசு அலுவலகங்களுக்குப் பொருந்தா.

வீத சர்க்கரை உற்பத்தி தமிழகத்தின் பங்காகும். 1985-86ஆம் ஆண்டில் நாட்டின் சர்க்கரை உற்பத்தியான 69 இலட்சம் டன்களில் தமிழகத்தின் சர்க்கரை உற்பத்தி 7 இலட்சம் டன்களாகும்.

தமிழகத்தில் சுமார் 1,30,000 கரும்பு வழங்கப் பதிவு செய்த உறுப்பினர்கள் உள்ளனர். இம்மாநிலத்திலுள்ள சர்க்கரை ஆலைகளின் வருடாந்திர கரும்பு கொள்முதல் தொகை ரூ. 135 கோடியாகும். கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் மட்டும்71,000 கரும்பு வழங்கப் பதிவு செய்த விவசாயிகள் உள்ளனர். கூட்டுறவு மற்றும் பொதுத்துறை ஆலைகள் ஆண்டு ஒன்றிற்கு ரூ. 72.36 கோடி கரும்பு விலையாக வழங்குகின்றன. இதனால் மாநில அரசு ஆண்டு ஒன்றிற்கு சுமார் ரூ. 20 கோடி வருமானமாகப் பெற்று வருகின்றது.

தமிழ்நாட்டில் கரும்பு அரவைப்பட்டம் 172 நாட்கள் என மதிப்பிடப்படுகின்றது. இதன் அடிப்படையில் இம்மாநிலத்திலுள்ள சர்க்கரை ஆலைகள் ஒரு மாதத்திற்கு ரூ. 22 கோடியாகவும் ஒரு நாளைக்கு ரூ.74 இலட்சமாகவும் கரும்பு கொள்முதல் செய்வதன் மூலம் விவசாயிகளுக்கு வழங்கி வருகின்றன. இவற்றில் 70% விவசாயிகள் இரண்டு ஏக்கர் நிலத்திற்கும் குறைவாகவே கொண்டுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது, எனவே ஆலைகள் வழங்கும் தொகையில் பெரும்பகுதி சிறு விவசாயிகளையே போய்ச்சேருகின்றது எனத் திடமாகக் கூறலாம். இதனால் சிறு விவசாயிகளுக்கு அதிகப்படியாக வருமானம் அளிக்கும் வியாபாரப் பயிராகக் கரும்பு விளங்கி வருகிறது.

ஒரு ஹெக்டேருக்கு 105 டன்கள் கரும்பு தமிழகத்தில் விளைகின்றது. இதுவே இந்தியாவில் அதிகப்படியான விளைச்சலாகும்.

ஆலைகளின் பயன்படுத்தும் செயல்திறன் தமிழகத்தில் மட்டுமே மிக அதிகமாகும். 1985-86ல் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் செயல்திறன் 100%க்கு மேல் உள்ளது.





# நாளும் வளரும் கூட்டுறவு

கொ. சி. எல்லப்பன்
தனி அலுவலர்
செங்கை மாவட்டக் கூட்டுறவு ஒன்றியம்

தமிழ்நாட்டில் உள்ள சிறப்புக் காவலர் குடும்பப் பெண்டிருக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்புக் கொடுத்து அவர்களது குடும்ப நலத்தைக்காப்பதுடன்வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டும் என்ற நல்லநோக்கத்துடன் ஆவடியில் இரண்டு தமிழ்நாடு சிறப்புக் காவலர் மகளிர் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன.

(1) தமிழ்நாடு சிறப்புக் காவலர் மகளிர் தையல் குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம் மற்றும் (2) தமிழ்நாடு சிறப்புக் காவலர் மகளிர் காலுறை பின்னும் மற்றும் குடிசைத்தொழில் கூட்டுறவுச்சங்கம் என்ற பெயரில் முறையே 12.2.61 மற்றும் 6.9.69 தேதிகளில் தொழில் வணிகத்துறையைச் சார்ந்த தொழிற் கூட்டுறவுப் பதிவாளர் அவர்களால் பதிவு செய்யப்பட்டு திறம்படச் செயல்பட்டு வருகின்றன.

இவ்விரு சங்கங்களிலும் தமிழ்நாடு சிறப்புக் காவலர் முகாம் ஆவடியைச் சேர்ந்த சுமார் 235 பெண்டிர்கள் தையல் வேலை உல்லன் காலுறை பின்னுதல் உல்லன் பனியன்கள் பின்னுதல் காவல்துறை தொப்பிகள் தயாரித்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டுக் காவல் துறையினருக்குத் தேவையான சகலவிதமான உடைப்பொருட்கள் சீருடைகள் தயாரித்துக்கொடுத்து ஒவ்வொரு வரும் மாதத்திற்கு ரூ. 5,00-க்குக் குறையாமல் வருமானம் பெறுகின்றனர்.

இச்சங்கங்களின் நிர்வாகம் பதிவாளர் அவர்களால் நியமனம் செய்யப்பட்ட நிர்வாகப் பொறுப்பில் இருந்தபோதிலும் தொழில் வணிகத் துறையைச் சார்ந்த அதிகாரிகளால் திறம்பட நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு முழுவதும் 34க்கு மேற்பட்ட தையல் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தபோதிலும் இவ் விரு சங்கங்களும் அவற்றுல் முதலிடம் வகிப்பதுடன் சிறந்த தையல் கூட்டுறவுச் சங்கங்கள் என்ற விருதைத் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திலிருந்து கடந்த மூன்று ஆண்டுகளாகத் தவறாது பெற்று வருகின்றன. என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விரு சங்கங்களும் செங்கல்பட்டு மாவட்டத்தில் திறம்பட இயங்கி வரும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக் குத் தக்கசாட்சியங்களாகும். அண்மையில் இச்சங்கங்களுக்கு வருகை தந்த மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் ஆனூர் ஜெகதீசன் இவற்றின் செயல்

திறனைப் பாராட்டியதுடன் இது போலப் பல கூட்டுறவுச் சங்கங் கள் தமிழகம் முழுவதும் துவக்கப் பட்டு திறம்பட நிர்வகிக்கப்பட வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தார்.

மேலும் அண்டை மாநிலக் காவல் துறை நிர்வாகத்தினரை அணுகி அந்த மாநிலக் காவலர் சளுக்குச் சீருடை தைத்துக் கொடுக்க ஆணைபெற முயற்சி மேற்கொள்ளலாமென்றும் ஆலோசனை வழங்கினார். இந்தச் சங்கங்கள் காவலர் துறையினருக்குத் தேவையான உடைப்பொருட்கள் தைப்பதுடன் அரசு தீயணைப்புப் படையினர், ரயில்வே பாதுகாப்புக் காவலர் மற்றும் மத்திய தொழில்துறைப் பாதுகாப்புப் படையினர் தனித்துச் செயல்படும் பாதுகாபபு மற்றும் துப்பு துலக்கும் குழுமம் அனைத்துக்கும் தேவையான உடைப்பொருட்கள் தைத்து வழங்கி வருகின்றன. கடந்தஆண்டில் முதலமைச்சரின் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பள்ளிச் சீருடைகளைச் சிறந்த முறையில் தைத்துக் கொடுத்து சமூக நலத்துறை அதிகாரிகளின் பாராட்டுதலைப் பெற்றுள்ளன.

இச்சங்க உறுப்பினர்கள் தொடர்ந்து வேலை வாய்ப்புப் பெறுவதன் மூலம் நிரந்தர வருமானம் பெறுவதுடன் ஆண்டு தோறும் பங்குத்தொகையின் பேரில் 12% ஈவுத்தொகை நிறைந்த கா...வலர் சீருடை மற்றும் ஊக்குவிப்புப் பரிசுகள் தங்கள் குழந்தைகளின்கல்விக்காக உதவித் தொகை என்று பல்வேறு பயன்களைப் பெற்று மகிழ்கின்றனர். இவ்விரண்டு கூட்டுறவுச் சங்கங்களும் காவல்துறையினரின் நலன் காக்கும் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சிறந்த முன்னோடி என்றால் அது மிகையாகாது.

இச்சங்கங்களின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தில் நம்பிக்கை வைத்து எழில் மயமான ஆவடி சிறப்புக் காவலர் முகாமைத் தொழில் மயமாக்கத் தமிழ்நாடு தொழில் வணிகத் துறையும் காவல்துறையும் இணைந்து செயல்படுகின்றன. அதன் பயனான கீழ்க்கண்ட புதிய தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் திரு. சி.



செல்லப்பன் இ.ஆ.ப., தொழில் துறை ஆணையர் மற்றும் இயக்குநர் அவர்களால் பதிவு செய்யப்பட்டு முன்னாள் காவல் துறை இயக்குநர் திரு. வி.ஆர். லட்சுமி நாராயணன், இ.கா.ப. அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.



மக்கள் ஒருமைப்பாட்டின் மறு உருவமாக விளங்குவது கூட்டுறவு. மக்களாட்சி மலர்ச்சியடையும்போது கூட்டுறவு உணர்வும், மலர்ச்சி அடைகிறது. வேளாண்மைப் பெருக்கத்தில் முனைப்பாக ஈடுபட்டுள்ள நேரத்தில் இத் தேவைக்கேற்ப இக்கூட்டுறவு இயக்கப் பணிகளும் விரிவடைவது அவசியம்.

—பேரறிஞர் அண்ணா

தமிழ்நாடு சிறப்புக் காவலர் டயர் புதுப்பிக்கும் தொழில் கூட்டுறவுச் சங்கம்.

தொழிற் பயிற்சி பெற்ற சுமார் 32 இளைஞர்களை உறுப்பினர்களாகச் சேர்த்து இச்சங்கம் ரூ. 54,750 பங்கு மூலதனத்துடன் செயல்பட்டு வருகின்றது. இதன் உறுப்பினர்களுக்குப் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் டயர் புதுப்பிக்கும் பிரிவில் போதிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலிருந்து இனாமாக ஒரு டயர் புதுப்பிக்கும் இயந்திரமும் கோவை எல். ஜி. நிறுவனத்திலிருந்து டயர் புதுப்பிக்கும் இயந்திரமும் மற்றும் தேவையான இதர சாதனங்களும் வாங்கி ரூ. 5 லட்சம் செலவில இத்திட்டத்தைச் செயல்படுத்த வங்கிக்கடன் எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சங்கம் கோபர் காஸ் அடுப்புகள் தயாரித்து நிறுவ மாவட்ட கலெக்டர் காஞ்சிபுரம் அவர்களிடமிருந்து தக்க உரிமமும் அனுமதியும் பெற்றுள்ளது. இதுவரை மூன்று கோபர் காஸ் அடுப்புகள் தயாரித்து நிறுவப்பட்டுள்ளன. மேலும் 3 கோபர் காஸ் அடுப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இச்சங்க உறுப்பினர்கள் சிறப்புக் காவலர் அணிகளின் தேவைக்கேற்ப வெல்டிங்வேலை, இருப்புத் தளவாடங்கள் பழுது பார்த்தல் மற்றும் பாத்திரங்களுக்கு ஈயம் பூசுதல் போன்ற பணிகளையும் செய்து தொடர்ந்து வருமானம் ஈட்டி வருகின்றார்கள்.

தமிழ்நாடு போலீஸ் கம்ப்யூட்டர் தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கம் லிட்..

அறிவியல் வளர்ச்சி பெற்று வரும் காலத்திற்கு ஏற்ப நாட்டு நடப்பை ஒட்டி கம்ப்யூட்டர் கருவிகள் தயாரிப்பதற்கென ஒரு தொழிற் கூட்டுறவுச் சங்கம் 29.11.85ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் 21 உறுப்பினர்கள் ரூபாய் 1,03,000 பங்குத் தொகையுடன் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

உறுப்பினர்களுக்கு ஐ.ஐ.டி. நிறுவனத்தில் பேராசிரியர் வி. என். சுக்லா நேரடிப்பார்வையில் கம்ப்யூட்டர் செய்தல், இயக்குதல் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள் செய்தல் ஆகிய பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள்ளன. ரூ.15 லட்சம் மதிப்பீட்டில் ஈடி அண்ட் டி.டி. நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் ஒரு தொலைக்காட்சிப் பெட்டி தயாரிப்பு நிலையம் அமைக்கப்படும். இதற்காக சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா ரூ.7.90 இலட்சம் கடன் வழங்கியுள்ளது. இதுவரை அந்த நிறுவனத்தாரிடம் இருந்து வாங்கிய 20 கலர் டி.வி.கள் குறைந்த விலையில் ரூ. 6800க்கு விற்கப்பட்டுள்ளன. இந்த நிறுவனம் இறக்குமதி செய்யும் கச்சாப் பொருட்களைக் கொண்டு சங்கத்திலேயே தயாரிக்க இருக்கும் கலர் டி.வி.கள் இன்னும்குறைந்த விலைக்கு விற்கப்படும் அரசு நிறுவனங்கள் மற்றும் கல்வி நிலையங்கள் அனைத்துக்கும் சங்கத்தில் தயாரிக்கப்படும் டி.விகளை விற்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

இவ்வாறாகத் தமிழ்நாடு சிறப்புக் காவலர் குடியிருப்புகளில் உள்ள இளைஞர்கள் மனித சக்தி அவர்களது திறமை மற்றும் தகுதிக்கு ஏற்ற வகையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இச்சங்கங்களின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் ஆவடி சிறப்புக் காவலர் அணியைச் சார்ந்தவர்களின் குடும்ப மறுமலர்ச்சிக்கும் செங்கை மாவட்டத்தின் சிறு தொழில் வளர்ச்சிக்கும் சிறப்பு எடுத்துக்காட்டாகும். எனவே கூட்டுறவில் எல்லோரும் நாட்டுயர்வுக்குப் பாடுபடுவோம்.





# தீப்பெட்டித் தொழில்

தமிழ்நாடு தீப்பெட்டிகள் அகில இந்தியப் புகழ் பெற்றவை. தீப்பெட்டி தயாரிப்பில் பெரும் நிறுவனங்கள் தவிர சிறிய அளவில் தீப்பெட்டி தயாரிக்கும் அலகுகள் பல உள்ளன. இவை நிதியின்மை காரணமாகத் தங்கள் தீப்பெட்டிகளை வட இந்தியா நகரங்களுக்கு எடுத்துச் சென்று நல்ல விலைக்கு விற்பனை செய்ய முடியாது. இடைத் தரகர்களிடம் விற்பனை செய்திட வேண்டிய சூழ்நிலையில் இருந்தன. இந்த இடைத்தரகர்களால் நசுக்கப்பட்டு நலிவுற்று வந்தன. இந்நிலையை மாற்றிட தீப்பெட்டி சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு, அவற்றின் மூலம் இடைத் தரகர்களை நீக்கும் முயற்சியில் அதிகமாக வெற்றி கிட்டியுள்ளது இச்சங்கங்கள் மூலம் இடைத் தரகர்கள் முறைகேடாக ஈட்டிய இலாபம் தவிர்க்கப்பட்டு, தீப்பெட்டி தயாரிக்கும் அலகுகள் மட்டுமின்றி நுகர்வோரும் பயனடைந்துள்ளனர்

இச்சேவைச் சங்கங்கள் தீப்பெட்டிகள் விற்பனைக்கு வழி செய்வது மட்டுமின்றி, அலகுகளுக்குத் தேவையான மூலப் பொருள்கள் நியாய விலைக்குப் பெறவும், தீப் பெட்டி தயாரிப்போருக்குத் தீப்பெட்டிகள் தயாரித்தவுடனேயே விற்பனைக் காலம் வரை காத்திராது கணிசமான தொகை முன்பணமாகக் கிடைக்கவும் வழி செய்கின்றன.

சேவைச் சங்கங்கள் தவிர தீப்பெட்டி உற்பத்திச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் நலிவுற்ற பிரிவுகளைச் சார்ந்தோர்க்கு வேலை வாய்ப்பயளித்து வருகின்றன.

சுமார் 22,220-க்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வாழ்வளித்து ரூ.9.82 கோடிக்கு மேல் விற்பனை செய்து வரும் இச்சங்கங்களுக்குத் தமிழக அரசு ரூ.20.75 இலட்சம் மூலதன உதவி அளித்துள்ளது. தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி ரூ. 285 இலட்சம் கடனுதவி அளித்துள்ளது. ஊரக வளர்ச்சித் திட்டங்கள் கீழ் 47 இலட்சம் மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தீப்பெட்டித் தொழிலுக்குத் தேவையான பொட்டாசியம் குளோரேட்டுத் தயாரிக்கும் தொழிற்கூட்டுறவுச் சங்கம் ரூ. 40.88 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு கடந்த இரு ஆண்டுகளாகச் செயற்பட்டு வருகிறது.

# கயிற்றுத் தொழில்

தமிழ்நாட்டில் தென்னை மரங்கள் மிக அதிகமாக இருப்பினும், கயிற்றுத் தொழில் போதிய வளர்ச்சி அடையவில்லை. கேரள மாநிலத்தில் உள்ளது போல இம்மாநிலத்திலும், கயிற்றுத் தொழில் வளர்ச்சி அடையச் செய்யும் பொருட்டு 61 சங்கங்கள் துவக்கப்பட்டுள்ளன.

செங்கல் தொழிற்சாலைகள் போன்றே, கயிற்றுத் தொழிலிலும் குறைந்த முதலீட்டில் அதிக வேலை வாய்ப்பளிக்கும் வாய்ப்புள்ளது. தவிர இச்சங்கங்கள் எல்லா வகையிலும் பின்தங்கியுள்ள கிராமப்புறங்களிலும் கடலருகேயுள்ள வசதியற்ற கிராமங்களிலும் அமைந்து வேறு தொழில்களற்ற அப்பகுதிகளில் வேலை வாய்ப்புகளை உருவாக்கி வருகின்றன. படிப்படியாக வளர்ச்சியுற்று வரும் இந்தக்கயிற்றுத்தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் விரைவில் ஊரகத் தொழில்களில் ஒரு மறுமலர்ச்சி உண்டாக்கி, இம்மாநிலத்தை, கேரள மாநிலம் போன்று கயிற்றுத் தொழிலில் வளர்ச்சியுற்ற மாநிலமாக விரைவில் மாற்றவுள்ளன. இச்சங்கங்களுக்குக் கயிற்றுவாரியத்திலிருந்து கணிசமான நிதி உதவி கிடைத்துள்ளது.

தவிர இம்மாநிலத்தின் கயிற்றுத்தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு இம்மாநிலத்திலிருந்து வெளிமாநிலங்களுக்கு தென்னை மட்டை அனுப்புதலைக் கட்டுப்படுத்தும் ஒரு சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இம்மாநிலக்கயிறு மற்றும் கயிற்று பொருள்கள் உற்பத்தி பெருகும். இவற்றை விற்பனை செய்வதற்கு ஒரு மாநிலத்தொழிற் கூட்டுறவுக்கயிறு இணையமும் அமைக்கப்பட்டுள்ளது. தவிர ரப்பர் கயிறு தயாரிப்பதற்காக ஒரு தொழிற் கூட்டுறவுச் சங்கமும் நடப்பாண்டில் அமைக்கப்பட உள்ளது. இதற்காக அரசு மூலதனமாக ரூ. 5 இலட்சம் நடப்பாண்டில் வழங்கப்பட உள்ளது.



# மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தமிழக விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட வரலாறு காணாத சலுகை

*சுமார் 125.00 கோடி ரூபாய் அளவிற்கு கூட்டுறவுக் கடன்கள் மீதான* **வட்டி, அபராத வட்டி,** *மற்றும்* **கூடுதல் வட்டி தள்ளுபடி செய்யப்படும்.** *இதற்கு மேலாக முந்தைய ஆண்டில் முழுவதுமாகக் கடனைத் திருப்பிச் செலுத்தியவர்களுக்குச்* **செலுத்திய அனைத்து வட்டியும் திருப்பித்தரப்படும்.**

- அசலை மட்டும் திரும்பச் செலுத்தினால் போதும்.
- பெரு விவசாயி, சிறு விவசாயி, குறு விவசாயி என்ற பாரபட்சம் கிடையாது.
- விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் நிலவள வங்கிகளில் வாங்கிய அனைத்து வகை கடன்கள் மீதான வட்டி, அபராத வட்டி மற்றும் கூடுதல் வட்டி தள்ளுபடி.
- இச்சலுகைகளைப் பெற, 31-3-1986 அன்று நிலுவையில் இருந்த அசலை மட்டும் கட்டினால் போதும்; இந்த அசலை இரு சம தவணைகளில் கட்டினால் போதும்;
- முதல் அசல் தவணையை 31-12-1986க்குள்ளும், இரண்டாவது அசல் தவணையை 30-6-1987க்குள் கட்டினால் போதும்;

## அது மட்டுமா!

*1-7-1985 முதல் 31-3-1986 வரை கடனை முழுமையாகச் செலுத்திய விவசாயிகள் கட்டிய வட்டி, அபராத வட்டி மற்றும் கூடுதல் வட்டி திருப்பித் தரப்படும்; சலுகையைப் பெற்றிடுவீர்; கூட்டுறவுக் கடன்களை அடைத்திடுவீர்.*

*புதிய கடன்கள் பெற்று விளைச்சலைப் பெருக்கிடுவீர், தமிழகத்தை மேலும் உயர்த்திடுவீர்.*

**தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்**
சென்னை-9.

# பொது மக்களுக்கு புதிய வாய்ப்பு

காமன்வெல்த் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக லண்டன் சென்றிருந்த மாண்புமிகு தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர் திரு பி.எச். பாண்டியன் அவர்கள் அண்மையில் தாயகம் திரும்பினார். இங்கிலாந்தில் தொடங்கி நார்வே, ஸ்வீடன், டென்மார்க், ஜெர்மனி ஆகிய நாடுகளில் 21 நாட்கள் பயணம் மேற்கொண்டார்.

லண்டனில் அவர், "பார்லிமெண்டரி முறை அரசாங்கத்துக்கு எதிர்காலம் இருக்கிறதா? அதை எப்படி வலுப்படுத்துவது?" என்ற தலைப்பிலும், "காமன் வெல்த் பார்லிமெண்டரி அமைப்பின் பங்கு என்ன?" என்ற தலைப்பிலும் உரையாற்றினார். இம்மாநாட்டினை எலிசபெத் ராணி துவக்கி வைத்தார். இங்கிலாந்து பிரதமர் மார்கரெட் தாட்சரும் பங்கு கொண்டு உரையாற்றினார்.

இங்கிலாந்து பிரதமரைச் சந்தித்தபோது தமிழ்நாட்டைப் பற்றிப் பேரவைத் தலைவர் கூறியதை அவர் ஆர்வமாகக் கேட்டறிந்தார்.



பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்க்கரெட் தாட்சருடன்

இங்கிலாந்தில் உள்ள 'ஹவுஸ் ஆஃப் காமன்ஸ்', 'ஹவுஸ் ஆஃப் லார்ட்ஸ்' ஆகிய இரு சபைகளின் தலைவர்களுக்கும் தமது அன்பளிப்பாகப் பத்தமடைப் பாய்களை வழங்கினார். பாய்களில் சபைத் தலைவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

லண்டனில் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம், ஸ்காட்லாந்து யார்டு ஆகிய இரு இடங்களைப் பார்வையிட்டார்.

நார்வே, ஸ்வீடன் ஆகிய நாடுகளில் அதிகாரபூர்வமாகச் சுற்றுப் பயணம் செய்த மாநில சட்டசபையின் முதல் பிரதிநிதி இவர்தான். இதன் காரணமாக அந்த நாடுகளில் எல்லாம் பேரவைத் தலைவருக்கு வெகு சிறப்பான வரவேற்பு ஏற்பாடுகள் நிகழ்ந்தன.

இங்கிலாந்து சட்டசபையில் சபாநாயகரின் ஆசனத்துக்குப் பின்னால் வைக்கப்பட்டிருக்கும் புகார்ப் பையைப் போன்று, தமிழ்நாடு சட்டப் பேரவையிலும் தமது ஆசனத்துக்குப் பின்புறம் ஒரு புகார்ப் பையைத் தொங்கவிட, மாண்புமிகு பேரவைத் தலைவர் விருப்பம் கொண்டுள்ளார். யார் வேண்டுமானாலும், மனுவையோ, புகாரையோ நேரடியாக வந்தோ அல்லது எம். எல். ஏ., மூலமாகவோ அந்தப் பையில் போடலாம்.



இங்கிலாந்து பாராளுமன்றத்தின் பிரபுக்கள் சபைத் தலைவர் லார்ட் ஹானரபிள் வார்டு ஹெய்ல்சாம், மக்கள் சபைத் தலைவர் லார்ட் ஹானரபிள் பெர்னார்டு வெதெரில் ஆகியோருக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் உருவப்படம் பொறித்த நினைவுப் பரிசை, மாண்புமிகு தமிழகச்சட்டப் பேரவைத் தலைவர் திரு பி.எச். பாண்டியன் அவர்கள் வழங்குதல்.

# புதிய அமைச்சரவை

தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் 21.10.86 அன்று கிண்டி ராஜ்பவனத்திற்குச் சென்று மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்களைச் சந்தித்தார்.

தமிழக அமைச்சரவையில் இருந்து 10 அமைச்சர்களை விடுவித்தும், திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களை மீண்டும் அமைச்சரவையில் இணைத்தும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அமைச்சரவைப் பட்டியலை ஆளுநர் அவர்களிடம் அளித்தார்.

அமைச்சர்கள் பொறுப்பு ஏற்கும் துறைகள் வருமாறு:

## டாக்டர் எம். ஜி. ஆர்

(முதல் அமைச்சர்)

இந்திய அரசுப்பணி, (இ.ஆ.ப. அலுவலர்கள்) இந்திய காவல் பணி, (இ.கா.ப. அலுவலர்கள்) மற்ற அகில இந்திய பணிகள், காவல் துறை, மாவட்ட வருவாய்த்துறை அலுவலர்கள்.

## டாக்டர் வி. ஆர். நெடுஞ்செழியன்

(நிதி அமைச்சர்)

நிதி, வருவாய்த்துறை, பொது நிர்வாகம், கூட்டுறவு, சட்டப் பேரவை, தேர்தல்கள், புள்ளி விவரத்துறை, முன்னாள் இராணுவத்தினர், இளைஞர் அணி.

## திரு எஸ். இராமச்சந்திரன்

(உணவுத்துறை அமைச்சர்)

உணவு, விலைக் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள், அகதிகள்-குடிபெயர்ந்தோர், இரும்பு-உருக்கு கட்டுப்பாடு, பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, எழுது பொருள் மற்றும் அச்சுத்துறை, அரசு அச்சகம்.

## திரு கே. ஏ. கிருஷ்ணசாமி

(உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நல அமைச்சர்)

நகராட்சி நிர்வாகம், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புறக் கடன்கள், தொழிலாளர் நலம்.

## திரு க. இராசாராம்

(தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர்)

பெருந்தொழில்கள், சுரங்கம், கனிமவளம், மின்னனு, விஞ்ஞானம், தொழில்நுட்பம், வேளாண்மை, வேளாண்மை நிதி, வேளாண்மைப் பொறியியல், அக்ரோ என்ஜினியரிங், அக்ரோ சேவை கூட்டுறவு சங்கங்கள், குடிநீர் வடிகால் வாரியம்.

## திரு ப. உ. சண்முகம்

(மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்)

லஞ்ச ஒழிப்பு, மக்கள் நல்வாழ்வுத்துறை, சுற்றுப்புறச் சூழல் மாசுக்கட்டுப்பாடு, பிற்பட்டோர் நலம், மீன்வளம்.

## திரு சி. பொன்னையன்

(கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர்)

கல்வி, ஆட்சிமொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு, சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், மாவட்ட துணை ஆட்சித் தலைவர்கள், எடை-அளவைகள் சட்டம், கடன் நிவாரணம் (கடன் கொடுத்தல்-பற்றிய சட்டங்கள், சீட்டுகள் பற்றிய சட்டங்கள் உள்பட) நிறுவனங்கள் பதிவு, சர்க்கரைக் கழிவு.

## திரு எஸ். முத்துசாமி

(போக்குவரத்துத்துறை அமைச்சர்)

போக்குவரத்து, அரசுடைமை ஆக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வாகனச் சட்டம், துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள்.

## திரு எஸ். திருநாவுக்கரசு

(வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்)

கைத்தறி மற்றும் ஜவுளி, வீட்டுவசதி வாரியம், குடிசை மாற்று வாரியம், நகர்ப்புற வடிவமைப்பு, வீட்டு வாடகைக் கட்டுப்பாடு

## திரு வி. வி. சாமிநாதன்

(சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர்)

மதுவிலக்கு மற்றும் ஆயத்துறை, கால்நடைப் பராமரிப்பு, பால்வளம், பால்பண்ணை வளர்ச்சி, பத்திரப் பதிவு, முத்திரைச்சட்டம், செய்தி-மக்கள் தொடர்பு, திரைப்படத் தொழில் நுட்பம், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையங்கள், வனத்துறை, சின்கோனா, திட்டமிடுதல், தொல்பொருள் ஆய்வுத்துறை, பாஸ்போர்ட், மின்துறை.

## திரு ஆர். சவுந்தரராஜன்

(சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர்)

சத்துணவு, சமூகநலம் (பெண்கள், குழந்தைகள் நலம் உள்பட) பிச்சைக்காரர் இல்லம், அனாதை இல்லங்கள், கண்காணிப்பு இல்லங்கள், கதர், பூதானம், கிராமதானம்.

## திரு ஆனூர் பி. ஜி. ஜெகதீசன்

(ஊரகத் தொழில் அமைச்சர்)

கிராமத் தொழில் உள்பட ஊரகத் தொழில்கள், குடிசைத் தொழில்கள், சிறுதொழில்கள்.

## திரு டி. இராமசாமி

(வணிகவரித்துறை அமைச்சர்)

வணிக வரிகள்

## திரு ஏ. அருணாசலம்

(ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்)

ஆதிதிராவிடர் நலம், மலைவாழ் பகுதியினர் நல்வாழ்வு, கொத்தடிமை.

## திரு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்

(பொதுப்பணித்துறை அமைச்சர்)

பொதுப்பணித்துறை, நீர்ப்பாசனம், (சிறிய நீர்ப்பாசனங்கள் உள்பட) வக்ஃப் போர்டு.

# சீர்மிகு சிறப்பங்காடிகள்

டி.யு.சி.எஸ். சின் அங்கமாக 14-10-66 முதல் காமதேனு கூட்டுறவுச் சிறப்பங்காடி சிறந்த முறையில் செயல்பட்டு வருகின்றது. 1968-ஆம் ஆண்டு காமதேனு மளிகைப் பிரிவு, சுயசேவைப் பிரிவாக மாற்றியமைக்கப்பட்டது.

தமிழ்நாட்டிலேயே முதல் முறையாகச் சுயசேவைப் பிரிவை ஆரம்பித்த பெருமை காமதேனு கூட்டுறவுச் சிறப்பங்காடியையே சாரும். 1968-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சுயசேவைப் பிரிவு மேலும் சில மாற்றங்களுடன் நவீன முறையில் இயங்கும் சுயசேவைப் பிரிவாக மாற்றப்பட்டு 5-5-85 முதல் செயல்பட்டு வருகின்றது. இது தவிர 18-10-86 அன்று முதல் சுமார் 7100 சதுர அடியில காமதேனுவில் மற்றொரு புதிய நவீன சுயசேவைப் பிரிவினை காமதேனு கூட்டுறவுச் சிறப்பங்காடியின் சொந்தக்கட்டடத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களால் திறந்து வைக்கப் பட்டது.

தமிழ் நாட்டில் தற்பொழுது கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் மற்றும் பிரதம கூட்டுறவுப் பண்டக சாலைகள் ஆகியவற்றின் 30 பல்பொருள் அங்காடிகளும் (சிறப்பு அங்காடிகள்), 191 நவீன சில்லறை அங்காடிகளும் / பெரிய அளவிலான சில்லறை அங்காடிகளும் (சிறப்புச் சிற்றங்காடிகள்) இயங்கி வருகின்றன.

இந்த அங்காடிகள் 1984-85ஆம் கூட்டுறவு ஆண்டில் 95.50 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை செய்துள்ளன. 1985-86ஆம் ஆண்டில் ஐந்து நவீன சில்லறை அங்காடிகள் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1985-86ஆம் ஆண்டில் ஒரு பல்பொருள் அங்காடி அமைப்பதற்கும், மூன்று பெரிய அளவிலான சில்லறை அங்காடிகள் அமைப்பதற்கும் மத்திய அரசு நிதி உதவி ஒப்பளித்துள்ளது.



22-10-86 அன்று மாண்புமிகு திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள், மேதகு ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்களால், தமிழக அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

இது தற்பொழுது தென்னகத்திலேயே பெரிய சுயசேவைப் பிரிவாகத் திகழ்கிறது. சுமார் 2500 பல்வேறு பொருட்கள் இங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. மேற்கூறிய காமதேனுவின் இரண்டு சுயசேவைப் பிரிவினைத் தவிர்த்து மக்கள் சுயசேவைப் பிரிவிற்குத் தரும் மகத்தான வரவேற்பைக் கண்டு, பெசன்ட் நகர் கிளையில் 10-3-'86 முதல் மற்றுமொரு சுயசேவைப்பிரிவு திறக்கப்பட்டு திறம்படச் செயல்பட்டு வருகின்றது. மேற்சொன்ன வரிசையிலே திருவல்லிக்கேணி கிளையிலும் இப்போது ஒரு சுயசேவைப் பிரிவு திறக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் பொதுவிநியோகச் செயல்பாட்டுத் திட்டத்தின் படி, டி.யு.சி.எஸ். நிறுவனம் நாளது தேதியில் 208 நியாய விலைக் கடைகளை தென் சென்னையில் மட்டும் தன்னகத்தே கொண்டு இயங்கி வருகின்றது. தென்சென்னையில் உள்ள சுமார் 2.1 இலட்சம் குடும்ப அட்டைகளுக்கான அத்தியாவசியப் பண்டங்களைப் பொது விநியோகத் திட்டத்தின் மூலம் கார்டுதாரர்களுக்கு வழங்கி வருகின்றது. மேற்சொன்ன பொது விநியோகத் திட்டத்திற்காக டி.யு.சி.எஸ். நிறுவனம் மாதமொன்றுக்குக் கிட்டத்தட்ட ரூ. 112.40 இலட்சம் மதிப்புள்ள கட்டுப்பாட்டுப் பொருட்களை எடுத்துப்பொதுமக்களுக்கு விநியோகம் செய்து வருகின்றது.

சென்னை நகருக்கும், அதனைச் சுற்றியுள்ள புறநகர்ப் பிரிவுகளிலும் உள்ள கிட்டத் தட்ட 37,000 இந்தியன் எரிவாயு உருளைகளை உபயோகிக்கும் வாடிக்கையாளர்களுக்கு எரிவாயு உருளைகளை 25-8-1969 முதல் டி.யு.சி.எஸ். நிறுவனம் விநியோகம் செய்து வருகின்றது. டி.யு.சி.எஸ். நிறுவனம் தனது 12 பல்வேறு கிளைகளின் மூலம் இந்த எரிவாயு உருளைகளின் விநியோகத்தைச் செயல்படுத்தி வருகின்றது. இந்தியாவிலேயே அதிக அளவில் எரிவாயு உருளைகளை விநியோகித்து வரும் அமைப்பு கொண்ட தனி ஒரு நிறுவனம் இந்த டி.யு.சி.எஸ். ஆகும்.



# 33-வது அனைத்திந்திய கூட்டுறவு வாரவிழா

மக்கள் இயக்கமாம் கூட்டுறவு இயக்கம் மக்களுக்கு ஆற்றிவரும் சேவைகளை, இவ்வியக்கத்தில் இணைந்துள்ளோர் அடைந்து வரும் நன்மைகளை, இவ்வியக்கம் ஏற்படுத்தியுள்ள சாதனைகளை ஒவ்வொருவருக்கும் எடுத்துக்கூறி மேலும் பலரை கூட்டுறவியக்கத்தில் இணைந்து நன்மை பெறத் தூண்டும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் கூட்டுறவு வாரவிழா கொண்டாடப் பட்டு வருகிறது.

உலக அளவில் கூட்டுறவு நாள் கொண்டாடும் எண்ணம் 1920 லேயே உதித்தது. அகில உலக கூட்டுறவு அமைப்பு, உள்நாடு மற்றும் உலக அளவில் ஏற்படும் மோதல்களால் கூட்டுறவு இயக்கம் பாதிக்கப்படாமல் இருக்கவும் அகில உலக கூட்டுறவு அமைப்பின் ஒற்றுமையை பலப்படுத்தவும் செயல் முறைகளை தேடிக் கொண்டிருந்தது. 1922ல மிலான் என்ற இடத்தில் கூடிய இதன் பொதுக் குழு, "கூட்டுறவாளர் நாள்" கொண்டாட வேண்டும் என்ற யோசனையை ஏற்றுக் கொண்டது. அதன்படி முதலாவது அகில உலக கூட்டுறவு நாள் 1923ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் எழாம் நாள் கொண்டாடப் பட்டது. இப்பொழுதும் அகில உலக கூட்டுறவு நாள் ஒவ்வோர் ஆண்டின் ஜூலைத் திங்கள் முதல் சனிக்கிழமையன்று கொண்டாடப்பட்டு வருகிறது.

ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரை, 'கூட்டுறவு இயக்கத்தால் இந்தியாவை அதிர வைக்க வேண்டும் என்பதே என் எண்ணம்' என்று முழங்கிய பண்டித ஜவஹர்லால் நேருவின் பிறந்த தினமான நவம்பர் 14ஆம் தேதியன்றுதான் இவ் வாரவிழாக் கொண்டாட்டம் தொடங்குகிறது.

கூட்டுறவு இயக்கத்திற்கு வித்துக்களை முதன் முதலில் ஊன்றியோர் 'ராக்டேல் முன்னோடிகள்' எனப்படும் 28 நெசவுத் தொழிலாளிகள் தான். 1844 ஆம் ஆண்டு இங்கிலாந்திலுள்ள லங்காஷயரில் டோட்லேன் எனுமிடத்தில் துவக்கப்பட்ட கூட்டுறவுப் பண்டகசாலையே முதல் கூட்டுறவு முயற்சியாக அமைந்தது. கூட்டுறவு என்றும், எப்போதும் இன்றியமையாமையின் குழந்தையாகவே வளர்க்கப் பட்டு வந்துள்ளது. இங்கிலாந்தில் தொழிற் புரட்சியின் காரணமாக ஏழைத் தொழிலாளத் தோழர்கள் சுரண்டப் பட்டார்கள்! அதுவே நுகர்வோர் கூட்டுறவுக்கும் பாதை அமைத்துக் கொடுத்தது. ஜெர்மனியில் ஏழை உழவர்களும், உழவுத் தொழிலாளர்களும், லேவாதேவிக்காரர்களால் சுரண்டப்பட்ட போது கூட்டுறவுக் கடன் சங்கங்கள் தோன்ற ஆரம்பித்தன. டென்மார்க் நாட்டு கிராமப்புற குடியானவர்கள் தானிய உற்பத்தியைக் கைவிட்டு விடுமளவு அமெரிக்க நாட்டினின்று இறக்குமதி தானியத்தைக் குவித்து அச்சுறுத்தியபோது அவர்கள் பால்பண்ணைத் தொழிலில் தங்களை ஐக்கியப்படுத்திக் கொண்டு வெற்றி கொள்ளக் கூட்டுறவுப் பால்பண்ணைகள் வழிகாட்டின. இன்று உலகில் 36,00,09,210 உறுப்பினர்களைக் கொண்டு 6,79,725 கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருவது இத்தத்துவத்தின் வெற்றிக்கும் அதனால் பயன்பெறும் மக்களின் ஆர்வத்திற்கும் சான்றாக விளங்குகிறது.

**எழுச்சிமிகு ஏழு தினங்கள்**

இவ்வாண்டு இவ்வார விழாவினை கீழ்க்கண்டவாறு கொண்டாட முடிவு செய்யப்பட்டுள்ளது.

14—11—86 — கூட்டுறவு மக்களாட்சி மற்றும் தலைமைத்திறன் நாள்.

15-11-86 — வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி நாள்.

16-11-86 — புதிய இருபது அம்சத் திட்ட நாள்.

17—11—86 — தொழில் மற்றும் கைத்தறிக் கூட்டுறவு நாள்.

18—11—86 — இளைஞர் மகளிர் மற்றும் நலிந்தோர் நாள்.

19—11—86 — அமைதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு நாள்.

20—11—86 — விற்பனை முறையில் கூட்டுறவின் பங்கு மற்றும் பொது விநியோக முறை நாள்.

**மாநில அளவு விழாக்கள்**

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் மாநில அளவு விழாக் கொண்டாட்டங்களை பல்வேறு மாவட்டங்களில் கீழ்க்கண்டவாறு கொண்டாடுகிறது.

14—11—86 — காமராசர் (சாத்தூர்), செங்கற்பட்டு, கன்னியாகுமரி (தக்கலை).

15—11—86 — சிதம்பரனார் (தூத்துக்குடி), கோவை, புதுக்கோட்டை.

16—11—86 இராமநாதபுரம், நீலகிரி, பெரியார் (கோபி).

17—11—86 — பசும்பொன் முத்துராமலிங்கம் (சிவகங்கை), சேலம், தருமபுரி.

18—11—86 — திருநெல்வேலி, வட ஆற்காடு (வேலூர்), மதுரை, திருச்சி கும்பகோணம்.

19—11—86 — தஞ்சை, தென்னாற்காடு (சிதம்பரம்), அண்ணா (திண்டுக்கல்).

20—11—86 — சென்னை.





# அறக்கட்டளை ஆண்டு விழா...

பச்சையப்பன் நினைவு விழா பச்சையப்பன் அறக்கட்டளையின் 144 ஆவது ஆண்டு நிறைவு விழா 17.10.86 அன்று மாலை, சென்னை பச்சையப்பன கல்லூரியில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு சென்னை, அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் குழந்தைசாமி தலைமை வகித்து மாணவர்களுக்குப் பதக்கம் மற்றும் பரிசுகளை வழங்கினார்.

விழாவையொட்டி, பச்சையப்பரும் அவரது கல்வி நிலையங்களும் என்னும் தலைப்பில் திரு என.எஸ்.ராமசாமி ஆங்கிலத்தில் எழுதியுள்ள நூலை, பச்சையப்பன் அறக்கட்டளை உறுப்பினர்களில் ஒருவரும், தமிழ்நாடு மாநில வாத்தகக் கழகத்தின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான திரு எஸ்.ஆர். கருப்பண்ணன், இ.ஆ.ப. வெளியிட்டார். நூலின் முதல் பிரதியை அறக்கட்டளையின் மற்றொரு உறுப்பினரும் கல்லூரிக் கல்வி இயக்குநருமான திரு என். அனந்த பத்மநாபன் பெற்றுக் கொண்டார்.

கல்லூரிகள் தன்னாட்சி நிலை கொண்டதாக இருக்க வேண்டும் என்னும் கருத்தை அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வி.சி.குழந்தைசாமி வலியுறுத்தினார்.

ஆசிரியர்களுக்குச் சமுதாயத்தில் அந்தஸ்தும், மரியாதையும் ஏற்பட, தன்னாட்சி முறைக் கல்லூரிகளால்தான் உதவ முடியும் என்று அவர் குறிப்பிட்டாா.

கல்விக் கொள்கையும், திட்டத்தையும் யாரோ வகுக்க, ஆசிரியர்கள் பாடம் கற்பிக்க, வினாத்தாளை யாரோ சரிபார்க்க, விடைகளை யாரோ திருத்த, முடிவைப் பல்கலைக்கழகம் வெளியிடுகிறது. இந்த நிலைமாறி, இந்தச் செயல்கள் அனைத்திலும் ஆசிரியர்களுக்கு ஈடுபாடு இருக்கச் செய்ய வேண்டும் என்றும டாக்டர் குழந்தைசாமி வலியுறுத்தினார்.

"நோபல் பரிசுகள் பெறுபவர்களில் பெரும்பாலும் அமெரிக்க நாட்டவர்களாகவே ஏறத்தாழத் தொடர்ந்து உள்ளனர். அமெரிக்க நாடு மட்டும்தான் மேதைகளை உருவாக்குகிறதா? ஆனால் அப்படிப்பட்டவர்களை உருவாக்கக்கூடிய சூழ்நிலையை நாம் பெறவில்லை. புகழ் படைத்த மக்களை உருவாக்கும் சூழ்நிலை நமது நாட்டில் உருவாக வேண்டும்".


நார் மற்றும் பாய் முடைதல்
[illegible]

பச்சையப்பன் அறக்கட்டளையின் நிறைவு விழா நினைவுப் பேருரையை, போக்குவரதது ஆணையரும், உலகத் தமிழ்ச் சங்கத்தின் தனி அலுவலரும், பச்சையப்பன் பொறுப்புக் கழக நிர்வாகக் குழுவின் தலைவருமான திரு எஸ். டி. காசிராஜன், ஐ.ஏ.எஸ். ஆற்றினார்.

"பிறர் நலம் பேணி வாழ்ந்த, தன்னலம் கருதாத பெருமகன் வள்ளல் பச்சையப்பன், சமுதாய நலன் கருதித் தான் ஈட்டிய செல்வத்தை அளித்து, மக்கள் கல்வி மேம்பாடு பெறச் செய்த பண்பாடு மிக்க பச்சையபபனின் புகழ், இனிவரும் காலங்களிலும் இனிதே நிலவிடும்" என்பதை அவர் அழகாகவும், ஆணித்தரமாகவும் எடுத்துரைத்தார்.

"சமுதாய மறுமலர்ச்சிக்கும், நாட்டின முன்னேற்றத்துக்கும், தனி மனித மேம்பாட்டுக்கும்" சுவாமி விவேகானந்தர் இளைஞர்களுக்கு அறிவுறுத்திய பொன்மொழிகளை நினைவுபடுத்தி, எதிர்காலத்தில் இளைஞர்கள் ஏற்றம் பெறுவதற்கான வழி வகைகளை எடுத்துச் சொன்னார்.

கல்லூரிக் கல்வி இயக்குநர் திரு அனந்தபத்மநாபன் பேசுகையில், விரைவிலேயே பச்சையப்பன் கல்லூரி தன்னாட்சி பெற்ற கல்லூரியாக ஆக வேண்டும் என்றார்.

அறக்கட்டளை உறுப்பினர்களில் ஒருவரும் தமிழக அரசு சட்டத்துறை இணைச் செயலாளருமான திரு பி.முருகன் வரவேற்றார். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிதி ஆலோசகரும் அறக்கட்டளை உறுப்பினர்களில் ஒருவருமான திரு ஜி.கே. பிச்சாண்டி நன்றி கூறினார்.



# தமிழ்நாட்டில் பனைத்தொழில்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் 31.12.85ஆம் நாளன்று 256 துறை அலகுகளும், 2,966 தொழில் கூட்டுறவுச் சங்கங்களும் செயல்படுகின்றன. இதுவரையில் வாரியம் 1,75,630 கைவினைஞர்களுக்கு நிதியுதவி அளித்துள்ளது.

1983-84ஆம் ஆண்டில் கிராமத் தொழில்கள் உற்பத்தி மற்றும் விற்பனை முறையே ரூ. 8,411.79 இலட்சமாகவும், ரூ.9,000.56 லட்சமாகவும் இருந்தன. 1984-85ல் இவைகளின் உற்பத்தி மற்றும் விற்பனை முறையே ரூ. 9,774. இலட்சமாகவும், ரூ.10,583 இலட்சமாகவும் உயர்ந்துள்ளன. 1985-86ஆம் ஆண்டு டிசம்பர் முடிய இவைகளின் உற்பத்தி மற்றும் விற்பனை மதிப்பு ரூ. 8,173 இலட்சமும் ரூ.8,052 இலட்சமும் ஆகும்.

பனை மரங்களிலிருந்து கிடைக்கும் பொருட்களை இயன்ற அளவு பயன்படுத்த செங்கல்பட்டு மாவட்டத்தில் மாதவரம், தர்மபுரி மாவட்டத்தில் மத்தூர், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் மா. புடையூர், வட ஆர்க்காடு மாவட்டத்தில் மங்கலமாமண்டூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் கோவில்பட்டி ஆகிய இடங்களில் பனைப்பொருட்கள் மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் இராமநாதபுரமாவட்டத்தில் மண்டபம் மற்றும் மாரியூரிலும், திருச்சிராப்பள்ளிமாவட்டத்தில் கே. பரமத்தியிலும், அண்ணா மாவட்டத்தில் கோவிலூரிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் அந்தோணியார்புரம் மற்றும் இனாம் தப்தியிலும் செங்கை மாவட்டத்தில் வேடந்தாங்கலிலும் நிறுவ வாரியம் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாட்டில் பனைவெல்லத் தொழில் ஒரு கட்டுக்கோப்பான கூட்டுறவு அமைப்புக்குள் இயங்கிக் கொண்டிருக்கிறது. அடிமட்டத்தில்கிராம அளவில அமைக்கப்பட்டுள்ள ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்களும், மாவட்டஅளவில்மாவட்டப்பனைவெல்லக் கூட்டுறவுச்சம்மேளனங்களும், மாநில அளவில் மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவு இணையமும் உள்ளன. இக்கூட்டுறவு அமைப்புகள் 1960 முதல் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பார்வையின் கீழ் செயல்படுகின்றன.

மாநில இணையம் கதர் வாரியத்தின் மூலம் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவிடம் நிதியுதவியினைப் பெற்று மாவட்டச் சம்மேளனங்கள் மூலமாக ஆரம்பச் சங்கங்களுக்கு வழங்குகிறது. தமிழ்நாடு அரசு, விபத்துக்கு உள்ளாகும் மரம் ஏறும் தொழிலாளர்களுக்கு நிதியுதவி அளிக்கிறது. மரண விபத்துக்கு உள்ளாவோரின் குடும்பத்துக்கு ரூ. 5,000 வீதமும், பெரு விபத்துக்கு ரூ. 500 வீதமும், சிறுவிபத்துக்கு ரூ. 100 வீதமும் வழங்கப்படுகிறது.

மாநில இணையம் ஏற்றுமதி வியாபாரத்தையும் செய்கிறது. கூட்டுறவுவின் கீழ் இத்தொழில் நிலைத்துவேரூன்றிவளர தமிழக அரசின் ஆதரவுடன் ஆங்காங்கே பனைப்பொருள் உற்பத்தி மையங்கள் நிறுவப்படுகின்றன.

இந்தியாவிலுள்ள மொத்த பனைகள் சுமார் 8.59 கோடி; தமிழ்நாட்டிலுள்ள மொத்தப் பனைகள் 5.01 கோடி; தற்போது பயன்படுத்தப்படுபவை 1.01 கோடி; மேலும் பயன்படுத்தத்தகுதியுள்ளவை 2.00 கோடி; பயன்படுத்தத் தகுதி இல்லாதவை 2.00 கோடி.

31-3-86-ன்படி பனைத் தொழில் மூலம் வேலைவாய்ப்புப் பெற்றவர்கள்:

மரம் ஏறும் தொழிலாளர்கள் 1.82 இலட்சம் பேர்; பனை வெல்ல உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பெண்கள் 1.51 இலட்சம் பேர்; பதநீர் விற்பனையாளர்கள் 0.21 இலட்சம் பேர்; பனந்தும்புத் தொழிலாளர்கள் 0.22 இலட்சம் பேர்,; பனை ஓலைத் தொழிலாளர்கள் 0.68 இலட்சம் பேர்; பனைத்தொழில் மூலம் சுய வேலை வாய்ப்புப்பெறும் இதர தொழிலாளர்கள் 0.50 இலட்சம் பேர்; பனைத்தொழில் மூலம் மறைமுக வேலைவாய்ப்புப்பெறுவோர் 0.13 இலட்சம் பேர்; மொத்தம் 5.07 இலட்சம் பேர்.

பனைத்தொழில் மூலம் சுய வேலை வாய்ப்புப் பெறும் பெண்களின் பங்கு 40 முதல் 45 சதவிகிதம்; சுயவேலைவாய்ப்பின் மூலம் ஈட்டிய ஊதியம் ரூ. 2,865.97 இலட்சம்.

1985-86-ல் தமிழ்நாடுமாநிலப் பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையம் நேரடியாகப் பனந்தும்பை ஏற்றுமதி செய்து ஈட்டிய அந்நியச் செலாவணியின் மதிப்பு ரூபாய் 77 இலட்சம்.

ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்து விநியோகிக்கப்பட்ட பனைஓலைப் பொருட்களின் மதிப்பு ரூபாய் 5.56 இலட்சம்.

மண்டலப் பனைப்பொருள் பயிற்சி நிலையம், கடலூரில் 1985-86ல் பயிற்சி பெற்றவர்கள் —59 பேர்.

கிராமியப்பனைப்பொருள் உற்பத்திப் பயிற்சித் திட்டங்களின் கீழ் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை 17,373 பேர்.

எதிர்காலத் திட்டங்கள்: (1) மாவட்டந்தோறும் பனைப் பொருள் உற்பத்தி மையங்களை அமைத்தல், (2) பயன்படுத்தப்படாமலுள்ள பயனுள்ள பனைகளைப் பயன்படுத்துதல், (3) பனைவெல்லத்திற்கு ஏற்றுமதி வாய்ப்பினை உருவாக்குதல்; (4) பனைத்தொழிலாளர்களுக்குப் பனைஏற்றுப் பருவமற்ற காலங்களில் சுயவேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல்.



30-10-86 அன்று காலை 11.00 மணியளவில், இராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன் கிராமத்தில், தேவர் அவர்கள் அடக்கம் செய்யப்பட்ட சமாதியில், மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் திரு டி. இராமசாமி அவர்கள் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

பசும்பொன் கிராமத்தில் அரசு சார்பில் நடைபெறும் தேவர் ஜெயந்தி விழாவில் வணிக வரித்துறை அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இவ்விழாவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர், திரு தேவேந்திரநாத் சாரங்கி அவர்கள் தலைமை தாங்கினார்.

அமைச்சர் அவர்கள் பேசும் போது: "தெய்வத் திருமகன் தேவர் அவர்கள் - வெள்ளையர் ஏகாதிபத்தியத்தை வெளியேறச் சொன்ன தேவர் அவர்கள் - ஒரு பிரிவினருக்கு மட்டுமே சொந்த மல்ல. மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் ஆதிதிராவிடர்கள் உள்ளே நுழைந்து ஆலயப் பிரவேசம் செய்வதற்கு அனுமதி வாங்கித்தந்தவர் தேவர் அவர்கள்தான்:

"வெள்ளையர் ஏகாதிபத்தியத்தைவெளியேற்றுவதற்காகத் தன் சொத்து சுகங்களை இழந்தவர். நல்ல தலைவர்கள் நாட்டிலே மதிக்கப்பட வேண்டும் என்பதால்... தேவர் பெயரால் ஒரு மாவட்டத்தை ஏற்படுத்தித் தந்தவரும், தேவருக்குத் தமிழக அரசு ஒவ்வொரு ஆண்டும் விழாக் கொண்டாட ஏற்பாடு செய்தவரும் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவர் அவர்கள்தான்."







## சென்ற இதழில்

இருபது அம்சத் திட்டப் பணிகளை விளக்கும் ஓவியத்தைச் சென்ற இதழ் (1-11-86) அட்டை அலங்கரித்தது.



கூட்டுறவில் இனிமை உள்ளது. கூட்டுறவாக இருப்பவர்களில் நலிந்தவர்கள் வலியுற்றவர்கள் என்று யாரும் இல்லை. ஒருவர் மற்றவருக்குச் சமம், என்னுடையது, உன்னுடையது என்ற உணர்வே இல்லை. அவ்வாறே ஒரு சங்கம், நாடு, மனித சமுதாயத்தை ஒரு குடும்பமாய் எடுத்துக் கொண்டால் எல்லா மனிதர்களும் கூட்டுறவாளர்கள் ஆவார்கள்.

—மகாத்மா காந்தி



விலைவாசிகள் சீராக அமைய வேண்டியது முக்கியமானது. ஏறுமுகமாகவே இருக்கும் இயல்புடையது பொருளாதார அமைப்பு முழுவதையும் பாதிப்பதால், விலைவாசி நிர்ணயம் மிக முக்கியமானதே. நாம் அடிக்கடி வலியுறுத்தி வருவது கூட்டுறவு இயக்கம்தான். பொருட்களின் விலைகளைச் சீராக வைப்பதில் கூட்டுறவுப் பண்டகசாலைகள் மிக முக்கியமானவையாகும்.

—பண்டித ஜவகர்லால் நேரு



வேளாண்மையின் சிறந்த முன்னேற்றத்திற்குக் கூட்டுறவு அமைப்புகள்தான் பொருத்தமாக உள்ளன. புதிய அறிவியல் முயற்சிகள் வேளாண்மை முறைகளைப் புகுத்தல், கிடங்குகளை அமைத்தல், விற்பனைப் பதப்படுத்துதல், வேளாண்மைத் தேவைகளை விநியோகம் செய்தல் போன்ற பயனுள்ள துறைகளிலும் பெரும்பங்கு ஆற்றிட முடியும். கூட்டுறவுப் பால்பண்ணைகள், சர்க்கரை ஆலைகள் கிராமப் புறங்களில் கூட்டுறவு அமைப்புகளை ஏற்படுத்தும் அனுகூலங்கள் இவையாவும் இத்துறையின் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

—அன்னை இந்திரா காந்தி

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

புதிய வண்ண
துணி வகைகளுக்கு



தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23








# சிக்கனமும் சீரான வாழ்வும்

மாண்புமிகு நிதி மற்றும் கூட்டுறவு அமைச்சர் டாக்டர் நாவலர்
திரு. இரா. நெடுஞ்செழியன்

இன்று சிக்கனநாள். இன்றைய நாள் உலக முழுவதும் சிக்கன நாளாகக் கொண்டாடுவதற்குரிய நாளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நாளாகும். வாழ்க்கையில் பல்வேறு வழிகளிலும் கடைப்பிடிக்கப்பட வேண்டிய சிக்கனத்தின் அருமையையும், அதனால் கிடைக்கும் சேமிப்பின் பயனையும் தெளிவு படுத்தி, அவற்றை வற்புறுத்துவதற்குரிய நாள் ஆகும்.

''சிக்கன வாழ்வே சீரான வாழ்வு'' என்பதும், ''சிக்கனம் சேமிப்பு பயக்கும் ''என்பதும், ''சிக்கனம் செழிப்புதரும்'' என்பதும் ''சிக்கனத்தால் செம்மாந்து செல்லலாம்'' என்பதும் பழமொழிகள்.

ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் பொருள் அல்லது பணம் மிக முக்கியமானதொரு பங்கினை வகிக்கிறது. ஒரு பொருளாக மதிக்கத் தகாதவரையும் மதிக்குமாறு செய்யும் பொருளையன்றி, ஒருவனுக்குச் சிறந்த பொருள் வேறொன்றுமில்லை என்னும் பொருள்பட, வள்ளுவப் பெருந்தகையார் ''பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும், பொருளல்லது இல்லை பொருள்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

சிக்கனத்தின் முக்கிய நோக்கங்கள் வாழ்க்கைக்குத் தேவையான இன்றியமையாச் செலவினை மட்டும் செய்வது, அதன் மூலம் வருவாயின் ஒரு பகுதியைச் சேமிப்பது, சேமிக்கும் பொருளை எதிர்கால நல்வாழ்வுக்குப் பயன்படுத்துவது, எதிர்காலத்தில் நலி ஏற்படும்போது, அந்த நலிவிலிருந்து மீட்டுக் கொள்வது, அச்சத்திற்கும் அயர்வுக்கும் அங்கலாய்ப்புக்கும் இடமில்லாத எதிர்காலத்தை உருவாக்குவது, என்றும் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான நிலையான திறனைப் பெறுவது போன்றவையாகும்.

வாழ்க்கையின் தேவையை ஒட்டி அளவோடு செலவழிப்பதற்குச் ''சிக்கனம்'' என்று பெயர். தேவைகளையெல்லாம் மீறி அளவுக்கு அதிகமாகச் செலவழிப்பதற்கு 'ஊதாரித் தனம்' என்று பெயர். தேவையை நிறைவேற்றிக் கொள்ளாமல் அளவுக்குக் குறைவாகச் செலவழிப்பதற்குக் 'கஞ்சத்தனம்' என்று பெயர். ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஊதாரித்தனமும் கூடாது. கஞ்சத்தனமும் கூடாது. சிக்கன முறையே சீரிய முறையாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

''மகிழ்ச்சிபெற சேமிப்பு'' சேமிப்பு பெறச் சிக்கனம்'' என்ற குறிக்கோள் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் மிளிர வேண்டும். 1924ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31 ஆம் நாளில் 'உலக சிக்கன நாள்' கொண்டாடப்பட வேண்டும் என்று, முதன் முதலாக மிலான் நகரில் அகில உலக சேமிப்பு வங்கிக்குழுவால் ( International Savings Bank Congress ) முடிவு செய்யப்பட்டது.

மக்களிடத்தில் சிறு சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காகவே 1882ஆம் ஆண்டு முதல் அஞ்சலகங்களில் சேமிப்பு வங்கிகள் துவக்கப்பட்டு, அவை சிறப்பாகவும், பரவலாகவும் நடைபெற்று வருகின்றன.

ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் வருவாய் குறைந்த வருவாய் ஆனாலும், நிறைந்த வருவாய் ஆனாலும், அவ்வருவாயில் ஒரு சிறு பகுதியினைச்சேமிப்பதே ,சிறு சேமிப்பாகும். எனவே தான், நமது தமிழ்நாடு அரசு, ''சிறு சேமிப்பு'' எனும் தனித்துறையை, மக்களுக்கு ஏற்படுத்தி, அதன் மூலமாக மக்களிடத்தில சேமிக்க வேண்டும் எனும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது.சிறுகச் சிறுகச்சேமிப்பது, சிறு சேமிப்பு என்றாலும், சேமிக்க வேண்டிய இடம் அஞ்சலகம்தான. எனவே இந்த அஞ்சலக சேமிப்பு தான் ''சிறு சேமிப்பு'' என அழைக்கப்படுகிறது. இச்சிறு சேமிப்பு இயக்கம், தற்போது உங்களைப பாதுகாக்கவும், உங்களது எதிர்கால வாழ்க்கையை மகிழ்வுறச் செய்யவும் உதவுகிறது. அதுமட்டுமல்லாமல் நாட்டின் வளர்ச்சிக்கும் இந்தச் சிறுசேமிப்பு நிதி பெரும் அளவில் பயன்படுகிறது.

தமிழ்நாட்டில் சிறு சேமிப்பினைக் கணக்கிடும் போது, 1972-73ஆம் ஆண்டில் ரூ. 20.07 கோடியாக இருந்த நிகர வசூல்.



சென்ற ஆண்டான 1985-86ல் ரூ. 192.32 கோடியாக வளர்ந்திருப்பது, மக்கள் பொருளாதாரத்தில் சேமிக்கும் அளவு உயர்ந்துள்ளதை, எடுத்துக்காட்டுகிறது. இச்சிறு சேமிப்பின் பங்கைக் கணக்கிடும்போது தனி நபர் ஒருவர் ஆண்டொன்றுக்கு ரூ. 39.74 ஆக அஞ்சலக சேமிப்பில் மட்டும் சேர்த்திருப்பது, நம்முடைய சிக்கனத்தையும், சேமிக்கும் பழக்கத்தையும் எந்த அளவில் பயன்படுத்தியுள்ளார்கள் என்பதைப்புரிய வைக்கிறது.

தெரிந்தவர்கள் சேமித்ததே ரூ. 192.32 கோடி என்றால் இன்னும் தெரியாதவர்களும் சேர்ந்து சேமிப்பார்களானால், இச்சிறு சேமிப்பின் வசூல் உச்ச நிலையை அடையும் என்பதில் வியப்பில்லை .எனவே நமது தமிழ் நாடு அரசு, 1986-87ஆம் ஆண்டில் சிறுசேமிப்பின் இலக்காக ரூ. 240 கோடியாக நிர்ணயம் செய்துள்ளது.

அஞ்சலகச்சிறுசேமிப்புத் திட்டம், பாமர மக்கள் முதல் பணக்கார மக்கள் வரை சேர்ந்து சேமிக்க ஏற்றதொரு திட்டமாகும். அவசியத்தேவைக்குச்சேமிப்பு வங்கிக்கணக்கு திட்டம் ( Savings Bank Account ) என்றும், பத்தும், இருபதுமாக மாதாமாதம் சேர்த்து, ஐந்து வருடங்களுக்குப் பின் ஒரு பெரும் தொகையை ஈட்ட, தொடர் வைப்புத் திட்டம் ( Recurring Deposit ) என்றும் ஈட்டிய பெருந்தொகையை மேலும் பல மடங்காக்கிப்பெறக்காலவைப்புத் திட்டம் ( Time Deposit ) என்றும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தேசிய சேமிப்புப் பத்திரத்தில், 6வது மற்றும் 7வது வெளியீட்டில், முதலீடு செய்யும் தொகை, ஆறு ஆண்டுக்குள், இரு மடங்காவது மட்டுமல்லாமல், ரூ. 5 இலட்சம் வரையில் சொத்து வரி விலக்கு, ரூ. 40 ஆயிரம் வரையில் வருமான வரி விலக்கு, ரூ.7 ஆயிரம் வரையில் வாங்கும் வட்டிக்கும் வரிவிலக்கு மற்றும் மற்ற வங்கிகள் கொடுக்க முடியாத அளவுக்கு 12% கூட்டு வட்டி அளிப்பது, ஆகியவை அஞ்சலகச்சிறுசேமிப்பு மூலம் ஏற்படும் பயன்கள். மேலும் தேசிய சேமிப்புப் பத்திரத்திட்டத்தில் முதலீடு செய்ய வரையறை இல்லை என்பது பெரும் பணம் படைத்தவர்க்குப்பெரிய வாய்ப்பு ஆகும்.

இருந்த இடத்திலேயே சிறு சேமிப்பில் சேர, மக்களுக்குச்சேவை செய்வது, சிறுசேமிப்புத்துறை தான். இதற்காகவே தமிழ்நாட்டில் மட்டும் 10,788 முகவர்கள், மக்களுக்குச் சேவை செய்ய நியமித்திருப்பது மட்டுமில்லாமல், அம்முகவர்களுக்கு வேண்டிய உதவிகளையும் மக்களுக்கு ஏற்படும் நிறை, குறைகளைத் தீர்த்து வைக்கக்களப்பணி அலுவலர்கள், மற்றும் மாவட்டச்சேமிப்பு அலுவலர்கள் ஆகியோர்கள் மாவட்ட வாரியாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இம்முகவர் திட்டம், மக்களிடத்தில் நேரடித்தொடர்பு கொள்ளவும், மக்களது வாழ்வுமேன்மையுறவும், சிக்கனத்தை வளர்த்துச்சேமிப்பு செய்யவும் உதவுகிறது. அது மட்டுமில்லாமல், வளரும் நமது நாட்டில் வேலையில்லாமையை ஓரளவு தீர்ப்பதோடு, அவர்களுக்குத்தன்னம்பிக்கையை ஏற்படுத்துகிறது.

சிக்கனம் என்ற சொல்லுக்குச்சரியான இலக்கணம் படைப்பவர்கள, படைக்க வேண்டியவர்கள் பெண்களே! பெண்கள் முயன்றால் குடும்பம் சிக்கனமாக இயங்கும். சிறு சேமிப்பும் சேரும். தன் சின்னஞ்சிறு குழந்தைக்குத்தாலாட்டுடன், சிக்கனத்தைப்பற்றிக் கூறப்போகிறவர்கள் பெண்களே. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்பது சான்றோர் வாக்கு. எனவே, அத்தாய் தனது குழந்தைக்கு, சிறு குழந்தையிலேயே சிக்கனத்தைப்பழக்கப்படுத்த வேண்டியது அத்தாயின் கடமை. ஒரு உண்டியலையும் காசையும் ஒருகுழந்தையிடம் கொடுத்துப்பார்த்தால் அக்குழந்தை உறுதியாக அக்காசை அவ்வுண்டியில்தான் போடும். அப்போதே அக்குழந்தை சேமிக்கத் தெரிந்து கொள்கிறது. இவ்வாறு ஐந்தில் சேமிக்க ஆரம்பித்து, உறுதியாக ஐம்பதுக்குப் பிறகும் தொடரும்.

சிக்கனம் என்பது, நேரத்தைச்சிக்கனம் பிடிப்பது, உணவில் சிக்கனம் பிடிப்பது, பணத்தில் சிக்கனம் பார்ப்பது, குழந்தைகளைப் பெறுவதில் சிக்கனம் கடைப்பிடிப்பது என்று கொள்ளவேண்டும். அப்பொழுதுதான், வளர்ச்சியடைந்து வருகின்ற நமது இந்திய நாடு உறுதியாக வளர்ச்சியடைந்து ஒரு நாடாக மாறும்; நாடு வளர்ச்சியடைய வேண்டுமானால், ஒவ்வொரு குடும்பமும் மகிழ்ச்சியோடும்; செல்வத்தோடும் காணப்பட வேண்டும். ஒரு குடும்பத்தில் ஒரு தலைவன் அவனது குழந்தைகளை நன்றாகப்படிக்க வைக்கவும், அவர்களுக்குத் திருமணம் செய்து வைக்கவும், தான் வசதியுடன் குடியிருக்கவும், அவன் நலமுடன் வாழவும் உதவுவது, அவன் சிறு சேமிப்பில் சேமித்த சேமிப்புத்தான். மக்கள் சேமித்த பணம் மக்களுக்குப் பெரிதும் பயன்படுகிறது. அது மட்டுமல்ல தமிழக அரசுக்கும் பயன்படுகிறது. அந்த வகையில் சென்ற நிதியாண்டான 1985-86ல் மட்டும் ரூ. 125.44 கோடியைத்தமிழ்நாடு அரசு மத்திய அரசிடமிருந்து உதவி பெற்றுள்ளது. இவ்வாறு பெறப்படும் மூலதனம், மாநில வரவு - செலவுத் திட்டத்தில் என்னதான் அரசுக்கு நிகர வருமானமாக வணிகவரி, வாகன வரி, நிலவரி, பதிவுக் கட்டணவரி, வீட்டுவரி மற்றும் விவசாயம் போன்றவைகளில் வந்த போதிலும், துண்டு விழும் வரவு-செலவுத் திட்டத்தில் பெரும் உதவி அளிப்பதாக அமைகிறது. எனவே சிக்கன நாளான இன்று, ஒவ்வொருவரும்,தனது வாழ்வில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கக்கற்றுக்கொள்ள வேண்டும். சேமிக்க வேண்டும் என்ற சூளுரை எடுத்துக்கொள்ள வேண்டும். சம்பள நாள் வந்ததுமே, சேமிக்கும் நாள் என நினைவில் கொண்டு சேமிக்க வேண்டும். சேமிக்கின்ற மக்கள் சேமிக்காத வாழ்விலும் மகிழ்ச்சி ஏற்பட உறுதுணையாக இருக்கவேண்டும். மேலும் அதிக அளவில் சேமிக்க எல்லோர்க்கும் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் இந்தச் சிக்கன நாள் ஏற்படுத்துவதாக!

[ உலக சிக்கன நாளையொட்டி 31.10.86 அன்று வானொலியில் ஆற்றிய உரை. ]

## உலகிலேயே...

உயிரியல் பாதுகாப்பு ரிசர்வ் பகுதிகளை ஏற்படுத்துவதற்கான நிர்வாக மற்றும் சட்டப் பூர்வமான வழிகாட்டி நெறிகளை உருவாக்கிய முதல் நாடு உலகிலேயே இந்தியா தான்.



கோவையில் 23-11-86 அன்று நடைபெற்ற முதலமைச்சரின் வீரப்பதக்கம் வழங்கு விழாவின் போது, கோவை மாவட்ட மக்கள் சார்பில் நினைவுப் பரிசு ஒன்றை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களிடம் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மு. அபுல்ஹசன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

முதலமைச்சர் வீரப்பதக்கம் வழங்கு விழாவின் தொடர்பாக நடைபெற்ற காவலர்கள் அணிவகுப்பை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் பார்வையிட்டார்.






எம்.ஜி. இராமச்சந்திரன்
முதலமைச்சர்

புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை-600 009.
நாள்: 12-11-86

நிலம், நீர், காற்று இவற்றின் தூய்மை கெடாதவாறு காக்கப்படுவதில் தான் மனித குலத்தின் எதிர்கால நல்வாழ்வு அடங்கியிருக்கிறது. இந்த உண்மை தற்போது உலக அளவில் உணரப்பட்டு வருகிறது என்றாலும் சுற்றுப்புறச் சூழலைக் காப்பதில் இன்னும் அதிகமான முனைப்பு தேவைப்படுகிறது. மரங்களையும் காடுகளையும் அழிப்பதால் தட்ப வெப்ப நிலை மாறி-மழை குறைந்து வருகிறது. நில அரிப்பு அதிகரிக்கிறது. வறட்சி பெருகுகிறது. வளம் குன்றி வருகிறது. நிலம், நீர், காற்று இவற்றை நச்சுப்பொருட்கள் மாசுபடுத்துவதால் மனித குலத்தின் ஆரோக்கியத்துக்கு பெரும் அறைகூவல்கள் எழுந்துள்ளன.

இயற்கையின் வளங்களை சீரழிக்காத முறையில் மனித வாழ்வும், தொழில் வளர்ச்சியும் அமைக்கப்படவேண்டும். தொழில் வளர்ச்சியால் ஏற்படும் பயனைவிட ஆலைகளின் கழிவுப் பொருட்களால் இயற்கைச் சூழ்நிலைக்கு ஏற்படும் பாதகம் அதிகம் என்ற நிலையை நாம் உடனடியாக தடுத்தாக வேண்டும். இவ்வாறான நமது முயற்சிகள் இன்றைய தலைமுறைக்கு மட்டுமின்றி எதிர்கால சமுதாயத்துக்கும் பாதுகாப்பு அளிப்பதாகும்.

இயற்கை வளங்களைப் பாதுகாப்பதும், சுற்றுப்புறச்சூழல் மாசுபடாது தடுப்பதும் அரசின் சட்டங்களால் மட்டும் இயலக்கூடிய ஒன்று அல்ல. மொத்த சமுதாயமும் விழிப்போடு இப்பணியில் ஈடுபட வேண்டும். அதற்கான புதிய எழுச்சியை மக்களிடம் உருவாக்குகின்ற பணியில் நாம் அனைவரும் நம்மை ஒப்படைத்துக் கொள்வோமாக!

எம். ஜி. ஆர்

(எம்.ஜி. இராமச்சந்திரன்)



15-4-1986

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2017
அட்சய - கார்த்திகை 16
மலர் : 17 இதழ் : 11
1-12-1986

# சுற்றுப்புறச் சூழலைக் காப்போம்



# ஆதிதிராவிடர் நலம்பெற அரியதிட்டங்கள்

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்

**திரு ஏ. அருணாசலம்**

**ப**ன்னெடுங்காலமாக அல்லல்பட்டு வந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் இந்த இருபதாம் நூற்றாண்டில்தான் விழிப்புணர்ச்சி பெற்று, சமூகப் பொருளாதார முன்னேற்றமடைந்து வருகின்றனர். இப்பணியில் நம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர். அவர்கள் வழிகாட்டியாகவும், உறுதுணையாகவும் இருந்து அறிய பல திட்டங்களை வளரும் தமிழகத்தில் உருவாக்கி, செயல்படுத்தி வருகிறார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக 1949-ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதி ஒரு கோடிரூபாய்க்கும்சற்றுகுறைவே ஆகும். 1977-78-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது சுமார் ரூ. 16 கோடியாகும். நடப்பு நிதியாண்டில் சற்றேறக் குறைய 48 கோடி ரூபாய் ஒதுக்கியதோடுமட்டுமல்லாமல், சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் மூலம் ஆதிதிராவிடர் நலத் துறை அல்லாது பிற துறைகளின் வாயிலாக ரூ. 120 கோடியே 76 இலட்சம் ஒதுக்கப்பட்டு, அம்மக்களுக்காகப் பயன் நல்கிடும் பல திட்டங்கள் செம்மையாகசெயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை இங்கு மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறேன்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களின் வாழ்வு சிறப்பாக அமைய அவர்களுக்கு அடிப்படைத்தேவை கல்வியேயாகும். இத்துறையின் கீழ் 961 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளும் 170 பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளும், 765 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்/மாணவியர் இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன.

விடுதியில் தங்கிப்பயிலும் மாணவர்கட்கு அனைத்துச்சுகாதார வசதிகளும் கிடைக்கும் பொருட்டு வாடகைக் கட்டடங்களில் நடத்தப்படும் விடுதிகள் அனைத்தையும் அரசின் சொந்தக்கட்டடத்திற்குப் படிப்படியாகமாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாண்டு இதற்காக ரூபாய் 1 கோடியே 60 இலட்சம் செலவிட இவ்வரசு உத்தேசித்துள்ளது.

இவ்வாண்டு 21 ஆதிதிராவிடர் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 6 ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும், அரசு உயர்த்தியுள்ளதின் மூலம் இம்மாணவர்களுடன் மற்றைய மாணவர்களும் கணிசமான பலனை எய்திட வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. மேலும் இதற்காக மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் 81 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதை இங்குக் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.

இதே போல் 20 முதுநிலைப் பட்டம் பெற்ற ஆசிரியர்களையும் 45 பட்டம் பெற்ற ஆசிரியர்களையும் புதியதாக நியமிக்க உத்தரவு பிறப்பித்துள்ளது.

சட்டப் படிப்பு முடித்த பிறகு மாணவர்கள் தொழிலில் ஈடுபடக் கடன் மற்றும் மானியத் தொகை வழங்கி வருகின்றோம். பல்வேறு சட்டங்களின் கீழ் பயிற்சி அளிக்க ஆண்டுதோறும் 20 சட்டப்பட்டதாரிகளுக்கு 4 ஆண்டு சிறப்புப்பயிற்சி அளிக்கப்புரட்சித் தலைவர் அரசு இவ்வாண்டு முதல் தொடங்க ஆணை பிறப்பித்துள்ளது. பயிற்சி பெறுவோர் மாதம் ரூ. 500 உதவித் தொகையும், பயிற்சி அளிப்பவருக்கு, கௌரவத் தொகை ரூ. 5,000 வழங்கப்படும். இதற்கு இவ்வாண்டு ரூ. 1 இலட்சத்து 81 ஆயிரம் செலவிட, புரட்சித் தலைவர் அரசு உத்தேசித்துள்ளது.

அனைத்திந்தியப்பணிகளில் தமிழ்நாட்டிலிருந்து கணிசமான அளவு மாணவர்கள் தேர்ச்சி பெறுவதில்லை என்ற குறைபாட்டினைக்களைந்திட, சென்னையில் பட்டதாரி மாணவர்களுக்கு சிறப்புப்பயிற்சி அளித்து அனைத்திந்தியப் பணிகளில் சேர வாய்ப்பு ஏற்படுத்தும் நோக்குடன் முன்னோடிப்பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. **இது போன்ற முன்னோடிப் பயிற்சி நிலையங்கள் திருச்சியிலும், மதுரையிலும் இவ்வாண்டு முதல் செயல்படவுள்ளன என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.**



**அடிப்படை வசதிகளில் ஒன்றான வீட்டு மனைப் பட்டா வழங்குதல் பாரதப் பிரதமரின் இருபது அம்சத் திட்டத்தின் ஒருமித்த நோக்கமாகும். இத்திட்டத்தை, புரட்சித் தலைவர் அரசு தீவிரமாகச்செயல்படுத்தி வருகிறது. 1949 முதல் 1977 வரை 2 இலட்சத்து 62 ஆயிரம் வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டன. 1977 முதல் 1986 மார்ச் வரை இதன் எண்ணிக்கை 4 இலட்சத்து 25 ஆயிரத்து 870ஆக உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.** இவ்வாண்டில் இதற்கென ரூபாய் 1 கோடி செலவில் நில எடுப்பு செய்யப்படவுள்ளது. இதன் மூலம் 25ஆயிரம் குடும்பங்கள் வீட்டுமனை பெறுவர். இது மட்டுமல்லாமல் எல்லா ஆதிதிராவிடர் குடியிருப்பு மக்களுக்கும் மயானம் மற்றும் மயானப் பாதை அமைத்துக் கொடுப்பதில் அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது. இவர்களுக்கு வீட்டு மனை மட்டும் அளித்தால் போதாது. அவர்களுக்கு வீடும் கட்டித் தரப்பட வேண்டும் என்ற அரிய நோக்குடன் 'தாட்கோ' என்னும் நிறுவனத்தின் மூலம் ஒரு வீட்டிற்கு ரூ. 6 ஆயிரம் செலவில் வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. மலைப் பிரதேசத்தில் ஒரு வீட்டிற்கு ரூ. 9 ஆயிரம் செலவில் வீடு கட்டப்பட்டு உதவிகள் அளிக்கப்படுகின்றன.

இது மட்டுமல்லாமல் இதுவரை தேசிய ஊரக வேலை வாய்ப்புத்திட்டத்தின் மூலமும், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்புக் காப்புறுதித் திட்டத்தின் மூலமும் மொத்தம் 38 ஆயிரத்து 560 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டு இத்திட்டங்கள் மூலம் 47 ஆயிரத்து 565 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து கொடுக்கத் தேவையான நடவடிக்கையை இவ்வரசு மேற்கொண்டுள்ளது.**

எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு ஆதிதிராவிடர் குடும்பங்களில் யாரேனும் ஒருவர் இறந்து விட்டால் அவர்களின் ஈமச்சடங்குக்காக இதுவரை ரூ. 50 அளிக்கப்பட்டு வந்ததை நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ரூ. 100 உயர்த்தித் தந்துள்ளார் என்பதை இத் தருணத்தில் குறிப்பிடக்கடமைப்பட்டுள்ளேன்.

> ஏக பரம்பொருள் என்பதை நோக்க
> எல்லாரும் உடன் பிறப்பே—ஒரு
> பாகத்தார் தீண்டப்படாதவர் என்பதிலே
> உள்ளதோ சிறப்பே?

என்பது பாரதிதாசனின் கவிதையாகும்.

சாதி சமய பேதமற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்கும் நோக்கத்துடன் தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும் என இவ்வரசு தீவிரமாகச்செயல்பட்டு வருகிறது. தீண்டாமை ஒழிப்பில்கலப்புத் திருமணம் ஒரு மன மாற்றத்துக்கு அடிகோலும் என்பதை உணர்ந்த மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் கலப்புத் திருமணத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

## பூச்சிகளைத் திசை திருப்பப் புதிய தந்திரம்

**ப**யிர்களை அழிக்கும் பூச்சிகளை ஏமாற்றித் திசை திருப்புவதற்கு, மின் சிக்னல்களைப் பயன்படுத்தும் நவீன முறை ஒன்றைஅமெரிக்க விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

பூச்சிகளைப் பிடித்து, அவற்றின் உடம்பில் சிறிய மின் பொறிகளை வைத்துப் பறக்கவிட்டனர். பூச்சிகள் பறந்து செல்லும் இடங்களைப் பற்றிய விவரங்களை இந்தமின் சிக்னல்கள் மூலம் தெரிந்து கொண்டனர். பூச்சிகள் விரும்பும் வாசனைகள், விரும்பாத வாசனைகளின் விவரம் கிடைத்தது. அதைப் பயன்படுத்தி, பூச்சிகள் வெறுக்கும் வாசனைகளைப் பயிர்கள் மேல் தெளித்தனர். பூச்சிகள் அந்தப் பக்கமே தலைகாட்டாமல், வேறு பக்கம் பறந்துவிட்டன. இந்த வாசனைப் பொருளால் மனிதர்களுக்குக் கேடு உண்டாவது இல்லை.

பழங்குடியினர் நலனுக்காக, துணைத் திட்டம் வகுக்கப்பட்டு 1976-77-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. தொடக்கத்தில் ஒரு கோடியாக இருந்த நிதி ஒதுக்கீடு இவ்வாண்டு ரூ.9 கோடியே 46 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. பல்வேறு அரசுத் துறைகள் மூலம் பலமுனைத் திட்டங்கள் பழங்குடியினர் முன்னேற்றத்திற்காகச்செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பழங்குடி மக்கள் மீது அக்கறை கொண்டு அவ்வப்போது ஆய்வு செய்து இத் திட்டங்கள் செயல்படும் விதம் பற்றி நல்ல பல ஆலோசனைகளை வழங்கி வருகிறார்கள்.

இவ்வாண்டு மதுரை மாவட்டத்தில் தோப்பூர் என்கின்ற கிராமத்தில் கூட்டுறவு நூற்பாலை தொடங்க ஆணையிடப்பட்டுள்ளது. இதில் 225 ஆதிதிராவிடர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கென அரசு ரூ.1 கோடியே இலட்சம் இவ்வாண்டு செலவிடுகிறது என்பதை இங்குக்குறிப்பிட விழைகிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஏற்படுத்திய சத்துணவுத் திட்டம் இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களும் வியக்கும் வண்ணம் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் மூலம் பல இலட்சக்கணக்கான குழந்தைகள் பயன்பெற்று வருவதில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குழந்தைகள் மட்டும் சுமார் 25 இலட்சம் பேர் பயனடைந்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய மக்களும் சமூக, பொருளாதார மேம்பாட்டை அடைந்து ஒளிமயமான எதிர்காலத்திற்கு அவர்களை அழைத்துச் செல்ல, தாய்த் தமிழகம் அன்புக்கரம் நீட்டி அழைக்க காத்திருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விழைகிறேன்.

**(சென்னை வானொலியில் 5-10-86 அன்று ஆற்றிய உரை)**

# கொடி நாள்!

**பா**ரதம் சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் திங்கள் 7-ஆம் நாள், போரில் வீர மரணம் எய்தியவர்களுக்கு மரியாதை செய்வதற்காகவும், இராணுவப் பணியிலிருக்கும் வீரர்களின் பக்கம் நாடு உள்ளது என்று வலியுறுத்தும் வகையிலும், கொடி நாளாகக் கொண்டாடப்படுகிறது.

'கொடி நாள்' காரணமாக வசூலாகும் நன்கொடைகள் தமிழ்நாடு முன்னாள் படைவீரர்களின் சேம நல நிதியில் சேர்க்கப்படும். இந்நிதியிலிருந்து முன்னாள் படை வீரர்களின் புனர் வாழ்விற்காகவும் அவர்களது குறைகளைத் தீர்ப்பதற்கான பல்வேறு திட்டங்களுக்காகவும் நிதி உதவி கொடுக்கப்படுகிறது. 1984-85-ஆம் ஆண்டில் 6,849 முன்னாள் படை வீரர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் 23.87 இலட்சம் உதவி அளிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் படை வீரர்களுக்குக் கடைகள் கட்டுதல், வங்கிக்கடன்களின் மீதான வட்டிக்கு உதவித் தொகை வழங்குதல் ஆகிய புனர் வாழ்வுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. முன்னாள் படையினரும் அவர்களைச் சார்ந்தவர்களும் தங்கள் வாழ்வின் தரத்தை உயர்த்தத் தக்க ஊதியம் பெறும் வகையில் ரூ. 8 இலட்சம் செலவில் 263 முன்னாள் படை வீரர்கள் கடைகள் கட்டப்பட்டுள்ளன.

வங்கிக் கடன் மீதான வட்டிக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 1,085 முன்னாள் படை வீரர்கள் ரூ. 72,73,000க்கான கடனுதவியைத் தொழில் செய்வதற்காக வங்கிகளிலிருந்து பெற்றுள்ளனர். அவர்கள் கொடுக்கும் வட்டியில் ஓரளவு ஈடுசெய்யும் வகையில் ரூ. 1,65,000 வட்டி உதவித் தொகையாகத் தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

ரூ. 15 இலட்சம் செலவில் 12 படுக்கைகள் கொண்ட மருத்துவப் பிரிவுகள், முன்னாள் படையினருக்காகவும் அவர்களைச் சார்ந்தவர்களுக்காகவும் 18 தாலுக்கா/ மாவட்டத் தலைமையிடங்களில் உள்ள மருத்துவமனைகளில் கட்டப்பட்டுள்ளன.

பாரத விடுதலைக்குப் பின் பல்வேறு போர்களில் மாண்ட தமிழ் நாட்டைச் சேர்ந்த இராணுவ வீரர்களை நினைக்கவும் நன்றி செலுத்தும் வகையிலும் அவர்களின் கைம்பெண்களுக்கு ஆண்டொன்றிற்கு ரூ. 600 வீதம் ஒரு அடையாள உதவித் தொகை வழங்கப்படுகின்றது. அவர்களின் மகள்களின் திருமணத்தை நடத்துவதற்கு ரூ. 1,500 உதவித்தொகை வழங்கப்படுகிறது.

மேலும் இத்தகைய கைம்பெண்களுக்கு வீடு கட்ட ரூ. 5,000 உதவித்தொகையாக இவ்வாறு 99 கைம்பெண்களுக்கு ரூ.4,68,000 வழங்கப்பட்டுள்ளது. ஆதரவற்ற முன்னாள் படை வீரர்களின் கைம்பெண்களுக்கும் 60 வயது கடந்த முன்னாள் படை வீரர்களுக்கும் ஆயுட்காலம் வரை மாத ஓய்வூதியமாக ரூ. 50 வழங்கப்படுகிறது. இதுவரை அத்தகைய 123 முன்னாள் படை வீரர்கள் / முன்னாள் படை வீரர் கைம்பெண்களுக்கு ஓய்வூதியமாக ரூ. 8,47,000 வழங்கப்பட்டுள்ளது.

1-1-1964-க்கு முன்பு ஓய்வு பெற்ற முன்னாள் படை வீரர்களின் கைம்பெண்கள் குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்கள். அத்தகைய கைம்பெண்களுக்கு உதவும் வண்ணம் மாதந்தோறும் ரூ. 50 வழங்கப்படுகிறது. அவர்களின் குழந்தைகளின் பராமரிப்புக்காக ரூ. 10 இரண்டு குழந்தைகள் வரை வழங்கப்படுகிறது. இதுவரை அத்தகைய 1,331 கைம்பெண்களுக்கு ரூ. 14.47 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

படை வீரர்கள் முன்னாள் படை வீரர்களின் குடும்பங்களைச் சார்ந்த பெண்களுக்குத் தையற்பயிற்சி அளிப்பதற்காக ரூ. 1,93,451 செலவிடப்பட்டுள்ளது. புதிதாக ஏற்படுத்தப்பட்ட ஒரு புதிய திட்டத்தின் கீழ், தொழுநோயால் பாதிக்கப்பட்ட முன்னாள் படை வீரர்/கைம்பெண்கள் 43 பேருக்கு மாதம் ரூ. 50 வீதம் அவர்களது ஆயுட்காலம் வரை வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

காசநோய் தொழுநோய்/ புற்றுநோயால் பாதிக்கப்பட்டு நல ஆக்க நிலையங்களில் சிகிச்சை பெறும் முன்னாள் படை வீரர்களுக்கு வழங்கப்பட்டு வரும் [illegible]ப்படி செலவுத் தொகை ரூ. 1.50-லிருந்து ரூ. 2.50 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. முன்னாள் படை வீரர்களின் ஈமக்கிரியை உதவித்தொகை ரூ. 150 லிருந்து ரூ. 250 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. வேறெந்த வகையிலும் நிதியுதவி பெறாத - முழுவதும் பார்வையற்ற முன்னாள் படை வீரர்களுக்கு மாதந்தோறும் ரூ. 50 நிதியுதவி அளிக்கும் திட்டமொன்றும் அமல் படுத்தப்பட்டுள்ளது.

இத்துறையினால் நடத்தப்படும் பல்வேறு தையற்பயிற்சிப் பிரிவுகள், இதுவரை 4,888 முன்னாள் படை வீரர்களைச் சார்ந்த பெண்களுக்கு, அவர்கள் சுயவேலை வாய்ப்பினைப் பெற உதவும் வகையில் பயிற்சி அளித்துள்ளன. இத்திட்டத்திற்காக ரூ. 1.93 இலட்சம் 1984-85-ல் செலவிடப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின் கீழ் 358 பேர் பயிற்சி பெற்றுள்ளனர்.

இத்துறையால் நடத்தப்படும் தட்டெழுத்து, சுருக்கெழுத்துப் பயிற்சி நிலையங்களில் 760 பேருக்கு இதுவரை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் 120 பேர் பயிற்சி பெற்றுள்ளனர். இத்திட்டத்திற்காக ரூ. 17,240 செலவிடப்பட்டுள்ளது.

இளைஞர்களுக்குத் தமிழ்நாட்டில் வேலையில்லாப் பிரச்சனையைச் சுலபமாகச் சமாளிக்கவும், தமிழ்நாட்டிலிருந்து போர்ப் படையில் சேருவோரின் எண்ணிக்கையை உயர்த்தவும் துறை, முகாமுக்கு 100 மாணவர்களைக் கொண்ட பயிற்சி முகாம்களை எல்லா மாவட்டங்களிலும் நடத்தியுள்ளது.

துறையில் செயல்படும் சிறப்பு வேலைவாய்ப்புப் பிரிவு மூலமாக 1-4-84 முதல் 30-6-85 வரை 911 முன்னாள் படை வீரர்கள் பணியில் அமர்த்தப் பட்டனர்.

ரூ. 37 இலட்சம் செலவில் வேலூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் தஞ்சாவூரில் தற்போதுள்ள படைவீரர் மாளிகைகளைத் தவிர ரூ. 15 இலட்சம் செலவில் மதுரையில் கட்டப்பட்டுள்ள படை வீரர் மாளிகை 2-10-1985 அன்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டது. ரூ.7.60 இலட்சம் செலவில் சிவகாசியில் படை வீரர் மாளிகை கட்டப்பட்டுள்ளது.

முன்னாள் படை வீரர் இயக்ககவளாகம் என்று பெயரிடப்பட்ட பலமாடிக் கட்டடம் ஒன்று சென்னையில் ரூ. 40.50 இலட்சம் செலவில் கட்டப்பட்டு 10-7-85 அன்று தமிழக ஆளுநரால் திறக்கப்பட்டது.



## படமும் செய்தியும்



மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களை, தெற்கு பிராந்திய இராணுவத் தளபதி திரு ரஞ்சித் சிங் அவர்கள் 6.11.86 அன்று முதல்வர் அவர்களின் இல்லத்தில் சந்தித்தார்.







'கில்டு ஆப் சர்வீஸ்' சமூக சேவை நிறுவனத்தின் வெள்ளி விழா நிகழ்ச்சியில் (29-11-86) கலந்து கொண்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் அந்நிறுவனத்திற்கு, புதிய கட்டடம் கட்ட ரூ. 2 இலட்சத்தை தமது சொந்தப் பணத்திலிருந்து நிதியாக வழங்கினார். விழாவில் மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திரு ஆர். சௌந்தரராஜன் அவர்களும் கலந்து கொண்டார்.











# புதுவைக்குப் புகழ் சேர்த்த புண்ணிய பாரதி



-தண்டமிழ்ப்பித்தன்

ஆம்! இது பொய்யல்ல! புதுவைக்குப்பாரதியாரால் பெரும் புகழ் சேர்ந்தது என்பதில் ஐயமில்லை. பலவிதத்தும் புதுவை மண்ணின் புதல்வன்போல் பாரதி தமது வாழ்க்கையின் ஒரு பகுதியைப் புதுவையிலேயே செலவிட்டார்.

கவிதை, அரசியல், ஆன்மீகம், புரட்சி இவ்வாறாகப் பல துறைகளிலும் அமரகவி பாரதியின் அரும்பணிகள் கலந்து' விரவிக் களி நடனம் செய்தன.

புதுவை அவருக்கு என்றென்றும் கைம்மாறு செய்யக் கடமைப் பட்டதாகவே உள்ளது.

பாரதியாரின் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் ஒரு புதிய புதிராகத் தான் இருக்கும்.

பாரதியாரே ஒரு பள்ளி ஆசிரியராக இருந்து பணியாற்றியவர். அந்த ஆசிரியருக்கே ஒரு ஆசிரியர் ஏற்பட்டார் என்றால் வியப்பு எழாமலா இருக்கும்!

பிரெஞ்சு மொழியைப் பயிலுவதற்கு விருப்புற்றார் பாரதியார்.

அதற்காக ஒரு துவக்கப்பள்ளியின் தலைமை ஆசிரியராக இருந்த புருஷேவ் என்பவரை அமர்த்திக் கொண்டார்.

பின்னர் அந்துவான் அர்லோக் என்பவரிடம் பிரஞ்சு தேசிய கீதத்தைத் திறம்பெறக் கற்றார்; தெளிவுறக் கற்றார்.

அந்துவான் அர்லோக் அவர்கள் தேசிய கீதம் பாடுவதில் மிகச் சிறப்பு வாய்ந்தவர்.

அத்தேசிய கீதத்தையே வழிகாலாகக் கொண்டு நமது இந்திய நாட்டின் விடுதலை முழக்கத்திற்கு ஏற்றதாகத் தக்கதொரு தமிழ்ப் பாடலை ஆக்கினார் பாரதியார்.

அந்துவான் அர்லோக்கை 'பிரெஞ்சு வாத்தியாரே' என்றுதான் பாரதியார் அழைப்பது வழக்கம்.

சுதந்தரத்துவம், சமத்துவம், சகோதரத்துவம் என்கின்ற மூன்று உன்னதமான குறிக்கோள்களைக் கொண்ட நாடு பிரான்சு என்பது யாவரும் அறிந்ததே.

அந்த முத்தான மூன்று வாக்கியங்களையும் அரசாங்கத்தின் எல்லா முகவரி ஏடுகளின் முகப்பில் முன்னணியில் பொறித்து அதன் அடியில்தான் தங்கள் செய்திகளை அரசுத் துறையினர் வரைவார்கள்.

அதே மூன்று கொள்கைகளும் நமது நாட்டின் விடுதலைக்கும் தாரக மந்திரங்களாக அமைய வேண்டும் என்று பாரதியார் எண்ணியதில் தவறே இல்லை.

ஆங்கில அடக்குமுறையினால் எத்தகைய துன்பங்கள் நேர்ந்தாலும் சுதந்தரம் அடைந்தே தீருவது என்றல்லவா நமது தேசத் தலைவர்கள் முயன்றிருந்தார்கள்!

புதுவை கிரிக்கட் சங்கத்தின் நிர்வாகத் தலைவர்கள் மூவருள் ஒருவராக விளங்கியவரும் அந்துவான் அர்லோக் அவர்களே யாவர்.

மற்றைய இருவரில் ஒருவர் பெயர் [illegible] அர்லோக் என்பதும் இன்னொருவர் பெயர் ஜேம்சு சாமுவேல் என்பதும் ஆகும்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் திறமையாளர்கள்.

வயலின் வாசிப்பதில் ஜேம்சு சாமுவேல் மிகவும் தேர்ச்சி உடையவர்.

இச்செய்தியை அறிந்த பாரதியார் தமது வீட்டில் தாம் பாடும் பொழுதெல்லாம் தம்முடன் சாமுவ்வல் அவர்களையே வயலின் வாசிக்கும் வண்ணம் ஈடுபடுத்திக் கொண்டார்.

தாழ்த்தப்பட்டோரிடம் பாரதியார் கொண்டிருந்த நட்புக்கும் பரிவுக்கும் பல நிகழ்ச்சிகள் உண்டு.

அப்படிப்பட்டவற்றில் தோட்டியும் தமக்குத் தோழனே (துப்புரவுத் தொழிலாளி) என்று காட்டிய தீவிரம் நினைவுறத்தக்கது.

புதுச்சேரியில் பெயர்வாய்ந்த பெரியோர்களுக்கு இணையாகப் பெயர் பெற்ற பொல்லாதவர்களும் நிறைந்திருந்தனர் என்பது வரலாற்று உண்மை.

நகரசபைத் தேர்தல் காலங்களில்தான் அப்பொல்லாதவர்களின் ஆர்பாட்டங்களை அதிகமாகப் பார்க்க முடியும்.

சில தருணங்களில் அவர்களில் சிலரும்கூட தேர்தலில் வேட்பாளராக நிற்பர்.

அவ்வாறு நிற்பவர்கள் ஊர் மக்களையெல்லாம் கதிகலங்க வைத்து விடுவார்கள்.

தேர்தல் வந்தது என்றால் பெரும்பாலும் ஊர் முழுவதுமே இனந்தெரியாத அமைதியில் மூழ்கி விடும்.

மாலைக் கதிரவன் மறைய வேண்டியதுதான் தாமதம். மக்கள் எல்லோரும் தத்தம் வீடுகளிலேயே முடங்கி விடுவார்கள்.

அத்துணை அளவு பயமும், அச்சமும், நடுக்கமும் நிலவும்.

கொலை, கொள்ளை என்றெல்லாம் சொல்வதற்குரிய பொருள்களை விளக்கம் அளித்துக் காட்டுவன தேர்தல் காலங்களே.

அத்தகைய அச்சத்திற்கு அணியாகவும் எடுத்துக் காட்டாகவும் விளங்கிய ஒருவர்தாம் தம்பலா என்றழைக்கப் பெற்றவர். இவர் துப்புரவுத் தொழிலாளர் சமூகத்தின் தலைவரும் ஆவார்.

இவரின் பெயரைக் கேட்டாலே மக்கள் அச்சம் கொள்வர்.

இவரும் தேர்தலில் வேட்பாளராக நின்றுள்ளார்.

ஆனால் நமது கவிச்சிங்கம் பாரதியார் அவரின் வீட்டிற்கே போய்வரவும், நேரில் சந்தித்து உரையாடவும் விரும்பினார்.

அவர்தம் விருப்பத்தை திரு ரா. கனகலிங்கம் அவர்கள் நிறைவேற்றினார்.



மேலண்டை புல்வார் என்ற அகன்ற சாலையில் சுண்ணாம்புக் காளவாய் என்னும் இடத்தில் ஒரு பெரிய மாடி வீட்டில் குடியிருந்த தம்பலாவைக் காண பாரதியாரும் கனகலிங்கமும் புறப்பட்டனர்.

பெரும் கொடூரமானவர் என்றும், பயங்கரவாதி என்றும் எல்லோராலும் கருதவும், பேசவும் இலக்கானவர் அந்தத் துப்புரவுச் சமூகத் தலைவர்.

தம்பலா அவர்கள் சாராயக்கடை, கள்ளுக்கடை, சாக்கனாங்கடை முதலியவற்றைக் குத்தகைக்கு எடுத்தும் நடத்தி வருபவர்.

விவசாயத்திலும் ஈடுபாடு கொண்டவர்.

மகாகவியும் கனகலிங்கமும் தம்பலாவின் வீட்டை அடைந்த போது அவ்வீட்டின் கதவும் தாளிடப் பெற்றிருந்தது.

கதவைத் தட்டுவதற்கோ கனகலிங்கத்திற்குக் குலை நடுக்கம் என்றாலும் வெளியில் காட்டிக் கொள்ளவில்லை.

நம் கவியரசர் அவ்வீட்டின் வாயிலின் இருபுறத்திலும் ஒட்டியிருந்த ஒட்டுத்திண்ணைகளில் ஒன்றின்மீது உட்கார்ந்துகொண்டு

"கனகலிங்கம்! கதவைத்தட்டு! சீக்கிரமாகப் பார்த்துப் பேசிவிட்டுப் போவோம்!" என்று ஆணையிட்டார்.

சீடர் தயங்கினார். பாரதியார் அதைக் கண்டு கொள்ளாமல் மீண்டும் சற்று உரத்த குரலில் பணித்தார்.

வேறு வழியின்றிக் கனகலிங்கம் கதவைத் தட்டினார்.

கபாடம் திறந்தது. ஆனால் தம்பலா அவர்கள் வீட்டில் இல்லை.

தம்பலாவின் துணைவியார் தாம் தாள் திறந்தார்கள்.

"யார் வேண்டும்?" என்ற வினாவை எழுப்பிய அம்மையாருக்கு,

"தம்பலா வேண்டும்!" என்ற பதிலை, பட்டென்று பகர்ந்தார் பாரதியார்.

"அவர் கழனிக்குப் போயிருக்கிறார்! வரும் சமயந்தான் இது! சற்று உட்காருங்கள்," என்று கூறிவிட்டுத் தம்பலாவின் மனைவியார் தம் அலுவல்களைக் கவனிக்கச் சென்று விட்டார்.

அம்மையார் உள்ளே செல்வதற்கும் தம்பலா வெளியிலிருந்து வருவதற்கும் சரியாகிவிட்டது.

பாரதியாரைப் பார்த்த அச்சமூகத் தலைவர் வணக்கம் கூறினார்.

'என்னைத் தெரியுமா' என்றார் கவிஞர் பெருமான்.

'ஓ! தெரியுமே! நீங்க சுதேசிக் காரங்கதானே?' என்றார் தம்பலா.

பாரதியாருக்கு ஒருபுறம் வேதனை இருந்தாலும் 'அப்படியென்றால் நீங்கள் பரதேசிக் காரங்களா?' என்று எதிர்க் கேள்வியை எழுப்பினார்.

தம்பலா மௌனம் சாதித்தார்.

பாரதியார் எவ்வளவு சொல்லியும் எதிர்ப்புறத்தில் உள்ள ஒட்டுத் திண்ணையில் கவிஞருக்குச் சமமாக உட்கார மறுத்து விட்டார் தம்பலா.

அதற்கு மாறாகத் தரையில் மேல்துண்டைப் போட்டு உட்கார்ந்து, மேலே தலையைத் தூக்கிக் கவியரசரை நோக்கிய வண்ணம் வெகு அடக்கத்தோடு பணிவன்பாகப் பேசிக் கொண்டிருந்தார்.

பின்னர், கவிஞரும் கனகலிங்கமும் விடை பெற்றுத் திரும்பினர்.

திரும்பும்போது வழியில், "பார்த்தாயா கனகலிங்கம்! தம்பலா எவ்வளவு மரியாதையாகவும், அடக்கம் உள்ளவனாகவும் நடந்து கொண்டான்?, யாரையும் நாம் நெருங்கிப் பார்த்தால்தான் உள்ளே இருக்கும் நல்ல குணங்கள் தெரியும்! அவர்களையும் நாம் திருத்த வேண்டும் என்றால் நாமும் அவர்களை மதித்து நேசிக்க வேண்டும்!

"இப்படிப்பட்டவர்களையெல்லாம் அவர்கள் போக்கிலேயே விட்டு விட்டால் சமுதாயம் கெட்டு விடாதா?" என்று கூறினார்.

இந்நிகழ்ச்சி பாரதியாரின் பரந்த நோக்கைப் படம்பிடித்துக் காட்டிற்று என்றால் மிகையல்ல.

பாரதியாரை முதன் முதலில் கண்டு நட்புக்கொண்ட குவளைக் கண்ணன் அவர்கள், புதுவை கலவை சுப்புராயச் செட்டியார் பள்ளியில்தான் பயின்றார்.

திருக்குலத்துக் கனகலிங்கமும் அவருடன் சேர்ந்து படித்தவர் தான்.

பள்ளிக்கு வரும்பொழுது 'அங்கவஸ்திரம்' (மேல்துண்டு) போர்த்திக் கொண்டு, அரையில் ஒரு நான்கு முழம் வேட்டியைக் கட்டிக் கொண்டு, நெற்றியில் நாமம் சாற்றிக் கொண்டு வைணவச் சிறுவன் நான்தான் என்பதைப் பறைசாற்றும் வண்ணம் இருப்பாராம் குவளைக் கண்ணன்.

பிற்காலத்தில் அவர் நீதி மன்றத்தில் பெருமாள் தீர்த்தம் (துளசி தீர்த்தம்) குற்றவாளிகளை விசாரணை செய்யும் முன்பு சத்திய வாக்கு வாங்கும் பொழுது அவர்களுக்குக் கொடுக்கும் பணியை ஆற்றியுள்ளார்.

இவர்களுடன் படித்த பள்ளித் தோழர்களில் ஒருவரான ராயல் ரெட்டி என்பவரும் பாரதியாரின் தொடர்பு கொண்டு இந்தியா பத்திரிகையில் ஊழியராகவும் இருந்துள்ளாராம்.

இவ்வாறு புதுவை பற்றியும் அங்குள்ள மக்களைப் பற்றியும் ஆயும் பொழுது பாரதியாரைப் புதுவையே பெற்றெடுத்ததோ அல்லது புதுவைக்காகவே பிறந்து வந்த தவப்புதல்வரோ என்றே எண்ணத் தோன்றுகின்றது.

பாரதியாருடன் நெருங்கிப் பழகாத பண்டையோர்களைத் தேடிப் பிடிப்பதுதான் புதுவையில் அரிதுபோலும் என்று சிந்திப்பதில் எள்முனையும் தவறில்லை.



# மாசுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

கங்காதர்தாஸ், இ.ஆ.ப.,
தலைவர்
தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம்.

சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கப் பலமுனை நடவடிக்கை தேவைப்படுகிறது. பள்ளிப் பருவத்தில் இயற்கைச் சூழல் பற்றிய கல்வியிலிருந்து, அணுயுகத்தால் விளையும் தீமைகளைத் தடுப்பது போன்ற பல்வேறு நடவடிக்கைகள் இதில் அடங்கியுள்ளன. சமுதாயத்தின் எல்லாப் பிரிவினரிடையேயும் சுற்றுப்புறச் சூழல் பற்றிய விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவது, சுற்றுப்புறச் சூழல் மேலாண்மையின் முக்கிய அம்சமாகும்.

சுற்றுப்புறச் சூழலின் தன்மை பற்றிய மக்களின் உணர்வு சுற்றுப்புறச்சூழலுக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களைத் தடுக்க, எவ்வாறு உதவுகின்றது என்பதற்கு நான் ஒரு உதாரணம் கூறுகிறேன். 1969ஆம் ஆண்டு அமெரிக்க அரசின் பாதுகாப்புத்துறை இருபத்தேழாயிரம் டன், நரம்புகளைப் பாதிக்கும், மிஞ்சிய, வாயு மற்றும் பிற இரசாயன ஆயுதங்களை, அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் கொட்ட எண்ணியது. இந்த ஆயுதங்கள், பயன்படுத்தியதுபோக மிஞ்சியவையானாலும், அவைகள் மிகவும் பயங்கரமானவை. பாதுகாப்புத்துறையின் இந்த எண்ணம் பற்றிய அறிவிப்பிற்கு, காங்கிரஸ், நாளேடு மற்றும் நாடு முழுவதும் கடுமையான எதிர்ப்பு கிளம்பியது. இதன் விளைவாக, பென்டகன், முதல் கட்டமாக இந்த நடவடிக்கையை நிறுத்தியது. பின்னர், இரசாயன ஆயுதங்களைக் கடலில் எளிதாக வெளியேற்றுவதற்குப் பதிலாக, சில வாயுக்களைச் செயலற்றதாக்கி வெளியேற்றும் வகையில் திட்டத்தை மாற்றியமைத்தது. தேசிய விஞ்ஞானக் கழகத்தின் ஒரு குழு வெளியிட்ட அறிக்கையின் பேரில், ஆயுதங்களை அகற்ற, தீமை குறைந்த முறைகளைப்பற்றி ஆய்வு செய்யவும் பாதுகாப்புத்துறை ஒப்புக் கொண்டது.

சுற்றுப்புறச் சூழலைப் பேணிக் காப்பது பற்றிய கருத்து இந்தியாவுக்குப் புதிதல்ல. வாழ்வின் ஆதார அமைப்பில், இயற்கையும் மனித இனமும் பிரிகக முடியாத ஒரு பகுதி என்பதை இதிகாச காலங்களிலிருந்து அறிவோம். நமது மூதாதையரின் கருத்துப்படி இந்த அமைப்பு, நிலம், நீர், காற்று, தாவரம் மற்றும் விலங்கினம் என்ற ஐந்து பகுதிகளைக் கொண்டதாகும். இவைகள் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டும், ஒன்றையொன்று சார்ந்தும் உள்ளன. இந்தியாவின், பண்டையகால வாழ்க்கைத் தத்துவம் மற்றும் வாழ்க்கை ஆதார அமைப்பில், சுற்றுப்புறச் சூழல், ஓர் முக்கிய பங்கு வகித்தது. இந்தியாவில் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக்காகத் தற்போது கொடுக்கும் முக்கியத்துவம் பண்டைய இந்தியாவில் உணர்ந்திருந்த உண்மையை மீண்டும் வெளிக்கொண்டு வந்ததைத் தவிர புதியதல்ல.

தொழில்துறையின் செய்முறையின் போது, திட, திரவ, வாயுக் கழிவுகள் வெளியேற்றப்படுகின்றன. தொழிற்சாலை எல்லையிலிருந்து வெளிவரும் கழிவுநீர், தொழிற்சாலை சம்பந்தப்பட்டது அல்ல என்ற ஒரு கருத்து மாசுக் கட்டுப்பாட்டுச்சட்டங்கள் இயற்றப்படும் வரை, நிலவி வந்தது. அதாவது, சுற்றுப்புறச் சூழலில் அதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றித் தொழிற்சாலைகள் எண்ணிப் பார்க்கவில்லை. ஆனால் அதற்கு மாறாக நீர், நிலம் மற்றும் காற்று போன்ற பொது ஆதாரங்களைப் பாதிப்பது என்ற சமுதாயப் பிரச்சினை ஏற்படலாயிற்று.

சமுதாயத்திற்குத் தீங்கு விளைவிக்கா வண்ணம், சுற்றுப்புறச் சூழலின் ஆதாரங்களில் கழிவுகளை வெளியேற்றும் வகையில், இந்தப் பிரச்சினை தொழிற்சாலையின் எல்லைக்குள் தீர்க்கப்பட வேண்டும் என்பதே இந்த மாசுக்கட்டுப்பாட்டுச் சட்டங்களின் மூலக்கருத்து ஆகும். அதாவது தொழிற்சாலை தனது கழிவுகளைச் சுற்றுப்புறச் சூழல் ஆதாரங்களில் வெளியேற்றுவதற்கு முன்பு அதனைச் சமுதாயத்திற்குப் பாதுகாப்பாக இருக்கும் வகையில் வெளியேற்ற வேண்டும்.

இன்றைய தொழிலக அரங்கின் தனிச்சிறப்புகளில் ஒன்று இரசாயனத் தொழிற்சாலைகளின் விரைவான முன்னேற்றமாகும். மேலை ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட தொழில்துறை முன்னேற்றத்தை எடுத்துக் கொண்டால், ஆரம்ப காலங்களில் உலோகங்கள் சார்புடைய தொழில்கள் முன்னேற்றமும், பின்பு இரசாயனத் தொழில் முன்னேற்றமும், அதன் பின்னர் மின்னணுத் தொழிற்சாலை

## ஓஸோன் வாயு

பூமியைச் சுற்றியுள்ள 'ஓஸோன்' வாயுவின் தூய்மையைப் பாதுகாப்பதில், அனைத்துநாட்டு ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்கான சர்வதேச ஒப்பந்தமொன்று ஏற்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் ஐ.நா. சுற்றுச் சூழல் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 1985 மார்ச் 22-ந் தேதி ஏற்படுத்தப்பட்டதாகும். உலகின் 24 நாடுகளும், 'ஐரோப்பியச் சமுதாய' அமைப்பும், அமெரிக்காவும், ரஷியாவின் இரு குடியரசுகளும் இந்த உடன்பாட்டை ஏற்றுக் கொண்டுள்ளன.

'ஓஸோன்' என்பது மனிதன் சுவாசிப்பதற்கு அத்தியாவசியமான பிராணவாயுவின் ஒரு வகையே. சூரியனிடமிருந்து வரும் புற ஊதாக் கதிர்களின் தீயவிளைவுகளை 'ஓஸோன்' தடுத்து விடுகிறது.

ஓஸோன் வாயுவை நச்சுப் படுத்தக்கூடிய பொருட்களை வாயு மண்டலத்தில் கலக்க விடாமல் தடுப்பதற்கு இந்தச் சர்வதேச உடன்பாடு வகை செய்கிறது. ஓஸோனைப் பாதிக்கக் கூடிய 'குளோரோ புளோரோ கார்பன்' என்னும் இரசாயனப் பொருளை விமானங்களில் எரி பொருளாகப் பயன்படுத்துவதற்கு அமெரிக்கா 1977-ஆம் ஆண்டிலேயே தடை விதித்துள்ளது.

முன்னேற்றமும் ஏற்பட்டது. ஆனால் அதற்குமாறாக, வளர்ந்து வரும் நாடுகளில், வெவ்வேறு காலகட்டங்களில் ஏற்பட்ட வெவ்வேறு தரப்பட்ட தொழில் முன்னேற்றங்கள் ஒன்றன் பின் ஒன்றாக ஏற்படாமல், எல்லா வகைப்பட்ட தொழில்களும் ஒரே சமயத்தில் முன்னேறத் தொடங்கியுள்ளன.

சமுதாயத்தின், உணவு உடை, வீடு மற்றும் நல்வாழ்வின் தேவைகளை இரசாயனத் தொழில்துறை பூர்த்தி செய்கின்றது. தீங்கு விளைவிக்கக் கூடிய எண்ணற்ற இரசாயனப் பொருட்கள் இறுதி நிலைப் பொருளாகவோ அல்லது இடைநிலைப் பொருளாகவோ அல்லது மூலப் பொருளாகவோ அமையும் வகையில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த அளவுகள் மேலும் அதிகரிக்கும். சில இரசாயனப் பொருட்கள், சுற்றுப்புறச் சூழலில் நச்சுத்தன்மை கொண்ட பொருட்களை வெளியேறக்கூடிய, தீப்பற்றக்கூடிய, வெடிக்கக்கூடிய மற்றும் பெருங்கேட்டினை விளைவிக்கின்ற கிரியைகளை ஊக்குவிக்கும் தன்மை உடையன. அதனால் இப்படிப்பட்ட விளைவுகளைத் தவிர்த்துப் பாதுகாப்பளிக்கும் முறைகளை இரசாயனத் தொழிற்சாலைகள் கையாளுவது அவசியமாகும்.

தொழிற்சாலைகளின் திட்டக் காலத்திலேயே உள்ளடக்கிய பாதுகாப்பு அமைப்புகள், பழுதுறாச் சாதனங்கள், நல்ல கிரியா ஊக்கிகள், பிரச்சினை ஏற்படுத்தும் பகுதிகளில் தகுந்த உறுப்புகளைத் தேர்ந்தெடுத்தல் ஆகியவைகள் பற்றித்திட்டமிடப்பட வேண்டும். மேலும் காலந்தவறா பாதுகாப்பு ஆய்வு மற்றும் தகுந்த பயிற்சியாளர்களை அமர்த்துவதும் வலியுறுத்தப்பட வேண்டும். தொழிற்சாலைகளில் இரசாயனப் பாதுகாப்புக்காக தகுந்த பயிற்சி பெற்ற ஆட்களை நியமிப்பதில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை கடைப்பிடிக்கக் கூடாது. இரசாயனப் பொருட்கள் பாதுகாப்பு, தொழிற்சாலையின் மேலாண்மையில் ஒரு அம்சம் ஆகும்.

சுற்றுப்புறச் சூழல் பற்றிய விழிப்புணர்ச்சி என்பது ஒரு நாகரிக மோகமல்ல. மனித இனம் நீண்ட காலம் தழைத்து வாழ இது ஓர் அவசியமாகும். சீனப் பழமொழி ஒன்று உண்டு. "நீ ஒரு வருடத்திற்குத் திட்டமிட எண்ணினால் நெல்லைப் பயிரிடு: நீ, பத்தாண்டுக் காலத்திற்குத் திட்டமிட எண்ணினால் ஒரு மரத்தை நடு; மற்றும் நீ நூறு ஆண்டு காலங்களுக்குத்திட்டமிட எண்ணினால் கல்வி அறிவு புகட்டு;" சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பில் சமுதாயத்தின் எல்லாப் பிரிவினரிடையேயும் ஓர் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவது அவசியமாகிறது.



## நகர வாழ்வு மிகுந்த கேடு நிறைந்தது!

"தூய நறும் காற்றும், தூய்மையான குடிநீரும், இறைவன் மனிதருக்கு அருளிய விசேட நன்கொடைகள். அவற்றின் விலை மதிப்பு நாம் அளவிட முடியாத ஒன்று. இவற்றை அசுசிப்படுத்தும் அலுவல்தான், நாகரிகம் மிகுந்த பட்டணங்களில், மிகவும் கிரமமாக, இப்பொழுது நடைபெற்று வருகின்றது. பட்டணங்களில் கிளம்பும் புழுதி தூசி, மோட்டார் வாகனங்களிலிருந்து கிளம்புகின்ற பெட்ரோல் வாயு, இரசாயனத் தொழிற்சாலையிலிருந்து வெளியேறுகின்ற வாயுக்கள், ஆலைகள், புகைவண்டிகள் கக்கும் புகை ஆகிய யாவும் சேர்ந்து, நுரையீரல் நோய்கள் பலவும் தோன்றப் பெருங் காரணங்கள் ஆகின்றன.

"மூக்கு எதற்காக அமைந்திருக்கின்றது? இவ்வகைப் புழுதிகளும் நாற்றங்களும் நுழைவதற்கா? மனித வாழ்விற்கு வேண்டற்பாலதாய உணவைக் கொள்ளுதற்கு, இரண்டு நுழைவாயில்கள், படைப்பில் அமைந்திருக்கின்றன. ஒன்று மூக்கு, மற்றொன்று வாய். மூக்கின் வாயிலாகச் செல்லும் காற்றுக், இன்றியமையாத உணவேயாகும். சோற்றுணவினும் காற்றுணவே மிகச் சிறந்தது. "மீனுக்கு நீர், மனிதனுக்குக் காற்று" என்பது ஆன்றோர் மொழி. அக்காற்றுக்குரியதாய் அமைந்துள்ள மூக்கில் நகரங்களிலும், ஒரு சில கிராமங்களிலும், என்னென்ன பீடைகள் நுழைகின்றன! இக் கழிவுகள் மூக்கின் வாயிலாக நுழைந்து, நுரையீரலில் நிலை பெற்றால் அவ்வீடரின் என்னவாகும்? அது சாக்கடையாகுமன்றோ? அச் சாக்கடையில் புழு நெளிதல் இயல்பன்றோ? இவ்வாறு, நகர்வாழ் மக்களின் உயிர்ப்பு நிலை மிகவும் கெடுகின்றது."

தமிழ்த் தென்றல் திரு. வி. க.

## கிருமியை எதிர்க்கும் தாவரங்கள்

நோய்க் கிருமிகள் தாக்கினாலும், அதனால் பாதிக்கப்படாமல் தாக்குப்பிடித்து நிற்கக்கூடிய தாவரங்களை உருவாக்குவதில், வாஷிங்டன் பல்கலைக் கழக விஞ்ஞானிகள் வெற்றியடைந்துள்ளனர். மரபியல் நுட்பத்தில் இது ஒரு மைல் கல்லாகும்.

'வைரஸ்' எனப்படும் நோய்க்கிருமிகள் ஆண்டுதோறும் ஏராளமான தாவரங்களைத் தாக்கி நாசமாக்கி வருகின்றன. இதனால் கோடிக்கணக்கான பணம் இழப்பு ஏற்படுகிறது. இதனைத் தடுக்க விஞ்ஞானிகள் ஆய்வு நடத்தினர்.

பரவலாகக் காணப்படுகின்ற 'டொபாக்கோ மொசேக் வைரஸ்' எனப்படும் நோய்க்கிருமிகளிலிருந்து மரபு அணுக்களைப் பிரித்தெடுத்து, அவற்றை நன்கு செழிப்பாக உள்ள தாவரத்தின் செல்களுக்குள் புகுத்தினர்; அந்த மரபு அணுக்களின் மூலம் அத்தாவரம் 'நோய் எதிர்ப்புச் சக்தியைப்' பெறுகிறது. வைரஸ் தாக்குதலினின்று காக்கப் படுகின்றது. இந்நோய் எதிர்ப்புச்சக்தியானது அந்தத் தாவரத்தோடு நின்று விடாமல், அதன் விதை மூலம் உருவாகக்கூடிய அதன் சந்ததிகளுக்கும் பரவுகிறது.







முழு விவரங்களுக்கு, அருகிலுள்ள நியூ இந்தியா ஆபீஸ் அல்லது ஏஜெண்டோடு தொடர்பு கொள்ளுங்கள்.

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்

இன்சூரன்ஸ்—நஷ்ட காலத்தில் நம்பகமான ஆதரவு!

(ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியாவின் துணை நிறுவனம்)

# சுற்றுப்புறம் காக்கக் கற்றுக் கொள்வோம்



— மு. முத்துக்காளத்தி

மனிதன் தனது சுயநலத்துக்காகச் செய்துவரும் காரியங்களால் இன்று இயற்கையே அழிந்துவிடும் ஆபத்து உண்டாகியிருக்கிறது. அவன் சுரண்டிச் சுரண்டி, உலக வளங்கள் வறண்டு வருகின்றன.

நகரங்கள் நரகங்களாகின்றன. அடிப்படை வசதியின்றி, வாழ்க்கை துடிப்பதைப் பார்க்கிறோம். குடிப்பதற்கும் நல்ல நீர் இல்லை.

மனித குலத்தின் இன்னொரு பகை: புகை. மனிதன் விடும் புகை, தொழிற்சாலைகளின் விஷப்புகை. அதன் விளைவு—

செடி கொடிகள் வாடுகின்றன. பறவைகள் மடிகின்றன. மக்களுக்குப் பலவித வியாதிகள் வருகின்றன. சில நேரங்களில் விஷப்புகை மக்களின் உயிரைக் குடிக்கும் விபரீதங்களையும் பார்க்கிறோம்.

நட்சத்திரப் போர், அணுசக்திப் போர் பற்றி அதிகம் பேசுகிறார்கள். அச்சப்பட்டுப் பேசுகிறார்கள். இயற்கையை அழித்து மனிதன் உலகெங்கும் அன்றாடம் நடத்தி வரும் போரை அசட்டை செய்கிறார்கள். நான் அதிகம் கவலைப்படுவது இந்தப்போரைப் பற்றித்தான்.

உலகில் பாலூட்டி இனத்தில் ஏதாவது ஒரு இனம், உலகத்திற்கு எந்தவிதப் பாதிப்பும் செய்யாமல் பூண்டற்றுப் போகக்கூடுமானால், அது மனித இனமாகத்தான் இருக்கும் என்பது என் கருத்து. ஒரு ராத்திரியில் ஒரு பெரிய காட்டை அழித்துவிட மனிதனால் முடிகிறது. ஒரு ராத்திரியில் எத்தனைச் செடிகளை அவனால் உண்டாக்க முடியும்?

இயற்கைச் சூழலைப் பாதுகாக்க, விலங்கினங்களைப் பாதுகாக்க, புதிய வனங்களைப் பயிராக்கிப் பராமரிக்க உலக மக்கள் ஒன்றுபட்டு உழைத்தால் மனித குலம் உய்வதற்கு வழி பிறக்கும். இந்தியாவில் நமக்கு இந்த நம்பிக்கை நிறைய இருக்கிறது. இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி, தம் அன்னையார் திருமதிஇந்திரா காந்தியைப் போலவே, இயற்கை வளங்களைப் பேணி வளர்ப்பதில் பேரார்வம் காட்டி வருகிறார்.

பிரதமரைப் போலவே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களும் இயற்கைச் சூழலைப் பேணுவதிலும், மாசுக் கட்டுப்பாட்டைத் தீவிரப்படுத்தி மக்கள் வாழ்க்கையில் சுகாதாரக் கேடு ஏற்படாமல் பாதுகாப்பதிலும் பெருங்கவனம் செலுத்தி வருகிறார், இந்த நிலைகமகள் மக்கள் பெரிதும் போற்றி வரவேற்கத் தக்கவையாக இருக்கின்றன என்பதில் ஐயமில்லை.

ஒலியால் ஏற்படும் வலி ஒரு பக்கம். நரம்புத் தளர்ச்சிக்கு மக்கள் பலியாகின்றனர். வாகனங்களின் இரைச்சல்.. ஒலிபெருக்கிகளின் ஓயாத அலறல்... காதை அடைத்துக் கொண்டால்கூட, உபாதை குறைவதில்லை.

இந்தச் சப்தங்கள் போதாதென்று, வெடிச்சப்தமும் குடிகொண்ட நாடாக இந்தியா விளங்குகிறது. நல்லதுக்கும் கெட்டதுக்கும் வேட்டு வைக்கும் பழக்கம் நமக்கு உண்டு. செவிட்டுக்குக் கேட்பானேன்?

உலகில் தொழிற்புரட்சி வசதிகளை அதிகமாக்கியது. அதே சமயம் உலகத்தை வாழ்வதற்கு லாயக்கற்றதாகவும் ஆக்கிவிட்டது. pollution என்ற பிரச்சினைக்கு solution காண முடியாமல் இன்று நாடுகள் திகைக்கின்றன.

காற்று மாசுபடுவது, தண்ணீர் மாசுபடுவது, இதனால் கேடு உண்டாவது ஆகிய பிரச்சினைகள் பலருக்கும் புரிகிறது, தெரிகிறது. ஒலித்தொல்லை தெரிவதில்லை. ஒலித்தொல்லை புரிகின்ற அளவுக்குக்கூட மக்களுக்கு ஒலித்தொல்லை புரியவில்லை.

சுற்றுப்புற ஒலி ஒவ்வொரு பத்தாண்டுக்கும் இரட்டிப்பாகிறது. அமைதி எங்கே என்று தேடி அலைய வேண்டியிருக்கிறது. அக அமைதி இருக்கட்டும். புற அமைதியே இன்று காணக்கிடைக்காத கற்பகமாகிவிட்டது.

என் வீட்டில் குழந்தைகள் கூப்பாட்டை என்னால் தாங்கமுடியவில்லை. வெளியே வந்தால் பஸ், ரயில் இரைச்சல், பயணிகளின் வள வள வம்பு சாலைகளில்அட்டகாச அரட்டைகள், நான் எங்கே தான் ஓடுவது? என்னைப் போல் எத்தனை ஆயிரம் பேர் ஏங்கித் தவிக்கிறார்களோ?

வாய் ஒன்று, நாக்கு ஒன்று போல் காதும் ஒன்றாக இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே? ஒலி மிகுதியால் இதய நோய்கள், உயர் அழுத்த நோய்கள், நரம்புத் தளர்ச்சி, மூளைப் பாதிப்பு இத்யாதி சங்கடங்கள் விளைகின்றன.

விமான தளம், பஸ் நிலையம், ரயில்நிலையம் இவற்றின் பக்கத்தில் இருப்பவர்களுக்கு மனோ வியாதிகள் அதிகமாக இருக்கும்.

ஒலியைக் காது வழியாக வாங்கி மூளைக்கு அறிவிக்கும் மெல்லிழை செல்கள், அதிக சப்தத்தின் அதிர்ச்சியால் பாதிக்கப்பட்டு, சீக்கிரத்திலேயே அந்த நபர் செவிடாகிறார்.

இயந்திர இரைச்சல் மிகுந்த இடங்களில் வேலை செய்கிறவர்கள்,கேட்கும்சக்தியைச் சுலபத்தில் இழக்கிறார்கள். ஒலியைக் கட்டுப்படுத்தச் சட்டங்கள் இருந்தாலும், செலவு கருதியும், மற்ற மக்களைத் துச்சமாக மதித்தும் அதனை நிறைவேற்றாமல் இருந்து விடுகிறார்கள்.

ஒலியை அளந்து வைத்திருக்கிறார்கள் விஞ்ஞான முறையில். 90 டிசைபல்கள் வரை மனித காது தாங்கும். அதற்கு மேல் போனால் செவிப்புலனுக்கு ஆபத்துதான். காந்தியடிகள் அந்தக் காலத்தில் ரயிலில் பயணம் செய்யும்பொழுது காதில் பஞ்சு வைத்துக் கொள்வாராம். இப்பொழுது நாம் எல்லா நேரத்திலும் பஞ்சு வைத்துக் கொண்டு, முக்கிய செய்திகளைக் கேட்க வேண்டும்போது மட்டும் அதை எடுத்துவிடலாம்.

மென்மையான இசை உள்ளத்துக்கு இதமாக அமைந்து, உடல் நலனுக்கு மேன்மை தரும். வன்மையான இசை துன்பத்தைக் கொண்டு வரும். காட்டுக்கத்தல் இசையான rock மனிதனுக்கு shock கொடுத்து, கேட்கும் சக்தியை knock out பண்ணுகிறது. இங்கிலாந்தில் இலட்சக்கணக்கில் இளைஞர்களுக்குக் காது பழுதாகியிருக்கிறது இந்த rock இசையால்!

இயற்கையை நாம் பாதுகாக்கத் தவறினால், இயற்கை நம்மைப் பாதுகாக்கத் தவறிவிடும். இது தான் இயற்கை நியதி.

மனிதர்கள் மனிதர்களை மட்டுமே மதிக்கிறார்கள். மற்ற உயிரினங்களை மிதிக்கிறார்கள். இந்த உலகம் எல்லா ஜீவராசிகளுக்கும் பொது. அனைவருக்கும் உரிமையுடையது. சகோதரத்துவம் நமக்குள் மட்டும் தானா? செடி கொடிகள், விலங்குகளை விலக்கிவிட்டுப் பார்க்கும் மனோபாவம் இனியாவது விலகிப் போகட்டும்.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வள்ளலார் வாடினார். தேடிய கண்ணனை, பார்வை பட்ட இடத்திலெல்லாம் பார்த்தார் பாரதியார். உயிர்வாழ் இனங்கள் எல்லாவற்றுடனும் ஒத்துப்போக நாம் கற்றுக் கொள்வது ஒன்றே, உலகம் செத்துப் போகாமல் இருக்க ஒரே வழி.

விசையொடிந்த தேசத்தில் வன்மை வேண்டுமென்று, அன்றைய பிரதமர் திருமதி இந்திரா காந்தி 20 அம்சத் திட்டம் கொண்டுவந்தார். விழித்தெழுந்த தேசம் வீறுகொண்டு செயலாற்றிட, இளைய தலைமுறையின் எழுச்சிச் சின்னமாக விளங்கும் இன்றைய பிரதமர் திரு ராஜீவ் காந்தி, 1986ல் புதிய 20 அம்சம் தந்தார். அதில் 17-வது அம்சம், சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கிறது.

"சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க மக்களுக்கு விழிப்பூட்டவும், ஆதரவைத் திரட்டவும், இயற்கைத் தாய்க்குத் தாலாட்டவும், இயற்கைக்கு ஒத்திசைந்த வகையில் திட்டப் பகுதிகள்" மற்றும் தொழில்நுட்பத்தைத் தேர்ந்தெடுக்கவும் அது மக்களை ஆற்றுப்படுத்துகிறது.

விறகுக்காக மரங்களை வெட்டுவதன் மூலம், இந்தியாவில் ஆண்டுதோறும் 15 இலட்சம் எக்டேர் பரப்புக்குக் காடுகள் அழிக்கப்படுகின்றன. வனவளம் குன்றினால் மண்வளம் மங்கும். மண்வளம் மங்கினால், உற்பத்தி குறையும். இந்த வகையில் இந்தியாவில் ஆண்டுதோறும் 5 கோடி டன் உணவு உற்பத்தி குறைந்து வருகிறது.

விறகுக்குப் பதில் கெரசின் உபயோகிக்கலாம் என்று சொல்லலாம். ஆனால் அது மாற்று ஏற்பாடாக அமைய முடியாது. ஏனெனில், கெரசின் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இந்தியாவில் தற்போது அது விற்கபபடும் விலை, அதன உண்மையான விலை அல்ல. ஏழைகள் இன்னலுறக்கூடாது என்பதற்காக, இந்திய அரசு மானிய விலையில் இந்தியாவில் கெரசினை விற்பனை செய்கிறது. அதனால்தான் அதன் விலை குறைவாக இருக்கிறது. இந்த நிலை எப்பொழுதுமே நீடிக்க முடியாது.

கெரசினுக்குப் பதிலாக விறகுக்கு மாற்றுப் பொருளாகப் பழுப்பு நிலக்கரியையும் பயன்படுத்தலாம். சாண எரிவாயு தொட்டியில் எஞ்சியிருக்கும் இந்த உரத்தின் மூலம் 30 சதவிகிதம் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும்.

வெப்ப நாடுகளில் உள்ள தாவரங்கள், மருந்து தயாரிப்புக்கு ஒப்பற்ற கருவூலங்கள்.

அறுவைச் சிகிச்சையில் பயன்படுகிற வலி மரப்பு மருந்துகள், தசைத் தளர்வாக்கிகள், கருத்தடை மருந்துகள், உயர் இரத்த அழுத்தம், இரத்தப் புற்று, மலேரியா போன்ற பலவிதமான நோய்களுக்கான மருந்துகள் தாவரங்களிலிருந்தே உண்டாக்கப்படுகின்றன.

உலகில் உற்பத்தியாகும் மருந்துகளில் 25 சதவிகிதம் தாவரங்களிலிருந்தே கிடைக்கின்றன. இவற்றின் மதிப்பு பல கோடி ரூபாய்கள் இருக்கும்.

ஒவ்வோர் ஆண்டும் உலகில் 245 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் பரப்புக்குத் காடுகள் அழிக்கப்படுகின்றன. இது இங்கிலாந்து நாட்டின் மொத்தப் பரப்பளவுக்குச் சமம்.

இந்த வேகத்தில் போனால், இன்னும் 30 ஆண்டுகளில் வெப்ப நாட்டுக் காடுகளே இராது. அவற்றுடன் 440 ஆயிரம் தாவர இனங்களும் அழிந்துவிடும். இது மருந்து உற்பத்தித் தொழிலுக்கு விழக்கூடிய பெரிய அடி!

வெப்ப நாட்டுக் காடுகள் அழிவது புற்றுநோய்க்கு எதிரான போராட்டத்தைப் பாதிக்கும். எய்ட்ஸ் என்ற பயங்கர நோய்க்கு, அமேசான் காடுகளிலுள்ள ஒருவகை ஓக் மரத்தின் கஷாயம் சிறந்த முறையில் உதவுவதாக, சமீபத்தில் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

முனிவர்களுக்கும் மூலிகைகளுக்கும், கனி வர்க்கங்களுக்கும் காயகல்பத்துக்கும் பேர் போனது புண்ணிய பாரதம். தீராத வியா

## மாசுக் கட்டுப்பாட்டுக்கு மத்திய அரசு நடவடிக்கை



சுற்றுப்புறச் சூழலை, தொழிற்சாலைகள் கெடுத்துவிடக்கூடாது என்பதில் மத்திய-மாநில அரசுகள் கண்டிப்பாக இருக்கின்றன. இந்த வகையில் மத்திய அரசு சில நிபந்தனைகள் விதித்தே உரிமம் வழங்குகிறது.

சுற்றுப்புறச் சூழ்நிலை கெடாமல் நாங்கள் நடவடிக்கை எடுப்போம் எனத் தொழிலதிபர்கள் உறுதியளிக்க வேண்டும். தொழில்கள் தொடங்கப்படும் இடத்தின் தன்மையும் கவனிக்கப்படும். சுற்றுப்புறச் சூழல்பற்றி மாநில அரசின் சான்றிதழ் பெறப்பட வேண்டும்.

துத்தநாகம், ஈயம், செம்பு, அலுமினியம், உருக்கு, காகிதம், பூச்சி மருந்துகள், தோல் பதனிடும் ஆலைகள் போன்ற 18 வகைத் தொழில்களுக்கு மத்திய அரசு உரிமம் வழங்க நிபந்தனை விதித்துள்ளது.



திகள் கூட சீரான பச்சிலைகளினால் பறந்து போகும். இவ்வளவு பாரம்பரியம்மிக்க நமது நாட்டில், நாட்டு மருந்துகளில் நாட்டத்தைக் கோட்டை விட்டு, எதிர் விளைவுகளை உண்டாக்கும் நவீன மருந்துகளைச் சாப்பிட்டு உடம்புக்குக் கேட்டைத் தேடிக் கொள்கிறார்கள்!

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தொழிலதிபர்களுக்கு நல்ல ஆலோசனைகள் கூறி, வழி காட்டி வருகிறது. தொழிலதிபர்கள் தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்கு முன்னால், அந்தத் தொழிற்சாலைகளால்சுற்றுப்புறப் பாதிப்பு இராது என்பதற்கு, இந்த வாரியத்திடமிருந்துசான்று பெற்றாக வேண்டும். தொழிற்சாலைகளின் கழிவுகளை ஆய்வு செய்து சான்றிதழ் வழங்க, சென்னையிலும் மதுரையிலும் வாரியத்திற்குச் சோதனைச்சாலைகள் உள்ளன. திருச்சியிலும் சேலத்திலும் ஏற்படப்போகின்றன. இந்த வசதி வாய்ப்பைத் தொழிலதிபர்கள் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சுற்றுப்புறச் சூழலைப் பாது காக்க அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை ஆதரித்து ஒத்துழைக்க வேண்டுமே தவிர, அவை கடுமையானவை செலவு வைப்பவை என்று அமலாக்காமல் இருந்துவிடுவது தேசபக்தியற்ற செயலாகும்.

எதிர்காலச் சந்ததியினர் இன்பமாக வாழ நாம் பொறுப்புடன் பணியாற்ற வேண்டும்.

நினைத்தால் வாழலாம்!

நிமிர்ந்தால் உயரலாம்!

மனிதனால் உண்டாக்கப்படும் பிரச்சினைகளுக்கு மனிதனால் பரிகாரம் காண முடியும். அறிவு ஒரு சிலரின் ஏகபோகம் அல்ல. அனைவருக்கும் இருக்கிறது. செயல்படுத்த முனைவோர் முன்னேறுகின்றனர். இந்தத் தன்னேரில்லாத ஆற்றல் இந்தியர்கள் அனைவருக்கும் உண்டு என்பதை நிரூபிப்போம்!

சென்னையில் கூவத்தைச் சுத்தப்படுத்தக் கோரிக்கை எழுப்புவதோடு நின்றுவிடாமல் அதற்கான ஆக்கவழிகளிலும் ஈடுபடப் பொதுமக்கள் இன்று ஆர்வம் காட்டும் நிலை ஏற்பட்டுள்ளது.

சென்னை, ஆழ்வார்ப் பேட்டையில் எல்டாம்ஸ் ரோடு சந்திப்பிலுள்ள சி.பி. கலை மையத்தில், குழந்தைகளுக்கு இயற்கை மற்றும் சுற்றுச் சூழல் குறித்துப் போதிப்பதற்கு, குழந்தைகள் மையம் ஒன்று உருவாக இருக்கிறது.

இந்த மையத்தில், குழந்தைகள் விஞ்ஞான அறிவு பெறும் வகையில் நூல்களும் சாதனங்களும் வைக்கப்பட்டிருக்கும்.

அடையாறு முகத்துவாரத்தில் பல அபூர்வப் பறவைகள் வந்து தங்குவதால் அந்த இடத்தின் சுற்றுப் புறச் சூழலைப் பாது காப்பதற்கும், அடையாறு முகத்துவாரத்திலிருந்து மகாபலிபுரம் வரையுள்ள கடற்கரையோரங்களில் கடலாமைகள் இடும் முட்டைகளைச் சேகரித்து, அந்த அபூர்வ கடலாமை இனம்அழிந்து போகாமல் காப்பதற்கும் உலக விலங்கின நிதியமைப்பு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

சுற்றுச் சூழல் மேம்பாட்டு மாதத்தையொட்டி, 10,000 மரக் கன்றுகளை நட, சென்னை மாநகராட்சி ஏற்பாடு செய்துள்ளது. நட்ட மரக் கன்றுகளை ஆடு மாடுகள் மேய்ந்து விடாமல் தடுக்க, ஒவ்வொரு கன்றுக்கும் மாநகராட்சி கூண்டுகளை அமைக்கிறது. தொண்டு நிறுவனங்களும், பொதுத்துறை நிறுவனங்களும் இந்தக் கூண்டுகளுக்கு ஆகும் செலவை ஏற்றுக் கொள்ளுமாறு சென்னை மாநகராட்சி ஆணையர் திருமதி சாந்தா ஷீலா நாயர் இ. ஆ. ப. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சென்னையில் சாஸ்திரி நகர், பெசண்ட் நகர் ஆகிய பகுதிகளில், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு ஏ. பத்மநாபன், இ.ஆ.ப. அவர்கள் 19.11.1986 அன்று மரக்கன்றுகளை நட்டார்.

இதோ இளைஞர்கள் எழுந்து விட்டார்கள். "எங்கள் உள்ளத்தைப்போல் இல்லத்தையும் தூய்மையாக வைத்துக் கொள்வோம். இந்தியாவில் வீடுகள் குப்பையாக இருக்கின்றன; மாடுகள் சப்பையாக இருக்கின்றன; மனிதர்கள் தொப்பையாக இருக்கின்றனர் என்ற அவலத்தை மாற்றுவோம். உடை, நடை, உடல், வீடு, தெரு, நாடு, ஊர், உலகம் தூய்மையாக இருக்கப் பாடுபடுவோம்.

"தெரிகிறது நிலைமை. புரிகிறது கடமை. முறிகிறது சோம்பல். எரிகிறது அழுக்கு. பிளவுக்கு முழுக்கு. பிந்தினால் இழுக்கு" என்று முந்துகிறார்கள் முனைந்து பணியாற்ற! வெற்றியன்றி வேறென்ன விளையும்?

## கண்ணீர் சிந்தும் பாறைகள்

உலகில் கண்ணீர் சிந்தும் பாறைகளை எங்காவது காண முடியுமா? சோவியத் நாட்டின் வடகிழக்கு சைபீரியாவில் யாகுத்ஸ்க் பிரதேசத்துககு அருகிலேயே அத்தகைய பாறைகளை ஒருவர் காண இயலும்.

லேனா நதியின் வலது கரை நெடுகிலும் 200 கிலோ மீட்டர் நீளத்துக்கு முரண்பட்ட நிலையிலான, உயரமான செங்குத்துப் பாறைகள் அமைந்துள்ளன. அந்தப் பாறைகளின் கரடுமுரடான மேற்பகுதியிலிருந்து கண்ணீர்த் தாரைகள் போல் நீர்த்தாரைகள் வழிவதைக் காணலாம். மிக அதிகமான வெப்ப நிலையிலும் அந்த நீர்த்தாரைகள் உலர்ந்து விடுவதில்லை. தொடர்ந்து அந்தப் பாறைகள் கண்ணீர் வடித்துக் கொண்டுதான் இருக்கின்றன.

இந்த அதிசயக் காட்சியினால் கவரப்பட்ட சோவியத் விஞ்ஞானிகள் இதன் காரணத்தை ஆராய்ந்தார்கள். இந்தச் செங்குத்துப் பாறைகளின் பகுதிகளில் கனமான அடுக்குப் போல பாசி படர்ந்திருக்கிறது. இந்தப் பிரதேசத்தில் மிக அதிகமான வெப்ப நிலையில் காற்று மண்டலத்தில் ஒரு கன மீட்டருக்கு 10 கிராம் அளவுக்கு ஈரப்பதம் இருக்கிறது. இந்த வெப்பக் காற்று இந்தப் பகுதி மூடிய, பாசி படர்ந்த பாறையின் மீது படும்போது அதிலுள்ள ஈரப்பதம் குளிர்ச்சியடைந்து நீர்த்துளிகள் ஏற்படுகின்றன. அந்த நீர்த்துளிகள் ஒன்று சேர்ந்தே நீர்த்தாரைகள் ஏற்படுகின்றன என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். பாறைகள் கண்ணீர் சிந்தும் விந்தை இதுதான்.





# வளரும் கைத்தறித் தொழில்

நீண்ட காலமாக இயங்கிவரும் கிராமியத் தொழில்களில் ஒன்றான கைத்தறித் தொழில் வ்வசாயத்திற்கு அடுத்தபடியாக வேலைவாய்ப்பினை மக்களுக்குப் பெருமளவில் அளித்து வருகிறது. தமிழநாட்டில் 5.56 இலட்சம் கைத்தறிகள் இயங்கிவருகின்றன. இதன் மூலம் 13.34 இலட்சம் நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைககிறது. தேசிய இலக்கான 60 சதவிகிதத்தைத் தாண்டி தமிழ்நாட்டைப்பொறுதத வரை 68% கைத்தறிகள் கூட்டுறவு அமைபபின கிழ் கொணடு வரபபட்டுளளன.

31.8.1986ல் தமிழ் நாட்டில் 1625 கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சஙகஙகள 3.79 இலட்சம் தறிகளுடன் இயங்கி வருகின்றன. 1986-87ல மொத்தம 20,000 கைத்தறி நெசவாளர்கள், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கூட்டுறவு அமைப்பின் கீழ கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போதுள்ள தொடக்க நெசவாள கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதன அமைப்பை வலுப்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக 1986-87ல்நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசின் பங்கு மூலதன உதவி என்னும் திட்டத்திற்காக 100 இலட்சம் நிதி ஒதுக்கத் திட்டமிடபபட்டுள்ளது. 1985-86-ல் கூட்டுறவுத் துறையின் கீழ் கைத்தறித்துணியின் உற்பத்தி 162 மில்லியன் மீட்டர்களாக இருந்தது. 1986-87ல் உற்பத்தியை 185 மில்லியன் மீட்டர்களாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**சி. மு. முனிரத்தினம்**
**இணை இயக்குநர் (கைத்தறி)**

தமிழ் நாட்டிலுள்ள நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தினராக அனுமதிக்கப்படும் ஒவ்வொரு நெசவாளர்களுக்கும் பங்கு மூலதனத் தொகை செலுத்துவதற்காகப் பருத்தி தறி ஒன்றுக்கு ரூ. 200 பட்டு மற்றும் கம்பளித் தறி ஒன்றுக்கு ரூ.250 பாலியஸ்டர் தறி ஒன்றுக்கு ரூ. 500 என்ற உச்ச வரம்பிற்கு உட்பட்டு கடன் உதவி அளிக்கப்பட்டு வருகிறது.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைமுறை மூலதனத்தினை அதிகரிக்கும் பொருட்டு தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி (NABARD) மறு நிதிஉதவி அளித்து வருகிறது. கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு இந்த வங்கி, வங்கிவட்டி விதத்தைவிட 2½% குறைந்தவட்டி விகிதத்தில் கடன் உதவி அளித்து வருகிறது. இச்சலுகையின் மூலம் தலைமை மற்றும் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் 7½% வட்டியில் நடைமுறை மூதலனம் பெற்று வருகின்றன்.

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகள் 4.38 இலட்சம் கதிர்கள் திறன் கொண்டு ஆண்டிற்கு 1.44 இலட்சம் பேல்கள் நூல் பல தரப்பட்ட வகைகளில் உற்பத்தி செய்கின்றன. கூட்டுறவு நூற்பு ஆலைகளில் அவ்வாறு தயாராகும் நூல்கள் கோ-ஆப்டெக்ஸிற்கு விற்கப்பட்டு அவை தமிழ்நாட்டில் உள்ள முக்கிய நெசவாளர் மையங்களில் அமைந்துள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் மூலம் ஆரம்பக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

ஊத்தங்கரை, அறந்தாங்கி, தேனி, எட்டையபுரம் மற்றும் கமுதி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள 5 கூட்டுறவு நூற்

பாலைகள் உற்பத்தியை ஆரம்பித்துவிட்டன. இவற்றுள் எட்டையாபுரம் கூட்டுறவு நூற்பாலை பாலியஸ்டர் போனற ரகங்களை உற்பத்தி செய்வதற்கான நூல்களை உற்பத்தி செய்து வருகினறது.

கமுதியில் அமைந்துள்ள கூட்டுறவு நூற்பாலை, ஆதிதிராவிடர்கள நலனுக்காகவெனறே அமைக்கப்பட்டுளள ஒன்றாகும. கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரைத் தலைவராகக் கொணட நூல் விலை நிர்ணயக் குழு நூற்பாலைகள் கோ-ஆப்டெகஸிறகு வழங்கும் நூல்களின் விற்பனை வீதங்களை வரையறுக்கிறது. ஒவ்வொரு விற்பனை நிலையங்களுக்கும் தேவைப்படுகிற நூலின் அளவுகளுக்கேற்ப கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், அவைகளுக்குப் பல தரப்பட்ட எண்ணிக்கை நூல் ஒதுக்கீடு செய்து வருகிறார். தனிப்பட்ட நூற்பாலைகளிலிருந்து ஒதுக்கீடுகளை கோ-ஆப்டெக்ஸ் பல்வேறு விற்பனை நிலையங்களுக்கும் வழங்குகின்றன. இதனால் அனைத்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நூல் தாராளமாகக் கிடைப்பதுடன், சங்கங்களில் உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பினையும் அளித்து வருகிறது.

இந்திய அரசின் நிதியுதவியினைக் கொண்டு தமிழ்நாடு அரசு கூட்டுறவு கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டங்கள் காஞ்சிபுரம், ஈரோடு, சேலம் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் நிறுவியுள்ளது. இத்திட்டங்களின் மூலம் இது வரையில், 18436 கைத்தறிகள் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.



நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் நூல் விநியோகம்.

இத்திட்டங்களின் மூலம் 1985-86ஆம் ஆண்டில் ரூ. 663.58 இலட்சம் மதிப்புள்ள 79.46 இலட்சம் மீட்டர் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ. 766.37 இலட்சம் அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. மேற்படி திட்டங்கள் நலிநத மற்றும் செயலிழந்த கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைத் தங்கள் பொறுப்பில் எடுத்துக் கொண்டு அச்சங்கங்களில் உளள நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பினை நல்கி வருகின்றன.

கோ-ஆப்டெக்ஸ் என்று எல்லோராலும் அழைக்கப்படும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், தமிழநாட்டில் உள்ள 1625 பிரதம நெசவாளர் கூட்டுறவுசங்கங்களின் தலைமைச் சங்கம் ஆகும். இது நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தியில் பொதுவாக 50%ஐ கொள்முதல் செய்து நாடெங்கிலும் உள்ள அதன் 530 கிளை விற்பனை நிலையங்களிலும் விற்பனை செய்து வருகின்றது.

இச்சங்கம் கடந்த 1985-86ல் 60.67 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்து ரூ.102.06 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளை விற்பனை செய்துள்ளது. மத்திய அரசின் மலிவு ரகத் துணிகளை அளிக்கும் ஜனதா ரகத் திட்டத்தினை இச்சங்கம் நிறைவேற்றிவருகிறது.

இதன்மூலம் மக்களுக்கு மலிவு விலையில் ஜனதா ரக வேட்டிகள் மற்றும் சேலைகள் லுங்கிகள் போன்றவை கிடைக்கின்றன. தவிர அரசுப் பணியாளர்களுக்கும், உள்ளாட்சித் துறை ஊழியர்களுக்கும் கைத்தறித் துணிகள் கடனில் விற்பனை செய்யும் திட்டத்தினையும் கோ-ஆப்டெக்ஸ் தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றது.

கைத்தறித் துணியின் விற்பனையினைப் பெருக்குவதற்கு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளில் நுகர்வோருக்கு கைத்தறித் துணி வாங்குவதன் மீது தள்ளுபடி அளிப்பது ஒன்றாகும். இத்திட்டத்தின் கீழ் ஏற்படும் மானியத் தொகையை மைய அரசும், மாநில அரசும் 50:50 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளுதல் என்ற அடிப்படையில் அரசு 20 சதவிகித சிறப்புத் தள்ளுபடியும் அளித்து வருகிறது.

கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கத்தில்
பட்டுச்சேலை விற்பனை



# செங்கல் தொழில்



செங்கல் தயாரிப்புத் தொழில் குறைந்த முதலீட்டில் அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்கவல்ல ஒரு துறையாகும. இத்தொழிலில் ஈடுபட்ட தொழிலாளர்களில் அனைவரும் ஆதிதிராவிட, பின்தங்கிய மற்றும் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவுகளைச் சார்ந்தோராகும். இவர்களுக்குக் கூடுதல் வாய்ப்புகளை உருவாக்கவும், அதிகக் கூலியினைக் கொடுக்கவும் அவர்களது சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்த்தவும் 17 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை 6,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பளித்து வருகின்றன. மேலும் 1,000 தொழிலாளர்களுக்கு இவற்றின் மூலம் வேலை வாய்ப்பளிக்க உள்ளது.

மேற்படி திட்டத்தின் கீழ் 1985-86ஆம் ஆண்டிற்கு அரசு ரூ. 17.36 கோடி அளவிற்குத் தள்ளுபடி மான்யமாக அனுமதி வழங்கியுள்ளது. மேலும் இத்திட்டத்திற்கு 1986-87ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் 10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கொண்டு இவ்வாண்டு ரூ. 25 கோடி நிதியுதவி அளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், அரசு பணியாளர்கள், உள்ளாட்சி நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்குக் கைத்துறித் துணிகளை வாங்குவதற்கான கடன் வசதித் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இந்திய அரசும் தம் பணியாளர்களும் இத்திட்டத்தினைக் கொணடு வர மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் ஏற்றுமதிக்கென்று ஒரு தனி அமைப்பினை "கோ-ஆப்டெக்ஸ் இண்டர்நேஷனல்" என்றபெயரில் ஏற்படுத்தி விற்பனை படிப்படியாக அதிகரித்து வருகிறது. 1986-87ஆம் ஆண்டில் குறைநத அளவு இரண்டு கோடி அளவிற்குத் துணியினை ஏற்றுமதி செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புத் துறைக்கும், இரசாயனப் பிரிவுகளுக்கும் தேவைப்படும் ஒரு பகுதி துணியினை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திடமிருந்து வாங்குவதற்குப் பாதுகாப்புத் துறையினரை மாநில அரசு அணுகியுள்ளது. முதல் அமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன் அடையும் பள்ளிக்கூட மாணவ மாணவியர்களுக்குக் கைத்தறிச் சீருடையினை இலவசமாக வழங்க தேவையான கைத்தறித் துணிகள் இத்துறையின் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

நமது மாநிலத்தில் கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள நெசவாளர்களின் நலனுக்காகக் கூட்டுறவு கைத்தறி நெசவாளர் பாதுகாப்பு மற்றும் சேமிப்புத் திட்டம் என்ற நலத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்கீழ் கூட்டுறவுக் காப்புறுதித் திட்டத்தின் மூலம் மொத்தமாக அனைத்து நெசவாளர்களும் கொண்டு வரப்பட்டுள்ளனர். இது வரை சுமார் 1,16,831 கைத்தறி நெசவாளர்கள் இத்திட்டத்தில் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

இதன் மூலம் ஒவ்வொரு நெசவாளியும் தன்னுடைய கூலியில் ஒரு ரூபாய்க்கு 6 காசு சந்தாவாகவும், இவ்வகையில் அரசு ஒரு ரூபாய்க்கு 3 காசு மான்யமாக அளிக்கிறது. இதன் மூலம் சேரும் தொகைக்கு ஆண்டொன்றுக்கு 7 சதவிகிதம் வட்டி அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒரு நெசவாளி இறக்க நேரிட்டால் அந்த நெசவாளியின் சேமிப்பில உள்ள முழுத்தொகையும் அரசு மானியமும் அதற்குண்டான வட்டியுடன் ரூ. 3,000 ஆயுள் காப்புறுதிக் கழகத்தின் மூலம் அவரது வாரிசுதாரருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

கோ-ஆப்டெக்ஸும் அதன் சார்பில் ரூ. 2,000 நெசவாளரின் வாரிசுதாரர்களுக்கு 1.7.1985 முதல் அளித்து வருகிறது. 1985-86ஆம் ஆண்டில் ரூ.120 இலட்சம் இத்திட்டத்தின் கீழ் செலவிடப்பட்டுள்ளது.

# சிப்பிக் காளான் வளர்ப்பு முறை

**கா**ளான்கள் பல்லாண்டுகளாகச் சுவைமிக்க உணவாகக் கருதப் பட்டு வந்துள்ளன. கோவை வேளாண்மைக் கல்லூரியில் நடை பெற்ற ஆய்வுகளின் பயனாகச் சிப்பிக் காளான் சாகுபடி செய்யும் முறை உருவாக்கப்பட்டுள்ளது. காளான்களில் அடங்கியுள்ள மணம், சுவை, ஊட்டச் சத்து ஆகியவை எல்லோரையும் கவர்ந்திழுக்கும் இயல்பினைப் பெற்றிருக்கின்றன. அண்மையில் கண்டறிந்த சிப்பிக் காளான் வளர்ப்பு நுணுக்கங்கள் இக் கட்டுரையில் இடம் பெறுகின்றன.

### தட்ப வெப்ப நிலை

இக்காளான் 20 முதல் 30 டிகிரி செ.கி. வெப்ப நிலையில் வளரும். ஆயினும் 20 முதல் 25 டிகிரி செ.கி. வெப்ப நிலையில் நன்றாக வளரும். காற்றின் ஈரப் பதம் 75 சதவிகிதத்திற்கு மேல் இருக்க வேண்டும். வெப்பநிலை கூடுதலாக இருக்கும் காலங்களில் தரையில் 6-7 சென்டிமீட்டர் உயரத்திற்கு மணலைப் பரப்பித் தண்ணீர் தெளித்து வருவதுடன் சுவரை ஒட்டி சாக்குப் படுதாக்களைத் தொங்கவிட்டுத் தண்ணீர் தெளித்து வரவேண்டும். அதன் மூலம் வெப்பநிலை குறைவதோடு, ஈரப்பதமும் அதிகரிக்கும்.

இயற்கையில் நிலவும் தட்ப வெப்ப நிலைகளை அனுசரித்து மித வெப்பப் பகுதிகளிலும் குளிர்ப் பகுதிகளிலும் சிப்பிக் காளானை வளர்க்கலாம். கூரை வேய்ந்த குடிசை, ஈரச் சூழ்நிலை நிலவும் அறை ஆகியவை இதற்கு தேவை. மலைப் பிரதேசங்களில் காளான் வளர்ப்பதற்கு 'ஆஸ் பெஸ்டாஸ்' போடப்பட்ட வீடுகளைப் பயன்படுத்தலாம்.



படுக்கைகளில் வித்துப் பரவுதலுக்கும், காளான் வளர்வதற்கும் தனித்தனி அறைகள் இருப்பது ஏற்றது. படுக்கைகளைத் தயாரித்தவுடன் வித்துப் பரவும் அறையில் உள்ள அடுக்குகளில் 20 நாட்கள் வரை வைத்திருக்க வேண்டும். இந்த அறையில் வெளி வெளிச்சமும் காற்றோட்டமும் தேவையில்லை. அதன் பின்பு காளான் வளர்வதற்கான அறையில் வெளிச்சமும் காற்றோட்டமும் அவசியம். அப்பொழுதுதான் காளான்கள் படுக்கையிலிருந்து வெளிவந்து வளரும்.

### காளான் வித்து தயாரித்தல்

சோளம், மக்காச்சோளம், கம்பு, கோதுமை ஆகியவற்றில் ஏதாவதொரு தானியத்தை நீரில் ஓரளவு வேகும்படி கொதிக்க வைக்க வேண்டும். தானியத்தைக் கைவிரல்களுக்கிடையில் வைத்து அமுக்கினால அமுங்குகின்ற அளவுக்கு வெந்திருக்க வேண்டும். தானியங்களில் வெடிப்புத் தெரிகின்ற அளவுக்கு வேக வைக்கக் கூடாது. இதற்கு, மக்காச்சோளத்திற்கு சுமார் ஒன்றரை மணி நேரமும், சோளம், கோதுமை, கம்பு ஆகிய தானியங்களுக்குச் சுமார் ஒருமணி நேரமும் ஆகலாம். பின் நீரை வடித்து விட்டு நிழலில் உலர்த்த வேண்டும்.

ஒரு கிலோ தானியத்திற்கு 20 கிராம் வீதம் கால்சியம் கார்பனேட் கலக்க வேண்டும். பின்பு கண்ணாடிப் புட்டிகளில் முக்கால் பாகம் வரை நிரப்பி புட்டிகளைப் பஞ்சை உருட்டி இறுக்கமாக மூடி வைக்கவும். அதற்குமேல் காகிதத்தைச் சுற்றி நூலினால் கட்டி வைக்கவும். புட்டிகளை அமுக்க வெப்பமூட்டியில் (ஆட்டோகிளேவ்) 20 இராத்தல் அழுத்தத்தில் இரண்டு மணி நேரம் வைத்திருக்க வேண்டும். அமுக்க வெப்பமூட்டி இல்லையாயின் பிரஷர் குக்கரைப் பயன் படுத்தலாம். இவ்வாறு தொற்று நீக்கிய புட்டிகளை வெளியில் எடுத்து வைத்துச் சூடு தணிந்த பின் ஏற்கெனவே வைத்திருக்கும் காளான் பூசணம் வளர்ந்திருக்கும் புட்டியிலுள்ள சில தானியங்



களைக் கம்பியைச்சூடாக்கியபின் கிளறிவிட்டுப் புதிதாகத் தயாரித்ந புட்டிகளில் உட்புகுத்த வேண்டும். இவ்வாறு செய்யும் போது பிற நுண்ணுயிர்கள் உட் செல்லாதவாறு செயல்படவேண்டும். எனவே பர்னர் அல்லது விளக்கு எரியும்போது அதன்மேல் புட்டியின் கழுத்துப் பாகத்தைப் பிடித்து உட்புகுத்த வேண்டும். பட்டிகளை வைத்திருந்து புட்டிகளின் தூர்ப்பாகம்வரை காளான் பூசணம் வளர்ந்த பின்பு காளான் படுக்கை தயாரிக்கப் பயன்படுத்தலாம்.

### காளான் படுக்கை தயாரித்தல்

இதற்கு வைக்கோல், கழிவுப் பஞ்சு, கழிவுக்காகிதம், கரும்புச் சக்கை போன்றவற்றைப் பயன் படுத்தலாம். வைக்கோலைச் சுமார் 3-5 செ.மீ. நீளத்தில் சிறு துண்டுகளாக வெட்டிக்கொண்டு தண்ணீரில் 4 மணி முதல் 6 மணி நேரம் ஊறவைக்கவேண்டும். பிறகு வெளியில் எடுத்து வெந்நீரிலோ நீராவியிலோ சுமார் 30 நிமிடங்கள் அமிழ்த்தி வைத்திருக்க வேண்டும். நீரை வடித்து விட்டுச் சுத்தமான சாக்குப்படுதாவில் பரப்பிவைத்து, சுமார் மூன்று மணி நேரம் நிழலில் உலர வைக்க வேண்டும். வைக்கோல் அதிக ஈரத்துடன் இல்லாமலும் காய்ந்துவிடாமலும் இருப்பது நல்லது.

காளான் வித்தினைப் புட்டியிலிருந்து வெளியில் எடுக்க வேண்டும். ஒரு வித்துப் புட்டியிலிருந்து எடுத்த வித்துக்களை மூன்று படுக்கைகள் தயாரிக்கப் பயன் படுத்தலாம். வெள்ளைப் பாலித்தீன் பைகளைப் பயன்படுத்திப் படுக்கைகளை அமைக்கலாம். பாலித்தீன் பையின் உயரம் 60 செ.மீ. அகலம் 30 செ.மீ. பாலித்தீன் பை கனமாக இருப்பதை விட மெல்லியதாக இருந்தால் (80 காஜ்) சிறந்தது. பையின் நடுவில் ஒரு பக்கத்திற்கு ஒரு துவாரம் வீதம் ஒரு செ.மீ. அளவுள்ள துவாரங்கள் ஒரு பைக்கு இரண்டு வீதம் போட்டுக்கொள்ள வேண்டும். பையின் அடிப்பாகத்தை நூலினால் முடிந்து கொண்டு பையின் அடியில் வைக்கோல் துண்டுகளைச் சுமார் 5 செ.மீ. உயரத்திற்குப் பரப்ப வேண்டும். காளான் வித்துக்களை நான்கு சமபங்காகப் பிரித்து அதன் மேல் ஒரு பங்கினைத் தூவ வேண்டும்.

இரண்டாவது தடவையாக வைக்கோல் துண்டுகளைச் சுமார் 10 செ.மீ. உயரத்திற்குப் பரப்பியபின் காளான் வித்துக்களின் மற்றொரு பங்கினைத் தூவ வேண்டும். மூன்றாவது தடவையாக மீண்டும் சுமார் 10 செ.மீ. உயரத்திற்கு வைக்கோல் துண்டுகளைப் பரப்பி மற்றொரு பங்கு வித்துக்களைத் தூவ வேண்டும். நான்காவது தடவையாக மீண்டும் சுமார் 10 செ.மீ. உயரத்திற்கு வைக்கோலைப் பரப்பி இறுதியாக வித்துக்களைத் தூவ வேண்டும். அதன்பின் சுமார் 5 செ.மீ. உயரத்திற்கு வைக்கோல் துண்டுகளைத் தூவி விட்டுப் பையினைக் குலுக்கியபின் பையின் நுனிப் பாகத்தை நூலினால் முடிந்து வித்துப் பரவும் அறையில் உள்ள அடுக்குகளில் வைக்க வேண்டும். காளான் பூசணத்தின் வளர்ச்சி வித்துக்களிலிருந்து தோன்றிப் படுக்கை முழுவதும் பரவும். இருபது நாட்கள் வரை இதே அறையில் வைத்திருக்க வேண்டும்.

இருபது நாட்களுக்குப் பிறகு பால்த்தீன் பையினை உருவி எடுக்க வேண்டும். சிலநேரங்களில் இருபது நாட்களுக்கு முன்பே பாலித்தீன் பையினைப் பெயர்த்துக்கொண்டு காளான் மொட்டுக்கள் தோன்றுதலும் உண்டு. அவ்வாறு மொட்டுக்கள் தோன்றினால் பாலித்தீன் பையினை உடனடியாக நீக்கிவிட வேண்டும். மொட்டுக்கள், தென்படவில்லையாயின் படுக்கை தயாரித்த 21வது நாளில் பாலித்தீன் பையினை நீக்கி விட்டு, காளான் தோன்றுவதற்கான அறைக்கு மாற்ற வேண்டும். இவ்வறையில் காற்றும் வெளிச்சமும் பரவ சன்னல், கதவு ஆகியவற்றை 20-30 நிமிடங்கள் காலையிலும் மாலையிலும் திறந்து வைப்பது பயனுள்ளது. மலைப் பிரதேசங்களில் வெளிச்சம் குறைவாக இருந்தால் டியூப்லைட்டைப் பயன்படுத்தி ஒருநாளைக்குச் சுமார் ஒரு மணி நேரம் வெளிச்சம் பரவுமாறு செய்ய வேண்டும்.

படுக்கைகளைக் காளான் தோன்றுவதற்கான அறைக்கு மாற்றியபின் இரண்டு நாட்கள் தண்ணீர் தெளிக்க வேண்டாம். அதற்குப்பின் நாள்தோறும் இரு முறை படுக்கைக்கு வேண்டிய அளவு தெளிப்பான் மூலம் தண்ணீர் தெளித்து வர வேண்டும். மலைப் பிரதேசங்களில் காற்றின் ஈரப்பதம் அதிகமாக இருப்பதால் படுக்கைகளின் மேல் அடிக்கடி தண்ணீர் தெளிக்க வேண்டிய நிலை ஏற்படாது.

### காளான் தோன்றுதல்

காளான் வித்திட்ட நாளிலிருந்து சுமார் 22 முதல் 30

## செருமானியப் பெண்ணின் தமிழ்ப் பாக்கள்

**செ**ல்வி உல்ரிக் நிக்கோலஸ், எம்.ஏ., செருமானிய நாட்டைச் சேர்ந்தவர். தமிழ்ப் பல்கலைக் கழக இலக்கியத்துறையில் யாப்பு பயின்றவர். அவர் பாடிய சில பாக்கள்:

1. குறள்வெண்பா:

தமிழின்பம்

இன்றமி ழின்னிசையி லின்பந்தா னின்றி
இனிமை யினிமேலு மின்று.

2. ஆசிரியப்பா:

வயல்வளம்

தஞ்சை சுற்றிய மருத நாட்டிலே
நெஞ்சு மகிழக் கண்கள் குளிரக்
காற்றால் கலங்கிய கழனிகள்
பசுங்கடல் போலப் பரந்திருக் கின்றன.

நன்றி: தமிழ்ப்பல்கலைக்கழகச் செய்தி மலர்.

நாட்களில் காளான் மொட்டுக்கள் படுக்கையில் தோன்றும். மொட்டுக்கள் தோன்றியதிலிருந்து நான்கு நாட்களுக்குள் நன்கு வளர்ந்துவிடும். வளர்ந்த காளான்களை தண்ணீர் தெளிக்கு முன்னால் அறுவடை செய்ய வேண்டும். காளான் அறுவடை செய்தவுடன் படுக்கையில் வெளிப்புறத்திலிருந்து சுமார் ஒரு செ. மீ. அளவில் சுரண்டி எடுத்து விட்டுத் தொடர்ந்து தண்ணீர் தெளித்து வர வேண்டும்.

7 முதல் 10 நாட்கள் இடைவெளியில் மூன்று அல்லது நான்கு முறைகள் காளான் தோன்றும்.

படுக்கை தயாரிக்கப் பயன்படும் வைக்கோலின் எடைக்குச் சராசரி 40 முதல் முதல் 80 சதவிகிதம் வரை காளான் கிடைக்கும். காளான் ஒரு கிலோ ரூபாய் 17.50 முதல் ரூபாய் 25.00 வரை விற்பனை செய்யப்படுகின்றது.

**காளான் உணவுச்சத்து**

அறுவடை செய்தவுடன் சிப்பிக் காளானில் 2.9 சதவிகிதம் புரதச்சத்து உள்ளது. காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றில் உள்ள புரதச் சத்தினைக் காட்டிலும் சிப்பிக் காளானில் உள்ள புரதச்சத்து அதிகமானதாகும். காளானில் கொழுப்புச் சத்து 0.36 சதவிகிதமும் மாவுச்சத்து 5.3 சதவிகிதமும் உள்ளன. காளானில் கொழுப்புச்சத்தும் மாவுச்சத்தும் மற்ற உணவுப் பொருட்களைக் காட்டிலும் குறைவாகவே உள்ளன. எனவே நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கும் இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கும் காளான்கள் சிறந்த உணவுப் பொருளாகப் பயன்படுவதாகப் பலராலும் கருதப்படுகின்றன.

**காளான் வளர்ப்புக்கான பயிற்சி**

காளான் வித்து தயாரித்தல், காளான் வளர்த்தல் ஆகியவற்றுக்கான பயிற்சி கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பயிர்ப்பாதுகாப்பு ஆய்வு மையத்தைச் சேர்ந்த பயிர் நோயியல் துறையில் ஒவ்வொரு ஆங்கில மாதமும் 5ஆம் நாள் இலவசமாக அளிக்கப்படுகிறது. ஆடவரும் பெண்டிரும் இதனால் பயன்பெறலாம். காளான் வித்துப்புட்டிகளும் இங்கு விற்பனை செய்யப்படுகின்றன. ஒரு புட்டியின் விலை ரூபாய் 2.50. சிப்பிக் காளான் வளர்ப்போரின் எண்ணிக்கை தமிழகத்தில் மட்டுமல்லாது பிற மாநிலங்களிலும் பெருகி வருகின்றது. அதன் வழி காளான் வளர்ப்பு, வளம் பெருக்கும் குடிசைத் தொழிலாக மாறி வருகின்றது.

**தகவல்:**

**டாக்டர் கா. சிவப்பிரகாசம்**
**பி. சலால்ராஜன்**
**டாக்டர் ஆர். செயராசன்**
**பயிர் நோயியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைக் கழகம், கோவை-3.**

# இலக்கை மிஞ்சிய சாதனை!



அரசும் வங்கிகளும் சமுதாயத்தில் நலிந்தோர்க்கு வங்கிக் கடன்களும் மானியமும் கொடுத்து நிதியுதவி அளித்து வருகின்றன. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டம், சிறு மற்றும் குறு விவசாயிகளுக்குப் பேருதவித் திட்டம் இன்னும் பல திட்டங்களின் மூலமாக வங்கிகளும், கூட்டுறவு நிறுவனங்களும் வழங்கும் கடன்களில் ஒரு பகுதி மானியமாகும். இது தவிர, மானியம் இல்லாத கடன்களையும் நிதி நிறுவனங்கள் வழங்குகின்றன.

1985-86-ஆம் ஆண்டிற்கு 8.57 இலட்சம் நபர்கள் பயன்பெறும் வகையில், கடன்களும் மானியங்களும் சேர்ந்து ரூ. 257 கோடி சமுதாயத்தில் நலிந்தோர்க்கு உதவுவதற்காக, வழங்க வேண்டுமெனத் திட்டம் வகுக்கப்பட்டு, அதற்குண்டான இலக்கினை நிர்ணயம் செய்து, 19 மாவட்ட ஆட்சியாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

அரசு அதிகாரிகளின் முயற்சியாலும், வங்கிகள், கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்பாலும், 1985-86ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கினைத் தமிழ்நாடு மிஞ்சிவிட்டது.

1985-86-ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் 9.93 இலட்சம் நபர்கள் பயனடைந்துள்ளார்கள். ரூ. 305 கோடி வரை நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் எய்திய திட்டச்சாதனை 116 சதவீதம் ஆகும். நிதி சாதனை 117 சதவீதமாகும்.

பெரியார், பசும்பொன் முத்துராமலிங்கம், சேலம், நீலகிரி, திருநெல்வேலி, தஞ்சாவூர், இராமநாதபுரம், மதுரை, காமராஜர், செங்கற்பட்டு, கோயம்புத்தூர் ஆகிய 11 மாவட்டங்கள் 1985-86-ஆம் அண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட திட்ட மற்றும் நிதி இலக்கினை மிஞ்சிவிட்டன. புதுகோட்டை, கன்னியாகுமரி மாவட்டங்களைப் பொறுக்கவரையில், அந்த மாவட்டங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட திட்ட இலக்கினை அடைந்து விட்டன.

பயன் பெற்றவர்களில் மானியத்தொகை இல்லாமல் கடன் பெற்றவர்கள் 7.34 இலட்சம் பேர். எஞ்சியவர்கள் கடன்கள் மற்றும் மானியத்தொகை உதவி பெற்றவர்கள் ஆவார்கள்.





# வீடு விபத்துகளின் கூடு

— மு. முத்துமுருகன்

வீடு குடும்பத்துக்குப் பாதுகாப்பு என்று சொல்வார்கள். ஆனால் இந்த வீடே விபத்துகளின் கூடாகி விடுகிறது! விபத்துகள் அதிக அளவில் நடைபெறும் இடங்களில் வீடும் ஒன்று எனபது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும்!

குழந்தைகள் அடிக்கடி கீழே விழுந்து முட்டி உடைத்துக் கொள்வது வீட்டில்தான். சிராய்ப்பு, கத்திக் காயமபடுவது விளையாட்டுப் பொம்மைகளே கூட வினையாகிவிடுவது இதெல்லாம் வீடுகளில் சகஜம்.

பல மருத்துவ மனைகளில் தீக் காயங்களுககாகச் சேர்க்கப்படும் நோயாளிகளில் பெரும்பாலோர் வீடுகளில் காயம் பட்டவர்களாகவே இருக்கிறார்கள்.

காயங்களிலிருந்தும், கிருமிகளின் தாக்குதலில்ருந்தும் திசுக்களைக் காப்பாற்றுவது தோல். காயம் பட்ட இடத்தின தன்மை, அளவு இவற்றைப் பொறுத்து அந்தக் காயத்தின் தீவிரத் தன்மை அமைகிறது. தோல் திசுக்கள் புதிதாக வளரும். இந்த இயற்கைத் தன்மையோடு நாம் 'ஆன்டிசெப்டிக்' மருந்துகளையும் பயன்படுத்தும்பொழுது, அவை காயம் ஆறுவதைத துரிதப படுத்துவதோடு, வியாதிக் கிருமிகள் வேறு இடங்களுக்குப் பரவாமலும் பாதுகாக்கின்றன.

வீடுகளில் சில தடுப்பு நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதன் மூலம், விபத்துகள் ஏற்படுவதைத் தவிர்க்கலாம். தீக்குச்சிகள், சூடான பாத்திரங்கள், கத்தி, கத்திரிக்கோல்கள், கருவிகள், தையல் இயந்திரங்கள், ஊசிகள் போன்றவை குழந்தைகளுக்கு எட்டாத இடத்தில் இருக்க வேண்டும். கொஞ்சம் வளர்ந்த குழந்தைகளுக்கு, இந்தக் கருவிகளை எதற்காக, எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். பாட்டில், டின் இவற்றில் என்ன இருக்கிறது என்பதை லேபிலில் எழுதி ஒட்ட வேண்டும்.

நெருப்பு, எண்ணெய், நீராவி, மின்சாரம் ஆகியவை தீ விபத்துகளுக்குக் காரணமாகின்றன. கெரசின், விறகு போன்றவற்றை ஜாக்கிரதையாகப் பாதுகாக்க வேண்டும். 'பிரஷர் ஸ்டவ்'களைப் பயன்படுத்தும்பொழுதுஅளவுக்கு மீறிய அழுத்தம் தரக்கூடாது. அதனால் ஸ்டவ் வெடிக்கலாம். 'கேஸ் சிலிண்டர்' பயன்படுத்துகிறவர்கள், சமையல் முடிந்தவுடனும், தூங்கப் போகும் போதும் கேஸை மூடிவிட மறக்கக் கூடாது.

சமையல் செய்யும்பொழுது சேலைத் தலைப்பு, வேட்டி முனை போன்றவை பறக்காதபடி மடித்துச் செருகிக்கொள்ள வேண்டும். நூல் சேலை கட்டித்தான் சமைக்க வேண்டுமே தவிர நைலான், நைலக்ஸ், டெரிலின் சேலை கட்டியல்ல. சமைக்கும் பொழுது சாமான்கள் எடுக்க வசதியாக, சமையல் பண்டங்கள் அடுப்பு மேடைக்குக் கீழே அல்லது பக்கவாட்டில் சேமித்து வைக்கப்பட்டிருக்க வேண்டும். எரியும் அடுப்புக்கு மேலே குறுக்காகக் கைநீட்டி எடுக்கும் வகையில் இருக்கலாகாது.



விபத்துகள் உருவாவதில்லை, உண்டாக்கப்படுகின்றன. விழிப்புடன் இருந்தால் தடுத்துவிடலாம், அல்லது விபத்தை ஒழித்தே விடலாம்.

வீட்டில் எப்பொழுதும் ஒரு முதலுதவி - மருந்துப் பெட்டி இருக்க வேண்டும். சாதாரண காயங்களுக்குக் கட்டுப் போட, ஆண்டிசெப்டிக் கிரீம்கள், பிளாஸ்டர், காஸ், பாண்டேஜ், கத்திரி, வலி நிவாரண மாத்திரைகள் முதலியன கொண்டதே அப்பெட்டி.

காயம்-சிராய்ப்பு ஏற்பட்டால் பஞ்சை 'ஆண்டிசெப்டிக்' மருந்தில் தோய்த்து, அந்த இடத்தைத் துடைக்க வேண்டும்.

கூரான கண்ணாடி, ஊசி போன்றவை குத்தியிருந்தால் அதை நீக்க வேண்டும்.

'ஆண்டிசெப்டிக்' கிரீம் தடவுக. இதனால் அந்தக் காயத்திலிருந்து கிருமிகள் வேறுபகுதிக்குப் பரவாமல் தடுக்கலாம்.

காயம் பட்ட இடத்தைச் சுற்றிக் கட்டுப் போடுக.

துருப்பிடித்த இரும்பால் காயம்பட்டிருந்தால், டாக்டரிடம், சொல்லி 'டெட்டனஸ்' தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும்.



சிறு தீக்காயங்களுக்கு, 'ஆண்டிசெப்டிக் கிரீம்' தடவி, தளர்த்தியாகக் கட்டுப் போட வேண்டும். காயம் பெரியதாக இருந்தால் டாக்டரிடம் காட்டுவதே நல்லது.

அதிர்ச்சிக்குள்ளானவருக்குத் தண்ணீர் கொடுக்கலாம். காபி, தேநீர் போன்ற பானங்கள் கூடாது. ஆளை அமைதிப் படுத்த வேண்டும்.

தீயினால் ஏற்பட்ட கொப்புளங்களைத் தொடுவதோ, குத்துவதோ கூடாது. டாக்டரிடம் காட்டித்தான் சிகிச்சை பெற வேண்டும்.

கூட்டுறவு வாரவிழா

# பத்திரிகையாளர் சுற்றுலா

ஆண்டுதோறும் கூட்டுறவு வார விழா நவம்பர் 14 ஆம் நாளிலிருந்து 20 ஆம் நாள் வரை சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அதனையொட்டி, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தினர் சென்னை நகரிலுள்ள சில கூட்டுறவு அமைப்புகளைப் பார்வையிட்டுப் பல தகவல்களைத் தெரிந்து கொள்வதற்காகப் பத்திரிகை நிருபர்களை அழைத்துச் செல்வது மரபாக இருந்து வருகிறது.

இந்த ஆண்டு நவம்பர் 7 ஆம் நாளன்று பத்திரிகையாளர்கள் அவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டனர். சுற்றுப்பயணத்தைத் தொடங்குவதற்கு முன்னர், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய அலுவலக வளாகத்தில் தனி அலுவலர் திரு மு.சுப்பையா, கூட்டுறவுப் பணிகள் குறித்து நிருபர்களிடம் விவரித்தார:

''கூட்டுறவு வளர்ச்சியில் தமிழகம் முன்னணியில் இருக்கிறது. டெல்லியில் நடைபெற்ற கூட்டுறவு வளர்ச்சி மாநாட்டில் கலந்து கொண்டபோது, அங்கே மற்ற மாநிலத்தவர்கள் எல்லாம் தமிழகத்தைப் பாராட்டினார்கள். தமிழக அரசுக்கு எழுத்து மூலமும் தெரிவித்திருக்கிறார்கள்.

''தமிழ்நாடு கூட்டுறவு, அகில இந்திய அளவில் முதலிடம் பெறுகிறது. நுகர்வோர் துறையிலும் அகில இந்திய அளவில் தமிழகம் முதலிடம் பெற்றுள்ளது.

''கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள் தற்போது 9 உள்ளன. விரைவில் 10வது பயிற்சி நிலையம் சாத்தூர் அருகே உருவாக இருக்கிறது.

''சென்னையிலுள்ள தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்துக்கு ரூபாய் 1 கோடியே 30இலட்சம் செலவில் புதிய கட்டடம் உருவாக்க் கொண்டிருக்கிறது.

''கிராமங்களுக்குக் கூட்டுறவு அதிகாரிகளை அனுப்பி அங்குள்ள மக்களிடம் கூட்டுறவுத் தத்துவங்களையும் கொள்கைகளையும் எடுத்துக் கூறி வருகிறோம்.

''தமிழகம் முழுதும் ஒன்றியத்திற்கு 840 கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. மொத்தம் 1½ இலட்சம் உறுப்பினர்கள் இருக்கின்றனர்.''

முதலில் திருவல்லிகேணியில் உள்ள டி.யு.சி.எஸ். கூட்டுறவுப் பண்டகசாலைக்குச் சென்றோம். அங்குள்ள சுயசேவைப் பிரிவு மனத்தைக் கவர்ந்தது. அங்கே இல்லாத பொருள் இல்லை. பலசரக்குப் பொருள் முதல் எவர்சில்வர் பாத்திரம் வரை எல்லாம் அந்த நிறுவனத்தில் கொலுவீற்றிருக்கின்றன.

''இந்தச்சுயசேவைப் பிரிவைப் பொதுமக்கள் மிக்க ஆர்வத்துடன் வந்து பயன்படுத்துகிறார்கள். விற்பனையும் தினமும் அதிகரித்து வருகிறது'' என்று குறிப்பிட்டார், தனி அலுவலர் திரு ஆர்.எஸ்.நடராஜன்.

அடுத்து செம்புதாஸ் தெருவில் உள்ள சென்னைத் துறைமுகப் பணியாளர் கூட்டுறவு வங்கிக்குச் சென்றோம். அதன் செயலாளர் திரு ஜி. சண்முகசுந்தரம் அளித்த தகவல்கள்:

''1987இல் பொன் விழாவைக் கொண்டாட இருக்கும் இந்த வங்கியில் மொத்தம் 1,150 உறுப்பினர்கள் உள்ளனர். சென்னைத் துறைமுகத்தில் நிரந்தரம் செய்யப்பட்ட அனைத்துத் தொழிலாளர்களும் இந்த வங்கியில் உறுப்பினராகச் சேர்ந்து கடன் பெறலாம்.

''தொழிலாளர்கள் வங்கிகளைப் பொறுத்தவரை, இது முதல் தரமாக-அதாவது ஏ பிரிவு வங்கியாக விளங்குகிறது. பல வகைப்பட்ட சேமிப்புத் திட்டங்களை இந்த வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது.

“குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் உறுப்பினருக்கு ரூ.1000 சாதாரண வட்டிக்குக் கடனாகக் கொடுத்து வருகிறது இந்த வங்கி. அசலை, உறுப்பினர்கள் 20 தவணைகளில் செலுத்தலாம். தமிழ்நாட்டிலேயே குடும்ப நலத் திட்டத்திற்காக இந்த வங்கிதான் முதன் முதலாகக் கடன் வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

“நுகர்வோர் கடனாக ரூ.3500 வழங்கப்படுகிறது. இதற்கு14.2% வட்டி வசூலிக்கப்படுகிறது.''

அடுத்து, புரசவாக்கத்தில், தந்தை பெரியார் நெடுஞ்சாலையிலுள்ள புரசவாக்கம் கூட்டுறவு வங்கிக்குச் சென்றோம். வங்கித் தலைவர் டாக்டர் கே.வெங்கட்ராம் அளித்த தகவல்கள்:



''1924இல் 36 உறுப்பினர்களுடன் தொடங்கப்பட்ட இந்த வங்கி தற்போது 11,875 உறுப்பினர்களைப் பெற்றிருக்கிறது. தொடக்கத்தில் 63 ரூபாய்தான் மூலதனம்; தற்போது 3 கோடி ரூபாய்க்கு மேல் நடைமுறை மூலதனம் உள்ளது.

''1966 வரை வீட்டு அடமானக் கடன்களை வழங்கி வந்தது. பின்னர் நகைக் கடன்களை வழங்கத் தலைப்பட்டது. தற்போது, சிறுதொழில் புரிவதற்கும், ஆடு மாடு, கோழி, பன்றி வளர்ப்பதற்கும், சுயதொழில் புரிவோர்களுக்கும் 25 ஆயிரம் ரூபாய் அளவில் கடன்கள் வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் சிறப்பாகச் செயல்படும் வங்கி என மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்ட பெருமை இந்த வங்கிக்கு உண்டு. 1970-71இல் 27 ஆயிரம் ரூபாய் நட்டத்தில் இயங்கிய இந்த வங்கி தற்போது ஆண்டுக்கு 7 இல்ட்ச ரூபாய் இலாபத்தை ஈட்டி வருகிறது.''

அடுத்து, வேப்பேரி, ரிதர்டன் தெருவில் இயங்கி வரும்சென்னை நகர கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்திற்குச் சென்றோம்.

1912இல் சென்னைக் கூட்டுறவு வங்கி லிமிடெட் என்ற பெயரில் 22 உறுப்பினர்களுடன் தொடங்கப்பட்ட இந்த நிறுவனம் தொடக்கத்தில் வங்கிப் பணிகளையே செய்து வந்திருக்கிறது. பின்னர், சென்னை மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியுடன் இணைக்கப்பெற்று அதனிடமிருந்து நிதி உதவி பெற்றது. நகைக் கடன்களையும் வீட்டு அடமானக் கடன்களையும் வழங்கத் தொடங்கிற்று.

1959இல் ஆரம்பக் கூட்டுறவு வீட்டு அடமான வங்கி ஒன்று நிறுவப்பட்டு. அது வீட்டு அடமானக் கடன்களை வழங்கி வந்தது. இந்த வங்கியிடமிருந்து மேற்படி சங்கம் கடன்பெற்று, வீட்டு உரிமையாளர்களுக்குக் கடன் உதவி செய்யத் தொடங்கியது. தனது 50 ஆவது ஆண்டில் வங்கி பொன் விழாவைக் கொண்டாடியதுடன், சென்னை நகர கூட்டுறவு வீட்டு அடமானச் சங்கம் என்று தனது பெயரையும் மாற்றி அமைத்துக் கொண்டது. பின்னர் 1975 இல் சென்னை நகர கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் லிமிடெட் என்ற பெயரைச் சூட்டிக் கொண்டது.

கூட்டுறவு வீடுகளின் பதிவாளர் திரு. வைத்தியலிங்கம் தெரிவித்த தகவல்கள்:

''இந்தச் சங்கம் தனது உறுப்பினர்கள் புதிதாக வீடு கட்டிக் கொள்வதற்கும், பழைய வீடுகளைப் புதுப்பித்துக் கொள்வதற்கும் புணம் கடனாகத் தந்துதவுகிறது. உச்ச கட்டமாக 80 ஆயிரம் ரூபாய் வரை கடன் கொடுக்கப்படுகிறது.

''கிராமப் புறங்களில் உள்ள பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களுக்கு - அதாவது மாத வருனம் 350 ரூபாய்க்கு மிகாமல் உள்ளவர்களுக்கு வீடு கட்டக் கடன் உதவி செய்வதில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளது. இந்த வகையில் ஆண்டுக்கு 5 ஆயரம் வீடுகள் கட்டுவது இதன் இலட்சியம். ஆனால் இந்த ஆண்டு மாண்புமிகு முதலவர் டாக்டர் எம்.ஜி.ஆா அவர்கள் ஆண்டுக்கு 40 ஆயிரம் வீடுகள் கட்டப்பட வேண்டும் என்று ஆணையிட்டுள்ளார். அந்த ஆணையை நிறைவேற்றும் பணியில் இச்சங்கம் ஈடுபட்டுள்ளது.

''பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்கள் வீடு கட்டுவதற்கு 4,500 ரூபாய் கடன் வழங்கப்படுகிறது. இதில் 3,000 ரூபாயை ஹட்கோ நிறுவனமும், 1,000 ரூபாயை அரசும் வழங்குகின்றன.

''இந்தத் தொகை 20 வருடங்களில் திருப்பித் தரப்பட வேண்டும். இதற்கு வட்டி 8.25% தான். மாதத்திற்கு 45 ரூபாய் கட்ட வேண்டும். இதுவரை இந்த வகையில் 2 இலட்சத்து 18 ஆயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.''



டி.யு.சி.எஸ். சுயசேவைப் பிரிவு.



அடுத்து, எழும்பூர் கெங்கு ரெட்டி தெருவில் உள்ள தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டோம்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பார்வையில் செயல்படுகிறது இந்த இணையம்.

இணை இயக்குநர் திரு எம். முனுசாமி தெரிவித்த தகவல்களாவன:

''பனைமரத்தின் ஒவ்வொரு பகுதியும் நமக்குப்பயன்படுகிறது. இந்தியாவில் மொத்தம் 8.59 கோடி பனைமரங்கள் உள்ளன. இவற்றில் தமிழ்நாட்டில் மட்டும் 5.01 கோடி.

''பனை வெல்லத்தில் தயாரிக்கப்பட்ட பான வகைகளுக்கு மக்களிடையே நல்ல வரவேற்பு உள்ளது.

''அமெரிக்கா, இங்கிலாந்து உட்பட 14 நாடுகளுக்கு 1964 முதல் பனந்தும்பு ஏற்றுமதி செய்யப்படுகிறது. நுவரை 7 கோடியே 38இலட்ச ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டுக்கு மட்டும் 80 இலட்ச ரூபாய்க்கு ஆணை வந்துள்ளது.''

கூட்டுறவு வார விழா தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்ட பத்திரிகையாளர் சுற்றுலா -அனைவரின் கூட்டுறவின் காரணமாக - வெற்றிகரமாகவும் பயன்மிக்கதாகவும் முடிவடைந்தது என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட வேண்டும்.

—நமது செய்தியாளர்

# நூல் நயம்

## உணர்ச்சிகள் உருவாக்கும் உடல் நோய்கள்

### சிகிச்சையும் தடுப்பு முறையும்

ஆசிரியர்: டாக்டர் தி.ஜெயராம கிருஷ்ணன்
பு.ஜெயச்சந்திரன்

வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
41பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 098

விலை: ரூ. 25 பக்கம்: 240

'உணர்ச்சிகள் உருவாக்கும் உடல் நோய்கள்' எனும் இந்நூல் மனித உணர்வுகளையும் உணர்வுகளின் வழி வரும் நோய்களையும் அவை நீக்கப்பட வேண்டிய முறைகளையும் மிகத் தெளிவாக-எளிமையாக அழகுபட எடுத்துக் கூறுகிறது.

மனிதனின் குழந்தைப் பருவம் முதல் ஒவ்வொரு நிலையிலும் அவன் மனமும் உடலும் வளர்கின்ற முறைகளை அவற்றின் மாறுதல்களைச் சுவைபடக் குறிக்கின்றனர் ஆசிரியர்கள்.

அகமனம், அச்சநோய், அதிகார உருவம், அதீத கற்பனை, அதீதப் பணிவு, எண்ணம், ஆவேசம், இருமனப்போக்கு, இழப்பீடு, ஈகோ, உந்தல், உணர்ச்சியற்ற நிலை முதலியன நன்கு விளக்கப்பட்டுள்ளன.

தாயின் அரவணைப்பு குறைந்தால் - தாயை இளமையில் இழந்தால் ஏற்படும் குறைகளையும், தாழ்வு மனப்பான்மை பற்றியும் சிறப்பாகச் சொல்லப்பட்டுள்ளது.

பிராய்டின் மன ஆய்வுக் கொள்கைப்படி பிரிக்கப்பட்ட, புறமனம், நடுமனம், அகமனம் மூன்று. அவை தொடர்பான செய்திகளும் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளன.

பெற்றோர், ஆசிரியர் முதலியோரிடம் ஏற்படும் கோபம், எதிர்ப்பு, வெறுப்பு முதலியவற்றை நேரடியாக வெளிக்காட்ட முடியாதபோது தம் உணர்வுகளை வயிற்றுவலி, வாந்தி, குமட்டல், அஜீரணம், உண்ண மறுத்தல் போன்ற செயல்கள் மூலம் வெளிப்படுத்துகின்றன குழந்தைகள். இவ்வுணர்ச்சிக் கட்டுப்பாடுகள் பின்னர் அவர்கள் வாழ்க்கையை எந்த அளவு பாதிக்கின்றன என்பதையும் இந்நூல் சிறப்பாகப் புலப்படுத்துகிறது.

ஒவ்வொரு நோய் தோன்றுவதற்கும் உடலியல் காரணங்கள், உளவியல் காரணங்கள் சொல்லப்பட்டுள்ளன.

ஆண்-பெண் மனநிலை, பாலுணர்வில் அதிக விருப்பம் கொள்ளுதல், அல்லது ஆர்வமின்மை, ஆண்மைக் குறைவு, இவற்றின் காரணம், விளைவு அனைத்தும் குறிக்கப்பட்டுள்ளன.

மன ஆய்வு மருத்துவம், மனோவசிய மருத்துவம், குழுவழி-குடும்ப வழி மருத்துவம் முதலிய உளவியல் மருத்துவங்களும் இந்நூலில் உண்மையிலேயே கற்போர் உள்ளங்களை ஈர்க்கும் வகையில் எழுதப்பட்டுள்ளன.

இத்தகைய அருமையான நூலை எல்லோரும் படித்துப் பயன்பெற வேண்டும்.

—டாக்டர் சிவஅரசி
முத்துக்காளத்தி

## நிகழ்ந்த கதைகள்

ஆசிரியர்: லஷ்மி
வெளியீடு: பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர்,
சென்னை -600 004.

விலை: ரூ.23 பக்கம்: 307

முப்பத்தோரு சிறுகதைகள் கொண்ட தொகுப்பு இது. பெண் இனம் கொடுமைக்கு ஆளாகிய நிகழ்ச்சி ஒவ்வொரு கதையிலும் வர்ணிக்கப் பெற்றிருக்கிறது. பெண்இனம் ஆண்களால் வஞ்சிக்கப்பட்டு வருவதை இந்தக் கதைகள் எடுத்துச் சொல்கின்றன. ஒவ்வொரு பெண்ணின் வாழ்வில் ஒவ்வொரு விதமான சஞ்சலம் சூழ்ந்திருப்பதை இக்கதைகள் தெளிவாக்குகின்றன.

ஒரு கதையில் கணவன் அயோக்கியனாக இருக்கிறான்; மற்றொரு கதையில் மாமியார் கொடுமைக்காரியாகக் காட்சி தருகிறாள். மற்றொரு கதையில் பக்கத்து வீட்டு மனிதன் வில்லனாக வந்து கெடுதலை உண்டுபண்ணுகிறான். இப்படி, பெண் இனத்துக்குக் கொடுமை செய்பவர்கள் உலகெங்கும் இருக்கிறார்கள். அத்தகைய கொடுமையாளர்கள் மத்தியிலே போராடி, வெற்றி பெற்று வாழ்க்கையைச் சீராக்கிக் கொள்ளும் பெண்களும் இருக்கின்றனர் என்பதை இந்தச் சிறுகதைகளின் வாயிலாக உணர முடிகின்றது.

படிப்பு, பல பெண்களுக்குக் கைகொடுத்துள்ளது என்றும், துணிவு பல பெண்களுக்கு நல்ல வாழ்க்கையை ஏற்படுத்தியுள்ளது என்றும், வைராக்கியம் பல பெண்களுக்கு முன்னேற்றத்தை உருவாக்கியுள்ளது என்றும் நூலாசிரியர் தமது அனுபவத் திறன் கொண்டு நிறுவியிருக்கிறார்.

பெண்களால் ஏமாற்றப்பட்ட சில ஆடவர்களின் கதைகளும் இதில் உள்ளன.

'வாழ்க்கைவாழ்வதற்கே' என்ற கதை - காதலில் தோல்வியுற்ற வாலிபனுக்கு அவனது தந்தையே ஆறுதல் சொல்லி, அவனை நல்வழிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

இக்கதையில் வரும் அருண் மட்டுமல்ல-காதலிலே தோல்வியுற்ற, கண்கலங்கும் ஒவ்வொரு இளைஞனும் கலக்கம் நீங்கி மன வலிவு கொள்வதற்கு இந்தக் கதைகள் உதவும்.

ஒவ்வொரு கதையும் ஒரு வைர மணி; இனிய நடை-சுவையான சம்பவப் பிணைப்பு அனைத்தும் இந்நூலுக்குச் சிறப்புச் சேர்க்கின்றன.

## குத்தகைகள் சட்ட விளக்கம்

ஆசிரியர்: சோ.சேசாசலம்,

வெளியீடு: நர்மதா பதிப்பகம்,
10, சோமசுந்தரம் தெரு,
தியாகராயநகர், சென்னை17

விலை ரூ. 5 பக்கம்: 64

ஒருவர், தமது வீட்டை மற்றொருவருக்குக் குத்தகைக்கு விடுகிறார்; ஒருவர், வயலைக் குத்தகைக்கு விடுகிறார்; மற்றொருவர் தமது நிறுவனத்தைக் குத்தகைக்குவிடுகிறார். சில ஆண்டுகள் கழித்து அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறார். ஒருசில நேரங்களில் திரும்பப் பெற முயலும்போது, குத்தகைதாரர் திருப்பித் தர மறுக்கிறார். அப்போது குத்தகைக்குக் கொடுத்தவர் வழக்கு மன்றத்திற்குச் செல்கிறார். குத்தகை விஷயத்தில் இது போன்று பல பிரச்சினைகள் எழுவதுண்டு. அவற்றைப் பற்றித் தெரிவிக்கிறது இந்நூல்.

குத்தகை என்றால் என்ன, விளை நிலமாக இருந்தால் எத்தனை ஆண்டுக் காலம் குத்தகைக்கு விடலாம், கட்டடமாக இருந்தால் எத்தனை ஆண்டுகளுக்குக் குத்தகை விடமுடியும், குத்தகைச் சட்டம் எந்த ஆண்டு ஏற்பட்டது, குத்தகைக்கு விடுபவரின் கடமைகள், உரிமைகள் யாவை, குத்தகைதாரரின் உரிமைகள், கடமைகள் யாவை என்ற விவரங்களை ஆசிரியர் தெளிவாக விளக்கியிருக்கிறார்.

குத்தகைக்கும் லைசன்சுக்கும் உள்ள வேற்றுமை குறித்தும் விளக்கியிருக்கும் நூலாசிரியர் சில முக்கிய வழக்குகளைச் சான்று காட்டி, குத்தகையின் சிறப்பம்சங்களை எடுத்துரைத்திருக்கிறார். பயனுள்ள நூல் இது.

## உங்கள் மாடு சினைப் பிடிக்காதது ஏன்?

ஆசிரியர் டாக்டர்.பி.போத்தி
வெளியீடு: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
41-பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-690098

விலை ரூ.7.50 பக்கம் 67

மாட்டின் இன உறுப்புகளில் துவக்கி, எவ்வாறு அவை கருவுறுகின்றன, கரு வளர்ச்சி, மலட்டுத் தன்மை, கருப்பைக் கோளாறுகள், இன உறுப்புக்களைத் தாக்கும் நோய்கள் கருச்சிதைவு, செயற்கை முறை இன விருத்தி, நோய்கள் அவற்றுக்கான மருத்துவம், சோதனைக் குழாய் கன்றுகள் என்று மிக விரிவாகத் தெளிவான படங்களுடன் மாடுகள் சினைபிடிப்பது பற்றி எழுதப்பட்டிருக்கிறது.

இரண்டு வயதில் சினைப் பிடித்து முதல் கன்று ஈனும் மாடு சுமார் எட்டு ஆண்டுகள் தொடர்ந்து கன்று ஈன்று பால் தர வல்லது.

ஆனால் மாடுகள் சினைப் பிடிக்காமல் காலம் தாழ்த்தினால் அவற்றை வளர்ப்பவர்களுக்குப் பெரும் பொருளாதார இழப்பு ஏற்படும்.

இந்நூலில் சினைப்பிடிக்காமல் இருக்கும் காரணங்கள், அவற்றைப் போக்கும் வழிகள் ஆகியவை விவரிக்கப்பட்டிருக்கின்றன.

பால் மாடுகள் வளர்த்துப் பிழைப்போருக்கு இந்நூல் பெரிதும் பயன்படும்.

—அ. மருதவிநாயகம்.

## சோவியத் நட்புறவுப் பயணம்.

ஆசிரியர்:
திரு செ. அரங்கநாயகம்,
முன்னாள் கல்வி அமைச்சர்,

வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
41, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை98

விலை: ரூ.7.00 பக்கம் 96

சோவியத் நாட்டில் நடைபெற்ற நட்புறவு விழாவில் கலந்து கொள்ளச் சென்ற இந்திய, சோவியத் கலாசாரக் கழகத்தின் தூதுக் குழுத் தலைவராகப் பயணம் மேற்கொண்ட முன்னாள் தமிழகக் கல்வி அமைச்சர் திரு செ.அரங்கநாயகம் அவர்கள் எழுதியுள்ள பயண நூல்.

சோவியத் நாட்டில் பிரமுகர்கள் பார்க்கும் வழக்கமான பல இடங்களை ஆசிரியர் சுற்றிப் பார்த்தாலும், கிழக்கு சைபீரியப் பகுதியில் சுற்றுப் பயணம் செய்த முதல் இந்தியத் தூதுக் குழுவின் தலைவர் இவர் தானாம்.

தான் கண்ட விஞ்ஞானக் கூடங்கள், அருங்காட்சியகங்கள், சோவியத் கல்வி முறை, புகழ் பெற்ற பைகால் ஏரி, பயனீர் இயக்கம், காயிகாத் திட்டம், தொழிற்சாலைகள், மாணவர்கள் பணியாற்றும் தொழிற்சாலைகள், கிராம, நகர மக்களின் முன்னேற்றம் ஆகியவற்றைத் தெளிவாக எளிய நடையில் விவரித்து இருக்கிறார் ஆசிரியர்.

இந்நூலில் ஒவ்வொரு துறையிலும் அரசின் அணுகுமுறைகளையும், நிர்வாகத் திறமையையும் ஆசிரியர் பாராட்டியுள்ளார்.

—அ.ம

**நாணயங்கள்**

விலங்குகள் சில வரன்முறைகட்கு உட்பட்டே வாழ்கின்றன. வரன்முறைகளோடு வாழ்வதே நாணயம். எனவே 1986ஆம் ஆண்டில் உலக வனவிலங்கு நிறுவன (World Wildlife Fund) த்தின் வெள்ளி விழாவினையொட்டி அதன் நினைவாக அந்தந்த நாட்டுச் சிறப்பு விலங்குகள் உருவம் பொறித்த நாணயங்களை வெளியிட இருபத்தைந்து நாடுகள் முன்வந்து பல நாடுகள் அவ்வாறு வெளியிட்டும் விட்டன. 1985 நவம்பர்த் திங்களில் ஸ்விட்சர்லாந்தில் நடைபெற்ற விழாவில் இந்நிறுவனத்தின் தலைவரான மேன்மைதங்கிய டியூக் ஆஃப் எடின்பரோ அவர்கட்கு முதல் நாணயம் அளிக்கப்பெற்றது. 1986 ஏப்பிரல் முதல் மேற்கு ஜெர்மனியிலிருந்து இந்நாணயங்கள் விற்கப்படுகின்றன. இது பற்றி மேலும் விளக்கம் வேண்டுவோர் (Editor, World Wildlife Fund, India Lalbaug Parcel, Bombay-12) என்ற முகவரிக்கு எழுதிப் பெறலாம்.

தாமரை

நன்றி கலைக்கதிர்

## நமது காசுகள்

ஆசிரியர்: திருமதி ரமாவேல்சாமி
வெளியீடு; நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், பிரைவேட் லிமிடெட்
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை-600098.

விலை. ரூ. 25 பக்கம்: 220.

ஒருவனை வாழ வைப்பதும், வறுமையில் ஆழ்த்துவதும் நாணயம்தான். மனிதனுடைய நாணயமே 'நாணயத்தில்' தான் உள்ளது. எனவே நாணயம் நாளும் நம்மை வாழவைக்கும் ஒரு அத்தியாவசியப் பொருளாகும்.

நாணயம்-காசுகள் இவற்றின் வரலாறுகள் சுவையானவை. ஒவ்வொருவரும் அவசியம்தெரிந்து கொள்ள வேண்டியவை. அந்த நோக்கில் இந்நூல் எழுதப்பெற்றுள்ளது.

காசுகளின் வரலாறு, வகை, பயன்பாடு, அவை எவ்வாறு தோன்றின -அவற்றின் வளர்ச்சி முதலான குறிப்புகள் இந்நூலில் ஒழுங்காகத் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. பல்வேறு நாணயங்களின் படங்களும், நாணயக் கலைச் சொற்களும் நூலில் சேர்க்கப்பட்டுள்ளன, நாணயங்கள்பற்றி ஆராய்வார்க்கும், நாணயங்கள் சேகரிப்போர்க்கும் இந்நூல் சிறந்த கையேடு. பயனைத் தருகின்ற நூல்.

—பி.வி. கிரி



# செங்கல்பட்டு மாவட்டத்தில் நவீனப்படுத்தப்படும் ஏரிகள்

பாசனத்திற்கும், குடிப்பதற்கும் பெரும்பாலும் ஏரிகளையும் கிணறுகளையும்தான் மக்கள் பெரிதும் நம்பி வருகின்றனர். மழைக் காலங்களில் வீணாகப் போகும் தண்ணீரைத் தேக்கி வைத்துச்சாகுபடிக்குப் பயன்படுத்தி அரசு பெருமுயற்சி செய்து வருகிறது. பெரும்பாலும் ஏரி, குளங்கள் நிரம்பினால்தான் கிணறுகளில் ஊற்று எடுத்து மேலே வர வாய்ப்பு உள்ளது.

ஏரிகளும், குளங்களும் நாளடைவில் தூர்ந்து போகின்றன. எனவே தூர் எடுத்து, கரைகளையும் பலப்படுத்தப்பட வேண்டும். எனவேதான் தமிழ் நாட்டில் செங்கற்பட்டு, தென்ஆர்க்காடு, வடஆர்க்காடு, புதுக்கோட்டை, மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் 100 எக்டேருக்கு மேலும் 200 எக்டேருக்கும் குறைவான பாசன பரப்புள்ள 150 ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் ஐரோப்பிய பொருளாதார கூட்டமைப்பு உதவியுடன் எடுத்துக் கொள்ளப்பட்டு துரிதமாக இயங்கி வருகிறது. செங்கற்பட்டு மாவட்டத்தில் துவக்கப்பட்ட இரண்டு பொதுப் பணித்துறை கோட்டங்களில் இக்கோட்டமும் ஒன்றாகும். சென்னையில் மற்றொரு கோட்டமும் இயங்கி வருகிறது.

செங்கற்பட்டு மாவட்டம், காஞ்சிபுரம் வட்டத்திலுள்ள 16 ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் ஏரிகளின் கரைகளை

**மூர்த்தி**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**காஞ்சிபுரம்.**

செப்பனிட்டு நிர்ணயிக்கப்பட்ட மட்டத்திற்கு கொண்டு வருதல், வாய்க்கால்களை சீர்படுத்துதல், மற்றும் பாசன வாய்க்கால்களில் 10 எக்டேர் நிலப்பரப்புக்கு மிகாத பிரிவுகள் வரை அகவறை செய்தல், ஏரியில் உள்ள மதகுகளை திருகாணி கதவு அமைப்புகள் கொண்ட மதகுகளாக நவீனப்படுத்துதல், தடுப்பு அறைகள் கட்டுதல், கலங்கள் கட்டுதல் முதலிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் விவசாயப் பொறியியல் துறையினரால் 10 எக்டேர் நிலப்பரப்பிற்கு உட்பட்ட பிரிவுகளைச் சேர்ந்த சிறிய வாய்க்கால்களை, அகவறை செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



காஞ்சிபுரம் வட்டத்தில் கீழ்க்காணும் ஏரிகளின் மதிப்பீடுகளுக்கு ஏரிகள் நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் செயல்படுத்த அரசு அங்கீகாரம் அளித்துள்ளது.

| | | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | வையாவூர் ஏரி | 26.95 |
| 2. | ஓலையூர் ஏரி | 26.15 |
| 3. | புத்தகரம் ஏரி | 25.90 |
| 4. | கள்ளிப்பட்டு புத்தகரம் ஏரி. | 09.53 |
| 5. | கலியனூர் ஏரி | 15.90 |
| 6. | சேக்கான்குளம் ஏரி | 12.80 |
| 7. | நாய்க்கன்குப்பம் ஏரி | 15.28 |
| 8. | தெம்மானூர் புத்தேரி | 26.95 |
| 9. | கம்பராஜபுரம் பெரிய ஏரி மற்றும் சித்தேரி | 29.32 |
| 10. | வில்லிவலம் ஏரி | 15.84 |
| 11. | மருதம் ஏரி | 13.00 |
| 12. | மாகரல் ஏரி | 30.64 |
| 13. | கீழக்காட்டூர் ஏரி | 28.50 |
| | மொத்தம் | 276.76 |

◉ மனிதன் என்றால் வெறும் அறிவு மாத்திரமல்ல; அல்லது ஸ்தூல உடலுமல்ல; உணர்ச்சியா என்றால் அதுவுமில்லை. அறிவு, உடல், உணர்ச்சி ஆகிய மூன்றும் அழகிய முறையிலே ஒன்றுகூடினால்தான் மனிதனாகிறான். இம்மூன்றையும் வளர்ப்பதே உண்மையான கல்வி முறையாகும்.

◉ உண்மையும் அகிம்சையும் மனித சமூகத்தை விட்டு விட்டுத் தனியாக உட்கார்ந்து கொண்டு அனுஷ்டிக்க வேண்டிய அறங்களல்ல. அவை மனிதவர்க்கம் தினசரி வாழ்க்கையில் உபயோகிக்க வேண்டிய அறங்களாகும்.

◉ பாடசாலைகளும், கல்லூரிகளும் புனிதமான நிலையங்கள், அங்கே புனிதத்தன்மையற்ற இழிவான எந்தச் செயலுக்கும் இடமில்லை. பாடசாலைகளும், கல்லூரிகளும் தொழிற்சாலைகள். அங்கே சிறந்த பண்பு வாய்ந்த மனிதத்தன்மை என்னும் அரிய பொருள் உற்பத்தி செய்யப்படுகிறது.

**—அண்ணல் காந்தியடிகள்**

மேலும் கீழ்க்காணும் மூன்று ஏரிகளுக்கு அரசு அங்கீகாரம் பெறும் நிலையில் உள்ளது.

| | | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | சிறுகாவேரிப்பாக்கம் ஏரி | 20.00 |
| 2. | வேலத்தோட்டம் ஏரி | 20.00 |
| 3. | கீழப்பெருமாநல்லூர் ஏரி | 20.00 |

மேற்கண்ட 16 ஏரிகளின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 336.76 இலட்சமாகும். இதுவரையில் மேற்கண்ட ஏரிகள் நவீனப்படுத்தும் பணிகளுக்கென ரூ. 132.17 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

ஏரிகள் நவீனப்படுத்தும் பணிகள் 1984-85 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன. இவை 1987-88 ஆண்டு முடிவடையும்.

இத்திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட்ட உடன் குறைந்த நீர் பங்கீட்டுடன் நிறைந்த மகசூல் பெற வழி வகுக்கும்.

செங்கற்பட்டு மாவட்டத்தைப்பொறுத்தவரை இன்னும் 5 ஆண்டுகள் கழித்து பார்த்தோமானால் எங்கும் பச்சைபசேல் எனும் வயல்காடுகள்தான் நம் கண்ணுக்குத் தென்படும். பயிர் விளைச்சலில் செங்கற்பட்டு மாவட்டம் தன்னிறைவுபெற்றுவிடும் என்பதில் ஐயமில்லை. மக்களும் சுபீட்சமாக வாழ வழியுண்டு. மிகுதியாகும் நெல்லைப் பிற மாவட்டங்களுக்கு அளிக்கவும் வாய்ப்புண்டு.





# வளமான வாழ்வுக்கு வழிகாட்டும் வங்கி



வளமான வாழ்வுக்கு வழிகாட்டும் வங்கி
தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி!
தாய்மையின் தனிப்பரிவுடன் உங்கள் சேமிப்பு எங்களிடம் பூரிப்புடன் வளர்கிறது!

உங்களது அனைத்து சேமிப்புகளுக்கும் ½% கூடுதல் வட்டியும் கிடைக்கிறது.

மக்களுக்கேற்ற வங்கி—
தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி.

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.,
233, என்.எஸ்.சி. போஸ் சாலை,
சென்னை-600 001

TNSC BANK TNSC—வாழ்வுக்கு வளமூட்டும் வங்கி

TNSC-BANK/166




# சுற்றுப்புறச் சுகாதாரம்

'உலகச் சுற்றுப்புறச் சூழ்நிலை நாள்' ஆண்டுதோறும் ஜூன் 5-ஆம் நாளன்று உலகெங்கும் அனுசாிக்கப்படுகின்றது.

1972 ஜூன் மாதம் 5 ஆம் நாளில்தான், ஐ. நா. பொதுச் சபையின் உறுப்புநாடுகள் முதன் முறையாக ஸ்டாக்ஹோம் நகரில் கூடி, உலகில், சுற்றுப்புறச் சூழ்நிலை கெடுவதற்கான காரணங்கள் பற்றிக் கலந்துபேசின.

இந்தியப் பிரதமராயிருந்த திருமதி இந்திராகாந்தி அவர்களும் அக்கூட்டத்திலே கலந்து கொண்டார். சுற்றுப்புறச் சூழ்நிலைப் பிரச்னைகள் பற்றிய தனது ஆழ்ந்த கவலையை அக்கூட்டத்தில் நிகழ்த்திய உரையிலே அவர் தெரிவித்தார்.

வளரும் நாடுகளிலுள்ள சுற்றுப்புறச் சூழல் பிரச்னைகள், போதிய அளவுக்கு மேம்பாடு அடையாத சூழ்நிலைகளாலேயே ஏற்படுகின்றன என்கிற உண்மையை ஐ.நா. மனிதச் சுற்றுப்புறச் சூழல் மாநாடு வலியுறுத்தியுள்ளது. குடிநீர் வசதி, வீட்டுச் சுகாதார வசதி, எரிபொருள், போக்குவரத்து, தொலைத் தொடர்புத்துறை, மருத்துவப் பாதுகாப்பு முதலியவை மிகக் குறைவாகக் கிடைப்பதனால்தான் சுற்றுப்புறச் சூழல் பிரச்னைகளே தோன்றுகின்றன.

இப்பிரச்னைகளைச் சமாளிக்க, மேம்பாடு என்பது ஓர் அத்தியாவசிய முன்தேவை.

தொழில்நுட்ப உபயோகம், பொருளாதார வளர்ச்சிக்கான வழக்கமான முறை போன்றவை இப்பிரச்னைகளைத் தீர்ப்பதன்றித் தீவிரப்படுத்தவே செய்யும் என அறியப்படுகிறது.

இந்தியாவில், புதுடில்லியில் உள்ள விஞ்ஞானத் தொழில்நுட்பத் துறையின் சுற்றுப்புறச் சூழல் மற்றும் ஒருங்கிணைப்புக்கான தேசியக் குழு, மக்களுக்கு எவ்வகையில் சுத்தமான ஆரோக்கியமான சுற்றுப்புறச் சூழ்நிலையை அளித்திட முடியும் என்று தொழில்துறைக்கும் அரசுக்கும் நல்லபல ஆலோசனைகளைக் கூறி வருகின்றது.

மக்கள் தொகைக் கட்டுப்பாடு, பொதுவான சுற்றுப்புறச் சூழல் மேம்பாட்டுக்கு மிக முக்கியமானதாகும் என்று இக்குழு கருதுகிறது. காற்று, தண்ணீர், நிலம் ஆகியவற்றின் அசுத்தத்தைத் தடுப்பதற்காக—அனாவசியச் சப்தங்களைத் தவிர்ப்பதற்காக, குறிப்பாக நகர்ப்புறப் பகுதிகளில் அதிகமான மனிதக் குடியேற்றத்தை நிறுத்துவதற்கு ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் இக்குழுவானது வேண்டுகோள் விடுத்தது.

சுற்றுப்புறச் சூழ்நிலைபற்றி நாம் ஆராயப்புகுமுன் இவற்றையெல்லாம் முதலாவதாகக் கருத்திற்கொள்ள வேண்டும்.

சிறந்த வாழ்க்கைத் தரத்தை அளிக்கத் தொழில் மயமாக்குதல் வேண்டும் என்றாலும், அதனுடன் நீர் மற்றும் காற்று ஆகியவை அசுத்தமாவதைத் தடுக்கும் வகையில் கவனமாக நாம் திட்டமிட வேண்டியது மிகவும் ஆவசியம்.

இந்தியா இன்னும் வளரும் நாடாயிருப்பதால வளர்ச்சி அடைந்த நாடுகளைப் போல் சுற்றுப்புறச் சூழ்நிலைப் பிரச்னையில் கவனம் செலுத்த இயலாது என்று நாம் பின்னணியிலிருந்து குரல் கொடுப்பது கூடாது. உண்மையில், அவர்களது அனுபவத்திலிருந்து நாம் பாடம் கற்றுக்கொண்டு, தொழில் வளர்ச்சியில் நமது நாடு ஈடுபட்டுள்ளபோதே இதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது மிகவும் முக்கியம்.

இந்த அழிவைத் தடுக்க, பொது மக்களிடையே ஒரு உணர்வைத் தூண்டுவதைவிட சிறந்த நடவடிக்கை வேறொன்றும் இருக்க முடியாது.

**மாணவர் பக்கம் :**

# கேள்வியும் பதிலும்

**ஈயப் பாத்திரங்களை உபயோகித்துச் சமையல் செய்வது நலலதா?**

ஈயம் என்பது தனிப்பட்ட ஒரு உலோகத்தைக் குறிக்காது. வெள்ளீயமா (அதாவது Tin) அல்லது காரீயமா (அதாவது Lead) என்பதைச் சொல்ல வேண்டும்.

காரீயம் நச்சுத் தன்மை வாய்ந்தது. காரீயச் சேர்மங்கள் உடலில் கலந்தால் நாளடைவில் பெருத்த கேடுகள் விளையும். வெள்ளீயம் அப்படி அல்ல. அதனால்தான் வெள்ளீயத்தால் செய்த பாத்திரங்களைச் சிலர் உபயோகிக்கிறார்கள். முலாம் (கலாய்) பூசவும் வெள்ளீயமே பயன்படுகிறது. சிறு அளவில் இதன் உப்புக்கள் உடலில் கலந்தால் பரவாயில்லை. அதனால் தீமை இருப்பதாக நிரூபிக்கப்படவில்லை.

**ஈயத்தின் தன்மையை அதாவது நல்ல ஈயமா இல்லையா என்பதை எப்படிச் சுலபமாகக் கண்டுபிடிப்பது?**

அதாவது குறிப்பிட்ட உலோகம் வெள்ளீயமா, காரீயமா என்று கண்டுபிடிக்கப் பல சோதனைகள் உள்ளன. சுலபமாகச் செய்யக் கூடியது ஒன்று உண்டு. அந்த உலோகத் துண்டால் காகிதத்தில் எழுதிப் பார்க்க வேண்டும். காரீயமானால் கோடுகள் (பென்சில் கோடுகள் போல) விழும். வெள்ளீயமானால் கோடு விழாது.

**பென்சிலில் எழுதும் பகுதி காரீயத்தினால் ஆனதா? கரியால் ஆனதா? வைரம் கரியால் ஆனது என்பது உண்மையா?**

பென்சிலில் எழுதும் பகுதி ஆங்கிலத்தில் 'லெட்' என்று அழைக்கப்பட்டாலும் அது கரியால் ஆனதே. காரீயம் அல்ல. கிராபைட் என்ற கரி (Carbon) யின் ஒரு வடிவமே பென்சிலின் நடுவில் வைக்கப்படுகிறது. லெட் என்ற காரீயத்தைப் போல அது எழுதுவதால் 'லெட்' என்று அழைக்கப்படுகிறது. அவ்வளவு தான்.

கரி அதாவது கார்பன் பல வடிவங்களில் காணப்படுகிறது. அடுப்புக்கரி, கிராபைட், வைரம் எல்லாமே கார்பன்தான். இவற்றுள் முன் சொன்ன கிராபைட்டும், வைரமும் படிக அமைப்பு கொண்டவை. அதிலும் கிராபைட்டில் அடுக்கடுக்கான அணு அமைப்பு இருப்பதால் அது காகிதத்தில் எழுதக்கூடிய மென்மையைப் பெற்றுள்ளது. அதாவது ஒரு அணு அடுக்கு இன்னொன்றின்மேல சரிந்து கொடுக்கும் வகையில் இவை அமைந்துள்ளன. வைரத்தில் அப்படி அல்ல. மிகவும் பின்னிப் பிணைந்த ஒரு பெரிய அமைப்பு இருப்பதால் அது மிகவும் கடினமான பொருளாக இருக்கிறது. ஆனால் கிராபைட் வைரம் இரண்டுமே கரி என்ற கனிமம்தான். இவை தவிர கார்பன் - VI முதலிய வேறு சில கார்பன் வகைகளும் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றின் படிக அமைப்பு ஆராயப்பட்டு வருகிறது.

நன்றி 'வானொலி'

## அறிவுச் செய்திகள்

- சைக்கிள் எனும் சொல் 1870-இல் தான் முதன் முதல் பயன்படுத்தப்பட்டது.
- உலகில் முதன்முதல் மனிதனை ஏற்றிச் சென்ற நீராவி வண்டி 1801-ஆம் ஆண்டு இங்கிலாந்தில் 'கார்ன்வால்' எனுமிடத்தில் ஓடியது.
- புகைவண்டிப் பாதையைக் கண்டுபிடித்தவர் இங்கிலாந்தைச் சேர்ந்த 'ரிச்சர் டிரிவித்திக்'
- உலகிலேயே பாலஸ்தீனத்திலுள்ள 'Dead Sea' எனப்படும் சாக்கடலில்தான் உப்பு மிக அதிகமாக உள்ளது.
- கடலில் 25,000-க்கும் மேற்பட்ட மீன் இனங்கள் வாழ்ந்து வருகின்றன.
- நியூயார்க்கிலுள்ள ஐ.நா. கட்டடத்தை கட்டி முடிக்க 6,80,00 000 டாலர்கள் செலவிடப்பட்டது.
- கோலாலம்பூர் என்றால் 'மண் மேடு' என்று பொருள்.

—த.சீ. பாலு

## ஒருமைப்பாடு



——கவிஞர் அ. சுப்பையன்

ஒருமைப் பாடு உணர்வு வேண்டும்
ஒன்றி வாழும் தன்மை வேண்டும்!
அரவணைத்துச் செல்லு கின்ற
அன்பு உள்ளம் வேண்டும்; வேண்டும்!

சிறியோர் என்றும் பெரியோர் என்றும்
சிறிதும் பேதம் இன்றி நாளும்
பரிவுடன் சேர்ந்து வாழும் நல்ல
பக்குவம் பெற்றிடல் வேண்டும்; வேண்டும்!

இனத்தால், மொழியால், நிறத்தால் இன்று
ஏனோ இந்தப் பாகு பாடு?
குணத்தால், பண்பால், அன்பால் அன்றோ
குன்றென நிமிர்ந்து நிற்கலாம் என்றும்!

ஒருங்கி ணைந்து செய்யும் செயலே
உயர்த்தும் நம்மை ஒவ்வொரு நாளும்!
நெருக்கம் இன்றி நெருடல் கண்டு
நேரிய பாதை தவறுதல் ஏனோ?





# வியர்வை ஒரு வரப்பிரசாதம்

மனித உடம்பின் வெப்பநிலை எப்பொழுதும் ஒரே சீராக இருக்க வேண்டும. கோடைக் காலததில் அல்லது உடற்பயிற்சி செய்யும் பொழுது, உடம்பு அதிக உஷ்ணமடையும். அதைக் குறைப்பதற்காக, தோலின் அடிப்பாகத்தில் உள்ள வியர்வைச் சுரப்பிகள் வியர்வையைச் சுரக்கின்றன. இந்த ஈரம் தோலுக்கு மேலே வந்து ஆவியாகிறது. இதனால் உடம்பின் உஷ்ணநிலை ஒரே சீராக இருக்கிறது. இவ்வாறு வியர்வை, உடம்புக்கு ஒரு 'ஏர் கண்டிஷன்' வேலையைச் செய்கிறது.

இந்த வியர்வையினால் நன்மை கிடைப்பதைப் போலவே, சில சமயங்களில் தீமையும் விளைவதுண்டு. வியர்வை ஆவியாகாவிட்டால் காற்றிலுள்ள கிருமிகள் உடம்பில் வந்து தங்கி உபத்திரவத்தை உண்டாக்கும். ஒரு விதத் துர்நாற்றம் வீசும். பக்கத்தில் வருகிறவர்கள் துக்கத்தில் ஒதுங்கிடுவார்கள்.

இந்தத் துர்நாற்றம் வீசாமல் இருக்க, வாசனைத் திரவியங்களை உடம்பில் பூசிக்கொள்ளும் வழக்கம் பழங்காலத்திலிருந்தே இருந்து வருகிறது. வாசனைப் பொடிகளை அடிக்கடி முகரும் பழக்கமும் ரோமர்களிடையே இருந்து வந்தது.

இப்பொழுதெல்லாம், வியர்வையில் கிருமிகள் வந்து தங்கும் பொழுதே அவற்றை ஒழித்துக் கட்டப் பல கிருமி நாசினிகள் வந்துவிட்டன. இவற்றால் தோலின் வனப்போ, அமைப்போ பாதிக்கப்படுவதில்லை.

வியர்வை வெள்ளமாக உடம்பில் பாய்வதைத் தடுக்க, வியர்வை உறிஞ்சும் பவுடர்களும் பயன்படுத்தப்படுகின்றன. சட்டை, பனியன், ரவிக்கை போன்றவற்றில் வியர்வைக்கறை படியாமல் இருக்கவும் இந்தப் பவுடர்கள் உதவுகின்றன.

வியர்வையால் சொறி, சிரங்கு ஏற்படக்கூடும். வியர்வை, உடம்பில் சுரக்கும் இயற்கை எண்ணெய்ப் பசையை வெளியேற்றுவதால் இவ்வித நமைச்சலும், தோல் தடிப்பும் ஏற்படுகின்றன. கழுத்துப்பட்டை, முதுகு, அக்குள் போன்ற இடங்களில், ஆடைகள் உரசுவதால் அரிப்பும் எரிச்சலும் அதிகமாகும்.

தோலுக்கு மேலே வந்த வியர்வை காய்ந்து, வெள்ளையாகப் படைபோல் தோலில் படர்ந்துவிடும். இது வியர்வைத் துவாரங்களை அடைத்துக் கொண்டு, வியர்வை தோலுக்கு மேலே வராதபடி தடுக்கும். அதன் காரணமாக வேர்க்குரு கிளம்பிவிடும். இதனாலும சருமம் தனது நிறத்தையும் மிருதுத் தன்மையையும் இழக்கும். இதற்காகவும் இந்தக் காலத்தில் லோஷன்கள் பல விற்கின்றன. சந்தனத்தைக் குழைத்து உடம்பில் பூசினாலும் வேர்க்குரு, துர்நாற்றம் இவையெல்லாம குறைந்துவிடும். வியர்வைத் துவாரங்கள் அடைபட்டிருப்பதை நீக்கிவிட்டால், வியர்வை சுரந்து, ஆவியாகும் நிகழ்ச்சி ஒழுங்காக நடைபெறும். தோலுக்கு அடியில் வியர்வை சுரந்து, மேலே போக வழியில்லாமல் அடைப்பட்டுக் கிடக்கும் உபத்திரவம் நீங்கும்.

தோலில் இயற்கைத் திரவம் எப்பொழுதும் ஓரளவுக்குத் தங்கியிருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். அளவுக்கு அதிகமாக சோப்பு போன்றவற்றை உபயோகிப்பதால், தோல் ஈரம் வற்றிக் காய்ந்து, சொர சொரப்பாகிவிடும். ஆடைகள் அணியும்பொழுதும் மிக இறுக்கமாக அணியாமல், தளர்த்தியாக அணியவேண்டும். வியர்வையை ஓரளவு ஒத்தி எடுக்கக் கூடியதும், கிருமிநாசினியாகப் பயன்படக் கூடியதுமான பவுடர்களைக் கேட்டு வாங்கிப் பயன்படுத்துவதால், வியர்வை விளைக்கும் துர்நாற்றத்தையும், அரிப்பு எரிச்சலையும் போக்கி, உடம்பிலிருந்து நல்ல வாடை வீசும்படி செய்யலாம்.

இதற்கெல்லாம் பணம் செலவாகும். செலவில்லாமல் சுகம் பெறும் வழி, சோப்பு, பவுடர் எதுவும் பயன்படுத்தாமல், ஒரு நாளைக்குக் குறைந்தது இரு தடவை சுத்தமாகக் குளிப்பதேயாகும்!

— மு. மீனாட்சி



# இது உங்கள் பக்கம்!

**மாணவ மணிகளே !**

**இது உங்கள் பக்கம்.**

**இப்பகுதியில் நீங்கள் கதை, கட்டுரை. கவிதைகள், பொது அறிவுத் துணுக்குகள் முதலானவை எழுதி அனுப்பலாம். ஆனால் அவை உங்கள் சொந்தக் கற்பனையாக இருத்தல் வேண்டும். பொது அறிவுத் துணுக்குகளுக்கு ஆதாரம் இருத்தல் வேண்டும். கல்வியோடு பிற துறைகளில் திறமையுள்ள மாணவ, மாணவிகள் தங்களைப் பற்றிய குறிப்புடன், 'பாஸ்போர்ட்' அளவு புகைப்படத்தையும் அனுப்பி வைக்கலாம். அத்துடன் ஆசிரியரின் கையொப்பமும் அந்தக் குறிப்பில் இருத்தல் வேண்டும்.**

—ஆசிரியர்.

அமெரிக்கா போன்ற நாடுகளில் மொத்த மக்கள் தொகையில் இரண்டு சத வீதம் மட்டுமே உள்ள சமுதாயம், அமைப்பு நிறுவனம் ஆகியவை அரசின் முடிவுகள் மற்றும் மக்களின் உணர்வைத் தூண்டுதல் ஆகியவற்றில் ஈடுபட்டு வெற்றி காண்கின்றன. இந்தியாவிலும் இதுவே நமது குறைந்தபட்ச நோக்கமாக இருக்க வேண்டும். மொத்த மக்கள் தொகையில் ஒரு சதவீதத்தினர் இதில் ஆர்வம் காட்டினாலும்கூடப் போதுமானது; நமது பிரச்னைகளில் பெரும்பாலானவை தீர்க்கப்பட்டுவிடும்!

புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள சுற்றுப் புறச் சூழ்நிலைத் துறைக்குப் பிரதமரே தலைமை வகிக்கின்றார். இந்தத் துறைக்குச் சவாலான எதிர்காலம் காத்திருக்கின்றது. காடுகள், நில உபயோகிப்பு, கடல் மற்றும் காற்று ஆகியவை குறித்து தேசிய அளவில் கொள்கைகளை வெளியிட்டது இந்தப் புதிய துறை எடுத்துள்ள பல நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

புதிய விஷயமான சுற்றுப்புறச் சூழ்நிலைச் சட்டமும் முன்னேற்றமடைய ஆரம்பித்துள்ளது. சுற்றுப்புறச் சூழ்நிலைப் பாதுகாப்பு, இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துதல் ஆகியவை குறித்துச் சட்ட வரைவுகளைத் தயாரிப்பதில் இந்தத் துறை தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

சுற்றுப்புறச் சூழ்நிலைப் பாதிப்பு ஆய்வுகளுக்குப் பின்னரே, வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். தொழில்நுட்ப ஆள் பலத்தைத் தருவதற்கான ஒரு உள்ளமைப்பு ஏற்படுத்தப்படும்.

நாட்டின் ஒவ்வொரு மாநிலத்திலுமுள்ள சுற்றுப்புறச் சூழ்நிலைக் குழு, மற்றும் மாநில நீர் மற்றும் காற்று அசுத்தப்படுவதைத் தடுக்கும் வாரியம் ஆகியவற்றின் பணிகளை முடுக்கி விடுவதோடு, அவற்றை வலுப்படுத்தவும் வேண்டும். சுற்றுப்புறச் சூழ்நிலையுடன் சம்பந்தப்பட்ட எட்டு அமைச்சகங்களும் ஒன்றோடொன்று ஒத்துழைப்பதோடு, சுற்றுப் புறச் சூழ்நிலைத் துறையுடன் இணைந்து பணியாற்றினால் இத்திட்டத்தைத் திறமையாகச் செயல்படச் செய்ய இயலும்.

நாடாளுமன்ற இரு அவைகளிலிருந்தும் 70 உறுப்பினர்கள் கொண்ட சுற்றுப்புறச் சூழ்நிலை அமைப்பு ஒன்றினை அன்னை இந்திராகாந்தி அவர்கள் அன்றே துவக்கி வைத்தார்.

சுற்றுப்புறச் சூழ்நிலைப் பிரச்னைகளைக் குறித்துத் தெரிந்து கொள்ளுதல், இதனையொட்டித் தற்போதுள்ள இயந்திரத்தைப் பயன்படுத்துதல், இதுபற்றிய பிரச்னைகளை அவைகளில் எழுப்புதல், சட்ட நடவடிக்கைக்கான ஆலோசனை வழங்குதல் மற்றும் தொடர்புடைய மாநிலச் சுற்றுப்புறச் சூழ்நிலைக் குழுக்கள் மற்றும் குடிநீர் அசுத்தக் கட்டுப்பாடு வாரியங்களின் கூட்டங்களில் பங்கு கொள்ளுதல் ஆகியவை இந்த அமைப்பின் நோக்கங்களாகும்.

மாநிலச் சட்ட மன்றங்களிலும் இதே போன்று குழுக்களை ஏற்படுத்தவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இத்தகைய சட்டமன்றக் குழுக்கள் நாடாளுமன்றக் குழுவுடன் ஒத்துழைக்கும்.

தமிழ்நாடு அரசும் சுற்றுப்புறச் சூழ்நிலைப் பாதுகாப்புக்கெனத் தனியொரு துறையினை 1983-ல் ஏற்படுத்தியது.

வருங்காலம் குறித்துச் சிந்திக்கும் ஆற்றல் பெற்ற மனித சமுதாயம் சுற்றுப்புறச் சூழ்நிலை குறித்தும் உணர வேண்டிய காலகட்டம் வந்துவிட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது!

**—இல. இராசேந்திரன்**



# பூச்சிகளைக் கொல்ல புதிய எதிர்-ஹார்மோன்கள்

பயிர்களை நாசமாக்கும் பூச்சிகளை அழிப்பதற்கு இனிமேல் டன் கணக்கில் பூச்சிக் கொல்லி மருந்துகளைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. பூச்சிகளைக் கொல்ல புதிய ''எதிர் ஹார்மோன'' ஒன்றை, சோவியத் விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். ஒரு எக்டேர் நிலத்துக்கு இந்த மருந்தை 5 முதல் 10 கிராம் பயன்படுத்தினால் போதும்.

சோவியத் நாட்டின் தென் பகுதியில் சில தாவரங்கள் ''எதிர் ஹார்மோன்களை'' உற்பத்தி செய்கின்றன. இந்தத் தாவரங்களில் உணவருந்த வரும் பூச்சிகள் இந்த ''எதிர் ஹார்மோனில்'' ஒரு சிறு அளவை உட்கொண்டவுடன் மயக்கமடைந்து கோமா நிலையை அடைகின்றன. இதனைக் கண்டு பிடித்த விஞ்ஞானிகள், இப்போது இந்த ''எதிர் ஹாரமோன்களை'' சோதனைச் சாலையில் தயாரிப்பதில் வெற்றி கண்டுள்ளனர்.

உருளைக்கிழங்குகளை அழிக்கும் கொலராடோ வண்டுகள் மற்றும் வேறு பூச்சிகள் ஆகியவற்றை ஒழிப்பதில் இந்த எதிர் ஹார்மோன்கள் வெற்றிகரமாகச் சோதித்துப் பார்க்கப்பட்டுள்ளன. இதில் உள்ள இன்னொரு சிறப்பு என்னவென்றால், பூச்சிக் கொல்லி மருந்துகளைப் போல இதனால் சுற்றுப் புறச் சூழலுக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படுவதில்லை. சில பூச்சிகள் பூச்சி மருந்துகளுக்குப் பழகி விடுவதால், அவற்றால் பாதிக்கப்படுவதில்லை. ஆனால் இந்த எதிர் ஹார்மோன்கள் முன்பு எந்தப் பூச்சியின் வேலையும் பலிக்காது!

# குழந்தைகள் தின விழா





நேரு பிறந்த நாள்-குழந்தைகள் தினவிழா சென்னை கலைவாணர் அரங்கில் (14.11.86) சிறப்புற நடைபெற்றது.

மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் அவர்கள், இவ்விழாவில் பங்கேற்று குழந்தைகள் திரைப் படத்தைத் தொடங்கி வைத்துச் சிறப்புரையாற்றினார்.

வரவேற்புரையாற்றிய செய்தித்துறை இயக்குநா திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன, இ.ஆ.ப. அவர்கள் — ''குழந்தைகளைத் தம் உயிராக உடலாக உணர்வாக எண்ணினார் பண்டித நேரு அவர்கள். அந்த வகையிலே நேரு அவர்களின் பிறந்த நாள் விழாவை மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து கொண்டாடுகிறது. இன்றைய குழந்தைகள் நாளைய தலைவர்கள் என்ற வகையில் — குழந்தைச் செல்வங்களை நல்ல எதிர் காலம் நோக்கி ஊக்குவிக்கவே இந்த விழா கொண்டாடப்படுகிறது'' என்று குறிப்பிட்டார்.



மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமி

நாதன் அவர்கள் தமது சிறப்புரையில் தெரிவித்ததாவது:

''குழந்தைகளைத் தெய்வமாகக் கொண்டாடிய நேரு அவர்களின் பிறந்த நாள் விழாவை, அரசு குழந்தைகள் தின விழாவாகக் கொண்டாடி மகிழ்கிறது. 'நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடே இருக்குது தம்பி' என்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களும் குழந்தைகளைத் தெய்வமாகக் கொண்டாடி வருபவராவார். எனவேதான் இந்த அரசு இவ்விழாவைச் சிறப்பாகக் கொண்டாடி வருகிறது.

''செல்வச் செழிப்புள்ள குடும்பத்திலே பிறந்திருந்தாலும் கூட ஜவகர்லால் நேரு அவர்கள் இந்திய நாட்டில் உள்ள சாதாரண மக்களின் - வறுமைப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்டவராவார். புராணத்திலே இராமன் பதினான்காண்டுக் காலம் வனவாசம் போனான் என்பார்கள். அதே போல இந்திய நாட்டின் அடிமைத்தளை நீங்கவும், நாட்டில் சமத்துவமும் சமாதானமும் ஓங்கவும் பதினான்காண்டுக் காலம் சிறை சென்றவர் நேரு. குழந்தைச் செல்வங்களாகிய நீங்களெல்லாம் அவர் வழி நடக்க இந்தியாவைக் காக்க உறுதி பூண்டு வாழ வாழ்த்துகிறேன்''.

—இவ்வாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரையாற்றிய பின், தொடக்கப்பள்ளி இயக்குநர் திருமதி சரோஜினி அவர்கள் நன்றி கூறினார்.

விழா முடிவில், குழந்தைகள் மகிழ - குமரிக் கண்டம், வ.உ.சி. மாவட்டக் துவக்க விழா, ஆப்பிரிக்காவில் அப்பு ஆகிய திரைப்படங்கள் திரையிடப்பட்டன.

**—நமது செய்தியாளர்**



### 'தமிழரசு' இதழுக்கு குழந்தைக் கவிஞரின் பாராட்டு !

தமிழக அரசு வெளியிட்டு வரும் 'தமிழரசு' பத்திரிகை மிக அருமையாக வெளிவருகிறது. வடிவமைப்பு மிக நன்றாக இருக்கிறது. இதைப் போலவே, குழந்தைப் பத்திரிகை ஒன்றையும் தமிழக அரசு வெளியிட வேண்டும்.

—குழந்தைக் கவிஞர்
அழ. வள்ளியப்பா

(குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய குழந்தைகள் தின விழாவில் 15-11-86).





# குழந்தை இலக்கியம் வளர்ந்திட...

குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய குழந்தைகள் நாள் விழா 15.11.86 அன்று சென்னை மயிலை சீனிவாச சாஸ்திரி மண்டபத்தில் நடந்தது.

மாலை 4 மணிக்கு 'அடுத்த ஐந்தாண்டுகளில் குழந்தை இலக்கியம்' என்னும் தலைப்பில் கருத்தரங்கம் நடந்தது.

போக்குவரத்து ஆணையர் திரு எஸ்.டி.காசிராஜன், இ.ஆ.ப. அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில், ''நாம் இரவு பகலாக உழைக்க வேண்டும். நிச்சயம் வெற்றி நம்மைத் தேடி வரும். நல்ல கதைகளை எழுதுங்கள். ஒரு புத்தகத்தைப் படித்து பத்துப் புத்தகங்களை எழுதக் கூடாது! நம்முடைய கடமை உழைப்பது. இதைக் கவனத்தில் கொள்ளுங்கள்'' என்றார்.

இந்தக் கருத்தரங்கில் திருமதி உஷா சுப்பிரமணியன், திரு இனியவன், பேராசிரியர் மு. சாயபு மரைக்காயர் ஆகியோர் பேசினர்.

மாலை ஆறு மணிக்குக் குழந்தைகள் நூல்கள் வெளியீட்டு விழா நடந்தது. தமிழ்ப் பழங்கலை இயக்கக இயக்குநர் திரு புத்தனேரி சுப்பிரமணியன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

தமிழ் வளர்ச்சி உயர் மட்டக் குழுத் தலைவர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில், ''நான் குழந்தை எழுத்தாளர் மட்டுமல்ல, குழந்தைக் கவிஞனும் கூட. அந்தக் காலத்தில் நான் சிறையில் இருந்த போது குழந்தைப் பாடல் எழுதியிருக்கிறேன். அதுவே எனது முதல் கவிதை. கிராமியக் கலைகளிலே குழந்தை இலக்கியம் ஒன்று. நாட்டில் சமாதானம் நிலவினால்தான் அந்த நாட்டில் இசை வளரும், இலக்கியம் வளரும்'' என்றார்.



மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் புதிய குழந்தை நூல்களை வெளியிட்டுப் பேசுகையில் குறிப்பிட்டார்:

''குழந்தை இலக்கியம் கவிதை-உரை நடை எப்படி இருத்தல் வேண்டும் என்று சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். தமிழக அரசைப் பொறுத்தவரை, குழந்தை நலனை முக்கிய நலனாகக் கருதிப் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

''ஆங்கிலத்தில் வெளி வரும் நல்ல நல்ல குழந்தை நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டும். விஞ்ஞான ரீதியான கதைகளைத் தமிழில் மொழி பெயர்க்க வேண்டும். தமிழ்ச் சமுதாயத்துக்கு ஆக்கரீதியான நூல்களைத் தர வேண்டும். ஒழுக்கம், நாணயம், தர்மசிந்தனை முதலான உணர்வுகளை ஊட்ட வேண்டும்'' என்றார்.

டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் குழந்தை இலக்கியப் போட்டியிலும் எல்லப்பா—ரங்கம்மாள் நினைவுப் போட்டியிலும் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்.

ஏவி.எம். அறக்கட்டளையின் முதற்பரிசு தங்கப்பதக்கத்தையும் இரண்டாம் பரிசு வெள்ளிப்பதக்கத்தையும் பெற்றவர்கள் வருமாறு:

வாழ்க்கை வரலாறு எழுதியதற்காக திருமதி அரசு மணிமேகலை (முதற்பரிசு), திரு ஞானகிமணாளன் (இரண்டாவது பரிசு).

அறிவியல் நூல் எழுதியதற்காக திரு எம்.சோலையன் (முதற்பரிசு), திரு தி. பட்சிராஜன் (இரண்டாம் பரிசு).

எல்லப்பா - ரங்கம்மாள் நினைவுப்பரிசு: திரு தங்க சிவராஜன் முதல்பரிசு (ரூ.1000), திரு வி.ர.வசந்தன் இரண்டாவது பரிசு (ரூ.500).

குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா அவர்கள் பேசுகையில், ''பிற மொழிகளில் வெளிவரும் நல்ல குழந்தை நூல்களைப் போலத் தமிழிலும் வெளி வர வேண்டும். குழந்தைகளுக்காக, ''சில்ரன்ஸ் டிரஸ்ட்'' அமைக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

விழாவில் டாக்டர் பூவண்ணன், டாக்டர் மதி சீனிவாசன், திரு பி.எஸ்.மணி, திரு எஸ்.சுவாமிநாதன், ஆகியோர் பேசினர். சங்கப் பொதுச் செயலர் திரு எச். கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார்.

—நமது செய்தியாளர்

பண்டித ஜவகர்லால் நேரு அவர்களின் 98-ஆவது பிறந்த நாளை யொட்டி 15.11.86 அன்று சென்னையில் நடைபெற்ற குழந்தைகள் நாள் விழா தொடர்பான கலை நிகழ்ச்சிகளை மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சர் திரு சி.பொன்னையன் அவர்கள் தொடங்கி வைத்துப் பரிசுகள் வழங்கினார்.







# பழனி மலை பழங்குடிகள்

மதுரை மாவட்டத்தில் பாண்டியனது சரித்திரக் கலாச்சாரங்கள், பண்பாடுகள் ஆகியவைகளை ஒருங்கே திரண்டவாறு கோபுரங்கள், கலைக்கோவில்கள், எழுதச்சித்தாவியங்கள் நமக்குக் காட்டுகின்றன. அதைப்போன்ற தமிழ்நாட்டின் ஒரு தரப்பைச் சார்ந்த ஆதிகுடிகளின் பண்பாடு, நாகரிகம், வளர்ச்சி ஆகியவற்றை மதுரை மாவட்டத்தில் உயர்ந்துள்ள மலைகள் நமக்குப் புலப்படுத்துகின்றன. அம்மலைகளில் மிகவும் முக்கியமானது மேற்குத்தொடர்ச்சி மலையைச் சார்ந்த பழனி மலையாகும். கீழ் பழனி மலையை ஒட்டிய சிறுமலை, தென்மலை, தாண்டிக்குடி, குராங்கணி என்னும் சிறுமலைகளில் பரவலாக முதுவர்கள், பலியர்கள், புலையர்கள், மன்னன், காட்டுநாயகன், இருளர், சோலகர், பனியர் ஆகிய ஆதிவாசிகள் காணப்படுகின்றனர். இவர்களில் மிகவும் முக்கியமானவர்கள் முதுவர்கள், பலியர்கள் புலையர்கள் ஆவர்.

போடிநாய்க்கன் ஊரை அடுத்துள்ளதே குராங்கணி எனப்படும் சுமார் இரண்டாயிரம் அடி உயரமுள்ள சிறுமலையாகும். இதனை அணுக, வண்டியபோக்குவரத்து வசதிகள் தற்போது உண்டு. இச்சிறுமலையில் காணப்படும் சிற்றூர்களில் முதுவர்கள் மற்றும் புலையர்கள் வசிக்கின்றனர். தம்பிரான் புல்லுகோடி எனப்படும் முதுவர்களின் குக்கிராமம் சுமார் பத்து கிலோ தொலைவில் அமைந்துள்ளது. சிறிது தூரம் வண்டிப்பாதையிலும், பிறகு ஒற்றை நடைப் பாதையிலும் நடந்து, மலையில் உயரமான இடத்தில், தனியாகப் பதினைந்து குடும்பங்களாக ஒன்று சேர்ந்து மலைச்சரிவுகளில் தனியாட்சி செலுத்தி வருகின்றனர் இவர்கள். மலைச்சரிவுகளில் இரண்டு, மூன்று வரிசைகளில் காணப்படும் அவர்களின் சிறிய மண்வீடுகள், மற்ற கீழ்நாட்டுக் கிராமங்களில் காணப்படும் வீடுகளைப் போன்றே அமைந்துள்ளன. அவை ஓலையும், அதன்மேல் காட்டுப்புல்லினாலும் மூடப்பட்டவை. இந்த ஆதிவாசிகள் இன்னும் பழமையிலும், எளிய வாழ்க்கையிலும், உலகத்தை அறியாதவர்களாகவும் ஒதுங்கி வாழ்ந்து வருகின்றனர்.

தமிழ்நாட்டுப் பழங்குடிகளில் எழுபது சதவிகிதத்திற்கு மேற்பட்ட ஆதிவாசிகள் விவசாயத் தொழிலில் முதலிடம் செலுத்தி வருகின்றனர். ஆனால், இங்குள்ள முதுவர்களுக்குத் தங்களுக்கென்று விவசாயம் செய்யத் தனி நிலம் கிடையாது. ஆகவே மிகவும் பிற்போக்கிலுள்ள இவர்கள் அருகிலுள்ள பயிர், தேயிலை, பழத்தோட்டங்களில் தொழிலாளிகளாகப் பணிபுரிகின்றனர். ஆடவர் தினப் படியாக ரூபாய் நான்கு அல்லது ஒரு படி அரிசி பெறுகின்றனர். அவ்வாறே பெண்டிர் ரூபாய் மூன்று அல்லது ஒரு படி அரிசி கூலியாகப் பெறுகின்றனர். இவர்களின் முக்கிய உணவு கேழ்வரகு, மற்றும் அரிசி ஆகும். மேலும் காடுகளில் கிடைக்கும் கிழங்குகள், தண்டுகள் வேர்கள், தேன் ஆகியவையும் இவர்களின் இதர உணவாகும். தங்கள் இருப்பிடங்களில் ஆடுகள், கோழிகள், வாத்துக்கள் ஆகியவற்றை வளர்த்து வருகின்றனர். நேரம் கிடைக்கும் சமயங்களில் தாங்களாகவே செய்த எளிய வலையுடன் அல்லது பொறியுடன் வேட்டையாடுவர். அம்பு எய்திப் பறவைகளைப் பிடிப்பதில் இவர்கள் சிறந்தவர்கள். கூழாங் கற்களை அம்புகளாகவும் உபயோகிக்கின்றனர்.


**கே. தேவசகாயம்,**
காப்பாட்சியர்,
மானிடவியல் பிரிவு,
அருங்காட்சியகம், சென்னை.




தேனைச் சேகரிக்கும் சொரக்காய்க் குடுவை



களைக் கொத்து

முதுவர் பழங்குடியினரின் மண்வெட்டி

கேரளம், கோவை ஆகிய இடங்களிலுள்ள மலைப் பகுதிகளில் வாழும் முதுவர்கள், பழனி முதுவரை விட இன்னும் கீழ்நிலையில் உள்ளனர். அவர்களின் வீடுகள் கட்டையினாலும், தட்டியினாலும் ஆனவை. இன்னும் திருமணங்களில் தங்கள் மனைவியருக்குத் தாங்கள் செய்த சிறப்பு வேலை மிகுந்த மூங்கில் சீப்புகளை வெகுமதிகளாகவும், தாலியின் மதிப்பைப்போன்றதாகவும் கருதிப்பரிசாக அளித்து வருகின்றனர். தாயான முதுவர்கள் இன்னும் தங்கள் முன்னோர்கள் போலவே, தோளில் சரியும் சேலையில் முடிபோட்டுத் தங்கள் சிறு குழந்தைகளை முதுகில் தூக்கிச் செல்லுகின்றனர். தங்கள் உடையிலும், வேலையிலும் வெகுவாக இவர்கள் தங்களுடன் வேலை செய்து வரும் கீழ்நாட்டவரின் நட்பினால் புதிய மாறுதல்களை அடைந்து வருகின்றனர். போக்குவரத்து மூலமாகவும் மற்றும் நடந்தும் போடிநாயக்கன் வாரச்சந்தைக்குச்சென்று தேவையான பொருள்களை வாங்கி வருகின்றனர் - முக்கியமாகப் பண்டிகைக் காலங்களில்.

சேர்ந்து அருகிலுள்ள வாழை, கொய்யா, எலுமச்சை, மாதுளம் பலா ஆகிய பெருந்தோட்டங்களில் நாற்று எடுததல, களை எடுத்தல், வாழை இலைபறித்தல், காய், பழங்களைப் பறித்தல் ஆகிய வேலைகளில் ஈடுபடுகினறனர்.

முக்கியமாக வாழைத் தோட்டத்தில் வேலை செய்யும் ஒவ்வொரு பலியனிடமும் இரவ்டு வித வெட்டுக்கத்திகள் உண்டு. ஒனறு 'ட' வடிவமும், மற்றொன்று 'U' வடிவமும் ஆனது. வாழைக குலையை வெட்டவும, இலைகளைத் தரிக்கவும் இக்கத்தி

முதிர்ந்த பலியரைப் பற்றி ஒரு சில குறிப்புகள் கிடைத்துள்ளன. சுற்றிலும் மலைச்சரிவு; வாழைத் தோட்டத்தின் நடுவில், மற்ற காட்டுச் செடிகளின் நடுவே அமைந்துள்ளது அவரது சிறிய ஒலை வீடு. அழகர் 120 வயதாகியும் நான்கு திருமணம் தனது சொந்தத்திலே செய்திருந்தும், இந்த வயோதிக வயதில் மிகவும் சுறுசுறுப்பாகவும், அமைதியுடனும வீட்டின் எல்லாக் காரியங்களையும் கவனித்து வருகிறார்.

கொடைக்கானல், பகுதி பனைக்காடு கிராமத்தின் அருக்க புதியதாக அமைக்கப்பட்டிருக்கும்



புலையரின் மீன் பிடிக்கும் பொறி

பலியர் எனப்படும் ஆதிவாசிகள் பழனிமலையில்ஒன்றான சிறுமலையில் வசிக்கின்றனர். திண்டுக்கல்லை அடுத்து சுமார் பத்து மைல் தொலைவில் சிறுமலை 2000 அடி உயரத்தில் அமைந்துள்ளது. மலையைச் சுற்றி வளைநது செல்லக்கூடிய போக்குவரத்து வசதிகள் பல உண்டு. பழையூர் என்னும் கீழ்நாட்டவர் வாழும் மலைப்பகுதியைப் பெருந்துமூலம் அடைந்து, அங்கிருந்து வளைந்து செல்லும் ஒற்றையடிப் பாதையில், காட்டில், மேட்டில், மலையில் நடந்து சிறுசிறு ஓடைகளையும் கடந்து செல்ல வேண்டும். பலியர் இக்காட்டு மலைப்பகுதிகளில் பெரிய பழத்தோட்டங்களில் பரவிக் கிடக்கின்றனர். கல்லரைக்காடு, செம்பூத்துக்காடு, ஐந்து மாமரத்துப்பள்ளம், தழைககாடு ஆகிய சிறுசிறு கூட்டமாகப் பலியர் வசிக்கும் குக்கிராமங்களைச் சிறுமலையில் காணலாம். அவர்கள் இரண்டு மூன்று குடும்பங்களாகச்

கள் உதவுகின்றன. காய்த் தோட்டங்களில் வேலைபுரியும் ஆண்கள் 22 ரூபாய் வாரக் கூலியாகப் பெறுகின்றனர். இவ்வேலையைத் தவிர்த்து, சாலையில், தோட்டத்தில், பள்ளத்தாக்கில் காணப்படும் தேனை, நீண்ட கொம்பின் உதவியால் சேகரிப்பது இவர்களின் முக்கிய தொழிலாகக் கருதப்படுகிறது. மிகவும் எளிய பொறிகளுடன் நேரம் கிடைக்கும் சமயங்களில் வேட்டையாடுவர். மற்றும் காட்டின் கனிகள், வேர்கள், தண்டுகள், இவர்களின் இதர உணவாகும். பலியர்கள் நல்ல உடல் வலிமையைப் பெற்றுள்ளார்கள். ஐந்து மாமரத்துப் பள்ளம் என்னும் மலைப் பகுதியில் தன்னந்தனியாகத் தனது குடும்பத்துடன் வாழ்ந்து வரும் 120 வயதான அழகர் என்னும்

வி.எஸ்.ஆர்.புரம், பலியாகளின் புதிய கிராமம ஆகும். 1975ஆம் ஆண்டு படித்த கீழ் நாட்டு 25 வாலிபர்களின் பெரு முயற்சியால ஒரு ''உதவிக் குழு'' அமைக்கப்பட்டது, அவர்களின் பண உதவியாலும், மற்றும் பெரிய தனவந்தர்களின் பொருளுதவியாலும் பத்து பலியர் குடும்பங்களுக்குப் புதிய கல்வீடுகள் கட்டப்பட்டுள்ளன. தற்பொழுது பலியர்களின் நல்வாழ்விற்காகக் குழந்தைகள் காப்பகமும், பெண்கள் தையலகமும் இயங்கி வருகின்றன.

முதுவர்கள், பலியர்கள் தவிர, புலையர் என்னும் பழங்குடியினர் தாண்டிக்குடி மலையில் இரண்டாயிரம் அடி உயரத்தில் வாழந்து வருகின்றனர். வத்தலக்குண்டு



வில்



எனப்படும் ஊரை மேற்கு நோக்கியதே தாண்டிக்குடி மலை. செல்வதற்கு வேண்டிய போக்குவரத்தும், சாலையும் உண்டு. மங்களம் கொம்பு காலனி, தாண்டிக்குடி காலனி ஆகிய சிறறூர்களில் வாழும் புலையர்கள் சற்று நல்ல வசதிகளைப் பெற்றவர்களாகத் தென்படுகின்றனர். மங்களம் கொம்பு காலனியில், கீழ்நாட்டு மக்களின் இருப்பிடங்களுக்கருகே தமிழ்நாடு அரசு கட்டியுள்ள புதிய கல் வீடுகளில் சுமார் பதினைந்து புலையர் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இவர்கள் தோட்டங்களில் வேலை செய்தல், மற்றும் இதர கூலி வேலைகளிலும் ஈடுபட்டு வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். தினக்கூலியாக ஆண்கள் ரூபாய் ஆறும், பெண்கள் ரூபாய் மூன்றும் பெறுகின்றனர்.

பழனி மலைவாழ் மக்களாகிய முதுவர், பலியர், புலையர் ஆகியவரிடம் ஒருசில ஒற்றுமைகள் காணப்படுகின்றன. பழனிமலைகள் யாவும் அதிக உயரம் உள்ளவைகள் அல்ல. அவையாவும் சுமார் 2000 அடி முதல் 3000 அடி உயரம் உள்ளவை தான். மேலும் பழனி மலைகள் யாவும் கீழ்நாட்டுடன் போக்குவரத்து வசதியுடன் இணைக்கப்பட்டுள்ளது. இம்மலைவாசிகள் யாவரும் தொழிலாளிகளாகவும், கூலியாட்களாகவும், தோட்டங்களில் பணிபுரிகின்றனர். அனைவரும் பயிர்த்தொழிலில் ஈடுபடவில்லை. இன்னும் மிகக் கூச்சத்துடன் கீழ்நாட்டவருடன் பழகுகின்றனர். கீழ்நாட்டு மக்களுடன் காய்த் தோட்டங்களில் இப்பழங்குடிகள் வேலை செய்தாலும் அதிக அளவில் நாகரிக முன்னேற்றம் காணப்படவில்லை. இப்பழங்குடிகள் இன்னும் எளிமையுடனும் ஓரளவு வாழக்கையில் திருப்தியுடனும் வாழ்ந்து வருகின்றனா.

இவ்விதமாக முதுவர் பலியர், புலையர் ஆகிய ஆதிவாசிகளின் சமூக, பொருளாதார வாழ்க்கை முறைகளை நேரில் பார்த்து, கண்டறிந்ததுமல்லாமல், அவர்களால் செய்யப்பட்டு தினமும் உபயோகிக்கப்படும், அவர்களின் எளிய வீட்டுப் பொருள்கள், தொழில் கருவிகள், பாத்திரங்கள், ஆகிய ஐம்பது கலைப் பொருள்கள் சென்னை, மதுரை அரசு அருங்காட்சியகங்களுக்கென அண்மையில் சேகரிக்கப்பட்டன. அவற்றில் சிறந்தவை சிலவற்றை மதுரை, சென்னை அரசு அருங்காட்சியங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. பழங்குடிகளின் இக்கலைப் பொருள்களைக் காட்சிக்கு வைக்கும்பொழுது மலையில் வாழும் ஆதிகுடிகளின் வேறுபட்ட எளிய வாழ்க்கையை அவை படம் பிடித்துக்காட்டுவது போல அமைந்தாலும், அதன் வழியே நமது நாகரிகம், பண்பாடு, கலை உணர்ச்சி ஆகியவற்றை ஒப்பிட்டுப் பார்க்கவும் முடிகிறது.



சிறு பிராணிகளை வேட்டையாடும் ஈட்டிமுனை

பலியர் பழங்குடியினரின் கத்தி

முதுவர் குடும்பம்



# தேசிய நூலக வார விழா

தமிழ்நாடு அரசு - பொது நூலகத் துறையின் 19-வது தேசிய நூலக வார விழா 14-11-86 முதல் 20-11-86 வரை சென்னையிலுள்ள ராஜாஜி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்கள் இவ் விழாவைத் துவக்கி வைத்தார்.

பொது நூலக இயக்குநர் (பொறுப்பு) திரு. வ. ஆ. சிவஞானம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

விழாத் தலைமையேற்ற கல்வித்துறை ஆணையர் மற்றும் செயலாளர் திரு. தி.து. சுந்தர்ராஜ் இ.ஆ.ப. அவர்கள் கல்வி வளர்ச்சியில் நூலகத்துறை ஆற்றிவரும் பங்கும் பணிகளும் பற்றி விரிவாக உரையாற்றினார்.

பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. கி. கோபாலன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் டாக்டர் சிலம் பொலி செல்லப்பன், ஸ்டார் பிரசுரம் உரிமையாளர் திரு. இராமநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

பதிப்பாளர் சங்கச் செயலாளர்களில் ஒருவரான திரு. 'பூங்கொடி' வே. சுப்பையன், விழாவில் பங்கேற்ற பெருமக்களுக்கு மாலைகளும் சால்வைகளும் அணிவித்து வரவேற்றார்.

மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்கள் சிறப்புரையாற்றுகையில்—''அறிவியல் பற்றிய நூற்கள் தமிழில் பெருக வேண்டும். விஞ்ஞானம் வளர்க்கிற-நம் நாட்டுக்கலையை, பெருமையை, பண்பாட்டு உணர்வை வளர்க்கும்படி உருவாக்கப்படுகிற நூற்களுக்கு அரசு என்றுமே நல்லாதரவு தரும்'' என்றார்.

விழா முடிவில், உதவி பொது நூலக இயக்குநர் திரு. அ. ஜகந்நாதன் நன்றி கூறினார்.

ராஜாஜி மண்டபத்தில் ஒரு வார காலம் நடைபெற்ற இவ் விழாவில் 46 பதிப்பகங்களின் நூல் விற்பனை அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றில் 5 ஆங்கில நூல் விற்பனை அரங்குகளாகும். ஆக மொத்தத்தில் ஏறத்தாழ 20 ஆயிரம் தலைப்புகளின் கீழான புத்தகங்கள் இவ்வரங்குகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டன.

இந்தத் தேசிய நூலக வார விழாவின் நிறைவு நாள் 20-11-86 அன்று ராஜாஜி மண்டபத்தில் கொண்டாடப்பட்டது.

வரவேற்புரையாற்றிய பொது நூலக இயக்குநர் (பொறுப்பு) திரு. வா. ஆ. சிவஞானம — ''பொது நூலகங்களின் மூலம் சமுதாயத்தில் நல்ல பல மாற்றங்கள், ஏற்படச் செய்கிறோம். குறிப்பிட்ட பிரிவில் படித்து வரும் மாணவ மாணவிகள் பல்வேறு பொருள்கள் பற்றியும் படித்துத் தெரிந்து கொள்ள நூலகங்களைப் பயன்படுத்தலாம்'' என்றார்.

விழாத் தலைமையேற்ற தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறைச் செயலாளர் டாக்டர் ஔவை நடராசன் பேசுகையில்- ''ஆண்டுக்கு ஆண்டு தமிழ் நூல்கள் வனப்போடும் பொலிவோடும் வெளியிடப்படுகின்றன. படைப்பவர்கள், பதிப்பாளர்கள், படிப்பாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. கல்வி சிறந்த தமிழ்நாடு என்ற பாரதியின் சொல் இந்த வகையில் மெய்யாகி வருவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.'' என்று குறிப்பிட்டார்.

கன்னிமரா பொது நூலக நூலகர் திரு அ.மு. சுந்தர்ராஜன் பேசுகையில் - ''இந்த நூலக வார விழா இங்கே மட்டுமல்ல; தமிழ்நாடு முழுமையும் உள்ள மாவட்டத் தலைநகர்களிலெல்லாம் இதேபோல் கொண்டாடப்பட்டு வருகிறது'' என்று பெருமையோடு சொன்னார்.

'கல்கண்டு' ஆசிரியர் திரு. லேனா தமிழ்வாணன் பேசும்போது—''புத்தகங்களை இரவல் வாங்குவதைவிட விலைகொடுத்து வாங்கிப் படிக்கிற பழக்கம் மக்களிடம் பெருக வேண்டும். பதிப்பாளர்களிடம் இன்னும் அதிக அளவில் நூல் வாங்கி அரசு ஊக்குவிக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

பதிப்பாளர் சங்கச் செயலாளர்களில் ஒருவரான திரு 'மூவேந்தர்' முத்து தமது உரையில் ''தமிழ்ப் பதிப்பாளர்களின் நிலை உயர வேண்டுமானால் ஆண்டுக்கு இருமுறை நூலகங்கள் மூலம் புத்தகங்கள் வாங்கப்பட வேண்டும்'' என்றார்.

விழா நிறைவுரையாற்றிய போககுவரத்துத்துறைஆணையர் திரு. எஸ். டி. காசிராஜன் ஐ.ஏ.எஸ். அவர்கள் —''புதிய புத்தகங்களைக்கூட யாருக்கும் இரவல் தரலாம்; பழைய நூற்களை, அரிய நூற்களை அபபடித் தரக்கூடாது. தந்தால் திரும்ப வராது. பதிப்பாளர்கள் தமமுடைய வெளியீடுகள் பற்றி நாளேடுகளில் விளம்பரம் செய்கிறார்கள். அதன் மூலம் ஏற்படும் பலனை விட—ஏடுகள் தோறும் புத்தகங்கள் பற்றிய விமாசனம் வெளியிடப்படுமானால் அதன் மூலம் அதிகப் பலன் கிடைக்கும்'' என்றார்.

விழா முடிவில் - 19வதுதேசிய நூலக வார விழாவில் சிறப்புற அரங்கம் அமைத்ததற்கான முதல் பரிசு அருணோதயம் பதிப்பகத்திற்கும், இரண்டாம் பரிசு வானதி பதிப்பகத்திற்கும் — ஆங்கில அரங்கிற்கான ஒரு பரிசு 'ஏஷியன் எஜுகேஷனல் சர்வீஸ்' அரங்கிற்கும் அளிக்கப்பட்டது. மற்றெல்லா அரங்குகளுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.



# மூதறிஞர் ராஜாஜி



ஒரு காலத்தில் சேலம் மாவட்டத்தின் பகுதியாக இருந்த தர்மபுரி மாவட்டத்தில், ஓசூருக்கு அருகில், தொரப்பள்ளி என்னும் சிற்றூரில், சக்கரவர்த்தி ஐயங்கார் -சிங்காரம் அம்மையார் தம்பதிக்கு மூன்றாவது பிள்ளையாக 10.12.1878ல் பிறந்தார் ராஜாஜி.

பெற்றோர் அவருக்குச் சூட்டிய பெயர் இராஜகோபாலன். பின்னர் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி என்றும், சி.ஆர். என்றும், ராஜாஜி என்றும் மக்களால் அழைக்கப் பெற்றார். பேரறிஞர் அண்ணா அவர்கள் ராஜாஜி அவர்களை மூதறிஞர் என்று சிறப்பித்துக் கூறினார்.

ராஜாஜி தமது ஐந்தாவது வயதில் தொடக்கப்பள்ளியில் சேர்க்கப்பட்டார். பின்னர் அவரது பெற்றோர்கள் ஓசூரில் குடியேறியதால் அங்கு நடுநிலைப் பள்ளியில் சேர்க்கப்பட்டார்.

பன்னிரண்டாவது வயதில் மெட்ரிகுலேசன் தேர்வு எழுதினார். பின்னர் பெங்களூருக்குச் சென்று சென்ட்ரல் இந்துக் கல்லூரியில் சேர்ந்தார். விஞ்ஞானப் பாடங்களை விருப்பப் பாடங்களாக எடுத்துக் கொண்ட அவர், ஆங்கிலத்திலும் நாட்டம் செலுத்தினார். சர் வால்டர் ஸ்காட்டின் நூல்களை மிகவும் விரும்பிப் படித்தார். பதினெட்டாவது வயதில் பி.ஏ.,பட்டதாரியானார். சிறு வயதிலேயே நினைவாற்றல் அவருக்கு அதிக அளவில் இருந்து வந்தது. படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே பிறருடன் வாதம் செய்வதில் வல்லவராக விளங்கினார்.

மகனின் வாதத் திறமையையும் கூரிய அறிவையும் தெரிந்து வைத்திருந்த சக்கரவர்த்தி தனது மகனை, சென்னை சட்டக் கல்லூரியில் சேர்த்தார்.

சென்னையில், மாணவர்விடுதி ஒன்றில் தங்கிப் படித்து வந்தார் ராஜாஜி. ஒருமுறை சென்னைக்கு வருகைபுரிந்த சுவாமி விவேகானந்தர், அந்த மாணவர் விடுதிக்குச் சென்று தங்கினார். அவரை மிகுந்த மரியாதையுடனும் அன்புடனும் வரவேற்றார் ராஜாஜி.

ராஜாஜியிடம் விவேகானந்தர் ஒரு வினாவை விடுக்க, அதற்கு அவர் உரிய பதிலை ஒரு கணத்தில் உரைத்துவிட்டார். ராஜாஜியின் அறிவுக் கூர்மை விவேகானந்தரை வியக்க வைத்துவிட்டது.

''இந்த இளைஞர் எதிர்காலத்தில் மிகச் சிறந்து விளங்குவார்'' என்று வாழ்த்தினார் விவேகானந்தர்.

பி.எல்.பட்டம் பெற்று வழக்கறிஞர் ஆனார் ராஜாஜி.

ஓசூர் பெரிய நகரம் அன்று. அங்கு வழக்கறிஞர் தொழில் நடத்திப் பொருளீட்ட முடியாது என்பதனை உணர்ந்தார். சேலம் நகருக்குச் சென்று வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டால் செல்வமும் சேர்க்கலாம், சிறப்பாகத் தொழிலும் புரியலாம் என்ற எண்ணத்துடன் சேலத்திற்கு வந்தார் ராஜாஜி.

புகழ்பெற்ற வழக்கறிஞர் ஒருவரிடம் சென்று பயிற்சி பெற விரும்பினார். அவர், பயிற்சி தருவதற்கு மறுத்துவிட்டார். அதைக் கண்டு இளம் ராஜாஜி தளர்ச்சியடையவில்லை. நேரடியாகவே தொழில் நடத்தத் தொடங்கினார். அவர், முதன் முதலாக ஒரு வழக்கை எடுத்து நடத்திய போது அவருக்கு வயது இருபத்தொன்றுதான்!

அவரது முதல் வழக்கே அவருக்குப் பெரும் புகழை ஈட்டித் தந்து விட்டது. முன்பு எந்த வழக்கறிஞர் அவரைத் தமது உதவியாளராக ஏற்றுக் கொள்ள மறுத்தாரோ, அவரே ராஜாஜி நடத்திய வழக்கில் எதிர் வழக்காடினார். அவர், புகழ்பெற்றவர் ஆயிற்றே என்று கவலைப்படாமல் ராஜாஜி, துணிவாக வாதாடி, கேள்விமேல் கேள்வி கேட்டு, பெரிய வழக்கறிஞரின் வாதத்தைத் தவிடுபொடியாக்கினார். ராஜாஜியின் கட்சிக்காரர் வெற்றி பெற்றார்.

இளம் வழக்கறிஞர் ராஜாஜியின் திறமையைக் கண்டு சேலம்

**தமிழ்ப்பித்தன்**



# தென்மண்டலப் பண்பாட்டுக் கலை விழா

'தாக்ஷிணி' -பெங்களூரில் 10.11.86 முதல் 8 நாட்கள் நடைபெற்ற, அகிலஇந்திய இசை, நடனம் மற்றும் கலை அம்சங்கள் நிறைந்த கலைவிழா. தென்னகத்தில் இக்கலைவிழா நடைபெறுவது இதுவே முதல் முறை.

தேசிய ஒருமைப்பாடு, தேச ஒற்றுமை ஆகியவற்றை வளர்த்து வலுப்படுத்தும் நோக்கோடு உருவாக்கப்பட்ட பண்பாட்டு மையங்களில் ஒன்றான தென் மண்டலப் பண்பாட்டு மையத்தின் சார்பில் இவ்விழா நடைபெற்றது.

நாட்டில் உள்ள ஏனைய கலைகளின் விரிந்த காட்சியை தென்னகத்திற்கு அளிக்க வேண்டும் என்பதே இக்கலைவிழாவின் அடிப்படை நோக்கமாகும்.

தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திரம், உத்தரப்பிரதேசம், இராஜஸ்தான், மராட்டியம், இமாசலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த புகழ்பெற்ற கலை விற்பன்னர்களும் துணைக் கலைஞர்களும் உள்ளிட்ட 800க்கும் மேற்பட்டோர் இவ்விழாவில் பங்குகொண்டனர்.

இந்துஸ்தானி, கர்நாடக சங்கீத நிகழ்ச்சிகள், இந்தியாவின் பழம்பெரும் சிறப்பு வாய்ந்த நாட்டிய வகைகளான பரதநாட்டியம், கதகளி, ஒடிஸி, குச்சுப்புடி, மணிபுரி மற்றும் கதக் ஆகியவற்றைக்கலைஞர்கள் படைத்தளித்தனர்.

நாட்டின் தொலை தூரப் பகுதியில் வசிக்கும் மக்களின் அசல் கிராமிய நடனங்கள் மற்றும் இசைகளுடன் பொய்க்கால் குதிரை, அரியானாவின் ஜீமர், லடாக், நாகாலாந்து, மிஜோரம் ஆகிய பகுதிகளின் கிராமிய நடனங்களும் மேலைநாட்டு 'பாலே' நடனமும் இடம் பெற்றன.

*பெங்களூர் விழாவின் முதல் நிகழ்ச்சியாக "ஜெய்பாரத்" என்ற தேசிய எழுச்சிப் பாடலை பள்ளிக் குழந்தைகள் குழு மேடையில் நின்று பாடத் தொடங்கியது.*

*"இந்தியத் தாய்க்கு வாழ்த்துப் பாடும்போது, அந்தக் குழந்தைகளுக்கு முதுகைக் காட்டியபடி நாம் உட்கார்வது சரியல்ல; எழுந்து நிற்போம்", என்று கூறி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் எழுந்தார். "நாம் எழுந்து குழந்தைகள் பக்கம் திரும்பி நின்றால், எதிரே உட்கார்ந்திருக்கும் மக்களுக்கு முதுகைக் காட்டுவதுபோல் ஆகுமே" என்று மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் கேட்டார். "இல்லை, இல்லை. நாம் சற்று ஓரமாக நிற்கலாமே" என்று மாண்புமிகு தமிழக முதல்வர் கூறியதும் மேதகு தமிழக ஆளுநரும், கர்நாடக ஆளுநரும், மாண்புமிகு கர்நாடக முதல்வர், புதுவை முதல்வர் ஆகியோரும், முக்கியப் பிரமுகர்களும் எழுந்து ஓரமாக நின்றவாறு பாடலை ரசித்து மகிழ்ந்தனர்.*

இக்கலை விழாவை, மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்கள் 10.11.86 அன்று தொடங்கி வைத்தார். மேடையின்மீது அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முரசை அடித்து அவர் துவக்கி வைத்தார்.

தென் மண்டலத்தில் உள்ளடங்கிய மாநிலங்களின் கைவினைப் பொருட்கள், புராதன மற்றும் நவீன ஆபரணங்கள் ஆகியவற்றின் கண்காட்சியும் நடைபெற்றது.

கர்நாடக மாநிலத்தின் மேதகு ஆளுநர் திரு பானர்ஜி அவர்கள் ஓவியக் கண்காட்சியைத் திறந்து வைத்தார்.

குழந்தைகள் கலைவிழாவை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

மேடையில் ஒரு பிள்ளையார் சிலை வைக்கப்பட்டு அதை இருவர் வணங்குவது போன்று சித்திரிக்கப்பட்டு இருந்தது. அதை மூடி இருந்த திரையை மாண்புமிகு தமிழக முதல்வர் விலக்கி விழாவைத் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு புதுவை மாநில முதல்வர் திரு எம்.ஓ.எச்.பருக் அவர்கள், பண்பாட்டுக் கலை விழாவைத் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு கர்நாடக முதல்வர் திரு இராமகிருஷ்ண ஹெக்டே அவர்கள் குத்து விளக்கு ஏற்றி வைத்து இசைவிழாவைத் துவக்கினார்.

இவற்றைத் தொடர்ந்து டாக்டர் பாலமுரளி கிருஷ்ணாவின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.







# இலங்கை இனப் பிரச்னை தீர பெங்களூரில் பேச்சுவார்த்தை

தெற்காசிய கண்டத்தில் உள்ள இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசம், இலங்கை, பூடான், நேபாளம், மாலத்தீவு ஆகிய நாடுகள் இணைந்து தெற்காசிய வட்டார ஒத்துழைப்பை வளர்த்துக் கொள்ளக் கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தியுள்ளன. இக்கூட்டமைப்பின் முதல் மாநாடு வங்க தேசத்தில் நடந்தது. இரண்டாவது உச்ச மாநாடு 16-11-85; 17-11-86 ஆகிய நாட்களில் இந்தியாவில் பெங்களூரில் நடைபெற்றது.

இக்கூட்டமைப்பின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் மாநாட்டைத் துவக்கி வைத்தார்.

மேதகு பூடான் மன்னர் ஜிக்மே சிங்கே வாஞ்சுக், மேதகு வங்கதேச அதிபர் எச். எம். எர்ஷாத், மேதகு மாலத்தீவு அதிபர் மம்மூன் அப்துல் கயூம், மேதகு நேபாள மன்னர் பீரேந்திரா, மாண்புமிகு பாகிஸ்தான் பிரதமர் முகமதுகான் ஜீனே ஜோ, மேதகு இலங்கை அதிபர் ஜெயவர்த்தனா ஆகியோர் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

தெற்காசிய நாடுகளுக்கு இடையேயான பொருளாதார ஒத்துழைப்பு, வளர்ச்சித் திட்டங்கள், குழந்தைகள் நலம், போதை மருந்துகளால் ஏற்படும் விளைவுகள், வன்முறை ஒழிப்பு போன்ற பல்வேறு பிரச்னைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இம்மாநாட்டில் கலந்து கொள்ள பெங்களூர் வந்திருந்த இலங்கை அதிபருடன் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் 15-11-86 அன்று இலங்கை இனப் பிரச்னை குறித்து விரிவாகப் பேச்சு வார்த்தை நடத்தினார்.

தமிழர் பிரச்னையில் இலங்கை மேற்கொண்டுள்ள நிலைக்கும் தமிழர் குழுக்களின் விருப்பத்திற்கும் இடையே உள்ள இடைவெளியை நிரப்ப இந்தியப் பிரதமரும் இலங்கை அதிபரும் 16-11-86 அன்றும் விவாதித்தனர்.

பேச்சு வார்த்தைகள் முக்கியமானதொருகட்டத்தை அடைந்த நிலையில் இலங்கை அரசின் சமீபத்திய பிரேரணைகள் தொடர்பாகத் தமிழர் குழுக்களின் நிலையை விளக்குவதற்காக மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் அழைப்பின் பேரில், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்கள் 16-11-86 அன்று பெங்களூர் சென்றார்.

மாண்புமிகு இந்திய வெளி விவகாரத்துறைத் துணைஅமைச்சர் திரு நட்வர் சிங்கும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களும் இருமுறை சந்தித்து இலங்கைப் பிரச்னை குறித்து விவாதித்தனர்.

இச்சந்திப்புக்களின் போது மாண்புமிகு இந்திய உள்துறைத் துணை அமைச்சர் திரு ப. சிதம்பரம், இந்திய அரசின் வெளியுறவுச் செயலர் திரு. ஏ. பி. வெங்கடேசுவரன், இலங்கையில் இந்தியத் தூதர் திரு ஜே. என். தீட்சித், மாண்புமிகு தமிழக உணவுத் துறை அமைச்சர் திரு ச. இராமச்சந்திரன் ஆகியோர் உடன் இருந்தனர்.

இப்பிரச்னையில் தொடர்ந்து அரசியல் தீர்வு காண்பதற்கான வழிமுறைகளை ஆராய, பெங்களூர் விமான நிலையத்தில் இரு நாட்டின் தலைவர்களும் மீண்டும் பேச்சு வார்த்தை நடத்தினர்.

இலங்கை அதிபர் தமது நாட்டுக்குப் புறப்பட்டுச் சென்ற பின்னர், பெங்களூர் விமான நிலையத்தில் மாண்புமிகு தமிழக முதல்வருடன் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் சுமார் அரை மணி நேரம் ஆலோசனை நடத்தினார். மாண்புமிகு தமிழக உணவுத்துறை அமைச்சர் திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள் உடன் இருந்தார்.

இந்தியப் பிரதமர் பின் செய்தியாளர்களிடம், 'இலங்கை அரசின் புதிய சமரசப் பிரேரணைகள் அடங்கிய திட்டம் நல்ல திட்டமாகும். இலங்கை அரசுக்கும் தமிழினப் போராளிகளுக்கும் இடையே நேரிடையாகப் பேச்சு வார்த்தை நடைபெற இதுவே அடிப்படையாக அமைய வேண்டும்' என்று கூறினார்.

இந்தப் புதிய சமரசப் பிரேரணைகள் மூலம் தமிழர்கள் இலங்கையில் அமைதியாகவும் பாதுகாப்பாகவும் வாழ முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நான்காவது நாளாக 18-11-86 அன்று இந்தியாவும் இலங்கையும் இப்பிரச்னை குறித்துத் தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடத்தின. டெல்லியில் இப்பேச்சு வார்த்தைகளை மேலும் தொடர்ந்து நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.



நகரமே போற்றிப்புகழ்ந்தது; அக்கம் பக்கத்திலுள்ள சிற்றூர்களை எல்லாம் ராஜாஜியின் புகழ் எட்டியது.

'அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்' என்று சொல்லப்படுவதுண்டு. ராஜாஜியின் கூர்த்த மதியை' இந்நாட்டு மன்னர்களான பொதுமக்கள் பெரிதும் பாராட்டினர். பொதுப்பணியில் அவரை ஈடுபட வைத்தனர். ராஜாஜியின் தொண்டினைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பினர். அதன் விளைவு, சேலம் நகராட்சித் தலைவரானார் ராஜாஜி.

பொது வாழ்க்கையில் நாட்டம் கொண்ட ராஜாஜி, தமது வழக்கு மன்றப் பணிகளைக் குறைத்துக் கொண்டார். நகரமன்றப் பணிகளில் அதிக அக்கறை காண்பித்தார். அவரது நிருவாகத்தில் சேலம் நகரம் பல நன்மைகளைப் பெற்றது. பல இடங்களில் இரவுப் பாடசாலைகளை ஏற்படுத்தினார். ஏழைத் தொழிலாளிகள் அந்தப் பள்ளிகளில் பயின்று ஓரளவு எழுத்தறிவு பெற்றனர்.

ராஜாஜி தன்னம்பிக்கை கொண்டவர். மூட நம்பிக்கையை முறியடித்தவர். சேலத்தில் சூரமங்கலம் சாலையில் மாளிகை போன்ற வீடு ஒன்று இருந்தது. அதில்,பேய் குடியிருக்கிறது என்ற பிரச்சாரம் நிலவி வந்ததால், அநத மாளிகையில் யாரும் குடிபுகவில்லை.

இந்தச் செய்தியை அறிந்த ராஜாஜி, அந்த மாளிகையை வாடகைக்குப் பிடித்து, அதில் துணிச்சலுடன் குடி புகுந்தார். அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் அஞ்சினர். ''பேய், சும்மாவிடாது! உயிருக்கே ஆபத்து தரும்'' என்றும் சொல்லி வந்தனர். ராஜாஜி அதையெல்லாம் பொருட்படுத்தாமல் அந்த மாளிகையில் பல்லாண்டுகள் குடித்தனம் செய்தார்.

அவர் இறையுணர்வு மிகுந்தவர்; இந்து சமயத்தில் நீங்காத பற்றுடையவர். இதிகாசங்களை மதித்தவர்; ஆனால் மூடப் பழக்க வழக்கங்கள் பிடிக்காதவர்; சாதி பேதங்களை வெறுத்தவர். தீண்டாமையை வேரறுக்க முனைந்தவர்.

சேலம் கல்லூரியில் ஆதிதிராவிட இனத்து மாணவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்ட காலத்தில், ராஜாஜி தலையிட்டு அவர்களுக்கு அனுமதி வாங்கித் தந்தார்.

சேலம் நகரத்தில் குடிநீர் வழங்கும் பணியில் ஆதிதிராவிட இனத்து ஊழியர்கள் பயன்படுத்தப்பட்டபோது, உயர் சாதிக்காரர்கள் அதனை எதிர்த்தார்கள். அவர்களுக்கெல்லாம் தக்க வகையில் பதிலிறுத்து நிலைமையைச் சமாளித்தார்.

சிதம்பரத்தைச் சேர்ந்த ஆதி திராவிட இனத்துக் காரரான சுவாமி சகஜானந்தா அவர்கள் சேலத்துக்கு வருகை புரிந்தபோது அவருக்கு மாபெரும் வரவேற்பை அளித்து, விருந்தொன்று வழங்கி, சமமாகப் பந்தியில் அமர்ந்து உணவு உண்டார் ராஜாஜி.

இந்த நிகழ்ச்சியைக் கண்ட ராஜாஜியின் உறவினர்களும் இனத்தவர்களும் கண்டனங்களை உதிர்த்தனர். சாதியை விட்டு அவரை விலக்கி வைப்பதாகப் பயமுறுத்தினர். ராஜாஜி அதற்கெல்லாம் அஞ்சவில்லை.

கலப்பு மணங்களிலும் ராஜாஜி ஆர்வம் காட்டினார். டாக்டர் சுப்பராயன் – ராதாபாய் திருமணத்தை அவரே நடத்திவைத்தார். தமது மகள் லட்சுமிக்கும் அண்ணல்காந்தியடிகளின் மகன் தேவதாசுக்கும் ஏற்பட்ட காதலை அங்கீகரித்து, அவர்கள் இருவரின் கலப்பு மணத்திற்கு ஆதரவு தந்தார்.

அண்ணல் காந்தியடிகளின் கொள்கையில் பற்றுக் கொண்டு, காங்கிரஸ் தேசிய இயக்கத்தில் பணியாற்றினார். அந்நிய ஏகாதிபத்தியத்தால் கைது செய்யப்பட்டு,சிறைத்தண்டனையும் பெற்றார். பிரிக்கப்படாத சென்னை மாகாணத்தின் பிரதமராக ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கிறார் ராஜாஜி.

பண்டித ஜவஹர்லால் நேருவின் தலைமையில் அமைந்த இடைக்கால மந்திரி சபையில் கைத்தொழில் அமைச்சர் பொறுப்பை ஏற்றார்.



1947 ஆகஸ்ட் 15ஆம் நாளன்று இந்தியா விடுதலை பெற்றது. அப்போது வங்காளத்தின் ஆளுநராக ராஜாஜி நியமிக்கப்பெற்றார்.

இந்தியாவில் இருந்து வந்த பிரிட்டிஷ் கவர்னர் ஜெனரல் லார்டு மவுண்ட் பேட்டன் இந்தியாவை விட்டு வெளியேறிய போது, அந்தப் பொறுப்பு மூதறிஞர் ராஜாஜியிடம் ஒப்படைக்கப் பெற்றது. விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் இந்திய கவர்னர் ஜெனரல் என்ற பெருமையை ராஜாஜி பெற்றார்.

1950 ஜனவரி 26ல் இந்தியா குடியரசு நாடாயிற்று. அப்போது ராஜேந்திர பிரசாத் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றதால் கவர்னர் ஜெனரல் பதவி முடிவுற்றது.

பின்னர் 1952ஆம் ஆண்டு சென்னை மாநிலத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார் ராஜாஜி.

அரசியல் துறையில் புகழ் பெற்று விளங்கிய ராஜாஜி அவர்கள்,சிறந்த எழுத்தாளராகத் திகழ்ந்திருக்கிறார். தகுதிவாய்ந்த பேச்சாளராக விளங்கியிருக்கிறார். ஆன்மீகத் துறையிலும் அவர் புகழ்பெற்றிருக்கிறார்.

இசையறிவு மிகுந்தவர் அவர். தந்தை பெரியாரின் இனிய நட்புக்குப் பாத்திரமானவர்.

1972 டிசம்பர் திங்கள் 25-ஆம் நாளன்று மறைந்த ராஜாஜி அவர்களின் பரு உடலைப் பார்த்துத் தந்தை பெரியார் கண்ணீர் விட்டுக் கதறி அழுத காட்சி இன்னும் பொது மக்களின் கண்களைவிட்டு அகலாதிருக்கின்றது.

தமிழக வரலாற்றில் மூதறிஞர் ராஜாஜி அவர்களுக்குத் தனி இடம் உண்டு.

# சுற்றுப்புறச் சூழல் கருத்தரங்கு

நவம்பர் 19-ஆம் நாளிலிருந்து டிசம்பர் 18-ஆம் நாள் முடிய சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு மாதமாகக் கொண்டாடத் திட்டமிடப்பட்டுள்ளதையொட்டி சென்னை மாவட்ட ஆட்சியர்அலுவலகத்தின் சார்பில் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக் குறித்த கருத்தரங்கம் 21-11-86 அன்று சென்னை கிண்டி பூங்காவில் நடை பெற்றது.

கருத்தரங்கைத் தொடங்கி வைத்த தமிழ்நாடு அரசு தலைமைச் செயலர் திரு. ஏ. பத்மநாபன், இ.ஆ.ப. தெரித்ததாவது:

''சென்னை நகரில் கூவம், அடையாறு, பக்கிங்ஹாம் கால்வாய் ஆகியவற்றில் சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்படுகின்ற ஊறுகளைக் களைவதற்குரிய கருத்துரைகளை வல்லுநர்களிடம் கேட்டறிவதற்குத் தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

''இதன் தொடக்கக் கட்டமாக இந்த மூன்று நீர்நிலைப் பகுதிகளின் கரைகளைச் சுற்றிலும் மரக்கன்றுகளை நடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அந்தப் பகுதிகளில் பசுமை கொழிக்கும்.''

கருத்தரங்கிற்குத் தலைமை ஏற்ற வனவளம் மற்றும் மீனவள ஆணையர் மற்றும் செயலர் திரு எம். ஏ. கே. தயூப் தமது உரையில் தெரிவித்தார் :

''போதுமான பாதுகாப்பின்றி வளர்ச்சியுறும் தொழிற்சாலைகளினால், சுற்றுப்புறச் சூழலுக்கு மாசு ஏற்படுகிறது.''

தலைமை வனப் பாதுகாவலர் திரு எஸ். கொண்டாஸ் தமது உரையில் தெரிவித்ததாவது:

''வனத்துறையைச் சேர்ந்த அலுவலர்கள் சென்னை நகரத்தில் உள்ள வீடுகளுக்குச் சென்று, மரம் வளர்ப்பதன் அவசியம் குறித்து வீட்டிலுள்ளோருக்கு எடுத்துரைப்பார்கள்.''

சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஜி. புஜங்க ராவ் ''இச். சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு மாதத்தில்—சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் குறித்துப் பொது மக்களுக்கு எடுத்துச் சொல்லப் படும்'' என்று கூறினார்.

பல பெருமக்கள் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு தொடர்பான பல்வேறு கட்டுரைகளை இந்தக் கருத்தரங்கில் படித்தனர்.

இந்தக் கருத்தரங்க நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்னர், தலைமைச் செயலர் திரு ஏ.பத்டநாபன் இ.ஆ.ப., இரண்டாவது செயலர் திரு. டி கே. ஓசா மற்றும் அரசு அலுவலர் பலர், காமராஜர் நினைவக வளாகத்தில் மரக் கன்றுகளை நட்டனர்.

—நமது செய்தியாளர்





# தேசிய ஒருமைப்பாட்டு வாரவிழா

அன்னை இந்திராகாந்தி அவர்களின் பிறந்தநாள் விழா தேசிய ஒருமைப்பாட்டு நாளாகக்கொண்டாடப்பட்டது.

தமிழ்நாடு அரசின் சார்பில், 19.11.86 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் தொடங்கிய இவ்விழா, ஒருவார விழாவாக 25.11.86 வரை கொண்டாடப்பட்டது.

இவ்விழாவிற்கு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி உயர்மட்டக் குழுத் தலைவர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள் தலைமை தாங்கினார்.

மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

வண்ணப் பூக்களாலும் சரவிளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த அன்னை இந்திரா காந்தி படத்தைத் திறந்துவைத்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் பேசியதாவது:

''நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே, என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே, என் ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புக்களே! இன்று அன்னை இந்திராகாந்தி அவர்களின் பிறந்தநாள். நாட்டு ஒற்றுமைக்காகத் தனது உயிரையே...

—இப்படித் தமது பேச்சைத் தொடங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் உணர்ச்சிவசப்பட்டு இதற்கு மேல் பேச இயலாமல் விழிநீர் பெருக்கினார். பின்பு கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மேலே பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது:

''நாட்டு ஒற்றுமைக்காகத் தன் உயிரையே காணிக்கையாக்கியவர் அன்னை இந்திரா அவர்கள். அவரது மறைவை நினைக்கும்போதே என் நெஞ்சம் பதறுகிறது. வன்முறையின் கோரக் கரங்களுக்கு அவரை நாம் பறிகொடுத்துவிட்டோம்.

''அவர் பிறந்த நாளைத் தேசிய ஒருமைப்பாட்டுநாளாகக் கொண்டாடுகிறோம். அன்னை இந்திரா அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைப்பதை நான் பெரும் பேறாகக் கருதுகிறேன்.

''நமது முன்னோர் பெரும் தியாகம் செய்து விடுதலையை நமக்குப் பெற்றுத் தந்தார்கள். இந்த விடுதலை நமக்கு நிலைத்து நிற்க, நாட்டு ஒற்றுமைதான் முதல் தேவை. மதம், மொழி, இனம் இவற்றின் பெயரால் தீய சக்திகள் ஒற்றுமையைச் சிதைத்து வருகின்றன. இந் தீய சக்திகளை எதிர்த்து உறுதியுடன் போராடுவோம்.

''நாட்டு ஒற்றுமைக்குக் கேடு விளைவிப்பவர்கள் மக்களின் விரோதிகள். அவர்களை அடையாளம் கண்டு ஒதுக்கித் தள்ளுவோம்.

''ஒருமைப்பாட்டைக் காக்க, பலம் மிக்க இந்தியாவை உருவாக்க, உலக சமாதானத்தை வளர்க்கப் பாடுபட்டு வருகின்ற பிரதமர் ராஜீவ் அவர்களின் கரங்களுக்கு நாம் வலிவு சேர்க்க வேண்டும்.

''ஒற்றுமை, அமைதி, முன்னேற்றம் என்கிற உயர்ந்த நெறிகளுக்காக நாம் அனைவரும் ஓரணியில் ஒன்று திரளுவோம். அன்னை இந்திராவின் ஒருமைப்பாட்டுக் கொள்கைக்கு உறுதுணையாக இருப்போம். வெல்க இந்தியா. வாழ்க இந்திய ஒருமைப்பாடு. அண்ணா நாமம் வாழ்க. நன்றி. வணக்கம்.''

இந்த விழாவில் தமிழ்நாடு சட்டமன்ற இந்திரா காங்கிரஸ் துணைத்தலைவர் திருமதி டி. யசோதா, ஜனதா தலைவர் திரு ஏ.எஸ்.ஏ.ஆறுமுகம், முஸ்லீம்லீக் தலைவர்திரு அ.க.ம.அப்துல்சமது, கா.கா.தே.கா. தலைவர் திரு குமரிஅனந்தன், பார்வர்டு பிளாக் தலைவர் திரு கே.முத்துவேல், குடியரசுக்கட்சித் தலைவர் திரு செ.கு. தமிழரசன் ஆகியோரும் வலது கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு எம்.கல்யாணசுந்தரம், மாண்புமிகு தமிழ்வளர்ச்சி உயர்மட்டக் குழுத்தலைவர், டாக்டர் ம.பொ.சிவஞானம்ஆகியோரும் பங்கேற்றுப் பேசினார்கள்.

சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும் விழாவுக்கு வந்து சிறப்பித்தார்கள்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் சார்பில், மாண்புமிகு தமிழ்வளர்ச்சி உயர்மட்டக் குழுத்தலைவர் டாக்டர் மா.பொ.சி. அவர்கள் 'தேசிய ஒருமைப்பாடு' உறுதிமொழியைப் படித்தார். உறுதிமொழியை அவர் படிக்கப் படிக்க, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உட்பட மேடையிலிருந்தோரும், அரங்கினுள் நிரம்பியிருந்தோரும் திரும்பச் சொல்லி உறுதி ஏற்றார்கள்.

விழா முடிவில்-செய்தி, மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு இரா.கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப., அவர்கள் நன்றி கூறினார்

தேசிய ஒருமைப்பாட்டு வார விழா நடைபெறும் எல்லா நாட்களிலும் கல்லூரி, பள்ளி மாணவ, மாணவியரின் கண்கவர் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

—நமது செய்தியாளர்





# பறக்க உதவும் பேச்சுப் போட்டி

"பயணம் படிப்பினைத் தருகிறது''.

இந்தத் தலைப்பில் ஒரு ஆங்கிலப் பேச்சுப்போட்டி தமிழ்நாட்டு மாணவர்களுக்காக நடந்தது. இந்தப் போட்டியை ஏர் இந்தியா, ஈஸ்டர்ன் ஏர்வேஸ், இந்து நாளிதழ் ஆகிய நிறுவனங்கள் முன்னின்று நடத்தின. 10-வது வகுப்புவரையிலும் உள்ள மாணவ மாணவியர் இதில் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில் மொத்தம் நான்காயிரம் பள்ளிகள் உள்ளன. இவற்றில் ஒரு பள்ளியிலிருந்து ஒரு மாணவர் என்ற கணக்கில் சிறந்த மாணவர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அந்த மண்டலத்தில் உள்ள பள்ளிகளின் சிறந்த மாணவர்களுக்கிடையே போட்டி நடத்தப்பட்டு, அதிலிருந்து ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இப்படி மற்ற மண்டலங்களின் சிறந்த மாணவர்களுக்கு இடையிலான போட்டி மூலம், மாவட்டத்திற்கு ஒரு சிறந்த மாணவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பின்னர் மாவட்டத்திலேயே சிறந்தவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கிடையே போட்டி நடத்தி, அவர்களிலிருந்து அரை இறுதிப் போட்டிக்கும், பின்னர் அதிலிருந்து இறுதிப் போட்டிக்கும் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இறுதிக் கட்டமாக, இந்தப் போட்டியில் ஆறு மாணவர்கள் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இறுதிப் போட்டி, பண்டித ஜவகர்லால் நேரு பிறந்தநாளான 14.11.86 அன்று காலை சென்னை கலைவாணர் அரங்கில் நடந்தது. மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

சென்னைப் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் டாக்டர் மால்கம் எஸ். ஆதிசேஷய்யா, போலீஸ் டைரக்டர் ஜெனரல் திரு கே. ரவீந்திரன், சென்னைத் தொலைக்காட்சி நிலைய இயக்குநர் திருமதி அகிலா சிவராமன், அமெரிக்கப் பெண் பத்திரிகையாளர் திருமதி நான்ஸி டூன் ஸ்டெம்பிள், சென்னை ஐ.ஐ.டி. இயக்குநர் டாக்டர் எம். எஸ்.ஸ்ரீநாத் ஆகியோர் நடுவர்களாக இருந்து இந்த ஆறு மாணவர்களைத் தேர்ந்தெடுத்தனர்.

முதல் பரிசு: பி.ராதாகிருஷ்ணன் (8ஆம் வகுப்பு, விகாசா மெட்ரிகுலேஷன் உயர்நிலைப் பள்ளி, மதுரை).

இரண்டாம் பரிசு; எஸ்.ஹேமமாலினி, (9ஆம் வகுப்பு, பதமா சேஷாத்திரி பாலபவன் சீனியர் செகண்டரி பள்ளி, சென்னை)

மூன்றாவது பரிசு: ஆர்.சித்ரா (10ஆம் வகுப்பு, பெண்கள் உயர் நிலைப்பள்ளி, ஸ்ரீரங்கம்).

நான்காவது பரிசு: வினோத் ஜார்ஜ் ஜோசப் (8ஆம் வகுப்பு, எஸ்.எஸ். சுப்பராய நாடார் அரசு உயர்நிலைப் பள்ளி, விருதுநகர்)

ஐந்தாம் பரிசு: கே.எஸ்.வித்யா (10ஆம் வகுப்பு, தூய இருதய மேலநிலைபபள்ளி, விழுபபுரம்).

ஆறாவது பரிசு: எஸ்.நிர்மலா (8ஆம் வகுப்பு, பிரீக்ஸ் மேல் நிலைப்பள்ளி, உதகமண்டலம்).





சென்ற இதழில்....

கூட்டுறவின் சிறப்பை உணர்த்தும் படங்கள் சென்ற இதழின் (16.11.86) அட்டையை அலங்கரித்தன.



பி. ராதாகிருஷ்ணன்



எஸ். ஹேமமாலினி



ஆர். சித்ரா



வினோத்



கே.எஸ். வித்யா



எஸ். நிர்மலா

போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர் ஆறு பேருக்கும, மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் தமது சொந்தப் பொறுப்பில் தலா ஐயாயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கினார்.

மாண்புமிகு கல்வியமைச்சர் திரு சி.பொன்னையன் அவர்கள் மாணவர்களைப் பாராட்டிப் பேசுகையில், ''புரட்சித் தலைவர் ஆட்சியில் கடந்த பத்து ஆண்டுகளாகத் தமிழகக் கல்வித் துறை பொற்காலம் கண்டுள்ளது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடல்நிலை சரியில்லாதிருந்த போது, அவர் விமானம் மூலம் அமெரிக்கா போக ஏர் இந்தியா நிறுவன அலுவலர்கள் செய்த உதவிகளுக்கு லட்சோபலட்சம் தமிழ் மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார்.

தேர்ந்தெடுக்கப்படும் முதல் மாணவர் சென்னையிலிருந்து நியூயார்க், அங்கிருந்து ஆர் லாண்டோ நகருக்கும் சென்று திரும்பலாம். மாணவரோடு அவரது தந்தையும், பள்ளித் தலைமையாசிரியரும் கூட இலவசமாக அமெரிக்கா சென்று திரும்பலாம். அமெரிக்காவில் 3 நாட்கள் தங்கியிருக்கும் செலவையும், 'வால்ட் டிஸ்னி' உலகத்தையும் பார்த்துத் திரும்பும் செலவையும் இந்த மூன்று நிறுவனங்கள் கூட்டாக ஏற்கும்.

2வது பரிசு பெறும் மாணவருக்கும் இதே மாதிரி பயணம்; ஆனால் இவருடன் அவரது பள்ளி ஆசிரியருக்கு மட்டுமே இலவச டிக்கட் வழங்கப்படும்.

3-வது பரிசு பெறும் மாணவருக்குச் சென்னையிலிருந்து பம்பாய்-டெல்லிக்குச் சென்று திரும்ப இலவச டிக்கெட் தரப்படும். இவருடன் அவரது பெற்றோர், தலைமை ஆசிரியர் உடன் செல்லவும் இலவச டிக்கெட் உண்டு.

4, 5, 6 ஆகிய கடைசி மூன்று பரிசுகளைப் பெறும் மாணவர்க்குச் சென்னையிலிருந்து பம்பாய் சென்று திரும்ப இலவச டிக்கெட் தரப்படும்; இவர்களுடன் உடன் செல்ல அவரது ஆசிரியருக்கு மட்டுமே இலவச டிக்கெட் வழங்கப்படும்.

விழாத் தொடக்கத்தில் ஏர் இந்தியா நிறுவனத்தின் தென்னிந்திய மேலாளர் திரு.பி.ஆர். சத்தியநாராயண ராவ் அனைவரையும் வரவேற்றார். துணை மேலாளர் திரு. பி.ஜே. ரோட்ரிக்ஸ் நன்றி கூறினார்.

— நமது செய்தியாளர்

## 'உலகத்தை முதுகில் சுமப்பவர்!

சுற்றுப்புறச் சூழல் பாதுகாக்கப்படவேண்டியதன் அவசியத்தை, புதுமையானதொரு வழியில் உலக மக்களுக்கு எடுத்துச்சொல்லி வருகிறார், கனடா நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானி டாக்டர் ஜான் வாலன்டைன். இதற்காக அவர் தனது முதுகில் உலகக் கோளத்தைச் சுமந்தபடி நாடு நாடாகச் சென்று மக்களை எழுச்சி பெறச் செய்கிறார். 1986 ஜூன் 5 உலகச் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு நாளையொட்டி புதுடில்லியில் பேசினார்.

''குழந்தைகளைக் குறையுங்கள்; காடுகளை வளருங்கள்'' என்பதே இந்த விஞ்ஞானியின் முழக்கமாக இருந்து வருகிறது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23




# தமிழரசு





சென்னை-எழும்பூர் அரசினர் குழந்தைகள் மருத்துவமனையில், புதிதாகக் கட்டப்பட்டுள்ள குழந்தைகள் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கான 10 மாடிக் கட்டடத்தை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் திறந்துவைத்தார் (8.12.86). மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு ப.உ. சண்முகம் அவர்கள் உடனிருக்கிறார்.



# தரமேம்பாட்டு மாதம் வாழ்த்துச் செய்திகள்



மாண்புமிகு பிரதமர்

## திரு ராஜீவ் காந்தி

ஏழைகள் ஏற்றம் பெறவும், எளியோர் வாழ்வு மலரவும், நாட்டுப் பொருட்கள் நானிலச் சந்தையில் நன் மதிப்புப் பெற்றிடவும் உற்பத்தித் திறனும் ஓங்கு தரமும் சிறந்திடச் செய்து நல்வாழ்வு காண்போம்!''

மாண்புமிகு முதல்வர்

## டாக்டர் எம். ஜி. ஆர்

அளவிலும், எண்ணிக்கையிலும் உற்பத்தியைப் பெருக்குவது மட்டுமின்றி உயர்ந்த தரமுள்ள பொருள்களை உற்பத்தி செய்வதை நமது தேசியக் கடமையாகக் கொள்ள வேண்டும். இதில் நிர்வாகத்தினர் மட்டுமின்றி உற்பத்தியில் ஈடுபட்டிருக்கிற அனைத்துத் தரப்பினரும் முழு மூச்சாக ஈடுபட வேண்டும். அப்போதுதான் நமது மதிப்பு நம்நாட்டின் மக்களிடம் மட்டுமின்றி அயல்நாடுகளிலும் உயரும். தரத்துக்கு அளிக்கப்படும் முக்கிய தன்மை தான் நமது பொருளாதார வளர்ச்சியை நிலை நிறுத்தும். 1986ம் ஆண்டு நவம்பர் திங்கள் - தரமேன்மைக்கான மாதமாக நமது பிரதமர் மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்களால் அறிவிக்கப்பட்டு கடைப்பிடிக்கப் படுகிறது. தரமிக்க உற்பத்தி எனும் சீரிய குறிக்கோளை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள அனைவருடைய உள்ளங்களிலும் பதிய வைத்திட எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெற்றிட அனைவரும் ஒத்துழைப்பு நல்கிடுவோமாக!





# ஜப்பான் டாக்டருக்கு

## தமிழகத்தின் பாராட்டு.

**செ**ய்ந்நன்றி மறவாச் செந்தமிழர் பண்பாட்டுக்கோர் எடுத்துக்காட்டாக விளங்கியது. ஜப்பான் நாட்டு நரம்பியல் விஞ்ஞானப் பேராசிரியர் டாக்டர் கானுவுக்குத் தமிழ்நாடு அரசு 11-12-86 அன்று நடத்திய பாராட்டு விழா.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்கள் உடல்நலங் குன்றியபோது தமிழ் மக்கள் பேரச்சத்திற்கு ஆளானார்கள். வேதனையின் விளிம்பில் தமிழ்நாடே நின்று கொண்டிருந்தபொழுது ஓடோடி வந்து உதவியவர் டாக்டர் கானு. அவர் அன்று கொண்டு வந்த மருந்து பேருதவியாக அமைந்தது. பிணி என்ன என்பதைக் கண்டுபிடித்த முறையும், எத்தகைய மருத்துவச் சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதற்கு உதவியது. இதனால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் முழுமையான நலமெய்த முடிந்தது.

நம்முடைய முதல்வர் அவர்களின் வரலாற்றில் நீங்கா இடம் பெற்றுள்ள டாக்டர் கானு தமிழ்நாட்டு மக்களின் உள்ளத்திலும் நீங்கா இடம் பெற்றுள்ளார்.

டாக்டர் கானுவுக்கு அரசு நடத்திய பாராட்டு விழாவுக்கு, தமிழ் வளர்ச்சி உயர்நிலைக்குழுத் தலைவர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் தலைமை வகித்தார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அனைவரையும் வரவேற்றார்.

அ.இ.அ.தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர், டாக்டர் எச். வி. ஹண்டே, மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு டி. ராமசாமி, மாண்புமிகு தொழிலமைச்சர் திரு. க. ராசாராம், மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு எஸ். ராமச்சந்திரன், மாண்புமிகு கல்வி சட்டத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன், முன்னாள் அமைச்சர் திரு இராம. வீரப்பன், மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன், விழாத் தலைவர் டாக்டர் ம. பொ. சிவஞானம் ஆகியோர் பாராட்டுரை நிகழ்த்தினார்கள்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்கள் தமது பாராட்டுரையில் பேசியதாவது:

"என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே!

என்னை வழி நடத்திச் செல்லும் பெரியோர்களே!

என் ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புகளே!

நம் நாட்டில் நடைபெறும் பல மாநாடுகளில் கலந்து கொண்டு டாக்டர் கானு அவர்கள் உரையாற்றுகிறார்.

இவரைக் காண்பதில் மிக்க மகிழ்ச்சி.

டாக்டர் கானு அவர்கள் உலகில் தலை சிறந்த நரம்பியல் அறுவைச் சிகிச்சை நிபுணர்களில் ஒருவர்.

இளம் வயதிலேயே இத்துறையில் பேராசிரியர் பதவி வகிப்பவர்.

ஜப்பான் நாட்டில் பதினாறு மருத்துவமனைகள் இவருடைய கண்காணிப்பில் நடத்தப்பட்டு வருகின்றன.

சுமார் 136 நரம்பியல் அறுவைச் சிகிச்சை மருத்துவர்கள் இவரின் மேற்பார்வையில் பணியாற்றுகின்றனர்.

சுமார் 300 ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் 30 புத்தகங்களையும் வெளியிட்டுள்ளார்.

இரத்த நாளங்கள் பாதிப்பால் உண்டாகும் மூளை நோய்கள் பற்றிச் சுயமான ஆராய்ச்சிகள் நடத்தி வருகிறார்.

உலகம் எங்கும் நடைபெறும் உலக நரம்பியல் மாநாடுகளின் தலைவராக இருந்து வருகிறார்.

நரம்பியல் துறை மட்டுமல்லாமல், பொது மருத்துவத் துறையிலும் சிறந்த ஞானம் உள்ளவர்.

இவ்வளவு சிறப்புகள் பெற்ற டாக்டர் கானு அவர்கள் இங்கு வந்திருந்து நம் எல்லோரையும் சிறப்பித்து இருக்கிறார். அவரை வருக வருக என்று மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.

நான் உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோது எல்லா உதவிகளையும் செய்ய உத்தரவிட்டதோடு, டாக்டர் கானு அவர்களை வரவழைத்த அன்னை இந்திரா அவர்களுக்கு என் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!".


அட்டை
சொல்லும்
செய்தி






டாக்டர் கானு அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். 10-12-86 அன்று அளித்த விருந்தின்போது அர்த்த நாரீஸ்வரர் சிலையை நினைவுப் பரிசாக அளித்தார்கள். மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் உடனிருந்தார்.

### சிறப்பு ஆலோசகர் சிறப்புப் பேராசிரியர் :

சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆளுகைக்கு உட்பட்ட சென்னை பொது மருத்துவக் கல்லூரியின் நரம்பியல் அறுவைச் சிகிச்சைத் துறையில் சிறப்பு ஆலோசகர், சிறப்புப் பேராசிரியராக டாக்டர் கானு நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான அரசின் நியமன ஆணையை இந்த விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் டாக்டர் கானு அவர்களிடம் அளித்தார்கள்.

இவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்கள், 1.6 கிலோ எடையுள்ள ஏறத்தாழ நான்கே கால் இலட்சம் ரூபாய் செலவில் செய்யப்பட்ட சங்கிலியுடன் உள்ள தங்க யானையை நினைவுப் பரிசாக டாக்டர் கானுவுக்கு அளித்தார்கள்.

தனக்கு அளித்த பாராட்டுகளுக்கும் பரிசுக்கும் நன்றி தெரிவித்துப் பேசிய டாக்டர் கானு தமது உரையில் கூறியதாவது :

"கடந்த சில நாட்களாக சென்னை பொது மருத்துவமனையில் மூளை மற்றும் நரம்பு நோயால் பாதிக்கப்பட்ட ஏழை மக்களைச் சந்தித்து ஆலோசனை அளித்தேன். இத்தகைய நோயால் பாதிக்கப்பட்ட ஏழைக் குழந்தைகளின் பெற்றோர்கள் நம்பிக்கை தளராமல், தங்களின் குழந்தைகளுக்குத் தொடர்ந்து சிகிச்சை அளித்தால் உரிய பயன் கிடைக்கும்.

"எனக்குச் சகோதரனோ சகோதரியோ, கிடையாது. இரண்டாவது உலகப் பெரும் போரின்போது தந்தையைப் பறி கொடுத்தவன் நான். தாயின் பாதுகாப்பிலும் பராமரிப்பிலும் வளர்ந்த எனக்கு வறுமையும் ஏழை எளியோர் நிலையும் நன்கு தெரியும்.

மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தின் சார்பில் 6-12-86 அன்று மாண்புமிகு கல்வியமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் டாக்டர் கானு அவர்களுக்கு 'டாக்டர் ஆஃப் சயின்ஸ்' என்ற சிறப்புப் பட்டத்தை வழங்கினார்.





ஜப்பான் நாட்டு நரம்பியல் மருத்துவ அறிஞரான டாக்டர் டெட்சு கானு அவர்கள் நம்முடைய பதினைந்து நாள் இந்தியச் சுற்றுப் பயணத்தின் தொடக்கமாக (5-12-86) சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் வந்தடைந்தபோது மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் வரவேற்றார்.

''தற்பொழுது எனக்குக் கிடைத்த சிறப்புகள் எல்லாம் என் தாய்க்குக் கிடைத்த சிறப்பே ஆகும்! எனக்கு அளித்த பரிசுகளை என் தாயிடம் காட்டி அவர்களின் வாழ்த்துக்களைப் பெறுவேன்.''

இந்நிகழ்ச்சியில் நரம்பியல் மருத்துவ வல்லுநர் டாக்டர் நரேந்திரன் நன்றி கூறினார்.

**மதுரையில் டாக்டர் பட்டம்**

மதுரைப் பல்கலைக் கழக விழாவில் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள், டாக்டர் கானுவுக்குச் சிறப்பு டாக்டர் பட்டத்தை (டாக்டர் ஆஃப் சயின்ஸ்) 6-12-86 அன்று வழங்கினார்.

**சென்னையில் ஃபெலோஷிப் விருது**

9-12-86 அன்று, சென்னை மருத்துவக் கல்லூரி டாக்டர் கானு அவர்களுக்கு ஃபெலோஷிப் விருதை வழங்கியது.

சென்னை மருத்துவக் கல்லூரியின் சார்பில் திருமதி ராஜம் பாரதி நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவை ஆற்றினார் டாக்டர் கானு.

பாரிசவாயு என்னும் நோய் குறித்தும், ஜப்பானில் அளிக்கப்படுகின்ற சிகிச்சை குறித்தும், சிலைடுகள் காண்பித்து விரிவுரையாற்றினார்.

அப்போது அவர் தெரிவித்த சில செய்திகள் வருமாறு:

''பாரிசவாயு என்று சொல்லப்படும் பக்கவாத நோயினால் கடுமையாகத் தாக்கப்பட்டவர்களுக்கு மூளையில் அறுவைச் சிகிச்சை செய்யப்படுகிறது. அதனால் 24 மணி நேரத்திலேயே முன்னேற்றம் காணப்படுகிறது.

''எந்தவிதச் சிகிச்சையும் செய்ய இயலாது என்று கைவிடப்பட்ட நபர்கள் - இந்த நோயின் காரணமாக எந்தவிதச் செயல்பாடும் இல்லாத விதத்தில் பாதிக்கப்பட்ட நபர்கள்-இந்த அறுவைச் சிகிச்சையின் மூலம் பயன்பெற்றுள்ளனர் என்பது பல்வேறு ஆய்வுகளின் வாயிலாகத் தெரிய வந்துள்ளது.

''ஸ்டிமுலேட்டர் பொருத்தி அதன் மூலம் மூளையின் செயல்பாட்டைத் தூண்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதில் வெற்றி கிடைத்துள்ளது. உணர்வையே இழந்த அவர்கள், பிறர் சொல்வதைக் கேட்கவும் புரிந்து கொள்ளவும் தொடங்கியுள்ளனர்.

''ஜப்பான் நாட்டைப்பொறுத்த வரை பல்வேறு மருத்துவ, சுகாதார நடவடிக்கைகளின் வாயிலாக அங்குள்ள மக்களின் சராசரி வயது 75 ஆக உயர்ந்துவிட்டது.''

—நமது செய்தியாளர்



## டாக்டர் கானு

ஜப்பான் நாட்டு பூசிதா காருவென் கல்வாழ்வுப் பல்கலைக் கழக மருத்துவப் பள்ளியின் நரம்பியல் அறுவை மருத்துவத்துறைத் தலைவரும் பேராசிரியருமான டாக்டர் டெட்சு கானு, அனைத்துலக அறுவைச் சிகிச்சை நிபுணரெனப் போற்றப்படுபவர்.

டோக்கியோவின் தொன்மையான பெருமைமிக்க கேயோ பல்கலைக்கழகத்தில் இருபது ஆண்டுகளுக்கு முன்பு படித்துப் பட்டம் பெற்றவர் டாக்டர் கானு. உலகிலேயே மிகப் பெரிய பக்கவாதப் பிணி நலமையமாகக் கருதப்படும் மருத்துவமனைக்கு இவர் தலைவர் ஆவார்.

நூற்று முப்பத்தாறு நரம்பியல் அறுவை நிபுணர்கள் கொண்ட பதினாறு பெரிய மருத்துவமனைகள் இவரது நேரடி நிருவாகத்தில் இயங்குகின்றன.

அமெரிக்கா, ஜப்பான், பிரான்ஸ் முதலிய நாடுகளில் நடைபெற்ற அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் மாமன்றங்கள் பலவற்றிற்குத் தலைமை ஏற்றிருக்கிறார் டாக்டர் கானு.

டாக்டர் கானு, சீனா, பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, அமெரிக்கா, இந்தியா ஆகிய நாட்டுப் பல்வேறு பல்கலைக் கழகங்களில் சிறப்புப் பேராசிரியராகப் பொறுப்பேற்றுள்ளார்

நரம்பறிவியல் பொதுமைத் துறைத் தொடர்பாக முந்நூறுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும், இருபது நூல்களையும் எழுதியுள்ளார். தொற்றித் தொடராய்த் தீங்கு தரும் மூளைக் கட்டி நோய் நீக்க நோக்கும் இவர் ஆய்வு, வருங்காலத்தில் இந்நோயினின்றும் மனித இனத்தை உய்விக்க வழி உண்டாக்கும் எனக் கருதப்படுகிறது.



# சட்டமன்றம் நிறைவேற்றிய ஆட்சி மொழித் தீர்மானம்

இந்தி பேசாத மாநிலங்களில், ஆங்கிலமே ஆட்சி மொழியாக நீடிக்கும் என மறைந்த பிரதமர் நேரு அவர்கள் அளித்த உறுதிமொழி அரசியல் சட்டத்தில் இடம்பெற வலியுறுத்தும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்களின் தீர்மானத்தை, 13-11-'86 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்கள் முன்மொழிந்தார். அன்று வழக்கமான கேள்வி நேரம் சட்டப் பேரவையில் ரத்து செய்யப்பட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களின் தனித்தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்தத் தீர்மானத்தின் மீது பேசிய பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினர்.

பின்னர் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் விவாதத்தை முடித்து வைத்துப் பேசினார்.

அதன் பிறகு தீர்மானம் நிறைவேறியது.

தீர்மானத்தின் முழுவடிவம் வருமாறு:

''டாக்டர் அண்ணா அவர்கள் தமிழ் நாட்டின் முதலமைச்சராக இருந்தபோது, தமிழும் மற்ற தேசிய மொழிகளும் இணையத்தின் (யூனியனின்) ஆட்சி மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்படவேண்டும் என்றும், அதன்படியே அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்றும், இதை ஏற்கும் வரையில் ஆங்கிலம் மட்டுமே ஆட்சிமொழியாகத் தொடர்ந்து இருந்து வருதல் வேண்டும் என்றும் ஆட்சிமொழி பற்றி அரசமைப்புச் சட்டத்தில உள்ள அத்தியாயத்தைத் தக்கவாறு திருத்த வேண்டும் என்றும் இந்த மன்றம் 1968 ஜனவரித் திங்கள் 23-ஆம் நாள் தீர்மானம் நிறைவேற்றியது.

தற்போதைய முதல்வர் எம். ஜி. ஆர். அவர்கள், 'காலஞ்சென்ற அண்ணா அவர்களால் தெளிவுற உரைக்கப்பட்ட இருமொழிக் கொள்கையைச் செயல்படுத்துவதுதான் இந்த அரசின் உறுதியான கொள்கை' என்றும், 'இந்தக் கொள்கை தமிழ்நாட்டு மக்களின் விருப்பங்களை முழுமையாக எடுத்துரைப்பதோடு, அவற்றை முழுமையாகப் பிரதிபலித்து நிற்கிறது' என்றும் ஆளுநரின் உரை வாயிலாக, 1977 ஜூலைத் திங்கள் 7-ஆம் நாள் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

மேலும் சர்க்காரியா கமிஷனுக்கு 1985 டிசம்பர் திங்களில் இந்த அரசு அளித்த அறிக்கையில் ஆங்கிலத்தை அரசமைப்பின் எட்டாவது இணைப்புப் பட்டியலில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், எட்டாவது இணைப்புப் பட்டியலில் உள்ள எல்லா மொழிகளுமே இணையத்தின் ஆட்சி மொழிகளாக விளம்பபபட வேண்டும் என்றும் அத்தகைய முடிவொன்று எடுக்கப்படும் வரையிலும் ஆங்கிலத்தையே இணையத்தின் ஆட்சி மொழியாகத் தொடர்ந்து பயன்படுத்தி வர வேண்டும் என்றும் இந்த அரசு கருத்துத் தெரிவித்துள்ளது.

அவ்வப்போது இந்தி பேசாத மக்கள் மீது நேரடியாகவோ மறைமுகமாகவோ இந்தியைத் திணிப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவது, இந்திபேசாத மக்களுக்குப் பெருங்கவலையை ஏற்படுத்தி வருகின்றது. பொதுவாக, இந்தி பேசாத மக்களும் குறிப்பாகத் தமிழ்நாட்டு மக்களும் காலஞ்சென்ற பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களால தரப்பட்டு, காலஞ்சென்ற, திருமதி இந்திராகாந்தி அவர்களாலும் தற்போதைய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களாலும் மீண்டும் உறுதிபபடுத்தப்பட்டுள்ளதுமான, உறுதி மொழியானது, அதாவது இந்தி பேசாத மக்கள் மாற்றம் ஒன்றை விரும்பாதவரை ஆங்கிலமே இணையத்தின் ஆட்சி மொழியாகத் தொடர்ந்து இருந்து வரும் என்கிற உறுதிமொழியை அரசமைப்புச் சட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று மீண்டும் மீண்டும் வற்புறுத்தி வந்துள்ளனர்.

மையச் சட்டம் எண் 1—1968 இனால் திருத்தப்பட்ட ஆட்சிமொழிகள் சட்டத்தில் வழிமுறைகள் வெறும் சட்டரீதியான தன்மை வாய்ந்தவை என்பதால், நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையினரால நிறைவேற்றப்படும் ஒரு சட்டத்தினால் கூட இந்த வகை முறைகளை எந்தச் சமயத்திலும் மாற்றியமைத்துக் கொள்ள முடியும்—அல்லது ரத்து செய்து விட முடியும்; எனவே காலஞ்சென்ற பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களால் அளிக்கப்பட்டு, காலஞ்சென்ற திருமதி இந்திராகாந்தி அவர்களாலும், தற்போதைய பிரதமர் திரு ராஜீவ்காந்தி அவர்களாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ள உறுதிமொழிக்கு, அரசமைப்பு ரீதியான ஓர் அங்கீகாரத்தை அளிப்பதன் மூலமாக, ஆங்கில மொழியைத் தொடர்ந்து பயன்படுத்துவதற்குப் பெரிய அளவில் பாதுகாப்பினை உறுதிப படுத்திக் கொள்வது தேவையானதாக உள்ளது.

அத்தகைய ஓர் அரசமைப்பு சட்டத் திருத்தம்தான் இந்தி பேசாத மக்களின் மனத்தில் எழுந்துள்ள உண்மையான அச்ச உணர்வுகளையும் கவலைகளையும் நீக்குவதோடு, இந்தித் திணிப்பின் காரணமாக அவ்வப்போது எழுகின்ற குழப்பம், சீர்குலைவு, மற்றும் கடுமையான சட்டம் ஒழுங்கு சூழ்நிலைகள் ஆகியவற்றையும் தவிர்க்கும்.

அரசமைப்புச் சட்டத்தின் எட்டாவது இணைப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளவையும் சேர்க்கக் கருதப்பட்டு உள்ளவையுமான எல்லா மொழிகளையுமே இணையத்தின் ஆட்சிமொழிகளாக அங்கீகரிக்கும் வரை, ஆங்கில மொழியை மட்டும் இணையத்தின் ஆட்சிமொழியாகத் தொடர்ந்து பயன்படுத்தி வருவது பற்றி அரசமைப்பு ரீதியான உத்தரவாதம் கொடுப்பதற்காக, ஆட்சிமொழி தொடர்பான அரசமைப்புச் சட்டம் 17ஆம் பகுதியை உடனடியாகவும் அவசியமாகவும் திருத்தி அமைத்தல் வேண்டும் என்று இந்த மன்றம் தீர்மானிக்கிறது.''



# குழந்தைகள் மருத்துவத்திற்கு புதிய கட்டடம்

சென்னை - எழும்பூரில் உள்ள அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில், ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய 10 மாடிக்கட்டடத்தை மாண்புமிகு முதலவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் (8.12.86) திறந்து வைத்தார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு ப.உ. சண்முகம் அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற இவ்விழாவில், தமிழ்நாடு மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் லலிதா காமேஸ்வரன் வரவேற்புரையாற்றினார்.

பொதுப்பணித்துறைத்தலைமைப் பொறியாளர் திரு என். பாலசுப்பிரமணியம் புதிய கட்டடம் பற்றிய விவர அறிக்கை படித்தார்.

மருத்துவமனையின் இயக்குநர் டாக்டர் டி. துரைராஜ், உள்ளுறை மருத்துவ அலுவலர் திரு. சண்முகம், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை ஆணையர் மற்றும் செயலர் திரு ஆர். சண்முகம் ஆகியோர் இவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கினார்கள்.

விழா முடிவில் டாக்டர் நர்மதா நன்றி கூறினார்.

ஆசியாவிலேயே வேறெங்கும் இல்லாத அளவுக்கு மிகப் பெரியதான இந்தப் புதிய கட்டடத்தைத் திறந்து வைத்து, மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் ஆற்றிய உரை விவரம் வருமாறு:

''என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே!

என்னை வழி நடத்திச் செல்லும் பெரியோர்களே!

என் ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புக்களே!

இந்தியாவில் மருத்துவ சேவையில் சிறந்த மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று என்று சொல்லிக் கொள்வதில் நான் பெருமை அடைகிறேன்.

மக்களின் நல்வாழ்வில் மிகுந்த அக்கறை கொண்டவன் நான். ஆகவேதான் தமிழுக்கு ஒரு பல்கலைக் கழகம், பெண்களுக்கு ஒரு பல்கலைக் கழகம், அண்ணாவின் பெயரில் தொழில் கல்விக்கு ஒரு பல்கலைக் கழகம் அமைத்தேன்.

இன்று மருத்துவக் கல்விக்குப் பல்கலைக் கழகம் ஒன்று அமைத்து இருக்கிறேன் எனப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவில் இதுபோல் வேறு எங்கும் இல்லை. மருத்துவத் துறையில் சிறந்த வல்லுனர்கள் நமது தமிழ்நாட்டில் இருந்திருக்கிறார்கள். இப்போதும் இருந்து வருகிறார்கள்.

நீங்கள் எல்லோரும் உங்கள் கடமைகளை உணர்ந்து தொண்டு ஆற்றிட வேண்டும். அப்படிக் கடமை ஆற்றினால் நமது மருத்துவத் துறை உலகில் சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை.

உங்களுடைய சேவை கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கும் எளிதாகக் கிடைக்க வேண்டும். முக்கியமாகக் குழந்தை நலத்திற்குத் தொண்டு செய்வதைத் தங்கள் பிறவிப் பயனாக நீங்கள் கருத வேண்டும்.

இந்தியாவில் குழந்தைகளுக்கு எனத் தனியாக அமைத்துள்ள மருத்துவமனைகளில் இதுவே மிகப் பெரியதாகும்.

எந்தச் சமயத்திலும் 250 நோயாளிகளுக்கு மேல் சேர்க்கக் கூடாது. இந்தப் பல அடுக்கு கொண்ட புதிய கட்டடத்தைத் திறந்து வைக்கிறேன்; அதைக் குழந்தைகளின் நலனுக்காக அர்ப்பணிப்பதில் பெருமை அடைகிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!

நன்றி.

வணக்கம்''

—நமது செய்தியாளர்





# தரமேம்பாட்டின் முக்கியத்துவம்

ஒரு பொருளை உபயோகிப்பவர் வாங்கும்போது, அவரது குறிப்பிட்ட ஒரு தேவையை நிறைவு செய்வதற்காகவே வாங்குகிறார். பொருள் தயாரிப்பாளரும் இத்தகைய தேவைகளை நிறைவு செய்யக் கூடிய வகையில் பொருள் அமைய வேண்டுமென்ற கருத்தில்தான் உற்பத்தியை மேற்கொள்ளுகிறார். ஆனால் பெருவாரியான நேரங்களில் இவ்வாறு உற்பத்தி செய்யப்படக்கூடிய பொருள் எல்லாச் சிறப்புகளையும் கொண்ட ஒன்றாக அமைவதில்லை. எந்த ஒரு இலக்குக்கு உகந்ததாகப் பொருள் அமைய வேண்டுமென்று தயாரிக்கப்படுகிறதோ, அதற்கும் உண்மையில் தயாரிக்கப்பட்டு உபயோகிப்பாளருக்குக் கிடைப்பதற்கும் இடையே ஓர் இடைவெளி அமைந்து வருகிறது. இந்த இடைவெளி மிகக் குறுகியதாக அமைந்தால் பொருள் தரம் மிக்கது எனவும், இடைவெளி மிகப் பெரியதாயிருந்தால் தரமே இல்லாத பொருள் என்றும் கூறலாம்.

## தரம் என்றால் என்ன?

உபயோகிப்பவருக்குக் கிடைக்கப்படுகின்ற பொருள், அதன் விலை, தேவையானபோது அது உபயோகிப்பவருக்குக் கிடைக்கக் கூடிய தன்மை, உபயோகத்திற்கு மிகவும் உகந்ததாயிருத்தல் ஆகிய இந்த மூன்று அடிப்படைக் கூறுகளையும் நிறைவு செய்வதாக இருந்தால் அதனைத் தரமான பொருள் என்று கூறலாம். உற்பத்தியாகும் பொருள் அடிப்படையாகப் பெற்றிருக்க வேண்டிய குறிப்பிட்ட சில கூறுகளைக் கொண்டதாக உள்ளதா என்று அன்றாடம் உற்பத்தி நடவடிக்கைகளைப் பரிசீலிக்க எடுக்கப்படும் நடவடிக்கைகளையே தரக்கட்டுப்பாடு என்கிறோம். பெருவாரியான பொருள்களுக்கு, உபயோகிப்பாளர்களது தேவைகளைக்கால நிறைவு செய்திட அவை பெற்றிருக்க வேண்டிய கூறுகள் எவை எவை என்பதனை இந்தியத் தர நிர்ணய நிறுவனம், இது போன்ற இதர நாடுகளில் உள்ள நிறுவனங்கள் இவற்றால் நிர்ணயித்து, அறிவிக்கப்பட்டிருக்கின்றன. உற்பத்தியில் உபயோகிக்கப்படுகின்ற மூலப் பொருள்கள் பெற்றிருக்க வேண்டிய தரக் குறியீடுகள் எவை, இறுதியாக உற்பத்தியாகும் பொருளில் இருந்திட வேண்டிய தகுதிகள் இவையெல்லாம் இக்கூறுகளில் தெளிவுபடுத்தப்படுகின்றன. அதாவது, அடிப்படையாக அவற்றில் எதிர்பார்க்கப்படும் தன்மைகள் எவை, அதிகமாக எந்த அளவிற்கு அவை இருந்திடவேண்டும் என்பதெல்லாம் தெளிவாக எடுத்துச் சொல்லப்படுகின்றன.


**வி. சங்கரசுப்பையன், இ.ஆ.ப.,**
**ஆணையர் மற்றும் இயக்குநர், தொழில் வணிகத்துறை.**


நாடு சுதந்திரம் அடைந்த காலத்தில், நாட்டின் தேவைகளை நிறைவு செய்ய, பெரும்பாலும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதிகளையே எதிர்நோக்க வேண்டிய நிலை இருந்தது. கடந்த நாற்பதாண்டுகளில் நாட்டில் தொழில் வளர்ச்சி மிகவும் சிறப்பான முறையில் அமைந்திருந்த போதிலும், நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களின் தரம், பொதுவாக அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளின் பொருள்களின் தரத்தோடு ஒப்பிடக்கூடியதாக அமைந்திருக்கவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கதாகும். நம் நாட்டிலுள்ள தொழில்கள் நிலைத்து நின்று, மேலும் வளர்ச்சி காண வேண்டுமானால், தரத்தின் அடிப்படையிலேயே உள்நாட்டிலும் வெளிநாட்டுச் சந்தைகளிலும் போட்டியிடவேண்டிய நிலை தற்போது உருவாகியுள்ளது. தர உயர்வு, தர உத்தரவாதம் ஆகியவை தொழில் வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதவையாக உருவெடுத்துள்ளன.



## தரப்பரிசோதனை மற்றும் கட்டுப்பாட்டிற்குரிய வசதிகள்

பொருள்களின் தரத்தைப் பரிசோதனைகள் மூலம் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தொழில்களை ஊக்குவிப்பதற்கென, மைய, மாநில அரசுகள் பல்வேறு வசதிகளையும் சலுகைகளையும் அளிக்கின்றன.

## இந்தியத் தர நிர்ணய நிறுவனத்தின் சான்றிதழ்கள்

உற்பத்தியாகும் பொருள்களின் தரம் பற்றி உற்பத்தியாளரே எடுத்துச் சொன்னால் அது ஓர் விளம்பர உத்தியாகவே கருதப்பட வாய்ப்புண்டு. எனவேதான் பொதுவான ஓர் தேசிய நிறுவனம் பொருள்களின் தரத்தைப் பரிசோதித்து, தர உத்தரவாதத்திற்குச் சான்றளிக்கும் திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளது. இந்தச் சான்றிதழ்களைப் பெற்றிடும் சிறு தொழில்கள் வாங்கிடும் கடன் தொகைகளுக்குரிய வட்டியில், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் போன்றவை 1-2 சதவீத சலுகை அளிக்கின்றன. தரப் பரிசோதனைக்குரிய கருவிகளை வாங்க, சிறு தொழில்களிடமிருந்து ஏதும் எதிர்பாராமல் கடன் உதவி அளிக்கப்படுகிறது. மைய, மாநில அரசு நிறுவனங்கள் பண்டங்கள் வாங்குகையில், தரச் சான்றிதழ் பெற்றுள்ள பொருள்களுக்கே முன்னுரிமையளிக்கின்றன.

## பரிசோதனைக் கூடங்கள்

தொழில்கள், அவற்றின் பொருள்களின் தரப் பரிசோதனைகளை மேற்கொள்ள உதவும் நோக்குடன் மைய, மாநில அரசுகள் பல்வேறு இடங்களில் பரிசோதனைக்கூடங்கள் அமைத்துள்ளன.

தமிழக அரசு, சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய



இடங்களில் இரசாயனப் பரிசோதனை மறறும் பகுப்பாய்வுக் கூடங்களையும், தூத்துக்குடியில் உப்பு மற்றும் கடல் படு இரசாயனப் பொருள் ஆராய்ச்சி நிலையத்தையும், சேலத்தில் சவ்வரிசி பரிசோதனை நிலையத்தையும் அமைத்துள்ளது. இந்நிலையங்களால் வழங்கப்படும் தரப் பரிசோதனைச் சான்றிதழ்களை இந்தியத் தர நிர்ணய நிறுவனம் ஏற்றுக்கொள்ளுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும். மாநிலத் தொழில் வணிகத்துறையிடம், சிறு தொழில் பதிவுச் சான்றிதழ்கள் பெற்றுள்ள சிறு தொழில்களுக்குப் பரிசோதனைக் கட்டணத்தில் 50 சதவீதச் சலுகை அளிக்கப்படுகிறது என்பதும் இங்குக்குறிப்பிடத்தக்கது.

மின்னணு மற்றும் மின்சாரத் தொழில்களுக்கென, தரப் பரிசோதனை மற்றும் பொருள் அபிவிருத்தி நிலையங்கள் சென்னை, மதுரை, காக்களூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. காக்களூரில் உள்ள மின்சாரப் பரிசோதனைக்கூடத்தால் குறிப்பிட்ட சில மின்சாரப் பொருள்களுக்கு அளிக்கப்படும் தரச் சான்றிதழ்களை இந்தியத் தர நிர்ணய நிறுவனம், இந்திய இரயில் துறை, அஞ்சல் துறை பண்டங்கள் வாங்கும், விற்கும் துறை இவை ஏற்றுக் கொள்ளுகின்றன. மைய அரசின் 1981ஆம் வருடத்திய மின்சார வீட்டு உபயோகச் சாதனங்கள் தரக்கட்டுப்பாடு ஆணையைச் செயற்படுத்திடும் பொறுப்பு தொழில் வணிகத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தர உயர்வு, விலைக்குறைப்பு இவற்றின் மூலம் எந்த அளவிற்கு வளர்ச்சியடைந்த நாடுகளும் வியக்கும் வண்ணம் சர்வதேச வாணிபத்தில் தலை சிறந்து விளங்க இயலும் என்பதை ஜப்பான், உலகுக்குச் சந்தேகத்திற்கே இடமில்லாத வகையில் எடுத்துக் காட்டியுள்ளது. எனவே தொழில்களைப் பொறுத்தவரை தர அபிவிருத்திக்கான முயற்சிகள் தொடர்ந்து அன்றாட நடவடிக்கைகளில் ஒன்றாக உருவெடுக்க வேண்டிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.



# தரத்திற்கு உத்தரவாதம்

தரமான பொருள் என்ற உத்தரவாதம் தருவது ஐ.எஸ்.ஐ. முத்திரை.

இந்தியாவில் உருவான பொருட்களின் தரத்தை மதிப்பிட அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளின் பொருட்களின் தரம் பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்தப் பொருள் பிரிட்டனின் பொருளுக்குச் சமமானது என்று கூறித் தரம் பிரிக்கப்பட்டது. இருப்பினும், இந்தியப் பொருட்களின் தரத்தை மதிப்பிட இந்தியாவில் ஒரு நிறுவனம் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில், 1947-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 7ஆம் நாளன்று இந்தியத்தர நிறுவனம் ஐ.எஸ்.ஐ அமைக்கப்பட்டது.

இங்குப் பொருட்களின் தரம் முதலில் நவீன முறையில் பரிசோதிக்கப்படுகிறது. பின்னர் அறிஞர்களையும், நிபுணர்களையும் பிரதிநிதிகளையும் கொண்ட குழுவின் ஒப்புதல்படி ஐ.எஸ்.ஐ. முத்திரை பொறித்த அனுமதி வழங்கப்படுகிறது. வளரும் நாடுகளிலேயே இந்தியாவில் மட்டுமே தரத்தை முறையாகத் தீர்மானிக்கும் இப்படிப்பட்ட நிறுவனம் உள்ளது.

ஐ.எஸ்.ஐ. முத்திரை பெற உற்பத்தியாளர்கள் போட்டி போட்டுக்கொண்டு வருகின்றனர். ஏனெனில் ஐ.எஸ்.ஐ. முத்திரை பெற்ற பொருட்கள இந்தியாவிலும் வெளிநாடுகளிலும நுகர்வோரால் விரும்பி வாங்கப்படுகின்றன. இந்த முத்திரையைப் பதிக்கும் உரிமையைப் பெறுவது எளிதல்ல. கடுமையான தரப் பரிசோதனைக்குப் பின்னரே அனுமதி கிடைக்கும், பொதுவாக ஒரு ஆண்டிற்கு மட்டுமே உரிமை அளிக்கப்படுகிறது.

பின்னர், ஐ.எஸ்.ஐ. அலுவலர்கள், உற்பத்தியாகும் இடத்திற்குத் திடீரென்று சென்று பொருட்களின் தரத்தை ஆராய்வர். தரக் குறைவு தென்பட்டால் ஐ.எஸ்.ஐ முத்திரை உரிமம் மறுக்கப்படும் அல்லது ரூ. 50,000 வரை அபராதம் விதிக்கப்படும். தரம் மேலும் கூடியிருந்தால் சிறப்புச் சான்றிதழ் வழங்கப்படும். அதற்கு ஐ.எஸ்.ஐ. மதிப்பீட்டுச் சான்றிதழ்த் திட்டம் எனப் பெயர்.

ஐ.எஸ்.ஐ. முத்திரை பலதரப்பட்ட பொருட்களுக்கும் வழங்கப்பட்டு நுகர்வோரின் தெரிவை எளிதாக்குகிறது. வாங்கும் பொருள் தரமானதுதானா என்ற ஐயத்தைத் தீர்க்கிறது. மீறி ஐயம் எழுமானால் ஐ.எஸ்.ஐ. முத்திரையிடப்பட்ட பொருளை ஐ.எஸ்.ஐ. நிறுவனமே கட்டணமின்றிச் சோதித்துத் தருகிறது.

மில், கைத்தறித் துணி வகைகள், மிக்ஸி, கிரைண்டர், குக்கர், மின்சாதனங்கள், மருத்துவத் தொழில் நுட்பப்பொருட்கள், பிஸ்கட், வனஸ்பதி, காபி, பால் பவுடர் போன்றவற்றுக்கும்எடை அளவை போன்றவற்றுக்கும் ஐ.எஸ்.ஐ. முத்திரை வழங்கப்பட்டுள்ளது. உலகத்தர அமைப்பு நிறுவனத்தோடு தொடர்பு கொண்டு நவீன முறையில் தரம் தீர்மானிக்கப்படுகிறது.

ஐ.எஸ்.ஐ. ஆரம்பிக்கப்பட்ட பொழுது அதனுடைய உறுப்பு அமைப்புகள் 333 ஆகும். இன்று அது சுமார் 4000க்கும் மேலாக உயர்ந்துள்ளது. இந்த நிறுவனத்தின் சந்தாத்தொகை ரூபாய் ஒன்றரை இலட்சத்திலிருந்து ரூபாய் இரண்டு கோடியாக உயர்ந்திருக்கிறது. இந்நிறுவனம் சுமார் 12,000 அல்லது 13,000 பொருட்களுக்குத் தரம் நிர்ணயித்துள்ளது. ஆண்டுக்கு ரூபாய் 12 கோடிக்கு வரவு செலவைக் கொண்டிருக்கும் ஐ.எஸ்.ஐ. நிறுவனம் மேலும் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது.

ஐ.எஸ்.ஐ. நிறுவனத்திற்கு உற்பத்தியாளர்கள், நுகர்வோர்கள் ஒத்துழைப்பு இருப்பதால் சீரிய முறையில் பணி ஆற்ற முடிகிறது.





# மதுராந்தகத்தில் மக்கள் நலப்பணிகள்

மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து, வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுவதில் இந்தியாவிலேயே முன்னோடியாகத் திகழ்கிறது தமிழ்நாடு அரசு. அதனை மெய்ப்பிக்கும் வகையில், மக்கள் நலப்பணிகள்-வளர்ச்சிப் பணிகளில் நமது அரசு கொண்டுள்ள ஆர்வத்தையும்அக்கறையையும் எடுத்துக்காட்டியது அண்மையில் மதுராந்தகத்தில் பதினைந்துகோடி ரூபாய்க்குமேல் செலவிடப்படும் வளர்ச்சித் திட்டங்களை நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்த நிகழ்ச்சி !

மதுராந்தகம் நகருக்கு வருகை தந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்களை வரவேற்க, 28-11-86 அன்று செங்கை நகரமே விழாக் கோலம் பூண்டிருந்தது.

மதுராந்தகம் நகரில் 72 திட்டங்களைத் தொடங்கி வைக்கவும், ஏரியின் சீரமைப்புப் பணியினைப் பார்வையிட்டு மதகுகள் கட்டப்பட்டிருப்பதை இயக்கி வைக்கவும் முதல்வர் வருகை தந்தார்.

சென்ற ஆண்டு தீபாவளியின் போது மதுராந்தகத்தில் வெள்ளக்காடு. வாழ்க்கையில் இருள் சூழ்ந்து இன்னல் விளைந்தது. இந்த ஆண்டும் வெள்ளம்தான்— ஆனால் இது மக்கள் வெள்ளம். ஒளி தவழ்ந்து, ஒவ்வோருவர் முகத்திலு மகிழ்ச்சிப் பூக்கள், ஓ! மக்கள் பாரம் தாங்காமல் மதுராந்தகம் அமுந்திவிடப் போகிறது!

'அப்படி ஆகாது. ஏரி காத்த ராமரைப்போல், எங்களைக் காக்கும் ராமரின் காலடியல்லவா படுகிறது...'

பல்லாயிரம் மக்கள் பங்கேற்ற மதுராந்தகம் விழா, செங்கை மாவட்டத்தில் ஒரு சரித்திரம் படைத்தது. மகளிர் பெரும் எண்ணிக்கையில் கலந்துகொண்டனர். கொட்டும் மழையையும் பொருட்படுத்தாத கூட்டம். விழா மேடை, வழித் தடங்கள், நகரின் முக்கிய வீதிகள் மின் அலங்காரம் செய்யப்பட்டு, கண்கொள்ளாக் காட்சியாக இருந்தன.

வழி நெடுக வரவேற்புத் தோரணங்கள்... வாழ்த்தியும் வணங்கியும், போற்றியும் பாராட்டியும் ஒட்டப்பட்ட வண்ணச் சுவரொட்டிகள்.....குழந்தைகள் முதல் பெரியோர்கள் ஈறாக அனைவர் முகங்களிலும் ஆனந்தக் களிப்பு.....

விழாவில் கலந்து கொள்ள மாண்புமிகு முதல் அமைச்சர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்கள் இரவு 7 மணிக்கு வந்தபோது தாரை, தப்பட்டை, வாண வேடிக்கைகள் முழங்க, மக்கள் கடல், மகிழ்ச்சியால் கொந்தளித்து ஆர்ப்பரிக்க, சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

விழாவில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் பேசியதாவது:

"என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே, என்னை வழி நடத்திச் செல்லும் பெரியோர்களே, என் ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புகளே, இந்த மாபெரும் விழாவில் நான் பங்குகொண்டு உங்



களைக் காண்பதுல் மிக்கமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த அரசு வெள்ளம், வறட்சி போன்ற நேரங்களில் போர்க் கால வேகத்தில் பணியாற்றி வருகிறது. புயல் மற்றும் வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புகளை வேகமாகச் சரிசெய்து வந்திருக்கிறது.

மதுராந்தகம் ஏரி உடைப்பு ஏற்பட்டபின் குறுகிய காலத்தில் பழுது பார்க்கப்பட்டது. இன்று ஏரி முழுவதும் செப்பனிடப்பட்டு விட்டது.

ஏரியில் நீர்ப்பாசனத்தை அதிகரிக்கும் வகையில் உயர்மட்டக் கால்வாய் கட்டப்பட இருக்கிறது.

இதனால் வெள்ள அபாயம் தடுக்கப்படும். அதற்கான பணிகளை இன்று ஆரம்பித்து வைப்பதில் பெருமையடைகிறேன்.

அதனால் மேலும் 31 கிராமங்கள் பாசன வசதி அடையும்.

இத்திட்டத்துக்கு 4.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது.

மக்களின் வசதிகளைப்பெருக்கவும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் இந்த அரசு பல வளர்ச்சிப் பணிகளைச் செய்து வருகின்றது. 6 நகரங்களுக்கும் 54 ஒன்றியங்களுக்கும் மொத்தம் 3 கோடியே 86 இலட்சம் செலவில் குடிநீர்த்திட்டப் பணிகள் இன்று தொடங்கி வைக்கப்பட்டு இருக்கின்றன.

நலிவுற்ற மக்களின் நல்வாழ்வில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டு உள்ளது. ஆதிதிராவிடர்களுக்குச் சிறுதொழில் நடத்த உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு உதவித்தொகை, ஏழைகளுக்கு நிலம் மற்றும் வீட்டு மனைப்பட்டாக்கள் ஆகியவை வழங்கப்படுகின்றன.

அண்ணா நாமம் வாழ்க!
நன்றி வணக்கம்.''

**வளர்ச்சிப் பணிகள்-**
**மக்கள் நலப்பணிகள்:**

பொதுப்பணித் துறையினரால் மதுராந்தகம் ஏரி உயர் மட்டக் கால்வாய் வெட்டும் திட்டம். இந்தத் திட்டத்தால் 31 கிராமங்கள் பயனடையும். இதற்கு ஆகும் செலவு ரூ. 4.5 கோடி.

தமிழ்நாடு ஆழ்கிணறு வாரியம், குழாய்க் கிணறுகள் அமைக்கத் தேவையான துளைக்கருவிகள் வாங்குவதற்காக ஒரு கோடியே 16 இலட்சம் ரூபாயினை அரசு வழங்கியது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் முடிக்கப்பட்ட பணிகள் நான்கு ஆகும். இதற்காகச் செலவிடப்பட்டுள்ள தொகை ஏறத்தாழ ரூபாய் ஆறரை லட்சம். குடிநீர்வடிகால் வாரியம் தொடங்கவிருக்கும் 60 புதிய பணிகளுக்கு ஆகும் செலவு ஏறத்தாழ 3 கோடியே 87 இலட்சம்.

மதுராந்தகம் நகராட்சியில் அமைக்கப் பெறும் திட்டங்கள்— 100 குடிநீர்க் குழாய்கள், 17 மெர்குரி ஆவி விளக்குகள் அமைக்கச் செலவிடப்படும் தொகை ரூ. 14 லட்சத்து 64 ஆயிரம்.

ரூபாய் எட்டு லட்சம் செலவில் கட்டவிருக்கும் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகப் பணிமனை கால்கோள் விழா.

மதுராந்தகம் வட்டம் வீரண்ணகுன்னம் கிராமத்தில் ஏறத்தாழ 3 லட்சம் ரூபாய் செலவில் பள்ளி வகுப்பறைகள் கட்டும்பணி.

செங்கல்பட்டு கோட்டத்தில் ஊராட்சி ஒன்றியங்களில் 96 பணிகள். இப்பணிகளுக்கு ஆகும் செலவு ரூ. 17 லட்சத்து 64 ஆயிரம்.

ரூபாய் நான்கு லட்சம் செலவில் மாமண்டூர் ஆதிதிராவிடர் செங்கல் தொழிலாளர் தொழில் கூட்டுறவுச் சங்கத்தின் செங்கற் சூளை கால்கோள் விழா.

இந்தப் பணிகளோடு, 2831 பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கியும் ஆதரவற்றோர் 89 பேருக்கு உதவித்தொகை வழங்கியும். சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 466பேருக்குஉதவித் தொகை வழங்கியும்,பிற்படுத்தப் பட்டோர் நலத்துறையினரால் அளிக்கப்படும் தொழில் கருவிகளை வழங்கியும்-

ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தின் சார்பில் காஞ்சி வட்டம் வளத்தூரில் துணை சுகாதார நிலையத்தைத் திறந்து வைத்தும், நலிந்தோர் கடன், இறந்த அரசு ஊழியர்களுக்குக் குடும்பநல நிதி முதலிய உதவித் தொகைகளை வழங்கியும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறப்புச் செய்தார்.

**விழா நிகழ்ச்சி**

மதுராந்தகத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு வருகை தந்த அனைவரையும் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு பி. பாண்டியன், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்றார். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் அவர்கள், தலைமை வகித்தார். மாண்புமிகு ஊரகத்தொழில்துறை அமைச்சர் திரு ஆனூர் கோ. ஜெகதீசன் அவர்கள் முன்னிலை வகித்தார். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தலைவர் திரு எஸ். டி. உக்கம்சந்த், தமிழ்நாடு விவசாய உயர் மட்டக் குழுத் தலைவர் திரு முனுஆதி, கதர் கிராமத்தை தொழில் வாரியத் துணைத் தலைவர் கவிஞர் நா.காமராசன், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன், சட்டப்பேரவை உறுப்பினர்கள் திரு ஜி. கே. ஜெயபாரதி மற்றும் திருமதி டி. யசோதா ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மாவட்ட வருவாய் அலுவலர் திரு சா. ராமதாஸ் நன்றி நவின்றார்.

விழாவில் முன்னதாகப்பொதுப் பணித்துறை(பாசனம்)தலைமைப் பொறியாளர் திரு எஸ். முகமது முஸ்தபா திட்ட விளக்கவுரையை வாசித்தார். அவ்வுரையில், 'மதுராந்தகம் ஏரிக்குக் கூடுதலாக வரும் வெள்ள நீரை வெளியேற்ற உடைப்பட்ட இடத்தில் ரூ. 84 லட்சம் செலவில் புதிய கலிங்கல் கட்டி முடிக்கப்பட்டு இருக்கிறது. இதன் மூலம் ஏரியின் முழு நீர் மட்டத்துக்கு வரும் முன்பே வினாடிக்கு 5 ஆயிரம் கன அடி தண்ணீரை வெளியேற்ற முடியும். இதனால், வெள்ளக் காலத்தில் உடைப்பு ஏற்படாது'' என்று அவர் குறிப்பிட்டார்.

—நமது செய்தியாளர்

## சிறு சேமிப்பில் சிறந்த சாதனை

**இந்தியாவில் தனியார் துறையில், சம்பளப் பட்டியல் சேமிப்புத திட்டத்தில் மிகச் சிறப்பாகப் பணியாற்றி வருவதற்காக, மதுரை கோட்ஸ் நிறுவனம் 1985-86ஆம் ஆண்டுக்கான விருது பெற்றிருக்கிறது. 6,000 தொழிலாளர்களைக் கொண்ட இந்த நிறுவனத்தில் 6,950 சேமிப்புக் கணக்குள் இருக்கின்றன. மாதந்தோறும் தொழிலாளர்கள் இக்கணக்குகளில் ரூ. 1,95,000 முதலீடு செய்கிறார்கள்.**






முழு விவரங்களுக்கு, அருகிலுள்ள நியூ இந்தியா ஆபீஸ் அல்லது ஏஜெண்டோடு தொடர்பு கொள்ளுங்கள்.

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்

**இன்சூரன்ஸ்—நஷ்ட காலத்தில் நம்பகமான ஆதரவு!**



# தரமே பெருமை தரும்

அனைத்துப் பொருட்களின் தரத்தை மேம்படுத்த, தரமென்றால் என்ன என்பதை மக்கள் அறியச் செய்ய 1986ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் இந்தியா முழுதும் தரமேன்மைத் திங்களாகக் கொண்டாடப்பட்டது.

தரப் பராமரிப்பின் அவசியம், உற்பத்தியாளரின் கடமை, நுகர்வோரின் தர உணர்வு இவை குறித்து விழிப்புணர்ச்சி ஏற்படுத்த அரசின் சார்பிலும் தனியார் நிறுவனங்கள் சார்பிலும் கருத்தரங்குகள், விளக்கக்கூட்டங்கள் நடத்தப்பட்டன.

தமிழ்நாடு அரசு தொழில் துறையின் சார்பில் மாநில அளவிலான சிறப்புக் கூட்டம் ஒன்று 28.11.86 அன்று சென்னையில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு வருகை தந்தோரைத் தொழில்துறை ஆணையர் மற்றும் செயலர் திரு.வெ. செல்வராஜ், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்றார்.

மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.க.இராசாராம் அவர்கள் குத்து விளக்கேற்றி வைத்து நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார்.

அப்பொழுது அவர்குறிப்பிட்டதாவது:

''அனைத்துப் பொருட்கள் தயாரிப்பிலும் அதிக உற்பத்தித் திறன், செலவுக் குறைப்பு, நல்ல தரம், நியாயமான லாபம் இவற்றை முன்னிறுத்திச் செயல்பட்டால் அது மக்களுக்கு ஆற்றும் சிறந்த சேவையாக அமையும். தரமான பொருட்களை உற்பத்தி செய்வதில் அக்கறை காட்ட வேண்டும்.

பொருட்களை வாங்கும்போது எந்தவொரு நாட்டிலும் இல்லாத நிலைமை நம் நாட்டில் உள்ளது. அதுதான் கலப்படம். அடுத்தது பேரம் பேசும் தன்மை. விலை சற்று அதிகம் இருந்தாலும் தரமான பொருட்களையே நுகர்வோர் வாங்க வேண்டும். கலப்படம் பல கிராமங்களில் இன்றும் இருந்து வந்தாலும் கூட்டுறவு, தனியார் துறைகளில் தரமான பலபொருள் அங்காடிகள் பெருகி உள்ளதால் தற்போது பரவ வில்லை.

பொருட்களைப் பரிசோதனை செய்யத் தமிழக அரசின் சார்பில் ஆராய்ச்சிக் கூடங்கள் பலவற்றை உருவாக்கி வருகிறோம். மின்னணு, இரசாயனம் போன்ற பொருட்களின் தரத்தைப் பரிசோதிக்கவும் ஆய்வுக் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 84-85 ஆம் ஆண்டில் 30,000 பொருட்களும், 85-86ஆம் ஆண்டில் 60,000 பொருட்களும் பரிசோதிக்கப்பட்டன. இதன காரணமாக அகில இந்திய மார்க்கெட்டில் நமது பொருட்களுக்கு நல்ல மதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

நுட்பமான சோதனை வசதிகள் கொண்ட பரிசோதனை நிலையங்களைத் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் இந்தியத் தர நிர்ணயக் கழகம் ஏற்படுத்த வேண்டும்.

தமிழ்நாட்டில் உள்ள பரிசோதனை நிலையங்களில் இரசாயனத் தொழில் தொடர்பான பொருட்களைச் சோதனை செயயச் சோதனைக் கட்டணத்தில் பாதித் தொகைக் கட்டணச் சலுகையை மின்சாரம் மற்றும் மின்னணு தொழில்களுக்கும் விரிவுபடுத்த அரசு முடிவு செய்துள்ளது''.

'உற்பத்தித் திறன் உயர்விற்குத் தர நிர்வாகம்' என்ற தலைப்பில் 'இண்ட்செம்' எலக்ட்ரானிக் நிறுவனத்தின் தலைவர் திரு எஸ். குமார் உரையாற்றினார். தரக் கட்டுப்பாட்டை ஒரு கலாச்சாரமாகக் கருதிச் செயல்பட வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாடு சிறுதொழில்கள் சங்கத் தலைவர் திரு கே.யூ. நாயுடு 'தரம் -சீரிய பொருள் விற்பனைக்கு ஒரு கருவி' என்ற தலைப்பில் உரையாற்றுகையில், 'நுகர்வோரின் நலனைப் பாதுகாக்கும் வகையில் தர மேம்பாடு கொண்ட பொருட்களை உற்பத்திசெய்வது உற்பத்தியாளரின் கடமை. அப்பொருட்களுக்கு தமது ஆதரவைத் தருவது மக்களின் பொறுப்பு' என்றுகூறினார்.

ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் திரு.வி.சங்கரசுப்பையன் இ.ஆ.ப. நன்றி நவின்றார்.

இந்நிகழ்ச்சிக்குத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் ஆகியவை ஒத்துழைப்பு நல்கின.



# தெலுங்கு கங்கைத் திட்டம் விரைவில் நிறைவேற தீவிர நடவடிக்கை

''சென்னைக்குக் குடிநீர் வழங்குவதற்கான தெலுங்கு-கங்கைத் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற ஆந்திர முதல்வர் என்.டி. ராமராவைச் சந்தித்துப் பேசுவேன்'' என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் அறிவித்தார்.

சென்னை நகருக்கான குடிநீர்த் திட்டங்கள், கழிவு நீர்த்திட்டங்கள், ஐக்கிய நாட்டுக்குழு நீர் ஆய்வுத் திட்டம் ஆகிய ரூ.15 கோடிக்கான திட்டப்பணிகளை 27.11.86 அன்று அறிஞர் அண்ணா நகர் திருமங்கலத்தில் மாணபுமிகு முதலவர் டாக்டா எம்.ஜி.ஆர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்:

''என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே, என்னை வழி நடத்திச் செல்லும் பெரியோர்களே, ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புகளே, இந்த அரசு தமிழக மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதில் தீவிரப் பணி ஆற்றி வருகிறது.

''நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டபின், குடிநீர் வழங்குவதற்காக இதுவரை 428 கோடி ரூபாய் செலவு செய்துள்ளோம். அதில் 60 கோடி ரூபாய் சென்னைப் பெருநகருக்காக மட்டும் செலவு செய்துள்ளோம்.

''வறட்சிக் காலங்களில் தண்ணீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்க பல இடங்களிலிருந்து வாகனங்களில் தண்ணீர் கொணடு வந்து வழங்கப்படுகிறது. சென்னைப் பெருநகருக்குத் தண்ணீர் தாராளமாகக் கிடைக்க ஆந்திர மாநில அரசு உதவியுடன் தெலுங்கு கங்கைத் திட்டம் உருவாக்கப்பட்டது. இதற்கான பணிகள் தமிழக எல்லைக்குள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்தத் திட்டத்தின் செயலாக்கம் குறித்து பிரதமருக்கும், ஆந்திர முதல்வருக்கும் கடிதம் எழுதி இருக்கிறேன். ஆந்திர முதல்வருடன் விரைவில் பேசப் போகிறேன்.

''சென்னைப் பெருநகரில் மேலும் பல பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கத் திட்டம் போடப்பட்டுள்ளது. பல இடங்களில் கழிவு நீரகற்று நிலையங்கள் உருவாக்கப்பட இருக்கின்றன. இந்தத் திட்டங்களுக்காகச் சுமார் 15 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பணிகளின் முதல் கட்டமாக அண்ணா நகர் மேற்கு மற்றும் வில்லிவாக்கம் பகுதிகளுக்கான குடிநீர்த் திட்டங்களுக்கு ரூ.3.75 கோடி செலவிலான திட்டம் இன்று தொடங்கப்படுகிறது.

''இவற்றை உங்களுக்கு அர்ப்பணிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் திட்டங்களால் நீங்கள் நல்ல பயன் பெறுவீர்கள் என்று வாழ்த்துகிறேன்.

''அண்ணா நாமம் வாழ்க, நன்றி, வணக்கம்''.

முன்னதாக, சென்னைப் பெருநகர்க் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தலைவர் திரு ஜேப்பியார் அவர்கள் வரவேற்றுப் பேசுகையில்—

''ரூபாய் பதினைந்து கோடிக்கான இந்தத் திட்டங்களில் ஏறத்தாழ பத்துக் கோடி ரூபாய் மட்டும் குடிநீர்த திட்டத்துக்கானவையாகும். அத்தியாவசியத் தேவையான இந்தக் குடிநீர்த் திட்டத்தை ஒரு காண்டிராக்டரிடம் விட்டால் மூன்று ஆணடுகள் ஆகும் என்று சொன்னார்கள். விரைவில் நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகப் பலபேர் மூலமாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடிவு செய்திருக்கிறோம். அந்தவகையில் 12 மாதங்களில் குடிநீர் கிடைக்கும் அளவில் செய்யப்படும்'' என்றார்.

மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் திரு க. ராசாராம் அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில்:

''வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த விழாவில், சுத்தமான சுகாதாரமான குடிநீர்த் திட்டப் பணிகளுக்கு அடிகோலப்படுகின்றது. குடிதண்ணீர் வாரி வழங்குகிற ஒப்பற்ற வள்ளலாகப் புரட்சித்தலைவர் அவர்கள் விளங்குகிறார். கடந்த ஒன்பது ஆண்டுக்காலத்தில் எத்தனையோ காரியங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. கோயில்களில் ஒரு புரட்சியை உண்

# ரூ.15 கோடி செலவில் பயனுள்ள திட்டங்கள்

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள், ரூ 15 கோடிச் செலவில் சென்னை நகருக்கான குடிநீர்த் திட்டங்கள், கழிவு நீர்த்திட்டங்கள், ஐக்கிய நாட்டுக்குழு நீர் ஆய்வுத்திட்டம் ஆகியவற்றை மேற்கு அண்ணா நகரில் தொடங்கி வைத்தார். அவற்றின் விவரம் வருமாறு:

கொளத்தூர், வில்லிவாக்கம் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்:

மதிப்பீடு ரூ. 277 இலட்சம்
பயன்பெறும் மக்கள்தொகை 92,000
குடிநீர் அளவு: நாளொன்றுக்கு 46.44 மில்லியன் லிட்டர்.
குடிநீர்க் குழாய்களின் நீளம்: 8.6.கி.மீ.

திருமங்கலம், மேற்கு அண்ணாநகர், மத்திய அரசு குடியிருப்புப் பகுதிகள் ஆகியவற்றிற்கு மேலே கூறப்பட்ட திட்டத்தின் தொடர்ச்சியாகக் குடிநீர் வசதி அளித்தல்:

மதிப்பீடு: ரூ.141 இலட்சம்.
பயன்பெறும் மக்கள்தொகை 78,390.
குடிநீரின் அளவு: நாளொன்றுக்கு 5.59 மில்லியன் லிட்டர்.
குடிநீர்க் குழாய்களின் நீளம்: 8.60 கி.மீ.

எருக்கஞ்சேரி, கொடுங்கையூர் பகுதிகளில் குடிநீர் வசதியில்லாத பகுதிகளுக்குக் குடிநீர் வசதியளித்தல்:

மதிப்பீடு: ரூ.146 இலட்சம்
பயன்பெறும் மக்கள்தொகை:27,000
குடிநீர் அளவு; நாளொன்றுக்கு 1.89 மில்லியன் லிட்டர்.
குடிநீர்க் குழாய்களின் நீளம்: 36 கி.மீ.

திருவான்மியூர் தெற்குக் கரையோரப் பகுதிகளிலிருந்து நிலத்தடி நீரினைக் கொணர்ந்து தென்சென்னைத் தொகுதி, திருவான்மியூர், கனகம்-தரமணி, வேளச்சேரி பகுதிகளுக்கு வழங்குதல்:

திட்ட மதிப்பீடு: ரூ.250 இலட்சம்
மக்கள்தொகை: 64,000
நீர்த்தேவை நாளொன்றுக்கு 3.36 மில்லியன் லிட்டர்.
குடிநீர்க் குழாயின் நீளம்:சுமார் 18 கி.மீ.

கழிவுநீரகற்று வசதி;

அரும்பாக்கம் மேற்குப் பகுதிகளுக்குக் கழிவு நீரகற்று வசதியமைத்தல்:

மதிப்பீடு : ரூ.273 இலட்சம்
பயன்பெறும் மக்கள் தொகை: 27,000
கழிவு நீர்க் குழாய்களின் நீளம்: 16. கி.மீ.

பெரியார் நகருக்குக் கழிவு நீரகற்று வசதியளித்தல்:

மதிப்பீடு: ரூ.232 இலட்சம்
பயன்பெறும் மக்கள் தொகை 15,000
கழிவுநீர்க் குழாய்களின் நீளம்: 13 கி.மீ.

ஐக்கிய நாட்டு வளர்ச்சிக் குழு ஆய்வு - ரூ. 148 இலட்சம் :

ஐக்கிய நாட்டு வளர்ச்சிக் குழு தன்னுடைய முதல் கட்டமாகிய நிலநீர் ஆய்வு மற்றும் செயற்கை நில ஊடுறுவு மூலம் நிலத்தடி நீரைச் சிக்கனமாக உபயோகப்படுத்தும் வழியைக் கண்டறிந்தது. அதன் தொடர்ச்சியாக 2 வது கட்டமாக ஏரிகளின் நீரையும் நிலத்தடி நீரையும் ஒருங்கிணைத்து வழங்கும் முறையைக் கையாள்வதற்காக ஆய்வு செய்ய உள்ளது.

பகுதி ஐந்து அலுவலகம் கட்டுதல்:

மதிப்பீடு:ரூ. 10.00 இலட்சம்.

அண்ணாநகர் பகுதியைச் சார்ந்த மக்கள் நுகர்வோர் தேவைகளான குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வசதிகளில் ஏற்படும் குறைபாடுகளை கவனிப்பதற்காக அப்பகுதியிலேயே பகுதி-5 அலுவலகம் கட்டப்படும்.

டாக்கியவர் நமது புரட்சித்தலைவர் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள பல் கோயில்களில் சமபந்தி போஜனத்தைக் கொண்டு வந்தவர். வேளாண்மை பெருகிட, சிறு விவசாயிகள் வாழ்ந்திட மானியங்கள் தந்தவர்: தொழில் துறையில் வளம்பெருகிட உதவி வருபவர்'' என்று கூறினார்.

சென்னைப் பெருநகர்க் குடிநீர் நிர்வாக இயக்குநர் திரு துரைசுந்தரேசன், இ.ஆ.ப. அவர்கள் குடிநீர்த் திட்டப் பணிகளை விளக்கிக் கூறினார்.

திரு ஜெயபாரதி எம்.எல்.ஏ., அவர்கள் பேசுகையில், ''இருபது அம்சத் திட்டத்தினை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு முதல் மாநிலமாக விளங்குகிறது'' என்றார்.

திருமதி வளர்மதி எம்.எல்.ஏ., அவர்கள் பேசுகையில், ''தண்ணீர் பிரச்சினை போக்குகின்ற வகையில் பல நல்ல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன' என்றார்.

குடிசைமாற்று வாரியத் தலைவர் திரு பா அங்கமுத்து அவர்கள் பேசுகையில்;''மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் ஆட்சியில், ஏழைகள் ஏற்றம் பெற்று வருகிறார்கள். அவர்களின் வீட்டுக் கஷ்டத்தைப் போக்கக் கோடிக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கிக் குடியிருப்புகளைக் கட்டி வருகிறார்'' என்றார்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு திருப்பூர் மணிமாறன் அவர்கள் பேசுகையில், ''வீட்டு வசதி வாரியப் பணிகளை, அமெரிக்கா, ஜெர்மனி நாட்டிலிருந்து வந்த குழுவினர் மிகவும் பாராட்டியுள்ளார்கள். இதேபோல சத்துணவுத் திட்டத்தையும் மேலை நாட்டினர் வெகுவாகப் பாராட்டியுள்ளார்கள்'' என்றார்.

வாரியத்தின் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசாக வெள்ளித் தட்டு ஒன்றை, திரு ஜேப்பியார் அவர்கள் வழங்கினார்.

—நமது செய்தியாளர்





# வீழ்ச்சியுற்ற தமிழகத்திற்கு எழுச்சி தந்தவர்

''வீழ்ச்சியுற்ற தமிழகத்திற்கு எழுச்சி தந்தவர்; அரண்மனையிலே உலவிய அழகு தமிழை ஆலமரத்தடிக்குக் கொண்டு வந்தவர், பண்டிதர் மத்தியிலே விளங்கிய தமிழைப் பாமர மக்கள் மத்தியிலே கொண்டு வந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்'' என்று மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் புகழாரம் சூட்டினார்.

உலகத் தமிழராய்ச்சி நிறுவனத்தின் சார்பில், பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப்படத் திறப்பு விழா மற்றும் தமிழகக் கலைச் செல்வங்கள் தொடர்க் கருத்தரங்கத் துவக்க விழா 28.[illegible] அன்று சென்னை தேவநேயப் பாவாணர் மாவட்ட மைய நூலகத்தில் நடந்தது.

பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்:

''யார் இந்த நிறுவனத்தை உருவாக்கக் காரணமாக இருந்தார்களோ, அவரது திருவுருவப்படத்தைத் திறந்து வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லுக்குச் சொல் சுவை ஏற்றியவர்கள்; பொருளுக்குப் பொருள் ஏற்றம் தந்தவர்கள்.

''பேரறிஞர் அண்ணா அவர்களிடம் இரண்டு வன்மைகள் இருந்தன. ஒன்று நாவன்மை. மற்றொன்று பேனா வன்மை. இதைத் தவிர அவருக்குப் பண வன்மை போன்ற எதுவும் இருந்ததில்லை.அவர் மிகமிகச் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர். எளிய வாழ்க்கையை மேற்கொண்டவர். 'அவரைப் போன்று இவர்' என்று சொல்வதற்கு எவரும் இல்லை; அவருக்கு இணையே இல்லை''.

தமிழ் வளர்ச்சி உயர் மட்டக் குழுத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ சிவஞானம் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்:

''தமிழைப் பயிற்று மொழியாகப் படித்தவர்களுக்கு, அரசுப் பணியில் முதலிடம் தரப்படும் என்று அறிவித்தால் அதனால் பயன் ஏற்படும் என்று கருதுகிறேன். உலகில், ஒவ்வொரு துறைக்கும் பத்திரிகைகள் இருக்கின்றன. அதைப் போல ஆட்சிமொழித் துறைக்கும் பத்திரிகை அவசியமாகும். 'தமிழாட்சி' என்ற பெயரில் ஒரு பத்திரிகையை அரசு தொடங்கலாம். இது ஒரு 'கெஜட்' மாதிரி விளங்க வேண்டும். ஆட்சிமொழி தொடர்பான ஐயங்களைத் தெளிவுபடுத்துவதாக இந்த இதழ் அமைய வேண்டும்''

தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறைச் செயலர் டாக்டர் ஔவை நடராசன் அவர்கள் பேசுகையில், ''இந்த நிறுவனம் தலை சிறந்த கோட்பாட்டை விரிந்த அளவில் பன்முகத்தால் ஆராய்கின்ற நிறுவனமாகத் திகழவேண்டும்'' என்று கூறி, கருத்தரங்கம் வெற்றிபெற வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டார்.

தொடக்கத்தில், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் டாக்டர் அ.நா பெருமாள் வரவேற்புரை நிகழ்த்தினார்:

''இந்த நிறுவனம் 1968 இல் பேரறிஞர் அண்ணா அவர்களின் உள்ளத்து உணர்ச்சியாக உருவம் பெற்றது. நிறுவனம் இதுவரை 126 நூல்களை வெளியிட்டுள்ளது. தமிழ் அல்லாதவர்க்கான மொழிப் பயிற்சியையும் நிறுவனம் தருகிறது. தமிழ் நாடகக் கலைக்களஞ்சியம் ஒன்றையும் தயாரித்து வருகிறது.

''பாரெல்லாம் பரந்து வாழும் தமிழர்களைப் பற்றிய தொகுப்பு நூல் ஒன்றை நிறுவனம் வெளியிட முனைந்துள்ளது. இது 1987 இல் வெளிவரும்''.

உலகத் தமிழராய்ச்சி நிறுவனப் பேராசிரியர் டாக்டர் க.த. திருநாவுக்கரசு நன்றி நவின்றார்.

—நமது செய்தியாளர்



# பிரெஞ்சு அகராதியைத் தயாரித்த தமிழர்!

**பி**ரெஞ்சு - தமிழ் அகராதியை தமிழர் ஒருவர் தயாரித்திருக்கிறார்!

அவர் பெயர் திரு ந.கைலாசம். வட ஆர்க்காடு மாவட்டம் குடியாத்தத்தைச் சேர்ந்தவர். 44 வயதுள்ள இவர் 1972-இல் பொழுதுபோக்காகப் பிரெஞ்சு மொழியைக் கற்க ஆரம்பித்தார். பிறகு அதன் இனிமையிலே மயங்கி அம்மொழியை முழுவதுமாகப் படிக்கத் தொடங்கி அதில் தேர்ச்சியும் பெற்றார்.

பிறகு அவர் மனத்தில் பிரெஞ்சு-தமிழ் அகராதி ஒன்றைத் தயாரிக்க வேண்டும என்ற எண்ணம் முளைத்தது. அதறகாக இவர் பல நூல்களைத் தேடிப் படித்தார். குறிப்புகள் எடுத்தார். மாலை 6 மணியிலிருந்து இரவு12 மணி வரை அகராதித் தயாரிப்பில் தீவிரமாக ஈடுபட்டார். இரவு எழுதியதைக் காலையில் சரி பார்ப்பார். இப்படி மூன்று ஆண்டுகள் உழைத்து இந்த அகராதியை உருவாக்கினார்.

''நெடுநாளைய என் கனவு நனவானது. பிரெஞ்சு மொழியில் புலமை மிக்க புதுச்சேரி எஸ். மார்க்கண்டன் அவர்களிடம் அகராதியைக் கொடுத்து வாழ்த்துகள் பெற்றேன். பிறகு என் சொந்தச் செலவிலேயே அதை அச்சிட்டேன். 1983-இல் இது வெளி வந்தபோது நான் மகிழ்ச்சிக் கடலில் நீந்தினேன்'' என்று பெருமிதத்துடன் கூறுகிறார் திரு கைலாசம்.

பிரெஞ்சு-தமிழ் அகராதியில் 15,000 சொற்கள் உள்ளன. இதன் விலை ரூ. 30. பிரெஞ்சு நாட்டுக் கல்வி அமைச்சர் திரு ஜான்பியர் செவனுமான் அவர்கள் இந்த அகராதியைப் பார்த்து விட்டு, ''அகராதியைக் கண்டு பிரமிப்பு அடைகிறேன். இது தமிழ்நாட்டுக்கும்பிரெஞ்சு நாட்டுக்கும்கலாச்சாரத்தொடர்பினை அதிகப்படுத்தும் நூல்'' என்று கருத்து தெரிவித்திருக்கிறார்.

இந்த அகராதியைத் தயாரித்ததற்காக, புதுவை மத்தியப் பல்கலைக் கழக ஓராண்டு நிறைவு விழாவில் இவருக்குச் சிறப்பு தரப் பட்டது.

இந்த அகராதி, ஆரம்பநிலையில் பிரெஞ்சு கற்க விரும்புவோர்க்குப் பெரிதும் உதவும். தமிழில் வெளிவரும் முதல் அகராதி என்ற பெருமையோடு விளங்கும் இது, இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது. முதற் பிரிவில் பிரெஞ்சுச் சொற்களுக்குத் தமிழில் பொருள் கூறப்பட்டுள்ளது. இதில் சுமார் 10,000 சொற்கள உள்ளன. இரண்டாவது பிரிவில் தமிழ்ச் சொற்களுக்குப் பிரெஞ்சில் பொருள் தரப் பட்டுள்ளது. இதில் சுமார் 5,000 சொற்கள் உளளன.

''பிரெஞ்சு மொழிச் சொற்களை இன்றும் பாண்டிச்சேரியில் தமிழுடன் கலந்து பேசும் வழக்கம உண்டு. அந்த வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றுக்குத் தமிழில் இரண்டு அல்லது மூன்று வார்த்தைகளைப் பொருள் விளங்குமாறு கொடுத்திருப்பது இதிலுள்ள சிறப்பம்சம்'' என்று கூறும் திரு கைலாசம், சென்னையில் பாரத ஸ்டேட் வங்கியில் பணியாற்றி வருகிறார். திருமணமாகாத இவரின் எதிர் காலத் திட்டம்:

பிரெஞ்சு நாட்டோடு வணிகத் தொடர்புள்ள கலைச் சொற்களை ஆங்கிலம் - பிரெஞ்சு மொழியில் தயாரித்தல்: பிரெஞ்சு நாட்டுச் சிறுகதைகளைத் தமிழில் மொழி பெயர்த்தல்: தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, கவியரசு கண்ணதாசன் ஆகியோரின் சிறுகதைகளைப் பிரெஞ்சில் மொழிபெயர்த்தல்.

பேட்டி: பி. வி. கிரி

---

# கொழுப்புச் சத்து உணவால் புற்று நோய் வரலாம்!

**கொ**ழுப்புச்சத்து நிறைந்த உணவு, புற்றுநோய்க்கு வழி வகுக்கக்கூடும் என்று டாக்டர் ஜான் ஹிக்கின்சன் என்னும் அமெரிக்க நிபுணர் எச்சரித்திருக்கிறார்.

வயிறு, பெருங்குடல், மலக்குடல், மார்பகங்கள் ஆகிய இடங்களில் புற்றுநோய் தோன்றுவதற்கு, உணவில் கொழுப்புச்சத்து அதிகம் இருப்பதுதான் காரணம் என்று கருதப்படுவதாகவும், ஆப்ரிக்காவிலும் இந்தியாவிலும் இந்த நோய் பரவலாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவில், புற்றுநோய் காரணமாக மாண்டவர்களில் 35 சதவீதம் பேருக்கு, அவர்களது உணவுப் பழக்கங்கள் காரணமாகவே அந்த நோய் ஏற்பட்டதாக டாக்டர் ஜான் ஹிக்கின்சன் தெரிவித்தார்.

அமெரிக்கர்கள் பெரும்பாலோர் 40 'கலோரிகள்' அளவுக்குக் கொழுப்புச்சத்தை உட்கொள்கின்றனர்; புற்றுநோய், இதய நோய் முதலியவற்றைத் தவிர்க்க வேண்டுமானால், கொழுப்புச் சத்து உணவு 30 'கலோரிகள்' அளவுக்கே இருக்க வேண்டும்.

வைட்டமின் 'ஏ', வைட்டமின் 'சி', 'பீட்டா-கரோட்டின்' beta-carotene என்னும் உயிர்ச் சத்துப் பொருட்கள் நிறைந்த பழவகைகளையும், காய்கறிகளையும் அதிகம் உண்ண வேண்டும். 'பீட்டா-கரோட்டின்' சத்து பச்சைக் காய்கறிகளில் அதிகம் உள்ளது; இரைப்பையில் உணவு செரிக்கும் போது இந்தச் சத்து 'வைட்டமின்-ஏ' ஆக மாற்றப் பட்டு விடுகிறது.

இரத்தத்தில் 'பீட்டா-கரோட்டின்' சத்து குறைவாக உள்ளவர்களுக்கு, நுரையீரல் புற்றுநோய் ஏற்படக்கூடிய அபாயம், மற்றவர்களைவிட 4 மடங்கு அதிகமாக உள்ளது. 'வைட்டமின்-இ' சத்துக் குறைவாக இருந்தாலும், நுரையீரல் புற்றுநோய் ஏற்படுவதற்கான அபாயம் இரண்டரை மடங்கு அதிகமாக உள்ளது. காய்கறிகளில் 'வைட்டமின்-இ' சத்து அதிகம் உள்ளது.





# காவலருக்கு வீடும் விருதும்!

இரா. அண்ணாதுரை
மாவட்டச் செய்தி
மக்கள் தொடர்பு அலுவலர்
கோயமுத்தூர்

**நா**ட்டு விடுதலைக்குப் பின்னர் மக்களாட்சி பூத்ததன் விளைவாக மக்கள் நல்வாழ்வுப் பணிகளிலும் காவல்துறை தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு வருகிறதென்பதை அத்துறையின் பணியை உற்றுநோக்குபவர்கள் உணர்வார்கள். சிறப்பான-துணிவான - திறமிக்க - தியாகமிக்க நற்பணிகளைச் செய்து வருகிற காவல்துறை, தீ அணைப்புத் துறை, சிறைத்துறை, மற்றும் ஊர்க்காவல் படையினருக்கான ''தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம்'' வழங்கும் விழா கடந்த நவம்பர் திங்கள் 23-ஆம் நாளன்று கோவையில் நேரு விளையாட்டு அரங்கில் சிறப்பாக நடந்தேறியது.

மக்களைத் தன் இமை போல் கடமை உணர்வுடன் காத்து நிற்கும் காவலர்களுக்கும் நல்ல காவலராய் விளங்கி நிற்கும் தமிழக முதல்வரின் திருக்கரங்களினால் பதக்கம் வழங்கப்பட்ட பெருமைமிக்க - சிறப்புமிக்க நிகழ்ச்சியின்போது நேரு விளையாட்டரங்கம் மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிந்தது. நிகழ்ச்சியின் தொடக்கத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் காவல் துறை இயக்குநர் திரு கே.ரவீந்திரன் வரவேற்றுப் பேசுகையில் ''இந்தியாவின் வேறு எந்த மாநிலத்திலும் உயர்மட்ட காவலர்களுக்கும் மற்ற காவலர்களுக்கும் இதுபோல் விருதுகள் வழங்கப்படுவது இல்லை. காவல்துறை மானியமாக இந்த ஆண்டுக்கு ரூ.21 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதுவும் இதுவரை நடைபெறாத ஒன்றாகும்'' என்று கூறினார்.

திறந்த ஜீப் மூலம் திடலில் அணி வகுத்து நின்ற காவலரின் அணிவகுப்பை மாண்புமிகு முதல்வர் பார்வையிட்ட பின் திரச் செயலுக்கான முதலமைச்சரின் காவல் பதக்கங்களை 10 பேருக்கு வழங்கினார். தொடர்ந்து சிறப்புப் பணிக்கான முதலமைச்சரின் காவல் பதக்கங்களை 45 காவல்துறை அலுவலருக்கும், சிறப்புப் பணிக்கான முதலமைச்சரின் தீயணைப்புப் படை பதக்கங்களை 10 பேருக்கும் சிறைத்துறை அலுவலர்கள் 7 பேருக்கும், ஊர்க்காவல் படையினர் 3 பேருக்கும் முதலமைச்சர் அவர்கள் அணிவித்தார். பதக்கங்களை அணிவித்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் பேசியதாவது:

''என்னை வாழ வைக்கும் தெய்வங்கள் ஆகிய தாய்மார்களே!

என்னை வழி நடத்திச் செல்லும் பெரியோர்களே!

என் இரத்தத்தின் இரத்தமான உடன் பிறப்புக்களே!

காவல் துறையினருக்கு 'முதலமைச்சர் பதக்கம்' வழங்கும் விழாவில் கலந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகக் காவல்துறை கடமையாற்றுவதில் பெரும்புகழ் பெற்றுள்ளது.

மக்களையும் சட்டம் ஒழுங்கையும் காப்பாற்றுவதில் நமது காவல்துறை தலை சிறந்து விளங்குகிறது.

குற்றங்களைத் தடுக்கவும், குற்றவாளிகளைப் பிடிக்கவும், வன்முறையை அடக்கவும் காவல் துறை விழிப்புடன் பணியாற்ற வேண்டும்.

கடமையைச் செய்யும் காவலர்களுக்கு இந்த அரசு என்றும் பக்கபலமாக இருக்கும்.

காவல் துறையின் சீரிய பணிக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் இந்த அரசு வழங்கும்.

காவலர்களின் நியாயமான கோரிக்கைகள் அனைத்தையும் பரிவுடன் நான் கவனிப்பேன் என்று உறுதி கூறுகிறேன்.

சிறப்பாகப் பணியாற்றிய காவல் துறையினர்க்கு முதலமைச்சர் பதக்கங்களை மகிழ்ச்சியுடன் அணிவிக்கிறேன்.



## நத்தத்தில் புதிய சார்நிலைக் கருவூலம்

அண்ணா மாவட்டம், நத்தம் தாலுகாவில் ரூ. 4.73 லட்சம் செலவில் கட்டப்பட்ட புதிய சார்நிலைக் கருவூலக் கட்டடத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 10.11.86 ஆம் நாளன்று திறந்து வைத்தார்.

அண்ணா மாவட்டத்தில் நிலக்கோட்டை, நத்தம் ஆகிய ஊர்களில் சார்நிலைக் கருவூலங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் உள்ளன. விரைவில் கொடைக்கானலிலும் பழனியிலும் சார்நிலைக் கருவூலங்கள் கட்டப்படவுள்ளன.

தமிழகத்தில் 196 சார்நிலைக் கருவூலங்கள் உள்ளன. இவ்வாண்டு 8 புதிய சார்நிலைக் கருவூலங்களும் கட்டக்கருத்துரு, அரசின் பரிசீலனையில் உள்ளது.

அவர்களுக்கு எனது வாழ்த்துக்கள்.

தமிழக காவலர் வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அந்த வீடுகளைக் காவலர்களுக்கு வழங்குவதில் பெருமையடைகிறேன்.

தமிழகக் காவல்துறையைச் சிறப்பாக நடத்திச் செல்லும் தலைமை அதிகாரிகளையும், உயர் அதிகாரிகளையும், காவல் துறையின் அனைத்து உடன்பிறப்புக்களையும் பாராட்டுகிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!

நன்றி. வணக்கம்.''

—இதே விழாவில் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் ஒரு கோடியே 94 இலட்ச ரூபாய் செலவில் கோவையை அடுத்த கணபதியில் காவலர்களுக்காகக் கட்டப்பட்டுள்ள 432 குடியிருப்புக்களையும், சிரநாயக்கன் பாளையத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் ரூ.1½ கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 156 வீடுகளையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு. மணிமாறன் குடியிருப்பு போன்ற வடிவமைப்பை முதல்வருக்கு நினைவுப் பரிசாக வழங்கி உரையாற்றினார்.

கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மு. அபுல்ஹசன் அவர்கள் வெள்ளியால் ஆன ஸ்தூபியை மாவட்ட மக்கள் சார்பில் நினைவுப் பரிசாக மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு வழங்கினார். அதன் மேல் பகுதியில் தாமரைப்பூ போல அழகிய வடிவில் அமைக்கப்பட்டு இருந்தது. விழா இறுதியில் தமிழ்நாடு காவல்துறை வீட்டு வசதி கழகத் தலைவர் திரு கி.இராதா கிருஷ்ணன் நன்றி கூறினார்.

விழாவின் கடைசி நிகழ்ச்சியாக காவல்துறையின் கவின்மிகு கலை நிகழ்ச்சிகள் நடந்தன. திறன் மிக்க காவலர்களின் கவாத்து அணிவகுப்பு, வண்ண ஆடையில் காவலர்கள் ஒரே எண்ணத்தில் நின்று செய்கின்ற உடற்பயிற்சி விளையாட்டுகள், திகைக்க வைக்கும் திறன் கொண்ட ''ஜிம்னாஸ்டிக்'' பயிற்சிகள், மயிர்க் கூச்செறியச் செய்யும் "கராத்தே" சண்டைகள், மாநிலம் முழுவதும் இருந்து வந்துள்ள காவல்துறையின் இசை விருந்து ஆக அனைத்தும் கண்கொள்ளாக் காட்சியாய் மக்கள் மனதில் நீங்கா இடம் பெறும் வகையில் அமைந்தன. காவலர் வாழ்வில் பொன்னாளாக, அத்துறையின் வரலாற்றில் பொன்னேடாக, கோவை நகரில் நடைபெற்ற அந்தக்கோலாகலத் திருவிழா அமைந்திருந்தது.



# நூல் நயம் நூல் நயம் நூல் நயம்

### பிழையின்றி எழுதுங்கள்

ஆசிரியர்: தமிழப்பன்
வெளியீடு: தமிழ்மொழிப் பதிப்பகம்,
19, சானிகான்கான்தெரு
ராயப்பேட்டை,
சென்னை-14.

விலை: ரூ.4
பக்கம்:55

கரணம் தப்பினால் மரணம் என்பதுபோல்-மொழியைப்பிழைபட எழுதினால் அர்த்தம் மாறி அனர்த்தம் ஆகிவிடும் என்ற கருத்தையும், பிழையின்றி எழுத வேண்டும் என்ற வேண்டுகோளையும் இந்நூலின் வாயிலாக வலியுறுத்துகிறார் ஆசிரியர்.

பிழைகள் நேரும் விதத்தை- சான்றுகளுடனும் நகைச்சுவை உணர்வுடனும் குறிப்பிட்டு, பிழை செய்வோரைத் திருத்த முயல்கிறார்.

ஒற்றெழுத்துக்கள், மிக வேண்டாத இடத்தில் மிகுவதால் ஏற்படும் பொருள் மாற்றத்தையும் நெடில் குறிலாக எழுதப்படும் போது ஏற்படும் பொருள் மாற்றத்தையும் சுட்டிக்காட்டி விளக்குகிறார்.

பல்லாண்டுகளுக்கு முன்னர் பொன்னி ஆசிரியர் முருகு சுப்ரமணியம் அவர்கள் 'பிழை நீக்க எழுவீர்' என்று ஒரு கட்டுரை எழுதி, மொழியைத் தக்க வகையில் பயன்படுத்தவேண்டும் என்று தெரிவித்திருந்தார். அவரது லட்சியத்துக்கு ஆதரவுதரும் வகையில் இந்நூல் எழுந்துள்ளது என்று குறிப்பிடலாம்.

பிழைபட எழுத நேருகின்ற சில சொற்களையும் அவற்றின் பொருளையும் விளக்கியிருப்பது பாராட்டுக்குரியது.

—எஸ். எஸ். சுந்தரம்

### ஒரு விடிகாலைப்பொழுதின் சாட்சியங்கள்

ஆசிரியர்: சகுந்தலை
வெளியீடு: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
41-பி, சிட்கோ எஸ்டேட்,
சென்னை-600098

விலை: ரூ.15 பக்கம் 224

16 கதைகளைக் கொண்டதொரு தொகுப்பு நூல். சாதி வேறுபாடற்ற-ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தைக் காண விரும்பும் ஆசிரியரின் உள்ளம் புலனாகின்றது.

மருத்துவமனைகளிலும் கூடபெண்மைக்கு அநீதி இழைக்கப்படுகின்றது என்பதை, 'தேவனே தேவனே' என்ற கதை அழகாகச் சித்திரிக்கின்றது.

சமுதாயத்தின் அடித்தளத்தில் மண்டிக்கிடக்கும் களைகளைக் களைந்தெரிய முனையும் ஆசிரியரின் வேட்கை அனைத்துக் கதைகளிலும் வெளிப்படுகின்றது.

பொதுவுடைமைக் கருத்துக்களைக் கொண்டது, 'எங்கள் பெருமூச்சுகளுக்கெல்லாம் ஒரு அர்த்தம் இருக்கும்' என்ற கதை.

வாழ்ந்துகெட்ட குடும்பம் பற்றியது, 'பட்டமரம் பிரிந்த பறவைகள்.'

வறுமையின் கோரப் பிடியில் சிக்கித் தவிக்கும் குடும்பந்தான் 'ஒரு விடிகாலைப் பொழுதின் சாட்சியங்கள்' கதையில் நடமாடவிடப்பட்டுள்ளது. இறந்துவிட்ட குழந்தையைக் கட்டிப் பிடித்து, கதறிஅழக்கூட முடியாத பரிதாபமான சூழலிலுள்ள நொண்டித் தந்தையின் மனப் போராட்டமும் ஏழைத்தாயின் ஏக்கங்களும் நன்கு சொல்லப்பட்டுள்ளன.

வட்டார வழக்கு மிகுதியும்பயன் படுத்தப்பட்டுள்ளது.

—டாக்டர் சிவஅரசி முத்துக்காளத்தி

> **மிகப் பெரிய நூலகம்!**
>
> சோவியத் நாட்டிலேயே மிகப் பழமை வாய்ந்த நூலகம் ஒன்று லெனின்கிராடு நகரில் உள்ளது. இதன் பெயர் ''சால்திகோவ்-ஷ்கெத்ரின் பொது நூலகம்''.
>
> இப்போது இதன் புதிய பிரிவுக்குப் புதிய கட்டடம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. இந்தப் புதிய பிரிவு 2 கோடி நூல்கள் வைப்பதற்கும், 2,000 வாசகர்கள் அமர்ந்து படிப்பதற்கும் ஏற்றதாகும். இதில் 16 பெரிய படிப்பறைகள் இருக்கும். இந்த நூலகம் 1795ல் தோன்றியது. ரஷ்ய மொழியில் வெளிவந்த பெரும்பாலான நூல்கள் இங்கு உள்ளன. மொத்தம் 3 கோடி புத்தகங்கள் இந்த நூலகத்தில் இருக்கின்றன.

### பூவுக்குள் பூகம்பம்

ஆசிரியர்: பட்டுக்கோட்டைராஜா
வெளியீடு: பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக் குளம்மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை-4,

விலை ரூ.20.00 பக்கம்: 251

பல வகை மலர்களால் தொடுக்கப்பட்ட கதம்பமாலை இந்நூல். ஒவ்வொரு மலரும் தனித் தன்மையோடு மணம் பரப்புவது போல் ஒவ்வொரு கதையும் யதார்த்தமாக, தனித்தனியே துலக்கமாக வெவ்வேறு கருவையும், கோணத்தையும் கொண்டிருக்கின்றன.

உணர்ச்சி மயமான அழுத்தமான வார்த்தைகள், எனினும் எழுத்துச் சிக்கனம் கையாளப்பட்டிருக்கின்றது. சிறுகதைகளுக்குத் துவக்கமும் முடிவுமே சிறப்புச் சேர்ப்பவை. இந்நூலில் உள்ள அத்தனை கதைகளிலும்மேற்கண்ட சிறப்பைச் சேர்க்க எடுத்துக் கொண்ட கவனம் மன நிறைவைத் தருகிறது.

இளந்தலை முறையினரின் எழுத்து வேகம், ஆற்றலுக்கு ஆசிரியர் ஓர் உதாரணம்.

இதில் பல கதைகள் 'பூவுக்குள் பூகம்பம்' 'தாழம்பூவே வாசம் வீசு' போன்று இதயத்தைத் தொட்டு, கனக்க வைக்கின்றன. நினைவில் நிற்கின்றன.

தமிழில் மிக அதிகமான (நல்ல) சிறுகதைகளைக் கொண்ட முதல் தொகுப்பு நூல் இதுவாகத்தான் இருக்குமென்று எண்ணுகிறேன். சிறுகதைகளின் எண்ணிக்கை நாற்பது.

—க. குமாரசாமி

### கனவில் வந்தவள்

ஆசிரியர்: மூவேந்தர் முத்து.
வெளியீடு: பூவழகி பதிப்பகம்.
31, சீனிவாசப் பெருமாள்

சன்னதி தெரு, இராயப் பேட்டை, சென்னை-14.

பக்கம்:148. விலை:ரூ.11.

முதல் கதையில், கொலை செய்யப்பட்டவர்கள் ஆவியாக வந்து பழிவாங்குவார்கள் என்பது வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

இரண்டாவது கதை, கல்லூரி மாணவியைப் பற்றியது. இங்கேயும் ஆவி அவருடன் பேசி கடைசியில் கூட்டிச் செல்கிறது.

ஏழைச் சிறுவன் பெற்றோரை இழந்து இளைஞனானதும், பட்டணம் சென்று வேலை பார்த்துக் கதை எழுதி, காதலி அதைப் பத்திரிகையில் பிரசுரிக்க அலைந்து ஏமாந்து, இறுதியில் ஒரு பெண் தன் தந்தை நடத்தும் பத்திரிகையில் அதை வெளியிட, அதைப் பார்க்காமலேயே அவன் இறந்துவிட ஆரம்பத்தில் அறிமுகமான செங்கமலம் என்ற பெண் அவனது ஆவியின் பாதுகாப்பில் அவன் சமாதி அருகே பண்ணை வைத்துக்கொண்டு சிந்து பாடுகிறாள்....

இப்படிக் கதை ஓட்டங்கள் மூன்று கதைகள் இந்நூலில் உள்ளன. பொழுது போக்காகப் படிக்க நிறைய சம்பவங்கள். நல்ல கற்பனை. சுவாரஸ்யமான நடை.

## பாவேந்தர் வாழ்க்கைப் பாங்கு

ஆசிரியர்: மன்னர்மன்னன்,
வெளியிட்டோர்: முத்து பதிப்பகம்,
269, கிழக்குப்பாண்டி வீதி
விழுப்புரம்-605202

பக்கம்-96 விலை ரூ.11.00

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரை நாம் பார்த்திருக்கிறோம்; அவரது எழுத்தோவியங்களைப் படித்திருக்கிறோம். ஆனால் அவரது வாழ்க்கைச் சம்பவங்கள்?

பாவேந்தரின் மகனார் திரு. மன்னர் மன்னன் அவர்கள் அவற்றின் தொகுப்பாகவே இந்நூலை உருவாக்கியிருக்கிறார். எழுத்தில் அவர் வடித்த ஓவியங்கள், அவரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளோடு இணைந்து காணப்பட்டனவா என்பதை ஒப்பிட்டுப் பார்க்க உதவும் நூல் இது.

புரட்சிக் கவிஞரின் கவிதைகள் பல ,அவரது வாழ்க்கைச் சம்பவங்களின் காரணமாகவே விளைந்திருக்கின்றன என்பது இந்நூலில் இணைத்துக் காட்டபபட்டிருக்கிறது. குடும்பத்தாருடன், நட்பினருடன், அரசியல் சீர்வாய்ந்தாரிடம், அயலாரிடம் அவர் எப்படிப் பேசினார் -பழகினார், நடந்து கொண்டார் என்பன பற்றிய சிறுசிறு சம்பவங்களை படிக்கிறபோது, புரட்சிக்கவிஞரை நேரிலேயே பார்ப்பது போலிருக்கிறது நமக்கு.

—பி.எல்.ஆர்.

## பஞ்ச தந்திர அறிவுரைகள்

தொகுப்பாளர்: முல்லை பி.எல். முத்தையா

வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் 41-பி, சிட்கோ எஸ்டேட், சென்னை-98.

விலை : ரூ. 7. பக்: 112.

உலகப் புகழ் பெற்ற பஞ்ச தந்திரக் கதைகள் என்னும் நூலிலிருந்து சேகரிக்கப்பட்ட அறிவுரைகளின் தொகுப்பு இது.

இந்தியாவின் தென் பகுதியில், அறிவிலும் ஆற்றலிலும் சிறந்து, ஆட்சி செலுத்திய மன்னன் ஒருவனின் மூன்று மைந்தர்களும் படிப்பறிவில்லாதவர்கள். உலக அறிவு முழுவதையும் சிறுகதைகள் மூலமும் அறிவுரைகள் மூலமும் விளக்கி அவர்களை அறிவிற் சிறந்தோராக்குகிறார் விஷ்ணு சர்மன் என்ற அறிஞர்.

அரசிளங்குமரர்க்கு அந்த அறிஞர் போதித்த அறிவுரைகளே பஞ்ச தந்திர அறிவுரைகள்.

''பலவீனத்தால் தலை வணங்குபவனும், சுயமதிப்பு இல்லாதவனும், புல்லுக்குச் சமமான நிலையை அடைகின்றான்.''

''அளவோடும், இதமாகவும், நன்கு யோசித்தும், அர்த்தத்தோடும் பேசக்கூடியவனால் எந்தக்காரியத்தையும் சாதிக்க முடியும்.''

இப்படிஎல்லாக் காலத்திற்கும், எத்தச் சூழ்நிலைக்கும் ஏற்ற வகையிலான அறிவுரைகள் ஏறத்தாழ 400-க்கும் மேல் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. எத்தரப்பாரும் இவற்றைப் படித்துப்பயன் பெறலாம்.

—வி. இராவணன்

**சாமானியனின் சகாப்தம்**



## சாமானியனின் சகாப்தம்

ஆசிரியர்: பேரறிஞர் அண்ணா.
தமிழாக்கித் தொகுத்தவர்: மு.நமசிவாயம்.
விற்பனை உரிமை:
அபிராமி பப்ளிகேஷன்ஸ்.
307, லிங்கி செட்டி தெரு,
சென்னை-600 001.
விலை ரூ.7.00 பக்கம்.90.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலத்தில் ஆற்றிய பட்டமளிப்பு விழாப் பேருரையை, இனிய தமிழில் நூலாக்கியிருக்கிறார் தொகுப்பாசிரியர்.

இந்தப் பேருரையில், தொடக்கத்திலிருந்து இறுதிவரை சாதாரண - சாமானிய மக்களின் பெருமையைக் குறித்தே அண்ணா தெரிவித்திருப்பதால் இந்நூலுக்கு சாமானியனின் சகாப்தம் என்று பெயரிடப்பட்டிருப்பது பொருத்தம்.

ஒவ்வொரு வரியும் ஒரு வைரம்; ஒவ்வொரு சொல்லும் ஒரு பொன் மலர். கற்கண்டின் இனிமை, சந்தனத்தின் குளுமை இந்நூலைப் படிக்கும்போது நமக்குக் கிடைக்கிறது. அடேயப்பா! எத்தனை வரலாற்றுச் செய்திகள்! எத்தனை அரிய போதனைகள்! எத்தனை தத்துவங்கள்! எத்தனை பகுத்தறிவுப் பிரச்சாரங்கள்!

மாணவ மணிகள் நல்வாழ்வு பெற வேண்டும், உயர் வாழ்வு பெற வேண்டும் என்ற நல்லெண்ணம் இந்நூல் முழுதும் காணக் கிடைக்கின்றது.

பேரறிஞர் அண்ணா பாசமுள்ள அண்ணனாக பண்புமிக்க தந்தையாக - பரிவுமிக்க ஆசானாக இந்நூலில் காட்சி தருகிறார்.

ஆங்கிலத்திலிருந்து தமிழில் பெயர்க்கப்பட்டதுபோல் தோன்றவில்லை. அண்ணாவே அழகுத் தமிழில் இந்நூலை உருவாக்கியிருக்கிறார் என்று நினைக்கும் அளவுக்கு, மொழிபெயர்ப்பைச் சிறப்பாகச் செய்திருக்கிறார் தொகுப்பாசிரியர் மு.நமசிவாயம்.

—தமிழ்ப்பித்தன்





# மீன் உற்பத்தியில் ஓர் புதிய சாதனை

கோ. வி. பரசுராமன்
சென்னை மண்டல மீன்துறை துணை இயக்குநர்

வட ஆர்க்காடு மாவட்டத்தின் தலைநகராய் விளங்கும் வேலூருக்குச் செல்பவர்கள் கலையழகுடன் மிளிரும் கவினுறு கோவிலின் பின்னணியுடன் காணப்படும் கோட்டை அகழியை நிச்சயம் காணாமல் இருக்கமாட்டார்கள். இந்த அகழியல் 20-ம் நூற்றாண்டு துவக்கத்திலிருந்தே மீன்பிடிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வகழியானது 20-ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் அதாவது 1918-ஆம் ஆண்டு இறுதியில் மீன் துறையின் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது. இவ்வகழி கோட்டையைச் சுற்றி இருந்தாலும் இவற்றில் மண் மூடிவிட்ட காரணத்தினால் தற்போது இரண்டு பகுதிகளில் மட்டும் நீர் வரத்து இருந்து வருகிறது. இந்த நீர்ப் பரபபில் முதலாவதாகச் சுற்றுப்புற சூழநிலையை மாற்றவும், கொசு உற்பத்தியைக் குறைக்கவும், மீன்வளர்ப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மேலும் இவ்வகழியில் மீன்பிடிக்கும் உரிமை 1949-ஆம் ஆண்டு வரை தனியாருக்கே குத்தகைக்குக் கொடுக்கப்பட்டு வந்தது. 1950-ஆம் ஆண்டு முதல் இத்துறையே இந்த அகழியில் மீன் விட்டு வளர்த்து மீன உற்பத்தியைப் பெருக்க உயர் ரக மீன்களான கட்லா, ரோகு, கண்ணாடிக் கெண்டை முதலிய மீன் குஞ்சுகளை வளர்க்க முன் வந்தது. மேலும் இவ்வகழியைச் சுத்தமாகப் பாசி பிடிக்காமல் இருக்க புல்கெண்டை, வெள்ளிக் கெண்டை போன்ற மீன்களும் இவ்வகழியில் வளர்க்கப்பட்டன.

துவக்கக் காலத்தில் 1950 முதல் 1960 வரை ஆண்டொன்றிற்கு 10 முதல் 15 டன்னாக இருந்து வந்த மீன் உற்பத்தியை இத்துறையின் தீவிர மீன்வளர்ப்பு முறைகளினால் இவ்வகழியின் மீன் உற்பத்தியானது பெருக்கப்பட்டு வந்து, 1976-77-ல் மிக உயர்வான உற்பத்தியாக 51 டன் அதாவது 5 மடங்குக்கும் அதிகமாக மீன் உற்பத்தி மட்டுமல்லாது அரசாங்கத்திற்கு வருவாயும் 5 மடங்காக-ரூ.5,000 ஆக இருந்த வருமானம் ரூ. 57,000 ஆக அதிகரிக்கப்பட்டது. இங்கு பிடிக்கப்படும் மீன்கள் அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் பிடிக்கப்படுமிடத்திலேயே விற்பனை செய்யப்படுகிறது.

இவ்வகழியின் மொத்த நீர்ப் பரப்பு தற்சமயம் 4.83 எக்டேர் ஆகும். கடந்த ஆண்டுகளில் பிடிக்கப்பட்ட 51 டன் எடை மீன்களே இவ்வகழியின் சாதனை ஆகும். இந்த அகழியின் இதர உதவாத மீன்களை அகற்றி தரமான மீன்களை வளர்த்து உற்பத்தியைப் பெருக்க நவீன கூட்டு இனமீன் வளர்ப்புமுறை கையாளப்பட்டு வருகிறது. இந்த முறையைப் பயன்படுத்திய பின் இவ்வகழியின் உற்பத்தியானது எக்டேருக்கு ஆண்டுக்கு 9 டன் என்ற விகிதத்தில் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இதனால் அரசுக்கு ஆண்டுக்குக் கிடைக்கும் வருமானமானது ரூ. 1 இலட்சத்திற்கு உயர்த்தப்பட்டது ஒரு புதிய சாதனையாகும். மேலும் இது அகில இந்திய ரீதியிலே உள்நாட்டு மீன்வளர்ப்பின் சாதனையையும், ஒரு புதிய ஊக்கத்தையும் அளிக்கிறது எனக் கூறினால் மிகையாகாது. ஏனெனில் அகில இந்திய உள்நாட்டு மீன்வள உற்பத்தி ஒருஆண்டிற்கு எக்டேருக்கு 7½ டன்கள்தான். ஆனால் அதையும் மிஞ்சும் வகையில் வேலூர் கோட்டை அகழியின் மீன் உற்பத்தி கடந்த இரு ஆண்டுகளில் ஒரு புதிய சாதனையை அகில இந்திய ரீதியில் ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

புரத உணவு மிகக் குறைவாக உள்கொள்ளுவதாலேயே மூளை வளர்ச்சி, கண் பார்வை, உடல் வலிமைக் குறைவுகள் அதிக அளவில் ஏற்படுவதை மீன் உண்பதன் மூலம் தவிர்க்கமுடியும். புரதச்சத்தானது மிருக மாமிசத்திலும், கோழி மாமிசத்திலும் முட்டையிலும் இருந்தாலும், இவை மீனினுடைய புரத உணவிற்கு ஈடாகாது. ஏனெனில் மீன் ஒரு முழு அளவிலான புரதச்சத்துள்ள உணவு ஆகும். இது மிகவும் இலகுவாக ஜீரணிக்கக்கூடியதாகும்.

மீன் மற்ற எந்த மாமிச உணவையும் விட மிகவும் விலை மலிவானதும் ஆகும். மீன் உணவாக மட்டும் பயன்படுவதுடன, மீன்வளர்ப்பினால்வருமானத்தையும் அதிக அளவில் பெறலாம். மீன் வளர்ப்பு கழனிகளில் நெல் சாகுபடி செய்வதைக் காட்டிலும் அதிக வருமானத்தைத் தரக்கூடியது. இதனை முழுமையாகச் சொல்லவேண்டுமானால், 'ஒருவனுக்கு மீனைக் கொடுத்தால் அது அவனுக்கு ஒரு நாள் உணவாகும். ஆனால் அவனுக்கு மீனை வளர்க்கக் கற்றுக்கொடுத்தால் அம்மீனானது அவனுக்கு வாழ்நாள் முழுவதும்உணவளித்து வாழ்வளிக்கும்' என்பது ஒரு சீனப் பழமொழியாகும்.

ஆகவேதான் வேலூர் கோட்டை மீன்வளர்த்து பெருமளவில் உற்பத்தி செய்வதுடன் மிதப்புக் கூடுகளில் தரமான நுண்மீன்குஞ்சுகளை வெளி மாநிலங்களிலிருந்து கொண்டு வந்து அவைகளை வளர்த்து விநியோகிப்பதன் மூலம் மீன் வளர்ப்பவர்களை ஊக்குவிப்பதுடன், நாற்றங்கால்களில் மீன் குஞ்சுகளை வளர்க்கும் முறையை மாற்றி இவ்வாறு மிதப்புக்கூடுகளில் அதிக விழுக்காடுடன் நுண் மீன்குஞ்சுகளை விரலளவு மீன் குஞ்சுகளாக வளர்க்கலாம் என்றும் நிருபணம் செய்யப்பட்டுள்ளது.

மீன்வளர்ப்போம்-புரதச்சத்து நிறைந்த மீன்உற்பத்தியைப் பெருக்குவோம்! மலிவு விலைக்கு மக்களுக்கு மீன் கிடைக்க வழி காணுவோம்.



அழகன் குளத்தின் ஒரு பகுதி.

# அழகன் குளம்

# பாண்டிய நாட்டின் பழம் பெரும் துறைமுகம்

– மாமூலன்

அழகன் குளம்—

இராமநாதபுரம் மாவட்டத்தில் இன்று காணப்படும் ஒரு சிற்றூர். ஆனால், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சீரும் சிறப்புடனும் திகழ்ந்த துறைமுகம்.

இராமநாதபுரம் நகரத்திலிருந்து கிழக்கே 20 கிலோமீட்டர் தூரத்தில் சின்னஞ் சிறிய சிற்றூராகத் திகழ்கிறது. இவ்வூரில் 'கோட்டை மேடு' என்ற மேடிட்ட ஒரு பகுதி. நமது தொல்பொருள் ஆய்வுத் துறையைச் சேர்ந்த அகழ்வாராய்ச்சி ஆய்வாளர்கள், நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இந்த இடத்தை ஆய்வுக்கு உரிய இடமாகத் தேர்ந்தெடுத்தார்கள்.

தொல்பொருள் பாதுகாப்புச் சட்டப்படி, நமது மாநிலத்தில் ஓரிடத்தில் தொல்பொருள் ஆய்வை மேற்கொள்ள வேண்டும் என்றாலும், மத்திய அரசின் அனுமதி பெற்றாக வேண்டும். மத்திய அரசின் அனுமதிக்குப் பிறகு கோட்டைமேடு பகுதியில் அண்மையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் போதுதான் அழகன் குளத்தின் தொன்மைச் சிறப்புகளும் அதன் வரலாற்றுப் பெருமையும் உணர்ந்து கொள்ளச் சான்றுகள் கிடைத்துள்ளன.

தமிழ்நாட்டில், இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு ரோமானியர்களுடன் வாணிபத் தொடர்பு இருந்தமைக்குப் பல சான்றுகள் கிடைத்திருக்கின்றன.

தமிழிலக்கியங்களில் யவனர்கள் என்று அழைக்கப்படுபவர்கள் கிரேக்கர்கள், ரோமானியர்கள், எகிப்தியர்கள் மற்றும் மத்திய தரைக் கடல் நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

புதுவை மாநிலம் அரிக்கன் மேட்டில் கிடைத்த ஆய்வும், பூம்புகார் ஊர் அருகே வெள்ளையன் இருப்பு என்று உள்ள இடத்தில் கிடைத்த தொல்பொருட்களும் இந்த யவனர்களோடு தமிழகத்திற்குத் தொடர்பு இருந்து வந்ததை உணர்த்தியுள்ளன. இவை அனைத்துக்கும் மேலாக இப்பொழுது அழகன் குளத்தில் ஏராளமான சான்றுகள் கிடைத்துள்ளன. குவியல் குவியலாகச் சங்கு வளையல் தொழில் நடந்தமைக்கு ஆதாரமாக, சங்குக் குவியல்கள் கிடைத்துள்ளன.

ரோமானியர்கள் பயன்படுத்திய மதுச்சாடிகளின் ஓடுகளும் இங்குக் கிடைத்துள்ளன. அது மட்டுமல்ல, அந்த மதுச்சாடி எந்த நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது என்பதற்கு உரிய வாணிபச் சின்னங்களும் கிடைத்துள்ளன.

கி.பி. நான்காம் நூற்றாண்டில் ஆண்டு கொண்டிருந்த ரோம் நாட்டு மன்னன் தலைபொறித்த நாணயம் கிடைத்துள்ளது. ரோமானிய நாணயங்களும், அணிகலன்களில் சேர்த்துக்கொள்ளும் மணிகளும் உயர்வகைக் கற்களும் கிடைத்துள்ளன.

வடநாட்டில் மட்டும் அகழ்வாய்வின்போது கிடைக்கக்கூடிய மௌரியர் காலத்து ஓவியங் கொண்ட கருமை வண்ணங் கொண்ட பாளை ஓடுகளும் கிடைத்துள்ளன. மௌரியர்களுக்கும் இந்தப் பகுதிக்கும் மிக நெருக்கமான வாணிபத்தொடர்பிருந்ததை இவை நிரூபிக்கின்றன.

இப்பொழுது அழகன் குளத்தில் நடத்தப்பட்ட ஆய்வு மிகவும் சுருங்கியதுதான். ஒரு சிறிய

அகழ்வாராய்ச்சியில் கிடைத்த ரோமானியர் மதுச்சாடிகளின் ஓடுகள்.



2000 ஆண்டுக்கு முந்திய தொன்மையான ...குட்கள்



சங்கு அறுக்கும் தொழிற்கூடம் இருந்தது போலும். அறுத்த சங்குகளின் எஞ்சிய பகுதிகள்.







பகுதியில் மட்டும்தான் ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

பல இடங்கள் தொல்பொருள் ஆய்வு நடத்த ,அகழ்வாராய்ச்சிக்கு இடையூறாக அமைந்திருக்கும். ஆனால் கோட்டைமேட்டுப் பகுதி அகழ்வாராய்ச்சிக்கு மிக ஏற்றதாக உள்ளது. பெருஞ்செலவு செய்து இங்கு அகழ்வாராய்ச்சியை முழுமையாகச் செய்தால் தமிழ்நாட்டின் வரலாற்றில் இதுவரை வெளிவராத பல செய்திகள் தெரியக் கூடும்.

**அழகன்குளம் பெரிய துறைமுகமா?**

சோழநாட்டின் தலைநகராகவும் துறைமுகமாகவும் விளங்கிய ஊர் பூம்புகார். சோழர்கள் தலைநகராக உறையூர் விளங்கிய போது கூட, பூம்புகார் துறைமுகமாக விளங்கியது. சோழநாட்டின் பெருமைக்குரிய காவிரி ஆறு கடலோடு கலக்குமிடமான புகாரில்தான் சோழநாட்டின் துறைமுகப்பட்டினம் இருந்தது. ஆற்றுவழிப் போக்குவரத்துக்காக ஆறு கடலோடு கலக்குமிடத்தில் தான் அப்பொழுது துறைமுகங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

சேரநாட்டின் முக்கிய ஆறான பேரியாறு கடலோடு கலக்குமிடமான 'முசிறி' சேரநாட்டின் துறைமுகமாக இருந்தது. முசிறியின் அருகே உள்ள ஊர்தான் கொடும்பாளூர்.

*ரோமானியர் நாட்டு நாணயம். முன்புறமும், பின்புறமும். இந்த நாணயத்தில் பொறிக்கப்பட்டுள்ள ரோமானிய மன்னன் கி.பி. நான்காம் நூற்றாண்டில் ரோம் நாட்டை ஆண்டவன்.*

பாண்டிநாட்டின் ஆறுகளில் ஒன்றான தண்பொருநை என்ற தாமிரபரணி கடலோடு கலக்குமிடத்தில்தான் கொற்கைத் துறைமுகம் அமைந்துள்ளது. பாண்டிய நாட்டின் குலக்கொடி என்று போற்றப்படும் வைகை ஆறு கடலோடு கலக்குமிடத்தில் உள்ள ஊர் தான் அழகன் குளம்.

ஆகவே, அழகன் குளம் பண்டைய பாண்டிய நாட்டின் துறைமுகமாக விளங்கி உள்ளது. ஆனால், அழகன்குளம் என்பது தான் அதன் பழைய பெயரா? உறுதியாகச் சொல்லமுடியவில்லை. இதுபற்றி ஆராய்ச்சி இனிதான் தொடரவேண்டும்.

கல்வெட்டுகளிலும் நன்கு ஆராய்தல் வேண்டும். ஆனால் பழைய பாடல்களில் 'அழகேந்திர மங்கலம்' என்று குறிப்பிடப் படுவது அழகன் குளமாக இருக்கலாம் என்பது ஆராய்ச்சியாளர்கள் சிலரின் கருத்தாக இருக்கிறது.

தமிழ்நாட்டின் துறைமுகங்களைப் பற்றி எழுதிய தாலமி, கொற்கைக்கும் சபேரிச் எம்போரியத்துக்கும் (பூம்புகாருக்கும்) இடையில் சாலூரா எம்போரியம் என்ற துறைமுகம் இருந்ததாக எழுதியுள்ளார்.

மதுரைக் காஞ்சியில் நெல்லியனூர் என்ற துறைமுகம் கூறப்படுகிறது. தமிழில் சால் என்றால் 'நெல்' என்றே பொருள். எனவே, சாலூர் என்பது நெல்லியனூர் என்று கருதப்படுகிறது. அழகன்குளம்தான் நெல்லியனூராக இருக்கலாம் என்று நம்பவும் வாய்ப்புள்ளது.

நமது தொல்பொருள் ஆய்வுத் துறையின் ஆராய்ச்சியால் பாண்டிய நாட்டின் பழம் பெரும் துறைமுகம் ஒன்றைப் பற்றிய செய்திகள் கிடைத்துள்ளன.

தொல்பொருள் துறை இயக்குநர் டாக்டர் நாகசாமி அவர்களின் ஒத்துழைப்புடன் இந்த அகழ்வாராய்ச்சியில் மிகுந்த ஊக்கத்துடன் செயல்பட்ட அகழ்வாய்வாளர் திரு து.துளசிராமன் அகழ்வாராய்ச்சித் துறையின் அந்த வட்டார அலுவலர்கள் திரு தே.கோபாலன், திரு.பெ. கௌதமபுத்திரன், திரு.வெ.ராமமூர்த்தி, திரு குணசேகரன் மற்றும் தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறையினரின் ஆய்வுப் பணிக்கு அனைவரும் பாராட்டுகள் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

அழகன் குளத்தில் கிடைத்துள்ள செய்திகள், ஆதாரங்கள் அதுமிகவும் பழைமையான துறைமுகம் என்பதை உறுதி செய்கின்றன.

அரிக்கன் மேட்டில் கிடைத்ததைவிட அதிக அளவு தொல்லியல் பொருட்கள் ஏராளமாகக் கிடைக்கும் வாய்ப்புகள் உள்ளன. இவ்வாராய்ச்சி மேலும் தொடர்ந்து தமிழ்நாட்டு மக்களுக்கு மேலும் பல வரலாற்று உண்மைகள் கிடைக்கும் காலம் தொலைவில் இல்லை.

**தொன்மை மிகுந்த பழங்காலத்து மணிவகைகள்**





# பெரியார் பூமியில் பயன்மிகு திட்டங்கள்

**கா. சம்சுதீன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெரியார் மாவட்டம்.**

பெருந்துறை காசநோய் மருத்துவமனையை அரசு ஏற்றுக்கொண்டு மருத்துவக் 'கல்லூரி துவக்கத்திற்கான அடிக்கல்நாட்டு விழாவும், பல்வேறு நலத் திட்டங்கள் தொடக்க விழாவும், ஜீவா போக்குவரத்துக் கழகம் சார்பில் 16 புதிய பேருந்து வழித்தடங்கள் துவக்க விழாவும் 24.11.86 அன்று ஈரோட்டில் சிறப்பாக நடைபெற்றன.

ஈரோடு சி. எஸ். ஐ. பள்ளி மைதானத்தில் நடைபெற்ற இவ் விழாவில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் கலந்து கொண்டு பணிகளைத் துவக்கி வைத்துச் சிறப்புரை ஆற்றினார்.

மாண்புமிகு .முதல்வர் அவர்களுக்கு மாவட்ட மக்கள் சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. பெரியார் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு அருண் இராமநாதன் இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

இவ்விழாவிற்குத் தலைமை ஏற்ற மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி அவர்கள் உரையாற்றுகையில், ''பெரியார் மாவட்டம் உதயமான பிறகு இம்மாவட்டத்தில் பல்வேறு திட்டங்கள் துவக்கப்பட்டு வளர்ச்சி பெற்று வருகின்றன. இந்த மாவட்டம் பிரிக்கப்படுவதற்கு முன்பு மக்கள் கோவை சென்று அரசு அலுவலர்களைச் சந்திப்பதற்குச் சிரமமாக இருந்தது. மாவட்டம் பிரிக்கப்பட்டபின் இங்கேயே மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், அரசு அலுவலகங்கள் என்று வந்தபின் பொதுமக்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள எளிதாக அமைந்துள்ளது. முன்பைவிட இப்பகுதிக்கான வளர்ச்சிப் பணிகளும் தொய்வின்றி நடைபெற்று வருகின்றன. பெருந்துறை அருகில் 2 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் புதிய நகரம் உருவாக இருக்கிறது. இங்கு திறக்கப்படும் பொறியியல் கல்லூரி தமிழ்நாடு மட்டுமல்லாது இந்தியத் துணைக் கண்டத்திலேயே ஒரு முன் மாதிரி கல்லூரியாகச் செயல்படும் நிலையில் உருவாக்கப்படும்'' என்று கூறினார்.

பின்னர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் பல்வேறு திட்டங்களைத் துவக்கி வைத்தார்.

ரூ. 4 கோடியே 75 இலட்சம் செலவில் கட்டப்பட்ட பொறியியல் கல்லூரி கட்டடம், ரூ.9 கோடி மதிப்பிலான மருத்துவமனைக் கட்டடம், ரூ. 6 கோடி செலவில் வீட்டுவசதி மற்றும் குடிசை மாற்றுவாரியங்களினால் கட்டப்பட்ட குடியிருப்புகள் ஜீவா போக்குவரத்துக்கழகத்தின் சார்பிலான புதிய 16 வழித்தடங்கள், சுமார் 3 கோடி செலவில் குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் ஐரோப்பிய பொருளாதாரம் மற்றும் உலகவங்கியின் சார்பிலான குடிநீர் திட்டப் பணிகள் ரூ. 11 கோடி செலவில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பிலான கட்டடங்கள், சமுதாயக் கூடங்கள், ஆரம்பச் சுகாதார நிலையக் கட்டடங்கள், கூட்டுறவுத்துறையின் மஞ்சள் அரவை ஆலை போன்ற மற்றைய திட்டப் பணிகளையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் துவக்கி வைத்தார். மொத்தம் 1,423 கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டன.

விழாவில் சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியதாவது:

''என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே!

என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே!

என் ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புக்களே!

அனைவருக்கும் என்னுடைய வணக்கம்.

இந்த மாபெரும் விழாவில் கலந்து கொள்வதின் மூலம் உங்களை எல்லாம் காண்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

பெரியார் மாவட்ட மக்கள் எல்லோரும் என்மீது பற்றும் பாசமும் கொண்டவர்கள். தந்தை பெரியாரின் பாரம்பரியத்தில் வளர்ந்த நீங்கள் எல்லோரும் முற்போக்கு எண்ணமும், செயல்திறனும் படைத்தவர்கள். நாட்டைத் துண்டாட நினைக்கும் தீயசக்திகளை நீங்கள் இனம் கண்டு கொள்ள வேண்டும்.

தீய சக்திகளை முழுமையாக அழிக்க நாம் எல்லோரும் மிகுந்த விழிப்புடன் பாடுபட வேண்டும். நாட்டில் அமைதியைநிலை நாட்டவும், ஒருமைப்பாட்டை வலுப்படுத்தவும் நாம் அனைவரும் அயராது பாடுபடுவோம். ஒருமைப்பாட்டு வாரமாகிய இந்த நாளில் ஒன்றுபட்ட இந்தியாவைக் கட்டிக் காப்போம் என்று உறுதி கொள்வோம்.

தமிழ் காத்த, தமிழ்த்தலைவர்களின் பெயரால் அமைக்கப்பட்டுள்ள போக்கு வரத்துக் கழகங்கள் மூலம் சித்தோட்டில் பொறியியல் கல்லூரி தொடங்குவதிலும் பெருந்துறை காசநோய் மருத்துவமனையை மருத்துவக் கல்லூரியாக மாற்றுவதிலும் நான் மனமகிழ்ச்சி அடைகிறேன்.

ஏழை மக்களுக்காகக் கொண்டு வரப்படும் அரசின் திட்டங்களை நிறைவேற்றப் பொதுமக்கள் ஒத்துழைப்புத் தர வேண்டும்.

அண்ணா நாமம் வாழ்க!"

பெருந்துறை காசநோய் மருத்துவமனையை அரசு ஏற்று மருத்துவக் கல்லூரியாக்கும் திட்டத்தையொட்டி, மருத்துவமனையை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் ஒப்படைக்கும் வகையில் அதன் மாதிரிவடிவத்தை வெள்ளிப்பேழையில் வைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

விழாவில் முன்னாள் அமைச்சர் திரு.செ.அரங்கநாயகம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் திரு எஸ்.டி.உக்கம்சந்த், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திருப்பூர் திரு இரா. மணிமாறன், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத் தலைவர் திருமதி சுலோசனாசம்பத் ஆகியோர் உரையாற்றினர்.



மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வெள்ளியாலான தேர்ச் சக்கரம் போன்ற நினைவுப் பரிசை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு வெள்ளியிலான தேர்ச்சக்கரம் போன்ற நினைவுப் பரிசினை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

மாவட்ட மக்கள் சார்பாக, சந்தனத்தால் செய்யப்பட்ட யானைப் பொம்மைகளை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசாக மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கினார்.

பொதுமக்கள் அளித்த மனுக்களையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

## போலி மாத்திரைகள் முதல்வர் நடவடிக்கை

தலைவலி போன்றவற்றிற்குப் பயன் படுத்தப்படும் 'அனால்ஜின்' மாத்திரைகளில் பெருமளவு போலி மாத்திரைகள் விற்பனை செய்யப்படுவது தொடர்பாகச் சோதனை மேற்கொள்ளப்பட்டதில் திருவில்லிபுத்தூர், தர்மபுரி மாவட்டம், ஓசூர் ஆகிய இடங்களில் போலி 'அனால்ஜின்' மாத்திரைகள் கண்டு பிடிக்கப்பட்டு அவை உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டன. இதேபோல் தாய்மார்களுக்கு வழங்கப்படும் இரும்புச்சத்து மாத்திரைகள் தரம் குறைந்ததாகவும், போதிய அளவு வீரியம் அற்றதாகவும் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

மேற்படி இரண்டு சம்பவங்களும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. இதற்குக் காரணமானவர்களைக் கண்டுபிடித்து, உடனே கடும் நடவடிக்கை எடுக்குமாறும், தொடர்ந்து கண்காணிப்பில் ஈடுபடுமாறும் மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேரில் ஆணை பிறப்பித்தார்கள்.

இம்மாதிரி புழக்கத்தில் உள்ள போலி மருந்துகளைப் புறக்கணிக்குமாறும், போலி மருந்து பற்றித் தகவல் கிடைத்தால் உடனே அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும், மாத்திரைகள் வாங்கும்போது அசல் தானா என்பதைப் பரிசோதித்து உறுதி செய்த பிறகே வாங்க வேண்டும் எனவும் பொது மக்களை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.





# திருச்சி அழைக்கிறது

வ. விஸ்வநாதன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
மற்றும் மாவட்ட விளையாட்டுக்குழுத் தலைவர்,
திருச்சி மாவட்டம்.

இந்திய அரசு கிராமப்புறங்களில் வாழ்வோருக்காக ஊரக விளையாட்டு மையங்களை அமைத்து, விளையாட்டுப் போட்டிகளை வட்ட, மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் நடத்தி வருகிறது.

இந்திய மக்கள் தொகையில் 80 சதவிகிதத்தினர் கிராமத்தில் வாழ்வதால் அவர்களிடமிருந்து பெரும்பான்மையான விளையாட்டு வீரர்களை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தை இந்திய அரசு கொண்டிருக்கிறது. தேசிய விளையாட்டுப் பள்ளி, பாடியாலா மூலமாக விளையாட்டு வீரர்களின் திறமையை வெளிக் கொணர்ந்து அவர்களுக்கு அறிவியல் முறைப்படிப் பயிற்சி அளித்து உலக அளவிற்கு உயர்த்தி வருகின்றது.

தமிழ்நாடு அரசும் இந்த விளையாட்டுப் போட்டிகளுக்குப் புத்துணர்வு தந்து ஊக்குவிக்கும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ் நாடு மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகம் என்ற அமைப்பினை ஏற்படுத்தி, இளைய தலைமுறையினரை ஊககுவித்து வருகிறார்கள்.

திருச்சியில் டிசம்பர் மாதம் 18ஆம் நாள் முதல் 22-ஆம்நாள் முடிய ஐந்து நாட்கள் நடைபெறும் இவ்விளையாட்டுப் போட்டிகள் குறித்த விவரங்கள்:

இந்த விளையாட்டு விழாவில் கூடைப் பந்து மற்றும் ஆக்கி ஆகிய ஒவ்வொரு போட்டியிலும் 54 அணியினர் போட்டியிடுவர்.

இப்போட்டிகளில் பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர் தவிர கிராமப்புறங்களைச் சார்ந்த பள்ளியில் பயிலாத 16 வயதுக்கு உட்பட்ட ஆண்,பெண் இருபாலரும் கலந்து கொள்ளலாம். அவர்கள் வயதுச் சான்றிதழை வட்டார வளர்ச்சி அலுவலர்களிடம் பெற்று வந்து போட்டியில் பங்கு பெறலாம் என்ற சிறப்பு அம்சம் இந்த விழாவில் குறிப்பிடத்தக்கதாகும்.

கூடைப்பந்து விளையாட்டுப் போட்டிக்காக உரிய விளையாட்டுத் திடல்கள் நான்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் இரண்டு திடல்கள் புனித சிலுவைக் கல்லூரியிலும், மற்றும் புனித சிலுவை மேல் நிலைப் பள்ளியிலும் அமைக்கப் பெற்றுள்ளன.

அண்ணா விளையாட்டு அரங்கில் இரு விளையாட்டுத் திடல்களும் அனைத்து உலகத் தரத்திற்கு ஏற்ற வகையில் புதிய வித முறைகளின்படி அமைககப்பெற்றுள்ளன. அவற்றில் நிலையான மின்னொளி அமைப்பும் பொருத்தப்படுகிறது. இந்தவிளையாட்டுத் திடல்களை மேம்படுத்தவும், அமைக்கவும், ஏறத்தாழ இரண்டு இலட்சம் ரூபாய் செலவு செய்யப்படுகிறது.

ஆக்கி விளையாட்டுப் போட்டிகள் சேமப்படை மைதானத்தில் அமைந்துள்ள இரண்டு விளையாட்டுத் திடல்களிலும், அண்ணா விளையாட்டு அரங்கில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு விளையாட்டுத் திடலகளிலும் நடைபெறும்.

இந்த விளையாட்டுத் திடல்களை மேம்படுத்தவும் அண்ணா விளையாட்டு அரங்கில் நிரந்தரமாக ஒரு புல்தரை மைதானம் அமைக்கவும் சுமார் ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அகில இந்திய அளவில் நடைபெறும் இவ்விளையாட்டுப் போட்டியில் பங்கு பெறும் வீரா, வீராங்கனைகளை வரவேற்கும் வகையில் அண்ணா விளையாட்டு அரங்கம் பொலிவும், வலிவும் பெற்றுத் திகழ, சுமார் ஒரு இலட்சம் ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புனித ஜான் வெஸ்ட்ரி மேல் நிலைப்பள்ளி மற்றும் அரசு மாணவர்கள் விடுதி ஆகிய இரு இடங்களில் விளையாட்டு வீரர்களும் புனித சிலுவைக் கல்லூரி, மற்றும் மேல்நிலைப்பள்ளி விடுதிகளில் விளையாட்டு வீராங்கனைகளும் தங்க இடவசதி செய்யப்பட்டுள்ளது. நாள்தோறும் இவ்விடங்களில் கலைநிகழ்ச்சிகள் நடைபெறும்.

நகரப் பேருந்துகள் அண்ணா விளையாட்டு அரங்கத்தின் வழியாகச் செல்லவும், சிறப்புப் பேருந்து வசதிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பொது மக்களும், பார்வையாளர்களும் அமர்ந்து விளையாட்டுக்களைக் கண்டு களிக்க, காலரிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் விளையாட்டு அரங்கில் ஆங்காங்கே தற்காலிக உணவு விடுதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் இந்த விளையாட்டுப் போட்டிகளைக் கண்டு களிக்கும் வகையில் எல்லா விதமான வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

வீர விளையாட்டுக்களுக்குப் பேர் பெற்ற தமிழகத்தின் இதயமாக விளங்கும் திருச்சியில் முதன் முறையாக நடைபெறும் அகில இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகள் வெற்றிகரமாக அமைவது உறுதி.

# தேசியப் பண்பாட்டு விழா

தமிழ்நாடு, ஆந்திரம், கர்நாடகம், கேரளம், புதுவைஆகிய மாநிலங்கள், அந்தமான் நிகோபார், லட்சத்தீவு ஆகிய பகுதிகள் சார்பில் தென்னகப் பண்பாட்டு மையம் ஒன்று இவ்வாண்டு சனவரித் திங்களில் தஞ்சை மாவட்டம் திருவையாற்றில் தொடங்கி வைக்கப்பட்டது.

இம் மையத்தைத் துவக்கி வைத்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவகாந்தி அவர்கள், 'கலைகளைச் சிறப்பாக வளர்க்கவும், நமது சந்ததிகளுக்கு சிறந்த கலைச் செல்வங்களைத் தரவும், மறைந்து கிடக்கின்ற திறமைகளை-புலமைகளை-வெளிக் கொணரவும் இம்மையம் பாடுபடும்' என்றார்.

தற்போது நமது நாட்டில், தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு தென் மத்தி, வடகிழக்கு, வட மத்தி ஆகிய 7 பிராந்தியங்களின் சார்பாக 7 பண்பாட்டு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

இந்த மையங்கள் ஒருங்கிணைந்து நடத்தும் தேசியப்பண்பாட்டு விழாவை மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் 8.11.86 அன்று வரலாற்றுச்சிறப்புமிக்க டெல்லி செங்கோட்டை மைதானத்தில் துவக்கி வைத்தார்.

நாட்டில் நிலவும் பலதரப்பட்ட பண்பாட்டை மக்கள் உணர்ந்து பேணும் வகையிலும், அவை சம அளவில் வளர்ச்சிபெற வேண்டும் என்ற நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டும் இவ்விழா நடத்தப்பட்டது.

''நமது விழா'' (அப்னா உத்சவ்) என்று பெயரிடப்பட்ட இவ்விழாவின் துவக்கத்தில் செங்கோட்டையின் 7 இடங்களில் இருந்து இரவின் இருளைக் கிழித்துக்கொண்டு 'டார்ச்' விளக்கு ஒளி பாய்ச்சப்பட்டது. நாட்டின் 7 பண்பாட்டு மையங்கள் கலைஞர்களின் வருகையைக் குறிக்கும் வகையில் இவ்வாறு 7 திசைகளிலிருந்து ஒளிச்சுடர் காட்டப்பட்டது.

குத்துவிளக்கேற்றி மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் இவ்விழாவைத் துவக்கி வைத்து உரை ஆற்றினார். பின்னர் நடைபெற்ற கலைஞர்களின் அணிவகுப்பு, கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

தொடக்கவிழா முடிந்ததை அறிவிக்க இறுதியில் 7 வண்ணங்களிலான மலை போன்ற பலூன் வானவெளியில் பறக்கவிடப்பட்டது. நவம்பர் 26ந் தேதிவரை நடைபெற்ற இவ்விழாவில் நாடெங்குமிருந்து 4,000 கலைஞர்கள் பங்கேற்றனர்.

தென் மாநிலங்களைச் சேர்ந்த கலைஞர் குழுக்கள் 9.11.86 முதல் சில அரிய கலை நிகழ்ச்சிகளை நடத்தின. இவற்றில் சில சுமார் 500 ஆண்டுக் காலப் பழமை வாய்ந்தவை. ஆந்திர மாநிலத்தின் சிந்து பாகவதம் நாட்டியம், தமிழ்நாடு வடார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த தெருக்கூத்துகள், கரகாட்டம், காவடி ஆட்டம், கர்நாடக மாநிலத்தின் சுட்ராடா மற்றும் கோம்பை ஆட்டம், கேரள மாநிலத்தின் கலாரைப் பாட்டு மற்றும் தய்யம் ஆகிய நிகழ்ச்சிகளுக்குப் பார்வையாளர்களிடையே நல்ல வரவேற்பு இருந்தது.

இந்த 4 மாநிலங்களைச் சேர்ந்த நாட்டியக் கலைஞர்கள் மற்றும் சண்டைக் கலை வல்லுநர்கள் உட்பட மொத்தம் 500 பேர் இவ்விழாவில் பங்குபெற்றனர்.

பரதநாட்டியம், கதகளி, குச்சுப்பிடி, யக்ஷகானம் போன்ற மரபுவழிக் கலைகளும் இடம் பெற்றன. மொத்தம் 34 தென்னிந்தியக் கலைகள் இடம்பெற்றன. இவற்றில் 18 கலைகள் மிகவும் அரிதானவை.

இந்தக் கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்களில் தென்னிந்திய உணவு வகைகள் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்தியாவில் பெரிய அளவில் திறந்தவெளி அரங்கில் தேசியக் கலைவிழா ஏற்பாடு செய்யப்பட்டது இதுவே முதல் முறையாகும்.

பல்வேறு மொழியினர், சமூகத்தினர் இந்தியாவில் வாழ்ந்தாலும், வேற்றுமையில்ஒற்றுமை காண்போம் என்ற உயரிய நோக்கத்தை வெளிப்படுத்தும் விதமாய்த் திகழ்ந்தது இக்கலைவிழா.



# வளமான வாழ்வுக்கு வழிகாட்டும் வங்கி



வளமான வாழ்வுக்கு வழிகாட்டும் வங்கி
தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி!
தாய்மையின் தனிப்பரிவுடன் உங்கள் சேமிப்பு
எங்களிடம் பூரிப்புடன் வளர்கிறது!

உங்களது அனைத்து சேமிப்புகளுக்கும் ½%
கூடுதல் வட்டியும் கிடைக்கிறது.

மக்களுக்கேற்ற வங்கி—
தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி.

TNSC BANK

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.,
233, என்.எஸ்.சி. போஸ் சாலை,
சென்னை-600 001

TNSC—வாழ்வுக்கு வளமூட்டும் வங்கி

TNSC BANK/166


# தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் ஒரு கண்ணோட்டம்

வெ. பரஞ்சோதி
உதவி இயக்குநர்,
ஊரக வளர்ச்சித்துறை.

நம்முடைய சமுதாயத்தில், கிராமத்திலுள்ள மக்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்றாலும் அல்லது போதுமான வேலையில்லை என்ற நிலைமை ஏற்பட்டாலும், அவை ஒரு துன்பம் நிறைந்த சூழ்நிலையை அவர்களுடைய அன்றாட வாழ்வில் ஏற்படுத்திவிடும்.

1980-ம் ஆண்டுக் கணக்கின்படி இந்தியாவில் 245.90 மில்லியன் உழைக்கும் சக்தி பெற்ற மக்கள் கிராமங்களில் வசிக்கின்றனர்.

தமிழ்நாட்டில் மட்டும் 55,59,103 பேர்கள் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். தவிர, 60,37,601 பேர்கள் விவசாயத் தொழிலாளர்களாக வேலை செய்கின்றனர். இப்பெருந்திரளானோர், வேளாண்மைக் காலங்கள் தவிர, எஞ்சிய நாட்களில் கூட வேலை வாய்ப்பின்றி பெரிதும் அல்லல்படுகின்றனர். உழைப்பதற்கு இவர்கள் தயாராக இருந்த போதிலும் கிராமங்களிலே வேலை கிடைக்காத நிலை உள்ளது. வேளாண்மை நிலங்கள் நாளடைவில் சிறு சிறு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு, அவை போதுமான வேலையளிக்கக் கூடியதாய் இல்லை.



அதற்கு விடையளித்ததுதான், ''வேலைக்கு உணவு'' என்ற திட்டம், அது 1979-ஆம் ஆண்டு வரை செயல்பட்டது. இத்திட்டத்திலுள்ள சில குறைகள் களையப்பட்டு, புதிய அம்சங்கள் சேர்க்கப்பட்டு, 1980 அக்டோபர் திங்கள் முதல், ''தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்'' என்ற புதிய பெயரில் நாடு முழுதும் செயல்படத் தொடங்கியது.

இன்று நாட்டிலே நிறைவேற்றப்பட்டுவரும் ,இரண்டு பெரிய திட்டங்களிலே ஒன்று, ''தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்'' மற்றொன்று, ''ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்'' என்பதாகும்.

''தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்'' மூன்று முக்கிய நோக்கங்களைக் கொண்டது.

வேலைவாய்ப்பு சிறிது கூட இன்றி அல்லல்படுவோர்க்கும், போதிய வேலைவாய்ப்பின்றி குறைவான ஊதியம் பெற்று, தொல்லைப்படுவோர்க்கும், அவர் ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, வேலையளிப்பது, திட்டத்தின் முதல் நோக்கம்.

வேலைவாய்ப்பளிப்பதன் வாயிலாக கிராமங்கள், கிராம மக்களுக்குத் தேவையான, அவசியமான நிரந்தரமான வசதிகள் ஏற்படுத்துவதும், அவற்றின் காரணமாக, கிராம மக்களின் பொருளாதார நிலைமை அதிகரிப்பதும், இரண்டாவது நோக்கம்.

வேலையளித்து அதற்கு ஈடாக ஊதியமும், உணவுப்பொருளும் அளிப்பதால் கிராம மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தி, சத்துமிக்க உணவைப்பெறச்செய்தல், மூன்றாம் நோக்கம்.

இப்பெருந்திட்டம், தமிழகத்திலுள்ள 383 வட்டாரங்களிலும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் வாயிலாக நிறைவேற்றப்படுகிறது.

இத்திட்டத்தில் நிறைவேற்றப்படும் வேலைகள் என்னென்ன என்பதை அறிவோம்:

சிறிய நீர்ப்பாசன மேம்பாடு, வெள்ளத்தடுப்புப் பணிகள், மண் நீர் வளப் பாதுகாப்பு, காடுகள் வளர்ப்புத் திட்டம், சாலைகள் அமைத்தல், ஆதிதிராவிட மக்களுக்குச் சிறப்பான முறையில் பயன்படும் திட்டங்களை மேற்கொள்ளுதல், தொடக்கப்பள்ளி, ஊராட்சிகள், சமுதாய நிலையங்கள், அரிசி, சிமெண்ட் வைப்பதற்மான கட்டடங்கள் கட்டுதல் இத்திட்டத்தில் அடங்குபவையாகும்.

மேற்கண்ட வேலைகளை எப்போது செய்யவேண்டுமென்ற வரைமுறை ஏதும் இல்லை. ஏழை எளிய, வேலையில்லாத கிராம மக்கள் எவ்வெப்போது வேலையின்றி அதன் காரணமாக, வறுமைக்கு உள்ளாகிறார்களோ அப்போதெல்லாம் இப்பணிகளை ''தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்ட''த்தில் எடுத்துக் கொண்டு நிறைவேற்றி, மக்கள் பயனடையச் செய்யவேண்டும்.

திட்டத்தின் தொடக்க காலத்தில் அரிசி, கோதுமையுடன் ,ஒரு



# தேன்கனிக் கோட்டையில் பால் குளிரூட்டு நிலையம்

வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டத்தின் கீழ், தருமபுரி மாவட்டம், தேன்கனிக்கோட்டையில் 16-11-86 அன்று மாண்புமிகு நாடாளுமன்றத் துணை சபாநாயகர் திரு தம்பிதுரை அவர்கள் தலைமையில், மாவட்டப் பால் வளப் பெருந் தலைவர் திரு எஸ். அரங்கநாதன் அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு சுற்றுலா மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் அவர்கள் ரூ. 24 இலட்சம் செலவில் கட்டப்படவிருக்கும் பால் குளிரூட்டு நிலையத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும் போது, "படித்த இளைஞர்கள் வேலை தேடி அலைவதை விடுத்து கால்நடை பராமரிப்பில் ஈடுபட்டு வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டும். மேல் நாடுகளில் எல்லா வேலையையும் டிப்ளமோ படித்தவர்கள் தான் செய்கிறார்கள். நம்நாட்டில் படிக்காதவர்கள்கூட எத்தொழிலையும் செய்யலாம் என்ற நிலை உள்ளது. இப்பகுதியில் கால்நடைகளை வாங்க கடன் வழங்கப்படுகிறது. இதன் மூலம் ஆயிரம் கறவை மாடுகள் வாங்கினால் கூட இந்தக் குளிரூட்டும் நிலையத்திற்குத் தேவையான 10 ஆயிரம் லிட்டர் பால் சுலபமாகக் கிடைத்துவிடும். இங்குள்ள மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் எண்ணத்தில்தான் மாநில மைய அரசுகள் இக்குளிரூட்டும் நிலையத்தை இங்கு நிறுவியுள்ளன" என்று அமைச்சர் கூறினார்.

விழாவில் 17 பேருக்குத் தேனீ வளர்க்கவும், ஆடு வளர்க்கவும் ரூ. 1.02 இலட்சமும், பாய் நெசவுத் தொழில் செய்ய மற்றும் கறவை மாடுகள் வாங்க 36 பேருக்கு ரூ. 2.20 இலட்சமும், 8 பேருக்குப் புதிய கிணறுவெட்டுவதற்கு ரூ.1.5 இலட்சமும் கடன் தொகையாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆர். பாலகிருஷ்ணன், பால் வளத்துறை ஆணையர் கருப்பன், தனி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு கே.வி. வேணுகோபால் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

## வனவளர்ப்புத் திட்டம் தமிழகத்துக்குப் பாராட்டு!



புதுடில்லியில் 28.8.86 மற்றும் 29.8.86 ஆகிய இரண்டு நாட்களில் மைய அரசு கூட்டிய இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் வனத்துறை அலுவலர்கள் உயர் மட்டக் கூட்டத்தில், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் எல்லா மாநில முதலமைச்சர்களும் வனவளர்ப்புச் சம்பந்தமாக 14 அம்சத் திட்டம் அமல்படுத்தக்கேட்டுக்கொண்டதைப் பற்றி ஆய்வு செய்யப்பட்டது.

இந்தக் கூட்டத்தில், 14 அம்சங்களில் தமிழ்நாடு 5 அம்சங்களில் "பலே" "பலே" (Very good), 7 அம்சங்களில் "சபாஷ்" (good), எஞ்சிய இரண்டு அம்சங்களில் "தேவலாம்" ( Fair ) என்றும் மைய அரசின் பாராட்டு தலைத் தமிழ்நாடு பெற்றிருக்கிறது. இந்தியாவில் வனவளர்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டங்களில் தமிழக அரசு முதலிடம் வகிக்கிறது என்று சொல்லலாம்.





# தரம் உயரத் தரும் பயிற்சி

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தில் (டான்சி) சார்பில், நிதி மற்றும் கணக்கு அலுவலர்களின் பயிற்சித் தொடக்கவிழா 2.12.86 அன்று நடந்தது.

மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் திரு ஆனூர் ஜெகதீசன் அவர்கள் பயிற்சியைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்:

"தரமான பொருள்களை வழங்கும் துறையாக டான்சி விளங்கி வருகிறது. நட்டத்தைக் குறைத்து லாபத்தைக் கூட்ட வேண்டும் என்ற நோக்கில் இது செயல்பட்டு வருகிறது. இங்குத் தயாரிக்கப்படும் பொருள்களின் தரம் உயரவும், சிறப்பாகப் பணியாற்றவும் இது போன்ற பயிற்சிகள் இன்றியமையாததாகும். பொதுவாக டான்சியில் பணியாற்றும் எல்லாருக்கும் பயிற்சி தந்து, எல்லாரும் திறமையானவர்கள் என்பதை நிலை நிறுத்த வேண்டும். மக்கள் விரும்பி ஏற்கிற அளவுக்கு டான்சியின் தயாரிப்புக்கள் விளங்க வேண்டும்".

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி) தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான நிறுவனம். இந்நிறுவனம் 47 உற்பத்தித் தொழிற்சாலைகளையும், 7 விற்பனை நிலையங்களையும் கொண்டு இயங்கி வருகிறது. இங்குப் பொறியியல் பொருட்கள், மரம் மற்றும் இரும்புச் சாமான்கள், இரும்பு வார்ப்படங்கள், அழுத்தப்பட்ட இரும்புத் தகட்டுப் பொருட்கள், கொல்லுலை உறுப்புகள், கைப்பம்புகள், இலகு மற்றும் கனரக இரும்புக் கட்டுமானங்கள், துத்தநாக மூலாம் பூசப்பட்ட டிரான்ஸ்மிஷன் கோபுரங்கள் போன்றவை உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

1965-1966இல் டான்சியின் மொத்த உற்பத்தி மதிப்பு சுமார் ரூ.389 இலட்சங்கள். அது 1985-86இல் ரூ. 2500 இலட்சங்களாக உயர்ந்துள்ளது.

டான்சியில் சுமார் 3,700 பேர் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்குத் தேவையான அறிவியல் கல்விப் பயிற்சி அளித்து, திறமையானவர்களை உருவாக்கி மேலும் அவர்களின் தகுதியை உயர்த்த வேண்டும் என்ற கருத்தினைக் கொண்டு, டான்சி, பணியாளர்களுக்குப் பல தரப்பட்ட பிரிவுகளுக்குத் தேவையான பயிற்சிகளைத் தர முன் வந்துள்ளது. இதற்கு முன் 26 பணியாளர்களுக்குச் சென்ற செப்டம்பரில் வெல்டர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப்போது 37 கணக்காளர்களுக்கு நிதி நிர்வாகப்பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது. இதற்கு முன் 67 கணக்காளர்களுக்கு ஜூலை-செப்டம்பர் 1986ல் இதே போன்று பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சிகளின் முக்கிய நோக்கம், புதுமையான கருத்துக்களைத் தனது தொழில் சாலைகளில் புகுத்தி, உற்பத்தித் திறனைப் பன்மடங்கு உயர்த்தி, ஒரு மேன்மையான நிறுவனமாகப் பணி புரிவதேயாகும்.

—நமது செய்தியாளர்

## சேலம் உருக்காலைக்கு சர்வதேச விருது !

சேலம் உருக்காலைக்கு, பிரிட்டிஷ் பாதுகாப்புக்கவுன்சிலின்விருது மூன்றாண்டுகளில் இரண்டாவது தடவையாகக் கிடைத்திருக்கிறது. பாதுகாப்பு உலகத்தின் "ஆஸ்கார்" எனப் புகழ் பெற்றது இந்த விருது.

இலண்டனில் உள்ள பிரிட்டிஷ் பாதுகாப்புக் கவுன்சில், ஆண்டுதோறும் உலகத்தின் மிகச் சிறந்த பாதுகாப்புத்தரம் வாய்ந்த 30 கம்பெனிகளுக்கு இந்த விருதை வழங்கி வருகிறது.



ரொக்கத் தொகையுமாக ரூ. 8 ஊதியம் அளிக்கப்பட்டது. ஆனால் ''நாளடைவில் இதுமிகக் குறைந்ததாகக் காணப்பட்டதால் ரூ. 8 லிருந்து ரூ. 10-க்கு ஊதியம் அதிகரிக்கப்பட்டது. இத்தொகையில் ரூ. 1-85க்கு ஒரு கிலோ அரிசி, ரூ. 3க்கு இரண்டு கிலோ கோதுமையுடன், ரொக்கமாக ரூ. 5.15-ம் தரப்படுகிறது. உழைத்து ஒய்ந்த கரங்கள், அரிசி, கோதுமையை முக்கிய உணவாக வைத்துக் கொண்டு பசியாறலாம். அவர்கள் உழைப்பால் உண்டாகிய நிலையான, கிராம மக்களுக்குரிய சொத்துக்கள், அங்குள்ளவர்களுக்குத்தொடர்ந்து பயனளித்து வரும்.

நீண்ட நாட்களாக, கட்டுப்பாடு ஏதுமின்றி நாம் மரங்களை வெட்டி வீழ்த்தி, அடுப்பு எரிப்பதற்கும், கால் நடைகளுக்கு உணவளிப்பதற்கும் பயன்படுத்து வருகிறோம். இதன் விளைவாக, எரிபொருள் தேவையை நிறைவு செய்ய வனவளம் ஈடு கொடுக்காத நிலையேற்பட்டுள்ளது. மட்டுமின்றி, இயற்கையின் வெட்ப-தட்ப நிலையும் பாதிக்கப்பட்டு வருகின்றது. இந்நிலை மேலும் மோசமாகி விடாமல் தடுப்பதற்காக, தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் காடுகள் வளர்ப்புத் திட்டத்திற்கு ஒரு முக்கிய இடம் அளிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, இதற்கென்று ஒதுக்கப்பட்ட தொகை தற்போது 20 விழுக்காட்டிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. 860 இலட்ச மரக்கன்றுகள் வளர்க்கபபட்டு வினியோகிக்கப்பட்டுள்ளன. சுமார் 10,000 எக்டேர் நிலப்பரப்பில் சமூகக் காடுகள் வளர்க்கப்பட்டுள்ளன.

1986-87ஆம் ஆண்டிற்கு, இத்தொகை 25 விழுக்காட்டிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. இது ரூ. 905.50 இலட்சமாகும்.

இப்பெருந் தொகையைக் கொண்டு, கிராமத்துக்குச் சொந்மான பயனற்ற நிலங்கள் மற்றும் வாரியங்கள், பள்ளிகள், கல்லூரிகள், அரசு அலுவலகங்கள், கோவில்களுக்கான தரிசு நிலங்களுக்கு, 2-சி பட்டா அளித்து, அவ்விடங்களில் காடுகள் வளர்க்க தமிழ்நாடு அரசு ஆணைபிறப்பித்துள்ளது.

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் மற்றொரு முக்கியமான அம்சம் ஆதிதிராவிட மக்களுக்கு, வீடுகள் கட்டித் தருவதாகும். 1984-85ஆம் ஆண்டில் 9,358 ''தொகுப்பு வீடுகள்''



(group houses) கட்டித்தரப்பட்டன. 1986-87ஆம் ஆண்டில் மட்டும் 23,565 வீடுகள், ரூ. 2,380.40 இலட்சம் செலவில், கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தவிர, கிராமப் புறங்களிலே, கழிவறைகள் கட்டுவதும் இத்திட்டத்தின் ஒரு கூறாகும். ரூ.1,200 மதிப்பில் 3,950 கழிவறைகள் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது. கூனியும், குறுகியும், நெளிந்தும், வளைந்தும், திறந்த இடங்களில் இயறகைக் கடன்களைக் கழித்து வந்த, கிராம வாசிகளின் அன்றாடத் தொல்லைகள் இதன் மூலம் பெரிதும் தகர்த்தெறியப்படும்.

தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தினால், கிராமங்களின் சூழ்நிலையே பெரிதும் மாறி, முன்னேறிக் கொண்டு வருகிறது. அன்றாட வாழ்க்கை வசதுகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் பெரிய அளவில் தமிழ்நாட்டிலே செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

பல்லாயிரக்கணக்கான சிறு பாசன குளங்கள் மேம்பாடு அடைந்துள்ளன. இணைப்புச் சாலைகள் புதிதாக அமைக்கப்பட்டன. பழைய சாலைகள் புதுப்பிக்கப்பட்டன. இவற்றின் தரம் ஏராளம், ஏராளம. இவற்றின் காரணமாக, கிராம மக்களின் பொருளாதார நிலை, வேலைவாய்ப்பு பெரிதும் அதிகரித்துள்ளன. அவாகளுடைய வெளியுலகத் தொடர்பு பன்மடங்காகப் பெருகியுள்ளது.

இத்திட்டத்தின் மிகச் சிறப்பான அம்சம், இவ்வேலைகள் அனைத்தும் ''கண்டிராக்டர்கள்' வசம் ஒப்படைக்கப்படாமல், ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் நேரடியாகவே நிறைவேற்றப்படுவதுதான். இதனால் இடையிலுள்ளோர்களிடம் செல்லும் பணம் தவிர்க்கப்பட்டு, பயன் நேரிடையாகவே, கிராம மக்களுக்குச் சென்றுவிடுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இத்துணைப் பெரிய திட்டத்தைச் செயல்படுத்த, மக்கள் தரப்பிலிருந்து ஆலோசனைகள் வழங்க, வட்டார அளவிலே மக்கள் குழுவும், மாவட்ட மாநில அளவிலே செயற்குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. அவை அடிக்கடி கூடி, திட்டநிறைவேற்றத்திற்கு ஆலோசனைகள் கூறுவதுடன், ஆய்வும் செய்கின்றன.





# நந்தனத்தில் ஒரு சந்திப்பு

சென்னை ஆயிரம் விளக்குத் தொகுதியில் உள்ள வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகளில் உள்ளவர்களை நேர்காணல் விழா நிகழ்ச்சியும், நந்தனம் பகுதியல் உள்ள 'ஒய்-பிளாக்' குடியிருப்பு மற்றும் 'தியூ டவர்' குடியிருப்பின் சுற்றுப்புறங்களில் மரம் நடு விழா நிகழ்ச்சியும் கடந்த 6.12.86 அன்று சீரும் சிறப்புமாக நடைபெற்றன.

இவ்விழாவில் - மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி, மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு எஸ்.திருநாவுக்கரசு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு.திருப்பூர் மணிமாறன் ஆகியோர் கலநது கொண்டார்கள்.

முன்னதாகக் காலையில் ஒய்-பிளாக் குடியிருப்பில் அளிக்கப்பட்ட வரவேற்பில் பங்கேற்ற அவர்கள், அங்கு 25 மரக்கன்றுகளை நட்டார்கள். இவ்விழாவில் குடியிருப்போர் சங்கத் தலைவர் திரு.கே.ஆறுமுகம் எல்லோரையும் வரவேற்றார், திரு.ஏ.காவிரெட்டி மாலைகள் அணிவித்தார்.

பின்னர் 10 மணியளவில் நந்தனம் சமூகக் கூடத்தில் நடைபெற்ற மக்கள் நேர்காணல் நிகழ்ச்சிக்கு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கே.ஏ.கே. அவர்கள் தலைமை தாங்கினார். அவர் தமது உரையில் நந்தனத்தை மாதிரி நகரம் போல் உருவாக்கத் தகுந்தமுயற்சிகள் மேற்கொண்டிருப்பதாகவும், எல்லா வசதிகளும் இங்குள்ள மக்களுக்குக் கிட்டப் பாடுபட்டு வருவதாகவும் குறிப்பிட்டார். கடந்த பிப்ரவரி மாதம் நடந்த மக்கள் குறைகேட்கும் நாள் கூட்டத்தில் கூறப்பட்ட குறைகளில் முக்கால் பங்குக்கு மேல் நிறைவேற்றப்பட்டு விட்டதாகவும், மீதமுள்ளவை விரைவில் நிவர்த்திக்கப்படும் என்றும் தெரிவித்தார். அதற்காகப் பாடுபட்ட அதிகாரிகளுக்கெல்லாம் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

மேலும் அவர் பேசுகையில், இரவு பகலாகக் கட்டப்பட்டு வரும் கோட்டூர்புரம் -நந்தனம் இணைப்புப் பாலம் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளன்று திறக்கப்பட்டுவிடும்; 5 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பில் இப்பகுதியில் கட்டப்பட்டுவரும் நூலகக் கட்டடம் விரைவில் திறக்கப்படும்; இங்குள்ள மேநிலைப் பள்ளி தொடர்பான கட்டடப் பணிகளும் விரைந்து மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு.எஸ்.திருநாவுக்கரசு அவர்கள் பேசுகையில்- இதேபோல நேர்காணல் நிகழ்ச்சி குடிசைப்பகுதி மக்களிடையேயும் நடத்தப்படும்; இன்னும் 48 நகரங்களுக்கு குடிசைமாற்று வாரியப் பணிகள் விரிவாக்கப்படும். இப்பகுதியில் உள்ள வீட்டுவசதிவாரியக் குடியிருப்பில் உள்ள குறைகள் நீங்கத தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றெல்லாம் தெரிவித்தார்.

வீட்டுவசதி வாரியத் தலைவர் திருப்பூர் மணிமாறன் அவர்கள் உரையாற்றும்போது-வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகளில் உள்ளோர் தெரிவித்த குறைகள் மூன்று மாத காலத்திற்குள் நிவர்த்திக்கப்படும் என்றார். சீதம்மா காலனி பகுதியில் விரைவில் ஒரு சமூகக்கூடம் கட்டப்படும் என்றும், டிரான்சிட் ஃபிளாட்டுகளில்வசிப்பவர்களுக்கு அந்த வீட்டைச் சொந்தமாக்குவதுபற்றி விரைவில் முடிவெடுக்கப்படும் என்றும் மேலும் அவர் பேசுகையில் தெரிவித்தார்.

விழாவின் தொடக்கத்தில் ஆயிரம் விளக்குச் சட்டமன்றத் தொகுதியில் உள்ள 16 வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளில் உள்ள இரண்டாயிரம் வீடுகளில் வசிக்கும் பத்தாயிரம் பேர்களுக்கு உள்ள குறைகள் பல்வேறு குடியிருப்போர் சங்கங்களின் சார்பிலும் தெரிவிக்கப்பட்டன.

வீட்டுவசதி வாரியத் தலைமைப் பொறியாளர் திரு.டி.பி.காளியப்பன், மாநகராட்சி உதவி ஆணையர் திரு. ரகுபதி மற்றும் சென்னைப் பெருநகரக் குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரிய அதிகாரிகள், மின் வாரிய அதிகாரிகள், தமிழ்நாடு பாடநூல் நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு.கே.வியாகத் அலிகான், கோழி வளர்ப்பு வாரியத் தலைவர் திருமதி கல்யாணி இராமசாமி, வ.உ.சி. சுப்பிரமணியம் ஆகியோரும் இந்த விழாவில் கலந்துகொண்டார்கள்.

என்.முரளிதரன், பி.எம்.கமாலுதீன், எம்.ஜி.சி.பாலு ஆகியோர் முக்கிய விருந்தினர்களுக்கு மாலைகளும் சால்வைகளும் அணிவித்தனர். செயற்பொறியாளர் திரு. என். எஸ். சண்முகம் வரவேற்புரையாற்றினார். கங்கை கொண்டான் நன்றி கூறினார்.

—நம்து செய்தியாளர்




# கணிதமேதை ராமானுஜன்

## வாழ்க்கைக் குறிப்புகள்

தொகுப்பு:ரகமி

முழுப்பெயர்: ஸ்ரீநிவாச ராமானுஜன். செல்லப் பெயர் 'சின்னசாமி'

தந்தை: குடந்தை 'மாடபூசி' ஸ்ரீநிவாச ஐயங்கார்.

தாயார்: 'சக்கட்டி' கோமளா என்கிற கோமளத்தம்மாள்.



தாயார் கோமளத்தம்மாள்.

பிறந்த இடம்: ஈரோடு கோட்டை தெப்பக் குளத்திற்கு அருகிலுள்ள பாட்டனார் 'அமீனா முத்தண்ணா' என்கிற திருநாராயணய்யங்காரின் இல்லம்.

பிறந்த ஆண்டு: 1887 டிசம்பர் 22 வியாழன் ஸ்வர்ஜித்து ஆண்டு மார்கழி 9-ஆந் தேதி.

உடன்பிறந்தவர்கள்: 4 சகோதரர்கள், 1 சகோதரி.
(ராமானுஜன் - சடகோபன் - ஒரு பெண் குழந்தை பெயர் தெரியவில்லை-சேஷன்-லஷ்மிநரசிம்மன் - திருநாராயணன்.)

1889 டிசம்பர்: ராமானுஜத்திற்குப் பெரியம்மை போட்டது.

1892 மே.29: காஞ்சிபுரம் 'கொல்லா' கன்னைய செட்டியார் சத்திரத்தில் நிர்வாகியாக வேலை பார்த்து வந்த ''ஈரோடு முத்தண்ணா'' (பாட்டனார்) வீட்டில் அக்ஷராப்பியாசம் தொடங்கல்.



ராமானுஜனின் மனைவி ஜானகி.

1892 அக்டோபர்: விஜயதசமியன்று காஞ்சிபுரம் தேரடியிலுள்ள திண்ணைப் பள்ளியில் சேர்த்தல். பின்னர் ராமானுஜன் கும்பகோணம் செல்லல்

1892 நவம்பர்: கும்பகோணத்தில் மீண்டும் திண்ணைப்பள்ளியில் சேருதல்.

1892 டிசம்பர்: காங்கேயன் தொடக்கப்பள்ளியில் சேருதல்; 5 வயதானதும் உபநயனம் செய்தனர்.

1897 நவம்பர் 'போர்ட் டவுன்ஹால் தேர்வில்' முதல் வகுப்பில் தேறினார்.

1898: கும்பகோணம் நகர உயர்நிலைப்பள்ளியில் 6ஆம் வகுப்பில் சேருதல்

1900: 8ஆம் வகுப்பு படிக்கையில் 'எண் கணிதம்' 'ஜியோமிதி' ''லோனி'' என்ற கணிதமேதை எழுதிய 'திரிகோணமிதி' ஆகிய நூல்களைத் தீவிரமாக ஆய்வு நடத்தினார்.

1903: மெட்ரிகுலேஷன் தேர்வில் முதன்மையாகத் தேறினார்.

1904: கும்பகோணம் அரசினர் கல்லூரியில் 'எப்.ஏ' வகுப்பில் சேர்ந்தார். 'ஜூனியர் சுப்பிரமணியம் ஸ்காலர்ஷிப்' உதவித்தொகை பெறும் தேர்வில் தேர்ச்சி பெறாமல்,மீண்டும் அத்தேர்வை எழுதித் தேர்ச்சி பெற்றார்.

1905: 'எப்.ஏ' தேர்வில் தேறவில்லை. அவமானம் தாளாமல் வீட்டைவிட்டு வெளியேறினார். இது குறித்துப் பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்டது. பின்னர் அவராகவே வீடு திரும்பினார்.

1906: பி.வி.சேஷு ஐயரின் முயற்சியால் மீண்டும் அவர் 'எப்.ஏ' தேர்வு எழுத, சென்னை பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்தார். உடல்நிலை காரணமாக, தேர்வு எழுதாமல் கும்பகோணம் திரும்பிச் சென்றார்.



**1907:** மூன்றாம் முறையாக 'எப்.ஏ' தேர்வை தனிப்பட்ட முறையில் எழுதி அதிலும் தேர்ச்சி அடையாமல், கல்லூரிப் படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

**1909 ஜூலை 14:** 10 வயதான ஜானகியைத் திருமணம் செய்து கொண்டார்.

**1911:** இந்தியக் கணிதச் சங்கத்திற்கு "Some Properties of Beronoullis" என்ற கணிதக் கட்டுரையைச் சமர்ப்பித்து வெளியிட்டார்.

**1912 ஜனவரி 12:** சென்னை அகௌண்ட்ஸ் ஜெனரல் ஆபீசில் மாதம் 20 ரூபாய் சம்பளத்தில் குமாஸ்தா வேலையில் சேர்ந்தார்.

**1912 மார்ச் 1:** மதராஸ் போர்ட் டிரஸ்டு ஆபீசில் மாதம் 30 ரூபாய் சம்பளத்தில் குமாஸ்தா வேலையில் சேர்ந்தார்.

**1912 டிசம்பர்:** இங்கிலாந்து கணிதமேதை ஜி.எச்.ஹார்டியின் கணிதப்புதிர், ராமானுஜத்தின் பார்வைக்கு வந்தது.

**1913 ஜனவரி 16:** ஹார்டியின் புதிருக்கு ராமானுஜன் விடைகளைத் தயாரித்து, அத்துடன் தனது வறுமை நிலைமையைக் குறித்தும் கடிதம் எழுதினார்.

**1913 பிப்ரவரி 25:** சிம்லாவிலிருந்து இந்திய வானிலை ஆராய்ச்சிக் கழகத் தலைவர் டாக்டர் ஜில்பர்ட் - டி - வாக்கர் சென்னையில் ராமானுஜத்தின் கணித நோட்டுப் புத்தகங்களைப் பார்வையிட்டார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தார் ராமானுஜத்தை கணித ஆராய்ச்சி மாணவராகச் சேர்த்துக் கொள்வதற்குச் சிபாரிசு செய்தார்.

**1913 ஏப்ரல் 7:** சென்னைப் பல்கலைக்கழக சிண்டிகேட்டும், ராமானுஜத்திற்கு மாதம் ரூ. 75 உதவித்தொகை அளிப்பதற்கும், அவருடைய கணித ஆராய்ச்சிகளைப் பல்கலைக் கழகத்திற்குச் சமர்ப்பிக்கும்படியும் உத்தரவிட்டது.

**1913 மே 1.** சென்னைப் பல்கலைக்கழகத்தில் ராமானுஜன் கணித ஆராய்ச்சி மாணவராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

**1914 ஜனவரி 28:** லண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஈ.எச்.நெவில் சென்னையில் ராமானுஜத்தைச் சந்தித்து அவரது கணிதநோட்டுப் புத்தகங்களைப் பார்வை இடல். பின்பு லண்டன் பேராசிரியர் ஜி.எச்.ஹார்டியின் விருப்பப்படி லண்டனுக்கு வரும்படி அழைத்தல்.

**1914 பிப்ரவரி:** மெட்ராஸ் போர்ட் டிரஸ்டு தலைவர் சர்.பிரான்ஸிஸ் - ஸ்பிரிங், சென்னை ஆளுநர் லார்ட் பெண்ட்லண்டு பிரபுவுக்கு எழுதிய கடிதத்தில், ராமானுஜன் லண்டன் சென்று கணித ஆராய்ச்சியில் ஈடுபட ஆகும் செலவிற்காக ரூ.10,000 உதவ வேண்டினார்.

**1914 மார்ச் 17:** ராமானுஜன் சென்னைத் துறைமுகத்திலிருந்து "எஸ். எஸ். நேவேஸா" கப்பல் மூலம் இங்கிலாந்துக்குப் பயணம்.

**1914 ஏப்ரல். 14:** லண்டன் துறைமுகம் அடைதல்

**1914 ஏப்ரல் 16:** லண்டன்,கிராம் வெல் ரோடிலுள்ள பேராசிரியர் நெவில் பங்களாவில் தங்கினார்.

**1914 ஏப்ரல் 17:** ஜி. எச். ஹார்டியைச் சந்தித்தல்

**1914 ஏப்ரல் 18** லண்டன் டிரினிடி கல்லூரியில் ராமானுஜன் கணித ஆராய்ச்சி மாணவராகச் சேர்ந்தார்.

**1916 மார்ச் 10:** கணித ஆராய்ச்சித் திறனுக்காக ராமானுஜத்திற்கு கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம் 'பி.ஏ' பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

**1917 மார்ச் 16:** காசநோயினால் பாதிக்கப்பட்ட அவர், லண்டனில் தனியார் நர்சிங் ஹாஸ்டல், வேல்ஸ் நர்ஸிங் ஹோம், மாட்லாக் நர்ஸிங் ஹோம் ஆகியவற்றில் சேர்ந்து சிகிச்சை பெற்றார்.

**1918 மார்ச் 16:** லண்டன் ராயல் சொஸைடியினர் ராமானுஜத்திற்குப் 'பெரும் புலவர்' (F. R. S.) பட்டம் அளித்துக் கௌரவித்தனர்.

**1919 ஜனவரி:** மீண்டும் அவருக்கு உடல் நலன் பாதிப்பு; லண்டனிலுள்ள மருத்துவர்கள் 'ராமானுஜன் இந்தியாவுக்குத் திரும்பிச் செல்வது நல்லது' என்ற யோசனையைத் தெரிவித்தனர்.



கணித மேதை ஜி.எச். ஹார்டி.

**1919 மார்ச் 27:** ராமானுஜன் பம்பாய்த் துறைமுகம் வந்தடைதல்

**1919 ஏப்ரல் 2:** பம்பாயிலிருந்து சென்னை வருகை

**1920 ஜனவரி 12:** படுத்த படுக்கையிலிருந்த ராமானுஜன், தான் கண்டுபிடித்த புதிய கணிதப் புதிருடன் ஜி. எச். ஹார்டிக்குக் கடிதம் எழுதினார். இதுவே ராமானுஜன் எழுதிய இறுதிக் கடிதமாகும்.

**1920 ஏப்ரல் 26:** திங்கட்கிழமை காலை 10:30 மணிக்கு உலகம் புகழும் கணித மேதை ராமானுஜன் தனது 33 வயது நிறைவாவதற்குள் அகால மரணம் அடைந்தார்.



# 15 அம்சத் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் சிறுபான்மையினர் நலம்

சி. தங்கராஜு, இ.ஆ.ப.,
ஆணையர் மற்றும் செயலர்,
சமூக நலத்துறை.

அமைதிப்பூங்காவாக உள்ள தமிழகத்தில், மற்ற மாநிலங்களைப் போல் வகுப்பு, மொழி மற்ற இனக்கலவரம் ஏதும் இல்லாமல் இருப்பதற்கு முக்கியக் காரணம், தமிழகத்தில் வாழும் பெரும்பான்மை மக்களுக்கும் சிறுபான்மை மக்கட்குமிடையே காணப்படும் ஒற்றுமையுணர்வும், தோழமை உணர்ச்சியும்தான். இத்தகைய ஒற்றுமை உணர்வுகளே தேசிய ஒற்றுமை மேம்பட வழிவகை செய்கின்றன.

தமிழகத்தைப் பொருத்தமட்டில, சிறுபான்மை மக்களாக கருதப்படுவோர்கள், முகமதியர்கள், கிருத்துவர்கள், சீக்கியர்கள், புதிய மார்க்கத்தை பின்பற்றும் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்கள், பார்சி இனத்தவர் மற்றும் சமண மதத்தைச்சார்ந்தோர்களாவர். தமிழகத்தில் மேற் கண்ட மதங்களைப் பின்பற்றுபவர்கள், தாங்கள் பின்பற்றும் மதத்தின் அடிப்படையில் சிறுபான்மை இனத்தோர் எனும் தகுதியைப் பெறுகின்றனர். 1981ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழகத்தின் மக்கட்தொகை 4,84,08,077 ஆகும். இதில் கிருத்துவர்களின் எண்ணிக்கை 27,98,048 அதாவது 5.78% ஆகும். முகமதியர்களின் எண்ணிக்கை 25,19,947 அதாவது 5.21% ஆகும். பிற இனத்தவர்களான சமணர்கள், சீக்கியர்கள் மற்றும் பௌத்தமதத்தினை பின்பற்றுவோர்களின் எண்ணிக்கை0.01%க்கு குறைவாகவே உள்ளது. சிறுபான்மையினராகிய கிருத்துவர்களும், முகமதியர்களும், தமிழகத்தில் கீழ்க்கண்ட 7 மாவட்டங்களில் அதிக அளவில் வசித்து வருகின்றார்கள். அவையாவன: (1) சென்னை (2) நீலகிரி (3) திருநெல்வேலி (4) ராமநாதபுரம் (பிரிக்கப்படாதது) (5) தஞ்சாவூர் (6) வடஆர்க்காடு மற்றும் (7) கன்னியாகுமரியாகும். இந்த ஏழு மாவட்டங்களிலும், முகமதியர்களும், கிருத்துவர்களும் 5%லிருந்து 10%வரை நிறைந்து காணப்படுகின்றனர். ஏனைய பெரும்பான்மை மக்களுடன் ஒப்பிடுகையில் சிறுபான்மையினரின் வாழ்க்கைத் தரம் சிறிது தாழ்வாக உள்ளபடியால் அம்மக்கள் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும், இராமப்புற நலங்களின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் பலன்கள் சிறுபான்மை இனத்தவருக்கும் சரிவிகித அடிப்படையில் சென்று அடைகின்றனவா என்பதைக் கண்காணிப்பதற்கும் மறைந்த பாரதப் பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் சிறுபான்மையினர் நலனுக்கென தனியாக ஒரு 15 அம்சத் திட்டத்தினைத் தீட்டி மைய அரசு அளவில் தீட்டி அதனை மாநிலங்கள் தோறும் நடைமுறைப் படுத்துமாறு எல்லா மாநிலங்களையும் கேட்டுக்கொண்டார்கள்.

தமிழகத்தைப் பொறுத்தவரை அந்த 15 அம்சத் திட்டம் எவ்வாறு செயல்படுத்தப்படுகிறது என்பதனை ஒவ்வொரு திட்டவாரியாகக் காண்போம்:

**(1) இனக்கலவரங்கள் ஏற்படும் என்று கருதப்படும் இடங்களில் நடுநிலைமை உள்ள காவல்துறை அதிகாரிகளை நியமித்தல்.**

பாரதப் பிரதமரின் 15 அம்சத் திட்டங்களில் ஒன்றான அடிக்கடி இனக்கலவரம் ஏற்படும் பகுதிகளில் அனுபவம் வாய்ந்த நடுநிலைமை வகிக்கும் காவல் துறை அதிகாரிகளை நியமித்தல் என்பதாகும். தமிழ்நாட்டை பொறுத்தமட்டில், முகமதியர்களுக்கும் இந்துக்களுக்கும் இடையேயும், கிருத்துவர்களுக்கு இந்துக்களுக்கும் இடையேயும் ஏற்படும் இனக்கலவரம் மிகவும் அரிது. முக்கியமாக ஆதிதிராவிடர்களுக்கும் பிற சாதியினருக்கும் இடையேதான் இனக்கலவரங்கள் அடிக்கடி ஏற்படுகின்றன.கடுமையான இனக்கலவரங்கள் அண்மையில் ஏதும் ஏற்பட்டதில்லை. 1982ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்துக்களுக்கும் கிருத்துவர்களுக்கும் இடையே ஏற்பட்ட கலவரம், 1985ஆம் ஆண்டு மதமாற்றத்தினால் இந்துக்களுக்கும் முகமதியர்களுக்கும் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏற்பட்ட கலவரத்தினைத் தவிர வேறு குறிப்பிடத்தக்க சம்பவங்கள் நடக்கவில்லை. மேலும் இனக்கலவரத்தால் பெரும் பிரச்சனைகள் ஏதும் ஏற்படாதபோதும் எளிதில் இனக்கலவரங்கள் ஏற்படக்கூடிய பகுதிகளில் கூடுதல் திறமையும், நடுநிலைமை எண்ணமும் உணர்வும் கொண்ட காவல்துறை அதிகாரிகளை நியமிக்கும்படியும், காவல் நிலையங்களில் சிறுபான்மையோர் வகுப்பைச் சேர்ந்தவர்களை நியமிக்கும்படியும் காவல் துறைத் தலைமை அதிகாரிக்கு (டைரக்டர் ஜெனரல்) தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.



**(2) நல்ல பணி செய்த காவல்துறை அதிகாரிகளுக்கு வெகுமதியும் அளித்தல்**

இனக்கலவரத்தின் பொழுது வீரச் செயல் செய்து உயிரிழந்த அல்லது காயமுற்ற காவல்துறை அலுவலர்களுக்கு,தனிக் கருணை மானியம் வழங்கும் பொருட்டு, தமிழக அரசு ஏற்கனவே திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. இத்திட்டத்தின்படி வீரச்செயல் செய்து இறக்க நேரிட்ட காவல்துறை பணியாளர்களுக்கு,தனிக்கருணை மானியமாக 10,000 ரூபாயும் காயமுற்றோர்களுக்கு அதன் தன்மையைப் பொறுத்து 1,000 ரூபாய் முதல் 3,000 ரூபாய் வரையிலும் பணிபுரிய நிரந்தரமாக இயலாதவர்களுக்கு (Permanently in capactor)ரூ.5,000 மும் வழங்க அனுமதிக்கிறது.

குடும்ப நலத்திட்டத்தின் கீழ் (Famly benefit Scheme) இறந்த

காவல்துறைப் பணியாளர்களின் குடும்பத்திற்கு ரூ. 20,000 அரசு வழங்குகிறது. அத்துடன் துணைக் கண்காணிப்பாளர் நிலை வரையிலான காவல்துறைப் பணியாளர்கள் தகுதி வாய்ந்த சீரிய பணிக்காக 40(1), 41ல் காவலர் நிலை ஆணைகளின்படி ரொக்கப் பரிசுத்தொகை வழங்கப்படுகின்றனர். சிறப்பு இனங்களில் (Extra ordinary cases) ரொக்கப் பரிசுத்தொகையும் வழங்கப்படுகிறது. வீரச்செயல்களுக்காக முதலமைச்சரின் பதக்கமும் வழங்கப்படுகின்றது.

**(3) இனக்கலவரத்தினைத் தூண்டிவிடுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்தல் :**

இம்மாநிலத்தில் தற்பொழுது செயலில் இருந்துவரும் உத்தரவுகள் இனக்கலவரங்கள் தூண்டிவிடுபவர்கள் அல்லது வன்முறையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் வழக்கமாக உள்ள இந்திய குற்றவியல் தண்டனைச் சட்டம் ( I.P.C. ) குற்றவியல் நடைமுறைச்சட்டம் (Cr. I.P.C.) ஆகியவற்றுடன் இம்மாநில அரசு தனிச் சட்டங்களையும் இயற்றியுள்ளது. அத்தகைய சட்டங்களில் ஒன்று; பொதுச் சொத்துக்களை அழிப்பதைத் தடுக்கும் சட்டமாகும். மற்றொன்று 1982ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட குண்டர்கள் சட்டமாகும். (Goonda's act) இனக்கலவரத்தைத் தூண்டுபவர்களை இச்சட்டங்கள் மூலம் அரசு ஓராண்டிற்கு அவர்களை, தடுப்புக் காவலில் வைக்க இயலும்.

**(4) இனக்கலவரங்களை விரைவாக விசாரித்து நீதிவழங்குவதற்கு, தனி நீதிமன்றங்களை ஏற்படுத்துவது:**

இனக்கலவரக் குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்வதற்கான தனி நீதிமன்றங்களைக் கோயம்புத்தூர், கன்னியாகுமரி, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் ஏற்படுத்துவதைப் பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது.

**(5) இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவாகப் பண உதவி மற்றும் மறுவாழ்வினை அளித்தல்:**

இனப்பற்றுக் காரணமாக ஏனைய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இழைத்த அட்டூழியங்களினால் பாதிக்கப்பட்ட ஆதிதிராவிடர் பழங்குடி மக்களுக்கு நிதி நிவாரணம் அளிப்பதற்காக இந்த





அரசு ஏற்கனவே திட்டமொன்று வகுத்துள்ளது. அதே அளவில் இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட சிறுபான்மை இனத்தவர்க்கும் நிவாரணம் அளிக்க வழிவகை செய்து ஆணையிட்டுள்ளது. இந்தத்திட்டத்தின்படி இறந்தவர் சம்பாதிப்பவராக இருந்தால் அல்லது நிரந்தர இயலாமைக்கு ஆளானவராக இருந்தால் குடும்பத்திற்கு ரூ. 2,000-மும் தற்காலிக இயலாதவரின் குடும்பத்திற்கு(சம்பாதிப்பராகஇருந்தால்) ரூ. 500 வரை வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இந்தத் தொகையினை உயர்த்தி வழங்கப்பட வேண்டும் என்ற மைய அரசின் பரிந்துரை இவ்வரசின் பரிசீலனையில் உள்ளது.

**(6) தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலம் கலவரப் பகுதியில் வகுப்பு ஒற்றுமையினை நிலைநாட்டல:**

இந்தத் திட்டத்தினைச்செயல்படுத்துவது தொடர்பாக, பொது (செய்தி மற்றும் மக்கள்தொடர்பு துறை) மூலமாக வானொலி, மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு அறிவுரைகள் முன்னமேயே பிறப்பிக்கப்பட்டுள்ளன. வகுப்பு ஒற்றுமையைக் குறித்த நிகழ்ச்சிகள், நாடகங்கள், விவாதங்கள், பேட்டிகள் முதலான நிகழ்ச்சிகள் அனைத்திந்திய வானொலி மற்றும் தொலைக்காட்சிகள் மூலமாக முறையாக அவ்வப்பொழுது இடம் பெறச் செய்யப்படுகின்றன.

**(7) இனக் கலவரங்கள் தொடர்பாகப் பத்திரிகைகளில் பொறுப்பற்ற வகையில் தவறான செய்திகளை மக்களுக்கு அளிப்பதைத் தடுப்பதற்கு உரிய சட்டங்களை இயற்றுதல்:**

இனக் குற்றங்கள் தொடர்பாகப் பொறுப்பற்ற வகையில் தவறான செய்திகளை, பத்திரிகைகள் மூலம் செய்திகள் அளிப்பதைத்தடுப்பதற்கு உரிய சட்டங்களை இயற்றுவது பற்றி மத்திய அரசு தீவிரமாகப்பரிசீலித்து வருவதாகத் தெரிகிறது.

**(8) காவல்துறைப்பணியாளர்களை தெரிந்தெடுப்பதிலும் தேர்வுக் குழுக்களிலும் சிறுபான்மையினருக்குத் தனிப்பட்ட முக்கியத்துவம் அளித்தல :**

காவல்துறைப்பணிகளுக்கு, பணியாளர்களைத் தேர்நதெடுக்கும பொழுது சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு, தனி முக்கியத்துவம் அளிக்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு காவல்துறையில் எல்லாப் பதவி நிலைகளிலும் 6.4 சதவீதம் முஸ்லீம்களும், 11.3 சதவீதம் கிறித்தவர்களும் பணிபுரிகின்றனர். மேலும் டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவியில் ஒரு முகமதியரும் டெபுடி இன்ஸ்பெக்டர் பதவியில் இரண்டு கிறித்தவர்களும் உள்ளனர்.

**(9) மைய அரசு காவல்படைகளில் காவலர் பணிகளுக்கு ஆள் சேர்ப்பதில் மைய அரசும் இதே போன்ற நடவடிக்கையினை மேற்கொள்ளுவது:**

இந்தத் திட்டம் மைய அரசினை சார்ந்ததால் அனைத்திந்திய அளவில் நடவடிக்கை மைய அரசே மேற்கொள்ளும்.

**(10) அரசுத்துறை நிறுவனங்களில் ஆள்சேர்ப்பதிலும் சிறுபான்மையினருக்குத் தனிச் சலுகை அளிப்பது:**

இம்மாநிலத்தில் தற்பொழுது உள்ள இட ஒதுக்கீடு விதிகளின்படி அரசுப் பணிகளில் காலியாக உள்ள இடங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 18 சதவீதம் இட ஒதுக்கீடும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினருக்கு 50 சதவீதம் இடமும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. எஞ்சியுள்ள 32 சதவீதம் இடங்களில் பொதுப்போட்டி முறையில் தகுதியின் அடிப்படையில் மற்றவர்கள் நியமிக்கப்படுகின்றனர். மேலும் சிறுபான்மையினரில் முஸ்லீம்கள் மற்றும் கிறித்தவர்கள் பெரும்பாலோனோர் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதால் அவர்கள் பிற்படுத்தப்பட்டோருக்கான ஒதுக்கப்பட்ட 50 சதவீதம் பணிகளில் தேர்வு செய்யப்பட வாய்ப்புகள் உள்ளன. அரசுத் துறை நிறுவனங்களுக்கும் சிறுபான்மையினர் நியமனத்தில் இட ஒதுக்கீடு விதிகளைப் பின்பற்றுமாறு தகுந்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

**(11) சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களில் சிறப்புப் பயிற்சி வகுப்புகள் தொடங்குதல்:**

முஸ்லீம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் கிருத்துவ மதத்தைச் சேர்ந்த பின்தங்கிய வகுப்பினர் என வகைப்பாடு செய்யப்பட்டுள்ள சிறுபான்மையினர் இந்திய ஆட்சிப் பணிக்கும் மைய அரசுப் பணிகட்கும் நடைபெறும் தேர்வில் கலந்து கொள்வோர்க்குப் பயிற்சி அளிக்கும் மாநில அரசு நடத்துகின்ற பின்தங்கிய வகுப்பினருக்கான தனிப் பயிற்சி நிறுவனங்களில் அனுமதிக்கப்படத்தகுதியுள்ளவராவர். ஆதிதிராவிடர்களாக இருந்து கிறித்தவர்களாக மதம் மாறியவர்களும் ஆதிதிராவிடர் பழங்குடி வகுப்பு மாணவர்களுக்கான பயிற்சி நிலையத்தில் அனுமதிக்கப்பெறும் தகுதி உடையவராகின்றனர். சிறுபான்மையினர் கல்வி நிலையங்கள் சில இந்திய ஆட்சிப் பணித் தேர்விலும் மற்றப் பணிக்கான தேர்வுகளிலும் கலந்து கொள்ளும் சிறுபான்மை வகுப்பு மாணவர்களுக்குத் தனிப் பயிற்சி வகுப்புகள் நடத்தி வருகின்றன. பாரத பிரதமரின் கட்டளையைச் செயல்படுத்த, சிறுபான்மை வகுப்பினர் கல்வி நிறுவனங்களுடனும் சமயப் பொறுப்புக் கழகங்களுடனும் கலந்து கூட்டங்கள் நடத்துமாறும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்திரவிடப்பட்டுள்ளது. தனிப்பயிற்சி வகுப்புகள் தொடங்க, சுமார் 25 கல்லூரிகள் ஏற்கனவே திட்டங்கள் வகுத்து அவற்றைப் பல்கலைக் கழகங்கள் மூலமாக அனுப்பியுள்ளன. மேற்சொன்னவாறு வகுக்கப்பட்ட திட்டங்கள் கீழ் சுமார் 1,250 மாணவர்களுக்குப் பல்வேறு போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளப் பயிற்சி அளிக்கப்படும்.

**(12) சிறுபான்மையினர் அதிகமுள்ள பகுதிகளில் தொழில் பயிற்சி நிலையங்களையும் பல் தொழில் பயிற்சிப் பள்ளிகளையும் ஏற்படுத்துதல்:**

இந்தமாநிலத்தில் 40தொழில் பயிற்சி நிலையங்கள் உள்ளன. இவற்றில் ஐந்து தொழில் பயிற்சி நிலையங்கள் மகளிருக் கானவை. அவற்றில் 15,000 மாணவிகள் கல்வி பயிலுகின்றனர். அந்த 15,000 மாணவியர்களில் 1,200 பேர் சிறுபான்மை இன மாணவியர்களாகும். தொழில் பயிற்சி



நிலையக்கல்வி முகமதிய மாணவர்களை ஈர்ப்பதில்லை. அவர்கள் சுயவேலை வாய்ப்பையே பெரிதும் நம்பியுள்ளனர். முஸ்லீம்கள் இத்தகைய ஆறு முஸ்லீம் கல்வி நிலையங்களை நடத்தி வருகின்றனர். அந்தக்கல்வி நிலையங்கள் ஒவ்வொன்றிலும் 500 மாணவர்கள் கல்விபயிலுகின்றனர் அந்த 500 மாணவர்களில் 200 பேர் மட்டுமே முஸ்லீம்கள் ஆவர்.

**(13) பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் மூலம் கிடைக்கின்ற நன்மைகளைச் சிறுபான்மையினர் நன்முறையில போதுமான அளவுக்குப் பெற்று வருகின்றனரா என்பதை உறுதி செய்தல.**

இந்திய அரசின் வழிகாட்டிக் குறிப்புகளுக்கிணங்க இம்மாநிலத்தில் இருபது அம்சத் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், கரிம வாயுத் திட்டம் ஆகிய திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பாரதப் பிரதமர் தெரிவித்துள்ள



கருத்தைப் பின்பற்றுமாறு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் உத்தரவுகள் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டுள்ளன.

1985-86ஆம் ஆண்டில் சிறுபான்மை மக்கட்கு மேற்கண்ட திட்டங்கள் மூலம் கிடைத்துள்ள பலன்களின் புள்ளி விவரங்கள் பின்னால் தரப்பட்டுள்ளது:

மேற்கண்ட திட்டங்களின் மூலம் சிறுபான்மை மக்கட்குச் சென்று அடைந்த பலன்கள் அம்மக்கள் தொகையின் சரிவிகித அளவிற்குள்ளது என்பது தெரிய வருகிறது.

வளர்ச்சித் திட்டங்களையும் 20 அம்சத் திட்டங்களையும் செயல்படுத்துவது தொடர்பான பல்வேறு குழுக்களில் சிறுபான்மையினரைச் சேர்த்துக் கொள்வது உட்பட பல பிரச்சினைகள் குறித்து, பரிசீலிக்கப்பட்டது. சில மாவட்டங்களில் சிறுபான்மையினர் சிலர் அடங்கிய மாவட்ட வளர்ச்சிக் குழுக்கள் 20 அம்சத் திட்டம் உட்பட பிற திட்டங்களையும் பரிசீலித்து வருகின்றன.

இவை தவிர சமூக நலத்துறையில் ஏற்படுத்தப்பட்ட சிறுபான்மையோர் நல ஆராய்ச்சிப் பிரிவில் ஆராய்ச்சி அலுவலர்கள் இத்திட்டங்கள் செயல்படும் விதம் குறித்து அவ்வப்பொழுது கண்காணித்து, செயல்படும் விதங்களை முறைப்படுத்தி வருகின்றனர்.

**(14) வக்ப் சொத்துக்களை ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள்ளவைகள் தொடர்பான குறைபாடுகளை நீக்குதல்.**

அவசியமான இடங்களில் சுமுகமானசூழ்நிலையை நிலைநாட்டத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆக்கிரமிப்பு குறித்து, தமிழ்நாடு வக்ப் வாரியத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டபோதெல்லாம் அந்த ஆக்கிரமிப்பை அகற்ற, தமிழ்நாடு 1954ஆம் ஆண்டு வக்ப் சட்டத்தின் 36ம் பிரிவின் கீழ் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கின்றன. தமிழ்நாடு வக்ப வாரியத்தில் இதைப்போன்ற ஆக்கிரமிப்பு வழக்குகள் 11,000 உள்ளன. இவற்றில் 2,531 வழக்குகளில்வாரியத்திற்குச் சாதகமாக நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. 2,955 வழக்குகளில் எதிராக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. மேலும் 5,751 வழக்குகள் நீதிமன்றங்களில் முடிவு செய்யப்படாமல் உள்ளன.

(15) சிறுபான்மையினர் தொடர்பான செயல்களைப் பரிசீலிப்பதற்கு இம்மாநிலத்தில் தனிப் பிரிவு ஒன்றினை ஏற்படுத்துதல்.

சிறுபான்மையினரின் நலனுக்காக,பாரதப்பிரதமரின் 15அம்சத் திட்டத்தினைக் கண்காணித்து செயல்படுவதற்கான ஒரு சிறப்பு ஆராய்ச்சிப்பிரிவு ஒரு ஆராய்ச்சி அலுவலரையும்இரண்டுஆராய்ச்சி ஆய்வாளர்களையும் கொண்டதாக சமூக நலத்துறையில் ஏற்படுத்தப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.

| திட்டத்தின் பெயர் | இந்துக்கள் | முஸ்லீம்கள் | கிறித்தவர்கள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| ஒ.ஊ.வ.தி (I.R.D.P) | 87% | 7.4% | 5.6% |
| (TRYSEM) | 86.1% | 4.5% | 9.4% |
| தே.உ.வே.தி (N.R.E.P) | 84% | 4.24% | 6.8% |
| ஊ.நி.வே.வா.தி (R.L.E.G.P) | 95.85% | 1.15% | 3% |

# முதன் முதலில்

வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற ஆசை எழுவது இயல்பு தானே?

அதன் விளைவு? நலிந்த பிரிவினரான அருந்ததியர் சமூகத்தினர் சிலர் ஒன்று சேர்ந்தார்கள். 'தமிழ்நாடு நலிந்தோர் முன்னேற்றக் கூட்டுறவுக கடன் வழங்கும் சங்கம்' என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தினார்கள். இதன் தொடக்க விழாவை 23.11.86 அன்று எளிமையாக நடத்தினார்கள்.

இந்தச் சங்கத்தைப் பற்றியும் இதன் பணிகளைப் பற்றியும் கேட்டபோது, சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர் திரு வெ. மோகன கிருட்டிணன் கூறினார்:

''வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள அருந்ததியர் சமூகத்தினர் உருவாக்கிய இந்தக் கூட்டுறவுச் சங்கம் இந்தியாவிலேயே முதன் முதலாக ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கெனப் புதிய குறிக்கோளுடன் தொடங்கப்பட்டிருக்கிறது. ஆதிதிராவிடர் போன்ற பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகக்கூட்டுறவுச் சங்கங்கள், விற்பனைச் சங்கங்கள் முதலானவை ஏற்கனவே உள்ளன. ஆனால், காலணி தயாரித்தல் போன்ற சிறுசிறு தொழில்களைச் செய்து வரும் அருந்ததியினரின் இந்தக் கடன் வழங்கும் சங்கம் இப்போது தான் முதன் முதலில் தொடங்கப்படுகிறது.

''இந்தச் சங்கத்தில் 363பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களுடைய பங்கு மூலதனம் 1 லட்சத்து 12 ஆயிரத்து 610 ரூபாய். சென்னை மத்தியக் கூட்



டுறவு வங்கி, இந்த உறுப்பினர்கள் 110 பேருக்கு 3 லட்சத்து 26 ஆயிரம் ரூபாய் கடன் தந்துள்ளது.

''வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள இந்தச் சமூகத்தினரின் வாழ்க்கைத்தரம் உயரும் வகையில் இந்தக் கடன் தொகை பயன்படுத்திக் கொள்ளப்படும். காலணி செய்தல், தோல் கைப்பைகள் தயாரித்தல், பெட்டிக்கடை வைத்தல், கூடை முடைதல், பால் விற்பனை முதலான தொழில்களில் இவர்கள் ஈடுபடுவார்கள்.

''இந்தச் சங்கம் தனது தொடக்க விழாவில், தங்கள் சமூகத்தைச் சேர்ந்த குழந்தைகள் மேல் படிப்புக்காகவும், தங்கள் இனத்தைச் சேர்ந்த டாக்டர் ஒருவர் கிளினிக் வைத்துக் கொள்வதற்காகவும், கடனுதவி தந்திருக்கிறது. இந்த வகையில் 79 பேருக்குத் தொழில் கடனையும், 31 பேருக்குக் கல்விக் கடனாக அதாவது மருத்துவம், பொறியியல் படிப்புக்காகவும் உதவியுள்ளது.''

இந்தச் சங்கத்தின் எதிர்காலத் திட்டம் என்ன?

அருந்ததியினர் சமூகத்திலுள்ள மருத்துவர்களுக்குக் கிளினுக்குகள் மற்றும் 24 மணி நேர மருத்துவ மனைகளுக்கான கடன் உதவி வழங்குதல்.

ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும், இச்சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கான சங்கங்களைத் தோற்றுவித்து, கடன் வழங்குதல்.

பேட்டி : பி.வி.ஜி





# மாநகர் எங்கும் பசுமை காண்போம்!

சுற்றுப்புறச் சூழலைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தை முன்னர் எப்போதும் இல்லாத வகையில் தற்போது மக்களுக்கு உணர்த்த வேண்டி உள்ளது. அதன் அடிப்படையில் 1986 நவம்பர், 19 லிருந்து டிசம்பர் 18 வரை உள்ள காலம் இந்தியா முழுதும் தேசிய சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு திங்களாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இதையொட்டி, சென்னையில் பல்வேறு இடங்களில் மரம் நடும் விழாக்கள் கருத்தரங்குகள், பேரணிகள் நடைபெற்றன.

சென்னை மாநகராட்சியின் சார்பிலும், மாநகர் எங்கும் மரம் நடும் பணி நடைபெற்று வருகிறது. டிசம்பர் திங்கள் முடிவிற்குள் மொத்தம் 10 ஆயிரம் மரக்கன்றுகளை நட மாநகராட்சி தீர்மானித்தது. இப்பணி முழுமையான அளவில் வெற்றிபெற சமுதாயத்தின் எல்லாத் தரப்பு மக்களையும் குறிப்பாக மாணவ சமுதாயத்தை ஈடுபடுத்த முடிவு செய்தது.

இதனடிப்படையில் சென்னை மாநகராட்சியும் அண்ணா பல்கலைக்கழக மாணவ மாணவியரும் இணைந்து நடத்தும் மரம் நடும் விழா பல்கலைக்கழக வளாகத்தில் 28.11.86 அன்று நடைபெற்றது. இவ்வளாகத்தில் உள்ள வெட்டவெளி நிலப்பரப்பில் 300 கன்றுகளும் வெளியிடங்களில் 700 கன்றுகளுமாக 1000 கன்றுகள் அன்று ஒரு நாளில் மட்டும் நடப்பட்டன. மொத்தம் இதுவரை 4,000 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் மரக்கன்றுகளை நட்டு விழாவைத் தொடங்கி வைத்தார். அதே நேரத்தில் பல்கலைக் கழக மாணவ, மாணவியரும் மரக்கன்றுகளை நட்டனர்.

விழா வரவேற்புரை ஆற்றிய சென்னை மாநகராட்சி ஆணையாளர் திருமதி சாந்தா ஷீலா நாயர் இ.ஆ.ப. ''மாநகராட்சி வரலாற்றில் இதுபோன்ற அதிக அளவில் மரம் நடும் நிகழ்ச்சி இது வரை நடைபெற்றதில்லை'' என்று பெருமை ததும்பக் கூறினார். சென்னை மாநகராட்சி சிறப்பு அலுவலர் திரு.கி.சந்திரசூடன் இ.ஆ.ப. விழாத் தலைமை ஏற்றார்.

கல்வி நிறுவன வளாகம் ஒன்றில் மரம் நடும் பணிக்கு, முதன் முதலில் அண்ணா பல்கலைக் கழகம் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு நன்றி தெரிவித்த அண்ணா பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் வி.சி.குழந்தைசாமி அவர்கள், ''மரத்தின் பயனை நன்கு அறிந்த நிறுவனத்திற்கு இந்த உதவி கிடைத்திருக்கிறது'' என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்து, இந்த வளாகத்திற்குள் நடப்பட்ட கன்றுகள் நன்கு பாதுகாப்புடன் வளர்க்கப்படும் என்று உறுதியளித்தார்.

சட்டமன்ற உறுப்பினர் திரு சைதை துரைசாமி, ''மரம் நடும் அவசியத்தை மக்கள் உணர வேண்டும் என்பதற்காகத்தான் இத்தகைய விழாக்கள் நடைபெறுகின்றன'' எனத் தெரிவித்தார்.

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கே.ஏ.கிருஷ்ணசாமி அவர்கள் உரையாற்றுகையில், ''கிராமங்களில் மட்டும் ஏறத்தாழ 18 கோடி டன் மரங்கள் விறகுக்காக எரிக்கப்படுகின்றன. காடுகள் அழிக்கப்படுகின்றன. இதன் காரணமாக நாட்டின் வளம் பாதிக்கப்படுகிறது. இதுபோன்ற மரம் நடும் விழாக்கள் மரம் வளர்ப்பதன் அவசியத்தை மக்களுக்கு நன்கு உணர்த்தும். இம்முயற்சி தொடர்ந்து செயல்பட்டு வெற்றிபெற வேண்டும்'' என்று கூறினார்.

பாதையோரங்களில் நடப்படும் மரக்கன்றுகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 300 செலவில் பாதுகாப்பு வேலி போடப்படுகிறது. இப்பணிக்காக பாரத் பெட்ரோலியக் கழகம் தந்த ரூ. 60,000க்கான காசோலையை, அக்கழகத்தின் சார்பில் திருமதி கல்யாணி சுப்பிரமணியம் வழங்கினார்.

இதுபோல் மரம் வளர்ப்புப் பணிக்கு ஸ்பிக், ஐ.ஓ.சி, ஓ.என்.ஜி.சி, ஐ.ஓ.பி. ஆந்திரா வங்கி, மயிலாப்பூர் அகடமி போன்ற சில நிறுவனங்களும் நிதி வழங்க இசைந்துள்ளதாக விழாவில் தெரிவிக்கப்பட்டது.

—நமது செய்தியாளர்





# ஒரு வாரம் நடந்த ஒருமைப்பாட்டு விழா



அன்னை இந்திராகாந்தி அவர்களின் பிறந்தநாள் விழா தேசிய ஒருமைப்பாடு நாளாகக் கொண்டாடப்பட்டது.

தமிழ்நாடு அரசின் சார்பில், 19.11.86 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் தொடங்கிய இவ்விழா, ஒருவார விழாவாக 25.11.86 வரை கொண்டாடப்பட்டது.

முதல்நாள், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள், அன்னை இந்திரா காந்தி திருவுருவப் படத்தினைத் திறந்துவைத்து, தேசிய ஒருமைப்பாட்டுவாரவிழாவைத் தொடங்கி வைத்தார்.

இவ்விழாவிற்கு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி உயர்மட்டக் குழுத் தலைவர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள் தலைமை தாங்கினார்.

மாண்புமிகு சுற்றுலாத்துறை மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.



இரண்டாம் நாள் நிகழ்ச்சி 'சிறுபான்மையினர் நல நாளா'கக் கொண்டாடப்பட்டது. மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு த. இராமசாமி அவர்கள் பங்கேற்ற இந்நிகழ்ச்சிக்கு -பிற்பட்டோர் நலத்துறை இயக்குநர் திரு எஸ்.ராஜரத்தினம் இ.ஆ.ப. தலைமை தாங்கினார். சமூக நலத்துறை ஆணையர் மற்றும் செயலர் திருசி. தங்கராசு, இ.ஆ.ப, சென்னைப் பெருநகர்க் குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் திரு. ஜேப்பியார், தமிழ்நாடு பாடநூல் நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு.லியாகத்அலிகான், திரு.இ.பதுருத்தீன் ஆகியோர் உரையாற்றினர்.

21.11.86 நிகழ்ச்சி 'மொழி ஒற்றுமை நாளாக' நடைபெற்றது. மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சர் திரு.சி.பொன்னையன் அவர்கள் தலைமையேற்றார். சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஜி.புஜங்கராவ் இ.ஆ.ப., வரவேற்புரையாற்றிய இவ்விழாவில், திருக்குறளார் திரு. வீ.முனுசாமி, கல்வித்துறை இயக்குநர் திரு.கி.கோபாலன், டாக்டர் ந.சஞ்சீவி ஆகியோர் பேசினர்.

ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் திரு.பி.பாஸ்கரதாஸ் இ.ஆ.ப., வரவேற்புரையோடு தொடங்கி நடைபெற்ற 22.11.86ஆம் நாள் விழாவில், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு.அ.அருணாசலம் அவர்கள் தலைமை தாங்கினார். 'நலிவடைந்தோர் நல நாளா'கக் கொண்டாடப்பட்ட இவ்விழாவில் சமூகநலத்துறை ஆணையர் திரு. சி.தங்கராசு இ.ஆ.ப., டாக்டர் சு. பாலச்சந்திரன், சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி டி.யசோதா, திரு செ.கு. தமிழரசன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

தமிழ்வளர்ச்சி இயக்குநர் டாக்டர் சு.செல்லப்பன் வரவேற்புரையோடு தொடங்கிய 'கலாச்சார ஒற்றுமை நாள் விழா'வுக்கு (23.11.86) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு எஸ்.சாமிக்கண்ணு அவர்கள் தலைமை தாங்கினார். தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத்துறை செயலாளர் டாக்டர் ஔவை நடராசன், போக்குவரத்து ஆணையர் திரு. எஸ்.டி.காசிராஜன், இ.ஆ.ப., பேராசிரியை திருமதி சாரதாநம்பி ஆரூரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். விழா முடிவில் கலைமாமணி கவிஞர் சுப்பு ஆறுமுகம் வில்லுப்பாட்டு கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

சமூக நலத்துறை இணை இயக்குநர் திருமதி நிர்மலா வரவேற்புரையோடு 24.11.86 ஆம் நாள் 'மாதர் நலநாள்' நிகழ்ச்சியாக தேசிய ஒருமைப்பாட்டு நாள் கொண்டாடப்பட்டது. மாண்புமிகு சத்துணவு மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் திரு ஆர். சவுந்தரராஜன் அவர்கள் தலைமை தாங்கினார். திருமதி பா. வளர்மதி, எம். எல். ஏ., திருமதி சரோஜினி வரதப்பன், திருமதி அரசு மணிமேகலை ஆகியோர் பேசினார்கள்.

தேசிய ஒருமைப்பாட்டு வார விழாவின் நிறைவு நாள் விழா 'பாதுகாப்பு நாளா'கக் கொண்டாடப்பட்டது.

சென்னை மாநகராட்சி ஆணையர் திருமதி சாந்தாஷீலாநாயர் இ.ஆ.ப., வரவேற்புரையாற்றினார்.

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார்.

ஒவ்வொருநாள் விழா முடிவிலும் மாணவ மாணவிகள் கலந்து கொண்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.





சென்னை பெரியார் நகரில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள நூறு படுக்கைகள் கொண்ட புறநகர் மருத்துவமனையை 12-12-86 அன்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் திறந்து வைத்தார்.



மகாகவி பாரதியார் பிறந்த நாளன்று (11.12.86) சென்னை கடற்கரையில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி உயர்நிலைக்குழுத் தலைவர் டாக்டர் ம.பொ.சி. அவர்களும் மாலை அணிவித்தனர்.



மூதறிஞர் இராஜாஜி அவர்களின் பிறந்த நாளன்று (10.12.86) சென்னை பாரிமுனையிலுள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி உயர்நிலைக்குழுத் தலைவர் டாக்டர் ம. பொ. சி. அவர்களும் மாலை அணிவித்தனர்.







சென்ற இதழில்...

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பின் அவசியத்தை வலியுறுத்தும் ஓவியம் சென்ற இதழின் (1-12-86) அட்டையை அலங்கரித்தது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.




DIPR/Efficient

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

